ம. பூங்குன்றன்

தமிழ்நிலம்
சென்னை-35
10.03.2010

# இணையத்தில் 'தமிழீழம்' நூல்

தமிழீழத்தைப் பற்றி பாவலரேறு ஐயா அவர்கள் எழுதி, தென்மொழியில் வெளிவந்த கட்டுரைகள் - குறிப்புகளைத் தொகுத்து சென்னை, பைந்தமிழ்ப் பாசறை, அன்றைக்கு நம் நிறைமொழி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டது.

பைந்தமிழ்ப் பாசறை இப்போது இயங்காததால், அரிய தொகுப்பும் பெரிய நூலுமாகிய 'தமிழீழம்' இன்றைக்கு மறுபதிப்பு செய்ய இயலாத நிலையில், பைந்தமிழ்ப் பாசறை திரு தென்னவனும் நாமும் இந்நூலை இணையத்தில் ஏற்றி அனைவரும் பயன்படுமாறு செய்ய எண்ணினோம்.

பொள்ளாச்சி திரு. நசன் இந்தமுயற்சியை எடுத்துக் கொண்டதற்கு நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகத் தமிழர்கள் அனைவரும் பயன் படுத்திக் கொள்ள 'தமிழீழம்' என்ற இந்நூலைப் படையலாக்குகிறோம்

அன்புடன்,
ம. பூங்குன்றன்

# தமிழீழம்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்



தமிழீழம் - பெருஞ்சித்திரனார்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# தமிழீழம்

(விடுதலைப் போராளிகளும்
போராட்ட முயற்சிகளும்)

பாவலரேறு
**பெருஞ்சித்திரனார்**

வெளியீடு :
பைந்தமிழ்ப் பாசறை
எண்ணூர், சென்னை-57

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



பாவேந்தர்
நூற்றாண்டு விழா நினைவாக
தமிழீழம் என்னும் இந்நூலை
வெளியிடுவதில்
பைந்தமிழ்ப் பாசறை பெருமையுடைகிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# தமிழீழம்

(விடுதலைப் போராளிகளும்
போராட்ட முயற்சிகளும்)

பாவலரேறு

**பெருஞ்சித்திரனார்**

(கருத்துரைகள்)

வெளியீடு :

**பைந்தமிழ்ப் பாசறை**

**எண்ணூர், சென்னை-57**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நூல் : தமிழீழம்
(விடுதலைப் போராளிகளும்
போராட்ட முயற்சிகளும்)

ஆசிரியர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

வெளியீடு : பைந்தமிழ்ப் பாசறை
எண்ணூர், சென்னை-57.

பாசறை
வெளியீடு : ஐந்து

உரிமை : ஆசிரியர்க்கு

பதிப்பு : முதல் பதிப்பு

பதிப்பு நாள் : தி.பி. 2021 நளி 30
(1990 நவம்பர் 16)

தாள் : 10.9 D/C வெள்ளை அச்சுத்தாள்

பக்கங்கள் : 500 + xxviii

படிகள் : 1200

விலை : உருபா ஐம்பத்தைந்து

அச்சீடு : நிறைமொழி அச்சகம்
124, வேளச்சேரி சாலை
சென்னை-600 015.

தொடர்பு முகவரி :
துரை. தென்னவன்,
தமிழ்ப் பாசறை, 174, பர். கலைஞர் நகர்,
திருவொற்றியூர் மேற்கு, சென்னை-19.

# பதிப்புரை

உலகில் தமிழர்களுக்கு உரிமையுள்ள நிலங்கள் இரண்டே இரண்டு. ஒன்று இந்தியத் துணைக் கண்டத்தில் இடம் பெற்றுள்ள தமிழ்நாடு. மற்றொன்று இலங்கைத் தீவிலுள்ள தமிழீழம். இவ்விரு நாடுகளுமே உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் தொன்று தொட்ட நிலங்களாக இப்பொழுது இருக்கின்றன. ஆனால் இந்த இரு நிலங்களும் வல்லதிகார ஆட்சியின் கீழ் வேற்றின மக்களிடம் அடிமைப்பட்டு கிடக்கின்றன.

தமிழீழத்தில் சிங்களக் கொடுங்கோல் அரசால் தமிழ்மக்களின் உரிமைகள் பலவழிகளிலும் (கல்வி, வேலை வாய்ப்பு, வாழ்க்கை முறை, பண்பாட்டு முறை) பறிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டதால் அங்குள்ள தமிழ் மக்கள் கொதித்தெழுந்து, இயல்பான கோரிக்கைப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவ்வறவழிப் போராட்டத்திற்கு மதிப்புக் கொடுக்காமல் மேலும், மேலும் தமிழ் மக்களை ஒடுக்கி கொண்டே இருந்தது சிங்கள அரசு.

இப்படிப் பல்வேறு காலக்கட்டங்களில் ஒடுக்கப்பட்டுத் தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டு, சொத்துகள் சூறையாடப்பட்டு, உயிர்ச்சிதைவுகள் செய்யப்பட்டு, நம் அக்காள், தங்கையின் கற்பு பறிக்கப்பட்டுச் சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, முடிவில் தமக்கென்றுள்ள தமிழீழத்தை வென்றெடுக்க நீண்டதொரு போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது நாளடைவில் கருவிப் போராட்டமாக மாறியது.

இன்று மாவீரன் பிரபாகரன் தலைமையில் அப்போராட்டம் வெற்றி பெற்றுத் தமிழீழம் மலரும் நிலை உருவாகியுள்ளது.

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும், **'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு', 'தமிழ் நிலம்'**, ஆகிய இதழ்களின் ஆசிரியரும், தமிழ் மொழி இன நாட்டு உரிமை மீட்புக் காவலரும் நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவருமான **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும், போராளிகளின் போராட்ட முயற்சிகள் பற்றியும், இந்திய, இலங்கை அரசுகளின் சூழ்ச்சிகளைப் பற்றியும் தம் நுண்மாண் நுழைபுலத்தினால் 1975 முதல் மேற்படி மூன்று இதழ்களிலும் முகப்புக் கட்டுரை, ஆசிரியவுரை, பாடல்கள், தொகுப்புச் செய்திகள் ஆகிய வடிவுகளில் விரிவாகவும் தெளிவாகவும் எழுதி வந்துள்ளார்கள்; தனித் தமிழீழம் ஒன்றுதான் இலங்கைச் சிக்கலுக்குத் தீர்வு என்று தெளிவுறுத்தியுள்ளார்கள்.

பாவலரேறு அவர்கள் அவற்றையெல்லாம் தொகுத்து முறைப்படுத்தி பாவேந்தர் நூற்றாண்டு நினைவாக எமது **பைந்தமிழ்ப் பாசறையின்** வழி வெளியிட வழங்கியுள்ளார்கள்.

1985 ஏப்பிரல் 30 அன்று, பாவேந்தரின், 95ஆம் பிறந்த நாள் விழாவில் பாவலரேறு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட எமது பைந்தமிழ்ப் பாசறையின் ஐந்தாவது வெளியீடாக இந்நூலை வெளியிட இசைவளித்தமைக்கு ஆசிரியர் அவர்களுக்குப் பாசறையின் சார்பில் பெரிதும் நன்றி செலுத்துகின்றோம்.



இந்நூல் வெளிவர நன்கொடை வழங்கிய எண்ணூர் தொழிற் கிழார் திரு. இர. அன்பழகன் அவர்களுக்குப் பெரிதும் நன்றிக் கடப்பாடு உடையோம்.

மேலும், எண்ணூர் அசோக் இலேலண்டு தொழிலகத்தில் பணிபுரியும் தமிழ் நெஞ்சினரான திருவாளர்கள் பாவலர். ம. தென்முக நம்பி, துரை. தென்னவன், சி. அறிவுடைநம்பி, ப. தமிழ்ச் செழியன், ப. சிவபெருமான், க. அடைக்கலம், இரா. தங்கவரசன், ஐ. இசக்கிமுத்து, கு. தமிழ்வாணன், தா. தமிழ்மாறன், சு. திருவாணன், பெரியார் தொண்டர், வீ. இராமசாமி, கி. மோகன், வலம்புரி இரா. அடைக்கலப்பன், தி. கி. ஏழுமலை, இர. குமரகுருபரன், தெ. இரவீந்திரநாத், பா. பரமேசுவரன், கோ. நாகவரசன், சு. மனோகரன், வ. மு. பழனி, வீ. நல்லு, சு. பழனிவேலு, கை. பெரியய்யா, பா. மா. முத்து, சேவியர், கு. பா. சு, பாரதி, தி. பன்னீர்ச் செல்வம், இரா. வந்தியத் தேவன், ஒ. க. சிவகுமார் மற்றும் எண்ணூர் உருக்காலையில் பணியாற்றும் பரமனந்தல் தமிழ்ப்பித்தன் ஆகியோர் இந்நூலுக்குப் பொருளுதவி செய்தோர் ஆவார்கள். அவர்கள் அனைவருக்கும் பைந்தமிழ்ப் பாசறை நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நூற் படிவங்களை உடனுக்குடன் நல்ல முறையில் மெய்ப்புத் திருத்திக் கொடுத்துதவிய திருக்குறள் மணி புலவர் **இறைக்குருவனார்** அவர்களுக்கும் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய **நிறைமொழி அச்சகத்தாருக்கும்**, குறிப்பாக திருவாளர்கள் **மா. பூங்குன்றன், அழ. இளமுருகன், ந. குருமூர்த்தி** ஆகியோர்க்கும், முகப்பு ஓவியத்தைச் சிறந்த முறையில் வரைந்துதவிய புதுமை

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஓவியர் திரு **வீர. சந்தானம்** அவர்களுக்கும் எங்களின் நெஞ்சுநிறை நன்றியை உரித்தாக்குகின்றோம்.

தமிழ் கூறும் நல்லுலகம் இந் நூலைப் வாங்கிப் படித்து விழிப்புறும் என நம்புகிறோம். எம், தமிழ் இனநலப் பணிகளுக்கு ஆதரளவளிக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி!

**இடம் :** எண்ணூர்
சென்னை - 57.
**நாள் :** 07-11-90

**பைந்தமிழ்ப் பாசறையினர்**



## நன்றிப் படைப்பு!

அன்னையின் அன்பிற்கு அடுத்த ஓர் அன்புளம்
என்னைப் புரந்து போற்றிடும் என்றால்
அதுதான் வெங்கலூர் **அருள்மணி** உள்ளம்!
இதுதான் அவருடைய அன்பினது ஆழம்
என்று நான் முடிவுசெய் முன்னம், 'இலை, இலை;
நின்றுபார்' என்றெனை நினைந்திடும் உள்ளம்!

தொண்டுசெய்து உள்ளமும் உடலும் தொய்ந்திட
மண்டிடும் வெப்பத் துயர்க்கு, மா மழைபோல்
அன்புரை பொழிந்தே ஆறுதல் கூறி, என்
என்னையும் குளிர்செய் இணையிலா நல்லுளம்!

வேரில் எருவும் வியன்குளிர் நீருமாய்
வாரி வழங்கிடும் வள்ளண்மை உள்ளம்!

இவ்வுடல் மறைந்தே என்னுயிர் நிலைக்குமேல்
அவ்வுயிர் அணுவிலும் **அருள்மணி** அன்புளம்
ஒன்றி யிருந்திடல் உண்மை—என்பதற்கு
நன்றியாய்ப் படைத்த, இந் நறுநூல் சான்றே!

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# முன்னுரை

தலைவன், கோ, கோவன், கோவலன், காவலன், ஆய், ஆயன், அரையன், இராயன், அரசன், ஆள்நன், மன்னன், வேள், வேளிர், திறையன், இறையன், இறைவன், இயற்றுபவன், வேந்தன் - முதலிய சொற்கள் தமிழில், ஒரு நாட்டை ஆளும் அரசனைக் குறிக்கும். இச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பொருளுண்டு; காலம் உண்டு; வரலாறும் உண்டு. உலக மொழிகள் எதனிலும் ஓர் அரசனைக் குறிக்க இத்தனைச் சொற்கள் இல்லை என்பதுடன், பல்வேறு உலக மொழிகளை ஆயுங்கால், அவற்றுள், அரசனைக் குறித்த சொற்களில் பெரும்பாலானவை, இங்குக் குறித்த இத் தமிழ்ச் சொற்களுள் எதனோடாகிலும் தொடர்புடைய சொற்களாகவே இருப்பதைக் காணலாம். (எ-டு.) அரைசன் - அரையன் - இராயன் - இராயல் (Royal) (ஆங்.); அரசன் - இராசன் - ராஜன் (சமசு.)

இச் சொற்கள் தமிழரின் அரசாண்மை, -ஆட்சியமைப்பு மிக மிகப் பழைமை வாய்ந்தது என்பதையும், உலகில் முதன் முதல் அரசமைத்து ஆண்டவர் தமிழரே என்பதையும் உறுதிப்படுத்துவனவாகும்.

அவ்வாறான ஆட்சிக்குரியவராகவும், நீண்ட நெடுங் காலமாக, வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் இந்துமா கடலில் மூழ்கிப் போன குமரிக் கண்டத்திலேயே பேரரசு செய்தவராகவும், பின்னர் அதன் வடபால் ஒரு பகுதியையும், நாவலந்தீவு என்றழைக்கப்பெற்ற இந்தியாவை

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

முழுமையாகவும், பின் பகுதி பகுதியாகவும் ஆண்ட வரலாற்றுக் குரியவராகவும் இருந்தவர் தமிழரே. அதற்கு நம் பண்டைய இலக்கியங்களிலும், பிற வரலாற் றுக் குறிப்புகளிலும் ஏராளமான சான்றுகள் உண்டு.

தெற்கே, இந்துமா கடலில், கன்னிநாடு என்றும், குமரிநாடு என்றும் குறிக்கப் பெற்ற குமரிக் கண்டத்துத் தென் வடலாக, ஏறத்தாழ இரண்டாயிரங் கற்கள் நீண்டிருந்த நெடுந்தொடர் மலையின், தென்கோடியில் **குமரிமலை** இருந்ததாகவும், அம் மலையினின்று தொடங் கிக் **குமரியாறு** என்றோர் ஆறு ஓடியதாகவும், அதே போல், அப் பன்மலை யடுக்கத்தின் வடபால் **பஃறுளி** (பல்துளி - பஃறுளி) என்றோர் அகன்று நீண்ட ஓர் ஆறும் ஓடியதாகவும், அப் பஃறுளியாற்றங் கரையில் தென்மதுரை (தொன்மதுரை) என்றோர் ஊரைத் தலை நகராகக் கொண்டு, இவ் விரண்டு ஆறுகளுக்கும் இடை யிலிருந்த பெருநிலப் பரப்பைப் பழம் பாண்டியர்கள் ஆண்டதாகவும், அத் தென்மதுரையில்தான் தமிழ் மொழிக்கென்றே உலகின் வேறு எம் மொழி வளர்ச்சி வரலாற்றிலும் இல்லாதவாறு, **தலைத்தமிழ்க் கழகம்** (சங்கம்) நடைபெற்றதாகவும், தமிழரின் தொன்மை வரலாறு குறிக்கிறது.

பின்னர், அப் பஃறுளியாறும், அக் குமரிமலையை உள்ளிட்ட அப் பன்மலையடுக்கமும், அப் பழம் பாண்டி யர் பேரரசு செய்த பெருநிலப் பரப்பும், ஒரு பெருங் கடல்கோளால் மூழ்கடிக்கப்பட்டன வென்றும், அவ் வரசு நிலம் அழிந்த பின்றை, பாண்டியர்கள் வடக்கு நோக்கி வந்து, ஆங்கு எஞ்சி நின்ற வட நிலப் பகுதியில் ஓடியிருந்த ஓர் ஆற்றுக்கு, மறைந்து போன குமரி யாற்றின் பெயரையே சூட்டி, அதன் கரையில் **கபாட புரம்** என்றொரு நகரை உருவாக்கிக் கொண்டு, மீண்டும் வல்லரசு செய்ததுடன், **காவலந்தீவு** என்று அழைக்கப் பெற்ற இவ்விந்திய நாட்டின் நிலமுழுதும் பரவிப் படர்ந்து, இதன் வடபால் உள்ள இமயமலையையும், ஆங்கு ஓடிய, இன்று **சிந்து** என்று அழைக்கப் பெறும் அன்றைய கங்கையென்ற பேராற்றையும், தாமிழந்த நிலப் பரப்பிற்கும், குமரிமலையுள்ளிட்ட பன்மலையடுக் கத்திற்கும் ஈடாக்கிக் கையகப்படுத்திக்கொண்டு, கபாட புரத் தலைநகரிலிருந்தே, பேரரசு செய்தனர் என்றும் அவ் வரலாற்றுச் செய்தி நீள்கிறது.



இவ் வரலாற்றுப் புலனங்களைக் கீழ்வரும் நம் பழம் பாடற் பகுதிகளால் அறியலாம்.

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,
வட திசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி!

—**சிலப். காடுகாண்**

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாட் டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறி கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்.

—**கலி : 104**

முன்னிருந்த பாலி மொழியும்கீர் வாணமும்
துன்னும் கருப்பையிலே தோய்வதற்கு-முன்னரே
பண்டைக் காலத்தே பரவைகொண்ட முன்னூழி
மண்டலத்தி லேபேர் வளநாட்டின்-மண்டுநீர்ப்
பேராற் றருகில் பிறங்கு மணிமலையில்
சீராற்றுஞ் செங்கோல் திறற்செங்கோ - நேராற்றும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பேரவையி லேநூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாரரசு செய்ததமிழ்ப் பைந்தேவி.

—தமிழ்விடுதூது

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

—புறம் : 2

இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃறுளி

—புறம் : 24

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு'

—என்னும் சிலப்பதிகாரப் பாடற்பகுதியில் வரும் 'தொடியோள் பௌவம்' எனும் தொடருக்கு அடியார்க்கு நல்லார்,—

"தொடியோள் பெண்பாற் பெயரால் குமரியென்பதாயிற்று. ஆகவே, தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம்....அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவதவாறும், இவற்றின் நீர்மலி வானென மலிந்த...நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வட பெருங்கோட்டின் காறும், கடல் கொண்டொழிதலால், குமரியாகிய பௌவம் என்றார்" என்றுணர்க' என்றெழுதுவார்.



—இவ்வாறு பழம் பாண்டியர் ஆட்சி அவ்வரலாற்றுத் தொன்மைக்காலத்து இந்நில முழுதும் செழித்திருந்தது.

இனி, **கேவல்** (Havell) என்னும் வரலாற்றுப் பேராசிரியர், பாண்டியரின் இன மக்களே இவ்விந்திய நாட்டிலும், பிற ஆசிய, ஐரோப்பிய பழம்பேர் இன மக்களாகிய சுமேரியர், பினிசியர், பிரித்தானியர், ஜெர்மானவர், அசீரியராகப் பெயரும் உருவும் மாறி வாழ்ந்தனர் என்பர்.

பாண்டியர் என்பதன் பொருள் பழையவர் என்பதே. பண்டு—பழைமை. பண்டு—பண்டுவர்—பாண்டுவர்—பாண்டியர் – பழையவர்—பழைய இனத்தவர். பழம் பாண்டிய நாட்டின்கண் பனைமரம் மிக்கிருந்ததால் அவர் பனை நாட்டினர் **பனையர்**—எனப் பெற்றனர். பனையர் – பனைசியர்— பனைசியா— பினிசியா– பினிசியர். பழம் பாண்டியரே கடலில் முதன் முதற் கலம் செலுத்தியவர் ஆகலின் அவர் **பரதவர்** எனப் பெற்றனர்.

பரதவர் ஆகிய பாண்டியர் இவ்விந்தியா முழுவதும் ஆண்டதால் தான் இந்நாடு **பரதவர் நாடு, பரதகண்டம் பாரதம்** என்று வழங்கலானது.

மற்றபடி பாரதத்தில் வரும் துசியந்தனுக்கும் அவன் களவின் மணந்த சகுந்தலைக்கும் பிறந்த மகன் பரதன் என்பான் ஆண்டதால் இந்தியா பரதநாடு—பாரதம் என்று பெயர் பெற்றதென்பது ஆரியரின் ஏமாற்றும் கலையால் புனையப் பெற்ற கதையே. மேலும் பாரதக் கதையில் வரும் பாண்டவரும் பாண்டிய இனத்தவரே. சூரிய குலத்தவரே! பாண்டியர் சூரிய குலத்தவர் எனப்பெற்றனர்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சுள்—சுர்—சூர்—சூரன்— சூரர்—சூரியர்—பாண்டியர்
சுள்—சுர்—சுரர்—அசுரர்—அசுரா— ஞாயிறு
சூரியர்— அசூரியர்— **அசீரியர்— அசீரியா.** (அவர் வாழ்ந்த நாடு.)

பரதவர்—பரதர்—பிரதர்—பிரத்தர்— **பிரித்தானியர்.**
—**பிரித்தன்** (அவர் வாழ்ந்த நாடு)

பாண்டியர் கடல்மேற் சென்ற பழம் இனத்தவர் ஆகையினாலும், மீன் கொடியை அவர் கொண்டிருந்ததாலும் **மீனவர்** எனப் பெற்றனர்.

மீனவர்—பாண்டியர்.
மீனவர் மினோவர்—செனோவர்—ஜெனோவர்
—ஜெனோவா—ஜெனீவா. (அவர் வாழ்ந்த நாடு)

இவை ஐரோப்பிய வரலாற்றுப் பேராசிரியர் கேவல் என்பாரின் ஆராய்ச்சிக் குறிப்புகள்.

மேலும் பைபிளின் பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் தந்தை தேராகு வாழ்ந்த நகரத்திற்கு **ஊர்** என்று வழங்கியதும் உரோம் நகருக்கு வடக்கே உள்ள பட்டினமாகிய இன்றைய பாரீசு, **கால்** என்று வழங்கியதும், தூய தமிழ்ப் பெயர்களே!

இன்னும் இந்தியாவில் உள்ள காளிக்கோட்டம், (கல்கட்டா) கோழிக்கோடு (காலிகட்) முதலிய பன்னூற்றுக்கணக்காண ஊர்ப் பெயர்களும், சிந்து, கங்கை, முதலிய பல ஆற்றின் பெயர்களும். உலகில் உள்ள பல நூற்றுக்கணக்கான ஆற்றங்கரை, கடற்கரைகளில் உள்ள ஊர்ப் பெயர்களும் பழந்தமிழரிட்ட தமிழ் முதல் திரிந்து வழங்கும் பெயர்களே! இவற்றை விரிக்கின்



பெருகும் ஆகையால் ஒரு சோற்று ஒருபதமாக இவற்றை மட்டும் கூறி விடுக்க வேண்டியதாயிற்று

இனி, பழம் பாண்டியர் மறைந்த பின்றை, அடுத்து வந்த சோழரும் சேரரும் கூட, இவ்விந்தியப் பெருநிலத்தை ஆண்டிருந்த பழம் வரலாற்றுச் செய்திகள், நம் பழந்தமிழ் இலக்கியங்களில், நெடுகலும் பேசப் பெறுகின்றன. அவற்றில் ஒரு சில இங்குக் குறிக்கப் பெறும்.

இருநில மருங்கில் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
........ . ... ..... ......... . .. ......... ...... ..
இமையவர் உறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையில் பெயர்வோன்
—**சிலப். இந்திரவிழவூர்**

—**இது**, சோழன், கரிகாற் பெருவளத்தான் இமயத்தில் தன் ஆட்சி எல்லை நிறுவப் புலிக்கொடி பொறித்ததைக் கூறுகிறது.

...ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயஞ் சுட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்தாள் —புறம்: 39

—இது, சேரன் இமய வரைப்பில் தன் ஆட்சி நிறுவிய அடையாளமாக விற்கொடியை நாட்டியது

இவ்வாறு சோழரும் சேரரும் இமயமலை வரை தம் ஆட்சி நிறுவி இவ்விந்திய நாடு முழுமையும் ஆண்ட வரலாற்றை நம் இலக்கியங்கள் ஆங்காங்கு உறுதிப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

படுத்துகின்றன, அவர்கள் அக்கால் வடநாட்டின் கண்
ஆண்டிருந்த ஆரிய அரசர்களை அடிப்படுத்தி வென்றும்,
கொன்றும் குவித்த செய்திகளையும் இப் பாடற் பகுதி
களில் காணலாகும்.

ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னம் குமரியோ டாயிடை
பன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே!
—பதிற் 2 : 24

தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலாவெல்லை
குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோல்திருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல!
—புறம்: 17:1-8

வடதிசை யதுவே வான்தோய் இமயம்
தென்திசை ஆஅய் குடியின் றாயின்
—புறம் : 132 : 7-8

இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பின்இப்
பொழில்முழு தாண்டநின்
முன்திணை முதல்வர்
—பதிற். 2: 17-20

கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னம் குமரியொடு ஆயிடை அரசர்



முரசுடைப் பெருஞ்சமம் ததைய, ஆர்ப்புஎழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவன்
—பதிற்: 43

தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலாவெல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப
—மதுரைக். 70-72

அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
நயனில் வயன்சொல் யவணர்ப் பிணித்து,
நெய்தலைப் பெய்து, கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறல் மூதூர்த் தந்து பிறர்க்குதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்தாள்
—பதிற் —1.பதி

வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து.
—அகம்:127

புகையின் பொங்கி வியல்விசும்பு உகுத்து
பனி ஊர் அழற்கொடி கருப்பத் தோன்றும்
இமயச் செவ்வரை மானுங் கொல்லோ?
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை
நீர் முதல் கரந்த நிதியம் கொல்லோ?
—அகம்:264

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வடவர் உட்கும் வான்தோய் நல்லிசை
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்

**—சிலப். வாழ்த்து**

குமரியோடு வடவிமயத்து ஒரு மொழி வைத்து
உலகாண்ட சேரலாதன்

**—சிலப் வாழ்த்து**

—இப்பாடற் பகுதிகளிலெல்லாம், அற்றை வட விந்தியாவில் இருந்த ஆரிய வடவரசர்களையெல்லாம், நந்தமிழ்ச்சோழ, சேர அரசர்கள் அடக்கி ஆண்டு இமயமலை வரை தங்கள் ஆட்சியை நிறுவியிருந்ததை யும் இவ்விந்திய நாடு முழுமையிலும் தமிழே ஆட்சி மொழியாக நிறுவியதும் கண்டு, இற்றைத் தமிழ இளை ஞர்கள் அக மகிழவும், தாங்கள் அவ்வாறில்லாமல் இற்றை வடவாரிய முதலாளிய அரசுத் தலைமை பூண்ட புல்லியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற நிலையை எண்ணி அகம் வெட்கிப் புறம் நாணவும் வேண்டும்.

இன்று, வடக்கில் உள்ள இமயமலை, தமிழர்க்கு எட்டாத நெடுங்குன்றம்! அன்றே நந்தமிழ் ஆட்சியர்க்கு ஆடுகளம்! இவ்வரலாற்றை மெய்ப்பிக்கின்ற வகையில் நந்தமிழ்ப் பழம்பேரிலக்கியங்கள் நெடுகிலும், இமய மலை பற்றிய குறிப்புகளும் கூற்றுகளும் புலம்மண்டிக் கிடக்கின்றமை கண்டு, நாம் உளம் மகிழ்த்தலும் உரஞ் சிறத்தலும், உடல் சிலிர்த்தலும் வேண்டுமன்றோ?

கழகப் பாடல்களில் கூறப்பெற்றுள்ள இவ் விமய மலைக்கும் நமக்கும் அன்று இருந்த உறவைப் பார்த்த பின்னாவது **“மன்னும் இமயமலை எங்கள் மலையே”** என்று இன்று ஆரியப் பாவலன் பாரதி கொண்டாடும்



கொண்டாட்டம், நமக்கு வராது போனது என்னை என்று எண்ணி உளம் உட்கித் துணுக்குறுதல் வேண்டுமன்றோ?

நந்தமிழ்த் தொல்லிலக்கியங்களில், இமயமலை பற்றிய கூற்றுகள் இவை. கட்டுரை விரிவஞ்சிச் சொற் றொடர்கள் மட்டும் ஈண்டுக் குறிக்கப் பெறுகின்றன.

| | |
|---|---|
| ‘பொற்கோட் டிமையம்’ | —புறம்: 2 |
| ‘பனிபடு நெடுவரை’ | —புறம்: 6 |
| ‘இமயத்து ஈண்டி’ | —புறம் : 34 |
| ‘வடமலை’ | —புறம்: 67 |
| ‘பிரின்படு நெடுவரை’ | —புறம் :166 |
| ‘பொன்னுடை நெடுங்கோட்டு இமயம்’ | —புறம்: 369 |
| ‘பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி’ | —நற் : 356 |
| ‘பேரிசை இமயமும் துளக்கும் பண்பினை’ | —குறுந் : 158 |
| ‘நீடிய இமயம்’ | —பரி : 1 |
| ‘நிவந்து ஓங்கு இமயத்து நீலப் பைஞ்சுனை’ | —பரி: 5 |

இவ்வாறாகச் சீரொடும் சிறப்பொடும் பெருகியிருந்த நந்தமிழரின் வன்பேராட்சி, கி. மு. 3000 போல் இந்தியாவுக்கு வந்த நடுவாசிய ஆரியர்களின் அக, புறத் தாக்கங்களாலும், கி. மு. 2387 - இலும், கி மு. 450 -இலும் கி. மு. 213-இலிருந்து 203க்குள்ளும் நடந்த முப் பெரும் கடல் கோள்களாலும், படிப்படியாக, நிலத் தாலும் ஆட்சியாலும் சீர்குலைந்து சிதைவுற்றுச் சிறுத் துப் போனது.

கி. மு. 2387-இல் நடந்த பெருங்கடற் கோளால் பஃறுளியாற்றுடன் குமரிக்கோடும் தென்பால் குமரி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யாறும் ஆங்கிருந்த தலைக் கழகத் தென்மதுரையும் அழிந்தன. இரண்டாவதாக, கி. மு. 450-இல் நிகழ்ந்த கடற்கோளால், வடபால் குமரியாற்றங் கரையிலிருந்த பாண்டியரின் இரண்டாம் தலைநகரமான கபாடபுரமும் ஆங்கிருந்த இடைத் தமிழ்க் கழகமும், கி. மு. 213-203 -இல் நடந்த கடற்கோளால் வடபால் குமரியாறும், காவிரிப்பூம் பட்டினமும் அழிந்து போயின.

அத்துடன் ஆரியர்களின் சூழ்ச்சியாலும், அற்றைத் தமிழர்களின் சூழ்வின்மையாலும் அவர்களின் கரவாலும் நம்மவர்களின் கரவின்மையாலும், நம் செந்தமிழப் பேரரசின் ஆளுமையும், நம் மூவேந்தர்க் குள்ளிருந்த ஒற்றுமையும் நற்றிறமும் சொற்றிறமும் குறைவுற்றுக் குன்றிப் போயின.

அதனால், தலைக்கழகக் காலத்தும், அதன் பின்னை இடைக்கழகக் காலத்தும், தென்பால் குமரிமலை தொடங்கி வடக்கே இமயமலை வரை நீண்டிருந்த தமிழக எல்லை குறைந்து போய், வடக்கே விந்தியமும் தெற்கே, வடபால் குமரியாறும் ஆகக் குறைவுற்று அதுவும் பின்னர், அஃதாவது தொல்காப்பியர் காலத்தே வடக்கே வேங்கடமலையும் தெற்கே குமரிமுனையும் ஆகச் சிறுத்துப் போயிற்று.

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து
—தொல்.-பாயிரம்

எனவே தொல்காப்பியர் காலத்தில் விந்தியமலைக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதி, பிராகிருதம் என்னும் வட மொழி வழங்கும் வடதிராவிட நாடாகி, ஆரியரின்



வளர்ச்சி மேலீட்டால் ஆரியாவர்த்தம் என்னும் ஆரிய நாடாக மாறியது.

இதுவரை கூறிவந்த தமிழின வளர்ச்சி வரலாற்றின் ஏற்றங்களாலும் மாற்றங்களாலும், நாம் அறிந்து கொள்ள வேண்டுவது என்னை எனின்,

1. நம் பழந் தமிழின ஆட்சி வரலாறு, அற்றைக் குமரிக் கண்டம் தொடங்கி, இந்தியா முழுமையும் விரிந்து பரந்து இமயமலை வரை நீண்டிருந்தது—என்பதும்,

2. மிக்கோங்கி வளர்ந்திருந்த அப் பேரினத்தின் ஆட்சிப்பரப்பும், ஆளுமைச் சிறப்பும், பிற கலை, பண்பாட்டு, நாகரிகக் கூறுகளும் படிப்படியாக அழிந்தும் அழிக்கப்பட்டும் போய், இன்று ஆட்சி இழந்து, பெருமையிழந்து, வலிவிழந்து, ஓர் அடிமைப்பட்ட மிடிமையினமாக வாழ்ந்தும் வாழாமலும் இருந்துவருவது சிறுமையுடையதும் இழிவுடையதுமாம்—என்பதுமே என்க.

தமிழர் தங்கள் ஆட்சி நிலையை இழந்ததால் அது தொடர்பான அனைத்து நிலைகளையும் படிப்படியாக இழந்து, ஆண்டிகளாய், நாடோடிகளாய், ஏதிலிகளாய் உலக முழுவதும் பிழைப்புக்காக அவர்கள் அலைந்து திரிந்து, பிற இன ஆளுமைக்கும், சூழ்ச்சிக்கும் அழிவுக்கும் உட்பட்டு நலிந்தும் மெலிந்தும் மறைந்தும் வருவது கண்கூடு.

இவ் விழிவு நிலைக்கெல்லாம் கண்ணுக்குக் காட்சியாய் இன்று விளங்குவது தமிழீழத்தில் இன்றுள்ள தமிழர்கள் படும் கடுங்கொடு நிலையேயாகும். அங்குத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழினம் வெட்ட வெளிப்படையாக அழிபடுகிறது என்பது உலகின் அன்றாடச் செய்திகளில் ஒன்றாக உள்ளது.

**தமிழீழம்** என்பது அற்றைப் பழம் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியே. அங்குள்ள தமிழர்கள் நம் மூதாதையரின் வழி வந்தவர்களே! பஃறுளியாறும் பன் மலையடுக்கமும் குமரிக்கோடும் கடலுள் மறைந்தபின், பாண்டியர் வடபால் குமரியாற்றங்கரையில் உள்ள கபாட புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பகுதியின் ஒரு கூறே இன்றுள்ள அவ்விலங்கைப் பகுதி. குமரியாறு இலங்கையையும் இந்தியாவையும் பிரித்த நீர்ப் பகுதி. அது பின், கடலுடன் கலந்து கடலாகியது. இது பற்றிச் சீன நாடு காணி மெகத்தனிசின் குறிப்பொன்று உளதாக தட்சு என்னும் வரலாற்றாசிரியர் கூறுவர். (Magasthanes says that the island (Ceylon) was seperated from the main land (India) by a river. -Dutts - 'Civilisation in Ancient India' - Part I. P.219.)

எனவே, இலங்கை என்பது இந்தியத் தமிழரின் தாய் நிலமே தவிர, சேய்நிலம் என்று வரலாற்றடிப்படையில் கூறுவதற்கில்லை. அங்கிருக்கின்ற சிங்களவர், இந்திய ஆரியரின் வழிவந்து, கி.மு. 483 போல் பீகார், வங்காளப் பகுதியிலிருந்து இலங்கைக்குக் குடியேறியவரே. இதை வரலாற்றாசிரியர் **பால் பெயரிங்** என்பவர் தம் **இலங்கை வரலாறு** (History of Ceylon) என்னும் நூலில் தெளிவாகக் குறிக்கிறார்.

இலங்கை முழுவதுமே பழம் பாண்டியர்கள் நாடு என்பதற்கும், பழந்தமிழர் தாயகம் என்பதற்கும் பிற



வரலாறு, இலக்கியச் சான்றுகளும் ஏராளமாக உள்ளன. கழகக் காலத்துப் புலவர் பெருமக்கள் பலர் ஈழத்தமிழரே. ஈழத்துப் பூதந்தேவனார், முடிநாகராயர், இளநாகனார், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் முதலிய பெரும்புலவர்கள் ஈழத் தவரே.

வரலாற்றுக் காலந்தொட்டு, இந்தியாவைப்போல் இலங்கையை முழுவதுமாக ஆண்டவர்கள் தமிழ அரசர்களே! இறுதியாக **அனுராதபுரத்தைத்** தலைநகராகக் **கொண்டு** இலங்கை முழுவதையும் கி.மு.161 முதல் 117 **வரை எல்லாளன்** (சூரிய குலத்தவன் என்று பொருள்; **இவன்** பாண்டிய மரபினன். இவன் சிலவிடங்களில் ஏழாளன் என்றும் குறிக்கப் பெறுகிறான்.) ஆண்டான். அவனைத் **துட்டகைமுனு** என்னும் சிங்களவன் மறைந்திருந்து கொன்று, சிங்கள அரசைப் பின், படிப்படியாக நிறுவினான். மீண்டும் கி.மு. 103-இல் பாண்டியர் கைக்கு இலங்கை வந்தது. அதன்பின் கி.பி. 110-இல் சோழர் படையெடுப்பு நடந்து, 12-ஆம் நூற்றாண்டின் இடைவரை, இலங்கை சோழப் பேரரசின் கீழ் இருந்தது. கி.பி 907-இல் மதுரையையும் இலங்கையையும் பராந்தக சோழன் என்பான் வென்று, **மதுரையும் ஈழமும் வென்ற பராந்தகன்'** என்று பட்டம் சூட்டிக் கொண்டான். பிறகு இராசேந்திர சோழதேவன் என்பான் கி.பி 1012-இல் கங்கை வரை சென்றும், கிழக்கே சாவகம் (ஜாவா, அந்தமான் பகுதிகள்) மலேயா முதலிய தீவுகளையும் அடிப்படுத்தி, இலங்கையையும் கி.பி. 1052 வரை ஆண்டான். பின்னர் அவன் தம்பி இராசேந்திரன் கி.பி. 1052 முதல் 1070 வரை இலங்கை முழுவதையும் ஆண்டான். இவ்வாறு சோழர்கள் ஆட்சி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கி. பி, 1235 வரை இலங்கையில் இருந்தது. கி.பி. 1236 முதல் 1565 வரை மீண்டும் பாண்டியர்கள் ஆட்சி நடந்தது. இடையில் கி. பி. 1450 முதல் 1467 வரை 17 ஆண்டுகள் இலங்கையின் மேற்கே சிங்களப் பகுதியில் வன்னிக் குறுநில மன்னராட்சி நடந்தது. 1505-இல் போர்த்துக்கீசியர் வருமபொழுது மேற்கே சிங்கள அரசு, வடக்கே சங்கிலி மன்னனின் தமிழர் அரசு, நடுப்பகுதி (கண்டி)யில் கண்டி மன்னனின (நந்திக் கொடியின் கீழ்) தமிழராட்சி - ஆகிய மூன்று அரசுகள் நடந்தன அக்கால் வடக்கே, வடகிழக்கே மட்டுமல்லாது, வட மேற்குப் பகுதிகளிலும் தமிழர் பரவியிருந்தனர்.

அதன் பினனர் கி பி. 1505 முதல் 1682 வரை, 177 ஆண்டுகள் **போர்த்துக்கீசியர்** ஆட்சி; 16‘3 முதல் 1795 வரை 112 ஆண்டுகள் **டச்சுக்காரர்கள்** (ஆ ந்துக் காரர்கள்) ஆட்சி; 1796 முதல் 1948 வரை 152 ஆண்டு கள் **ஆங்கிலர்** ஆட்சி - ஆகியவை நடந்தன. இறுதியல், இந்தியாவை 1947 ஆகத்து 15-இல் இங்குள்ள வட ஆரியப் பார்ப்பனர் கையில் ஒப்படைத்தது போல அங் குள்ள சிங்களவர் கையில் 1948 பிப்ரவரி 4-இல் ஆங்கி லேயன் இலங்கையை ஒப்படைத்துவிட்டுச் சென்றான். அதன் பின்னர்தான் அங்கு இனச்சிக்கல் தோன்றியது.

சிங்களன் ஆட்சியுரிமை பெறுவதற்குமுன் சிங்களத் தையும் தமிழையும் ஆட்சி மொழிகளாக ஆங்கிலேயன் வைத்திருந்தான். ஆட்சி சிங்களவன் கைக்கு வந்ததும், தமிழரின் மொழி, இன, ஆளுமை உரிமைகளுக்குப் படிப் படியாகத் தடைகள் வந்தன. இனக் கொடுமைகளும் அழிவுகளும் நிகழ்ந்தன.

இலங்கை தனியரசுரிமை பெற்ற 6 மாதங்களில், சிங்கள ஆட்சி **குடியுரிமைச் சட்டத்**தைக் கொண்டு



**வந்தது.** தமிழர்கள் **ஐயுறவு (சந்தேக)க் குடிமக்கள்** ஆக்கப் பட்டார்கள். சிங்களர் தவிரத் தமிழர் உட்படப் பிற அனைவர்க்கும் **பிறப்புரிமைச் சான்றிதழ்** காட்ட வேண்டும் என்ற கட்டாயச் சட்டம் வந்தது. சிங்களப் பெயர் தாங்கியிருந்தவர்கள் அனைவருமே இலங்கைக் குடிமக்கள் ஆயினர். தமிழ்ப் பெயர்களோ, இசுலாமி யப் பெயர்களோ கொண்டிருந்தவர்கள் இலங்கைக் குடிமக்கள் ஆக இயலாமற் போயினர்.

இதனால் மலையகத்தில் வாழ்ந்த 10 இலக்கம் இந் தியத் தமிழர்களின் குடியுரிமை பறிபோனது; ஒப்போலை உரிமையும் போனது. அதனால் பாராளுமன்றத்தில் முன்பிருந்த 8 உறுப்பினர்களும் 1952 தேர்தலில் நிற்க உரிமையில்லாமல் போயினர்; அவர்கள் பதவியிழந் தனர். எனவே பாராளுமன்றத்தில் (மொத்த மக்கள் தொகையில் 65 விழுக்காடு உள்ள) சிங்களவர், ஆட்சியதி காரத்தில் 80 விழுக்காட்டு உறுப்பாண்மைகளைக் கைப் பற்றினர். அதேபொழுது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்திருந்த தமிழர்களிடையில் சிங்களவர்களைக் **குடியேற்றி** அவர்களைப் பெரும்பான்மையினராகவும், தமிழர்களைச் சிறுபான்மையினராகவும் ஆக்கினர். (இன்று **பாலத்தீன**த்தில் எப்படி **யூதர்கள், அரபியரிட** மிருந்து கைப்பற்றிய நிலப் பகுதிகளில் யூதர்களைக் குடியேற்றி, அரபியர்களைச் சிறுபான்மையினராக ஆக்கினரோ, அப்படி இம் முயற்சி நடந்தது.)

அதன்பின் 1948-இன் பிற்பகுதியில், **இலங்கை-பாக்கித்தானியர் குடியுரிமைச் சட்டம்** கொண்டு வந்து, தமிழரை இரண்டு பிரிவினராக்கி மெலிமைப் படுத்தினர்,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பின்னர், 1956-இல் **சிங்களமே ஆட்சி மொழி** என்னும் **சட்டத்தைக்** கொணர்ந்து, தமிழ்மொழி ஆட்சி உரிமையை இழக்கச் செய்தனர். சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி ஆனது. அதே ஆண்டு கொணர்ந்த **அரசு மதச் சட்டத்தால்** பௌத்த மதமே அரசு மதமானது. **இந் நடவடிக்கைகளால் தமிழரின் அனைத்து வாழ்வுரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்பட்டன.**

**கல்வித்** துறையில் **தமிழர் அரசுப் பதவிகளில்** அமர்த்தம் பெற, சிங்கள மொழியில் 8-ஆம் வகுப்பு தேறியிருக்க வேண்டும். பள்ளியிறுதி வகுப்பில் தமிழ் மாணவர்கள் கூடுதலாக 25 மதிப்பெண் பெற்றால்தான் கல்லூரிகளில் இடம் பெறமுடியும். இதனால் தமிழ் மாணவர்கள் 80 விழுக்காடு மதிப்பெண் வாங்கினால் கூட உயர்கல்வியில் இடம் பெற இயலாது போனது. ஆனால் 40 விழுக்காடு மதிப்பெண்களே பெற்றாலும் கூடச் சிங்கள மாணவர்களுக்கு இடம் உண்டு. இவற்றால் அனைத்துத் துறைகளிலும் தமிழர்கள் உரிமை இழந்தனர்.

அரசுப் பதவிகளில், படைத்துறைகளில் தமிழர்கள் அறவே புறக்கணிக்கப் பெற்றனர். கீழ் உள்ள 1970-ஆம் ஆண்டு புள்ளி விளக்கம் இதனைக் காட்டும்.

**படைத்துறைப் பதவிகளில் :** (1970)

| | | மொத்தம் | தமிழர்கள் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காவல்துறை | 17,000 | 475 | 2¾% |
| 2. | தரைப் படை | 11,000 | 220 | 2% |
| 3. | கடற் படை | 2000 | 20 | 1% |
| 4. | வான்படை | 600 | 6 | 1% |



**பிற ஆட்சித் துறையில் தமிழர்கள் :** (1970)

| | | 1955-இல் | 1966-இல் | 1970-இல் |
|---|---|---|---|---|
| 1 | ஆளுமை (நிர்வாகம்) | 30% | 20% | 5% |
| 2. | அஞ்சல் தொடர்வண்டி | 50% | 30% | 5% |
| 3. | பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மருத்துவர்கள் பொறியாளர்கள் | 60% | 30% | 10% |
| 4. | படைத்துறை | 40% | 20% | 1% |
| 5 | தொழில் உரிமைகள் | 45% | 25% | 5% |

—இவ்வாறான கொடுமைகள் தமிழர்களுக்குச் சிங்களவர்களால் தொடர்ந்து நேர்ந்து வந்தன. இவற்றுக்கிடையில் தமிழர்கள் தங்கள் அரசியல், வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினர். உரிமைப் போராட்டம் தொடங்கிய பின்னர் இனக்கலவரம் மூண்டது. சிங்களவர்கள் தமிழர்களைச் சரமாரியாக ஆங்காங்கே தாக்கிக் கொன்றனர்; அவர்கள் வாழ்விடங்களை, இல்லங்களைச் சூறையாடினர். பெண்களைச் சீர் குலைத்தனர். இவ்வாறான இனக் கலவரங்களைச் சிங்களவர் 1956-இல தொடங்கி 1958, 1961, 1974, 1977 ஆகிய ஆண்டுகளில், தொடர்ந்து நடத்தினர். எனவே 1977-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கை என்னும் - தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடினர். அரசியல் முறையில் பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் எத்தனையோ ஞாயங்களை உரிமை மீட்சிக்காக எடுத்துக் கூறியும், சிங்களர் அவற்றைச் செவி கொள்ளாததாலேயே, அது வரை தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்காத தமிழ்த் தலைவர்கள், 1977 தேர்தலில் அக் கோரிக்கையை முன்வைத்து, மக்கள் கருத்தை அறியவும்,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சிங்களவர்க்கு உணர்த்தவும் போராட வேண்டியிருந்தது. அக் கருத்தை மக்கள் ஏற்றுக் கொண்டதற்கடையாளமாகத் தேர்தலில் வெற்றியும் பெற்றுக் காட்டினர்.

ஆனால், எந்தக் கோரிக்கையும் தமிழர்களுக்குப் பயனளிக்கவில்லை. அத்துடன் இனப் போராட்டங்கள் வேறு கலவரங்களாக, இன அழிப்பு முயற்சிகளாக மீண்டும் தொடர்ந்தன. 1977, 1979, 1981, 1983-ஆகிய ஆண்டுப் போராட்டங்கள் உலக உரிமை வரலாற்றில் அரத்தக்கறை படிந்தவையாகும்.

அரசியல் தலைவர்களின் கோரிக்கைப் பேச்சுகள் இன உணர்வும் உரிமை அறிவும் பெற்ற இளைஞர்களுக்கு மனச் சோர்வையும், உரிமை உணர்வையும் உண்டாக்கவே, கோரிக்கைப் போராட்டங்கள் **கருவிப் போராட்டங்களாக** முகிழ்த்தன. துணிவும், வீரமும் கொண்ட இளைஞர்களின் போராட்டக் குழுக்கள் தோன்றின. கருவிப் பயிற்சிகள் தரப்பெற்றன. கமுக்கமான, கரந்துறை முறையில் விடுதலைப் படைகள் உருவாயின. 1983-இன் தொடக்கத்தின் இந்நிலை தோன்றி வளர்ந்தது.

முதன்முதலில் இப்போராட்டங்கள் வேறு வேறு தலைமைகளின் கீழ், பல்வேறு குழுக்களாக (ஏறத்தாழ 16 குழுக்களாக)ப் பிரிந்து செயற்பட்டாலும், நாட் செல்லச் செல்ல, பிற அனைத்துக் குழுக்களும் பின்வாங்குதலும், பல்வேறு காட்டிக் கொடுப்புகளும் செய்து போராட்டக் களத்திலிருந்து நெகிழ்த்துக் கொண்டன. இப்போராட்ட முயற்சிகளெல்லாம், அவற்றால் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் எல்லாம் நூலுள் பார்க்கலாம். அவற்றை ஈண்டு விரிப்பின் பெருகும்.



இறுதியாக, இன்று தமிழீழத்திற்காகக் களத்தில் நின்று, எவ்வாறேனும் தமிழர்களுக்கெனத் தன்னுரிமையும் முழு இறைமை நலமும் சான்றஒரு நாடு - தமிழீழம்- படைத்துவிட வேண்டுமென்று, விடா முயற்சியுடனும், உள்வேகத்துடனும் போராடிக் கொண்டிருப்போர் மாவீரர் **தம்பி பிரபாகரனும்** அவரின் **புலிப்படையினருமே** ஆவர். இவரின் இப்பொழுதைய முயற்சி தான், இலங்கையில் தமிழர்களுக்கென்று ஒருநாடு - தமிழீழம் - படைப்பதாகும். போராட்டம் நடந்து கொண்டுள்ளது. வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் நமக்குக் கல்போல் உள்ளது.

இன்றைய உலக வரலாற்றில், தங்கள் தங்கள் உரிமைகளைப் பிற பேரினங்களிடம் இழந்து நிற்கின்ற பல்வேறு சிறுபான்மை இனங்கள். பல்வேறு நாடுகளில் தங்களின் உரிமை மீட்புக்காகவும் நிலமீட்புக்காகவும் போராடி வருவதை நாம் அனைவரும் அறிவோம். தமிழர்களும் தாங்கள் மற்ற இனங்களிடம் இழந்துவிட்ட தம் அரசியல், பொருளியல், குமுகாயவியல் உரிமைகளுக்காகப் போராடிப் பெறுவதற்கு எழுந்து நிற்கின்றனர். இன்று உலகில் தமிழர்களுக்கென்று தமிழீழமும், இந்தியத் தமிழ்நாடுந்தாம் உரிமை பெறும் நாடுகளாக உள்ளன. இவை ஒன்றுக்கொன்று கைகொடுத்துக் கொண்டு, உளைந்து போராடி, உலகில் உள்ள ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கென்று உரிமை பெற்ற ஒரு நாட்டைச் சமைத்தெடுக்க வேண்டும். இம்முயற்சிகளில் தமிழீழ முயற்சிகளே இன்று முன்னின்று உலகத் தமிழினத்திற்கு வழிகாட்டுதலாயும், விடிவெள்ளியாயும் அமைந்து நிற்கின்றன.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்நூலில் உள்ள கட்டுரைகள் அனைத்தும், அத் தமிழீழப் போராளிகளைப் பற்றியும், அவர்களின் போராட்ட முயற்சிகளைப் பற்றியும், நாம் பல்வேறு காலக்கட்டங்களில், நம் **தென்மொழியி**லும், **தமிழ்நிலத்**திலும் எழுதி வெளியிட்டவை ஆகும். அவை 1977 முதல் 1989 வரை எழுதப் பெற்றவை.

இன்று, தமிழீழப் போராட்டக் களத்திலும் அரசியல் களத்திலும் நின்ற - நிற்கின்ற அனைத்துப் போராளிகளையும், அரசியலாளிகளையும், 1973 முதலாகவே, நேரடியாகவே நாம் அறிவோம்; அவர்களொடு பழகியுமிருக்கின்றோம்; எனவே அவர்களின் நேரடி, மறைமுக அனைத்து முயற்சிகளையும் கருத்துகளையும் நாம நன்கு உணர்ந்திருக்கின்றோம். எனவே, அவர்கள் அனைவருடைய முயற்சிகளையும், முனைப்புகளையும், அவர்களுடன் இடைத் தொடர்பு கொண்டு, பல்வேறு நிலைகளில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் இயங்கி, அவர்களுக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு, இறுதிவரை தீங்கே செய்து கொண்டிருக்கும் இந்திய அரசின், தலைவர்களின் வஞ்சக, இரண்டக, போராட்ட முறியடிப்புச் செயல்களையும் இந் நூலின்கண், அவ்வக் கால நிலைகளில் நாம் திறனாய்வு செய்தும் கருத்துகள் கூறியும் வந்திருப்பதை அனைவரும் அறிந்து கொள்ளலாம். பிற சிறப்பியல்களையும் இந் நூலில் கண்டு கொள்ளும் வாய்ப்பை அன்பர்களுக்கே விட்டு விடுகிறோம்.

மொத்தத்தில் இந்நூல் ஒரு வரலாற்று முகாமையான நூலாகும்; கருவி நூலாகும். இதை வெளிக் கொணரும் முயற்சி பெரிது; உழைப்பும் பெரிது. '**பெருமையுடையவர் ஆற்றுவர் ஆற்றின் அருமையுடைய**



**செயல்'** — என்னும் திருக்குறள் வாய்மொழிக்கேற்ப, இதனை வெளிக் கொணரும் முயற்சியில், பல்வேறு தமிழின நலங் கருதும், அன்பும் அறமும் மறமும் சார்ந்த நல்லுள்ளங்கள் பலவும் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றுள்ளன. அவ்வுள்ளங்களுக்கெல்லாம் முழு முனைப்பாக நின்று இயங்கிய, சென்னை எண்ணூர் **பைந்தமிழ்ப் பாசறை**யின் செயலரும், பொருளரும் ஆகிய அன்புத் தம்பிகள் திருவாளர்கள் **துரை. தென்னவன்** அவர்களும், **அறிவுடை நம்பி** அவர்களும நம்முடைய அனைத்துப் பாராட்டுகளுக்கும் போற்றுதலுக்கும் உரியவராவார்கள். அவர்களுக்கும் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய பிற அனைத்துத் தமிழ் உள்ளங்களுக்கும் நாம நெஞ்சு நிறைந்த நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

மற்றும், இவ்வகையில் உறுதுணை நின்ற திருக்குறள் **மணி** புலவர் **இறைக்குருவனார்**, நிறைமொழி அச்சகத்தார், அன்பு ஓவியர் திரு. **சந்தானம்** ஆகியவர்களுக்கும் எம் நன்றி என்றும் உரியது.

**சென்னை - 5**
**9 - 11 - 90**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# பொருளடக்கம்


| வரிசை எண். | | பக்க எண். |
|---|---|---|
| | **I. தமிழீழம்** | |
| 1. | இலங்கை வரலாற்றுப் பின்னணி | 1 |
| 2. | இலங்கையில் தமிழர்க்கு நேர்ந்துவரும் கொடுமைகள் ஓர் இனஅழிப்பு முயற்சியே! | 19 |
| 3. | அமிர்தலிங்கத்தின் தமிழக வருகையும் அதன் பயன்களும்! | 45 |
| 4. | உரிமையே எண்ணம்! உழைப்பே கொள்கை! உண்மை விளைவு தமிழீழம்! | 58 |
| 5. | இலங்கையில் தமிழின வேட்டை (அல்லது) இலங்கை அரசு தமிழீழ மக்கள்மேல் தொடுத்த போர்! | 65 |
| 6. | தமிழீழ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அடைக்கலம் தருக! | 70 |
| 7. | விடுதலைப் புலிகளும் விரும்பத்தகா நடவடிக்கைகளும்! | 75 |
| 8. | தமிழீழப் போராளிகள் சென்னையில் சிறை-1 (1982) | 84 |
| 9. | தமிழீழப் போராளிகள் சென்னையில் சிறை-2 (1982) | 91 |
| 10. | தமிழக அரசே! இலங்கை அரசுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்புக! | 98 |
| 11. | நெஞ்சம் பதறுகிறது! | 101 |
| 12. | எழுந்துள்ள தமிழின எழுச்சிக்குரல் தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்! | 105 |
| 13. | இலங்கைக் கலவரம் தமிழகத்திலும் பற்றுவதற்கு முன், இந்திரா நடவடிக்கை எடுக்க வேண்டும். | 108 |
| 14. | இந்திரா அரசு, இலங்கைத் தமிழீழச் சிக்கலை, விரைவில் தீர்வுசெய்ய வில்லையானால், இங்குள்ள தனித் தமிழ்நாட்டுச் சிக்கலை மிகக் கடுமையாக எதிர்நோக்க வேண்டியிருக்கும்! | 111 |
| 15. | தமிழீழ விடுதலைக்கு மாற்றுத்தீர்வு தமிழீழ விடுதலையே! | 117 |
| 16. | தமிழினத்தைச் சூது கவ்விக் கொண்டிருக்கிறது! | 120 |
| 17. | அமிர்தலிங்கத்தின் இரண்டகம்! | 122 |
| 18. | தமிழீழ விடுதலைக் கூட்டணி இனிச் செய்யவேண்டுவது என்ன? | 129 |
| 19. | இலங்கைத் தமிழர்கள் அழிவை ஏனென்று கேட்பவர் யாருமில்லையா? | 135 |
| 20. | படைத்துறையினரின் தீப்பந்த விளையாட்டால் யாழ்நகர் கந்தர்மடம் சுடுகாடாக்கப்பட்டது! | 138 |
| 21. | கழுதை தேய்ந்து கட்டெறும்பானது! (அமிர்தலிங்கத்தின் விடைக்கு விடை) | 141 |
| 22. | தமிழீழ விடுதலையின்றித் தமிழரைக் காப்பது, தலையின்றி முண்டத்தைக் காப்பதாகும்! | 145 |
| 23. | அமிர்தலிங்கம் இப்பொழுதுதான் உண்மையை உணர்கிறார்! | 148 |


FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

24. தமிழீழம் அமைய இரண்டே
இரண்டு வழிகள்! 153
25. இலங்கை - அதுலத்முதலியும்,
இந்தியாவின் பி. சி. சேத்தியும்
ஒரே மனப்பான்மையரே! 159
26. முதலமைச்சர்க்கு ஒரு வேண்டுகோள்! 162
27. இந்திராகாந்தியும் ஜெயவர்த்தனாவும்
வரலாற்றடிப்படையில் தமிழினத்தின்
ஒரே வகையான எதிரிகளே! 166
28. அதிகாரம் வேண்டுகிறார் அமிர்தலிங்கம்!
ஆட்சி வேண்டுகின்றனர் இளைஞர்கள்! 169
29. இலங்கைச் சிக்கலை ஐந்தாண்டுக்குள்
தீர்க்கவில்லையானால், இலங்கையில்
உள்ள தமிழினம் முழுவதுமே அழிந்துபடும்! 173
30. இலங்கைச் சிக்கலை, இந்தியா
உலக ஒன்றியப் பேரவைக்கு
எடுத்துச் செல்ல வேண்டும்! 178
31. ஈழத் தமிழர்களின் ஈகக் குருதியிலே
குளித்து முழுகுகிறார் தொண்டைமான்! 181
32. தமிழீழ விடுதலைப் போராளிகள் தங்கள்
மன இறுக்கங்களைத் தவிர்த்து
ஒன்றுபட வேண்டும்! 185
33. இலங்கையில் பகைச்செயல் நிறுத்தம்! 188
34. திம்புப் பேச்சில் தென்பில்லை! 191
35. திம்புவுக்குப் பின்னும் இலங்கையில்
பேச்சு தொடருமாம்! 197
36. திம்புவின் அணுகுமுறை பாராட்ட
வேண்டிய அரச தந்திரமன்று! 200
37. ஓநாய் 'புத்தம்' பேசுகிறது! 205
38. உலக ஒன்றியப் பேரவை (U.N.O.)
உறங்குகிறதா? அல்லது
ஊமையாகி விட்டதா? 208
39. பிரபாகரன் சிந்திக்க வேண்டும்! 210
40. திம்புவில் பேச்சு தொடங்கி ஓராண்டு
ஆகியும் இன்னும் தீர்வு இல்லையே! 217



41. தமிழீழத் தீர்வே தமிழினத் தீர்வு! 224
42. வீடுவேண்டும் என்ற நிலையிலிருந்து
திண்ணை வேண்டும் எனப் போராளிகள்
இறங்கி வரலாமா? 228
43. தன்மதிப்பும் தன்மானமும் பாராமல்
இனநலம் கருதித் தமிழீழப் போராளிகள்
பிரபாகரனுடன் ஒன்றுபட்டு, அவர்
தலைமையில் இயங்குமாறு அன்புடன்
வேண்டிக் கொள்கிறோம்! 235
44 இலங்கைச் சிக்கல் - இராசீவ் கருத்துகள்! 239
45. 3000 தமிழர் இலங்கைச் சிறையில்
வாடுகின்றனர்! கேட்க ஆளில்லை! 243
46. இலங்கைத் தமிழரை அடியோடழிக்க
எண்ணுகிறார் செயவாத்தனே! 245
47. போராளிகள் சோர்வடைய வேண்டா! 246
48. திலீபன் ்கள் இறக்கக் கூடாது! 248
49. விடுதலைப் புலிகள் பணியக் கூடாது! 251
50. முரணான ஒப்பந்தம்! 257
51. யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படை! 260
52. சிங்களப் படையைவிட இந்தியப் படை
நூறு டங்குக் கொடுமை! 264
53. பிரபாகரன் கொல்லப்படுவானானால்,
தமிழகத்தில் பஞ்சாப் நிலைகள்
தொடங்கும்! 270
54. பஞ்சாபும் தமிழீழமும்! 274
55. தமிழர்க்கு வாழ்வுரிமைகளும் தனிநாடும்
கிடைத்துவிடக் கூடாதென்பதே
இந்தியாவின் கொள்கை! 280
56. விரும்பப்படாத-வேண்டாத-விருந்தாளியாக
இந்திய அமைதிப்படை இலங்கையில்
இருப்பது எதற்கு? 285
57. வெட்கங்கெட்ட இராசீவ்! வீரங்கெட்ட
இந்திய அமைதி(!)ப் படை! மானங்கெட்ட

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வடக்கு-கிழக்கு மாகாணத் தலைவர் வரதராசப் பெருமாள்! 289

58. இராசீவ் செய்த சூழ்ச்சியே தமிழீழத் தலைவர்களின் படுகொலைகள்! 293


## 2. தமிழீழம், தமிழ்நாடு, இந்தியா!


1. தமிழீழப் போராட்ட எழுச்சி, தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கும் உதவட்டும்! 299

2. தமிழீழப் போராளிகளை ஒன்றுபடக் கூறும் தமிழகத் தலைவர்கள், தங்களுக்குள் ஒன்றுபட்டால் என்ன? 301

3 தமிழீழப் போராட்டத்திற்குப் பொதுமக்கள் படையை தமிழகஅரசு அனுப்பவேண்டும்! 305

4. இலங்கைச் சிக்கலில், தமிழ்நாடு அரசின் கண்துடைப்பு முயற்சிகள்! 308

5. தமிழீழம் விடுதலை பெறுவதை ம.கோ. இரா அரசு விரும்பவில்லையா? 311

6. இலங்கைத் தமிழர்களுக்கு உற்றநிலை எதிர்காலத்தில் இந்தியத் தமிழர்களுக்கும் கட்டாயம் வரும்! 314

7. 'தமிழீழம்' 'தனித் தமிழ்நாடு'- இரண்டுக்குமாகவே உலகத்தமிழினம் போராட வேண்டும்! 320

8. தமிழீழப் போராளிகளின்மேல் தமிழகஅரசு நடவடிக்கை! கொடுமை! அவமானம்! 334

9. இராசீவ்காந்தி-இராமச்சந்திரன் சூழ்ச்சிகள் தமிழினத்தின் நிலையான அடிமைக்கு அடிகோலி விட்டன! 338

10. தமிழ்நாட்டு அரசியல் குழப்பத்தால் தமிழீழப் போராட்டம் அடக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சப்படுகிறது! 343





11. தமிழீழப் போராளிகள் சண்டை நிறுத்தக் கோரிக்கை பயன்தராது! 347

12. ஆயிரம் அரசியல்காரர்களை உருவாக்கலாம்; ஒரு விடுதலை வீரனை உருவாக்குவது கடினம்; 2000 ஆண்டுகளுக்குப்பின், தானே வளர்ந்தோங்கி நிற்பவன் பிரபாகரன்! 352

13. இந்தியாவும் இலங்கையும்! 357

14. இந்தத் தலைமுறையில் நடுவணரசிடமிருந்து விடுவித்துக் கொள்ளவில்லையானால், எப்பொழுதும் நாம் அடிமைதாம்! 361

15. இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத குறையை மறைக்க, இராசீவ் நம்பியார் விடுதலையை மேலே தூக்கிப் பிடித்துள்ளார்! 365

16. உத்திகள் வேறு; உறுப்பினர் வேறு; நாடகம் புதியது; முடிவு பழையது! 368

17. இராசீவ் காந்தி எப்படிப்பட்டவர்? 371

18. திம்புப் பேச்சு வழியாக, செயவர்த்தனாவின் மேலுள்ள அரத்தக் கறைகளைத் துடைத்து உலக நாடுகளின் கண்களுக்கு அவரை நல்லவராக்கப் பார்க்கிறார் இராசீவ்காந்தி! 374

19. தமிழீழக் கோரிக்கையைப் பின்வாங்கச் செய்வதே இராசீவ் காந்தியின் நோக்கம். 378

20. பஞ்சாபும் இலங்கையும்! 382

21. இராசீவ் காந்தியே! தலைமையமைச்சர் பதவியை விட்டு உடனே நீங்குங்கள்! 386

22. இந்தியாவின் ஓரவஞ்சனை! 392

23. இந்தியா செய்த உணவு உதவிகள், இராசீவின் இரண்டாவது நாடகம்! 394

24. தமிழின மக்களிடம் இந்திய அரசு நடந்துகொள்வது கொடுமை! கொடுமை! 399

25. இராசீவ் காந்தியின் நோக்கம் தமிழர்களை அடியோடு அழித்து ஒழிப்பதே! 401

26 பார்ப்பனிய முதலாளியங்களின் இன, அரசியல் கருத்துகள்


FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இருக்கும்வரை இந்திய ஒருமைப்பாடு,
ஒற்றுமை உணர்வுகள் வெற்றிபெறா!
பிரிவினை உணர்வும் வளர்ந்தே தீரும்! 408

27. தொலைக்காட்சி 'இராமாயணம்' ஆரிய-திராவிடப் போரை, மீண்டும் தட்டி எழுப்பும்படி அமைந்திருக்கிறது! 412

28. தந்திரங்களும் சூழ்ச்சிகளும் தமிழின மீட்சிக்கு உதவா! நேரிடையான போராட்டமே தேவை! 417

29 தமிழக விடுதலைக் கோரிக்கையே, தமிழீழத்தையும் வென்றெடுக்க வல்லது! 420

30. பட்டாசு மருந்துகளை வெடிகுண்டுகளாக்கித் தமிழீழ விடுதலைப் போராளிகளிடம் கொடுங்கள்! தமிழினம் உய்யட்டும்! 427

## 3. தமிழீழப் பாடல்கள்

1 நெஞ்சை உருக்கும் நிலை! 435
2. இன்னும் பொறுத்திடலாமோ? 436
3 தமிழ்மானம் நிலைபெறும்! 438
4. போக்கற்றோம்! போக்கற்றோமே! 439
5. தமிழ்நெஞ்சங்களே! வீரத் தமிழ் மறவர்களே! உங்களைப் பதறப் பதற வாரிக் கொடுத்து விட்டோமே! 440
6. சிங்கள இனமே! சிங்கள இனமே! 444
7. தந்தை செல்வா தம் பெயர் சொன்னால் தழைக்கும் தமிழீழம்! 445
8. பேச்சுரையால் தமிழீழம் பிறப்பதில்லை! உரிமையெண்ணம் சாவதில்லை! 446
9. சீரழிவும் செஞ்சோற்றுக் கடனும்! 449
10. தமிழீழ மறவரைத் தமிழால் வணங்குவேன்! 450
11. புலியோ புலி! 451
12. இனம், நிலம் மீட்க இணைந்து செய்க! 452



13. பிரபாகரன் பிறந்தநாள் வாழ்த்து! 455
14. ஓ! பிரபாகரனே! கதிர்க்கையனே! நீ எங்கே இருக்கிறாய்? 456
15 இந்தக் குழந்தைகள் தமிழக் குழந்தைகள்! 462
16 அழுகிறாய் கண்ணே! அழாதே! 463
17 யாருக்காக அழுகிறாய்? 464
18 தமிழீழப் பெண்கள் எழுச்சிப் பண்! 465
19. தமிழீழ வாழ்த்துப் பண்! 466

## 4. தமிழீழம் பற்றிப் பிற பொதுக் கருத்துகளும், சில சிறப்புச் செய்திகளும்!

1 தமிழீழம் பற்றிப் பிறர் என்ன சொல்கிறார்கள்? 469
- 1 செயவர்த்தனாவும்! தமிழர் விடுதலை முன்னணியும்! 469
- 2. இலங்கைத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வு ஈழமே! 474
- 3. இலங்கைத் தமிழர் சிக்கலும் இந்திய அரசின் தீர்வும்! 477
- 4. விடுதலை இயக்கங்களின் கருத்து கவனிக்கப் படவில்லை! 481

2 விடுதலைப் புலிகள் வெற்றிபெற முடியுமா? வெளிநாட்டுத் தாளிகைகள் என்ன சொல்கின்றன? 483
3 வல்வெட்டித்துறைப் படுகொலை! 487
4 இலங்கை - சிறிமாவோ - சாத்திரி ஒப்பந்தம். 491

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

5. ஒரு நாட்டின் உள்முகச் சிக்கலில்
வேறொரு நாடு தலையிடுவதற்கு
உலக ஒன்றிய அவை வழங்கும் உரிமை! 493

6. 'தனி நாடு' கோரிக்கை-
அனைத்துலகச் சட்டப்படி குற்றமன்று! 494

7. தமிழக அரசின் போலித்தனமான -
ஏமாற்றுத்தனமான நடவடிக்கைகள்! 497

8. இந்தியப் படைகளால் 1987 இறுதிவரை
இலங்கையில் அழிவுகள் (ஒரு கணக்கீடு) 498

9. கதிரைவேலனார் அவர்களின் மறைவு! 499

தமிழீழம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

1300 / 2010
http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்

# 1. இலங்கை வரலாற்றுப் பின்னணி

பழந்தமிழ் நாடு, செந்தமிழ்நாடும் கொடுந்தமிழ் நாடும் என இரு பிரிவாகப் பிரித்து பேசப் பெற்றது. அவற்றை மருவிச் சூழ்ந்துள்ள நாடுகள் பதினேழு என்று குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றைக் கீழ்வரும் பழம் பாடலால் அறியலாம்.

சிங்களம் சோனகம் சாவகம்
சீனம் துளுக்கடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம்
தெலுங்கம் கலிங்கவங்கம்
கங்கம் மகதம் கவுடம்
கடாரம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி
னேழ்புவி தாமிவையே!

ஈழம் என்பது சிங்களத்தின் மறு பெயராகும் என்பது, இலக்கண விளக்கம் 'செந்தமிழ் நிலஞ்சேர்' என்னும் நூற்பாவுரையால் அறியப்படும். 'சிங்களம்' என்னும் பெயர், சிங்கவாகுவின் மகன் விசயன், தன் தந்தையின் பெயரடிப்படையாகக் கொண்டு அமைத்த தென்பது பொருந்தாது. சிங்கவாகுவின் மகன் இலங்கைக்கு வந்தது இன்றைக்கு ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன். ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன் உள்ள பாரதத்தில் **சிங்களம்** என்னும் பெயர் வந்துள்ளது. இப்பெயர் அங்குப் பேரளவில் விளையும் கறுவாப்பட்டையால் வந்தது என்பதே பொருந்துவதாகும். இலக்குமன் இராமச்சந்திர

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வைத்திய பண்டிதர் என்பார் எழுதிய சமற்கிருத-ஆங்கில அகர முதலியில் சிங்களத் துவீபம் என்பதற்குப் **பட்டைத் தீவு** என்றே பொருள் தரப் பெற்றுள்ளது.

இனி, சிங்களம் என்னுஞ் சொல்லால் இந்நாடு குறிக்கப் பெறுவதை விட, **இலங்கை, ஈழம்** என்னுஞ் சொற்களால் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப் பெறுவதே பெருவழக்காக உள்ளது.

**'தொல்லிலங்கை கட்டழித்த** —சிலப். 2.35:3<br>
**'பெருமா விலங்கை** —புறம்: 178-6.<br>
**'இலங்கைக் கிழவோன்'** —புறம்: 379-6.<br>
**'தொல்மா விலங்கை'** —சிறுபாண்-119.<br>
**'இலங்கையில் எழுந்த சமரம்'** —சிலப்.26-238.<br>
**'ஈழத்துணவு'** —பட்டினப்-191.<br>
**'ஈழம்'** முத்தொள்.26-3.

முதலிய குறிப்புகளால் இதனை உணரலாம். இவ்வாறாகப் பலவகை இலக்கியக் குறிப்புகளாலும், பற்பல வரலாற்றுக் குறிப்புகளாலும், இலங்கைக்கும் சிங்களவர்க்கும் உள்ள தொடர்பை விட அல்லது உரிமையை விட, அதற்கும் தமிழர்க்கும் உள்ள தொடர்பே மிகுதி என்று நிலை நாட்டலாம். சேர மண்டிலம், சோழ மண்டிலம், பாண்டிய மண்டிலம், தொண்டை மண்டிலம் என்று மண்டிலப் பெயர் கொண்டு வழங்கும் நாடுகளுள் ஈழ மண்டிலம் என்பதும் ஒன்றாகப் பண்டைத் தமிழ் நூல்களில் குறிக்கப் பெறுகிறது.

விசயன் இலங்கைக்கு வந்த கி.மு. 543க்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்தே, அந்நாடு தமிழ் மக்கள் குடி கொண்டிருந்த நாடாக இருந்தது என்பர் **பெர்டோலாக்கி** (Bertolocei) **பென்னட்** (Bennet) ஆகிய



ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள். அந்நாட்டில் வழங்கும் பல ஊர்களின் பெயர்கள் இன்னும் தூய தமிழ்ப் பெயர்களாகவே விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக பாலாவி, மாதோட்டம், மாந்தை, சிலாபம், குசலை, உடைப்பு, ஆனைமடு பள்ளம், கற்பிட்டி, குதிரை மலை, வில்பற்று, முசலி, மன்னார் மூதூர், கந்தளாய், பன்குளம், திறப்பனை, குச்சவெளி, நிலாவெளி, பச்சிலைப் பள்ளி, கரைச்சிக் குடியிருப்பு, முள்ளிய வலை, குமணை, உகந்தை, அம்பாறை, நல்லூர், அரிப்பு, வெருகல் (ஆறு), பருத்தித்துறை, புத்தளம், வதுளை, கண்டி, கதிர்காமம், கொழும்பூ (இதுவே பின்னர் கொழும்பு என்றானது), சிலாத்துறை, சுண்ணாகம், செம்பியன் பற்று, ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மண்டைத்தீவு. வேலணை, காரைத்தீவு, எழுவைத் தீவு, அனலைத் தீவு, புங்குடுதீவு, (இது பொன் கொடு தீவு என்பதன் மருவாதல் வேண்டும்) நெடுந்தீவு, பாலைத்தீவு, மாங்குளம், அருவியாறு, ஆனைமேடு, களுத்துறை, அலம்பில், வப்புவெளி, செங்கலம், கோட்டை முனை, பொலனறுவை, மட்டக்களப்பு, தும்பளஞ்சோலை, அக்கறைபற்று, வெளிமடை, அப்புத்தளை, வெல்லவாய், புத்தளை, கருக்குப்பனை, முந்தூல், அறுகும்குடா, அம்பாந்தோட்டை, தேவுத்துறை, பாணன்துறை, கமம் முதலிய பரவலான எண்ணிறந்த ஊர்கள் தூய தமிழ்ப் பெயர்களே! மேலும் இவற்றுள் பல பெயர்கள் பண்டைக் காலந் தொட்டே அங்கு வழங்குகின்றன. தேவாரத்தில் பாலாவி, மாதோட்டம், மாந்தை, திரிகோணமலை, திருக்கேதீசவரம் முதலிய பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. இலங்கையில் பண்டையில் ஆண்ட சோழ, பாண்டிய அரச வழியினர் மாதோட்டத்தில் கட்டியிருந்த கோட்டை மிக்க வலிமையும் அழகும் வியப்பும் உடைய

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தென்றும், பெருமாக்கலங்கள் மன்னார் கடலில் வருமாயின் அவற்றைத் தன்பால் இழுத்துக் கொள்ளும் காந்தப்பொறியுடையதாய் இருந்ததென்றும் கூறுவர். (பார்க்க: தமிழ்ச் சங்கமும் ஈழநாடும்—கட்டுரை—செந்தமிழ் தொகுதி 8-பகுதி 10). உரோமர் இலங்கையிலே வாணிகம் செய்த காலத்திலேயே தமிழர் மாதோட்டத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்தார்கள் என்னும் செய்தி குறிக்கப் பெறுகிறது. (Journal of the Royal Asiatic Society-Ceylon Branch. 1848. p. 73)

மேலும் பண்டைய நாகர்களுக்கும் இலங்கைக்கும் பெருந்தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்றும் கருதப் பெறுகிறது. நாகர்கள் பழந்திராவிடர்கள். இராவணன் நாகர்கள் மரபில் வந்தவனே என்பர். ஒரு காலத்தில் நாகர்கள் இலங்கையிலிருந்து இமயம் வரை ஆட்சி செய்தனர் என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள்உள்ளன. இலங்கை விசயனால் ஆளப்படுவதற்கு முன்னரே, அங்கிருந்த அரசர்கள் நாகராயர் என்னும் பெயரைப் புனைந்திருந்தனர் என்றும் தெரிய வருகிறது. (Sketches of Ceylon History). இலங்கையிலும் தமிழகத்திலும் நாகபுரம், நாகர்கோயில், நாகப்பட்டினம் முதலிய பெயர் கொண்ட பல ஊர்கள் இன்றும் உண்டு. ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் சிங்களவர்களால் **நாகத்தீவு என்றே** வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அரசிழந்த நாகர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திதில் விந்தனைப் பகுதியிலும் நயினார் தீவிலும் போய் ஒதுங்கியிருந்தார் என்பர். மேலும் முதற்கழகப் புலவர் **முடிநாகராயர்** என்பாரும், ஈழத்துப் பூதந் தேவனார் என்பாரும், இறையனாரகப் பொருளுரையைப் பாடங்



கேட்ட **இளநாகர்** என்பாரும், அவர் மாணவர் **நீலகண்டனாரும்** ஈழநாட்டுப் புலவர்களாதல் வேண்டும் என்று அறிஞர் பலர் கருதுவர். யாழ்ப்பாணத்துக்கு **மணற்றி** என்றொரு பெயரும் உண்டு. இன்னும் மாந்தையிலும், மணற்றியிலும் பாண்டியர் போர் புரிந்து பெற்ற கொற்றமும் இறையனார் அகப்பொருட் கோவையிற் கூறப் பெறுகின்றது. மாந்தை என்பது மாதோட்டத்துக்கு அண்மையில் உள்ள ஊர். மணற்றி என்பது மணல் மேடு என்றும் மணற்றிடல் என்றும் ஒரு காலத்தில் வழங்கப் பெற்றதாகத் தெரிகிறது. இஃதொரு காலம் இலங்கையரசர் பாண்டியரொடும் சோழரொடும் பொருதிய போர்க்களமாக விருந்தது. இதன் பகுதிகளுள் ஒன்று இன்றும் **களபூமி** என்னும் பெயரால் வழங்கும் மாந்தையிலும் மணற்றியிலும் கி.மு 103-இல் ஒரு பெரிய போர் நடந்ததென்றும், அப்போரில் பாண்டியர் வாலகம்பாகுவைப் புறங்கண்டு அவன் மனைவியையும் புத்த கலத்தை (பாத்திரத்தை)யும் கவர்ந்து கொண்டு போனதுடன், ஈழநாட்டையும் தமதடிப்படுத்திப் போயினர் என்றும் **மகாவம்சம்** கூறுகிறது.

''இன்னும் சிலப்பதிகார உரையாசிரியர் **அடியார்க்கு நல்லார்** ஈழ நாட்டார் எனப்படுவார். அவர் குணபூசண சிங்காரிய' அரசர்க்கு அமைச்சராயிருந்து, ஈழநாட்டில் பல அறச்சாலைகளும், கல்விக் கூடங்களும் அமைத்தார். அஃது **அடியார்க்கு நல்லான் குளமென** வழங்குகின்றது. அது வண்ணைச் சிவன் கோவில் சந்நிதித் தெருவில் உள்ளது. அதற்கயலிலே அவர் தம் அரசன் பெயரால் அமைப்பித்த குளம் **ஆரியகுளம்** என இக்காலத்து வழங்குகிறது. அவர் இருந்த மனைநிலமும் அவர் பெயராலேயே வழங்குகின்றது. அவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழர் மிகப் பேரளவில் இருந்தனர். அவரே அறுபத்து

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மூன்று நாயன்மார்கள் கோவிலும், பூசைக் கட்டளை யும் வகுத்தவர். அக்கோவில் இருந்த இடம் **'நாயன்மார் கட்டு'** என்று இன்றும் வழங்குகின்றது. அடியார்க்கு நல்லார் நிரம்பை என்னும் ஊரில் பிறந்தவர்'' (தமிழ்ச் சங்கமும் ஈழநாடும்—கட்டுரை. 'செந்தமிழ்' தொகுதி8; பகுதி 10)

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள செம்பியன் பற்று, பல்லவராயன் கட்டு, தொண்டைமானாறு, பாண்டியன் தாழ்வு முதலிய இடப் பெயர்களை நோக்குமிடத்துத் தமிழ்நாட்டு வேந்தர்கள் யாழ்ப்பாணத் தொடர்புடை யவர்களா யிருந்தனர் என்பது நன்கு துணியப்படும். இன்னும் மாதோட்டத்துக்குத் தெற்கேயுள்ள குதிரை மலை மிக்க பழமையும், யவன நாடுவரையும் பரந்த புகழும் உடையது. அஃதொரு காலம் சிற்றரசருள்ளே எழினியும் பிட்டங்கொற்றனும் புறநானூற்றில் பாடப் பட்டோராவர். (மேற்படி கட்டுரை.)

இவ்வாறான பல இலக்கிய வரலாற்றுச் செய்தி களால், இலங்கையைத் தொடக்கத்தில் தமிழினத்தவரின் முன்னோர்களே ஆண்டிருந்தனர் என்பதும், இடையில் கி.மு. 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டளவிலேயே ஆரிய இனத்தவரான சிங்களவர்கள் வட இந்தியாவினின்று வந்து அங்குக் குடியேறித் தமிழ் அரசர்களுடன் சண்டை யிட்டு அந்நாட்டைக் கைப்பற்றினர் என்பதும், அதன் பின்னரும் அந்நாடு தமிழர் கைக்கும் சிங்களர் கைக்கும் மாறி மாறி ஆட்சிக்கு வந்ததென்பதும், இறுதியில் கி.பி. 1070 வரை இலங்கை முழுவதும் இராசேந்திர சோழ னால் ஆளப்பெற்றதென்பதும், அதன் பின்னரே போர்த்துக்கீசியர் அதனைக் கைப்பற்றி ஆண்டனர் என்பதும் தெரிய வருகின்றன.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



இவ்வகையில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் நெருங்கிய கலை, பண்பாட்டு, சமய, குமுகவியல், மாந்த உறவுகள் உண்டு என்று வரலாற்றுப் பேராசிரியர் பலரும் அறுதியிட்டுக் கூறுகின்றனர். இதற்கான அகப் புறச் சான்றுகள் வடமொழி, பாலி, தமிழ் ஆகிய மும் மொழி இலக்கியங்களிலும் பரந்து கிடக்கின்றன.

## இன்றைய நிலையில் இலங்கை

இவ்வாறு, பலவகையிலும் தமிழர்கள் வாழ்ந்திருந்த, அவர்களின் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் இவற் றுடன் தொடர்பு கொண்டிருந்த தொன்மை நிலமாகிய இலங்கை, தமிழர் கைகளினின்று சிங்களவர்கைக்கு வரு வதும் பின்சிங்களவர் கைகளினின்று தமிழர் கைக்குமாறு வதுமாக இருந்து, அதன் பின்னர் கடந்த 500 ஆண்டு களுக்கு முன்பிருந்து போர்த்துக்கீசியர், ஆலந்துக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் கைகளில் தவழ்ந்து, இறுதி யில். இன்று சிங்களவர் கையில் வந்து தங்கியுள்ளது. ஆங்கிலேயர்கள் ஆட்சி 1796 முதல் 1948 வரை இருந்தது.

இறுதியாகப் பிரிட்டிசுக்காரர்கள் ஆளும்போதுதான் பல அதிகார ஆளுமை ஏந்துகளுக்காக, 1833-ஆம் ஆண்டு, சிங்களவர் ஆளுகையிலிருந்த சிறிலங்காவையும், தமிழர்கள் ஆளுமையிலிருந்த தமிழ் ஈழப் பகுதியினை யும்—முதன் முதலாக ஒரே ஆளுமையின் கீழ்க் கொண்டு வந்தார்கள். அதன்பின் 1948-இல் அவர்கள் இலங் கையை விட்டு நீங்கும்பொழுது, எப்படி இவ்விந்திய நாட்டை அவர்கள் வடநாட்டுக்காரர்கள் கைகளில் ஒப் படைத்துவிட்டுப் போனார்களோ, அதே போல்

அவர்கள் சிங்களவர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போய்விட்டனர். இலங்கையைப் போர்த்துக்கீசியர் கைப்பற்றும் வரை, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழராட்சியும் அங்கு இருந்துதான் வந்தது. கி.பி. 1070 வரையிலும் கூட இராசேந்திர சோழன் இலங்கை முழுவதையும் ஆட்சி செலுத்தி வந்த வரலாறு உண்டு. சிங்கள இனத்தின் மூலவர்களாகக் குறிக்கப் பெறும் விசயனும் அவனைச் சேர்ந்தவர்களும் இத்தீவில் காலடி வைத்த பொழுது தமிழர்கள் இலங்கையின் நிலப்பரப்பெங்கும் பரவலாக வாழ்ந்திருந்தனர். விசயன் அப்பொழுதிருந்த ஒரு பாண்டியனின் மகளையே மணந்து கொண்டான் என்பர். அதன் பின்னர் தமிழர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வந்து தங்கி வாழலாயினர். சிங்களவர்கள் தெற்குப் பகுதியிலும் தென் மேற்குப் பகுதிகளிலும் செறிந்து வாழ்ந்து வந்தனர்.

இலங்கையில் போர்த்துக்கீசியரின் ஆட்சி கி.பி. 1619 முதல் 1638 வரையில் இருந்தது. அதன்பின் ஆலந்துக்காரர் போர்த்துக்கீசியரைப் படிப்படியாக விரட்டிவிட்டு 1795 வரை ஏறத்தாழ நூற்று எழுபது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இறுதியாக 1796 முதல் 1947 வரை, நூற்றைம்பது ஆண்டுகள், பிரிட்டிசுக்காரர்கள் இலங்கை முழுவதையும் தங்கள் ஆட்சிக்குட்படுத்தி ஆண்டு வந்தனர். பிரிட்டிசாரின் ஆட்சிக்கால இடையில் அஃதாவது 1829-இல்தான் இலங்கையில் சிங்களவர்களையும், தமிழர்களையும் தனித்தனியாக ஆண்டு வந்த இரட்டையாட்சி முறையை, ஆளுமை ஏந்துகளுக்காக, ஒற்றையாட்சி முறையாக அமைக்கக் 'கோல்புறுக்' ஆணைக் குழு ஒன்றை அமைத்து இலங்கையைப், பல மாவட்டங்களாகப் பிரிக்கவும், ஒரே நயன்மை (நீதி) அமைப்பாக



இணைக்கவும் முயற்சிகள் தொடங்கப் பெற்றன. அதன்படி 1833-இல் ஒற்றையாட்சி முறை கொண்டு வரப்பெற்றது. 1948 பிப்ருவரி 4-ஆம் நாள் பிரிட்டிசுக்காரர் இலங்கையிலிருந்து, தங்கள் ஆளுமையைப் பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போன பொழுதும், இந்த ஒற்றையாட்சி முறை அப்படியே தொடர்ந்தது. அதற்குப் பின் சிங்களவர்கள் தங்களின் பெரும்பான்மை வலிவைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நிலப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதும், மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைப்பதும், தங்கள் மொழிக்குப் பலவகை ஏற்றங்கள் தேடுவதும், தங்கள் இனத்தாரையே படைத்துறை, ஆளுமைத்துறை போன்றவற்றில் அமர்த்தித் தங்கள் வல்லாண்மையைப் பெருகச் செய்வதுமான முயற்சிகளில் ஈடுபட்டுத் தமிழ் மொழியையும், தமிழினத்தையும் இரண்டாந் தர நிலைக்குத் தள்ளி, வலிவிழக்கச் செய்து வந்தனர்; வருகின்றனர். இதுபற்றிப் பின்னர் பார்ப்போம்.

இக்கால் உள்ள இலங்கை 25,332 சதுரக் கற்கள் கொண்ட நாடு. இன்றைய நிலையில் இதன் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடியே முப்பத்தைந்து இலக்கம். இதில் தமிழர்கள் ஏறத்தாழ 28 இலக்கம் பேர். இது, இலங்கைத் தமிழரும் இந்திய தமிழருமாக சேர்ந்த தொகையாகும். இலங்கைத் தமிழர்கள் என்பவர்கள் தொன்மைக் காலம் முதல் இலங்கையிலேயே இருந்துவரும் குடிமரபைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏறத்தாழ 15 இலக்கம் பேர் உள்ளனர். இவர்கள் மன்னார் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, அம்பாறை மட்டக்களப்பு முதலிய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்கிறார்கள். இந்தியத் தமிழர்கள் எனப்படுபவர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஏறத்தாழ 13 இலக்கம் பேர் உள்ளனர். இவர்கள் கண்டி, நுவரேலியா, மாத்தளை, கேகாலை முதலிய (நாட்டின் நடு பகுதியான) மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள் என்று அமைக்கப் பெறுகிறார்கள். இந்தியத் தமிழர்கள் எனப்பெறும் இம்மலைநாட்டுத் தமிழர்கள் பெரும்பாலும், பிரிட்டிசுக் காரர்களின் ஆட்சிக் காலத்தில், 1837-இலும் அதற்குப் பின்னும் மலைப் பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட் டங்களில் வேலை செய்வதற்கென்று தமிழகத்தின் சிற்றூர்ப் புறங்களினின்று கங்காணிகளால் ஏமாற்றி அழைத்துச் செல்லப் பட்டவர்களாகும்.

இவர்கள்தாம், அன்றிலிருந்து இன்றுவரை தேயிலைத் தோட்ட ஆங்கிலேய, சிங்கள முதலாளி களால் அடிமைகளைப் போல் நடத்தப்படுபவர்கள். இவர்களுக்குக் குடியுரிமை கிடையாது. நல்ல வீடு வாய்ப்புகள் இல்லை. வாழ்க்கை ஏந்துகளற்ற நிலையில் விலங்குகளைப் போல தோட்டக் காடுகளில் சிறு சிறு, ஓட்டைக் குடியிருப்புகளில் வாழ்கின்ற தமிழர்கள் இவர்கள். இவர்கள் இந்தியாவிலிருந்து குடியேறிச் சென்ற தமிழர்களாயிருந்ததாலும் இலங்கைத் தமிழர் களுடன் இனத்தாலும்மொழியாலும் பண்பாட்டினாலும் தொடர்பும் பிணைப்பும் உடையவர்கள். இன்று இலங்கை யில் மிகக்குறைவான ஊதியம் பெறுபவர்கள் இவர்களே. இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியில் ஏறத்தாழ 60 விழுக்காட்டு வருமானம் இவர்கள் வழியாகவே பெறப்படுகின்றது. எனினும், அங்குள்ள மக்களிலேயே மிக மிகப் புறக்கணிக்கப்பட்ட மக்களாகவும், ஒதுக்கப் பட்ட மக்களாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலை யில் உள்ளவர்கள், இம்மலை நாட்டு இந்தியத் தமிழர் களே. இவர்களின் வெயில் மழை பாராத கடுமையான



உழைப்பால்தான், அங்குப் புதிய புதிய தோட்டங்கள் பல உருவாகின; குடியிருப்புகள் எழுந்தன. இந்தியத் தமிழர்களாகிய இவர்களை ஆங்கில அரசு தேயிலை, தொய்வ (இரப்பர்) மரக் காடுகளில் வேலை செய்ய அழைத்துச் சென்ற பொழுது, வழியிலேயே பலவகைத் தொற்று நோய்களால் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மாண்டனர். இலங்கைத் தோட்டங்களில் பணிசெய்வதற்கென்று இவர்களை அழைத்துச் செல்கையில், இலங்கையில் வாழும் ஏனைய மக்களுடன் சரிசமமான எல்லா வகை வாழ்வுரிமைகளும் வழங்கப் படும் என்ற உறுதி மொழி கூறியே வஞ்சகமாக இவர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். ஆனால், இன்று இவர் களின் நிலை பெரிதும் இரங்கத் தக்கதாயும் அவலம் மிக்கதாயும் உள்ளது. இவர்களுக்குக் கல்வி வாய்ப்புகள் இல்லை. பெரும்பாலானவர்களுக்கு படிப்பறிவே இல்லை. இவர்களையெல்லாம் சேர்த்துப் பிடித்துதான் 'இலங்கைத் தொழிலாளர் பேராயம்' (காங்கிரசு) என்று ஒரு கட்சியேற்படுத்தி, இங்கிருந்து குடியேறிய இந்தியத் தமிழரான திரு. **தொண்டைமான்** என்பவர் அக்கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, அம்மலைத் தோட்டத் தமிழர்களுக்காகப் பாடுபட்டு வருவதாகக் கூறி வரு கிறார். இவர் ஆளுங்கட்சியாக உள்ள சிங்களவர் களுக்குச் சார்பாக உள்ளதால், இன்று ஏராளமான மலைத் தோட்டங்களுக்கு உரிமையாளராகவும் நல்ல செல்வ நிலையிலும் வாழ்ந்து வருகிறார்.

மற்று, யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டின் பழங்குடி மக்கள். இக்கால் சிங்களவர்களால் தமிழர்கள் என்று குறிக்கப்படுபவர் கள், இந்த இருவகை தமிழர்களையும் சேர்த்தே கூறப் படுகிறார்கள். இந்தயாழ்ப்பாணப் பகுதித் தமிழர்களின்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சார்பாகவே '**தமிழர் விடுதலை முன்னணி**' என்னும் கட்சி இயங்கி வருகிறது. எனினும், இக்கட்சி இந்த இரு வகைத் தமிழர்களுக்கும் சேர்த்தே விடுதலை கோரி வருகிறது. தமிழர்கள் தாங்கள் இடைக்காலத்தில் வாழ்ந்து தனித்து முழு இறைமையுள்ள அரசாக ஆண்டு வந்ததைப் போலவே, இன்றும் அந்நிலப்பகுதிகளைத் தனியாகப் பிரித்துத் தமிழர்களே ஆளவேண்டும் என்பதே தமிழர் விடுதலை முன்னணிக் கட்சியின் கோரிக்கையாகும்.

தமிழர்களைத் தவிர, இப்பொழுது பிரிட்டிசுக்காரர்களால் வந்து வாய்த்த அரசைக் கைப்பற்றியுள்ள சிங்களர்களும் இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறார்கள். **கீழ் நாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர்** எனப்படுபவர்கள் அவர்கள். கீழ்நாட்டுச் சிங்களவர்கள் என்பவர்கள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தரை, அம்பாந்தோட்டை முதலிய மேற்கு, தெற்கு நகர்ப்புற மாகாணங்களில் வாழ்பவர்கள். கண்டிச் சிங்களவர்கள் எனப்படுபவர்கள் இந்தியத் தமிழர்களைப் போலவே கண்டி, மாத்தளை, நுவரெலியா, வதுளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல் முதலிய மலைப்பகுதி மாகாணங்களில் வாழ்பவர்கள். இவர்களும் தோட்டத் தொழிலாளர்களே. கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக் கலவரங்களில் பெரும்பாலும் தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழர்கள் இவர்களாலேயே பெருத்த அழிவுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளானார்கள்.

இவ்விரு பேரினங்கள் தவிர, **மூர்கள், மலாய்க்காரர்கள், பறங்கியர்கள்** ஆகியோரும் மிகச் சிறுபான்மையினராக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வினப் பாகுபாடுகளெல்லாம் ஆங்கில அரசாட்சிக் காலத்திலேயே வகுக்கப்பட்டனவாகும்.



இனி, சமயங்களைப் பொறுத்த அளவில், இலங்கையில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் (67 3 விழுக்காட்டினர்) புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் சிங்களவர்களே. இந்துக்கள் 17.6 விழுக்காட்டினர். இவர்களனைவரும் இந்து சமயத்தைக் குறிப்பாக சைவ சமயத்தை சார்ந்தவர்கள். கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோன் என்று கருதப்படும் விசயன் வருவதற்கு முன்பே, இங்குச் சைவ மதம் மிகச் செழிப்பாக வளர்ந்தோங்கியிருந்து என்று, வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. அதற்குச் சான்றாக திருக்கேதீசுவரம், முனீசுவரம், தொண்டீசுவரம், திருக்கோணேசுவரம் நகுலேசுவரம் ஆகிய ஐந்து புகழ்மிக்க சிவத்திருவிடங்கள் இங்கு உண்டு.

இசுலாம் மதம் இங்கு இந்து மதத்திற்கு அடுத்த மதமாக உள்ளது. இங்குள்ள மக்களில் 7.1 விழுக்காட்டினர் இசுலாம் மதத்தைச் சார்ந்தவர்கள். இம் மதத்தைச் சார்ந்த முசுலிம்கள் அனைவரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களே. இவர்கள் இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கிறார்கள். கிழக்கு மாகாணம், கொழும்பு, புத்தளம், மன்னார் ஆகிய இடங்களில் பெரும் எண்ணிக்கையாக நெருங்கியும் வாழ்கின்றனர்.

கிறித்துவ மதத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள கிறித்தவர்களில் 7.1 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர். 0.8 விழுக்காட்டினர் பிற கிறித்துவ மதத்தைச் சார்ந்தவராவர். இவர்களல்லாத பிற மதத்தினர் மிக மிகச் சிறுபான்மையரான 0 1 விழுக்காட்டினரே.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பொதுவாக இலங்கைத் தமிழர்கள் மன்னார், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அவ்விட மக்கள் தொகையில் பகுதிக்கு மேலும், யாழ்ப்பாணத்தில் மட்டும் 94.9 விழுக்காட்டளவிலும், திருகோணமலையில் 35 விழுக்காட்டளவிலும், அம்பாறையில் 22 விழுக்காட்டளவிலும் வாழ்கின்றனர்.

அரசியல் முறையில் இலங்கை, இக்கால் 24 ஆளுமை மாவட்டங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. இவை 9 மாநிலங்களாக (மாகாணங்களாக) வகுக்கப் பெறுகின்றன. அம் மாகாணங்களும், அவற்றுள் அடங்கிய மாவட்டங்களும் வருமாறு :

1) **மேல் (மேற்கு) மாகாணம்:** (மாவட்டங்கள் மூன்று)
1. கொழும்பு (Colombu); 2. களுத்துறை (Kalutara); 3. கம்பகா (Kambaka)

2) **நடு மாகாணம்:** (மாவட்டங்கள் மூன்று)
4. கண்டி (Kandy); 5. மாத்தளை (Matala); 6. நுவரேலியா (Nuwara-Eliya)

3) **தென் மாகாணம்:** (மாவட்டங்கள் மூன்று)
7. காலி (Galle); 8. மாத்தறை (Matara); 9. அம்பாந்தோட்டை (Hambantota).

4. **வட மாகாணம்:** (மாவட்டங்கள் நான்கு)
10. யாழ்ப்பாணம் (Jaffna); 11. (மன்னார் (Mannar); 12. வவுனியா (Vavuniya); 13. முல்லைத் (Mullai Tiv)

5. **கிழக்கு மாகாணம்:** (மாவட்டங்கள் மூன்று)
14. மட்டக்களப்பு (Batticaloa); 15. அம்பாறை (Amparai); 16. திருகோணமலை (Trincomalee).



6) **வடமேல் மாகாணம்** (மாவட்டங்கள் இரண்டு)
17. குருநாகல் (Kurunegala); 18. புத்தளம் (Puttalam).

7) **வட நடு மாகாணம்:** (மாவட்டங்கள் இரண்டு)
19 அநுராதபுரம் (Anurathapuram); 20 பொலநறுவை (Polonnaruwa).

8) **ஊவா மாகாணம் :** (மாவட்டங்கள் இரண்டு)
21. வதுளை (Badulla); 22. மொனறாகலை (Moneragala).

9) **சப்பிரகமுவா மாகாணம்:** (மாவட்டங்கள் இரண்டு)
23. இரத்தினபுரி. (Ratnapur )! 24. கேகாலை. (Kegalle).

இவற்றுள் வடமாகாணம், கிழக்கு மாகாணம், நடு மாகாணம், முதலிய இடங்களில் தமிழர்கள் பேரளவிலும், மற்ற பகுதிகளில் சிங்களவர் பேரளவிலும் வாழ்கிறார்கள்.

இக்கால், ஆட்சி சிங்களவர் கைக்குள்ளிருப்பதால் அங்குள்ள தமிழர்களை மொழி, இன ஆளுமைகளால் ஒடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு, தமிழர்கள் பெரும்பாலும் வாழும் இடங்களில் எல்லாம் சிங்களவர்களைப் பெருமளவில் குடியேற்றும் வேலை அரசின் ஆதரவுடன் நேரிடையாகவும் மறைமுகமாகவும் நடைபெற்று வருகிறது.

1921-ஆம் ஆண்டில் தமிழர் பகுதிகளான வடக்கு மாகாணங்களில் வாழ்ந்திருந்த சிங்களவர்கள் தொகை 11,040 ஆக இருந்தது. அது 1946-இல் நான்கு மடங்காக வளர்ந்து, 1971-இல் 2,36,869 ஆக, அஃதாவது 21 மடங்காகப் பெருகிவிட்டதென்றால், தமிழ்ப் பகுதி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

களில் சிங்களவர்களை அரசு எப்படி திட்டமிட்டுக் குடியேற்றியது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இக்கால், இந்நிலை இன்னும் கேடாகப் போய்க் கொண்டுள்ளது. 1824-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இலங்கைத் தீவில் சிங்களவர்கள் எண்ணிக்கை மொத்தம் 6,56,243. (இதில் கரையோரச் சிங்களவர்கள், கண்டிச் சிங்களவர் ஆகிய இரு வகையினரும் அடங்குவர்.) அக்கால் தமிழர்கள் எண்ணிக்கை 1,95,697. அஃதாவது தமிழர்கள் மொத்தத்தில் 23 விழுக்காட்டினர். இவ் விழுக்காடு 1971-ஆம் ஆண்டில் 12 விழுக்காடாகக் குறைந்து போனது என்பதைப் பார்க்கையில், தமிழர்கள் எவ்வளவு அழிவுக்குட் பட்டிருக்கிறார்கள்; அல்லது சிங்களவர்களாக மாற்றப் பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும்.

ஓர் இனத்தை இன்னோர் இனத்தவர் நிலையான அடிமைத் தனத்திற்கு அல்லது ஆளுமைக்கு உட்படுத்த வேண்டுமானால் **மூவகை முயற்சிகள்** செய்யப்படுதல் வேண்டும். ஆளப்படும் இனத்தின் **மொழி நிலை சிதைக்கப் படுதல்** முதல் முயற்சி. அதையடுத்து இரண்டாவது முயற்சியாக **அந்த இனத்தின் மக்கள் வாழ்கின்ற இடங்களில் ஆளும் இன மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றிப் பரந்து பட்டு வாழ வழி செய்தல்.** மூன்றாவது முயற்சி **ஆளுமை முயற்சி.** அஃதாவது ஆள்கின்ற இனத்தின் மொழி, கல்வி, அதிகாரம் முதலியவை சிறந்தோங்குவதற்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

இந்த மூன்று வகையான முயற்சிகளையும் இன்று இலங்கையில் தமிழர்களின் வலிமையை ஒடுக்குவதற்கான முயற்சிகளாகச் சிங்களவர்கள் செய்து வருகிறார்கள். இந்தியாவில் தமிழர்களின் வலிமையைக் குறைப்பதற்கு

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



எப்படி, சமசுக்கிருதம், (இக்கால் இந்தி) மறைமுகமாகவும் நேரடியாகவும் புகுத்தப்பட்டதோ, (இக்கால் திணிக்கப்படுகிறதோ), அப்படி இலங்கையில் சிங்களம் ஆட்சி மொழி, தேசிய மொழி என்னும் பெயரால் புகுத்தப் பெறுகிறது அல்லது திணிக்கப் பெறுகிறது.

யாழ்ப்பாணத்தவர்கள் பேசுகின்ற தமிழ் நடையும், ஒலிப்பு முறையும் சிறப்பாக இருந்தாலும், அவர்கள் தமிழில், தமிழக மக்களின் மொழி நடையில் உள்ளது போலவே கலப்பு மிகுந்திருந்தது. இந்தியாவில் நடைபெற்ற அராபிய, பிரஞ்சிய, போர்த்துக்கீசிய, ஆங்கில ஆட்சியாலும், ஆரிய இன ஆளுமையினாலும் தமிழ் மொழி எவ்வாறு சிதைவுற்றும் கலப்புற்றும், தன் செழுமையும் தனிமையும் தூய்மையும் கொண்ட நிலையில் தாழ்வுற்றுப் போனதோ அவ்வாறே இலங்கையிலும் அங்கு ஏற்பட்ட போர்த்துக்கீசிய, ஆலந்திய, பிரஞ்சிய, ஆங்கிலேய ஆட்சி யழுத்தங்களால் தமிழ்மொழி திரிபுற்றுப் போனது. மேலும் சிங்கள மொழியால் நேரிடையாகவும், சமசுக்கிருதத்தோடு அதற்குள்ள இணைப்பால் மறைமுகமாகவும் அங்கு வழங்கும் தமிழ் தாக்குண்டு நிற்கிறது.

பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழர் பேசுகின்ற தமிழில் போர்த்துக்கீசிய மொழியினதும், ஆலந்து மொழியினதும் ஆளுமை மிகுதியாக ஊடுருவி நிற்கின்றது. மலைத் தோட்டங்களில் வாழும், இங்கிருந்து சென்ற இந்தியத் தமிழர்கள் பேசுகின்ற தமிழ் ஓரளவு நம்நாட்டு சிற்றூர்ப்புற மக்கள் பேசுகின்ற தமிழைப் போல் இருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழில் கதிரை (நாற்காலி), மேசை, அலுமாரி, வாங்கு (Bench), பிக்கான் (பிக்காக்சு), லாந்தர், கோப்பை, போத்தல்

(Bottle) பீப்பாய், கராம்பு, கொய்யா, அன்னாசி, வத்தாலை (ஒருவகைக் கிழங்கு), வத்தகை (ஒரு வகைப் பழம்) வினாகிரி (காடி) சப்பாத்து (Chapples) கம்மிசை (சப்டை), ரேந்தை (Lace), தீதாள் (தைக்கின்ற விரல் மூடி), மேத்திரி, சன்னல், விறாந்தை (தாழ்வாரம்-Veranda) கிறாதி (கதவுக்கு மேல் உள்ள காற்று வரும் வழி), வத்தை (ஒருவகைப் பெரிய படகு), நத்தார் (கிறித்துமசு விழா), தவறணை (கள்ளுக்கடை) கரத்தை (மாட்டு வண்டி) றோதை (சக்கரம்)— முதலிய நூற்றுக்கணக்கான **போர்த்துக்கீசி** சொற்களும்,

லாச்சி, (மிசையிலுள்ள இழுவை (Drawer), தாச்சி (வாணலி), பிசுக்கால் (வழக்கு மன்ற நடவடிக்கை யாளர் 'அமினா') நொத்தாரிசு (திருமணப் பதிவாளர் சக்கடத்தார் (மடப் பொறுப்பாளர்) உலாந்தா (நில அளவையாளர்) போஞ்சி (அவரை Beans) கலாவரை (சீட்டாட்டத்தில் 'கிளாவர்'), வீறு (சீட்டாட்டத்தில் Jack), கக்கூசு—முதலிய ஆலந்து மொழிச் சொற்களும் தங்கு தடையின்றித் தமிழ்ச் சொற்களைப் போலவே வழங்குகின்றன. இக்கலப்பு நிலைகளைப் பற்றி அறிஞர்கள் சிலரைத் தவிர எவரும் கண்டு கொள்வதாகவோ கவலைப்படுவதாகவோ தெரியவில்லை. பெரும்பாலும் இலங்கைத் தமிழர்களுக்கு மொழியுணர்வை விட இனவுணர்வே இப்பொழுது தலை தூக்கியிருக்கிறது. அதற்கு அவர்களுக்கு நேர்ந்த இனத்தாக்கங்களே அடிப்படைகளாக இருக்கலாம் கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெருந்தமிழ்ப் புலவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் எனினும், இன்றும் இருந்து வருகிறார்கள் எனினும், அங்குள்ளவர்களுக்கு மொழியார்வம் மிக்குள்ளது எனினும், இங்குத் தோன்றியுள்ளதுபோல் தூய் தமிழ் இயக்கவுணர்வு அங்கு இன்னும் தோன்றிவிடவில்லை.

**-தென்மொழி:** சு: 15; ஓ: 11, 12. சு; 16: ஓ:6(1979-80)

# 2. இலங்கையில் தமிழர்க்கு நேர்ந்து வரும் கொடுமைகள் - ஓர் இன அழிப்பு முயற்சியே!

''தென் திசையைப் பார்க்கின்றேன், என் சொல்வேன்? என்றன், சிந்தையெலாம் தோள்களெலாம், பூரிக்கு தடடா!''—என்று பாவேந்தர் பாரதிதாசன், 'அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்'—இராவணனை நினைத்துப் பூரித்துப்பாடி, அவனை '**என் தமிழர் மூதாதை' ''என் தமிழர் பெருமான்'**— என்று வாயார வாழ்த்துவார். இங்ஙன் தமிழர் மூதாதை வாழ்ந்த நாடு இலங்கை! வரலாறு தெரியாத மிகப் பழங் காலத்திலிருந்து, வழி வழியாக வரும் செவி வழிச் செய்திகளின்படி, இலங்கை தொடக்கக் காலத்தில் **மால்யவந்தன், குபேரன்** என்னும் இயக்கர்களால் ஆளப்பெற்றதென்றும், அவர்களிடமிருந்து அதனை **இராவணன்** வெற்றி கொண்டு ஆண்டான் என்றும் கூறப்பெறுகிறது. அந்த வகையில் அது மிகப்பழந் தமிழ்நாடு. அதன் பின்னர் இராவணன் ஆண்ட இலங்கை, தன் பரப்பில் மிகக்குறுகி, இப்பொழுது—தென் வடலாக 271½ கற்களும், கீழ் மேலாக 137½ கற்களும், சுற்றளவாக 760 கற்களும், உள்ள ஒரு சிறு தீவமாய் (இந்தியாவிற்குத் தென் கிழக்கில்) 36 கற்கள் தொலைவில் உள்ளது. (சில இடங்களில் அதன் இடைத் தொலைவு 20 கற்களாகவும் உள்ளது.) ஆனால் நமக்குத் தெரிந்த வரலாற்றின் அடிப்படையில் கி. மு. 543-க்குப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பின் **வங்க** அரசன் ஒருவனுக்கும் **கலிங்கப்**பெண் ஒருத்திக்கும் பிறந்த கலப்பினப் பெண் ஒருத்தி தன் பெற்றோர் வைத்த சிறையினின்று தப்பி வெளியேறிய வழியில், சிங்கன் என்ற நாகரிகம் பெறாத காட்டினக் கீழ்மகன் ஒருவனைச் (சிங்கத்தையன்று) சேர்ந்து பெற்றெடுத்த **சிங்கவாகு** என்பானின் மகன் **விசயன்** இலங்கை வந்து, அதன் மேற்குக் கரையோரத்தில் உள்ள புத்தளத்திற்கருகிலுள்ள தம்பனை என்னும் ஒரு பட்டினத்தை உருவாக்கிப் படிப்படியாய் தன் ஆளுமையைப் பெருக்கி இத்தீவிற்குத் தன் முன்னோர் பெயரால் **சிங்களம்** என்று பெயர் வைத்தான் என்று அறியப் பெறுகிறோம். சிங்களம் என்று பெயர் வைப்பினும் இலங்கை என்னும் தமிழ்ப் பெயரே அன்றிருந்து இன்று வரையிலும் வழங்கி வருகிறது.

ஒன்பான் மணிகளும் **இலங்கித்** (ஒளிர்ந்து) தோன்றும் தீவாகலின் **இலங்கை** யென்றும், பொன் (ஈழம்) விளைந்து பொலிந்த நாடாகலின் **ஈழநாடு** என்றும், செல்வமுள்ள இடமாதலின் **தனச்சேரி** என்றும் **தீபுராவனம்** என்றும், சிங்கவாகுவின் பெயரால் அமைந்த நகராகலின் **சிங்களம்** என்றும், அது மருவிச் **சிலோன்** என்றும், யாழ்வல்ல பாணன் ஒருவனுக்குக் கொடையளிக்கப் பெற்றதாகலின் **யாழ்ப்பாணம்** என்றும் இத்தீவு பலவாறாக அழைக்கப்பெறும். எவ்வாறிருப்பினும் இலங்கை, ஈழம், யாழ்ப்பாணம் என்னும் தூய தமிழ்ப் பழம் பெயர்களே பெருவழக்காக வழங்குகின்றமையால், இந்நாடு தமிழர்களின் தொன்மை நாடே என்பது உறுதியாகப் பெறப்படும். கி. மு. 204-இல் இத்தீவு முழுவதையும் **ஏழாலன்** இக்கால் (இப்பெயரை **'எல்லாளன்'** என்று திரித்து வழங்குவர்) என்னும் தமிழரசன் ஆண்டிருக்கிறான். இவன் கி. மு. 



367-இல் இருந்த சிங்கள அரசன் **கணத்திசன் மூத்த சிவன்** என்பானின் ஒன்பதாம் மகனாகிய **அசேலனைப்** போரில் வென்று இந்நாட்டைக் கைப்பற்றினான் என்பர். பின்னர் ஏழாலனிடமிருந்து கர்வந்திசனின் மகன் **துட்கை முனு** (இவன் பெயரும் இக்கால் துட்டகை முனு என்று திரிந்து வழங்குகிறது) இந்நாட்டைக் கைப்பற்றினான். இவ்வாறு கி. மு. 543க்குப்பின் தமிழர்களாலும் சிங்களர்களாலும் மாறி மாறி இந்நாடு ஆளப்பெறினும், அதற்கு முன் இதனை ஆண்டிருந்தவர் பாண்டிய இனத்தைச் சார்ந்த பழந்தமிழரே!

எனவே அங்கு வாழ்கிற தமிழர் இக்கால் சிங்கை, மலேசியா, இலண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் போல் குடியேறியவர்கள் அல்லர், சாலி அல்லது சாவகம் (சாவா-Java) பொருநையோ (போர்னியோ-Borneo), நக்கவாரம் (நிக்கோபார் Nicobar) போன்ற நாடுகளில் வாழும் பழந்தமிழினத்தவர்போல் **'பதியெழு வறியாப் பழங்குடி மக்களே'** என்பதில் சிறிதும் ஐயமின்று. மேலும் 13-ஆம் நூற்றாண்டிலிருந்து 1619-ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண முடியரசு தனியுரிமை பெற்ற ஒரு தனி நாடாகவே இருந்தது. அது யாழ்ப்பாணம் முதல்தெற்கில் புத்தளம் வரைக்கும், கிழக்கில் கிழக்கு மாநிலம் முழுவதும் பரவியிருந்தது. 1619-இல் தான் இம்முடியரசு வீழ்ச்சியுற்றது. அதன் பின்னரும் 1833-ஆம் ஆண்டு 'கோல்புறாக்' ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி, ஆட்சி எளிமைக்காக, வெள்ளையர்களால் தமிழ் மக்களின் விருப்பத்தைப் பெறாமலேயே, வலுக்கட்டாயமாக ஒன்றிணைக்கப்படும் வரை—தனி அரசு அமைப்புடன் தமிழர்கள், சிங்களவர்களுடன் எவ்வகை அரசியல் இணைப்புமின்றித் தனியாகவே வாழ்ந்திருந்ததை வரலாறு எடுத்துக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

காட்டும். பிரிட்டிசுக்காரரால் ஏற்படுத்தப்பெற்ற இந்த வலிந்த ஒன்றிணைப்பைத் தமிழர்கள் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்திருக்கின்றனர். 1619க்கும் 1833-க்கும் இடைப்பட்ட போர்த்துக்கீசியர் காலத்திலும்,ஒல்லாந்தர் காலத்திலும் கூட, தமிழ்ப் பகுதிகள், சிங்களப் பகுதியினும், வேறான அரசு அதிகாரிகளாலேயே ஆளுமை செய்யப்பெற்று வந்தது. இரண்டு இனத்தவர்களும் ஓரினத்தின்மேல் இன்னோர் இனம் ஆளுமை செலுத்துதல் இன்றித் தனித்தனியான ஆட்சியமைப்புகளின்படியே இருந்து வந்தனர். எனவேதான் உலக ஒன்றிய (ஐ. நா.) நிறுவனமே, 'தமிழர்களைத் தன்னாளுமையும், தன்னுரிமையும் கொண்ட மக்களாகவே' மதித்திருக்கின்றது இவ்வரலாற்று நிலைகளையெல்லாம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக, சிறிலங்காக் குடியரசினால் தொடரப் பெற்ற வழக்கில் அவர் சார்பில் Trial-at-bar அற மன்றத்தில் வழக்காடிய திரு. எம். திருச்செல்வம் (Q. C) அவர்கள் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும் தன்னுரிமை பெற்ற இலங்கைப் பாராளுமன்ற ஆட்சியிலும் கூட, தொடக்கத்தில் மலைப்பகுதித் தமிழர்களின் படிநிகராளியராக எட்டு உறுப்பினர்கள் இருந்திருக்கின்றனர். 1947 முதல் இன்று வரையிலும், தமிழர்களின் இயக்கம் **தமிழரசுக்கட்சி** என்ற பெயரில் இயங்கி வந்த பொழுதும் சரி, அது **தமிழர் கூட்டணியாக** மாறிய பொழுதும் சரி, அதன்பின் இப்பொழுதுள்ள **தமிழர் விடுதலைக் கூட்டணியாக** மாற்றப்பெற்ற பொழுதும் சரி, தமிழர்களின் ஆளுமை பற்றிய தன்னுரிமைக் கொள்கைகளைத் தமிழர்கள் பலவகையிலும் வலியுறுத்தியே வந்துள்ளனர்.



அதனடிப்படையில்தான், **1972-இல், சிறிமாவோ பண்டார நாயகா ஆட்சியின் பொழுது, பண்டைய வரலாற்று அடிப்படைக் கருத்துகளையே அடியோடு புறக்கணித்துவிட்டு, புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சிங்கள அரசு கொணர்ந்தது. அச்சட்டத்தில், தமிழினத்திற்கும் தமிழ்மொழிக்கும் போதிய உரிமை வழங்கப்பெறாதது மட்டுமன்றித் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதுவதற்கு அச்சட்டம் வாய்ப்பளித்தது.** எனவே இச்சட்டத்தைத் தமிழர்கள் முற்றும் புறக்கணித்தனர். இதனடிப்படையில்தான் தமிழர் தலைவராக விளங்கிய, காலஞ்சென்ற ஈழத் தமிழ்ப் பெரியார் திரு. **செல்வநாயகம்** அவர்கள் தாம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்த பதவியைத் துறந்து, **காங்கேசன் துறைத்** தொகுதியில் மீண்டும் இடைத் தேர்தலில் நின்று போட்டியிட்டு, 16000 பெரும்பான்மை ஒப்போலைகள் பெற்றுத் தமிழர்களைக் கீழ்மைப்படுத்தும் இப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். அதுவுமன்றி 1972 மே 22-இல் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளர் திரு. **அமிர்தலிங்கம்** அவர்கள் அச்சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். அதன் விளைவாக அரசு அமைத்த Trial-at-bar அற மன்ற வழக்கின் முடிவில் நடுவர் மூவரும் கூட தமிழர்களுக்குச் சார்பாகவே தீர்ப்பளித்தனர்.

இறுதியாக, 1977 ஆம் ஆண்டு சூலை மாதம் நடந்த தேர்தலில் **தமிழர் விடுதலை முன்னணி** 17 இடங்களைக் கைப்பற்றி முதன்மையான எதிர்க்கட்சியாக அமர்ந்தது. 1970-இலிருந்து 77 வரை எட்டு ஆண்டுகள் அரசாண்ட திருவாட்டி. பண்டார நாயகாவின் கட்சியாகிய சிறிலங்கா தன்னுரிமைக்கட்சி கூடத் தான்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நிறுத்திய 145 இடங்களில் 9 இடங்களைத்தான் கைப் பற்ற முடிந்தது. அக்கால் தலைமையமைச்சராக இருந்த **செயவர்த்தனா** — பெரும்பாலும் சிங்கள மக்களின் ஒப் போலைகளாலேயே பதவிக்கு வந்தவர். இந்நிலைகள் எவ்வாறிருப்பினும், திருவாட்டி பண்டார நாயகா ஆட்சியிலிருந்த பொழுதும் சரி, அக்கால் **செய வர்த்தனா** பதவிக்கு வந்த பின்னும் சரி, ஆண்ட வழிவழித் தமிழர்கள், இலங்கையில் அடிமைகளாகவே நடத்தப் பட்டு வந்தனர்; வருகின்றனர் என்று அறிகிறோம்.

சிறிமாவோ ஆட்சியில் 500 தமிழ் இளைஞர்கள் எவ்வகைக் கரணியமுமின்றி ஐந்தாண்டுகள் வரை சிறை வைக்கப் பெற்றிருந்தனர். அவராட்சியில் தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு முதலிய வாழ்வியல் அடிப்படைக் கூறுகளிலெல்லாம் தமிழர்கள் ஓர வஞ்சனையாகவே நடத்தப் பெற்றனர். அவர், காவல் துறையைத் தம் கைகளிலேயே வைத்திருந்ததால், தமிழ் மக்களைப் பலவகை அரசியல், குமுகாய நிலைகளிலும் அடக்கி ஒடுக்கிக் கொடுமைப் படுத்தியே வந்திருக்கிறார். சில பொழுதுகளில் ஆடு மாடுகளைப் போல் சுட்டுத் தள்ளியும் இருக்கிறார். யாழ்ப்பாணத்தில் 1974-இல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒன்றுமறியாத ஒன்பது தமிழர்கள் சுட்டுத் தள்ளப்பட்டனர். அதற்குக் கரணியமாயிருந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அதன் பொருட்டுப் பதவியினின்று உயர்த்தப் பெற்றாரே தவிர, தண்டிக்கப் பெறவில்லை. இவராட்சியில் 12-5-77-இல் புசல்லாவையில் தோட்டத் தொழிலாளர் களைக் கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கிவிட்டு, 35 ஆயிரம் உருபா மதிப்புள்ள தமிழர் சொத்துகளைச் சிங்களவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர். 10 இலக்கம் தேயிலைத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்



களின் குடியுரிமையை 1948-இன் குடியுரிமைச் சட்டங் களினடிப்படையில் பறித்துக்கொண்டு, அவர்களுக்கு வேலையும் நிலமும் வழங்க மறுக்கின்ற கொள்கை யுடைய சிறிலங்கா தன்னுரிமைக் கட்சிக்குத்தான் இவர் தலைவர். இக்கட்சியினதாம் முன்னர், மலைப்பகுதி களில் உழைப்பையும் அட்டைக் கடியையும் பசிபட்டினி யையும் தவிர வேறு எதுவும் அறியாமல் நீண்ட நெடுங் காலமாகவே தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றி வரும் இத் தொழிலாளர்களை **'காணிப்பங்கீடு'** என்னும் முறையில் திட்டமிட்டு விரட்டி விட்டுச் சிங்களவர்களை உள்ளே புகுத்துகின்ற அறக்கொடிய செயல்களைச் செய்தவர்கள். பொதுவாகவே, இலங்கையின் மொத்த வருவாயில் 36 விழுக்காடு வருமானத்தைத் தருவது தேயிலை. இப்பெரும் வருமானத்திற்குக் கரணியமாக உழைக்கும் ஏழைத் தொழிலாள மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கினர் தமிழர்களே! இம்மலைப் பகுதியில் வாழ்ந்திருந்த தமிழர்களில் பெரும்பகுதி யினரை இச்சிங்கள வெறியர்கள், 'இந்தியாவுக்கு ஓடிப் போடா! — பறைத் தமிழா — கள்ளத் தோணித்தமிழா —கடலில் நீந்திப்போடா!' என்று கூறி விரட்டியடித் துள்ளனர். எஞ்சியிருந்த சிறு பகுதியினரும் நடந்த கலவரங்களின்பொழுது விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். எப்பொழுதும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அடிமை விலங்குகளைப் போலவே நடத்தப் பெறுகின்ற னர். அவர்களில் பலர் வேலை நேரம் போக எஞ்சிய நேரங்களில் இரந்துண்டே பிழைக்கின்றனர். தங்கள் கைக்குழந்தைகளை நடைபாதைகளில் கிடத்திவிட்டு, அவர்கள் குடும்பம் நடத்துகின்ற காட்சிகள் மிகக் கொடுமையானவை என்று 'வீரகேசரி' நாளிதழில் முன்பே ஒரு செய்தி வந்திருந்தது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இலங்கை மக்கள் தொகை மொத்தம் ஒரு கோடியே இருபது இலக்கம். அதில் தமிழர்களின் தொகை 35 இலக்கத்திற்கும் மேல் என்று கூறப்பெறுகிறது. இதில் கிறித்தவர்களும் தமிழ் பேசும் இசுலாமியர்களும் அடங்கும். அவ்வாறிருந்தும் அரசு, தனியார் நிறுவனங்களில் சிங்களவர்க்கே வேலைகள் தரப்பெறுகின்றன. இலங்கைப் படைத்துறையில் தமிழினத்தவர்கள் ஒரு விழுக்காட்டினரே உள்ளனர் என்றும் கூறப்பெறுகிறது. அங்குள்ள ஆட்சி மொழி சிங்களம் மட்டுமே! அறமன்றங்களில் தமிழ் இல்லை! அனைத்துத் துறைகளிலும் சிங்கள மொழிக்கே தலைமை. **ஏறத்தாழ இந்தியாவில் எப்படி இனத்தால் ஆரியரும், அல்லது வடவரும், மொழியால் சமசுக்கிருதமும் அல்லது இந்தியும் தமிழின மக்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையுள்ளதோ, அப்படியே அங்குள்ள தமிழர்களை இனத்தால் சிங்களவரும் மொழியால் சிங்களமும் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் நிலை உள்ளது. ஒருவகையில் சிங்களவரும் ஆரிய இனத்தவர்தாம். அவர் மொழியில் சமற்கிருதமே பெரும்பகுதி கலந்துள்ளது.**

மேலும் இந்தியாவில் உள்ள அரசியல் ஆளுமை நிலைகளுக்கும், இலங்கையில் உள்ள ஆளுமை நிலைகளுக்கும் தமிழர்களைப் பொறுத்த வரையில் பலவகையிலும் ஒற்றுமை இருப்பதைக் கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியவில்லை. இந்தியாவில் எப்படி இந்திராவின் ஆட்சிக் காலத்தில் இந்திய இனம் குறிப்பாகத் தமிழினம் மிகவும் கொடுமைப்படுத்தப் பெற்றதுடன் தமிழர்களுக்குக் காப்பாய் இங்கிருந்த தமிழாட்சியும் கவிழ்க்கப் பெற்றுத் துன்புற்றதோ, அதேபோல் இலங்கையில் சிறிமாவோ ஆட்சியிலும், தமிழர்களுக்குக் கொடுமை தரும் வகையில் அரசியல் நடவடிக்கைகள் இருந்தன.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



இந்திராகாந்திக்குப்பின் இந்தியத் தலைமையை எப்படி மொரார்சி கைப்பற்றினாரோ அப்படியே சிறிமாவோவுக்குப்பின் செயவர்த்தனாவும் இலங்கை ஆட்சியைக் கைப்பற்றினார். இந்திராகாந்தி தம் அரசியல் பதவியையும் பெருமையையும் இழக்க, அவர் மகனும் அனைத்திந்திய பேராயக்கட்சி அதிகாரத்தலைவருமாகிய சஞ்சய்காந்தி எப்படிக் கரணியமாக இருந்தாரோ, அப்படியே, இலங்கையில் பண்டாரநாயகா பதவியையும் பெருமையையும் இழக்க, அவர் மகனும், சிறிலங்கா தன்னுரிமைக்கட்சி இளைஞர் பிரிவின் தலைவருமாகிய அனுரா கரணியமாக இருந்தார். இனி, இந்திய அரசியலைப் பொறுத்தவரை இந்திராவும் மொரார்சியும் நேர் எதிரெதிராக இருந்தாலும், தமிழினத்தைப் பொறுத்த அளவிலும் இந்தி மொழியைப் பொறுத்த அளவிலும் இருவரும் எப்படி ஒரே கருத்தில் செயல்பட்டனரோ, அப்படியே இலங்கை அரசியலைப் பொறுத்தவரை சிறிமாவோவும் செயவர்த்தனாவும் நேர்எதிரெதிராக இருந்தாலும், அங்குள்ள தமிழினத்தைப் பொறுத்த அளவிலும், சிங்கள மொழியைப் பொறுத்த அளவிலும் ஒரே கருத்தினராக இருக்கின்றனர். இத்தகு வியப்பான ஒற்றுமையைப்பற்றி மொரார்சி அவர்களே,இலங்கையில் செயவர்த்தனா தலைமையமைச்சராகப் பதவியேற்றவுடன், அவருக்கனுப்பிய வாழ்த்துச் செய்தியில், ''நான் இந்தியாவின் தலைமையமைச்சராகப் பதவியேற்ற பொழுது, நம் இருவரின் அணுகுமுறைகளிலும் பல ஒற்றுமைகள் இருப்பதாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் வெற்றி பெற்றுள்ள வகை மற்றுமொரு சுவையான ஒற்றுமையைக் காட்டுகிறது'' என்று குறிப்பிட்டதை இங்குள்ள ஒரு சிலரே விளங்கிக் கொண்டிருக்க முடியும். இதனை இங்கு எதற்குக் குறிப்பிடுகிறோம் என்றால், தமிழர்கள் சிறிமாவோ ஆட்சியில்

மட்டும் துன்புறுத்தப்படவில்லை; செயவர்த்தனா ஆட்சியிலும் அதைவிடத் துன்புறுத்தப்பட்டனர் என்பதற்கு அடிப்படையாக எந்த வகையான உணர்வுகள் உள்ளன என்பதைக் குறிப்பாகவேனும் சுட்டிக் காட்டுவதற்குத்தான். எனவேதான் செயவர்த்தனாவை இங்குள்ள தமிழ்ப்பகைவர்கள் வரவேற்றனர்.

ஆனால், இலங்கைத் தலைமையமைச்சராக இருந்த திரு. செயவர்த்தனா, சிறிமாவோ பண்டாரநாயகாவை விட சிங்கள இனவெறியில் பலபடிகள் மேலானவர். சிங்கள மொழியையே முதன்மையாகக் கருதுபவர். மறைந்த தமிழர்தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களுக்கும், காலஞ்சென்ற பண்டார நாயகா அவர்களுக்கும் 1957-இல் தமிழ் மொழிக்கு நன்மை ஏற்பட வழி செய்யும் வகையிலும் தமிழ்நிலத்துக்குத் தன்னாட்சி ஏற்படவழி செய்யும் வகையிலும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது, அவ்வொப்பந்தத்தை எதிர்த்து, இச் செயவர்த்தனா அவர்கள் தம் ஒன்றிய தேசியக்கட்சித் தொண்டர்களுடன் கொழும்பிலிருந்து கண்டிக்கு (ஏறத்தாழ 100 கற்கள்) வழிநடைச் செலவு (பாதயாத்திரை) மேற்கொண்டு, அவ்வொப்பந்தத்தையே கிழித்தெறியக்கரணியமாக இருந்தவர். அதன் பின்னரும் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் எளிமையாகக் கருதும் சிறுசிறு சலுகைகள் தரப்பெற்ற பொழுதெல்லாம்கூட, இவர் அவற்றைக் கூட்டங்கள் போட்டும், வழிநடைச் செலவு மேற்கொண்டும் ஊர்வலங்கள் நடத்தியும் எதிர்த்தவர். பிறகு, 1966-ஆம் ஆண்டு **டட்லி—செல்வா** ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்மொழிக்கு உரிமை கொடுப்பதை எதிர்த்தும், சிங்கள இனவெறியைத் தூண்டிவிட்டு ஊர்வலம் நடத்தியும், புத்தத்துறவி ஒருவரைப் பலி கொடுத்தும், பின்னர் 1970-ஆம் ஆண்டில் சிங்கள வெறியரான அந்தப் புத்தத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



துறவிக்கு நினைவு மண்டபம் கட்டியும், நிறைவு மலர் வெளியிட்டும், தமிழ்க் குமுகாயத்தை அவமானப்படுத்தியவர்தாம் இந்தச் செயவர்த்தனாவும் அவரின் ஒன்றிய தேசியக் கட்சியும். 1956-ஆம் ஆண்டுச் **சிங்களம் மட்டும்** என்னும் சட்டத்தைக் கொணர்ந்தவர் காலஞ்சென்ற பண்டாரநாயகா என்றால், 1944ஆம் ஆண்டே, "சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக வேண்டும்; எல்லாப் பள்ளிகளிலும் சிங்களமே பாடமாக வேண்டும்; எல்லாத் தேர்வுகளிலும் சிங்களமே கட்டாயப் பாடமாக வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்தவர் இந்தச் செயவர்த்தனாவே.

இப்படிப்பட்ட முழுச்சிங்கள வெறியரான செயவர்த்தனா ஆட்சிக்கு வந்த பின்னர்தான் சிங்கள இனத்தவர் தமிழினத்தவரைப் பல வகையிலும் பழிவாங்க முற்பட்டனர். இந்த முயற்சியின் முனைப்புதாம் 1977 ஆஃகச்டில் நடந்த இலங்கைக் கலவரங்கள்! இந்தக் கலவரத்தின் எழுச்சியும் போக்கும் ஏட்டில் விளக்குதற்கியலாக் கொடுமைகள் வாய்ந்தன. இவர் ஆட்சிப்பொறுப்பேற்ற அன்றே (சூலை 23) சிறிமாவோ தொகுதியாகிய கொழும்பு-அட்டனகெல்லா என்னுமிடத்தில், இவர் கட்சியினர்க்கும் சிறிமாவோ கட்சியினர்க்கும் பெரிய மோதல் ஏற்பட்டு 20 பேருக்குமேல் கொலையுண்டதாகச் செய்தி வந்தது. அந்த அளவுக்கு இவரைப் பின்பற்றும் சிங்கள இனத்தவர்கள் ஆளுமை வெறி பிடித்தவர்கள். அதன்பின் நடந்த ஆஃகச்டுக் கலவரத்தை அரசியல் கலவரம் என்றே செய்தித்தாள்கள் குறிப்பிட்டன. ஆனால் இதன் முழுத் தன்மைகளையும் உணர்ந்தோர் இதனைச் சிங்களவர்கள் தமிழர்கள் மேல் நடத்திய **இன அழிப்புப் போர்** என்றே கருதுவர்.

கடந்த 12—8--77-இல் யாழ்ப்பாணத்தில் ஒரு களியாட்ட விழாவில்தான் இக்கலவரம் தொடங்கியது. இது பற்றி தமிழர் விடுதலை முன்னணித் தலைவரும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாகிய திரு. **அ. அமிர்தலிங்கம்** அவர்கள் 18—8 77 அன்று தேசியப்பேரவையில் ஓர் அறிக்கையில் விளக்கியுள்ளார். யாழ்ப்பாணம் மருத்துவமனையில் புற்றுநோய்ப் பண்டுவப்பகுதி ஒன்றை நிறுவப் பொருள் சேர்க்கும் நோக்குடன், யாழ்ப்பாணம் சுழற்கழகம் (Rotary Club) சம்பத்திரிசியார் கல்லூரியில் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தியது. சீருடையணியாத காவலர் சிலர் இலவயமாக [illegible]தற்குப் போக முயற்சி செய்து, வாயிலில் உள்ள தமிழரால் தடுக்கப் பட்டுள்ளனர். அதனடிப்படையில் காவலர்களுக்கும் பொது மக்களுக்கும் சண்டை தோன்றியதன் விளைவாக, 13-8-77-இலிருந்து சிங்களக் காவலர்கள் தமிழ்ப் பொது மக்களைப் பார்க்கின்ற இடங்களிலெல்லாம் தாக்கத் தொடங்கியுள்ளனர். அன்று தொடங்கி, அம்மாதக் கடைசி வரை தமிழர்கள் தொடர்ந்து பலவகையிலும் கொடுமைப்படுத்தப் பட்டுள்ளனர். சிங்களக் காவலர்களுக்குத் துணையாகச் சிங்களப் பொதுமக்களும் சிங்களப் படைகளும் சேர்ந்து தமிழர்கள்மேல் மும்முனைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்நிலைகள் பற்றியெல்லாம் செய்தித் தாள்களில் வந்தவையனைத்தும் குறைவும் திரிபும் புனைவும் கொண்ட செய்திகளே! இவற்றை இந்தியாவின் நெருக்கடி நிலைக் காலத்தில் வெளியான செய்திகளுக்கு ஒப்பிடலாம்! உண்மையான செய்திகள் இன்னும்கூடப் பலருக்கும் தெரியா!

நிகழ்ச்சிக்கு இரண்டு நாட்களின் பின் யாழ்ப்பாணக் கடைத் தெருக்களில் கடைகள் மண்ணெய் ஊற்றிக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



கொளுத்தப்பட்டன. தமிழர் கடைகளின் பெயர்ப்பலகைகள் உடைக்கப்பட்டன. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன; மாணவர்களும் அவர்களுடைய மிதிவண்டிகளும் அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டன; சந்தைக் கட்டிடம் எரிந்து, கடைகள் சாம்பலாயின. கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த தொடர் வண்டிகளை அநுராதபுரம், பொலநறுவை, குநாகல், மதவாச்சி போன்ற நிலையங்களில் நிறுத்தி வலுக்கட்டாயமாக வண்டியினுள் சிங்களவர்கள் நுழைந்து, அவற்றிலிருந்த தமிழ்ப் பெண்களை மான அழிவு செய்தனர்; கற்பழித்தனர். மார்புகளை அறுத்தெறிந்துள்ளனர். அவற்றிற்குத் தப்பி ஓடியவர்கள் துரத்திச் செல்லப்பட்டு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளனர். தமிழ்-சிங்கள எல்லைப் பகுதியான வவுனியா போன்ற இடங்களில் பலர் பிணங்கள் மரங்களில் தூக்கித் தொங்க விடப்பட்டன. முதியவர்களை ஓட ஓட விரட்ட, அவர்கள் ஓட முடியாமல் விழுந்து மடிந்துள்ளனர் பலரை வாள்களால் வெட்டியும் பச்சிளங் குழந்தைகளைக் காலில் போட்டு மிதித்துமுள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் வடக்கு கிழக்குப் பகுதிகளில்தாம் மிகுதியாக வாழ்கின்றார்கள். எனவே தெற்கு, மேற்கில் உள்ள சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் கலவரந் தொடங்கியவுடன் தமிழ்ப் பகுதிகளை நோக்கி விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். 50,100 ஆண்டுக் காலமாகச் சிங்களப் பகுதிகளிலேயே தங்கி அரசுப் பணிபுரிந்தும், கடை கண்ணிகள் வைத்து வாணிகங்கள் செய்தும், தேயிலைத் தோட்டங்களிலும் வேறு பல சிறு தொழில்களிலும் ஈடுபட்டுத் தொழில்கள் செய்து வருகின்ற மூன்று இலக்கம் குடும்பங்கள்,

இக்கலவரங்களின் பொழுது குற்றுயிரும் கொலையுயிருமாய் அல்லோல கல்லோலப் பட்டிருக்கின்றன.

அங்கிருந்த நூற்றுக்கான தமிழர் வீடுகள் கொள்ளையிடப்பெற்றன: தமிழர் கடைகள்சூறையாடப்பெற்றன: பல கடைகள் தீக்கிரையாகின. அநுராதபுரத்தில்தொடர் வண்டி நிலைய அதிகாரிகளாகப் பணியாற்றிய இரண்டு தமிழர்கள் கொடுமையாக வெட்டப்பட்டுள்ளனர். இரவில்வந்த தொடர் வண்டிகளில் சூறையாடி இருக்கின்றனர். பெட்டிகளில் ஏறித் தமிழர்கள் இருக்கிறார்களா என்று கேட்டு, அவர்கள் பெட்டி படுக்கைகளை எடுத்து வீசி உள்ளனர். பெண்களையெல்லாம் ஆடைகளைக் களையச் சொல்லியுள்ளனர். களைய மறுத்தவர் ஆடைகளை இழுத்துப் பறித்துக் கிழித்தெறிந்து அம்மணமாக்கியுள்ளனர். கொடுமைக்குத் தப்பியோடிய ஓர் இளம் பெண்ணையும் அவள் கணவனையும் தேடிப் பிடித்து அவர்களின் உடைகளைக் களைந்து அவமானப்படுத்திக் கொடுமை செய்துள்ளனர்; கொழும்புத் துறைமுகப் பகுதியில் ஒரு நிறைசூலியின் வயிற்றைக் கீறிப்பிளந்து நடுத்தெருவில் போட்டு வேடிக்கை பார்த்து ஆரவாரக் கூச்சலிட்டுள்ளனர். வவளிக்குளம் தமிழ்ப் பகுதியில் இளைஞர்களையும் மாணவர்களையும் படைத்துறைச் சிங்களவர்கள் ஓட ஓட விரட்டியுள்ளனர். திருகோண மலைப்பகுதியில் மட்டும் ஏறத்தாழ 200 பேருக்குமேல் கொல்லப் பட்டுள்ளனர்.

மலைப்பகுதிகளான கண்டி, நுவரெலியா, அற்றன், பதுளை, மசுக்கெலியா முதலிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் பெரும்பாலும் குடியுரிமை, ஒப்போலையுரிமை, கல்வியுரிமையற்ற தோட்டத் தொழிலாளர்கள்.



இவர்களுக்குச் சரியான வீடுகளும் இல்லை. ஆங்காங்கு வரிசை வரிசையாகக் கட்டப்பெற்ற மிகத்தாழ்ந்த குடியிருப்புகளிலேயே அவர்கள் வாழ்கின்றனர். பெரும்பாலும் சட்டி பானைகள் தவிர இவர்களுக்கு வேறு உடைமைகள் இல்லை. கலவரத்தின் பொழுது இவர்கள் குடியிருப்புகள் கொளுத்தப்பட்டன. வங்காளத் தேசக் கொடுமைகள் யாவும் இங்கு நடந்தன என்று தெரிய வருகிறது. மலைகள் நிரம்பிய இப்பகுதிகளிலிருந்து, ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர், வீடுவாயில்களை இழந்து, உடுத்த உடையுடனும், பெண்கள் உள்ளாடையுடனும் பலர் உறுப்புக் குறைவுடனும், கன்னியர்கள் கற்பை இழந்தவர்களாகவும் நூற்றுக்கணக்கான கற்கள் நடந்து, உயிர் தப்பி யாழ்ப்பாணம் பகுதிகளுக்குத் தொடர்ந்து வந்திருக்கின்றனர்!

தோட்டத்தொழிலாளர் பலர் தம் குடியிருப்புகளுக்குள்ளேயே பூட்டப்பட்டுத் தீவைத்துக் கொளுத்தப் பட்டுள்ளனர். சம்பளம் வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போன தமிழர்கள் கொலை செய்யப்பட்டு அவர்கள் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன. செட்டிகுளம் பகுதியில் தப்பியோடிய பலரைத் தண்ணீரிலேயே குதிக்கச் செய்து அவர்கள் தலைகளைப் பார்த்துச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். சிலரைக் கிணற்றுக்குள் தூக்கிப் போட்டு அருகிலுள்ள உரல்கள், உலக்கைகள், கற்கள் இவற்றைத் தூக்கிப் போட்டுத் துன்புறுத்தியிருக்கின்றனர். வெறிபிடித்த சிலர் இளைஞர் சிலரின் ஆண் குறிகளை அறுத்தெறிந்து கொன்றுள்ளனர். ஒருவருடைய முதுகுத் தோலைப் பீங்கான் ஓடுகளால் கிழித்து, அரத்தத்தை உள்ளங்கையில் வைத்துப் பார்த்து, 'முதுகில் ஓடுவது, தமிழ் அரத்தந்தானா?' என்று கேட்டு எக்களிப்போடு கெக்கலி கொட்டி நகைத்திருக்



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கின்றனர், வெறியர் சிலர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கந்தளாய், மாத்தளை, தம்புள்ளை, அநுராதபுரம், ஒரலப்பொத்தான், பதவியா, மதவாச்சி, மாகோ, பவுனியா, கல்கமுவை, பாணந்துறை, நாவலப்பிட்டி, குருணாகலை, புளியங்குளம், கெக்கிராவை, இரத்தினகிரி, நொச்சியாகமை முதலிய இடங்களில் மிகுதியும் நடைபெற்றனவாகத் தெரியவருகின்றன.

இந்தக் கலவரங்களில் ஈடுபடுபவர்களெல்லாரும் பெரும்பாலும் **'சிங்கள தருண பெரமுன'** என்னும் இளைஞர் முன்னணியினரும், **சிறிலங்கா தன்னுரிமைக் கட்சி**யைச் சேர்ந்தவர்களும், அவர்களுக்கு ஆதரவான காவல் துறையை—படைத்துறையைச் சேர்ந்தவர்களுந் தாம் என்று ஐயுற வேண்டியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்களும் பேரளவில் இருக்கின்றனர் என்றும் இன்னொரு வகைச் செய்தியுரைக்கின்றது. 'சிங்கள தருண பெரமுன' என்னும் இளைஞர் கட்சியின் முழக்கமே 'தமிழர்களுக்குத் தனிநாடு கொடுக்காதே' 'தமிழர், சிங்களர் என்று தரப்படுத்துதலை அகற்றாதே' என்பவைதாமாம்! மேலும் இலங்கைப் படைத் துறையில் **'அரிமா படைப் பிரிவு'** (Singa Regiment) என்னும் படைப்பிரிவு ஒன்று உள்ளதாம்! இப்பிரிவில் உள்ள அனைவரும் சிங்களவர்கள்தாமாம்! வேறு இனத்தவரை இந்தப் பிரிவில் சேர்ப்பதில்லையாம். 1958-இல் நடந்த சிங்கள—தமிழர் இனக் கலவரத்தில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்களே அப்படையில் சேர்த்துக் கொள்ளப் பெற்றுள்ளனராம். இதற்குமுன் நடைபெற்ற மூன்று கலவரங்களிலும் (1956, 1958, 1961) இப்படைப் பிரிவினர்தாம் தமிழர்களைக் கொலையும், கற்பழிப்பும், கொள்ளையும் செய்தவர்களென்று கூறப்பெறுகிறது. உண்மைகள் எங்கிருக்



கின்றன என்பதைத் தமிழ்த் தலைவர்களும், அரசும் இனிமேல்தான் கண்காணித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு கொல்லப்பட்டோர் தொகை 1500க்கு மேலிருக்கும் என்றும், வீடு, வாயில்கள், சொத்துகளை இழந்து ஏதிலியானவர்கள் தொகை 50000க்கும் மேலிருக்கும் என்றும் தமிழர்களின் மொத்தச் சொத்திழப்பு ஏறக்குறைய 100 கோடி உருபாய்க்கும் மிகுதியாகவிருக்கும் என்றும் சொல்லப் பெறுகின்றன. மற்றும் காணாமற் போன தமிழர்களும் நூற்றுக்கணக்கானோர் உள்ளனர். இவர்கள் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லையாம். அத்துடன் பற்பல நிகழ்ச்சிகளின் கொடுமைகளாலும், தம் பெண்டு பிள்ளைகளைப் பறிகொடுத்ததாலும், நிகழ்ச்சிகளை நேரில் கண்டதாலும், நூற்றுக்கணக்கான பெண்கள் தங்கள் நினைவிழந்து பித்துப்பிடித்த நிலைகளுக்கு ஆளாகிப் போயினராம்.

இக்கலவரங்களின் பொழுது நடந்த கொடுமையின் மேனிலை என்னவென்றால் சிங்கள வெறியர்களுக்குத் துணையாகச் சிங்களக் காவலர்களும் படைத்துறையினரும் நடந்து கொண்டது தான்! வேட்டெஃகம் வைத்துக் கொள்ள உரிமம் பெற்ற தமிழர்களிடமிருந்து அவை காவலர்களால் பிடுங்கப்பட்டு அவை சிங்களர்களின் கைகளில் தரப்பட்டுள்ளன.

படைத்துறையினர் சிலர் மட்டக்களப்புப் பகுதியில் தெருவில் போகும். தமிழ் மக்களை நிறுத்தி முழங்காலில் நிற்கச் செய்து, 'புத்தம் சரணம் கச்சாமி' என்று சொல்லும்படியும் 'சிங்களம் படிப்போம்' என்று கூறும் படியும் வற்புறுத்திச் சொல்ல வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் தமிழர் கடைகளில் உள்ள பொருள்களையெல்லாம் தம் விருப்பம்போல் எடுத்துப் பயன்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

படுத்தியிருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். இனி இன்னொன்றும் குறிப்பிடத்தக்கது. இக்கலவரங்களின் பொழுதெல்லாம் தமிழ்க் காவலர்கள் வெளியே அனுப்பப் பெறவில்லையாம். அவர்கள் காவல் நிலையங்களிலேயே அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளனர். காரணியம், தமிழர்களுக்குச் சார்பாக இவர்கள் இயங்கக் கூடும் என்ற அச்சமாக இருக்கலாம். இனி இன்னொரு செய்தி மிகவும் வியப்பும் அதிர்ச்சியும் தரத்தக்கதாயுள்ளது. கொழும்புவில் கலவர வேளையின் பொழுது கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள், இப்பொழுதைய ஆட்சியினராகிய ஒன்றிய தேசியக் கட்சியின் கிளைச் செயலகம் ஒன்றுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டுப் பின்னர் சிங்களக் காவலர்கள், படைத்துறையினர், சிங்களப் பொது மக்கள் இவர்களால் பங்கு போட்டுக் கொள்ளப் பெற்றதாக அறிகிறோம். இச்செய்தி உண்மையாக இருக்குமானால், இப்போராட்டங்களின் மூலமும் வேரும் எவையாக இருக்கும் என்று எண்ணியறிந்து கவலுற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இக்கலவரங்களின் பொழுது தமிழர்களின் கோயில்களும் பலவிடங்களில் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன என்று தெரிகிறது. திருகோணமலையிலிருந்து 1½ கல் தொலைவிலுள்ள 'மக்கோ' என்னும் சிற்றூரிலுள்ள கத்தோலிக்கரின் அன்னை வேளாங்கண்ணி கோயிலும், பாலையூற்றிலுள்ள பிள்ளையார் சிலையும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளனவாம்! திருகோணமலையில் உள்ள கோணேசர் கோட்டைக்கு முன்னுள்ள கோயிலிலுள்ள பிள்ளையார் சிலை கடலுக்குள் வீசப்பட்டதாம்.

இவ்விடத்தில் தேசியப் பாவலர் பாரதியார், தமிழினம் வேற்று நாடுகளில் எவ்வாறெல்லாம் துன்புறு



கின்றன என்பது பற்றிப் பாடிய இருபாடல்கள் நினைவுக்கு வருகின்றன.

ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி, இவ் வெளிய
தமிழச் சாதி, தடியுதை உண்டும்
காலுதை உண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்!

என்பது ஒன்று. மற்றொன்று வெளிநாடுகளில் அங்குள்ள இன வெறியர்களால் பெண்கள் துன்புறும் செய்தி பற்றியது. அஃது இது :

பெண்ணென்று சொல்லிடிலோ — ஒரு
பேயும் இரங்கும் என்பார் தெய்வமே! நின(து)
எண்ணம் இரங்காதோ! — அந்த
ஏழைகள் அங்குச் சொரியுங்கண் ணீர், வெறும்
மண்ணிற் கலந்திடுமோ? — தெற்கு
மாகட லுக்கு நடுவினிலே, அங்கோர்
கண்ணற்ற தீவினிலே — தனிக்
காட்டினில் பெண்கள் புழுங்குகின்றார்! — அந்தக்
கரும்புத் தோட்டத்திலே!

நெஞ்சம் குமுறுகிறார் — கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே, அந்தப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பஞ்சை மகளிரெல்லாம் — துன்பப்
பட்டு மடிந்து மடிந்து ம்டிந்தொரு
தஞ்சமு மில்லாதே — அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ?

நெஞ்சு நடுக்குறும், இக்கொடுமை, கொலை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உறுதி கூறும் வகையில், யாழ்ப்பாணத்தில் 16-9-77இல் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில், தீர்ப்புரை வழங்கிய நடுவர் திரு. கே. வி. நவரத்தினம் அவர்கள், தம் உரையில் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ள பகுதி எல்லாராலும் கண்டு மெய்யுணரத் தக்கது. **''வளர்ந்துவரும் ஒழுக்கக் கேட்டின் மூலம் நயன்மை, அறம், பெருமை ஆகியன நிலை இறங்கி வருவதை உணர்கிறேன். நயன்மையை ஆராய்கின்ற மாந்தக் குணம் எத்துணைக் கொடுமையான காடுகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இன்று விரைவு கரணியமாக உண்மைகள் பலியிடப் பெறுகின்றன. குற்றம் புரிவது இன்று ஒழுக்கமாகி விட்டது. குற்றங்களைத் தடுக்க வேண்டிய அமைப்பு இன்று ஏளனத்துக்கு இலக்காகிக் கொண்டிருக்கின்றது''** — என்பது அவர் தீர்ப்புரையின் ஒரு பகுதியாகும்.

இனி, நடந்துள்ள கொடுமைகளையறிந்த பாரிசிலுள்ள 'அனைத்துலக மாந்த உரிமை நிறுவனம், அவையனைத்தையும் சுட்டிக் காட்டிக் கண்டித்தும், தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கோரியும் இலங்கைத் தலைமையமைச்சருக்கு விரிவான மடல் விடுத்திருக்கின்றதும், பிரிட்டிசு ஒலி பரப்பில் அறிஞர், வயவர். ஐவர் சென்னிங்சு என்பார், **'இலங்கையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களை இவ்வளவில் கொடுமைப்படுத்துவார்கள் என்று தெரிந்திருந்தால், ஒற்றையாட்சித் திட்டத்தின்கீழ் இலங்கைக்குத் தன்னுரிமை கொடுத்திருக்க நாங்கள் இசைந்திருக்க மாட்டோம்''** என்று கூறியிருப்பதும், தமிழர்களுக்குச் சிங்களவர்களால் எத்துணையளவு கொடுமைகள் நேர்ந்திருக்கின்றன என்பதை ஒருவாறு காட்டும்!



இனி, சிங்கள இனத்தைச் சேர்ந்த புத்த துறவியர் சிலர் இவ்வின அழிப்புக் கலவரங்களுக்குத் தூண்டுகோலாயிருப்பதும் தெரியவருகிறது. வண. **மெற்றிய கொடகுணரத்தின தேரோ** என்னும் புத்த துறவியார் ஒருவர் ''இந்த நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கோருபவர்களை நூறு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைக்குள் தள்ள வேண்டும்'' என்று கூறியிருக்கிறார். இன்னொரு புத்த துறவியார் ஒருவர் ''துட்டகைமுனு, பராக்கிரமவாகு, வாலகம்பா ஆகியோர் காலத்திலிருந்தே தமிழர்கள் ஒரு சிக்கலாக இருந்து வந்திருக்கின்றனர்'- என்று அண்மையில் பேசியுள்ளார். இன்னும், சிங்கள அமைச்சர் ஒருவர் கலவரங்கள் நடந்து கொண்டுள்ள பொழுதே, பாராளுமன்றத்தில் ''முன்பு தமிழ் மன்னன் எல்லாளனை! எதிர்த்து வெற்றிகொண்ட சிங்கள மன்னன் 'துட்டகை முனு' இன்றைய சிங்கள இளைஞர்கள் அரத்தத்தில் வாழ்கிறான். தமிழர்கள் சிங்களவர்களை எதிர்த்து மோதினால் இச்சிங்கள இளைஞர்கள் எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்? எல்லாளனைக் கைமுனு அழித்தது போல் தமிழர்களை இவர்களும் அழித்து விடுவார்கள்'' என்று மார்தட்டிப் பேசியுள்ளார். மேலும், யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சியின் இரண்டாம் நாளன்று, சிங்களக் காவலர்கள் நடந்து கொண்ட கொடுமைகள் பற்றி மேலதிகாரி ஒருவருடன் பேசச்சென்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. அமிர்த லிங்கத்தையே காவல் நிலையத்துள்ளே வைத்துச் சிங்களக் காவலர்கள் சிலர் அடித்துள்ளனர். மேலதிகாரி தடுத்தும் கேளாமல் தாக்கியுள்ளனர். அதற்கு இன்று வரை அரசுச் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிகிறது. வவுனியாப் பொதுக் குடியிருப்புப் பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாகக் குடியிருந்த தமிழ்ச் சட்ட அறிஞர் ஒருவரை 13—9—77 அன்று முடுகிவந்த படைத் துறையினர் சிலர் அடித்து அறையிலிருந்து தூக்கி வெளியே எறிந்திருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் அறிகின்ற பொழுது இலங்கையில் நடந்ததும் தொடர்ந்து நடந்து வருவதும் கட்சிக் கலவரமாகவோ, அரசியல் கலவரமாகவோ, அல்லது இலங்கையிலுள்ள இந்திய உயர் வினையமர்த்தாளர் (High Commissioner) திரு. குர்பகன் சிங் அங்குள்ள ஏதிலியர் அடைவிடங்களைப் பார்வையிட்டபின், இந்தியத் தலைமையமைச்சர் தேசாயிடம் நேரில் கூறியதுபோல், வேலையில்லாதோரும் சில குமுகாயக் கொடியவர்களும் செய்த செயல்களாகவோ தெரியவில்லை. அரசியல் அதிகாரத் துணையுடன் திட்டமிட்டுத் தமிழர்களின் எழுச்சியை முறியடிப்பதும், முடிந்தால் அவ்வினத்தையே அடக்கி ஒடுக்கி அழித்தொழிப்பதுமான கொடிய ஒரு தொடர்ந்த முயற்சியாகவே தெரிகிறது.

இலங்கைத் தமிழர்களின் தனி நாட்டுக் கோரிக்கை தவறன்று; ஏதோ ஒரு கரிசுமன்று! அங்கு அவர்கள் நிலையில் உள்ள ஓரினத்திற்கு உடனடித் தேவையானதே அது! அக்கோரிக்கை புதியதும் அன்று. காலஞ்சென்ற பண்டார நாயகா 'சிங்களம் மட்டுமே' என்ற



கொள்கையை அறிவித்த பொழுதே தமிழர் தலைவர் திரு. **சி. சுந்தரலிங்கம்** தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்தார். அதன்பின் 1968-இலிருந்து தலைவர்கள் **வ. நவரத்தினமும், 1974-ஆம் ஆண்டு** முதல் **எசு. எசு. வி. செல்வநாயகமும், சி. சி. பொன்னம்பலமும்** தனி நாட்டுக் கோரிக்கையை வலியுறுத்திவருகின்றனர். அங்குள்ள தமிழர்கள் தக்க பாதுகாப்புடனும் உரிமைகளுடனும் பிறரைப்போல் அச்சமற்ற முழுநலம் சார்ந்த வாழ்க்கை நடத்த முடியாத நிலையிலும்-அரசுத் துணையும் ஆதரவுமற்ற நிலையிலுந்தான் தங்கள் இனத்தையும், நிலத்தையும் காத்துக் கொள்ளும்படியான ஓர் அரசியலமைப்பைக் கோருவதாகத் தெரிகிறது. இதைத் **தலைவர். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் 5—9—77** அன்று **'அமெரிக்கக் கிழமைச் செய்தி'** (America news week) இதழுக்கு அளித்த நேருரையில், **''நாங்கள் சிக்கல்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காணவே விரும்புகிறோம் ஆனால் அப்படியொரு தீர்வு ஏற்படாவிட்டால் அதற்காக எப்பொழுதும் அடிமைகளாக வாழ விரும்ப மாட்டோம்''** என்று உறுதிப்படுத்திக் கூறியிருப்பதை அனைவரும் கருதிப் பார்க்கவேண்டும்.

இனி **''எந்த ஒரு தேசிய இனம் தனித்து வாழ்ந்து, தனியாக இயங்க வேண்டுமென்று உறுதியுடன் முடிவு செய்தாலும் அந்தத் தேசிய இனத்துக்குத் தனது எதிர் காலத்தைத் தானே தீர்மானிக்கின்ற உரிமையை வழங்கவேண்டுமென்பது''** உலக ஒன்றிய நாட்டுக் கழகத்தினதும் (U. N. O.), அதன் உறுப்பாண்மை நாடுகளினதும் கொள்கை. இந்தக் கொள்கையின்படி, வழி வழி அரசுரிமையை இன்று இழந்து நிற்கும் தமிழ் ஈழத் தேசிய இனம் தனிநாடு கோருவதில் தவறோ அறியாமையோ

அடாவடித்தனமோ கொஞ்சமும் இருத்தல் முடியாது. அங்குள்ள தமிழர்கள் தங்கள் கொள்கையையும் நிலையையும் திட்ட வட்டமாக அறிவித்து விட்டபின், மேலும் இந்த வகையில் காலத் தாழ்த்தத்தையும் அரசியல் சூழ்ச்சிகளையும் கையாள்வது, அவர்களை மேலும் மேலும் பலஇன அழிவுக்கு உள்ளாக்கும் செயல்களாவே கருதப்பெறவேண்டும். இந்த வகையில், உலக ஒன்றிய நாடுகளின் இலங்கைத் தூதர் 4—4—76 ஆம் நாளன்று அங்குள்ள ஒரு கருத்தரங்கின் பொழுது அறிவித்த கருத்துகளை இதனடியில் தருகிறோம். அதில் அவர் இப்போராட்ட நிலை பற்றித் தெளிவாகச் சொல்லியுள்ளதைக் கவனிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

"It will be foolish on our part to ignore the problems of Tamils. The issue in due course may take a very great turn. It is foolish for us to say that the Tamil State is not economically viable. There are smaller countries than this which are independent nations. I speak with authority as I know international laws and I have served in international bodies.

We must at any cost avoid the creation of a seperate State. But if we pooh-pooh the idea, it may result in the creation of a seperate State. Let us also remember that there are 40 million Tamils just 20 miles away from north. Let us before warned about the consequences."

Sir Senarath Gunawardene
(சேனாரத் குணவர்த்தனா)
(Former representative of Ceylon at U.N.O)4-4-76



"தமிழர் சிக்கலைப் பற்றிப் புறக்கணிப்பாக உள்ளது, நாம் செய்யும் மூடத்தனமான செயலாகும். காலப் போக்கில் இந்தச் சிக்கல் மாபெரும் திருப்பங்களை ஏற்படுத்தக் கூடும். தனித்தமிழ்நாடு பொருளியல் வலுவுடையதாக இருக்காது என்று நாம் கூறும்கூற்று நம்மையே மடையராக்கும் கூற்றாகும். அவர்கள் கருதும் தனித்தமிழ் நாட்டை விடச் சின்னஞ்சிறிய நாடுகள் எத்தனையோ உலகில் தன்னுரிமை பெற்ற நாடுகளாகத் திகழ்கின்றன. அனைத்துலகச் சட்டங்களை நான் படித்திருக்கின்றேன். பல உலக நாடுகளின் நிறுவனங்களில் நான் பணியாற்றியிருக்கின்றேன். அதனால் நான் இதைப் பொறுப்புணர்வோடு கூறுகின்றேன். எப்பாடு பட்டாகிலும் நாம் தனிநாடு ஏற்படுவதைத் தவிர்க்க முயலவேண்டும். ஆனால் இக்கோரிக்கையை நாம் புறக்கணித்தால், அதன் விளைவு தனிநாடு உருவாவதில் சென்றுதான் முடியும் வடக்கிலிருந்து 20 கற்களுக்கு அப்பால் நான்கு கோடித் தமிழர்கள் இருப்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். எனவே விளைவுகளைப் பற்றி நாம் முன் எச்சரிக்கையுடன் இருப்பது இன்றியமையாதது."

வயவர். சேனாரத் குணவர்த்தனா
(உலக ஒன்றிப்புக் கழகத்தின்
முன்னாள் இலங்கைத் தூதர்)

இறுதியாக நாம் சொல்ல விரும்புவது இதுதான்:

ஓர் இனத்தின் உட்கூறுகளைப் பிரித்தெடுக்கும் பொழுதோ, சிதைக்கும் பொழுதோ அந்த இனமே அழிந்து போகிறது. ஓர் இனத்தின் உட்கூறுகள் என்பன அதன் மொழி, பண்பாடு, நாகரிகம், இலக்கியம், அரசியல் சார்பு நிலைகள், பொருளியல் வலிமை,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

குழுகாயப்படிவுநிலை, அவை வழங்கும் நிலப்பரப்பு ஆகியவை ஆகும்.

இவற்றுள் எந்த ஒன்று சிதைவுற்றாலும் அல்லது சிதைக்கப் பெற்றாலும், அச்சிதைவின் தன்மையைப் பொறுத்து, அவ்வினம் சிதைந்தோ, படிப்படியாகவோ கட்டாயம் அழிவுறும் என்பது உறுதி; மிகவுறுதி! இனி இவ்வுண்மைக்கு மறுதலையாக, இயற்கையாகவோ செயற்கையாகவோ எந்த ஓர் இனம், தெரிந்து, தடுத்து நிறுத்திக் கொள்கின்றதோ, அந்த இனம் அந்த அழிவு நிலையினின்று தன்னைக் காத்துக் கொள்கிறது. இத் தற்காப்பு நிலை, எந்த அளவுக்கு வலிமையும் விரைவும் கொண்டு விளங்குகின்றதோ, அந்த அளவுக்கு அதன் நிலைப்பாடும் உறுதி; மிகவுறுதி என்க.

இவ்வுலக வியற்கை மெய்ம்மத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரின் மேன்மைக்கு அடி கோலத் தவறுவார்களாயின், உலகெங்கணும் உள்ள தமிழர்களை ஒன்றுபடுத்திப் போராட வைக்கும் முயற்சியாக அஃது அமையும் என்று எச்சரிக்கையுடன் வலியுறுத்திக் கூறுகிறோம். அத்தகையதோர் எழுச்சியை இவ்வுலகம் விரைவில் காணத்தான் போகிறது. தமிழர் தங்களுக்கென்று ஒரு தனிநாட்டை அமைத்துக் கொள்ளத்தான் போகின்றனர் என்று உறுதி கூறிப் பாவேந்தரின்,

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்று ஊதூது சங்கே!
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

என்னும் போர்ச் சங்க முழக்கத்துடன் இவ்வுரையை முடிக்கின்றோம்.

—தென்மொழி : சு 14 ஓ: 5-6 (ஆக-செப்- 77)

# 3. அமிர்தலிங்கத்தின் தமிழக வருகையும் அதன் பயன்களும்!

(திரு. அ. அமிர்தலிங்கம் – தமிழீழ விடுதலைக்குப் பேராதரவு திரட்டிக் கொண்டிருந்த 1979-80களில், முதன் முதல் தமிழகம் வந்த பொழுது எழுதிய கட்டுரை இது.)

அண்மையில், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளரும் ஆகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், அவர்களின் துணைவியார் திருவாட்டி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் இந்தியாவிற்கு வந்து, தில்லியில் தலைமை அமைச்சர், வெளிநாட்டுத் தொடர்புத் துறையமைச்சர் முதலியோரைக் கண்டு பேசியதுடனல்லாமல், தமிழகத்தில் முன்னும் பின்னும் பத்து நாட்களுக்கு மேலாகத் தங்கியிருந்து, ஆங்காங்குப் பரவலாகப் பல வரவேற்புக் கூட்டங்களிலும் பாராட்டுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, தமிழீழத்தைப் பற்றியும், அங்குள்ள தமிழர்களைப் பற்றியும் பலவகையான கருத்து விளக்கங்களையும், வரலாற்று, நடைமுறை நிலைகளையும் இங்குள்ள தமிழக மக்களுக்கு உணர்வு பெற எடுத்து விளக்கிய நிறைவுடன் தம் நாடு திரும்பியுள்ளனர். அவர்களின் இந்தப் பதினைந்து நாளைய செலவு அவர்களுக்கும், தமிழீழ மக்கட்கும், சிறப்பாகத் தமிழினத்திற்குமே கிடைத்த பெரும் பயனும் வெற்றியும் ஆகும் என்பது மிகைப்பட்ட கூற்றாக இருத்தல் முடியாது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் தமிழர்கள் பெருந்திரளாக இலக்கக் கணக்கில் கூடியிருந்து, ஊர்வலம் நடத்தி அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று மகிழ்ந்ததும், சில நகரங்களில் நள்ளிரவு வரையிலும் காத்திருந்து, அவர்களின் உணர்வும் உண்மையும் மிக்க சொற்களால் தமிழீழ வரலாற்று நிகழ்ச்சிகளையும் அண்மையில் ஏற்பட்ட இன அழிப்புக் கொடுமைகளையும் நேரிடையாகக் கேட்டு உள்ளம் வெதும்பியதும் உருக்கமான குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். இதுநாள் வரை இங்குள்ள செய்தித் தாள்களும் கிழமை, மாத இதழ்களும், மிக அண்மையில் உள்ள ஈழத் தமிழர்களைப் பற்றியோ அவர்களுக்கு நேர்ந்த — நேர்ந்துவரும் இனக் கொடுமைகளைப் பற்றியோ, ஓரளவும் விளக்கிக் கூறாத நிலையில் அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி அவர்களின் உண்மை மிகுந்த உள்ளுணர்வுப் பொழிவுகள், இங்குள்ள மக்களுக்குத் தமிழீழத்தின் எல்லாவகை நிலைகளையும் மிகத் தெளிவாக விளக்கின; உள்ளுணர்வு மூட்டின; உணர்வுக்கனல் எழுப்பின. தம் அண்டை அயல் நாடுகளில் வாழும் தமிழின மக்கள் ஆங்காங்குள்ள சூழல்களுக்குத் தக்கவாறு, தங்களை விட மிகச் செழிப்பாகவும் வளப்பமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும், தாங்கள் தாம் வறுமை மிக்கவர்களாக உரிமையிருந்தும் ஊமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றும், தவறாகக் கணக்கிட்டு வந்த தமிழ் மக்களுக்கு, அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி ஆகியோரின் வரவு பெருத்த விழிப்புணர்ச்சியை- இனக்கவலையை உண்டாக்கித் தந்தது என்று சொன்னால் மிகையாகாது. இங்குள்ள உள்நாட்டின் போலியும் புகைச்சலும் புரைசலும் நிரம்பிய அரசியல் நடவடிக்கைகளினால் வறண்டும் வெதும்பியும் கிடந்த தமிழ் மக்களுக்கு, தமிழினத் தலைவர் அவர்களின் வரவும் பேசிய பேச்சுகளும் உணர்வு



முளைகளின் மேல் பொழிந்த அமிழ்த மழையாகவே இருந்தன என்று சொன்னால் அதுவும் மிகையாகாது. மொத்தத்தில் உலகத் தமிழர்களின் அவலம் நிறைந்த நாடோடி வாழ்க்கை உணர்த்தப்பட்டது. அவர்கள் தங்களுக்கென்று ஒரு தனி நிலத்தை, நாட்டை விரைந்து அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது உடனடியாகவும் உறுதியாகவும் செய்யத்தக்கதாகும் என்றும் இங்குள்ள மக்களை உணரச் செய்தது, அவர்கள் வரவு.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இவ் விந்தியச் செலவுக்குச் சில மாதங்களுக்கு முன், சிற்சில மேலை கீழை நாடுகளுக்குச் சென்று வந்ததும் இங்குக் குறிப்பிடத் தக்கது. அப்பொழுதும் அவர்கள் தம் கட்சிக் கொள்கைகளுக்குப் பரவலான ஆதரவையும் இலங்கைத் தமிழர் மேல் உடனடியான ஓர் இரக்கத்தையும் திரட்டி வந்ததும் ஒரு நல்ல விளைவே ஆகும்.

ஆனால், தமிழினச் சார்பில், உலகில் எந்த மூலையில் எத்தகைய இன முன்னேற்ற முயற்சிகள் நடந்தாலும், இங்கு நம் தமிழகத்தில் முகஞ்சுழிக்கப் பார்த்து வாய் புளிக்கப் பேசும் சிலர் எப்போதுமே உண்டு. அவற்றைப் பாராமுகமாக விட்டு விடும் சில 'பெரியது'களும் உண்டு. மொத்தத்தில் தமிழகம் ஒரு குழப்பப்பட்ட குட்டையாக இருந்து கொண்டு, பல இனத்தவர்களும், பல கட்சியைச் சேர்ந்தவர்களும், பல நோக்கத்தவர்களும் பல புனைவுகளில் இங்கு வந்து வாணிகம் நடத்துபவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் ஒருபொதுச் சந்தையாகவே விளங்கிவருகிறது. இந்நிலையில் திரு. அமிர்தலிங்கம் போலும் உண்மைத் தமிழினத் தலைவர்களின் பேச்சு இங்குள்ள சிலர்க்கு உண்மையான மகிழ்ச்சியை விளைவித்திருக்க முடியாது. மாறாக

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கசப்பையும் வெறுப்பையும் உண்டாக்கியிருக்க முடியும். அத்தகைய கசப்பையும் வெறுப்பையுமே கொட்டி, திரு. அமிர்தலிங்கம் அவர்களின் பேச்சுகளையும் அவர் வெளிப்படையாகக் கூறிய கருத்துகளையும் செரித்துக் கொள்ளவும், பொறுத்துக் கொள்ளவும் முடியாமல், '**இந்து**' ஆங்கில நாளிதழ் மார்ச்சு 26-இல் ஓர் ஆசிரியவுரை எழுதியிருந்தது. இதற்கு முன்னும் இத்தகைய ஆசிரியவுரைகளை அவ்விதழ் எழுதித் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்திருக்கின்றது. அவ்வுரைகள் எல்லாம் திரு. செயவர்த்தனா அவர்களின் அரசால் சிறு சிறு வெளியீடுகளாக அச்சிடப் பெற்று இலங்கையில் வழங்கப் பெற்றிருக்கின்றன.

பொதுவாக **இந்து** போலும் நாளிதழ்கள் செயவர்த்தனா அரசுக்கு ஆதரவு தருவதில் வியப்பில்லை. அவற்றின் உள் நோக்கம் உலகின் எந்த மூலையிலும் தமிழர்கள் தங்களுக்கென ஒரு தனித்தமிழ் நாட்டை அமைத்துவிடக் கூடாது என்பதுதான். அவ்வாறு ஒரு நாடு அமையுமானால், உலகத் தமிழினம் அதனடிப்படையில் மிகவும் வலுப்பெற்ற ஓரினமாக உருப்பெற்று விடும் என்பது அவற்றின் அச்சமாகவும் இருக்கலாம். இப்பொழுதுள்ள நிலையில் இலங்கையில் வாழும் தமிழர்களிடையில்தான் இத்தகைய தனித்தமிழ்நாட்டு அமைப்புக்குச் சார்பான சிலசூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. அங்குள்ள தலைவர்களும் அவர்களைப் பின்பற்றும் உண்மையான தொண்டர்களுந்தாம் தனித்தமிழீழ நாட்டு அமைப்புக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டுள்ளனர். இவர்களுக்குச் சார்பான அல்லது துணையான சூழ்நிலை, உலகம் முழுதும் இத்தகையவர்கள் விரும்பியோ விரும்பாமலோ உருவாகி வருவது இவர்கள் நெஞ்செரிச்சலை இன்னும் மிகுதிப்படுத்துவதாக இருக்கிறது.



எனவேதான் **இந்து** நாளிதழ் தமிழினத் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் நடவடிக்கைகளை **குறும்புத் தனமானவை** (Mischievous) என்றும், அவர்களின் வெளிப்படையான பேச்சுகளைக் '**குறை கூறுகிற**' பேச்சுகள் (Cynical Statements) என்றும் கண்டித்திருக்கின்றது.

குறைகள் இருந்தால் அவற்றை எடுத்துக் கூறுவது குறும்புத் தனமானது ஆகாது. மூடிமறைப்பதுதான் நாணயமற்றதும் திருட்டுத் தனமானதுமாகும். அதுவுமன்றித் தமிழீழக் கோரிக்கையையே தவறானதும் வீணானதுமான முயற்சி என்று கருத்துரைத்திருக்கின்றது. ஏனெனில் அக்கோரிக்கை குமுகவியல், பொருளியல், அரசியல் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படாத, சரியென்று ஒப்புக் கொள்ளப்படாத கொள்கை என்று அது கூறியுள்ளது. (The real point is that the demand for the break-up of Sri Lanka through the formation of 'Eelam' is as mischievous as it is socially, economically and politically untenable. - The Hindu. Mar. 26, '79)

மேலும் அது, திரு.அமிர்தலிங்கம் அவர்கள் விருந்தினராக வந்தவிடத்தில் இதுபோலும் கருத்துகளைப் பேசி, இந்திய-இலங்கைத் தொடர்பையே பாழாக்கும் வகையில் நடந்து கொண்டார் என்று குற்றம் சாட்டி, இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும் எழுதியிருக்கின்றது.

**இந்து** ஆங்கில இதழ் உலகின் பெரும்பாலான நாடுகளில் பரவலாகப் படிக்கப் பெறும் ஓர் இந்திய இதழ். அதன் தன்மை என்ன, கொள்கை எது என்பது பற்றித் தமிழினம் நன்கு அறிந்தே இருக்கிறது. அவ்விதழ் இந்நேரத்தில் இத்தகைய ஆசிரியவுரை ஒன்று எழுதி, அதன் வழி திரு. அமிர்தலிங்கத்திற்கும் அவரின், தமிழீழக்



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கொள்கைக்கும் தமிழ்நாட்டிலும் தமிழர்களிடையிலும் ஆதரவு இல்லை என்பது போல் உலகின் கண்களுக்குக் காட்டவேண்டும் என்றும் விரும்பியிருக்கின்றது. வெளி நாட்டவர்க்கு இந்துவின் கருத்து தமிழர்களின் கருத் தில்லை என்பது அவ்வளவாகத் தெரியாது. தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இங்குள்ள உள்ளூர் அரசியல் காரர்கள் தங்கள் தங்கள் கட்சியைப் பற்றிய செய்தி களைப் பற்றியும் தங்களைப் பற்றியுமே இங்குள்ள தமிழர்களிடையில் தம்பட்டம் அடித்துக் கொண்டிருப் பதும், அவர்களை ஏமாற்றித் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்வதும், அதுமட்டில் அதற்கு ஊறு வராமல் காத்துக் கொள்வதுமே போதும் என்று நினைப்பவர்கள். எனவே, உலகத்தமிழர் அனைவரை யும் அளாவிக் கொள்ளும் வகையில், இந்து போலும் ஓர் ஆங்கில நாளிதழ் நடத்துவது அவர்களுக்குத் தேவை யில்லாததாக இருக்கிறது. அவர்களுக்கு உலகத் தமி ழினத்தைப்பற்றி எந்தக் கவலையும் இல்லை. அப்படிக் கவலைப்பட்டால் தாங்கள் உயிர் வாழ முடியாது என்று அப்பட்டமாக நினைப்பவர்கள். ஆனால் அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் மட்டும் உலகத் தமிழர்களைப் பற்றிய அக்கறை கொஞ்சும்; அன்புரை விஞ்சும்! அத்தகைய இழிநிலை இங்கு. இந்நிலையில் இந்து போலும் நாளிதழ்கள் தாங்கள் எண்ணுவதை உடனே எழுதி எளிதாக உலக முழுவதும் பரப்ப முடிகிறது. தமிழர்களுக்கு மாறான கருத்தை விரைவில் உலக அரங்கில் உருவாக்க முடிகிறது. எனவே இந்துவில் கருத்துரைகள் வந்தவுடன் அவற்றின் எதிரொலிகளாகச் சில நடவடிக்கைகளை நம்மால் பார்க்க முடிகிறது.

இந்து ஆசிரியவுரை வந்த ஓரிரு நாட்களுக்குப்பின், இலங்கை வணிகத்துறை அமைச்சர் திரு. இலலித்



அதுலத்முதலி என்பார் செய்தியாளர்களிடையே, தமிழ கத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசிய பேச்சுகளின் அடிப் படையில் பலவகையான எதிர்நிலைக் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். அவர் பேச்சில் இந்துவின் உணர்வும் கொள்கையும் கலந்து வெளிப்பட்டிருக் கின்றன. அவர் கூறிய கருத்துகளில் ஓரிரண்டு கவனிக்கத் தக்கன.

''பிரிவினைக் கருத்தைக் கைவிடாமல் எந்த இணக்க மான பேச்சுக்கும் இடமில்லை; எனவே தமிழர் விடு தலைக் கூட்டணி கேட்கும் வட்டமிசை மாநாட்டிற்கு அரசு இசையவில்லை என்று அமிர்தலிங்கம் (தமிழ் நாட்டுக் கூட்டங்களில்) பேசி வருவது உண்மையில்லை; தன் ஆளுமையை உறுதிப்படுத்திக் கொள்வதைத் தன் விருப்பமாக விடுமாறு முன்னணி கோருகிறது. குடியேற்ற நாடுகள் ஆட்சிக் காலத்தில்தான் (Colonial Times) இந்தக் கோரிக்கை பொருந்தும். தன்னுரிமை ஆட்சி நாடுகளுக்குப் (Independent countries) பொருந்தாது'' என்பவை அவர் கருத்துகளில் சில. இன்னும் அதே நாளில் அங்கு நடந்த ஒரு கல்லூரிப் பேச்சில், அந்த அமைச்சரே, ''திரு. அமிர்தலிங்கம் 35 இலக்கம் தமிழர் களும் தனிநாடு அமைக்க விரும்புவதுபோல் பேசி வரு கிறார். அதில் தொண்டமானைத் தலைவராகக் கொண்ட 14 இலக்கம் பேர் தமிழீழத்தை விரும்ப வில்லை. எனவே அமிர்தலிங்கம் சொல்வது மிகைப் படுத்திக் கூறுவதாகும்'' என்றும் கூறியிருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தலைவர் அமிர்த லிங்கமும் இன்றைக்கு மட்டும் ஏதோ திடுமென நினைத்துக் கொண்டு புதிதாக ஒரு தனிநாட்டைக் கோரவில்லை. தொன்றுதொட்டு ஏற்கனவே இருந்த

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழீழத்தைத்தான் கேட்கிறார்கள். அக்கோரிக்கையும் பழமையானதே. இனி, அக்கோரிகைக்கு வரலாற்றுப் பின்னணியும் உண்டு. ஏதோ சில வரலாற்றுத் தவறுகளால், சிங்களமும் தமிழீழமும் ஒரு நாடாக மாற்றப் பட்டு, அதே வரலாற்றுத் தவறாக, வெள்ளையர்களால் இரண்டு நாடுகளும் சிங்களவரிடம் ஒப்படைக்கப் பட்ட நிலையில் தங்கள் உரிமை சான்ற பழந்தமிழீழத் தையே இலங்கைத் தமிழர், தம் இறைமையைத் தாங்களே உறுதிப் படுத்திக் கொள்ளக் கோரி வருகின்றனர். பேராசையாலோ அறியாமையாலோ ஏதோ இன்னொருவருக்குச் சொந்தமான அல்லது சிங்களவர்க்கே சொந்தமான நாட்டில் தமிழர் பங்கு கேட்கவில்லை.

இப்பொழுதுள்ள சிங்களவர்கள் தமிழர்களுக்குத் தருகின்ற—தர விரும்புகின்ற மொழி, இன நல, ஆளுமை உரிமைகள் எந்த அளவில் இருக்கும் என்பது, கடந்த கால ஐந்நாறு தமிழ் இன அழிப்புக் கொடுமைகளால் தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. எனவே அங்குள்ள தமிழர்கள் இனியும் தங்கள் அரசியல் உரிமைகளைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ள முயல்வதில் தவறே இல்லை.

மேலும் **இந்து**வும், அதன் கருத்தை அப்படியே உட்கொண்ட நம் தமிழக முதலமைச்சர் திரு ம. கோ. இரா. அவர்களும், அயல் நாட்டில் விருந்தினராக வந்தவிடத்தில் திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு பேசியது, இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள இணக்கமான நட்பை ஊறு படுத்துவதாக அமையும் என்று கூறியுள்ளனர். முதலமைச்சர் அதற்கு மேலும் ஒரு படி சென்று, திரு. அமிர்தலிங்கம் இப்படிப்பட்ட பேச்சுகளால்தாம் இந்துவை இப்படியோர் ஆசிரியவுரை எழுதும்படி தூண்டியிருக்



கிறார் என்றும் கூறியிருக்கிறார். அத்துடன், அவர், திரு. அமிர்தலிங்கம் தமிழக அரசின் விருந்தினராக வந்துள்ள பொழுது மதுரையில், அரசு இயங்கியில் ஏறாமல் ஓர் அரசியல் கட்சி கொண்டு வந்த இயங்கியில் ஏறியதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். (இந்து 30.3.79)

முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இந்துவின் கருத்துரை சரியே என்று சான்று கூறியிருப்பதும், திரு. அமிர்தலிங்கம் அவர்களை மற்ற கட்சியினர் வெகுவாக வரவேற்றுப் பாராட்டிய எரிச்சலில் அவர் மேல் தி. மு. க. வண்டியில் ஏறிப்போனார் என்று குற்றம் சாட்டியிருப்பதும் வருந்தத் தகுந்தனவாகும்.

திரு. அமிர்தலிங்கம் வெளிநாட்டில் விருந்தினராக வந்தவிடத்தில் தம் உள்நாட்டுச் செய்திகளைப் பேசியது தவறு என்றால் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன், திரு. செயவர்த்தனே இங்கு வந்து தம் நாட்டு அரசியல் நிலைமைகளைக் கூறியதும் பெருந்தவறாகும். அவர் இங்கு மூடி மறைத்தும் திரித்தும், தம் ஆட்சியில் தமிழர்களுக்குத் தவறே நேராததுபோல் பேசிய உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளையே, திரு. அமிர்தலிங்கம் வெளிப் படையாக, உண்மையாகப் பேசி இங்குள்ள தமிழர்களுக்கு விளக்கினார். உலக நாடுகளில், காலச் சூழலால் கொடுமையால் சிதைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்தின் ஒரு பகுதியினர், தமக்கேற்பட்ட அரசியல் பொருளியல், இனவியல் கொடுமைகளையும் துயரமான அழிவுச் சூழல்களையும், தம் தாயினத் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் தமிழ்நாட்டில் வந்து பேசுவது '**இந்து**'வின் கருத்துப்படி தவறானதும், குறும்புத்தனமானதும், முதலமைச்சர் திரு. இராமச்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சந்திரன் அவர்களின் கருத்துப்படி வருந்தத்தக்கதும் ஆகும் என்றால் இலங்கை தவிர, சிங்களவர்கள் மருந்துக்கும் வாழாத தமிழகத்தில்- இந்தியாவில் திரு. செயவர்த்தனே வந்து-தம்நாட்டு அரசியலைப் பேசியது அதைவிடத் தவறானதும் குறும்புத்தனமானதும், கண்டிக்கத் தக்கதுமாகும். இந்துவும், ம. கோ. இரா.வும் இது போலும் கருத்துகளை ஏன் அப்போது கூறவில்லை?

வாழவும் விடாமல், அழியவும் விடாமல், உலகின் கண்களுக்குத் தமிழர்களுக்கு நலஞ் சேர்ப்பதுபோல் பேசுகின்ற அதே பொழுதில், உள்நாட்டு நடைமுறைச் செயல்களாலும் அடக்குமுறைக் கொடுமைகளாலும் படைத் துறையினரையும் காவல் துறையினரையும் ஏவி, அவர்களைக் கொடுமைப் படுத்திவரும் சிங்கள அரசின் உள்முக நடவடிக்கைகளை நேரிடையாக அங்கே போய்ப் பார்த்துத் தெரிந்து கொள்ளாமல், ஏற்கனவே முதலமைச்சர் அணிந்துள்ள கருப்புக் கண்ணாடியுடன், 'இந்து' நாளிதழ் காட்டும் கருப்புக் கண்ணாடி வழியாகவும் பார்த்து, தமிழர் தலைவரை இழிவுபடுத்திப் பேசுவது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத் தக்கதுமாகும்.

இன்னும் உண்மையான இன உரிமை விடுதலைப் போர் அங்குத் தொடங்கி விடவில்லை. அதற்குள் அங்கு நடந்துள்ள இனக் கொடுமைகள், அநாகரிக அட்டூழியங்கள், காட்டு விலங்காண்டித்தனமான கயமைச் செயல்கள் இவற்றின் தாக்குதலால் உள்ளம் புழுங்கி, உயிர் துடிதுடித்த தமிழர் தலைவர் உண்மையான தம் மனக் கொதிப்பையும் ஆற்றாமையையும், தம் பெற்றோரிடம் கூறி ஆறுதல் கோரும் அடிபட்ட குழந்தையைப் போல், மிகவும் உரிமையுணர்வுடனும், நாகரிகமாகவும், அறிவு திறம்பா நடுநிலையுடனும் இங்குத் தமிழ் மக்களிடம் பேசிச் சென்றிருப்பதை உண்மையான அரசியல் நாகரிகம் தெரிந்தவர்கள் குறைகூற மாட்டார்கள்! அவ்வாறில்லாமல் போனாலும் தமக்கு அதிகாரம் உண்டென்றாலும் பண்பும் இரக்கமும் கூட உண்டென்ற நிலையில், அமைதியாகவேனும் முதலமைச்சர் இருந்திருக்கலாம். அப்படியின்றி அமிர்தலிங்கம் பேசிய முறையிலும் நடந்து கொண்ட நிலையிலும் நிறைவின்றிக் குறைகூறிப் பேசியது பரந்துபட்ட உலகத் தமிழ் இனத்தையே ஊறுபடுத்தியதாகும்.



மேலும் மதுரையில் கட்சி வண்டியில் தவறுதலாக அமிர்தலிங்கமும் அவர் துணைவியாரும் ஏற்றப்பட்டார்களே தவிர, விருப்பமாகவோ, அல்லது தெரிந்தோ அவர்கள் அதில் ஏறவில்லை. இதைப் போய்ப் பெரிதுபடுத்தி முதலமைச்சர் அமிர்தலிங்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையிலோ, அவர் ஒரு கட்சிச் சார்பாக நடந்து கொள்பவர் என்ற முறையிலோ தவறாகப் பேசியுள்ளார். இங்கு நாம் இன்னொன்றையும் கேட்கமுடியும். திரு. அமிர்தலிங்கம் ஒரு கட்சிக்காரரால் அவர்கள் கொணர்ந்த வண்டியில் ஏற்றப்படும் பொழுது, தமிழக அரசு அதிகாரிகளும், முதலமைச்சர் கட்சியைச் சேர்ந்தவர்களும் தாம் கொணர்ந்த அரசு வண்டிக்கு ஏன் அவரை அழைத்துப் போகவில்லை? வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள், தங்களைச் சூழ்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் நடுவில் பரபரப்பில் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ளமுடியும்?

மேலும் தமிழக அரசு அவரை விருந்தினராக உள்ளன்போடோ அல்லது கரவாகவோ, அல்லது

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

உண்மையான பெருமை தரவேண்டும் என்று கருதியோ ஏற்றுக் கொண்டதாக வைத்துக் கொண்டாலும், தமிழ் நாட்டில் உள்ள வேறு கட்சியினர் அவரை வரவேற்கவே கூடாதா? வாழ்த்தவே கூடாதா? மேலும் அவர் தமிழ் நாட்டிற்கு வருமுன்னரே அரசு அவரைத் தம் விருந்தின ராக ஏற்றுக் கொள்ளும் என்று ஏன் முன்னறிவிப்புச் செய்யவில்லை? அவர் தமிழகத்தில் வந்திறங்கியவுடன் எதிர்க் கட்சி வண்டியில் ஏறும்படி தமிழக அரசு அவரை ஏன் விட்டு விட்டது?

அவர் ஒரு கட்சிக்கோ, ஒரு தனிப்பட்டவருக்கோ சொந்தமுடையவரல்லர். தமிழ் மக்கள் அனைவரின் சொந்தத்திற்கும் உரிமைக்கும் பொதுவானவர் அவர்! அப்படிப்பட்டவரை ஏதோ தெரிந்தோ தெரியாமலோ எதிர்க் கட்சியினர் கொணர்ந்த வண்டியில் ஏறினார் என்பதற்காகக் குறைகூறிப் பேசுவது முறையில்லை. இலங்கைக் குடியரசுத்தலைவர் திரு. செயவர்த்தனா தமிழ்நாட்டிற்கு வந்திருந்த பொழுது ஒரு பெரிய வணிகச் செல்வரின் விருந்தினராக இருக்கலாம்; அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான இவர் இந்நாட்டின் எதிர்க் கட்சியினர் கொணர்ந்த வண்டியில் ஏறியதுதான் பிழையோ? இதைக் குற்றஞ் சாட்டுவது எவ்வளவு நடு நிலை பிறழ்ந்த செயல்!

எப்படியோ, மிக அண்மையில் உள்ள தமிழின நெருக்கடிகளை, இங்குள்ள தமிழ் மக்கள், தெளிவாக உணர்ந்துகொள்ள வாய்ப்பில்லாமலிருந்தனர். தமிழ கத்திலுள்ள செய்தித்தாள்களும், இங்குள்ள திரைப்பட நடிகர், நடிகைகளின் உள்முகக் கமுக்கச் செய்திகளைப் பக்கம் பக்கமாக வெளியிட்டுத் தமிழ் மக்களின் காசு பணங்களையும் அறிவு மனங்களையும் பறித்துக் கொண்டுள்ளனவே தவிர, உலகில் வாழ் தமிழர்களின், குறிப் பாக இலங்கை வாழ் தமிழர்களின் வாழ்வியல் இடர்ப் பாடுகளை இதுவரை அக்கறையுடனும் ஆர்வத்துடனும் வெளியிட்டதில்லை. என்றாலும், திரு. திருவாட்டி அமிர்தலிங்கம் அவர்களின் வருகைக்குப் பின் தமிழ் மக்கள், அவர்களின் உணர்வும் உண்மையும் மிக்க சொற் பொழிவுகளாலும், அம்மையார் பாடிய காசியின் உணர் வுப் பாடல்களாலும் தமிழீழ மக்களின் அரசியல் தாக்கு தல்களையும், அழிவுகளையும் நேரிடையாக விளங்கிக் கொண்டனர் எனவே இனி எதிர்காலத்தில் அவர்களின் தொல்லை துன்பங்களில் கட்டாயம் தோள் கொடுத்துத் தாங்குவர் என்பதில் ஐயமிருக்காது. திரு. அமிர்த லிங்கத்தின் தமிழக - இந்திய வருகையால் கிடைத்த பெரும்பயன் இது! இதை **இந்து** நாளிதழ் ஆசிரியர்களும் அவரைச் சார்ந்தவர்களும் நன்கு உணர்ந்து கொள் வார்கள் என்று நம்புகின்றோம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



**—தென்மொழி சுவடி: 15; ஓலை:9 (மார்-ஏப் 79)**

# 4. உரிமையே எண்ணம்!
# உழைப்பே கொள்கை!
# உண்மை விளைவு தமிழீழம்!

(இலங்கை 'சுதந்திரன்' இதழில் 27-4-80-இல் வெளி வந்த கட்டுரை இது. **தென்மொழி** அன்பர்களுக்காக இது அக்கால **தென்மொழியில்** வெளியிடப்பெற்றது.)

உலகெங்கணும் உள்ள மேலாளுமை கொண்ட சின்னஞ்சிறு நாடுகளிலெல்லாம்கூட உரிமை உணர்வு எழுச்சி கொண்டுள்ள நேரம் இது. கடந்த கால வரலாற்று நிலைகளில் சிறந்தோங்கியிருந்து, உலகப் பேரரசுகளில் ஒன்றாயிருந்த தமிழினம், தன் மடிமைத் தனத்தாலும் விழிப்பின்மையாலும், உலக முதன்மொழியாகிய தன் தாய்மொழித் தமிழையும், தன் பண்பாட்டையும், அரசிறைமையையும் ஒருங்கே தவறவிட்டுத் தன்னாட்சியிழந்து, ஆங்காங்கே மாற்றார் ஆட்சிக்குட்பட்டு, அடிமையுற்று மிடிமை சார்ந்து இன்று தன் உரிமை மீட்சிக்காகப் போராடி நிற்கிறது. இந்த நிலை பெரும் அவலம் மிகுந்ததாகும்.

மொழியாலும், இனத்தாலும், நாட்டாலும், பண்பாட்டு நாகரிக நலன்களாலும், கலைகளாலும், பொருளியலாலும் அடிமை கொண்ட இத்தமிழினத்தை மீட்டெடுக்க ஆங்காங்குத் தோன்றிய மொழி இனத்தலைவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெரும் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.



இப்போராட்டங்கள் தமிழகத்தில் அரசியல் குமுகாயப் போராட்டமாகவும் தமிழீழத்தில் விடுதலையுணர்வு கொண்ட உரிமை மீட்புப் போராட்டமாகவும் வடிவெடுத்து அணி திரண்டு வருகின்றன. தமிழகத்தில் பெரியாரும் அண்ணாவும் கடந்த அரை நூற்றாண்டுக் காலம் இத் தமிழின உரிமைப் போராட்டத்தைக் குமுகாய வழியிலும் அரசியல் வழியிலும் நடத்தி ஓரளவு வெற்றி கண்டு வந்துள்ளனர்.

இலங்கையில் காலஞ்சென்ற தமிழீழப் பெரியார் செல்வா அவர்களின் வழியில் விடுதலை வேட்கை கொண்ட தலைவர்களும் இளைஞர்களும் முழு இறைமை சான்ற தமிழீழப் பொதுவுடைமைக் குடியரசை அமைக்கக் கடந்த முப்பது ஆண்டுகளாக அயராமல் பாடுபட்டு வருவது உலகறிந்த செய்தியாகும்.

கடந்த மூவாயிரம் ஆண்டுக் காலமாகத் தூங்கிக் கிடக்கும் ஒரு பேரினத்தைத் தட்டியெழுப்பி விழிப்புணர்ச்சியை ஊட்டி விடுவதென்பது அவ்வளவு எளிய செயலன்று. இருப்பினும் தம்மால் இயன்றவரை கடந்த காலத் தலைவர்கள் தமிழகத்திலும் தமிழீழத்திலும் ஒரு போராட்ட மரபினத்தை உருவாக்கிச் சென்றுள்ளனர். இன்று அவர்கள் வழியில் ஆங்காங்குள்ள அரசியல் தலைவர்களாகிய கலைஞர் கருணாநிதியும், அமிர்தலிங்கமும் தமிழகத்திலும் தமிழீழத்திலும் போராட்ட முன்னோடிகளாக இருந்து செயல்பட்டு வருகின்றனர்.

இவ்வகையில் தமிழகத்தைக் காட்டிலும் தமிழீழத்தில் இப்போராட்டம் முழு வடிவில் உருப்பெற்று உலகெங்கணுமுள்ள ஏறத்தாழ பதின்மூன்று கோடித்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழர்களுக்கும் ஒரு விடிவை உண்டாக்கும் போராட்ட மாகக் கால்கொண்டு வருகிறது.

தமிழீழத் தலைவர்களும் அவர்களைக் காட்டிலும் ஒருபடி மேலாக அங்குள்ள இளைஞர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு முழுமூச்சுடன் பல வகையிலும் உழைத்து வருவது ஒருவகை மனநிறை வையும் நம்பிக்கையும் ஊட்டுகிறது. மென்முறையும் வன்முறையும் சார்ந்த இவ் விருமுனைப் போராட்ட அமைப்பு கட்டாயம் இறுதியில் வெற்றியைத் தரும் என்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை. இருப்பினும் நம் போராட்ட முயற்சிகள் இன்னும் நன்கு திட்டமிட்ட வகையில் நடக்க வேண்டுவது மிகமிக இன்றியமையாத தாகும்.

ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு முதன் முதலாக வேண்டுவது ஆழமான உரிமை உணர்ச்சியே. எந்த வகையிலேனும் உரிமை பெற்று முழு இறைமை சான்ற பொதுவுடைமைக் குடியரசை நிறுவுவதே நம் தலையாய நோக்கமாக இருத்தல் வேண்டும். ஓர் உரிமை இயக்கத் தைப் பலவகையிலும் நசுக்கப் பாடுபடும் வல்லாளுமை ஆற்றல்களை எதிர்த்துப் போராடும் வகையில் இளைஞர் களும் தலைவர்களும் மிக்க மனவுறுதி கொண்டவர் களாக இருத்தல் வேண்டும். இடையிடையே கிடைக் கும் அரசியல் ஊதியங்களை எள்ளளவும் பெரிதாகக் கருதி விடாமல் உரிமை மீட்பு எண்ணத்தையே பெரிதா கக் கொள்ளும் தன்னலமற்ற தமிழீழ விடுதலை உணர்வே எல்லாருடைய உள்ளத்திலும் ஆழமாக வேரூன்றல் வேண்டும். நயவஞ்சகமான இணக்கப் பேச்சிலும் அவ்வப்பொழுது அறிவிக்கப்பெறும் சூழ்ச்சியான திட்டங் களிலும் மனத்தைப் பறிகொடுத்து விடுதலையுணர்வை எவ்வகையானும் நெகிழ விட்டு விடக்கூடாது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



ஓரினத்தின் விடுதலை இயக்கத்திற்கு உரிமை வேட்கை என்பது எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்குமோ அவ் வளவில் அதனை அடிமைப்படுத்தி ஆளுமை செய்கின்ற மேலதிகார இனத்திற்கும் அதிகார வேட்கை ஆழமாக வேரூன்றியிருக்கும். அதனை அறவே அகற்றிவிடுவ தென்பது மிகவும் கடினமே. எனினும் அக் கடினமான முயற்சியில் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்ட உயிருக்குத் துணிந்த இளைஞர்களும் அவர்களைக் கொண்டு செலுத்தும் தலைவர்களும் ஒரு சிறிதும் பின்வாங்கி விடுதலோ சோர்வடைந்து விடுதலோ அடிமைப்பட்ட இனத்தை மேலும் படுபாதாளத்திற்கே கொண்டு சேர்க்கும் தன்மையுடையன. எனவே எந்த நிலையிலும் அவர்களுக்கு நெகிழ்ச்சியே கூடாது.

போராட்ட முறைகள் காலத்திற்கேற்ப மென்மை வன்மை சான்றவையாக இருக்கலாம். ஆனால் போராட்ட முயற்சியில் தளர்ச்சியே இருக்கக் கூடாது;

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து (குறள் 486)

என்பது போல் ஊக்கம் தளர்ந்து நிற்கும், அஃதா வது போராட்ட முயற்சிகளைக் காலங்கருதி அமைதிப் படுத்தி வைக்கும் ஒரு நிலை வந்தாலும் கூட அந்நிலை, அடுத்து நடத்தப் போகும் பெரும் போராட்டத்திற்கு ஆயத்தப்படுத்தும் ஒரு நிலையாக இருக்க வேண்டுமே யன்றி, தம் உரிமை எண்ணத்தை மழுக்கிக் கொள்ளும் முனைப்பற்ற ஒரு நிலையாக இருந்து விடக்கூடாது.

தமிழீழ உரிமை முயற்சி, தமிழக உரிமை உணர்ச்சி யைக் காட்டிலும் பலமடங்கு வளர்ந்து பெருகி வடிவாக நிற்கும் தன்மையுடையது. அது கனன்றெரியும் ஒரு காட்டுத் தீப் போன்றது. அதனை அணைத்துவிடுவ

தென்பது ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கு அத்துணை எளியது மட்டுமன்று; இயலாததும் ஆகும். இந்த வகையில் தமிழீழ இளைஞர்களின் ஈகவுணர்வும் மிகவும் பாராட்டப் பெறுவதாகும்.

இயல்பாகவே தமிழினத்திற்கிருக்கும் தன்னினக் கீழறுப்பு முயற்சிகள் ஒரு சிறு அளவில் தமிழீழத்தில் இருப்பினும், தமிழகத்தைக் காட்டிலும் தமிழின ஒற்றுமை தமிழீழத்தில் மிகச் சிறந்து, பொருளுணர்வு முறையில் தெளிவுடன் விளங்குகிறது.

இவ்விழிப்புணர்வு ஏற்படுவதற்குத் தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவு முயற்சிகளே கரணியமாகும். தமிழகத்தில் அப்படியொரு நிலை இன்னும் வந்து வாய்க்கவில்லையாதலின் அத்தகைய விழிப்பு சார்ந்த ஓர் ஒற்றுமையுணர்வு அங்கு ஏற்படவில்லை. இருப்பினும் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள்ளாகவேனும் தமிழகத்திலும் இத்தகையதோர் உரிமையுணர்வு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. எனவே, தமிழீழ மக்கள் தங்கள் உரிமை உணர்வுகளை நன்கு வரவழைத்துக் கொண்டது, காலத்தின் அழுத்தமான தேவையாகப் போய்விட்டது; இதனைத் தமிழின விடிவுக்கேற்பட்ட முன்னோடியான வாய்ப்பாகவும் கருதலாம்.

அடுத்து, உரிமை உணர்வு மிகுந்து எழுச்சி கொண்ட ஒரு விடுதலை இயக்கத்திற்குத் தேவையானது சலியாத உழைப்பேயாகும். இந்த வகையிலும் தமிழக இளைஞர்களைவிடத் தமிழீழ இளைஞர்கள் பலவாறும் மேம்பட்டவர்கள். கடந்த காலத் தமிழீழ விடுதலை யுணர்வுப் போராட்டங்களில், தங்கள் விலைமதிக்க முடியாத உயிர்களையும் பணயமாக வைத்து அவர்கள் ஈடுபட்ட முறை பெரிதும் பாராட்டத் தகுந்ததாகும்.



உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளில் ஈடுபட்ட இளைஞர்களுக்கிருந்த இருக்கின்ற ஒரு மாபெரும் செயல் துணிவு நம் தமிழீழ இளைஞர்களுக்கு உண்டு. யாருடைய வீரவுணர்வினாலும் இவர்களின் வீர விடுதலை முயற்சிகள் சிறிதும் குறைத்து மதிப்பிடக் கூடியன அல்ல. மாறாக, விலைமதிக்க முடியாத அத்துணை பெருமை சான்றன. எனினும் நம் முயற்சிகள் இன்னும் கட்டுக்கோப்பாக அமையவில்லை என்றே நாம் மதிப்பிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

நம் இளைஞர்களிடம் ஆங்காங்கே சில நெகிழ்ச்சிகளும் உண்டு. கொள்கை யடிப்படையிலும், விருப்பு வெறுப்பு வகையிலும் அவர்களுக்கிடையில் சிறுசிறு குழுவுணர்வுகள் தோன்றியுள்ளதை நாம் கருதிப் பார்க்காமலும் அதில் கவனம் செலுத்தாமலும் அதன் பொருட்டுக் கவலைப்படாமலும் இருந்துவிட முடியாது. இளைஞர்களின் தலைமைப் பொறுப்புகளில் இருப்பவர்கள் இதனை நன்கு கவனித்துத் தக்க ஆய்வு செய்து வாகுபோகான முறையில் இந்த உணர்வைச் செப்பப்படுத்த வேண்டும்; கட்டுக்கோப்பான ஒரியக்கத்தைச் செழிக்க விடாமல் செய்வதும், சிதைப்பதும் இத்தகைய உள்முக உணர்வுச் சிதைவுகளே, புறநிலைத் தாக்குதல்களால் அவ்வளவு கேடுகள் வந்து விடுவதில்லை. அத்துடன் தலைவர்களுக்கும் இளைஞர்களுக்கு மிடையில் உள்ள கருத்து வேறுபாடுகளும் அகலல் வேண்டும்.

ஓர் இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். அவை இயக்கத்தைச் செழிப்புடையதாக்கும். மனவேறுபாடுகள் கூடாது; அவை இயக்கத்தை அழித்துவிடும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இறுதியாக ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் தமிழீழ விடுதலை முயற்சி ஏதோ இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக மட்டும் அவர்கள் உரிமைபெற வேண்டும் என்ற அளவில் மட்டும் செய்யப் பெறும் முயற்சியாகக் கருதிக்கொள்ளக் கூடாது. இன்று உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நாற்பத்தைந்து நாடுகளில் சிதறிக் கிடக்கும் பழம் பெருந் தமிழினத்தை ஒன்று கூட்டி அவர்களுக் கென்று இவ்வுலகில் முழு இறைமை சான்ற ஓர் ஆளுமை கொண்ட நாட்டை அமைக்கின்ற முயற்சியாகவே இதைக் கருதுதல் வேண்டும். தமிழினம் இன்று நேற்றுப் பிறந்த இனம் அன்று; நீண்ட நெடுங்காலத் தொடர் வரலாற்றையும் உலகத்திலேயே மூத்த முதுமொழியையும் கொண்ட மிகப்பழம் பேரினமாகும். இவ்வினத்தைத் தூக்கி நிறுத்தும் பயனுள்ள தேவையான கட்டாயமான ஓர் உணர்வும் உரிமையும் சார்ந்த பெரு முயற்சியில் இந்தத் தலைமுறையிலுள்ள அக்கறையும் ஆர்வமும் அறிவும் நிரம்பிய மக்கள் ஈடுபட்டு வெற்றி காணுதல் வேண்டும். அவ்வாறு நாம் எதிர்பார்த்தபடி வெற்றி பெறாமல் போனால் அல்லது தோல்வியுறுவோமானால், இனி என்றென்றும் இவ்வினம் அடிமையாகவே கிடந்துழல வேண்டியிருக்கும் என்பதைத் தலைவர் செல்வாவின் 83-ஆவது பிறந்த நாளாகிய இன்று நாம் எல்லோரும் நன்கு மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். இத்தகைய பெரும் முயற்சியில் நாம் அனைவரும் ஒரு முகமாகப் பாடுபட்டு வெற்றி பெற எல்லாம் வல்ல இறையருள் நமக்குத் துணை நிற்குமாக.

மலர்க தமிழீழம்! வளர்க உலகத் தமிழர் ஒற்றுமை!

**—தென்மொழி சுவ; 15, ஓ:5 (ஏப்-மே 80)**

# 5. இலங்கையில் தமிழின வேட்டை!

**(அல்லது)**

# இலங்கை அரசு தமிழீழ மக்கள் மேல் தொடுத்த போர்!

எழுந்தெழுந்துஅடங்கும் இலங்கைக் கொடுமையைப் பற்றி நாம் கேள்விப்படும் பொழுதெல்லாம், பாவேந்தரின், **'நான்கு பக்கமும் வேடர் சுற்றிட, நடுவில் சிக்கிய மான்போல், இங்கு, ஏன் பிறந்தேன் இவர்கள் வீட்டில், கரையில் இட்டதோர் மீன்போல்'** என்ற வரிகளே நினைவுக்கு வரும். வேடர்கள் நடுவில் சிக்கிய மானைப் போலும், தமிழினம் இலங்கையில் அஞ்சி அலைக்கழிக்கப் பட்டுத் துன்புற்றுத் துடித்துக் கொண்டுள்ளது. உரிமைக்குப் போராடுவதும், போராட்டத்தில் உயிரிழப்பதுமே ஓர் அடிமைப்பட்ட இனத்தின் வாழ்க்கையாக இருக்க முடியும்; ஆனால் இலங்கையில் உள்ள தமிழினத்தைப் பொறுத்த மட்டில், அது வரலாறாக இருக்கிறது; 1956-இல் தொடங்கி, 1958, 1961, 1974, 1977 ஆகிய ஆண்டுகளில், சிங்களவர்களால் தமிழர்கள் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கின்றனர்; கொல்லப்பட்டிருக்கின்றனர்; உறுப்புச் சிதைவு (சித்திரவதை) செய்யப் பட்டிருக்கின்றனர். இறுதியாக நடந்த 1977 ஆகஸ்ட் கலவரத்தின்பொழுது மட்டும், ஏதிலிகள் (அகதிகள்) மறுவாழ்வு முகாம் ஆய்வுப்படி, தமிழர்களில் 300 பேர் கொலை செய்யப்பட்டனர். 1500 பெண்கள்



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கற்பழிக்கப் பட்டனர்; வெட்டி யெறியப்பட்டனர்; 2500 பேருடைய வீடுகள், வணிக நிலையங்கள், கடைகள் எரிக்கப்பட்டன; 4000 கொள்ளைகள், சூறையாடல்கள் நடந்தன; 15000 பேர் வீடிழந்து, நாடிழந்து, உற்றமும் சுற்றமும் இழந்து ஏதிலிகளாக்கப் பட்டனர். ஆனால், இன்னும் இந்தக் கணக்கு தொடர்ந்து நீண்டு கொண்டிருப்பது கொடுமையிலும் கொடுமை! மிகக் கொடுமை!

வழக்கம்போல் இந்த ஆண்டும், கடந்த மே 31 முதல் சூன் 7-வரை, தொடர்ந்து எட்டு நாட்களும் யாழ்ப்பாணப் பகுதிகளில் தமிழர்கள், சிங்களக் காவலர்களாலும், படைத்துறையினராலும் வேட்டையாடப் பெற்றிருக்கின்றனர். இப்பொழுது நடந்த சீரழிவோ, இத்தனை யாண்டுகள் நடந்த கொடுமையினும் வேறுபட்டது; மாறுபட்டது; அஃதாவது கடந்த காலங்களில் நடந்த இன அழிவுக் கலவரங்கள் சிங்கள மக்கள் ஆங்காங்குத் தமிழ் மக்களை அழித்த கதைகளாக நடைபெற்றன. அதைத் தடுக்கின்ற சாக்கில் சிங்களக் காவல் துறையினரும் ஆங்காங்கே தங்கள் கைவரிசைகளையும் காட்டி வந்தனர். மேலும் அந்தக் கலவரங்கள் எல்லாம் இலங்கையின் கிழக்குப் பகுதிகளிலும், நடுவில் உள்ள மலையகப் பகுதிகளிலும், குறிப்பாக இந்தியத் தமிழர்கள் என்று குறிப்பிடப்படுகின்ற சிறுபான்மைத் தமிழர்களிடையிலேயே பெரும்பாலும் நடந்தன. ஆனால் சென்ற மாதம் நடந்த கலவரமோ (அதைக் கலவரம் அல்லது தாக்குதல் என்று சொல்ல முடியாது; **மாந்த வேட்டை —தமிழின மக்கள் மேல் அரசு தொடுத்த போர்** என்றுதான் சொல்ல முடியும். அந்தப் போர்...) இலங்கையின் வடக்குப் பகுதியில், அஃதாவது பெரும்பான்மைத் தமிழர்கள் என்று குறிப்பிடப் பெறுகின்ற



யாழ்ப்பாணத் தமிழர்கள், இன்னுஞ் சொன்னால் அங்கேயே பிறந்து அங்கேயே வாழ்ந்து பின் வாழ்விழந்து அடிமையுற்று, இன்று மீண்டும் தாங்கள் ஆள்கின்ற உரிமைக்குப் போராடிக் கொண்டு, செத்தும் சாகாமலும், அழிந்தும் அழியாமலும் இருக்கின்ற தமிழர்கள் வாழ்கின்ற பகுதிலேயே, அஃதாவது, அரிமாக்கள் வாழ்கின்ற முழைஞ்சுகளிலேயே, குகைகளிலேயே, நரிமாக்கள் புகுந்து, அவற்றைச் சுட்டு வீழ்த்திய கதையாக நடந்துள்ளது. இன்னொரு வேறுபாடும் இந்த சூன் மாத இன அழிவுக்கு உண்டு. சென்ற காலக் கொடுமைகள் இன-அழிவுகள் சிங்களப் பொது மக்கள், தங்களிடையில் வாழும் தமிழ்ப் பொதுமக்களைத் தாக்கியதால் நேர்ந்தவை. இதுவோ காவல் துறையினரும் அவர்களுக்குத் துணையாகப் படைத் துறையினரும் சேர்ந்து கொண்டு, தமிழினத்தை அழிக்கப் புகுந்த, அஃதாவது வேலியே பயிரை மேயப் புகுந்த பெருங்கொடுமைத் தன்மை கொண்டது. இனி அக்கொடுமையிலும் அறக்கொடுமை என்னவென்றால், இதைச் சிங்கள அரசே திட்டமிட்டுச் செய்தது என்பதுதான்!

சிங்களக் குலத் தலைவர்—அஃதாவது இன்றைய குடியரசுத் தலைவர்—ஆகிய செயவர்த்தனா அரசு என்ன செய்தது? எப்படி அது திட்டமிட்டது. யாழ்ப்பாணத்தில் மே மாத இறுதி நாள் கொடுமை தொடங்குகிறது. அங்கு அதுவரை உயர் காவல் அதிகாரியாகக் கடமை செய்து கொண்டிருந்த, பி. மகேந்திரன் என்னும் தமிழர், மே மாத முதற்கிழமையிலேயே கொழும்புக்கு மாற்றப்படுகிறார். அவருக்குப் பகரமாக பி. டி. குணவர்த்தனா என்னும் சிங்கள அதிகாரி, பணியில் அமர்த்தப்படுகிறார். இஃது அரசே திட்டமிட்டுச் செய்த இன அழிப்பு என்பதற்கு முதல் சான்று. இரண்டாவது

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சான்று, கலவரம் தொடங்கியது மே 31 அன்று இரவு, அன்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள மரக்கடைக்கு ஒரு சரக்கு உந்து (Lorry) மரங்களை ஏற்றி வருகிறது. அதை ஓட்டி வந்த ஓட்டுநர் ஒரு சிங்களவர். அவரைப் பார்த்து, அங்கிருந்த சிங்களக் காவலர்கள் சொல்லி எச்சரித்திருக்கிறார்கள். 'இன்று இரவு இங்குக் கலவரம் நடக்கும்; நீ வண்டியுடன் உடனே திரும்பி விடு' என்று. இதற்கு என்ன பொருன்? கலவரம் திட்டமிடப்பட்டு—அதுவும் அரசின் எண்ணப்படி—கட்டளைப்படி—நடந்தது என்பதற்கு இவற்றைவிட வேறு என்ன சான்றுகள் வேண்டும்?

எப்படியோ, கலவரம் நடந்தது. வழக்கம்போல் சீரழிவுகள் நிகழ்ந்தன; தீ வைப்பும், கடையுடைப்பும், கொள்ளைகளும், நூற்றுக்கு மேற்பட்ட கொலைகளும் நடந்தன. காவலர்களே இவற்றைச் செய்ததால் அவர்களுக்கு இவற்றைச் செய்வது எளிதாக இருந்தது. கிடைத்த வண்டிகளில் ஏறி, அவற்றை இங்கும் அங்குமாகத் தாங்கள் விரும்பிய இடங்களுக்கு ஓட்டச் செய்தனர்; கன்னெய் (Petrol) நிலையங்களில் நிறுத்தி வேண்டிய மட்டும் கன்னெய் ஊற்றிக் கொண்டனர். கன்னெய்யில் சாக்குப் பைகளை நனைத்துத் தீ மூட்டிக் கடைகள் மேலும் வீடுகள் மேலும் வீசியிருக்கின்றனர். எதிரிலிருந்த கோவில்கள், கடைகள், வீடுகள், உந்துகள், இயங்கிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. சாம்பலாக்கப்பட்டன. தமிழர்களின் தங்க, வயிர நகைக் கடைகள் முதலிய விலைமதிப்புள்ள விற்பனையகங்கள் கொள்ளையடிக்கப்பட்டன; துணிக்கடைகள், செருப்புக் கடைகள், உணவு விடுதிகள், புத்தகக் கடைகள், தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரியதும் சிறந்ததும் ஏறத்தாழ 97000 அரிய நூல்களைக் கொண்டதுமான யாழ்ப்



பாண நூல் நிலையம், 'ஈழநாடு' செய்தித்தாள் அலுவலகம், கூட்டணி அலுவலகம் முதலிய அனைத்தும் சாம்பலாக்கப் பட்டன; மதுக்கடைகள் யானைகள் புகுந்த களரிகள் ஆயின. அங்காடிகள் படைகள் துமித்த களங்கள் ஆயின; பாராளுமன்ற உறுப்பினர் வீடு தீக்கிரை; அவரும் அவர் மனைவியும் சுவரேறிக்குதித்து ஓடி உயிர் பிழைத்துள்ளனர்; விடுதலை முன்னணிக் கட்சிச்செயலாளரும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித்தலைவரும் ஆகிய, தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கலவரக் காவலர்களால் தேடப்பட்டுள்ளார்; அவர்களின் கைகளில் அவர் கிடைத்திருந்தால் நடந்திருக்கும் கதை வேறாக இருந்திருக்கும். நல்ல வேளை அவர் தப்பினார்.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நிலைமை இப்படியே போகுமானால் முடிவு என்னாவது? இந்த இனக்கொடுமைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று உலகத் தமிழினமே கவலை கொண்டுள்ளது. விடிவு என்ன? முடிவு என்றைக்கு? **இவற்றுக்கெல்லாம் ஒரே முடிவு தனித்தமிழீழம் தனியரசு ஆவதே!** அதில் எவ்வகை மாறுதலான பேச்சுக்கும் நெகழ்ச்சிக்கும் இனி இடமே இல்லை! அந்த முடிவே அனைத்துலகத் தமிழர்களின் ஒருமித்த முடிவு! விடியட்டும் தனித்தமிழீழப் பொதுமைக் குடியரசு! வாழ்க தமிழீழம்!

**—தென்மொழி : சுவடி-17, ஓலை-11 (சூன்-சூலை-81)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 6. தமிழீழ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அடைக்கலம் தருக!

**அவர்களைச் சிங்களவரசிடம் ஒப்படைத்திட வேண்டாம்! அவர்களின் உயிரை இந்தியவரசு காக்கட்டும்!**

*உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறிக்கை!*

இலங்கை, இறுதியாக பிரிட்டிசு ஆட்சியிலிருந்து விடுபட்ட நாளிலிருந்து கடந்த முப்பதாண்டுகளாக, அதன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்களவர்களால், அங்குள்ள சிறுபான்மை இனமாகிய தமிழர்களுக்கு நேர்ந்துவரும் கொடுமைகளும் துன்பங்களும், அவர்களின் உரிமைகளுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட இழிவுகளும் அழிவுகளும்; அங்குள்ள தமிழ்த் தாய்மார்களுக்கு உண்டான அவமானங்களும் உலகம் அறிந்தவையே.

ஈராண்டு மூவாண்டுகளுக்கொருமுறை அங்கு நேர்ந்த நேர்கின்ற இனக்கலவரங்களால் உயிர் மாண்ட தமிழ் மக்களும், அழிக்கப்பட்ட சொத்துகளும் ஏராளம்; இஃது ஒரு துன்பத் தொடர்கதையாகவே அங்கு நிகழ்ந்து வருவதை உலகநாடுகள் பலவும் கண்டித்துள்ளன.

பாராளுமன்ற நடைமுறைகளாலோ அறப் போராட்ட வழிகளினாலோ இதற்கொரு தீர்வு காண



முடியாத நிலையில், கொடுமைகளுக்குள்ளான அங்குள்ள தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமைகளுக்கும், வாழ்வியல் நலன்களுக்குமாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். அதன் காரணமாகத் துன்பத்திற்குள்ளான தமிழர்கள் பலர், இலங்கையை விட்டு வெளியேறும் கட்டாய நிலைக்கு உட்பட்டு, அண்டை அயலிலுள்ள இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் சென்று உயிர் பிழைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களில் பலர் ஏதிலிகளாகத் தமிழகத்திற்கும் வந்து மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் குடியேறி அன்றாட வாழ்விற்கும் அமைதிக்கும் வழிவகை காணாமல் துன்பப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அங்குள்ள துன்பங்களுக்கிடையே, உரிமைக்குப் போராடிய தீவிர உரிமைப் போராட்ட இளைஞர்கள் சிலர், சிங்களப் படையினராலும் காவல் துறையினராலும் தங்களுக்கேற்பட்ட கொடுமைகளினின்று தப்பித் தமிழகம் வந்து, தலைமறைவாக வாழ்ந்து தங்களின் போராட்ட முயற்சிகளுக்குத் தாய்த் தமிழகத்தில் ஆதரவு தேடும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்களில் சிலர், அண்மையில் தங்களுக்குள் கொள்கை வழியிலும் போராட்ட முறையிலும் வேறு ஏதோ சில வகைகளிலும், பூசல்களை விளைவித்துக் கொண்டு, இறுதியில் ஒருவர்க்கொருவர் தாக்குதலில் ஈடுபட்டு, அதன் விளைவாகக் காவலர்களால் பிடிபட்டுக் காவலில் வைக்கப்பெற்றுப் பலவகை உசாவலுக்கும், ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றதை நாம் அறிவோம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அவர்கள் செய்த குற்றங்களாகத் தமிழகக் காவல் துறையினர் அவர்களின்மேல், தேவையான நுழை விசைவு (விசா) இல்லாமல் இங்கு வந்ததும் கருவிகள் வைத்திருந்ததும், ஒருவர்க்கொருவர் தாக்குதலில் ஈடுபட்டதுமாகிய குற்றங்களைச் சுமத்தலாமென்று கருதப்படுகிறது.

இதுதவிர, இதற்கிடையில் சிங்கள அரசுவேறு, அந்நாட்டுக் காவல்துறை அதிகாரிகளை இங்கனுப்பி, இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு, ஏற்கெனவே அவர்களால் தேடப்பட்டு வந்ததாகக் கூறப்பெறும், அவ்விளைஞர்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி வருகிறது. அவர்களைப் பிடித்த தமிழகக் காவல் துறைக்கும் ஒரு பெரும் பரிசுத் தொகையைத் தருவதாக அறிவித்து ஆசை காட்டி உள்ளது.

இவ்விக்கட்டான நிலையில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாம் நம் கருத்து களைத் தமிழக அரசுக்கும், தில்லியிலுள்ள நடுவண் அரசுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இங்குப் பிடிபட்டுக் காவலில் வைக்கப் பெற்றுள்ள இளைஞர்கள் ஏற்கனவே சிங்கள அரசினரால் பலவகைக் கொடுமைக்கும் நீண்டகாலச் சிறைத் தண்டனைக்கும் ஆளானவர்கள் என்பதை, இங்குள்ள ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் மறந்துவிட வேண்டாம் என்பதைத் தெரி வித்துக் கொள்கின்றோம். அவர்கள் மீண்டும் சிங்கள அரசிடம் ஒப்படைக்கப்படுவார்களானால் அவர்கள் உயிர்களுக்கு எத்தகைய விளைவுகள் நேரும் என்பதை நாம் மாந்த நேய நோக்கத்துடனும் கழிவிரக்கத்துடனும் எண்ணிப் பார்க்கத் தவறிவிடக் கூடாது.



மேலும் குற்றம் செய்தவர்களாக இங்குப் பிடிபட் டுள்ளவர்கள் இந்நாட்டு மக்களின் உடைமைகளுக்கோ உயிர்களுக்கோ எவ்வகை ஊறும் விளைவித்தவர் களல்லர். அவர்கள் தங்கள் கொள்கைகளுக்காகவும் நடைமுறைகளுக்காகவும் தங்களுக்குத் தாங்களே போரா டிக் கொண்டவர்களாவார்கள். அந்த வகையில் இந் நாட்டுச் சட்டப்படி, அவர்களின் குற்றங்களுக்கேற்ப அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களாகவே இருக்க லாம். இயல்பான அந்நடைமுறைப் போக்கில் அவர்கள் மேல் எடுக்கப்பெறும் நடவடிக்கைகளில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ள முடியாது.

ஆனால், நீண்டகாலக் கொடுமைகளுக்கும் உறுப்புச் சிதைவு (சித்திரவதை)களுக்கும், அழிவுக்கும், இழிவுக்கும் ஆளாகி, மாய்ந்து மடிந்து கொண்டுள்ள தமிழினத்தின் உரிமைப் போராட்ட மீட்பர்களாகிய இவ்விளைஞர்கள் சிங்கள வெறியர்களிடம் ஒப்படைக்கப்படுவது என்பது நினைவுக்கும் எட்டாத கொடுமை வாய்ந்ததாகும். அதன் முடிவை எண்ணிப் பார்க்கவும் உயிர் நடுங்குகிறது.

தமிழனின் காட்டிக்கொடுக்கும் தன்மையைப் பரிசுத் தொகையின் ஏற்ற இறக்கத்திற்கு விலை பேசும் சிங்கள அரசின் பின்னணியில் அமைந்த கொடுமையையும், அதன் வேண்டுகோளுக்குச் செவிமடுக்கும் இழிவையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பாலத்தீன விடுதலைப் போராளிகளை இயல்பான மாந்த உரிமை நேயத்துடன் நாம் வரவேற்கவும் வாழ்த்தவும் பாராட்டவும் செய்கிற அதே உணர்வுடன் தமிழீழ உரிமைப் போராட்ட இளைஞர்களின் தந்நல மற்ற ஈக(தியாக) உணர்வுகளையும் விடுதலை வேள்வி களையும் நாம் மதித்திடவேண்டும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

எனவே, அவர்களை வல்லதிகாரமும், பொய்க் குற்றச்சாட்டு உணர்வும், கொடுமை மனமும் கொண்ட சிங்கள அரசிடம் ஒப்படைப்பது, உலக மாந்தநேய உணர்வுக்கும், உரிமை வரவேற்பிற்கும், சிறந்த மக்கட் பண்பிற்கும் உகந்ததாகாது என்பதை அன்புடனும் அதே பொழுது உரிமையுடனும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன் அவர்களுக்கும் இந்தியத் தலைமை அமைச்சர் திருவாட்டி இந்திரா காந்திக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அனைத்துலக மக்கள்நல உரிமைச்சட்டமும் சிங்களவர்களிடம் அவ் இளைஞர்களை ஒப்படைப்பதை ஏற்றுக் கொள்ள இசைவளிக்காது.

ஆகவே, இக்கால் இங்குக் காவலில் வைக்கப்பெற்றுள்ள தமிழீழ விடுதலைப் போராட்ட இளைஞர்களை இந்நாட்டில் அவர்கள் செய்த சிறு குற்றங்களுக்கு ஏற்ப இங்குள்ள அரசியல் சட்டப்படி தண்டிக்க யாதொரு தடையும் இல்லை. ஆனால், தண்டனைக்காலம் முடிந்ததும், அவர்கள் மேலும் இத் தாய்த் திரு நாட்டிலேயே தங்கி அடைக்கலம் பெற்றிருக்கப் போதுமான தங்கு இசைவை அளித்து அவர்களின் உயிரைக்காக்க வேண்டுமெனப் பல்லாற்றானும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

—தென்மொழி சுு-18; ஓ-10, (மே, சூன்-82)

# 7. விடுதலைப் புலிகளும் விரும்பத்தகா நடவடிக்கைகளும்!

(1982-ஆம் ஆண்டு மே மாதம், சென்னையில் தங்கியிருந்த விடுதலைப் போராளிகள் தங்களுக்குள் ஒருவரையொருவர் சுட்டுக் கொண்டபொழுது எழுதிய கட்டுரை இது.)

தமிழீழ நாட்டுரிமைக்காகப் போராடும் தீவிரக் கொள்கையுடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐவர், அண்மையில், சென்னையில் தமக்குள், கொண்ட கொள்கைப் பூசல்களின் காரணமாக, ஒருவரையொருவர் கைத் துப்பாக்கியால், சுட்டுக் கொண்டதும், அதனால் தமிழகக் காவலர்களால் பிடிபட்டுக் காவல் சிறையில் வைக்கப் பெற்றிருப்பதும் நமக்குத் தெரியும். நாட்டின் விடுதலை எனும் உயர்ந்த குறிக்கோளுக்காகத் தங்களின் உடல், உயிர், வாழ்க்கை ஆகிய அனைத்தையும் பொருட்படுத்தாமல், உற்றார் உறவினர்களைப் பிரிந்து, போராட்ட வாழ்க்கையை மேற்கொண்டு உலக வாழ்வியல் நலன்கள் அனைத்தையும் துறந்து, முனைப்புள்ள ஓரியக்கமாக இருந்துவரும் விடுதலை வீரர்கள், அவர்களின் கொள்கை இலக்கை அடைகின்ற பாதையில், தமக்குள் தாமே பூசல் கொண்டு, இகலுற்றுப், பகையுணர்வுடன் போராடிக் கொள்வார்களானால், அந்நிலை எந்தக் காரணத்தின் பொருட்டாக எழுந்தது என்றாலும், அது விரும்பத்தகாததும், வெறுக்கத்தக்கதும், இகழ்ச்சிக்குரியதும், எதிரி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

களை மேன்மேலும் வலுப்படுத்துவதும் ஆகும். விரும்பியோ விரும்பாமலோ, தமக்குள் தாமே எழுப்பிக் கொள்ளும் சிறுசிறு சிக்கல்களையும், கருத்து வேறுபாடுகளையுமே போக்கிக் கொள்ள இயலாத இவர்கள், நாட்டு மக்களின் இன, அரசியல் சிக்கல்களைத் தீர்த்து விடுவர் என்று நம்புவதும் எதிர்பார்ப்பதும் ஏமாற்றத்திற்குரியதாகும்.

இனி, இவர்கள் பிடிபட்ட நிலையிலும், அதற்குப் பின் நடந்த செயல்முறைகளிலும், தமிழக அரசும் காவல் துறையினரும் நடந்து கொண்ட, கொள்கிற நடவடிக்கைகளும் நமக்கு உவப்பானவையாகவும், நயன்மை (நியாயம்) உடையவாகவும் இல்லை. காவல் துறையைப் பொறுத்த மட்டில், அவர்கள் செய்தனவாகக் கருதப் பெறும் குற்றங்கள் சில இருக்கலாம். நுழைவிசைவு (Visa) இல்லாமல் இந்த நாட்டிற்குள் நுழைந்ததும் தங்கியிருந்ததும், உரிமம் இல்லாமல் துமுக்கி அல்லது வேட்டெஃகம் வைத்திருந்ததும், அவற்றைக் கொண்டு இவர்கள் தமக்குள் சுட்டுக் கொண்டதும் போன்ற குற்றங்களே, இந்த நாட்டிற்குள் அவர்கள் செய்தவாகக் கருதப்படும் குற்றங்கள். இவை கடுமையான குற்றங்கள் ஆகா. ஏற்கனவே இத்தகைய குற்றங்கள் இங்கு ஏராளமாக நடந்து கொண்டுதாம் இருக்கின்றன. அவற்றுக்காக நாள்-தோறும் நூற்றுக்கணக்கான பேர் பிடிக்கப்பட்டும், தண்டிக்கப்பட்டுந்தாம் வருகின்றனர். மேலும் ஒரு நாட்டில் இயல்பாக நடைபெற்று வரும் குற்றங்களே இவை. எனவே, இக்குற்றங்களுக்காகப் பிடிபட்டிருக்கும் ஈழத்தமிழ் இளைஞர்கள், இங்குள்ள அரசு - நடைமுறைச் சட்டங்களின்படி குற்றவாளிகளாகக் கருதித் தண்டனையளிக்கப்படுவதை எவரும் குறைகூற வாய்ப்



பில்லை. அஃது ஒரு நாட்டரசின் இயல்பான சட்ட நடவடிக்கையே.

ஆனால், பிடிபட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் தொடர்பாக, இங்குள்ள அரசும் காவல்துறையினரும் நடந்து கொள்ளும் நடைமுறைதான் விரும்பத்தக்கதாகவும் போற்றத்தக்கதாகவும் இல்லை. முதலில் அவர்கள் நம்முடைய நாட்டில் வன்முறைகளை விளைவிக்க வந்தவர்களோ, விளைவித்தவர்களோ அல்லர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவர்கள் நம் நாட்டைப் பொறுத்த அளவில் சில இயல்பான (கடுமையான என்று சொல்ல முடியாது) குற்றங்களைச் செய்தவர்களே! இன்னுஞ் சொன்னால் அவர்களுடைய நாடாகிய இலங்கையில்கூட, அவர்கள் மதிக்கத் தகுந்த அரசியல் குற்றவாளிகளே! இன்னும்கூட, திறந்த மனத்துடனும், மாந்த உரிமை நேய உணர்வுடனும் சொல்வதானால், அவர்கள் வெறும் தந்நல ரசியல்காரர்களை விடப் பலநூறு மடங்கு சிறந்தவர்கள். புதிய மறுமலர்ச்சி வரலாற்றை விளைக்கப் புகுந்த வீர மறவர்கள்! எதிர்காலத்தில் உரிமை கிடைத்த தமிழீழ வரலாற்றில், அவர்களின் பெயர்களும் உருவங்களும் பொன்வண்ணத்தாலும், பொன் சட்டமிட்டும் போற்றப் பெறும் தகுதி வாய்ந்தவை. இத்தகைய விடுதலை வீர மறவர்கள் விளைவிக்கும் வீரச் செயல்களே இலக்கியங்களாகவும், வரலாறுகளாகவும், வீரப்பாவியங்களாகவும் உருப்பெறுகின்றன. எனவே உலகியலில் பொதுவாகக் குற்றவாளிகள் என்று கருதப்படுகின்றவர்களுக்கும் இவர்களுக்கும் மிகப் பெரிய வேறுபாடுகளுண்டு.

அவர்கள் நாட்டைப் பொறுத்தவரை அவர்கள் புலிகளாகலாம் - அரிமாக்களாகலாம். அல்லது அந்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நாட்டு அரசின் உணர்வுப்படி அல்லது கொள்கைப்படி, கொஞ்சம் மதிப்புக்குறைந்த சொற்களால் சொல்வதானால், தீவிரக்கொள்கையாளர்கள் என்றோ, வன்முறையாளர்கள் என்றோ, இன்னும் சிறிது தாழ்த்திச் சொல்வதானால் கொள்ளைக்காரர்கள் என்றோ, கொலையாளிகள் என்றோ அவ்வரசு வண்ணிக்கலாம். ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரை அவர்கள் வெறும் குற்றவாளிகளே! இப்படிப்பட்ட வெறும் குற்றவாளிகளைப் பிடித்த பின்னர் இந்த அரசும் காவல் துறையும் நடந்துகொண்ட - கொள்கின்ற நடைமுறைகள் சரிதாமா என்பது நடுநிலையுடன் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று.

ஒருநாட்டின் ஆட்சி முறைப்படி, அந்நாட்டின் பகுதி மக்களுக்காக விடுதலை உரிமைக்குப் போராடுவோர்கள், அந்நாட்டில் குற்றவாளிகளாகத்தாம் கருதப்படுவர். ஆனால் **அந்த வகையில்** அவர்கள் வேறொரு நாட்டில் **குற்றவாளிகள் அல்லர்.** வேண்டுமானால் இருநாடுகளின் அரசியல் உறவின் அடிப்படையில், அவர்களுக்கு ஆதரவோ அடைக்கலமோ தராமல் இருக்கலாம். ஆனால் அவர்களை மற்ற நாட்டின் அரசியல் நடவடிக்கைகளுக்கான குற்றவாளிகளாகக் கருதக் கூடாது. எனவே, நம் தமிழக அல்லது நடுவணரசின் காவல் துறையும் ஒற்றுத்துறையும் பிடிபட்டுள்ள தமிழீழப் புலிகளை சிங்கள அரசின் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பு படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது, மிகவும் கொடுமையானதாகும். இன்னுஞ் சொன்னால் கண்டிக்கத் தக்கதுமாகும்.

முதற்கண், நம் காவல் துறையினர், அப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கள்ளத் தோணிகளாக



வும், கொள்ளைக்காரர்களாகவும் அவர்களின் அறிக்கைகளின்படி ஏதோ ஒரு பெண்ணுக்காக அடித்துக் கொண்டவர்களாகவும் செய்தி வெளிப்படுத்தியிருப்பது, அவர்களின் தூய்மையான நாட்டினப் போராட்டக் கொள்கைகளை இழிவு படுத்துவதாகும். எந்த ஒரு நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்திலும் இந்நடை முறைகள் இயல்பானவையே! விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு நாடுவிட்டு இன்னொரு நாட்டுக்குப் போவதும், அவர்களின் இயக்கத் தேவைக்காகப் பல்வேறு வகைகளில் பணம், திரட்டுவதும் தவறோ குற்றமோ அல்ல. அரசு அதிகாரத்துடன் செய்கின்ற இவ்வேலைகளைப் புதிய ஓர் அரசை அமைக்க விரும்புபவர்கள் அதிகாரமில்லாமல் செய்கிறார்கள். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களும் இத்தகைய வினைகளில்தாம் அக்காலத்தில் ஈடுபட வேண்டியிருந்தது. அவர்கள் செய்த கொடுமைகளையும், தவறான வினைகளையும் பட்டியலிட்டுப் பார்த்தால், இவர்கள் செய்தனவாகக் கருதப்படும் செயல்களும், திரட்டப்பெற்றதாகக் கூறப்பெறும் தொகைகளும் முறைகளும் மிகையானவையும் அவ்வளவு கொடுமையானவையும் அல்ல என்பதை நாம் நடுநிலைக் கண்ணோட்டத்துடன் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்.

ஒரு நாட்டு விடுதலைப் போராட்டக்காரர்கள் செய்த அல்லது கடைப்பிடிக்கிற பொதுவான நடைமுறைகளைத்தாம் இவர்களும் பின்பற்றியிருக்கிறார்கள். அதுவும் இந்நாட்டிலன்று; அவர்களுடைய நாட்டில். போர்க்காலத்தில் ஓரரசு கடைப்பி க்கிற நடைமுறைகளும் போராட்டக் காலத்தில் ஓர் அரசை அமைக்கவிருக்கின்ற ஓர் இயக்கம் கடைப்பிடிக்கின்ற டைமுறைகளும், ஏறத்தாழ ஒன்றாகவேதாம் இருக்கும். ஆனால், அவற்றின் மதிப்பீடுகள்தாம் வெவ்வேறாக இருக்கும். காலத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தாலும், இடத்தாலும், வினையாலும், அந்நடைமுறைகளும் மதிப்பீடுகளும் தவிர்க்க முடியாதவையே! ஆனால், அதற்காக ஒரு விடுதலை இயக்கத்தின் பின்புலன்களையும், உள்முகச் செயற்பாடுகளையும், அவற்றுக்குத் தொடர்பில்லாத ஒரு வேற்று நாட்டு அரசு ஆராய்வதும் ஆராய்ந்த செய்திகளை வெளிப்படுத்துவதும் நல்லதன்று; மாந்தநேய உரிமைகளை மதிக்கின்ற செயலுமன்று. எனவே, அவர்கள், இங்குச் செய்தவாகக் கருதப்பெறும் குற்றங்களுக்கு வேறான, அல்லது இந்த நாட்டு அரசுக்கு எந்தவகையிலும் தொடர்பில்லாத பின்னணிகளை இங்குள்ள காவல்துறையினர் ஆராய்வது தடுக்கப் பெறவேண்டும். நெடுங்காலமாக உரிமைக்குப் போராடி, இறுதியில் விடுதலை பெற்றுக் குடியரசு நாடாக விளங்கும் இந்திய அரசு அல்லது அதன் கீழ் உள்ள தமிழக அரசு, மற்றொரு விடுதலை முயற்சியின் அரசியல் பின்னணிகளை விளங்கிக் கொள்ளவும் மதிப்பிடவும், அம் முயற்சியின் தேவைகளை உணராமல் இருப்பதும் வியப்பைத் தருகிறது. கடந்த காலத்தில் வங்காள தேசத்தின் விடுதலை இயக்கமாகிய முக்தி வாகினி என்னும் படைக்குத் துணைபோனதும், இந் நாட்டுப் படைகளை அனுப்பி அந்நாட்டு விடுதலைக்குப் போரிடச் செய்ததும், பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு தரும்வகையில் அதன் தலைவரை வரவேற்பதும் பாராட்டுவதும் மறைமுகமாக அதன் நடவடிக்கைகளுக்குத் துணை நிற்பதே ஆகும். அந்த வகையில் இலங்கையில் உள்ள தமிழீழப் போராட்டமும் ஓர் இனத்தின் உரிமை மீட்பு விடுதலை முயற்சியே. எனவே இந்நிலையில் அப்போராட்ட வீரர்களுக்கு இந்திய அரசு ஆதரவு தராமல் இருப்பது தமிழினம் என்றென்றுமே எவ்விடத்தும் அடிமையுற்றே கிடக்கவேண்டும்,



விடுதலை பெற்று உய்யவே கூடாது என்னும் தன் எண்ணத்தை எதிரொலிப்பதாகவே கருத வேண்டியுள்ளது. அதற்கு உடன்படும் வகையில்தாம் விடுதலைப் புலிகளின் பின்புல நடவடிக்கைகள் தீவிரமாக ஆராயப் பெறுகின்றன. அவர்களின் கொள்கைக்கும் உயிர்வாழ்க்கைத் தேவைக்கும் இரக்கம் காட்டியவர்களின் தன்மைகளெல்லாம் நடைமுறைகளெல்லாம் உசாவல், ஆய்வு என்னும் முறைகளில் தீர ஆராயப் பெற்று அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. அவர்களுடன் தொடர்புடையவர்களாகக் கருதப்பெறும் பலரையும் காவல் துறை உசாவியது. இவர்கள் மேல் போடக்கூடியதாகக் கருதப்பெறும் எந்த வழக்குக்கு உதவக் கூடியதாக அரசு கருதுகிறதோ தெரியவில்லை. எனவே, தேவையற்ற இந்த வீணான நடைமுறைகளை உடனே தடுத்து நிறுத்திக் கொள்வதே அறிவுடைமை ஆகும்.

அடுத்து, பிடிபட்ட வீர மறவர்களை எக்காரணம் கொண்டும் சிங்கள அரசிடம் தமிழக அரசோ, அல்லது இந்திய அரசோ, ஒப்படைத்து விடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம். இதுபற்றித் தமிழகத் தலைவர்கள் அனைவரும் ஒரே குரலுடன் தங்களின் இணைவான கருத்தை வெளிப்படுத்தியிருப்பதை அரசு மதிக்க வேண்டும். அத்துடன், அவ்வாறு அவர்களை ஒப்படைப்பதற்கும் ஏற்ற சட்ட அடிப்படை இல்லை என்பதாகவும் அறிகிறோம். (There was no provision in the Indian law to hand over illicit immigrants to Srilanka authority —The Hindu 26-5-82) இந்நிலையில் அவர்களின் மேல் இருப்பதாகக் கூறும் குற்றங்களை மட்டும் வழக்குமன்றத்தின் வழியாக ஆய்ந்து, அவற்றுக்குரிய தண்டனைகளைத் தந்து, அத்தண்டனைக்காலம் முடிவடைந்ததும் அவர்கள் அனைவர்க்கும் அரசியல் அடைக்



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கலம் கொடுத்து அவர்களை இங்கேயே இருக்கும்படி செய்திட அரசு தீர்மானிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இனி, இதே குரலில் இன்னொரு கருத்தையும் இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைக் கூட்டணிக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். தமிழீழ விடுதலைக் கூட்டணி இவ்விடுதலைப் புலிகளின் கடந்தகால வன்முறைச் செயலுக்கும் தனக்கும் தொடர்பில்லாத தன்மையைப் பலவகையான சூழல்களில், பல்வகையான நேரங்களில், குறிப்பாக அதன் உறுப்பினர்களின் பாராளுமன்றப் பேச்சுகளில், வெளிப்படையாகக் கூறியிருக்கின்றது. அக்கூற்று உண்மையாகவோ பொய்யாகவோ இருந்தாலும், இவ்விடுதலை வீரர்கள் பிடிபட்டவுடன், அது தன் பொதுவான கண்டனத்தை உடனடி அறிக்கை ஒன்றின் வழியாகத் தெரிவித்திருக்க வேண்டும். அதில், இவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவதைப்பற்றித் தங்களின் இயல்பான அச்சத்தை இந்திய அரசுக்கு வெளிப்படுத்தியிருக்க வேண்டுவதுடன், அவர்கள் தொடர்பான நிலைகளில் இலங்கை அரசு, எவ்வாறு கண்ணியத்துடனும், மாந்த நேயத்துடனும் நயன்மை உணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் விளக்கப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கெல்லாம் மாறாகவும், எவரும் சற்றும் எதிர்பார்க்காத வகையிலும், இவர்கள் பிடிபட்டதற்கு அது, மகிழ்ச்சியடைவதாகப் பிறர் கருதும் வகையில் செய்தி வந்தது மிகவும் இழிவானதும் கண்டிக்கத் தக்கதும் ஆகும். (See, Indian Express, Madras Dt. 24-5-'82) மண் குதிரைத் தனமான அதன் இனமானமற்ற இந்நடவடிக்கை, எதிர்கால விடுதலை வரலாற்றில் ஈடுபட முனையும் வீரர்களுக்குப் பெருத்த அச்சமும் நம்பிக்கையின்மையும் ஊட்டுவதாகும்.



தெருவில் மற்ற வீட்டுக் குழந்தைகளால் அடிவாங்கி அழுது கொண்டுள்ள குழந்தையை மேலும் ஈவு இரக்க மற்று அடிக்கும் அல்லது கண்டு சிரிக்கும் மாற்றாந் தாயின் கொடுமையான செயலைப் போன்றது அதன் தன்மை!

இனி, இறுதியாகத் தமிழகத்தை ஈடேற்ற எண்ணங் கொண்டு, தம் வாணாளை ஒப்படைக்க விரும்பும் தன்மானமும் வீரமும் ஈகவுள்ளமும் கொண்ட நல்ல முழுப் பிறவித் தமிழ் இளைஞர் குமுகாயத்திற்கு ஒரு சொல்: 'புலி வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் கட்டுச் சோற்று மூட்டைக்காகச் சண்டையிட்டுக் கொண்டு மாண்டு மடிந்தது போல்' நம் இன முன்னேற்ற முயற்சி முடிந்து விடக்கூடாது. பொன்னுக்காகவும் பெண்ணுக்காகவும் போராடிச் செத்த அரச வரலாறுகள் பல உண்டு. அதே போல் மண்ணுக்காக மாய்ந்த அரசுகளும் பல. ஆனால் நாம் வெறும் மண்ணுக்காக மட்டும் போராடவில்லை. மண்ணே இல்லாத நிலையில் வாழ்வுரிமைக்கே நாம் போராட வேண்டியுள்ளது. இந்நிலையில் ஒற்றுமைதான் மிக முகாமையாக நமக்குத் தேவை. அதற்காக நாம் சிறிது காலத்திற்கு வேறு எந்தத் தேவையையும் இழந்து விடலாம். **கொள்கைகள்** கூடத் தேவையில்லை. **ஒரே கொள்கை** போதும். **அது தமிழினம், தான் இழந்த உரிமையை மீட்க ஒன்றுபடுவதே!** அதற்குத் தடையாக இருக்கும்படி, அது தன்னை வேறுபடுத்திக் கொண்டிருக்கும் அரசியல் பொருளியல், மதம், சாதி, கட்சி முதலிய அத்தனை நிலைகளினின்றும் தன்னை மீட்டுக் கொண்டாக வேண்டும். **அவற்றினின்று மீளாதவரை அது தன்னைத் தானாக அழித்துக் கொள்ளும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டா.** இந்த உண்மையையே அண்மைக்கால நிகழ்ச்சிகள் நமக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன என்பதை இனியேனும் நாம் ஆழமாக எண்ணிப்பார்க்க வேண்டும்! இந்நிலையில் வீணாக நம்முள் பூசல்களை வளர்ப்பவர்களைத் தூசாக எண்ணப் பழகிக் கொள்ளுங்கள்! வாழ்க கொள்கை மறவர்கள்! ஒழிக அவர்தம் பூசல்கள்!

—**தென்மொழி சு:18, ஓ.10 (மே, சூன்-'83)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 8. தமிழீழப் போராளிகள் சென்னையில் சிறை-1 (1982)

## தமிழகத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அவல வாழ்க்கை!

**அறமன்ற நடவடிக்கையில் காலத் தாழ்த்தம் ஏன்?**

**அவர்களின் பிணையல் கட்டுப்பாட்டைத் தளர்த்துக!**

**அவர்களின் வழக்குகளைத் தள்ளுபடி செய்து அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குக!**

கடந்த 19-5-82-ஆம் நாளன்று சென்னையில் நடந்த ஒரு சச்சரவில் பிடிபட்டு சில மாதங்கள் சிறையில் இருந்து கடந்த 6-8-82 அன்று பிணையலில் விடுவிக்கப்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளான பிரபாகரன் என்ற கரிகாலன், சிவகுமார் என்ற இராகவன் உமாமகேசுவரன் என்ற முகுந்தன், சோதீசுவரன் என்ற கண்ணன், சிவனேசுவரன் என்ற நிரஞ்சன், முறையே மதுரையிலும், புதுக்கோட்டையிலும், சென்னையிலும், வேலூரிலும் (வ. ஆ.) திருச்சியிலுமாக இருந்து வருவது அனைவரும் அறிந்ததே.

அவர்கள் மேல் அரசு தனித் தனியான வழக்குகளைப் போட்டுள்ளது. அவர்கள் இதுவரை மூன்று





நான்கு முறை வழக்கு மன்றத்துக்கு அழைத்து வரப்படுவதும் பிறகு வழக்கு தள்ளி வைக்கப்படுவதுமாக, பிணையல் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறார்கள்.

அவர்கள், ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட ஊர்களிலேயே அதுவும் அவ்வந்நகர்களிலேயே குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் நடவடிக்கைகளையும் பகலில் ஆறு காவலர்களும் இரவில் ஆறு காவலர்களும் தீவிரமாகக் கண்காணித்து, அவ்வப்பொழுது மாநில அரசுக்கும் நடுவண் அரசுக்கும், காவல் துறைக்கும் அறிக்கை கொடுத்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான முறையில் கண்காணிக்கப்படாமல், காவலர்களின் மன நிலைக்கும், நடைமுறைகளுக்கும் ஏற்ப, கடுமையாகவும், கட்டுப்பாடாகவும் நடத்தப்படுவதாகத் தெரிய வருகிறது.

பிணையல் முறைப்படி, விடுதலைப் புலிகளுக்குப் பாதுகாவலாகக் காவலர்கள், அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்பது நெறி. ஆனால், காவலர்கள் அவர்களை அளவுக்கு மீறிக் கட்டுப்பாடு செய்வதாகவும், அவர்களின் அன்றாட வாழ்வு நடைமுறைகளில் குறுக்கீடு செய்வதாகவும் தெரிகிறது. ஒரிரு இளைஞர்களிடம் மிகவும் கடுமையாகவும் காவலர்கள் நடந்து கொள்வதாகத் தெரிந்து மிகவும் வருந்துகிறோம்.

அவர்கள், நம்நாட்டு அரசியல் சட்டப்படி, குமுகாயக் குற்றவாளிகள் அல்லர்; அரசியல் குற்றவாளிகளாக மதிக்கப்பட வேண்டியவர்கள். இன்னுஞ்சொன்னால் அவர்கள் ஒரு நாட்டின் விடுதலை மறவர்கள். ஊதியங் கருதும் அரசியல்காரர்களை விட, நிலையான நாட்டு விடுதலைக்குப் போராடும் வீரர்கள்; தங்கள் வாழ்

வையே மக்களின், நாட்டின் நலன்களுக்காக ஒப்படைத்துக் கொண்டு, உயிர்ப் போராட்டம் நடத்தும் அப்பழுக்கற்ற ஈகிகள் (தியாகிகள்)!

ஒரு காவலர் கைளில் ஒருவர், ஏதோ ஒருவகையில் ஒப்படைக்கப்பட்டு விட்டால் அவர் எவ்வளவு பெரிய அறிஞராயினும், தகுதி வாய்ந்தவராயினும், தலைவராயினும், அவரை ஏதோ ஒரு குற்றவாளியைப் போலவும், கொள்ளையரைப் போலவும், கொலையாளியை போலவும் எண்ணிக் காவலர்கள் நடந்து கொள்வது முறையன்று, அறமும் அன்று! ஒரு கடுங்குற்றவாளியும் மாந்த நேயத்துடனும் நடத்தப் பெற வேண்டிய, அறிவியல் உரிமையியல் வளர்ச்சியுடைய இக்காலத்தில், ஒரு நாட்டுக் கொள்கைக்காகவும், உயர்ந்த உரிமை நோக்கத்திற்காகவும் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளைக் காவலர்கள் அன்பாகவும் மதிப்பாகவும் நடத்தும்படிக் கேட்டுக் கொள்கிறோம். பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அராபத்துக்கு, ஒரு குடியரசுத் தலைவரைப் போலும் வரவேற்பும், வாழ்த்தும், ஆதரவும், அன்பளிப்பும் கொடுக்கும் நம் தலைமையமைச்சரின் நடவடிக்கை அவருக்கு மட்டுமே சொந்தமானதன்று; அது தனிப்பட்ட ஒருவரின் செய்தியாகக் கருதப்பட வேண்டியதுமன்று. இந்த நாட்டில் உள்ள அனைத்து அதிகார நடைமுறைக்கும் எடுத்துக் காட்டாகக் கொள்ளவேண்டுவது.

விடுதலைப் புலிகள், அங்கங்குத் தனித் தனித் தங்கும் விடுதிகளிலேயே தங்கியுள்ளனர். அவர்கள் தங்கள் தங்கள் பொறுப்பிலேயே உணவு, உடை, உறையுள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். அரசுப் பொறுப்பில் அன்று. பிணையலில் வெளிவந்த நாளி



லிருந்து அவர்களைக் காவல் செய்யும் காவலர்களுக்கு ஆகும் செலவும் நூற்றில் ஒரு பங்கு தானும் அவர்களுக்காகச் செலவிடப்படுவதில்லை. இவ்வாறிருக்க அவர்கள் தங்குமிடங்களுக்குக் காவலர்கள் ஒரு நாளைக்கு ஐந்தாறு முறை போய் வருவதும், சிலர் அவர்களின் அறைக்கு முன்பாகவே படுக்கை போட்டுக் கண்காணிப்பதும், அவர்கள் உணவுக் கடைக்குச் சென்றாலும், நூலகத்திற்குச் சென்றாலும், கடைத் தெருவிற்குச் சென்றாலும் கூடவே போவதும் வருவதும் தேவையற்ற செயல்களாகவே படுகின்றன. புலிகள் ஒரிருவரைப் பார்க்க, அவர்கள் தங்கியிருக்கும் அறைக்கு வரும் அன்பர்களை மடக்கிப் பலவாறு மிரட்டும் போக்கில் உசாவுவதும், தடுப்பதும், சிலரிடம் அவர்கள் தனிப்பட்ட முறையில் உரையாடுகையில் அருகில் இருந்து அதைக் கேட்பதும், அதற்குத் தடையாயிருப்பதும் விரும்பத் தகுந்த, ஒப்புக் கொள்ளத் தகுந்த செயல்களல்ல. காவல் செய்வது வேறு; கண்காணிப்பது வேறு; இப்பொழுதைய நிலையில் புலிகள் காவல் செய்யப் படவில்லை, கண்காணிக்கப்படுகிறார்கள். இது அவர்களையும் அவர்கள் தாங்கிய கொள்கையினையும், இயக்கங்களையும் அவமதிப்பதும், இழிவுபடுத்துவதும் ஆகும்.

காவலர்கள் சிலர் புலிகள் தங்கும் விடுதிகளுக்குச் சென்று, அவ்விடுதியாளர்களிடம் இவர்களைப் பற்றித் தாறுமாறாக உருவகப்படுத்திச் சொல்வதாகவும், அவ்விடுதியாளர்கள், இவர்களை அங்குத் தங்க வேண்டாம் என்று கூறி, அறையை விட்டு இவர்களை வெளியேற்றியிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்நடைமுறை மிகவும் கொடுமையானது. அவர்களுக்குப் பாதுகாவலாக இருக்க வேண்டிய, அவ்வாறு இருக்கவே அமர்த்தப் பெற்ற இவர்களே, அவர்களுக்கு இடையூறு தருவார்களானால் அவர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கள் எங்குப் போவார்கள்? அவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டியர்கள் அல்லரே! முன்பே, அறிந்தோ, அறியாமலோ, இந்நாட்டுச் செய்தித் தாள்களின் முரண்பட்ட செய்திகளால், அவர்களைப் பொதுமக்கள், கொடுமையாளர்களாகவும், கொள்ளையர்களாகவும், வன்முறையாளர்களாகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது காவலர்களும் அவர்கள் தங்குமிடங்களில் உள்ளவர்களுக்கு அவர்களைப் பற்றித் தவறாக உருவகப்படுத்திக் கூறினால், அதனால் அவர்கள் விரட்டியடிக்கப்படுவதானால், அவர்கள் தங்குவது எங்கு? தெருத் தெருவாக அலைய வேண்டியதும், நடை பாதைகளிலும், பூங்காக்களிலும் படுத்துறங்க வேண்டியதுந்தாமே! இந்நிலை நம் காவல் துறைக்குப் பெருமை தரக்கூடியது ஆகுமா? தொடர்புள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இனி, அவர்கள் மேல் அரசு தொடுத்திருக்கும் வழக்குகளை நீட்டித்துக் கொண்டு போவதும் அவ்வளவு விரும்பத் தக்கதன்று. அவ்வாறு வழக்கு மன்ற நடவடிக்கைகள் நம்நாட்டு இயல்பான முறைப்படி, நீளத்தான் செய்யும் என்றால், அவர்களை எத்தனை நாட்களுக்குத் தான் இப்படி அலைய விடுவது? அல்லல்பட வைப்பது? அவல வாழ்க்கைக்கு உட்படுத்துவது? அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்! அப்படிப்பட்ட ஒரு நிலையில் அவர்களின் பிணையல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலாமே!

குறிப்பிட்ட நகரில்தான் அவர்கள் தங்கியிருக்க வேண்டும் என்பதும், ஒரு குமுகாயக் குற்றவாளியைப் போல், ஒவ்வொரு நாள் மாலையிலும் ஒரு குறிப்பிட்ட காவல் நிலையத்திற்குப்போய் அவர்கள் கையெழுத்திட்டு வரவேண்டும் என்பதும், சேர்ந்து இயங்கிய அவர்



களைத் தனித் தனியாகப் பிரித்து வைத்திருப்பதும், அவர்கள் மன நிலையிலும், கொள்கை நிலையிலும் தளர்ச்சி ஏற்படும்படி செய்வதும் அவ்வளவு சிறந்த நடத்து முறைகள் அல்ல. அவர்கள் வெளியே, தனித் தனியாகத் தங்கியிருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் செலவு அவர்கள் நிலைக்கு மிக அதிகமான சுமை தருவதாகும். இப்படித் துன்பமும், தொல்லையும், பணத் தேவைகளையும் அவர்களுக்கு உண்டாக்கித் தருவது, நம் அரசினர்க்கு நல்லதன்று; பெருமை தருவதுமன்று.

எனவே, அவர்களின் வழக்குகளைத் தள்ளுபடி செய்வதற்கும், அவர்களை இந்தியக் குடிமக்களாக ஏற்றுக் கொள்வதற்கும், ஏதாவது, சட்டப்படி, அவ்வாறில்லையானால், மாந்தநேய உறவுப்படி, வழிவகை இருக்கிறதா என்று பார்க்கும்படி, மாநில, நடுவண் அரசுகளைக் கேட்டுக் கொள்கிறோம். அப்படிப்பட்ட இறுதியான ஒரு நடவடிக்கைக்கு, இன்னும் நேரம் வாய்க்கவில்லை என்று அரசு கருதினால், அவர்களின் பிணையற்காலக் கட்டுப்பாடுகளையேனும் தளர்த்தல் செய்ய வேண்டும் என்று கோருகிறோம்.

இக்கால் குற்றப்படுத்தப்பட்டிருக்கும் ஐவரில் மூவர் அவர்களின் விடுதலையியக்க முறைப்படி ஒரு பிரிவினராகவும், இருவர் ஒரு பிரிவினராகவும் இயங்குபவராவர். அவர்களை அப்பிரிவின்படியே வேறு வேறு இடங்களில் ஒன்றாக இருக்கச் செய்வதில் தவறேதுமில்லை என்று கருதுகிறோம். மேலும் அவர்களின் வாழ்வியல் நடவடிக்கையிலெல்லாம் காவலர்கள் வீணாகத் தலையிட்டு அல்லது குறுக்கிட்டு அவர்களுக்குத் தொல்லைதருவதிலும் நயமில்லை என எண்ணுகிறோம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இனி, இன்னொன்றையும் நம் அரசு கழிவிரக்கத்துடன் கவனிக்க வேண்டும். அவர்கள் பிணையலில் இருக்கும்பொழுது, (சிறைக்குள் அவர்களுக்கான உணவு, உறையுள் செலவை அரசு செய்தது போல்) வெளியில் அவர்களுக்காகும் உணவு, உறையுள் செலவை அரசு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்விடத்தில் அவர்கள் அயல்நாட்டினர் என்பதையும், அவர்களுக்கு இங்கு எந்த வகையான வாழ்க்கைக் கூறுகளும்இல்லை என்பதையும் மறந்து விடக்கூடாது.

இந்நிலைகளைப் பற்றியெல்லாம் மாநில, நடுவண் அரசுகள், தொடர்புள்ள அதிகாரிகள், முறையாகச் சிந்தித்து, அவர்கள் சார்பில், மிகுந்த பரிவுடனும், கண்ணியத்துடனும், அதே பொழுதில், அவர்களுக்கு இழுக்கு ஏற்படா வகையிலும் பெருமை குன்றா நிலையிலும், நடுநிலை உணர்வுடனும், மாந்த நேய உறவுடனும், உலக உரிமைப் பொது நோக்குடனும், நடந்து கொள்ள வேண்டும் என்று உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பாகவும், அவர்கள்பால் அன்புகூறும் தமிழக மக்கள், தலைவர்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறோம்.

—தமிழ்நிலம், இதழ் எண் : 8, (26-12-1982)

# 9. தமிழீழப் போராளிகள் சென்னையில் சிறை-2 (1982)

## முகுந்தன், சோதீசுவரன் ,நிரஞ்சன் மூவரும் மீண்டும் சிறைப்படுத்தப்பட்டனர்!

### பிரபா. இராகவன் தப்பிச் சென்றதன் விளைவு! தமிழக அரசின் தாறுமாறான நடவடிக்கை!

சென்னையில் சென்ற ஆண்டு மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளான முகுந்தன் என்னும் உமாமகேசுவரன், கரிகாலன் என்னும் பிரபாகரன், சோதீசுவரன், இராகவன், நிரஞ்சன் ஆகியோர் தங்களுக்குள் போராட்டம் நிகழ்த்திச் சிறைப்பட்டதும், அவர்கள் மேல் அரசு பல்வேறு குற்றங்களுக்காக வழக்கு நடத்தி வருவதும், அதற்கிடையில் அவர்கள் அனைவரும் பிணையலில் விடுதலையாகி, சென்னையிலும் மதுரையிலும் இருந்து வந்ததும் அன்பர்கள் அறிவார்கள்.

இந்த நிலையில் கடந்த ஏப்பிரல் மாதம் 19-ஆம் நாளிலிருந்து மதுரையில் தங்கியிருந்து கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் அவருடைய நண்பர் இராகவனும் தலைமறைவாகி விட்டனர். ஒருவேளை அவர்கள் இலங்கைக்கே தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் அல்லது வடஇந்திய மாநிலங்களுக்கோ, போலி எல்லைக் கடவுடன் (Pass

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

port) இலண்டன், மேற்கு செருமனி, பிரான்சு போன்ற நாடுகளுக்கோ சென்றிருக்கலாம் என்றும் பலவாறு காவல்துறையினர் கருதுகின்றனர்.

பிரபாகரனும், இராகவனும் தலைமறைவாகவோ அல்லது தப்பியோ சென்று விட்டாலும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் உமாமகேசுவரன் என்னும் முகுந்தனும், அவருடைய கூட்டாளர்களாகிய சோதீசுவரன், நிரஞ்சன் ஆகியோரும், தங்களுக்கு வழக்கு மன்றம் வழங்கிய கட்டளைப்படி, சென்னையிலேயே தங்கியிருந்து, ஒவ்வொரு நாள் மாலையிலும் குறிப்பிட்ட காவல் நிலையத்தில் கையெழுத்திடுவதும், வழக்கு நாள்களில் வழக்கு மன்றத்திற்குச் சென்று வருவதுமாக இருந்தனர்.

ஆனால், இவர்களும் இம்மாதம் 3-ஆம் பக்கல் எதிர்பாராத வகையில், தமிழகக் காவல் துறையதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், வழக்கு மன்றத்தால் மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இந்த நடவடிக்கை திகைப்பூட்டுவதாகவும், வியப்பளிப்பதாகவும் இருக்கிறது. இதிலிருந்து தமிழக அரசுக்கோ அல்லது காவல்துறைக்கோ இவர்களைப் பற்றிய செய்தியில் ஒரு திட்டவட்டமான கருத்தில்லை என்று தெரிகிறது.

முதலில் மாநில அரசோ, நடுவண் அரசோ, தமிழீழப் போராட்டக் கொள்கையாளர்களாகிய இவர்களை ஒரு மதிப்பான தகுதியுடன் கருதவில்லையென்று அவர்களின் பல்வேறு நடவடிக்கைகளின்வழித் தெரிய வருகிறது. அடிமை நிலையிலிருந்து மக்கள் உரிமைப் போராட்டத்தின் வழி, விடுதலை பெற்றுக் குடியரசு



அமைப்பையுடைய இந்திய அரசு, வேறு நாடுகளின் மக்கள் உரிமைப் போராட்ட முயற்சிகளை முதலில் மதிக்கவும், தேவையானால் அவற்றுக்குத் துணை நிற்கவும் வேண்டும். அந்த வகையில்தான் இந்த அரசும் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் கடந்த காலத்தில் வங்காள தேசப் போராட்டத்திற்கும் இக்கால் பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கும் ஆதரவும் அரவணைப்பும் உதவியும் காட்டி வந்த தன்மையை நாம் மதித்துப் பாராட்டி வந்திருக்கிறோம். ஆனால் ஏனோ தெரிவில்லை, அந்த நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தந்த இந்திய அரசு, இலங்கையில் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் போராடும் தமிழர்களையும் அவர்களின் போராட்ட முயற்சிகளையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இனி, நடுவணரசுதான் இவர்கள் வகையில் ஒரு புறக்கணிப்போடு நடந்து கொள்ளுகிறதென்றால், நம் தமிழ் நாட்டரசும் ஒரு மாற்றாந் தாய் மனப்பான்மையுடனேயே தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களையும் அவ்வியக்கங்களில் தங்கள் உயிரையும் தூசாக மதித்துப் போராடிவரும் இளைஞர்களையும் கருதுவது நமக்குப் பெரும் வருத்தமாக உள்ளது.

இப்பொழுது, பிணையலில் இருந்துவரும் முகுந்தன் சோதீசுவரன், நிரஞ்சன் ஆகியோரை மீண்டும் சிறைப் படுத்தியிருப்பதும், அதற்குக் காவல் துறையினர் காட்டியிருக்கும் காரணங்களும் நாம் கூறுவதை உறுதி செய்வனவாகவே உள்ளன. காவல்துறை கூறும் காரணங்கள் வருமாறு:

1. விடுதலைப் புலிகளாகிய பிரபாகரனும் இராகவனும் தப்பியோடியதைப் போன்றே, முகுந்தன் முதலி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யோரும் தப்பியோடி விடலாம். ஏனெனில் தப்பியோடிய பிரபாகரன், இராகவன் இவர்களுடன் முகுந்தன் குழுவினர் தாங்கள் கொண்ட வேற்றுமையை மறந்து, தொடர்பு வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

2. முகுந்தன் குழுவினர் சென்னையில் உள்ள இருவரிடம், தங்கள் துமுக்கி முதலிய கருவிகளைப் புதுப்பிக்கவும் விலைக்கு வாங்கவும் செய்தனர்,

3. சென்னையில் உள்ள அயலகப் போக்குவரத்து முகவர் ஒருவரின் வழியாகப் போலி எல்லைக் கடவுகளை (Pass port) வாங்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

6. இராமேசுவரத்தில் உள்ள ஒருவரிடம் கள்ளத் தோணிக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இம்முயற்சிகளால் இவர்களும் பிரபாகரன், இராகவன் ஆகியோரைப் போல் தப்பி விடுவார்கள் என்று கருதுவதால், இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணையலைத் தவிர்த்து இவர்களைச் சிறைப் பாதுகாப்பில் வைத்திருக்கும்படி காவல் துறை வழக்கு மன்றத்தைக் கேட்டுக் கொண்டதன் விளைவாக இவர்கள் சிறைப் படுத்தப்பட்டுள்ளார்கள்.

காவல் துறையின் கருத்துகள் அவ்வளவு தெளிவான கருத்துகளாக இல்லையென்று மேலோட்டமாகப் பார்த்தாலே நன்கு விளங்கும். முதலில் காவல் துறையினர், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை, குற்றம் மெய்ப்பிக்கப்படுவதற்குள், குற்றவாளியாகவே கருதி விடுகின்ற மனப்பான்மையைக் கைவிட்டுவிடவேண்டும். மேலும் இவர்கள் ஐயப்படுபவர்களையெல்லாம் பிடித்து உள்ளே வைக்கவேண்டுமானால் பிணையல், பொறுப்பு (Bail) என்பதெல்லாம் தேவையே இல்லை. குற்றஞ்சாட்டப்



பட்டவர்கள் தேவையான, தகுந்த பொறுப்பின்-பிணையலின்—அடிப்படையில் தானே வெளியில் உள்ளார்கள். அதுவும் வழக்கு மன்ற முறை வகுப்புப்படி ஒவ்வொரு நாளும் மாலையில் காவல்துறை அதிகாரிகளின் முன் தவறாமல் கையெழுத்திடுகின்றவர்களைக் காவல்துறை ஐயுறுவதும், அதற்காக அரசு அவர்களைப் பிடித்து உள்ளே வைப்பதும் சரியானால், காவல்துறைதான் எதற்கு? சட்டநெறி முறைகள், விலக்கீடுகள்தாம் எதற்கு? ஐயுறுகின்றவர்கள் அனைவரையும் உள்ளே வைத்து விடலாமே! (ஆனால் இப்பொழுது அப்படித் தான் அரசு நடந்து வருகிறது என்பது வேறு செய்தி.)

இனி, பிரபாகனும் இராகவனும் தப்பியோடி விட்டார்கள் என்பதற்காக முகுந்தன் குழுவினரும் தப்பியோடி விடுவார்கள் என்பது தேவையற்ற பொருளற்ற கருத்தாகும்; அடிப்படையிலேயே இவர்கள் வேறு வேறு குழுவினர். அந்தக் கொள்கை வேறுபாட்டினாலேயே, இவர்களுக்குள் பூசல் ஏற்பட்டுப் பிடிபட்டுள்ளனர். வேறு வேறு கொள்கைப் போக்குள்ளவர்கள் தப்பியோடுவதில் மட்டும் ஒத்து இயங்குவார்கள் என்று கணிப்பது விடுதலைப் போராட்ட வீரர்களின் உயர்ந்த கொள்கை உணர்வையே அவமதிப்பதாகும். அவர்களைத் திருட்டு, கொலை, கொள்ளை முதலிய குமுகாயக் குற்றவாளிகளின் மனப்பான்மையுடன் அணுகுவது, விடுதலை வரலாற்றை இழிவுபடுத்துவதாகும். காவல் துறையினர்க்குக் குற்றவாளிகளை மதிப்பிடுவது போல் குற்றங்களையும் வேறுபடுத்தி உணரத் தெரிந்திருக்கவேண்டும்.

இனி, முகுந்தன் குழுவினரும் பிரபாகரன் குழுவினரைப் போல் தப்பிவிட எண்ணியிருந்தால் இப்படி இரண்டு பிரிவாகவா தப்பியோடத் திட்டமிட்டிருப்ப.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஒரே நாளிலேயே அனைவருமே தப்பியிருப்பார்களே! இந்த எளிய மனவியல் உண்மை கூடவா விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தெரிந்திருக்காது? ஒரு குழு தப்பினால் இன்னொரு குழுவையும் பிடிக்கும் அளவுக்குத் தானே நம் காவல்துறை தவறாகச் செயல்படும் என்பது அவர்களுக்கு விளங்கியிருக்காதா?

அடுத்து, இவர்கள்தாம் எல்லைக்கடவு எடுத்துக் கொண்டு இந்த நாட்டுக்கு வரவில்லையே. பின் போவதற்கு மட்டும் எதற்கு எல்லைக்கடவு இவர்களுக்கு? கள்ளப்படகே போதாதா? இனி, எல்லைக் கடவு முயற்சி நடந்ததென்றால் கள்ளப்படகை எதற்கு இவர்கள் அமர்த்த வேண்டும்? இரண்டில் ஒன்று தானே உண்மையாக இருக்க முடியும்? இரண்டு முயற்சிகளையும் இவ்வளவு வெளிப்படையாகச் செய்ய இவர்கள் என்ன ஒன்று மறியாதவர்களா? விடுதலைப் போராட்ட முயற்சியுடையவர்களுக்கு, ஒரு திருடனுக்கிருக்கும் தந்திர அறிவு கூடவா இருக்காது? காவல் துறையினர் நன்றாகச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

மேலும், இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக வழக்கு மன்ற நடவடிக்கையில் ஈடுபட விருப்பதால் இன்னும் இதுபற்றி விரிவாக ஆராயவோ கருத்துக் கூறவோ நாம் விரும்பவில்லை. ஆனால், **மொத்தத்தில், முகுந்தன் முதலியோரை மீண்டும் சிறைப்படுத்தியிருப்பது தேவையற்ற ஒரு நடவடிக்கையாகும்.** இன்னுஞ்சொன்னால் மக்கள் உரிமைக்காகப் போராடும் ஒரு விடுதலை இயக்கத்தின் நடவடிக்கைகள் அனைத்துமே சட்ட அடிப்படையில் குற்றங்களாகத்தாம் இருக்கும். **ஆனால், அந்தக் குற்றங்களை அலசி ஆராயும் வேலையோ அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டிய கடமையோ இங்குள்ள காவலர்களுடைய, அரசுடைய பணிகள் அல்ல.** அவை, தொடர்புடைய நாட்டுக்கும் அரசுக்கும் சொந்தமான பணிகளாகும். வீணாக நம்அரசினரும், காவல்துறையும் இந்த வகையில் இவர்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுடன், போதுமான பிணையலும் பொறுப்பும் உள்ள பொழுது இவர்கள் வழக்குமன்றக் கட்டுப்பாடுகளுடன் வெளியே இருக்குமாறு விடுதலை செய்வதே நேர்மையும், நமக்குள்ள அணுகுமுறையும், உண்மையான போராட்ட உரிமை உணர்வை மதிப்பதும் ஆகும் என்று கூறிக் கொள்ளவும் விரும்புகிறோம். எனவே முகுந்தன், சோதீசுவரன், நிரஞ்சன் ஆகிய மூவரையும் அரசு உடனே விடுதலை செய்து, தன் நல்லெண்ணத்தை உறுதிப்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்; நம்புகிறோம்!

—'தமிழ்நிலம்' இதழ் எண்: 24-25 (22-5-83)





FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 10. தமிழக அரசு இலங்கை அரசுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்புக!

இலங்கையில், 1956, 58, 61, 74, 79, 81-ஆகிய ஆண்டுகளில் நடந்த கொடுமையான தமிழின அழிப்புகளைத் தொடர்ந்து இந்த ஆண்டும், அரசியல் படுகொலைகள் மட்டுமீறித் தலை தூக்கியிருக்கின்றன. இத்தனை ஆண்டுகள் நடந்த கொடுமைகளுக்கும் இப்பொழுது நடக்கின்ற படுகொலைகளுக்கும் அடிப்படையில் ஒரு வேற்றுமை உண்டு.

கடந்த ஆண்டுகளில் தமிழர்களையும் அவர்களின் குடியிருப்புகளையும் சிங்கள வெறியர்களும், காவல் துறை, படைத் துறைகளைச் சேர்ந்த கொடியவர்கள் சிலரும் தங்கள் விருப்பப்படி அழித்தார்கள்; தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆனால் இப்பொழுது நடக்கின்ற அழிம்புகள், கொலைகள், கொளுத்துதல் முதலிய நிகழ்ச்சிகளை அரசே திட்டமிட்டுச் செய்து வருகிறது.

இலங்கையில் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலையும், அதைத்தொடர்ந்து போடப்பட்ட இனவெழுச்சி ஒடுக்கல் முறைச் சட்டங்களும் அங்குள்ள காவல்துறையினரையும் ஊர்காவல் படையினரையும், முப்படை வீரர்களையும் வெறி கொள்ளச் செய்து கிளர்ச்சியுறச் செய்திருக்கின்றன என்றால் அதில் உண்மையில்லாமல் இல்லை; ஏற்கெனவே தமிழர்களிடம் வெறுப்புணர்வையும், காழ்ப்புணர்ச்சியையும் கொண்டுள்ள சிங்களவர்க்கும் அவர்



களைச் சார்ந்த படைத்துறையினர்க்கும் சிங்கள செயவர்த்தனே அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ள "யாரையும் சுடலாம்; கொல்லலாம்; புதைக்கலாம்; இதற்கு வழக்குமில்லை, தீர்ப்புமில்லை" என்னும் அடக்குமுறைச் சட்டங்கள் எரிகின்ற கொள்ளியில் எண்ணெய் வார்த்துள்ளது போன்று அழிப்பு உணர்ச்சிகளைத் தூண்டி விட்டுள்ளன.

நாள்தோறும் அங்குள்ள கிழக்கு, வடக்கு மாவட்டங்களில் உள்ள தமிழர்கள் படைத்துறையினராலும், சிங்களவர்களாலும் எவ்வகைத் தங்கு தடையுமின்றிப் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள் என்னும் செய்திகள் நம் நெஞ்சை உருக்குவனவாயுள்ளன. இளைஞர்கள் ஈவு இரக்கமின்றி அழிக்கப்படுகிறார்கள்; பெண்டிர்கள் கொடுமையாகக் கற்பழித்துக் கொல்லப்படுகிறார்கள்; தமிழர் குடியிருப்புகள் தீவைத்துக் கொளுத்தப்படுகின்றன. இவை நாள்தோறும் நடக்கின்றன.

இந்நிலையில் அங்குள்ள தமிழர்கள் தங்கள் உயிருக்கு ஒருவகைப் பாதுகாப்பும் இன்றி அன்றாடம் தம் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு வாழும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இக் கொடுமைகளைக் கேட்கவும் தடுத்து நிறுத்தவும் இதுவரையில், தமிழக அரசோ, இந்திய அரசோ எந்த வகையான ஒரு சிறு முயற்சியும் எடுக்கவில்லை. வாயளவில்கூட ஒரு கண்டனம் தெரிவிக்கவில்லை. இந்நிலை அவ்வரசுக்கு மிக ஆக்கமாகவும் ஊக்கமாகவும், அமைந்துவிட்டது. மாறாக இங்குச் சிறைப்படுத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகள்மேல் எடுக்கப்பட்டுள்ள வழக்கு மன்ற நடவடிக்கைகளும், அவர்களைச் சிங்கள அரசிடம் ஒப்படைப்பதற்குத் தில்லியரசு எண்ணி வருவதாகக் கூறப்படும் செய்திகளும்,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வேறு, செயவர்த்தனே அரசு செய்யும் இவ்வினப் படுகொலைகளுக்குத் தூண்டுகோல்களாய் அமைந்துள்ளன.

எனவே, தமிழக அரசு, தமிழர்களின் உண்மையான அரசாக இருக்குமானால், உடனே சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி வேறுபாடற்ற அறிஞர்கள், தலைவர்கள் ஐம்பது பேரைக் கொண்ட தூதுக்குழுவைச் செயவர்த்தனேவிடம் இப்படுகொலைகளுக்குக் க மையான கண்டனத்தையும், தடுப்பு முயற்சிகளையும் செய்யுமாறு, அனுப்பி வைக்க வேண்டும். இதை உடனடியாகச் சிறிதும் காலந்தாழ்த்தாமல் செய்ய வேண்டும். தில்லியின் பரிந்துரைக்குக் காத்திராமல், தமிழக அரசும் முதலமைச்சர் இராமச்சந்திரனும் நேரடி அக்கறை கொண்டு இத் தூதுக்குழுவை அனுப்ப முன் வருவார்களா? முதலமைச்சர் அவரின் தமிழினப் பற்றை இக்கால் உறுதிப்படுத்திக் கொள்ளுவார் என்று நம்புகிறோம்; எதிர்பார்க்கிறோம்.

—தமிழ்நிலம் : இதழ் எண் : 21 (12-7-1983)

# 11. நெஞ்சம் பதறுகிறது!

**களப்பிரர் ஆட்சிக்காலத்தில்கூட, தமிழினத்திற்கு இவ்வளவு அழிவு நேர்ந்ததில்லை!**
**இலங்கையில் எழுச்சி பெற்ற தமிழர்களை-**
**தலைவர்களை அழிக்கிறார்களே சிங்களவர்கள்!**

(இதழ் பறிமுதல் செய்யக் காரணமான கருத்துகள் தவிர்க்கப்பட்டன)

**தமிழ்நாட்டு மக்களே சிந்தியுங்கள்!**

(இதழ் பறிமுதல் செய்யக் காரணமான கருத்துகள் தவிர்க்கப்பட்டன)

பாராண்ட தமிழினம் இன்று இலங்கையில் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறது. உலக மக்களெல்லாம் பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டேயிருக்க தமிழினம் அடியோடு அழிக்கப்படுகிறது. சிங்கள வெறியர்கள் தமிழின விடிவுக்காகக் குரல் கொடுத்த தலைவர்களையெல்லாம் பூண்டோடு அழித்துக் கொண்டிருக்கிறார்கள். நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது! தமிழின வரலாற்றில் அரத்தக்கறை படிந்த இருண்ட காலங்கள் பலவுண்டு. ஆனால் அவை எழுத்திலே படித்தவை. எண்ணத்திலே செரித்தவை. ஆனால் இன்று, நம் கண்களின் முன்னால் இலங்கைத் தமிழினம் ஒட்டுமொத்தமாகக் கட்டழிக்கப்படுகிறது. ஆலமரமெனப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பரந்து வாழ்கின்ற தன் ஆணிவேர்கள் வெட்டப்படுகின்றன. கையற்ற நிலையில் இன்று தமிழன் கண்ணீரும் கம்பலையுமாக கால்போன பக்கம் ஓடுகிறான்! கதறக் கதற உயிரோடு கொளுத்தப்படுகின்றான்! களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கூட, தமிழினத்திற்கு இவ்வளவு அழிவு நேர்ந்ததில்லை. இலங்கையில் எழுச்சி பெற்ற தமிழர்களை, தமிழர் தலைவர்களை, தலையரிகிறார்களே சிங்களக் கயவர்கள்! காட்டு விலங்காண்டிகள்! இட்லரின் மறுபதிப்பென எழுந்து நின்ற கொலையிற் கொடியவன் செயவர்த்தனன், தமிழின மக்களை ஓட ஓட விரட்டியழிக்கின்றானே! கூண்டோடு வைத்துக் கொளுத்துகின்றானே! இதை எங்கே போய்ச் சொல்வது? எவரிடம் போய் முறையிடுவது? உலகம் ஊமையாகி விட்டதே! உலக ஒன்றியப் பேரவைச் செயலிழந்து போய் விட்டதே!

உலகத் தமிழினத்தின் தாய் மண் என்று கருதப்படும் இத்தமிழகம் நெஞ்சம் பதறித் துடிக்கின்றதே! இந்திய அரசுக்கு மீளா அடிமைப்பட்டுக் கிடக்கும் நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே! அறிவியல் வளர்ச்சி பெற்ற கருவிகளை வைத்துக் கொண்டு, சிங்கள வேடர்கள் தமிழினத்தை விலங்குகளைச் சுடுவது போல் வேட்டையாடிச் சுட்டுக் கொல்கிறார்களே! ஐயகோ! தமிழன் வீரம், அறம், போர்முழக்கம் எல்லாம் செயலிழந்து கிடக்கின்றனவே! வெறும் ஏடுகளில் எழுதப் பெற்ற வரிகளாகிப் போய் விட்டனவே!

வங்காளத்தில் நடந்த கொடுமைகளை விட, அசாமில் நடக்கின்ற உயிரழிவுகளை விட, இன்று இலங்கைத் தமிழர்களுக்கு வந்த பேரழிவு, மக்களின் வரலாற்றில் பெரிய அரத்தக்கறையை உண்டாக்கி



விட்டதே! இனி, தமிழினத்தைக்காத்துக் கொள்ளவே முடியாதா? தமிழின வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் முயற்சி வெற்றி பெறவே முடியாதா?

வலிவுள்ள தலைவர்களெல்லாரும் வாயடைத்து கிடக்கிறார்களே! இந்திரா என்னும் இரக்கமற்ற ஓர் அரசியல் அரக்கப் பூதத்துக்கு அஞ்சி அலமருண்டு அடிமையாகிக் கிடக்கின்றார்களே! நமக்கென்று தட்டிக் கேட்க ஓர் அரசு இல்லையே! ஓர் அதிகாரம் இல்லையே! தேசியம் என்றும், ஒருமைப்பாடு என்றும் வாய்மதம் கொண்டு தகிடு தத்தம் பேசிய சோற்றுப் புழுக்கைகளெல்லாம் இன்று தில்லியின் கடைக்கண் பார்வைக்குக் காத்துக் கிடந்து சாகின்றனவே! அம்மவோ! இனித் தமிழினத்திற்கு விடிவே இல்லையா? இதற்கு ஏதாவது ஒரு முடிவு வர வேண்டாமா?

சாதிச்சேற்றிலும் சமயப் படுகுழியிலும் கிடந்து உழலும் தமிழினம் இனி ஒன்றுபட்டே ஆக வேண்டும்! அரசியல் புரட்டுகளையும், அகப் பகைகளையும் அறவே ஒழித்து விட்டு அனைவரும் ஒரு கூறாக நின்று உரிமைக்குப் பாடுபட வேண்டும். திரைப்பட மேக நோயாலும், பாலியல் தொழு நோயாலும் உள்ளம் அழுகி, உயிர் நாறிக் கொண்டுள்ள நம் தமிழின இளைஞர்களை மீட்டு நாட்டுரிமைப் பணிக்கு ஈடுபடுத்தியாக வேண்டும். சாதிகளை ஒழித்துச் சமயங்களை வேரறுத்து நம்மிடையில் இருந்து கொண்டுள்ள மோதல்களையும், கட்சி முட்டல்களையும் அறவே தவிர்த்துக் கொண்டாக வேண்டும்!

தமிழகத்தில் தொண்டர்களே இல்லை! அனைவருமே தலைவர்கள் என்று ஆளுக்கொரு கட்சி, நாளுக்கொரு கொள்கை என உலாவந்து கொண்டிருக்கும் வெற்று ஆரவார வாய்வீச்சு வீரர்களின் முகத்திலெல்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

லாம் காறி உமிழ்ந்துவிட்டுத் தமிழினம் ஒரு கட்டுக்குள் நின்று, தமிழினம் தன் இனவுரிமைப் போராட்டத்தை நடத்தியாக வேண்டும். நாட்டு விடுதலைக்குக் குரல் கொடுக்க வேண்டும்.

அழிந்தது போதும் தமிழினம்! இனி நாம், மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கும் நம் இனப் பகையின் அனைத்து முனைப்புகளையும் வெட்டி வீழ்த்தியாக வேண்டும். தமிழினம் இனி இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலேனும், ஒன்றுபட்டுத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளத் தவறுமானால், பழைய கிரேக்க, உரோமானிய வரலாற்றுப் பேரினங்களைப் போலும் அழிந்துபட்டுப் போவது உறுதி!

(இதழ் பறிமுதல் செய்யக் காரணமான கருத்துகள் தவிர்க்கப்பட்டன.)

உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்! உலக உருண்டையில் நமக்கென ஒரு நாடு சமைப்போம்! வாருங்கள்! வாருங்கள்!

—**தமிழ்நிலம் : இதழ் எண் :22** (14-8-'83)

# 12. எழுந்துள்ள தமிழின எழுச்சிக் குரல் தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்!

சூழ்நிலைகளால் நெருக்கி அழுத்தப்படாதவரை உரிமை உணர்வு எழாது. உரிமை உணர்வு எழாவிட்டால் கோரிக்கை பிறக்காது. கோரிக்கை இல்லாவிட்டால் தேவையானது கிடைக்காது. கோரிக்கை இரண்டு வகையானது: ஒன்று கருத்தளவாய் வேண்டுதல்; இரண்டு செயல் அளவாய் எழுச்சி பெற்றுப் போராடுதல். தொடர்ந்து போராடுதல் என்பது தொடர்ந்து அடக்கப் பெறுகையில் புரட்சியாக வெடிக்கும். அவ்வாறு வெடித்ததே இப்பொழுது உலகக் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கைத் தமிழீழப் போராட்டம்.

உலகெங்கும் பரவி வாழும் தமிழ்ப் பேரினம் கடந்த காலங்களில் இழந்த படிப்படியான பேரிழப்புகளுள், அது தனக்கென இருந்த நாட்டை இழந்தது தலையாய பேரிழப்பாகும். ஒரு காலத்தில் 'ஒரு மொழி வைத்து உலகாண்ட' இவ்வினத்திற்கு இவ்வுலகில் எந்த ஒரு நாடும் இப்பொழுது சொந்த நாடாக இல்லாமல், அவ்வின மக்கள் போய் வாழ்கின்ற எல்லா நாடுகளிலும் ஓர் அடிமை இனமாகவே வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, காலத்தால் ஏற்பட்ட ஒரு கொடுமையாகும். அந்நிலையினின்று மீளும் காலம் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. இதுவும் ஒரு காலத்தின் கட்டாயமே ஆகும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழீழப் போராட்டத்தால் தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட, ஏற்பட்டு வரும், ஏற்படப் போகும் அழிவுகள் மிகவும் கொடுமையானவையே! உலகில் வேறு எந்த இனத்திற்கும் இத்தகைய கொடுமைகள் நேர்ந்ததில்லை; வரலாற்றில் அழிந்தனவாகக் காணப்படும் பேரினங்கள் சில தன்னழிவாக ஏற்படுத்திக் கொண்ட நிலைகளையே பெரிதும் பார்க்கிறோம். ஆனால் தமிழின அழிவு பெரும் புறநிலைத் தாக்கங்களாலேயே ஏற்பட்டதை வரலாறு காட்டுகிறது. அதற்குப் பெருங்காரணமாக உள்ளது, தமிழினத்தில் எந்தக் காலகட்டத்திலும் இழந்த ஒற்றுமையை மீட்டுக் கொள்ளாத ஒரு நிலையே ஆகும்.

கெட்டதற்கோ நல்லதற்கோ தெரியவில்லை, தமிழீழப் படுகொலைகளால், உலகில் தமிழினம் எழுச்சி பெற்றுள்ளது. இன அழிவுகள் இன எழுச்சிகளை மீண்டும் உருவாக்கிக் கொடுக்கும் என்பது வரலாறு. அந்த வரலாறு திசைதிரும்பியிருக்கிறது. எழுந்துள்ள இந்த உணர்வு இளைஞர்களிடம் பரவி நிலைத்து நிற்க வேண்டும். அப்படி ஒரு வியப்பு நிகழுமானால் அடுத்த நூற்றாண்டுத் தொடக்கத்திற்குள்ளாக, தமிழினம், தான் இழந்து போன ஆட்சியுரிமையை இவ்வுலகில் எங்கேனும் ஒரு நிலப்பகுதியுள் அமைத்துக் கொள்வது கட்டாயம் உறுதியாகிவிடும்.

தாயும் சேயுமாக அருகருகில் இருந்து உள்ளுணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கென வாய்ப்பு ஏற்பட்டிருப்பது தமிழகத்திலும் தமிழீழத்திலுந்தான்! எனவே தான் இந்திய அரசு, இந்த உணர்வு நெருக்கத்தை வளர்க்க விரும்பாமல் இருக்கிறது. தமிழீழத் தோற்றம் எங்குத் தமிழ்நாட்டிலும் ஓர் ஆட்சி மாற்றத்தை உரு



வாக்கி விடுமோ என்று தில்லியரசு அஞ்சுகிறது. ஆனால் அந்த அச்சமே அதன் கீழ்மையான நடைமுறைக்கு வழி வகுத்து, நமக்கும் ஒரு விடிவைத் தேடித் தரப்போவதை உலகம் காணத்தான் போகிறது.

இலங்கையில் மட்டுமன்று; இந்தியாவிலும் தமிழர்களுக்கு இதே நிமைமைதான்! அடிப்படையில் சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அதுவே உரிமையாகி விடாது. செல்வர் வீட்டு நாய் சிற்றுண்டி சாப்பிடுகிறது; பால் குடிக்கிறது; படுக்கையில் தூங்குகிறது. ஏழை வீட்டு நாய் மலத்தைச் சாப்பிடுகிறது; சேற்றுத் தண்ணீரைக் குடிக்கிறது; குப்பைத் திரட்சியில் குழி பறித்துத் தூங்குகிறது. இந்தியத் தமிழர் அடிமை நிலையிலும், இலங்கைத் தமிழர் அடிமை நிலையிலும் இருக்கும் வேறுபாடுகள் இவைதாம்!

எனவே உலகத் தமிழினம் ஒட்டுமொத்தமாக உரிமை பெற்றாக வேண்டும். இல்லெனில் இன்று இலங்கையில் நடப்பது நாளை மலேசியாவில் நடக்கும்;சிங்கப்பூரில் நடக்கும்; இங்கிலாந்தில் நடக்கும், இந்தியாவிலும் நடக்கும்! அவ்வாறு நடக்குமானால், சேய்க்கு வந்த தீங்கைத் தாயால் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், தாய்க்குவரும் தீங்கைத் தடுத்த நிறுத்தச் சேயால் மட்டும் எப்படி முடியும்? ஆகவே, தமிழீழ அழிவைப் பொறுக்காமல் இன்று உலகமெங்கணும் எழுந்துள்ள எழுச்சிக்குரல், உடனே அடங்கிவிடாமல், தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்! அந்த ஒலி விரைவில் விடுதலைக் குரலாக மாறட்டும்! தமிழீழமோ தமிழ்நாடோ, அல்லது வேறெதுவோ உலகத் தமிழர்களுக்கென்று ஓர் உரிமை நாடாக மலரட்டும்! வாழ்க ஒற்றுமை! உரிமை!! விடுதலை! ! !

—தமிழ்நிலம் : இதழ் எண்: 22. (14-8-1983)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 13. இலங்கைக் கலவரம் தமிழகத்திலும் பற்றுவதற்கு முன், இந்திரா நடவடிக்கை எடுக்க வேண்டும்!

இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்து வரும், பொறுத்துக் கொள்ள முடியாத கொடுமைகளால் தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மனம் வெதும்பிப் போயிருக்கிறார்கள்.

இலங்கை செயவர்த்தனே அரசு அங்குள்ள சிங்களப் படைத் துறையினரையும், காவல்துறையினரையும் தூண்டிவிட்டுத் தமிழர்களை அறவே அழிக்கத்திட்டமிட்டுள்ளார் என்று தெரிகிறது. இவ்விரண்டு துறைகளுடனும் அங்குள்ள சிங்கள வெறியர்களும் சேர்ந்து கொண்டு தமிழர்கள்மேல் மும்முனைத் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்தக் கொடுமையைத் தட்டிக்கேட்கவோ தடுத்து நிறுத்தவோ, இங்குள்ள மாநில அரசுக்கோ, தில்லியரசுக்கோ விருப்பமோ அக்கறையோ இல்லையென்று தெரிகிறது. ஏனெனில் அவர்கள் இந்த வகையில் எந்த வகையான நடவடிக்கையும் இது வரையிலும் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு கண்டனக் குரலையும் கூட அவர்கள் எழுப்பவில்லை இது மிகவும் கொடுமையாக இருக்கிறது.



பக்கத்து வீட்டில் தீப்பற்றி எரியும்போது நம் வீட்டுக்கும் அஃது எளிதில் பற்றலாம் என்னும் அச்சம்கூட இல்லாமல், அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இருப்பது, தமிழினம் இலங்கையில் அழிபடுவதை இந்திய அரசு வரவேற்பதாகத் தெரிகிறது.

உலகெங்கிலும் பரவிவாழும் தமிழர்களுக்குத் தாயகமாக இருப்பது இத்தமிழ்நாடே! இங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் உடன் பிறப்புகளும் உறவினர்களுமே, உலகில் உள்ள நாற்பது நாடுகளினும் மேலாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் போய் வாழும் வட இந்தியர்களுக்குக் கடந்த காலங்களில் ஏதேனும் ஒரு சிறு தீங்கான நிகழ்ச்சி நடந்துள்ள போதெல்லாம் தில்லியரசு உடனுக்குடன் கண்டனம் தெரிவிப்பதும், தூதுவரையனுப்பி அந்நாட்டுத் தூதுவரைக் கலந்து பேசி, அவர்களுக்கு நேர்ந்த தீமைகளையும், கொடுமைகளையும் தீர்க்க முயற்சி செய்வதுமாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால், அண்டையில் உள்ள இங்கையில் நெடுங்காலமாக அங்கு வாழ்ந்து வரும் தமிழர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு நேர்ந்து வரும் உயிர்க்கொடுமைகளையும் அழிவுகளையும் பார்த்துக்கொண்டு, ஏனோ தெரியவில்லை பாராமுகமாகவே இருந்து வருகிறது. இது தமிழினத்துக்குத் தில்லியரசு செய்து வரும் கொடுமையும் இரண்டகமும் (துரோகமும்) வஞ்சனையும் ஆகும்.

இலங்கைத் தமிழர்கள் அழியும்போது இங்குள்ள தமிழர்கள் இஃது இலங்கையின் உள்நாட்டுச் சிக்கல்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

என்று வெறுமனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மாந்தநேயத்துடன் உள்ள எந்த ஓர் இனமும் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத இப்பொழுதைய ஈழத்தமிழர் நிலையை அவர்கள் உறவினமான தமிழினம் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பது நெடுநாளைக்கு இயலக்கூடிய செய்தியன்று. எவ்வாறேனும் ஓர்நாள் அடக்கி வைக்கப்பட்ட இவ்வுணர்வு கிளர்ச்சியுற்று வெடித்தே தீரும்!

இலங்கையில் உள்ள தமிழர்கள் தாக்கப்படுவதால், உணர்ச்சியூட்டப்பட்ட இங்குள்ள தாயகத் தமிழர்களும் அவர்களுடன் சேர்ந்து, அவர்களுக்காகப் போர்க் கொடி எடுக்கும்நிலை அண்மையில் வந்தாலும் வரலாம். அப்படி ஒரு நிலை வருமானால் தமிழ் நாடும் தீப்பிடித்து எரியவே செய்யும். அக்கால் இங்குள்ள வடநாட்டவர்களுக்கு எவ்வகையிலும் ஒரு சேதமான நிலையே உருவாகும். அவர்களைக் காப்பாற்றுவது அப்போது அரிதாகவும் போகும்.

எனவே அந்தநிலையொன்று வெடித்துச் சிதறுவதற்கு முன், இலங்கைத் தமிழர்களின் இன அழிவு தடுத்து நிறுத்தப்படவேண்டும். அதற்கு ஏற்ற முயற்சியை இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இல்லையானால் இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் இனக்கலவரம் ஏற்படுவதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று எச்சரிக்கின்றோம். இனக்கலவரம் தோன்றிவிட்டால் அது விடுதலையுணர்வாக வளர்வதற்கு நெடுநாள் ஆகாது என்றும் அரசு உணரவேண்டும்.

—தமிழ்நிலம் : இதழ் எண்: 22 (14-8-83)

# 14. இந்திரா அரசு, இலங்கைத் தமிழீழச் சிக்கலை, விரைவில் தீர்வு செய்யவில்லையானால், இங்குள்ள தனித்தமிழ்நாட்டுச் சிக்கலை மிகக் கடுமையாக எதிர்நோக்க வேண்டியிருக்கும்!

தமிழர்கள் உலகில் மிகவும் பழைமையான இனத்தைச் சேர்ந்தவர்கள். தொன்மையான நாகரிகம் படைத்தவர்கள். இன்றைக்கு உலகில் உள்ள நாகரிகங்கள் அனைத்திலும் அவர்களது நாகரிகத் தாக்கம் இல்லாத ஓர் இன நாகரிகமே இல்லை. அது போலவே அவர்களின் கலையியலும் பண்பாட்டியலும் மிக மிகப் பழைமையானவை. அவர்களது மொழியும், உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் மூல முதன்மையானது. சமசுக்கிருத மொழி எவ்வளவு பழைமையானதோ, அதைவிடப் பத்து மடங்கு பழைமையானது தமிழ் மொழி. சமசுக்கிருதத்தில் தமிழ் மொழியின் சொற்களும் சொல் மூலங்களும் எண்பது விழுக்காட்டிற்கும் அதிகம்,

இத்துணைப் பழைமையும் சிறப்பும் முதன்மையும் வாய்ந்த மொழியையும், தொன்மைப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் படைத்த அதன் இனத்தையும் இன்று, அரசியலாலும், பொருளியலாலும், குமுகாயத்தாலும், கலை, பண்பாட்டாலும், மொழியாலும் அடிமைப்படுத்தி அழித்துக் கொண்டிருக்கின்றது ஓர் இனம் என்றால், இஃது எத்துணை இரங்கத்தக்க கொடுமை வாய்ந்த ஓர் உண்மையாக இருக்கிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

உலகில் தமிழினம் அவ்வாறு கொடுமைப்படுத்தப்படும் நாடுகள் இரண்டு. ஒன்று தமிழ்நாடு; மற்றொன்று இலங்கை!

இந்திய ஒற்றுமை, பாரதப் பண்பாடு என்றெல்லாம் பெருமை பேசித் தமிழையும் தமிழினத்தையும் நாலாந்தர ஐந்தாந்தர நிலையில் வைத்துள்ளது இந்தியா. இதன் முழு ஆட்சியையும் ஆரியம் தன் தந்திரத்தாலும், அரசியல் சூழ்ச்சியாலும், மதப் புரட்டுகளாலும் கைப்பற்றிக் கொண்டு, இந்நாட்டின் மிகப் பழைமையான உரிமையின மக்களை தமிழர்களை — அவர்கள் தம் நிலையினின்று ஒரு சிறிதும் மீளாதவாறு மிகவும் அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கின்றது இந்தியாவின் ஆரியப் பார்ப்பன அரசு.

இந்த அடிமை நிலையின் முழு இழிவையும் இயலாமையையும், அண்மையில் தமிழீழத்தில் அடித்து, நொறுக்கி, அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தன் இனமக்களுக்கு ஒரு வகையிலும் நேரிடையாக உதவ முடியாமற் போன பொழுதே, தெள்ளத் தெளிவாக உணர முடிந்தது.

என்ன கொடுமை! தாம் வணங்கத் தக்க பெற்றோர்கள் முன்னிலையிலும், தாம் பேணத்தக்க தம் உடன் பிறப்புகள் முன்பும், தாம் வழிபடத் தக்க தம் அன்புக் கணவன்மார்கள் எதிரிலும் தமிழ்ப் பெண்கள், ஆ! எவ்வாறு கதறக் கதறக் கற்பழித்துச் சீரழிக்கப் பெற்றுச் சிதைக்கப் பெற்றார்கள்! அவ்வாறு அவர்கள் சிதைக்கப் பெற்ற பொழுது, எப்படி அவர்கள் குமுறித்துடிக்கும் நெஞ்சோடும், குமைந்துருகும் உயிரோடும், செயலற்ற உடலோடும் ஒன்றும் செய்ய இயலாதவர்களாய் உணர்விழந்து கரைந்தார்களோ,



அப்படித்தான், இத் தமிழ் நாட்டில் உள்ள ஐந்து கோடித் தமிழர்களும் (தேசியம் பேசும் இந்திரா அடிமைகள் தவிர) நைந்தழிய வேண்டியிருந்தது. இந்த நிலையில் தமிழர்கள் எப்படி ஓர் உரிமை நாட்டில் வாழ்வதாக ஒப்ப முடியும்? இனி இந்தியாவில் தமிழர்கள் எப்படி அடிமையாக வைக்கப்பட்டு இருக்கின்றார்களோ, அப்படியே இலங்கையிலும் தமிழர்கள் அடிமைகளாக வைக்கப்பட்டிருப்பதுடன் மிகக் கொடுமைக்கும் இழிவுக்கும் அழிவுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். அதற்கு அண்மையில் அங்கு நடந்த இனக் கலவரங்களும் அழிவுகளுமே மிகத் தெளிவான வெளிப்படையான சான்றுகளாகும்.

உலகில் தமிழர் வாழும் ஏறத்தாழ நாற்பத்தேழு நாடுகளில், மேற்கூறிய இரண்டே இரண்டு நாடுகளில் மட்டுமே அவர்கள் முழு ஆளுமை உரிமைபெற முடியும். ஏனெனில் அவையிரண்டுமே இன்றைய நிலையில் அவர்களின் தாய் நாடுகள். வரலாற்று அடிப்படையில் இந்த இரண்டு நாட்டிலும் அவர்களுக்குள்ள ஆளுமை உரிமையை, வேறு எந்த நாட்டு அரசாலும் இனத்தாலும் மறுத்து விடவோ, அல்லது மறைத்து விடவோ முடியாது.

கடந்த காலங்களில் தமிழினத்துக்கு நேர்ந்த வாழ்வுரிமைத் தாக்கங்களால், மீண்டும் இவ்வினத்துக்கு உரிமை உணர்வு இக்கால் கிளர்ந்தெழுந்துள்ளது. அவ்வுணர்வைச் செயற்படுத்துவதற்குரிய முழுத் தகுதியும் முழு உரிமையும் வாய்ந்தவர்கள் தமிழ் நாட்டிலும், தமிழீழத்திலும் வாழ்ந்து வரும் தமிழர்களே! இரண்டு நாடுகளிலுமே அவர்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் தோன்றியதும்,



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இவ்விரு நாடுகளையும் உள்ளடக்கிய இலெமூரியா என்னும் இந்நிலப் பகுதியிலேயே ஆகும்! எனவே அவர்களின் இனவுரிமைத் தாக்கத்தையும் வாழ்வுரிமைச் சிக்கலையும் முன்வைத்து ஆட்சியுரிமைக் கோரிக்கைக்கு எழுச்சிக் குரல் கொடுப்பார்களேயானால் அவர்களைத் தடுத்து நிறுத்தி விடவும், அவர்களின் உரிமைக் குரலை ஒடுக்கி விடவும் உலகில் இன்றுள்ள எந்த ஆற்றலாலும் இயலாது. அந்த அளவுக்கு இந் நிலவுருண்டைப் பகுதியில் நிலவுரிமை படைத்தவர்கள், அவர்கள்!

தமிழர் வாழ்வுரிமை பெறத் தக்கனவாகிய மேற்கண்ட இரண்டு நாடுகளில், இன்றைய நிலையில் இலங்கை வாழ் தமிழர்களே ஆட்சியுரிமைக்குப் போராடும் வகையில் கிளர்ச்சியுற்றுப் போராடத் தலைப்பட்டுள்ளனர். அவர்களின் தமிழீழத் தனிநாட்டுப் போராட்டம், பல்வேறு அரசியல் உரிமைகளுக்குப் பின்னர் வடிவம் பெற்றதாகும். அது கடந்த முப்பத்தைந் தாண்டுக் காலமாக நடந்து வருவது. அவ்வகையில் இலங்கைத் தமிழினச் சிறுபான்மையரை ஒடுக்கி அடக்கி ஆண்டுகொண்டுள்ள சிங்களப் பெரும்பான்மையினம், அங்குள்ள தமிழரை முற்றாக அழிப்பதற்கே திட்டமிட்டுள்ளது என்பதைக் கடந்தகால இன அழிப்புக் கலவரங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

கடந்த சூலை மாதக் கலவரம் இதுவரை அங்கு நேர்ந்த கலவரங்கள் அனைத்துக்கும் கொடு முடியானது; கொடுமையானது. அரசு, படைத்துறை, காவல்துறை, சிங்கள மக்கள் ஆகிய நான்கு ஆற்றல்களும் ஒருமுகமாக அங்குள்ள தமிழர்களுக்கு எதிராக நின்று, நேரடியாக அவர்களை அழிக்கத் தொடங்கியுள்ளன.



இந்நிலையில், இவ்வினப் போராட்டத்திற்கு ஒரு முடிவு காண இன்று இந்தியா அதில் தலையிட்டுள்ளது. அதன் தலையீடு நல்ல நோக்கத்துடன் அமைந்ததாக, அதன் நடைமுறைகளைக் கொண்டு கணிக்க முடியவில்லை. அதன் தொடக்கமே தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழீழம் தனியே பிரிந்தாலன்றி இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்கள் உரிமையைப் பெறுவதற்கு வழியே இல்லை. அந்த நம்பிக்கை யெல்லாம் கடந்த கால இனக் கலவரங்களின்வழி முழுதுமாக அழிக்கப்பட்டு விட்டன.

தமிழீழக் கோரிக்கையின் வெற்றியில்தான் எதிர்காலத் தமிழினத்தின் வாழ்வே அமைந்து கிடக்கிறது. அடிமையுற்றுக் கிடக்கும் தமிழினத்திற்கு இவ்விரண்டு உரிமைத் தகுதி பெற்ற நாடுகளில் ஒன்றேனும் தன்னரசு பெற்றால்தான் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழியுண்டு. எனவே இரண்டு நாடுகளில் முன் விழிப்புள்ள தமிழீழக் கோரிக்கையை வெற்றி பெறச் செய்வதில் உலகத் தமிழினம் முழுவதுமாக முனைந்து பாடுபடுவது ஒரு தேவையும் காலத்தின் கட்டாயமுமாக அமைந்து விட்டது.

ஆனால், தமிழீழக் கோரிக்கையின் வெற்றி, அதன் அண்டை நாடான தமிழ் நாட்டிலும் ஒரு தன்னாட்சிக் கோரிக்கையை எழுப்பி விடுமோ என்று இந்திரா அரசு அஞ்சுவதாகத் தெரிகிறது. இந்த அச்சத்தின் அடிப்படையில் அது தமிழீழக் கோரிக்கை வெற்றிக்கு முழு அளவில் உதவுவது என்பதும் ஒரு கனவேயாகும். எனவே அதன் முயற்சி தமிழீழ விடுதலைக்கு எவ்வகையானும் பயன்படவே முடியாது. அவ்வாறின்றி, அது தமிழீழக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கோரிக்கை தவிர்த்த வேறு தீர்வுக்கு முயற்சி செய்வதைத் தமிழர்கள் எள்ளளவும் ஏற்க மாட்டார்கள்.

இந்த இக்கட்டான இன அழிவுச் சூழலில் இந்திய (இந்திரா) அரசுக்கு நாம் கூறுவதும் எச்சரிப்பதும் இதுதான். ஒருவேளை ஓரின உணர்வின் அடிப்படையில் செயவர்த்தனேயின் தமிழின அழிப்பு முயற்சிகளுக்கு ஆதரவாகவும், தமிழீழ விடுதலை நோக்கத்திற்கு எதிராகவும், இந்திராகாந்தி, நடுநிலைத் தீர்வு செய்வது போன்ற வெளிப்படை முயற்சியில், மறைமுகமாகவும் தந்திரமாகவும் செயல்பட்டு செயவர்த்தனேயின் நோக்கத்திற்கு வெற்றியையும், தமிழீழக் கோரிக்கைக்குத் தோல்வியையும் ஏற்படுத்திக் கொடுப்பாரானால் அல்லது அதில் விரைந்து ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் ஒரு காலத்தாழ்வை இடையில் புகுத்தி, தமிழின உணர்வைத் தணிவிக்கும் சூழ்ச்சியில் ஈடுபடுவாரானால், அந்நிலை, இந்தியாவிலும் எதிரொலியை ஏற்படுத்தித் தனித்தமிழ்நாட்டுப் போராட்டத்திற்கு உரமிட்டதுபோல் ஆகும் என்று எச்சரிக்க விரும்புகின்றோம். ஓர் இனம் அடிமைத்தனத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அழிந்து போவதைவிட, உரிமைப் போராட்டத்தில் ஒரேயடியாக மாண்டு போவதையே நாம் விரும்புகிறோம். ஏனெனில் விடுதலையுணர்வு என்பது அடிமைப்பட்டுக் கிடக்கும் இனத்தில் இயல்பாகத் தோன்றுவது; அது வலுப்பெறுமானால், எத்துணைக் கொடுமையான வல்லாண்மைப் போக்கையும் எதிர்கொள்ளத்தக்கது என்பதை ஆள்பவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

—தமிழ்நிலம்: இதழ் எண்: 23 (4-9-83)

# 15. தமிழீழ விடுதலைக்கு மாற்றுத் தீர்வு தமிழீழ விடுதலையே!

சென்ற சூலை மாதத்திலும் அதைத் தொடர்ந்தும் இலங்கையில் நடந்த, நடந்துவரும் கலவரங்களாலும், தமிழின அழிப்புக் கொடுமைகளாலும் நேர்ந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொலைகளையும், ஆயிரங்கோடி உருபாவுக்கு மேலான கொள்ளையடிப்புகளையும், அவற்றால் இரண்டு இலக்கம் தமிழர்கள் தம் வீடுகளையிழந்து, சொத்துகளை இழந்து, தம் பெண்டு பிள்ளைகளையும் உற்றார் உறவினர்களையும் இழந்து, ஏதிலிகளாக ஆக்கப்பட்டு, ஏதிலியர் கொட்டடிகளில் அடைக்கலம் புகுந்துள்ளதையும், இன்னும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்களும் விடுதலைப் போராளிகளும் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுப் பல்வேறு கொடுமைகளுக்கும், உறுப்புச் சிதைவுகளுக்கும் ஆளாகிக் கிடப்பதையும் உலகமே அறியும். ஆனாலும் இக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த இயலாமலும், அவற்றிற்கு வெளிப்படையாகக் கண்டனம் கூட தெரிவிக்க முடியாமலும் அனைத்துலக நாடுகளும் ஊமைகளாயும் கையற்றும் வெறுமனே வருத்தம் தெரிவித்துக் கொண்டுள்ளதையும் நாம் அறிவோம்.

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு இன வழியாலும் மொழி வழியாலும் வரலாற்று வழியாலும் மிக நெருங்கிய உறவு நாடாகவுள்ள தமிழ்நாடும், இந்திய மேலினை, மத வல்லாளுமை அரசுக்கு அடிமை நாடாக உள்ளமை

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யால், இலங்கைத் தமிழர்கள் சிங்கள அரசின் இன அழிப்புக் கொடுமைகளுக்கு ஆளாவதை நேரில் கண்டும் கேட்டும், அதிர்ச்சியும் அவலமும் கொண்டாலும், அவற்றுக்குத் துயர்நீக்கமாக ஒன்றுமே செய்ய முடியாமல், கலங்கிக் கண்ணீர் வடித்துக் கண்டனம் தெரிவித்துத் தன் ஆற்றாமையைப் புலப்படுத்தும் அளவுடனேயே வழிமுறை காணாமல், வாய் புலம்பி வயிற்றில் அடித்துக் கொண்டு கிடக்கிறது.

இந்த நிலையில், இந்திய அரசின் ஓராளுமைத் தலைவியாக, உளவு வழியாகவும், களவு முறையாகவும் ஊராண்டு கொண்டுள்ள இந்திரா காந்தியம்மையார், ஏதோ, எடுத்தேன் கவிழ்த்தேன் என்றபடி இலங்கைத் தமிழர் சிக்கலில் தலையிட்டு அரசியல் நிரவல் செய்வது போல் பாசாங்கு காட்டித் தமிழினத்திற்கு நிலையான ஓர் அடிமை முறி (சாசனம்) எழுத முற்பட்டுள்ளார். இவர் செயலிலும் பலர் நம்பிக்கை கொண்டு, தமிழீழக் கோரிக்கையைக் கையளித்து விடுவார்களோ என்று அஞ்சவேண்டிருக்கிறது. தமிழீழ மக்களின் நெஞ்சாங் குலையிலிருந்து வெளியேறி அவர்தம் மூச்சுக் காற்றாக இயங்கிவரும் தமிழீழக் கோரிக்கை, எந்த அரசியல் தந்நலக்காரராலும் அல்லது ஓர் அணியினராலும் அவ்வளவு எளிதாகக் கை நெகிழ்க்கப்பட்டு விடப்படுமானால், உலகத் தமிழினத்துக்கு உலகின் எந்த நிலப் பகுதியிலும் எந்தக்காலத்திலும் உரிமை உயிர்த்துடிப்பே இல்லாமல் போய்விடும் என்பதை இவ்வுலக உருண்டையில் வாழும் ஒவ்வொரு தமிழரும் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். அத்தகைய ஒருநிலை அண்மையிலோ, எதிர்காலத்திலோ எப்பொழுதும் நிகழவே கூடாது. அப்படியொரு நினைவு, தப்பித்தவறி, தமிழீழ

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



அணியில் தவறாகவோ சரியாகவோ வந்து நின்று கொண்டிருப்பவர் எவருக்கேனும் ஏற்பட்டால், அவரை இனங்கண்டு, எவ்வகைக் கண்ணோட்டமுமின்றி, விடுதலைப் போராளிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

முடிவாகவும், முழுமையாகவும், தமிழீழ விடுதலைக் கோரிக்கை, என்றோ உறுதி செய்யப்பட்டு விட்ட ஒன்று. முல்லை மாறிகளாலும், சொல்மாறிகளாலும், கோட்பாட்டைத் திசை திருப்புவோர்களாலும், அவர்களின் தந்நல அங்காப்புக்கு நீர் வார்த்துக் கொள்ளும் நினைவுடன், அத் தமிழீழக் கோரிக்கை நெகிழ்ச்சி கொண்டுவிடக் கூடாது. தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றுக் கோரிக்கை அல்லது மாற்றுத் தீர்வு ஒன்று இருக்குமானால், அது தமிழீழக் கோரிக்கையே! வேறு எதுவாகவும் இருக்க முடியவே முடியாது. இது பனிமலை போலும், பசிபிக்கடல் போலும் உறுதியான கொள்கையும், போராட்டமும் ஆகும்! வெல்க தமிழீழப் போராட்டம்! விடுதலை பெறுக தமிழர் நிலம்!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 23 (4-9-83)

# 16. தமிழினத்தைச் சூது கவ்விக் கொண்டிருக்கிறது! அது காலப் போக்கில் உலக மக்களுக்குத் தெரியவரும் !*

'செய்தித்தாள்களில் இப்பொழுது பரபரப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் அனைத்துமே உண்மையில்லை. சில செய்திகள் உண்மையாக இருந்தால் அவற்றின் அடிப்படைகள் திரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சிலவற்றின் நோக்கங்களே வேறுவகையானவை. சூழ்ச்சிகளுடன் அவை நன்கு புனையப்படுகின்றன. பெரும்பாலும் செய்திகளே இப்படித்தாம் என்றாலும், இப்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழீழக் கொடுமைகளைப்பற்றி வரும் அல்லது அறிவிக்கப்படும் செய்திகளில் சூழ்ச்சிகள் நிரம்ப உள்ளன. அவை முழுவதும் தந்நலத்தை அடிப்படையாகக் கொண்டவை. பொதுவாகச் சொன்னால் இலங்கைத் தமிழினத்தை இப்பொழுது இனக்கொடுமைகள் மட்டும் சூழ்ந்திருக்கவில்லை; சூதுகளும் கவ்வியிருக்கின்றன. அந்தச் சூதுகள் தமிழினத் தலைவர்கள் எனப் படுவோராலேயே பின்னப்படுகின்றன என்பதுதான் அங்கு நேர்ந்து வரும் கொடுமைகளைவிட வருத்தம் தருவனவாக உள்ளன. இவற்றின் அடித்தளங்கள் பொதுமக்களுக்கு எளிதே உடனடியாக விளங்குவதில்லை. ஆனால் காலப்போக்கில் அவை தாமே விளக்கம் பெறும்; உண்மை அப்போது வெளிப்பட்டே தீரும். அக்கால் போலி அரசியல் நாடகங்களில் கதை நாயகர்களாகவும், திறம்பட்ட அரசியல் மேதைகளாகவும், வீரர்களாகவும் நடித்துக் கொண்டுள்ளவர்களின் போலிப் புனைவுகள், முகப்பூச்சுகள் கலைந்துவிடும். அதுவரை தமிழினத்தின் எல்லா நிலைக் கொடுமைகளையும் தமிழீழ மக்கள் தாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும்.

* இலங்கையில் ஏற்பட்டுவரும் தமிழின அழிவு தொடங்கியதிலிருந்து, பாவலரேறு அவர்களை வெளியூர்த் தமிழன்பர்கள் பலரும் அன்றாடம் வந்து சந்தித்து, அவ்வப் பொழுதுள்ள நிலைகளைப் பற்றிக் கலந்துபேசிக் கருத்துகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஒருமுறை பாவலரேறு, அந்த அன்பர்களிடம், கருத்துக் கூறுகையில், தெரிவித்தது இது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



இவற்றில் உண்மைநிலை என்னவென்றால், தமிழினம் பிறரால் தாக்கப்படும் நிலையைத் தலைமைப் பொறுப்பில் உள்ள ஒரு சில தமிழ்த் தலைவர்களே தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதுதான்! இப்பொழுது அந்நிலைகளை வெளிப்படையாகக்கூறுவது அவ்வளவு நல்லதன்று; அவை தாமாகவே வெளிப்படும் காலம் வரும்வரை நாம் காத்திருப்பது நல்லது. இப்பொழுது உண்மையாக நடித்துக் கொண்டிருப்பவர்களின் முகமூடிகள் அப்போது அகற்றப்பட்டு, அவர்களின் உண்மை வடிவங்கள் உலக மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகும்.

அப்பொழுது, எல்லாமக்களுக்கும், ஒரு பேரதிர்ச்சியும், பெருவியப்பும் ஏற்படவே செய்யும்!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 23(4-9-83)

# 17. அமிர்தலிங்கத்தின இரண்டகம்!

**ஈழத் தமிழர்க்கு இரண்டகம் செய்கிறார் தமிழர் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம்!**

**நூற்றுக்கணக்கான இளைஞர்களும், அறிஞர்களும் சிங்களப் படையினரால் கொடுமைப்படுத்தப்படுகையில் பாராளுமன்றப் பதவி நமக்குத் தேவையா?**

**தலைவர் அமிர்தலிங்கம் வரலாற்றில் அவப்பெயர் பெறக் கூடாது! அவர் சிந்தித்துத் தம்மைத் தலை நிமிர்த்திக் கொள்ளவேண்டும்!**

கடந்த மே மாதம் தமிழீழத்தில் மீண்டும் படைத்துறை கட்டவிழ்த்து விடப்பட்டு, அங்குள்ள தமிழர்களுக்குப் பெருத்த அழிவும் இழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனே கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கிறார். தீவிர இளைஞர்களை அடக்குவதாகக் கூறிக் கொண்டு, படைத்துறையினரையும் பாதுகாவல் துறையினரையும் கொண்டு, தமிழீழத்தில் உள்ள ஆதரவற்ற தமிழ்ப் பொதுமக்களை அழித்து வருகிறார் செயவர்த்தனே!

மருத்துவர் எசு. இராசசுந்தரம் என்னும் காந்திய இயக்க அமைப்புச் செயலாளரையும், அந்த இயக்கத்தின் கட்டிடக் கலைஞர் எசு. ஏ. டேவிட் என்பாரையும் கடந்த 6—4—83 அன்று சிறைப்படுத்தி அவர்களை, மிகக் கொடுமைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். அவர்களுடன் அவ்வியக்கத்தைச் சார்ந்த சில இளைஞர்



களையும் பணியாளர்களான பெண் தொண்டர்களையும் உசாவலுக்கு அழைத்துச் சென்று அவர்களைத் தாறுமாறாக நடத்திக் கொடுமையும் இழிவும் படுத்தியிருக்கின்றனர்.

பனாகொடை தடுப்புக் கொட்டடியில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் டேவிட் அவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவரது மனநிலை, படையினரின் தாக்குதலால் மிகவும் ஊறுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. காந்திய இயக்கச் செயலராகிய மருத்துவர் இராசசுந்தரம் அவர்களின்மேல் படைத்துறையினர் மிகவும் கொடுமையாகத் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். அவர் முகத்திலும் உடம்பிலும் மண்ணை வாரி வீசியிருக்கின்றனர். அவரின் வயிற்றிலும், தலையிலும், தோள் முட்டியிலும் இரும்புத் தடியால் குத்தியும் அடித்தும் துன்புறுத்தியிருக்கிறார்கள். இரவு முழுவதும் அவரைத் தூங்க விடாமல் தாக்குதல் நடத்தியதால் அவர் மனநிலையிலும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அவர் அம்மணமாக்கப்பட்டு இங்கும் அங்கும் இழுத்தடிக்கப்பட்டிருக்கிறார். அந்த நிலையிலேயே ஓர் இரவு முழுவதும் வைத்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள் படைத்துறைக் கயவர்கள்.

அதே பனாகொடைக் கொட்டடியில் சிறைப்படுத்தப்பட்ட இளைஞர்கள் அனைவரும், இரவு முழுவதும் அம்மணமாக ஆக்கப்பட்டுத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர். கண்களில் பட்ட இளைஞர்களையெல்லாம் ஐயத்தின் பேரில் தளை செய்து படைத்துறைக் கொட்டடிகளுக்கு அழைத்துச் சென்று கொடுமை செய்கின்றனர்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மட்டக்களப்பில் புதூர்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களையும் பொதுமக்களையும் அங்குள்ள வான் படையைச் சேர்ந்த சிங்களக் காடையர்கள், காரணமின்றித் தாக்கித் துன்புறுத்தி, அவர்கள் வளர்த்து வந்த ஆடுகள், மாடுகள், கோழிகள் முதலிய கால்நடைகளையெல்லாம் வலுக்கட்டாயமாக ஓட்டிச் சென்று தங்கள் உணவுக்காக அடித்துக் கொன்று பயன்படுத்தியிருக்கிறார்கள்.

நுவரெலியா என்னும் மலைப்பகுதி ஊரில் கடந்த 14-5-83 காலையில் திடுமென வந்திறங்கிய காவல் படைச் சிங்களவர், அங்குள்ள இளைஞர்களையும் அகவை முதிர்ந்த ஆடவர்களையும் அடித்து நொறுக்கியதுடன், அவர்களுக்கு ஆதரவளித்து வந்ததாக டொரீன் பாலசிங்கம் என்ற பெண்மணியையும் அந்தோணி, சிவலிங்கம், லோகநாதன், செல்வராசு ஆகிய இளைஞர்களையும் படைத்துறைக் கொட்டடிக்குக் கொண்டு சென்று கடுமையாக அடித்துத் துன்புறுத்தியிருக்கின்றனர்.

கடந்த 18-5-83 இரவு யாழ்ப்பாணத்தில் குடியிருப்புப் பகுதிக்குள் படைத்துறையினர் புகுந்து, அங்குள்ள ஏழைத் தமிழர்களின் 150 குடிசைகள், 30 கல்வீடுகள், ஏறத்தாழ 50க்கு மேற்பட்ட வண்டிகள், உந்துகள், மிதிவண்டிகள் ஆகியவற்றைத் தீவைத்துக் கொளுத்தியிருக்கின்றனர். ஏதுமறியா ஏழைத் தமிழ் மக்களும் படைவீரர்களால் கடுமையாகவும் கொடுமையாகவும் இரக்கமின்றித் தாக்கப்பட்டிருக்கின்றனர். அங்குள்ள காய்கறிகள் அங்காடி தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. எதிர்பாராமல் நள்ளிரவில் நடந்த இந்தத் தாக்குதல்களால், வெளியில் இருந்த நூற்றுக்கணக்கான பெண்கள்,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



தாய்மார்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு அஞ்சி ஓடி வீடுகளுக்குள் புகுந்து கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு பதுங்கியிருந்தனர். வீடுகளுக்குள் ஓடி ஒளிந்திருந்த அவர்களைக் காவல் படையினரான சிங்களக் கயவர்கள், கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று தாக்கியதுடனும் அவமானப்படுத்தியதுடனும் நில்லாது, அப்பெண்கள் அணிந்திருந்த கழுத்துத் தொடரிகள், தாலிகள், தாலிக்கொடிகள் முதலியவற்றையும் அறுத்துக் கொண்டு போயிருக்கின்றனர். அவ்வாறு பல இலக்கக்கணக்கான சொத்துகளை அந்த ஏழை மக்கள் இழந்திருக்கிறார்கள். மொத்தத்தில் அன்றைக்கு அந்தப் பகுதியில் மட்டும் நேர்ந்திருக்கும் சொத்து அழிவுகளின் மதிப்பு ஏறத்தாழ 2 கோடி உருபாவுக்கு இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது.

19-5-83 அதிகாலையில், யாழ் நகரத்தில் உள்ள கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள குடியிருப்பில் படைத்துறையினர் திடுமென வந்திறங்கி, அங்குள்ள 18 அகவைக்கும் 40 அகவைக்கும் இடைப்பட்ட அனைத்து ஆடவர்களையும் கண்களை மூடிக்கொண்டு தாக்கியுள்ளனர். பலரை ஆய்வுக்காகவும், உசாவலுக்காகவும் படைப் பாடிகளுக்கு அழைத்துச் சென்று கொடுமை செய்து அச்சுறுத்தியுள்ளனர்.

சுன்னாகம் காவல் நிலையத்தைச் சேர்ந்த தமிழ்க் காவல்துறை அதிகாரி ஒருவரையும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற காவல்துறையினரில் தமிழர்களாக இருந்த இருவரை அனுராதபுரம் தொடர்வண்டி நிலையத்திலும் சிங்களப் படையினர் தாக்கித் துன்புறுத்தியிருக்கின்றனர்.

கண்காணிப்புக்கென திறந்த இழுவை ஊர்திகளிலும், மலையுந்துகளிலும், சுமையுந்துகளிலும் படைத் துறையினர் ஏறிக்கொண்டு, தெருத்தெருவாக வந்துகொண்டும் போய்க்கொண்டுமாக இருந்து பொதுமக்களை அச்சுறுத்தி அல்லற்படுத்துகின்றனர். அவ்வாறு செல்லும் படைத்துறையினர் தங்களுடன் துமுக்கிகளை (துப்பாக்கிகளை) மட்டுமின்றித் தடிகள், மரக்கட்டைகள், இரும்புக் கம்பிகள், கற்கள் முதலியவற்றையும் தாங்கள் ஏறிச்செல்லும் படைத்துறை வண்டிகளில் ஏற்றிச் செல்கின்றார்களாம். அக்கால் தெருக்களில் நடந்தும், மிதி வண்டிகளிலும், உந்துமிதி (மோட்டார் சைக்கிள்) களிலும் போவோரைக் கற்களினாலும், இரும்புத் தடிகளினாலும், வண்டிகளில் இருந்தபடியே தாக்கிக்கொண்டே போகின்றனராம். இவர்கள் அவ்வாறு தாக்குவதைக் கண்ட பொதுமக்கள் அலறியடித்தவாறு அங்குமிங்கும் சிதறியோடி அல்லல்படுகின்றனராம். காவல் படையினரும் படைத்துறையினரும், செய்யும் இச்சட்டத்திற்கு மாறானதும் மிகக் கொடுமையானதுமான தாக்குதல்களுக்கு ஆளாகி ஏராளமான தமிழர்களும் தமிழ்ப் பெண்டிர்களும், மண்டைகள் உடைந்தும், கைகால்கள் முறிந்தும் பல்வேறு மருத்துவமனைகளிலும் தனியிடங்களிலும் பண்டுவம் பெற்று வருகின்றனராம்.

பனாகொடை தடுப்புக் காவல்நிலையத்தில் உள்ள இராசசுந்தரத்தையும், டேவிட்டையும் சந்தித்துப் பேசுவதற்கு, அறமன்ற இசைவைப் பெற்றுக்கொண்டு சென்றிருந்த கூட்டணிச் சட்டத்துறைச் செயலரும், காலஞ்சென்ற தலைவர் செல்வாவின் மகனும், சிறந்த வழக்கறிஞரும் ஆகிய எசு. சி. சந்திரகாசன் அவர்களைப் படைத்துறைக் காவல் அதிகாரி தாழ்வாகப் பேசி,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



அவர்களைப் பார்ப்பதற்கு மறுத்துக் கூறித் திருப்பியனுப்பியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் அரசடி சனசக்தி மக்கள்நல நிலையத்தையும், இந்நூலகத்தில் இருந்த பத்தாயிரம் உருபா மதிப்புள்ள நூல்களையும்,ஐயாயிரம் உருபா மதிப்புள்ள தட்டுமுட்டுப் பொருள்களையும் படைத்துறைச் சிங்களவர் சிலர் தீவைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கியிருக்கின்றனர்.

இவ்வாறு கணக்கற்ற உயிரழிவுகளும், கொடுமைகளும், சொத்துச் சேதங்களும், அரட்டல்களும், அச்சுறுத்தல்களும், வன்கொடுமைகளும், துன்புறுத்தல்களும், சிறைப்படுத்தல்களும், சீரழிவுகளும், கொள்ளையடிப்புகளும், கற்பழிப்புகளுமாகக் கடந்த 1977, 1979, 1981 ஆகிய ஆண்டுகளில் நடந்த கொடுமைகளைப் போலவே கடந்த மாதங்களில், குறிப்பாகச் சென்ற மே மாதத்தில் நடைபெற்றிருந்தும், அவற்றைப் பற்றி எந்த நிலையிலும் எந்த ஒரு சொல்லும் வாய்திறந்து கண்டித்துக் கருத்தைக் கூறாமல், நம் தமிழீழத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வாய்மூடி ஊமையர்களாய் இருப்பது நமக்கு மிகுந்த வியப்பையும் துயரத்தையும் தருகின்றது. குறிப்பாக நம் பெருமதிப்பிற்குரிய தமிழர் கூட்டணிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்களோ, தலைவர் சிவசிதம்பரம் அவர்களோ இதுவரை இக்கொடுமையான சிங்களப் படைத்துறையினரின் அட்டூழியங்களைக் கண்டித்து அரசுக்கோ, இரங்கலும் ஆறுதலும் தெரிவித்துப் பொதுமக்களுக்கோ ஓர் அறிக்கையோ ஒரு மனந்திறந்த சொல்லோ வெளிப்படுத்தவில்லை என்பது நமக்குத் தற்கொலைக்கு ஒப்பான மனத்துன்பமாகவும் அவமானமாகவும் உள்ளது.

ஆனால் இதற்கு மாறாக, திரு. அமிர்தலிங்கம் அவர்கள், இந்த நிலையில், தீவிர இளைஞர் இயக்கத்தைக் கண்டித்தும், அவர்கள் செயல்களைக் கொடுமையானவை என்று மக்களுக்கு விளக்கப்படுத்தியும், தமிழீழ விடுதலைப் போராட்ட உணர்வுகளை மெலிவுபடுத்தும் வகையில் பேசியும் அறிக்கை கொடுத்தும் வருகிறார். அரசினரின் இக்கொடுமைகளைக் கண்டிக்கும் வகையில் கடந்த மாதம் நடந்த உள்ளூராட்சித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று இளைஞர் இயக்கம் கோரியிருந்த வேண்டுகோளைத் திரு. அமிர்தலிங்கம் மதிக்கவும் செய்யாததுடன், அதை மிகக் கண்டிப்புடன் எதிர்த்துப் பேசவும் அறிக்கை விடவும் செய்தார். இந்த வகையில் திரு. அமிர்தலிங்கம் தமிழர்களுக்கு இரண்டகம் செய்து வருகிறார்.

நூற்றுக் கணக்கான இளைஞர்களும் அறிஞர்களும் சிங்களப் படையினரால் கொடுமைப்படுத்தப்படுகையில் பாராளுமன்றப் பதவி நமக்குத் தேவையா என்பதைக் கூட்டணித் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தலைவர் அமிர்தலிங்கம் வரலாற்றில் அவப்பெயர் பெறக்கூடாது. அவர் சிந்தித்துத் தம்மைத் தலை நிமிர்த்திக் கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்களிடம் அரிதாக ஏற்பட்டுள்ள இவ் விடுதலை உணர்வு கட்டிக் காக்கப்பட வேண்டும். படிப்படியாக அதைத் தளர விடுவோமானால், தமிழினத்திற்கே உலக அரங்கில் மிக இழிவான இடம் ஏற்பட்டுவிடும் என்பதைத் தமிழர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

**தமிழ்நிலம்: இதழ் எண் : 20 ( 2-6-1983)**

# 18. தமிழீழ விடுதலைக் கூட்டணி இனிச் செய்ய வேண்டுவது என்ன?

இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைக் கூட்டணியின் கடந்த கால முயற்சிகள், முழு இறைமை பெற்ற தமிழீழத் தன்னுரிமை நாட்டை மீட்டெடுக்கும் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கான அடிப்படைச் செயல்களாக இருந்துள்ளனவே தவிர, ஒரு முனைப்பு முயற்சியாக இதுவரை அக்கூட்டணி எதையுமே வெளிப்படையாகச் சொன்னதுவோ செய்ததுவோ எதுவுமில்லை. ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குப் படிப்படியாக எத்தனையோ முனைப்பு முயற்சிகள் செய்யப் பெறுதல் வேண்டும். அடிமையுற்றுக் கிடக்கும் மக்களுக்கு உரிமைக் கனலை ஊட்டுவிப்பது, நடந்துவரும் அரசியல் ஆளுமை நிலையில், அடிமைப்படுத்தப் பெற்ற மக்களைத் தீவிரமாகச் சிந்திக்கச் செய்விக்கும் உரிமை உணர்வுகளை விளக்கமாக உணரச் செய்வது, அவர்களுக்கு நேர்ந்த, நேரவிருக்கின்ற தாழ்ச்சி வீழ்ச்சிகளையும், கொடுமை, கொள்ளை, கொலைப் போக்குகளை வரலாற்று அடிப்படையில் விளங்குவிப்பது— ஆகிய கருத்துப் போராட்டங்களை ஒருவாறு, ஒருகால கட்டம் வரையில் விடுதலைக் கூட்டணி செய்து கொண்டு வந்தாலும், என்றுமே, எந்த நிலையிலுமே இவற்றையே தாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை.

எப்பொழுதும் ஆளும் இனத்தினர் ஆளப்பெறுகின்ற ஓர் அடிமைப்பட்ட இனத்தின் வாழ்வுரிமைகளை,



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வெறும் கருத்துப் போராட்டங்களின் வழியாகவே, திருப்பித் தந்து விடுவர் என்று நம்புவதோ அல்லது அந்த அடிமைப்பட்ட இனம் எடுத்து வைக்கும் அந்தக் கருத்து நயங்களின் அடிப்படையிலேயே, இழந்துபோன தன் உரிமைகளை மீட்டெடுத்துவிடும் என்பதோ, உலக விடுதலை வரலாற்றில் எங்குமே நிகழ்ந்திராத செய்தியாகும். அதிகாரம் கைவரப் பெற்ற ஆள்கின்ற இனத்தின் இரும்புக் கைகளிலிருந்து, உரிமைகள் பறித்தெடுக்கப் பெற்றதே விடுதலை வரலாறாக இருந்திருக்கின்றதே தவிர, உரிமை இழந்த இனத்தின் திறந்த கைகளில், அல்லது ஏந்திய கைகளில் விடுதலைக் கனி தானாகவே வந்து வீழ்ந்ததென்னும் வியப்பான வரலாறு என்றும் எவ்விடத்தும் நிகழ்ந்ததில்லை. அரத்தம் சிந்தாமல் விடுதலை வரலாறு முற்றுப் பெற்றதே இல்லை. இதனைத் தமிழீழ விடுதலைக் கூட்டணியினர் நன்கு உணர்ந்திருந்தாலும், ஏனோ, தங்கள் ஆளுமை இனத்திடம் கையேந்தியே விடுதலை பெற்று விடலாம் என்று நினைத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

விடுதலை வரலாற்றுப் போராட்டக்காரர்கள் முதலில் கற்க வேண்டிய பாடம் ஒன்று உண்டு. ஒன்றால், வலிந்து இரக்கமற்ற நிலையில் போராடிப் பெறுவது; அன்றால், நல்ல அடிமையாக இருந்து விடுவது. இந்த இரண்டில் ஒன்றுதான் வரலாற்றுக்குப் பொருந்தி வரும் உண்மையாகும். இவ்விலக்கணத்தை உணராமல், விடுதலைக் கூட்டணியினர், செயவர்த்தனே அரசுக்குச் சார்பாக இருந்து கொண்டே விடுதலையின் வெற்றிக் கொடியை நாட்டி விடலாம் என்று காலங்காலமாக எண்ணிக் கொண்டு கிடப்பது முழு அறியாமையாகும்; அல்லது கோழைத்தனமே ஆகும். தமிழீழ விடுதலைக் கூட்டணியின் தலைமையரைப் பொறுத்த அளவில்,



இன்னும் நமக்கு உரிமை மீட்பு நம்பிக்கை என்பது இழந்துவிட்ட ஒன்றாகத் தெரியவில்லை என்றாலும் எங்கு இழந்துவிடப் போகும் ஒன்றாக இருந்து விடுமோ என்று அஞ்சவே வேண்டியிருக்கின்றது.

தந்தை செல்வாவுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைக் கூட்டணியினரின் விடுதலைப் போராட்ட முயற்சிகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பாய்ப் போன கதையாகவே ஆகிக் கொண்டு வருகிறது. இனி அதுவுந் தேய்ந்து சிற்றெறும்பாகிப் பின்னர் அதுவுந் தேய்ந்து எங்கு ஒன்றுமில்லாமற் போய் விடுமோ என்று உண்மையிலேயே அஞ்ச வேண்டியிருக்கிறது; அலமர வேண்டியிருக்கிறது.

விடுதலையின் வெற்றி என்பது, தானே பழுத்து விழும் கனி அன்று; அது பறித்தெடுத்துப் பழுக்க வைக்க வேண்டிய பழ வகையைச் சேர்ந்தது. எனவே, 'காலம் வரும் காத்திருங்கள்' என்பது போன்ற உதவாக்கரைச் சோம்பேறியின் கோழைத்தனமான பேச்சுகளுக்கும், அறிவுரைகளுக்கும் ஓர் எல்லை உண்டு. அது பருவம் தேய்ந்து, எழில் மங்கி, உணர்வுகள் ஒடுங்கிப் போன காலத்தில் செய்ய விரும்பிய திருமணமாகப்போய் விடக் கூடாது. காலத்தே முனைந்து முடிக்க வேண்டிய காதல் மணமாகவே கருதப் பெறுதல் வேண்டும். அது கட்டாயக் கடிமணம், அல்லது சிறையெடுத்துச் செய்ய வேண்டிய உடன்போக்கு மணமாக இருந்தாலும் தாழ்வில்லை.

முதியவர்களிடமிருந்து முகிழ்த்தெழுந்த விடுதலை உணர்வு எப்பொழுது இளைஞர்களைப் பற்றி நெருப்பாய்க் கனலத் தொடங்குகிறதோ, அதுவே அதன் போராட்டத்திற்குரிய சரியான காலமாகும். காலம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

என்பது முதுமையாளருக்கு ஒருவகையானது; இளைஞர்களுக்கு ஒரு வகையானது. தொட்டவுடனே துடித்துப் பீறிட்டெழுகின்ற இளைஞர்களுக்குத் தோன்றும் விடுதலை உணர்வைத் தொட்டுத் தேய்த்து மருந்து முயற்சிகளால் மெத்தெனக் கிளம்பும் உணர்வுடைய முதுமைத் தலைவர்கள் காலங்கூறி அவித்து வருவது. உரிமைக்கனியைச் சுவைப்பதற்குரிய பக்குவமும் செவ்வியும் ஆகாது. தீர உணர்ந்தவர்கள் விடுதலை வரலாற்றில் இப்பிழையை என்றும் செய்ய ஒருப்பட மாட்டார்கள்.

தமிழீழ விடுதலைக் கூட்டணித் தலைவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் செய்த அல்லது செய்கின்ற போராட்ட முயற்சிகள் இன்றுவரை எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. வெறும் கருத்துரைகளாலேயே, ஆட்சியாளர் மக்களுக்குள்ள உரிமைகளை வழங்கிவிட முன்வருவார்களானால், உலகில் ஒரு நாட்டில் தோன்றும் விடுதலைக் கருத்துகளே, அனைத்து நாடுகளின் விடுதலை முயற்சிகளுக்கும் போதுமானவையாக ஆகிவிடும். ஆனால் நிலைமை அவ்வாறில்லை. வாய் முயற்சியைவிடக் கை முயற்சியும் விடுதலை வரலாற்றின் படிநிலை முயற்சியாக வளர்ந்து சிறத்தல் வேண்டும். 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்று திருவள்ளுவரும் செயல் முயற்சியையே பாராட்டிச் சொன்னார்.

எப்பொழுதும் வழிகாட்டுபவர்கள் செய்ய முனைந்தவர்களுக்கு வழியை அடைத்துக் கொண்டு கிடப்பவர்களாக ஆகிவிடக் கூடாது. செய்யத் தெரிந்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது. செய்பவர்களாகவும் இருக்கவேண்டும். இனி, செய்ய முனைப



வர்கள் சிலகால் செய்யத் தெரியாதவர்களாக இருந்தாலும் தாழ்வில்லை. செய்யத் தொடங்கியபின், செய்யத் தெரிந்தவர்களைவிட அவர்கள் தேர்ச்சிபெற்று விடமுடியும். எனவே, கூட்டணி ஏற்கனவே செய்த பிழை முயற்சிகளை இன்னும் செய்து கொண்டிராமல் காலங்கருதி இடத்தால் செய்கின்ற அறிவுடைய வினை முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இளைஞர்களின் கசப்புணர்வை இனியும் மெத்தனமாகக் கருதக் கூடாது. இளைஞர்களின் ஒத்துழைப்பை விட அவர்களின் நம்பிக்கையின்மை நம்மை விரைந்து வலுவிழக்கச் செய்துவிடும். எனவே, அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான செயற்பாடுகளில், தமிழீழ விடுதலைக் கூட்டணியினர், அதன் தலைமையர், இனி, ஈடுபடுதலை அறிவுடன் விரும்புதல் வேண்டும். வெளிப்படையாக, அங்குள்ள உட்பூசல்களைப் பற்றி, அகப்புற ஆய்வு செய்ய நாம் விரும்பவில்லை. எனவே, பெயர் சுட்டியோ, நிகழ்ச்சி சுட்டியோ நாம் எதனையும் விரிவாகப் பேசுவது தேவையற்றது. ஒன்றை நாம் எல்லோரும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். **உட்பூசல்களைக் காட்டிலும் நம்மை வலிவிழக்கச் செய்யும் அடிமைத்தனம் வேறு இருக்க முடியாது. அதனை வேரறுக்கச் செய்வதில் தான் ஓர் இனத்தின் வெற்றி வரலாறே தொடங்குகிறது.**

ஆகவே, இனியும் சிங்கள அரசின் பூசல் உரைகளிலிருந்தும், ஏமாற்று நடவடிக்கைகளிலிருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ளுதல் வேண்டும். அதனுடன் உள்ள போலி உறவுகளையே அரசியல் தந்திரமாகக் கருதி, நம்மை நாமே கீழறுத்துக் கொள்ளக் கூடாது. நயவஞ்ச

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கமாக ஆட்சியின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, விடுதலை முழக்கமிடும் வேடிக்கைச் செயலை நாம் வெளிப்படையாக விட்டொழித்தல் வேண்டும். நம் இனத்தை அழித்துக் கொண்டிருக்கின்ற சிங்கள அரசின் அனைத்துத் தொடர்புகளிலிருந்தும் நாம் விடுபட்டாக வேண்டும். **ஒத்துழையாமைக் கொள்கையை** நாம் உடனே மக்களிடம் அறிவித்திட வேண்டும். அதற்கடையாளமாக நம் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் பதவிகளை உடனே உதறியெறிந்து விட்டு, மக்களோடு மக்களாக வந்து அணிசேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை வெளியறிவிப்பு (பிரகடனம்) செய்தாகல் வேண்டும். ஓராண்டுக் காலத்திற்குள் அரசு நம் உரிமை வழங்கலுக்கு இறங்கி வரவில்லையானால், அடுத்த ஆண்டுப் பொங்கல் நாளில் **வரிகொடாக் கொள்கை**யைக் கடைப்பிடித்தல் வேண்டும். அதுவும் ஓராண்டிற்குள் பயன்படவில்லையாயின், **நேரடிப் போராட்டத்தில்** ஈடுபட்டுத் தமிழினமே ஒட்டு மொத்தமாக விடுதலைப் போர்க்களத்தில் இறங்கிச் சாவா வாழ்வா என்னும் இரண்டில் ஒன்றை முடிவு கட்டியாகல் வேண்டும். இதற்குக் கூட்டணியினர் முன் வருவார்களா? பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு; அது கோழைமையாகக் கருதப்படும் பொழுது, அது தன்னைப் புறங்காட்டிக் கொள்ளத் தவறிவிடக் கூடாதன்றோ?

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. (878)

பேராண்மை என்ப தறுகண்; ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (773)

**(தென்மொழி: சுவடி: 18; ஓலை: 7.)**

# 19. இலங்கைத் தமிழர்கள் அழிவை ஏனென்று கேட்பவர் யாருமில்லையா?

மிக அண்மையில் உள்ள இலங்கைத் தீவிலிருந்து தமிழர்களுக்கு நேரிடும் துன்பத் துயரின் அழுகுரல் நாள் தோறும் கேட்கின்றது. நெருக்கடி நிலையை இலங்கை அரசு அறிவித்துவிட்டு, அஞ்சத்தகுந்த அடக்குமுறைச் சட்டங்களையும் போட்டுக்கொண்டு, அங்குள்ள, தீவிரக் கொள்கையை மேற்கொண்டு விடுதலை வேள்வியில் தங்களை முற்றுமாக ஈடுபடுத்தி நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஒடுக்கும் நோக்கத்துடன், சிறிலங்கா அரசு மிகவும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது கொடுமையான விளைவுகளைத் தமிழர்களிடையில் ஏற்படுத்தியுள்ளது.

நெருக்கடி நிலையின் அடிப்படையில், சிங்களப் படைத்துறையைச் சார்ந்த எவரும், அங்குள்ள எவரையும் சிறைப்படுத்தலாம்; சுட்டுக் கொல்லலாம்; உசாவலின்றிக் கொன்றவரைப் புதைக்கலாம்; அல்லது எரிக்கலாம் என்ற கொடுமையான மேலதிகாரச் சட்டத்தை இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனே அறிமுகப்படுத்தியுள்ளார். படைத்துறையைச் சேர்ந்த சிங்கள வெறியர்கள் இச் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, தமிழ் இளைஞர்களைக் கொடுமையாகவும் வேகமாகவும் அழித்து வருகின்ற செய்தி நம்மைக் குலை நடுங்க வைக்கிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கடந்த 1-6-83 அன்று வான் படைத்துறையினர் வவுனியா நகரத்தையே தீயிட்டுக் கொளுத்தியிருக்கின்றனர். ஏறத்தாழ ஏழு கோடி உருபா மதிப்புள்ள தமிழர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான ஏழைத் தமிழர்கள், வீடு வாயில்களை இழந்து ஏதிலிகளாக்கப்பட்டுள்ளனர். உயர்ந்த பொருள்களை விற்கும் எழுபது கடைகள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன. நகரெங்கும் படைத்துறைக் கயவர்களால் சுற்றிவளைத்துப் பிடிக்கப்படும் இளைஞர்கள் உடனே படைவீடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆடை அகற்றப்பட்டுத் தலைகீழாகக் கட்டி வைத்துத் துன்பப்படுத்தப்படுகின்றனர். அரசு அறிவித்துள்ள கொடுமையான சட்டத்தின் கீழ்ப் பிடிக்கப்படும் எந்த இளைஞரையும் சுட்டுக் கொல்லலாம்; கன்னெய் (பெட்ரோல்) ஊற்றி எரிக்கலாம்; உசாவலின்றி 5 முதல் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை கொடுத்துத் துன்புறுத்தலாம்.

குருநாகல் காவல் பாசறைகளில் இளைஞர்கள் நாள்தோறும் உறுப்புச்சிதைவு (சித்திரவதை) செய்யப்படுகின்றனர். கடந்த 18-5-83-இல் யாழ்ப்பாணத்தில் உள்ள கந்த மடம் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குத் தீ வைத்து மக்களை மருண்டோடச் செய்து, அவர்கள் சிதறி ஓடுகையில் அடித்தும், சுட்டும் கொண்டிருக்கின்றனர். காந்திய இயக்கத்துக்குச் சொந்தமான ஊர்திகளும், சிறுவர் பள்ளிகளும், ஏதிலியர் குடியிருப்புகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. அனுராதபுரம் மினுவாங்கொடை, தீவுலப்பிட்டிய, குருநாகல், நாரம்மலை ஆகிய இடங்களிலுள்ள தமிழர்கள் கடைகள், வீடுகள், சரக்குந்து வண்டிகள் கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்கப்பட்டுத் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறை, வவுனியா, பம்பை, மடுவைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் காணாமல் போயுள்ளனர். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சபாரத்தினம் பழனிவேல் என்னும் சரக்குந்து ஓட்டுநரான 28 அகவை இளைஞரைப் படைத்துறைச் சுமையுந்தால் மோதி உயிரிழக்கச் செய்திருக்கின்றனர்.





மொத்தத்தில் கடந்த ஆண்டுகளில் அவ்வப்போது நடந்த அழிவுகளைப் பார்க்கிலும், கடந்த மாத இறுதியிலும் இம்மாதத் தொடக்கத்திலும் நடந்த அழிவுகளும் உயிர்க்கொலைகளும் மிக மிக அதிகம் என்று அங்கிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. நம் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் இந்நிலையில் வாய்பேசாத ஊமைகளாக அரசுடன் மறைமுக ஒத்துழைப்புத் தருவதாக நமக்கு வரும் செய்திதான் மிகக் கொடுமையானதும் தன்னழிவு மிக்கதுமாகும் என்று நினைத்துப் பெரிதும் துயர்ப்படுகின்றோம்.

இங்குள்ள நாம் இச் செய்திகளையெல்லாம் கேட்டுக் கொண்டு. ஏதும் செய்வதற்கு ஆற்றலற்றவர்களாகவும் அடிமைகளாகவுமே இருக்கிறோம் என்று எண்ணுகையில் நமக்குற்ற இழிவு நம் உயிரையே கூனச் செய்கிறது; நெஞ்சு பற்றியெரிகிறது; அறிவு நிலைகுத்திப் போகிறது. ஆதன் (ஆன்மா) அல்லலுறுகின்றது! என்னே, தமிழினத்திற்கு வந்த இழிவும் அழிவும்! ஐயகோ, இதைக் கேட்க இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு வாயில்லையா? நெஞ்சமில்லையா? துணிவில்லையா? இந்தப் பதவி நலன்கள் தாமா இவர்களுக்கு வாழ்க்கை! மானமற்ற தமிழினமே, விரைந்து ஒரு முடிவு செய்! வீணராக நாம் இருந்து மடிவதை விடப் போராடிச் சாவதுமேல் என்று துணிவு கொள்! துயரைத் துடைத்துக்கொள்! விழி! எழு! நட! போராடு! அல்லது போரிடு!

**தமிழ்நிலம்: இதழ் எண் : 20 (12-6-1983)**

# 20. படைத்துறையினரின் தீப்பந்த விளையாட்டால் யாழ்நகர் கந்தர் மடம் சுடுகாடாக்கப்பட்டது !

கடந்த அறிவன் 18-5-83 அன்று இலங்கை படைத்துறையினரின் கொடுமையான தீப்பந்த விளையாட்டுக்கும், அஞ்சத்தக்க தாக்குதல்களுக்கும் கந்தர் மடம் மிகுந்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டது மிகவும் இழிவானதே! அரசடிவீதி, பழம்றோட், மணல் தரை, ஒழுங்கை ஆகிய இடங்களும், யாழ்ப்பாணம் பழைய சந்தையும் தீயிடப்பட்ட குறிப்பிடக்கூடிய இடங்களாகும். தீப்பந்த விளையாட்டின்போது குமுகாயத்தின் கீழ் மட்டத்தில் வாழும் 500க்கும் மேற்பட்ட ஏழை மக்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில், ஆதரவற்றவர்களாக யாழ் பல்கலைக் கழகத்தையும், அருகிலுள்ள கோயில்களையும் ஏதிலியர் அடைவிடங்களாகக் கொண்டனர். வலுக்கட்டாயமாக வீடுகளை உடைத்து அங்கிருந்த நகைகள், பணம், கைக்கடிகாரங்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களைச் சூறையாடிய பின் கையில் கொண்டு வந்த தகரிகளில் உள்ள கன்னெய்யை (பெட்ரோலை) வீடுகளுள்ளே ஊற்றி, வீட்டுக்காரர்களிடம் தீப்பெட்டியை வாங்கி தீயிட்டுச் சாம்பலாக்கியுள்ளனர். அத்துடன் வீடுகளிலுள்ள மக்களை அடித்தும் மிகுந்த காயத்துக்குள்ளாக்கினர். இதனால், பல்கலைக் கழக மாணவர்களுட்பட 16க்கும் மேற்பட்டோர் கொடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இராசம்மா என்ற பெண்ணும், இயங்கி ஒன்றில் வந்த



இருவரும் துமுக்கியால் சுடப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாழ்விடங்களை இழந்த நிலையில் குடிக்கத் தேநீர் போடவும் ஏனங்களற்றவர்களாகக் காணப்படும் அவ்விரங்கத்தக்க மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் அனைத்துத் தமிழ்க் குமுகாயத்தின் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும்.

இந்நிலை தொடர்ந்து நடைபெற்றால் தமிழர் குமுகாயம் வாழும் அனைத்து இடங்களுமே சுடுகாடாக்கப்படுவது எதிர்பார்க்கக் கூடியதொன்றாகும். மக்கள் உரிமைகளைப் பற்றி மேடைக்கு மேடை அலம்பித்திரியும் கொடிய அரசின் பாதுகாப்புப் படையினரின் இச்செயலைக் கண்டிக்க யாருமில்லையா? இத் தாக்குதல்களால் ஆதரவற்றுப் போன குடும்பங்களின் மறுவாழ்வுக்கு வழி என்ன? அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு விடை சொல்வது யார்?

இச் சிக்கலுக்கான தீர்வுகள் பற்றி அனைத்து முடிவுகளையும் தமிழ்க் குமுகமே சிந்தித்து உணர்வு முழுமையாகத் தீர்மானிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

**சிறிலங்கா அரசக் காடையர்கள் தீயிட்டதினால் ஏற்பட்ட சேதங்கள்** ஒரே பார்வையில்:

| | |
|---|---|
| பொதுவான சிறு ஓலைக் குடிசைகள் | — — 64 |
| கல்வீடுகள் | — — 30 |
| சில்லறைக் கடைகள் | — — 4 |
| அரிசி, மிளகாய் அரைக்கும் ஆலை | — — 1 |
| மரக்காலை | — — 1 |

(16 தையல் பொறிகள், 18 மின்விசிறிகள், 40க்கும் மேற்பட்ட நிலைக் கண்ணாடிகள், வீட்டிலிருக்கக்கூடிய உடை

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கள், ஏனைய பொருள்கள் யாவும் முற்றாகச் சாம்பலாக்கப்பட்டுள்ளதுடன், உருபா பத்து இலக்கத்திற்கும் மேற்பட்ட விலையுயர்ந்த பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.)

**சேதமடைந்த ஊர்திகளின் விளக்கம்**

சிறு மூடுந்துகள் (Mini Vans) 3[1) 29 ஸ்ரீ 4984, 2) 29, ஸ்ரீ 4127, 3) 24 ஸ்ரீ 3326.]
இயங்கிகள் 9[1) ஈ. எண் 4555. ஈ 2) வை. 8154. 3) சி. வை. 7762, 4) ஈ. எண். 637 (இது கடத்தப்பட்டுள்ளது) 5) ஈ. எல். 9675. 6) 2 ஸ்ரீ 9317. 7) ஈ. எஸ். 3730. 8) 24 3626 9) ஈ.என். 9722]

மிதி உந்து (மோட்டார் சைக்கிள்) ஒன்று. மிதி வண்டிகள் 36: மாட்டு வண்டி 1.

—தமிழ்நிலம்: இதழ் எண்: 20 (12-6-83)

# 21. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது!

**(அமிர்தலிங்கத்தின் விடைக்கு விடை)**

ஒருமுறை தமிழீழக் கூட்டணியின் தவறான அணுகுமுறையை நாம் தென்மொழி (சுவடி: 18; ஓலை: 7)இல் சுட்டியிருந்தபொழுது, அதன் பொதுச்செயலாளர் மதிப்பிற்குரிய திரு. அமிர்தலிங்கனார், நாம் ஒரு முட்டாள் என்றும், நமக்கு அந்நாட்டு அரசியலைப் பற்றி ஒன்றுந் தெரியாது என்றும், இங்கிருந்து அங்கு போய் அவரைக் கண்டு பேசிய நம் அன்பர் ஒருவரிடம் கருத்தறிவித்ததாக நமக்குச் செய்தி கிடைத்தது. அவரின் அறிவுச் செருக்கை எண்ணி, அக்கால் அதனை நாம் பொருட்படுத்தவில்லை. அதன் பின் அவருக்கே (!) தெரிந்த அந்நாட்டு அரசியல் நடவடிக்கைகளையும் அவரையும் மிகக் கூர்மையாகக் கவனித்து வந்தோம். ஏனெனில் தமிழனின் அரசியல் வரலாறு எந்த நாட்டிலும் அடிமைகளின் வரலாறுதான்; அதற்கு அண்மையில் ஏதும் விடிவிருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் எந்தத் தனிப்பட்ட ஒருவரையும் அவருடைய கருத்துகளையும் அவ்வளவு தேவையாகக் கருதிநாம் திறனாய்வு செய்ய விரும்புவதில்லை. பொதுவாகவே இனநலத்துக்கு வேண்டிய மொத்தமான - தொகுப்பான கருத்துகளைப் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியுமே நமக்கு என்றும் கவலை. ஆனாலும் ஒட்டு மொத்தமான ஓர் இனநல உணர்வு, தனி ஒருவரால் அதுவும் அவரைச் சார்ந்த சில விளைவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் சிதைந்து கெட்டுப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

போகிறதே என்று நினைக்கையில் அஃது அமிர்தலிங்கமானாலும் அல்லது இந்திரா காந்தியானாலும் நாம் பெரிதாகக் கருதியதில்லை.

தமிழீழச் சிக்கல் தனிப்பட்ட ஓர் அமிர்தலிங்கத்துக்கோ அல்லது தமிழீழ விடுதலைக் கூட்டணிக்கோ மட்டுமே உரியதன்று. தமிழினத்துக்கே உரித்தான சிக்கல் அது. திரு. அமிர்தலிங்கம் எப்படி, தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தமிழீழச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் உரிமையை எவரும் தாராமல் அவரே எடுத்துக் கொண்டாரோ, அப்படியே தமிழன் ஒவ்வொருவனும் தமிழீழத்தைப் பற்றிப் பேசவும், தமிழீழத் தலைவர்களைப் பற்றித் திறனாயவும் உரிமை உடையவனே! எனவே, சில கருத்துகளை, இன்றைய காலத்தேவையை உணர்ந்து மக்கள்முன் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

திரு. அமிர்தலிங்கமும் அவர்தம் கூட்டணியினரும் தெரிந்தோ தெரியாமலோ, தமிழீழ விடுதலையைப் படிப்படியாகக் கை நெகிழ்த்து விட்டனர். ஒரேயடியாக அப்படிச் செய்தால் மக்களின் (தமிழீழ மக்கள் மட்டும் அல்லர். தமிழ்நாட்டு மக்களையும் சேர்த்தே கூறுகிறோம்) ஒட்டு மொத்தமான வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் ஆளாக வேண்டிவருமே என்று, விரல் விரலாகத் திறந்து இறுதியில் கையை ஒரேயடியாக விரித்து ஒன்றுமில்லை என்று காட்டி விட்டனர். இனி, தமிழீழ முயற்சி அணைந்து போன கொள்ளிக் கட்டைதான். இனிமேல் எவராகிலும் வந்து மீண்டும் பற்றவைத்தால்தான் உண்டு.

மொத்தத்தில் கூறுவதானால், தம் உடனுள்ள கூட்டணி உறுப்பினர்களையும், தனித்தனியாக வலுக்குறையச் செய்து தம் தனிப்பட்ட விளம்பரத்துக்கும்



நலத்துக்குமாக, கருவாகி உருவாகித் திருவாகி வந்த இலங்கைத் தமிழீழ விடுதலைக் கொள்கையைச் சிங்கள வெறியர் செயவர்த்தனாவிடமும், தமிழினப் பகைவர் இந்திரா காந்தியம்மையாரிடமும் அடகு வைத்துவிட்டார். இதனால் இவருக்கு இழப்பில்லை? தமிழினத்துக்கே இழப்பு!

இங்கு ஒன்றை நன்றாகக் கவனிக்கவேண்டும். பார்ப்பனர்கள் நடத்தும் செய்தித்தாள்கள் ஒரு கருத்துக்கும் ஒரு தமிழர் தலைவர்க்கும் மிகுதியான விளம்பரங்கள் கொடுக்கின்றன என்றால், அக்கருத்து தமிழர் நலனுக்கு மாறுபட்டதும், தமிழினத்தையும், தமிழையும், அழித்தொழிக்கும் முயற்சிக்கு ஊக்கமளிப்பதும் ஆகும் என்பதையும், அத்தகைய தலைவருடைய போக்குத் தங்களுக்குச் சார்பானதும், அனைத்துத் தமிழரின் புலனுக்கும் மாறானதும் ஆகும் என்பதையும், உண்மைத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். திரு. அமிர்தலிங்கத்திற்குக் கடந்த சூலை மாதத்திற்குப்பின் கிடைத்த உலக விளம்பரம் இதுநாள் வரை அவர் பெற்றிராததும், பெறுகின்றவாறு கனவிலும் காணாததுமான விளம்பரமாகும். அவருக்கு மனச்சான்று என்று ஒன்றிருந்தால் அஃது அவருக்கே தெரியும்.

இனி, நிலை இவ்வாறிருந்தும், தமிழகத்தில் உள்ள தமிழர் தலைவர்களில் சிலரும் ஏன் அவரைக் கொண்டாடுகிறார்கள் என்றால், அதுதான் தமிழின வரலாற்றின் மெலிவான தன்மையாகும். இப்பொழுதுள்ள தமிழினத் தலைவர்களுள் பலர் இந்திரா காந்திக்கு எதிரான கொள்கையை வெளிப்படையாகச் சொல்ல முடியாதவர்களாக இருப்பவர்கள். அந்த அளவுக்கு அவர்களிடம் பள்ளங்கள், படுகுழிகள் உண்டு. எனவே இந்திராகாந்தி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வெளிப்படையாகவும், செயவர்த்தனே மறைமுகமாகவும் ஆதரிக்கும் திரு. அமிர்தலிங்கனாரின் அரசியல் கவட நாடகத்தை, இவர்கள் எதிர்க்க இயலாது. மாறாக, அவர் கருத்துக்கு ஆதரவு தராமலோ, அல்லது தருவது போல் நடிக்காமலோ இருந்துவிட முடியாது.

இனி, திரு. அமிர்தலிங்கத்தின் தனிப்பட்ட நடைமுறையில் என்னவுண்டு; கூட்டணித் தலைவர்கள் அனைவருமே வாய் திறவா மூங்கைகளா என்று எவரும் வியப்படையத் தேவையில்லை. சூலைமாதக் கலவரத்தின் தாக்கத்தாலும், இனிமேல் அவர்கள் இலங்கைக்குப் போய் மூச்சுப்பிடித்து வாழவேண்டிய நோக்கத்தாலும் திரு. அமிர்தலிங்கத்தின் நிழலைப் பற்றினால் தவிர, அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆனானப்பட்ட 'விடுதலை'ப் பாவலர்களுக்கும், 'சுதந்திர' வீரர்களுக்குமே அந்த நிலைகள் என்றால் பிறரைப் பற்றிக் கருத்துச் சொல்ல என்ன இருக்கிறது. இவர்களின் நிலைகளுக்குத் தொண்டைமான் நிலை எவ்வளவோ தாழ்வில்லை.

எப்படியோ, கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி விட்டது. அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகி, அதுவும் தேய்ந்து ஒன்றுமில்லாமற் போகும் நாள் என்றோ, தெரியவில்லை. விடுதலைப் புலிகளுக்கே வெளிச்சம்

—**தமிழ்நிலம்:** இதழ் எண்: 27(11-12-83)

# 22. தமிழீழ விடுதலையின்றித் தமிழரைக் காப்பது தலையின்றி முண்டத்தைக் காப்பதாகும்!

**இந்திரா - செயவர்த்தனே சூழ்ச்சியில் விடுதலைப் போராளிகள் சிக்கிவிடக் கூடாது!**

**தமிழீழ விடுதலையைக் கைவிட்டுவிட்டு எதிர்காலத்தை இருட்டாக்கிக் கொள்ளவேண்டாம்!**

**விடுதலைப் போராட்டக் குழுக்கள் ஒன்றிணைந்து செயல்படுவது நல்லது!**

**தேவையானால் போராட்ட இளைஞர் குழுக்கள் கூட்டுத் தலைமை அமைத்துக் கொள்ளலாம்!**

**அரசியல் தலைவர்களை இனியும் நம்ப வேண்டாம்!**

இலங்கைத் தமிழர்க்கு நேர்ந்து வரும் கொடுமைகள் உலக வரலாற்றில், விடுதலை இயக்கங்களுக்கு நேர்ந்த கொடுமைகள் அனைத்திலும் உச்சமானவை. இனி, இவை முடிவானவையும் அல்ல. ஒரு நாட்டின் விடுதலை இயக்கப் பாதையில், இந் நேர்ச்சிகள் கூடுதலானவையே ஆனாலும், நாம் இதனினும் குறைந்த விலை கொடுத்து விடுதலையைப் பெற்று விட முடியாது! எனவே இக் கொடுமைகளை முன்வைத்து, விடுதலைக் கோரிக்கையைக் கைவிட்டு விடுவதோ, அல்லது அதற்குக் குறைவான மதிப்புடைய ஒரு தீர்வை நாம் ஏற்றுக் கொள்வதோ, வெகுமதியுடைய உரிமைப் போராட்டத்தையே இழிவு படுத்துவதாகும்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இவ்வகையில், ஈழத்தமிழரின் இனவுரிமைப் போராட்டம் கைநெகிழ்க்கப்படுமானால் இனி எந்தக் காலத்திலும், தமிழினம் தன்னை அடிமைத் தளையிலிருந்து மீட்டுக் கொள்ளும்போராட்டம் ஒன்றைத் தொடங்க முடியாமலேயே போய் விடக்கூடும். சூட்டுப் பாலைச் சுவைத்த தெனாலிராமன் பூனைக்குட்டி போல், எந்தப் போராட்டத்திற்கும் எதிர் காலத் தமிழர் அஞ்சவே செய்வர். தமிழினத்தையே காலங் காலமாய் அடிமைப் படுத்தி விடும் இத்தகைய முடிவை எவரும் நினைத்துப் பார்க்கவே கூடாது. தமிழீழ விடுதலையை விட்டுக் கொடுத்துவிட்டுத் தமிழர்களைக் காக்க முயல்வது, தலையை விட்டு முண்டத்தைக் காப்பது போல் ஆகும்! தமிழீழ விடுதலையைக் கை விடுவது எதிர் காலத்தை இருட்டாக்கிக் கொள்வதுமாகும்!

தொடக்கத்திலிருந்தே இந்திரா- செயவர்த்தனே பேச்சுத் தீர்வுக்கு நாம் செவி சாய்த்திருக்கக் கூடாது. ஆனால், ஏதோ ஒரு காலகட்டத்தில், செயற்கொடுமைகளின் சூட்டு அழுத்தத்தில் அவ்வாறான தீர்வுக்கு நாமும் காத்திருக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. வெயில் கொடுமை தாளாமல் ஓர் ஒற்றைப் பனைமர நிழலில் ஒதுங்கியவன், அந்த நிழலை விட்டு நகர மனமில்லாமல் இருப்பது போல், நம் தமிழர் ஒன்றிய விடுதலை முன்னணித் தலைவர்களும், காலாற்றிக் கொள்ள வந்த இடத்திலேயே நிலையாகத் தங்கி விடவும் எண்ணி விட்டனர் போலும்.

இனி, அதுவுமல்லாமல், அனைவரும் வந்து அந்த ஒண்டிப் பனைமர நிழலிலேயே தங்கலாம் என்றும் அறை கூவி அழைப்பது போல், இந்திரா-செயவர்த்தனே பேச்சுத் தீர்விலேயே நிறைவு காணவும் விரும்புகிறார்



கள் போல் தெரிகிறது. இந்நிலை உண்மையாகவே ஆகி விடுமானால் இஃது இனத்தையே காட்டிக் கொடுக்கும் செயலல்லாமல் வேறாக இருக்க முடியாது. இத்தகைய அரசியல் தலைவர்களை இனியும் போராட்ட இளைஞர்கள் நம்பவேண்டுவதில்லை.

எவ்வாறாயினும், தமிழீழ விடுதலைப் போராட்டம் இனி, இளைஞர்கள் தோள்களிலேயே வந்து அழுத்தி விட்ட சுமையாகப் போய் விட்டது. எனவே, விடுதலைப் போராட்டக் களத்தில் குதித்துவிட்ட இளைஞர்கள் இனியும் பல குழுக்களாகப் பிரிந்து இயங்குவது நல்லதன்று. அது மேலும் பல அழிவுகளைத் தருவதுடன், இரண்டகங்களுக்கும் வஞ்சகங்களுக்கும் வழி விட்டதாகவும் ஆகிவிடும். ஆகவே, புலிகள் இயக்கம் முதலிய விடுதலைப் போராட்டக் குழுக்கள் இனி விரைந்து ஒன்றிணைவது எல்லா வகையிலும் நல்லது. அவர்கள் தங்களுக்குள் ஓர் இணைவை ஏற்படுத்திக் கொண்டு, நல்ல எண்ணத்துடன் பேசி முடிவு செய்து ஒரு கூட்டுத் தலைமையை உருவாக்கிக் கொண்டு செயல் படலாம். திசை மாறிச் செல்லும் கப்பல்களை விட நாம் விரும்பிய வாறு வலித்துக் கொள்ள உதவும் எளிய துடுப்புப்படகுகளே நமக்குப்போதுமானவை! அவையே நாம் விரும்பும் உரிமைத் தீவுக்கு நம்மை அழைத்துப் போகும் நம்பிக்கை உடையவையாக இருக்கும்! வாழ்க தமிழீழம்!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 27(11-12-83)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 23. அமிர்தலிங்கம் இப்பொழுதுதான் உண்மையை உணர்கிறார் !

**இதற்கு அவர் எடுத்துக்கொண்ட கால இடைவெளி மிகுதி! தேவையற்றது! அக் கால இடைவெளியில் கிளர்ந்த உணர்வு தணிந்துவிட்டதே!**

**எதிரியை வலுப்படுத்தவே இக் காலத் தாழ்ச்சி பயன்பட்டது!**

**நிலஉரிமை மீட்புக்குக் காலம் மிகவும் இன்றியமையாதது! போராட்டக் காலத்தை உருவாக்க முடியாது; உருவான காலத்திலேயே போராட்டத்தை நடத்திக் கொள்ளவேண்டும்!**

**மிகக்கனிந்த காலம், தமிழீழ அரசியல் தலைவர்களின் மெத்தனத்தால் கை நழுவிப் போய்விட்டது!**

**இனி, இவ் விடைக்காலத்திற்குள் செய்துகொள்ள வேண்டிய முயற்சிகளைப் பற்றித் தலைவர்களும், தமிழீழ விடுதலைப் போராளிகளும் தீவிரமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்!**

தமிழீழக் கோரிக்கைத் தொடர்பாக, இலங்கையில் கூட்டப்பெற்ற வட்டமிசை மாநாட்டின் முடிவை உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், மாநாட்டின் முடிவாக எதனையும் அறிவிக்காமல், மாநாடு மே மாதம் 5-ஆம் பக்கல் வரை, தள்ளி வைக்கப்பட்டதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டைப் பெரும்பாலார் பெரிதும் நம்பியிருந்த நேரத்திலேயே, இம் மாநாடு எந்த நோக்கத்தில்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



கூட்டப் பெறுகிறது, யார் யார் இதன் பின்னணியில் உள்ளனர், அவர்கள் இந்த மாநாட்டின் நோக்கங்களை எவ்வெவ்வகையில் திசை திருப்பக் கூடும், இறுதி முடிவு எப்படியிருக்கும் என்பன பற்றியெல்லாம், தெளிவாக நாம் முன்கூட்டியே அறிவித்திருந்தோம்.

இன்னும் குறிப்பாக இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழீழ ஒன்றிய விடுதலை அணியின் பொதுச் செயலாளரும், எவ்வாறு தவறான முடிவுக்குத் தம் போக்குகளைத் தொடர்புபடுத்திக் கொண்டார் என்பதையும், அவர்தம் நெகிழ்ச்சி நிலைகளையும் மிகவுறுதியுடன் சுட்டியிருந்தோம்.

இப்பொழுது, நாம் சுட்டியிருந்த படியே, ''மாநாட்டினால் பயன் ஏற்படும் என்று தம்மால் கருத முடியவில்லை'' என்றும், அதனால் பெரிதும் கவலைப்படுவதாகவும் கூறியிருக்கிறார். இது காலங் கடந்த விளங்கிக் கொள்ளுதலாகும் என்பது மட்டுமன்று, இந்த மாநாட்டின் தொடக்கத்தின் பொழுது அவர் வெளியிட்ட நம்பிக்கைக் கருத்துக்கும், அதனடிப்படையில் அவர் காட்டிய நெகிழ்ச்சிக்கும் நேர் மாறானதும், பின் விளைவை உணராததுமாகும். ஒருவேளை இப்பொழுது அவர் கூறுவதும் அவர் நோக்கத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரு தந்திரக் கடைப்பிடியாகவும் இருக்கலாம். அவ்வாறின்றி, செயவர்த்தனா மேல், அவர் ஏதோ ஒரு நலன் நோக்க அடிப்படையில் வைத்த நம்பிக்கையின் தளர்ச்சியை இது காட்டுமானால், அவரின் காலங்கடந்த அறிவுணர்தலையும் கூட ஒருவகையில் நாம் பாராட்டலாம்.

இவ்வகையில், இப்பொழுதுங்கூட, அவருக்கும் அவரை நம்பிக் கொண்டுள்ள கூட்டாளிகளுக்கும் நாம்

சொல்லுகிறோம். **மாநாடு இன்னும் மாதக் கணக்காக அன்று, ஆண்டுக்கணக்காக நடைபெற்றாலும், அதன் முடிவு ஒன்றுதான். அது தமிழீழமாக இருக்கவே முடியாது.** அதை இத்தனை முயற்சிகளுக்கும் காலக் கடத்தலுக்கும் பின்னர்தான் உணர்ந்துகொள்ள முடிந்தது என்றால், அது நம் அரசியல் அறியாமையையே காட்டும்; அல்லது நாம் மக்களை நம்பவைத்துக் கழுத்தறுத்துக் கொண்டுள்ள சூழ்ச்சி நிலையையே காட்டுவதாகும்.

ஆனால், அவர் இன்னமும் தம்மை மக்கள் நம்ப வேண்டும் என்று விரும்புவாரானால், அவர் கடந்தகால நிலைகளைக் கொண்டு, எதிர்கால உறுதிகளை இனிமேலாவது, கட்டமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சாணேறி முழம் சறுக்குவதென்பது, அரசியல் முயற்சிகளுக்குப் பொருந்தி வரலாம்; விடுதலை முயற்சிக்கு அந்நிலை எள்ளளவும் பொருந்தாது. விடுதலை உணர்விலும், நிலவுரிமை மீட்பு முயற்சியிலும், முன்வைத்த காலைச் சிறிது காலம், நிலை குத்தியிருக்கலாமே தவிர, பின்னிழுக்கக் கூடாது. நின்ற நிலையிலிருந்து ஓர் அடிகூட முன்னேறாமல் இருக்கலாம். ஆனால், ஓர் அடிகூட பின்வாங்க எண்ணவும் கூடாது. ஆனால், அமிர்தலிங்கத்தினது முன் அண்மைக்கால நிகழ்ச்சிகள், நெகிழ்ச்சிகளே அல்லாமல் வேறில்லை.

**இந்த உணர்வு நிலைகளை அவர் உண்மையிலேயே பெற்றிருப்பாரானால், அவர் இதைப் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட கால இடைவெளி மிகுதியானது; தேவையற்றது. அந்தக் கால இடைவெளி, நேற்றுப் புடை திரண்டு வீறுபொங்கி எழுந்த வல்லுணர்வைப் பெரிதும் தணிவித்து விட்டதே!** இன்னுஞ் சொன்னால் அவரால் விட்டுக் கொடுக்கப்பட்ட காலத்தாழ்ச்சி, எதிரி



தன்னை வலுப்படுத்திக் கொள்ளவும், நம்மை நாம் வலுக் குறைத்துக் கொள்ளவுமே பயன்படுத்தப் பெற்றது என்றால், அதை அமிர்தலிங்கம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். அல்லாவிடில் அவரின் இன்றைய உணர்வு நிலை உண்மையாகவே இருக்க முடியாது.

விடுதலைப் போராட்டத்திற்கு, காலம் மிகவும் இன்றியமையாதது. **ஒரு போராட்டத்திற்கான காலத்தை நாம் உருவாக்க முடியாது; உருவாகும் காலத்தில் போராட்டத்தை நடத்திக்கொள்ளவேண்டும்.** அந்த முறையில், கடந்த சூலை மாதத்திற்குப் பின், தமிழீழ விடுதலைக் கோரிக்கையை உறுதியறிவிப்புச் (பிரகடனம்) செய்யக் காலம்நன்கு கனிந்திருந்தது. **மிகக் கனிந்து நின்ற அக்காலம் அமிர்தலிங்கம் குழுவினரின் மெத்தனத்தால் கைநழுவிப் போய்விட்டது** இனி அதனை மீண்டும் எவ்வாறு தோற்றுவிப்பது? நாமே செயற்கையாக ஒரு வன்முறைத் தாக்குதலை உருவாக்க முடியுமா? அமிர்தலிங்கத்திற்கும் இந்திரா காந்திக்கும் மட்டுமே விளங்குகின்ற அந்த அரசியல் தந்திரம், ஏதோ நிலாமண்டிலத்திலிருந்து வந்து விடவில்லை, நமக்கெல்லாம் விளங்காது என்பதற்கு.

இப்பொழுதும் சொல்கிறோம், தமிழீழப் போராட்டத்தில் இந்திராகாந்தியின் தலையீடோ, பார்த்தசாரதிகளின் குரங்கு நிலை ஒப்புரவு முயற்சிகளோ, தமிழ்ப் பூனைகளுக்கு இன்று மட்டுமன்று, எக்காலத்திற்கும் பயன்படப்போவதில்லை என்பதை அமிர்தலிங்கங்கள் உணரவேண்டும்! பார்ப்பனர்களை உள்ளடக்கிக் கொண்ட எந்தப் போராட்ட முயற்சிகளும், தமிழர்களுக்கு எந்த வகையிலும் முழுப்பயனைத் தந்துவிட முடியாது; இந்திய விடுதலையும், அதன் பின்விளைவுகளுமே அதற்குப் போதுமான சான்றுகள்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

முதலில், கை நழுவிப்போன கடந்த கால அருமையை நாம் உணர்ந்து விட வேண்டும். அதனை உணர்ந்தபின் அதற்காக நாம் வருத்தப்படாமல் நம் **கோரிக்கை தமிழீழந்தான்** என்பதை முற்றாகவும் முடிவாகவும் நாம் அறிவித்து விடவேண்டும். சிங்கள பிக்குகளுக்குத் தமிழீழத்திற்குச் செவி சாய்க்காத உறுதியிருக்குமானால், நம் கொள்கையில் நமக்கு ஏன் அவ்வுறுதியிருக்கக் கூடாது? அமிர்தலிங்கம் தம் அறிக்கையில் செயவர்த்தனாவின் நிலையைக் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். "சிங்களத்தரப்பினரின் போக்கு கடுமையாகியுள்ளது. தலைவர் செயவர்த்தனா **உறுதியுடன் செயல்பட்டு ஒரு தீர்வை ஏற்படுத்தாவிட்டால்,** நிலையான தீர்வைக் காண்பது கடினமாகி விடும்" —என்பது அது.

நாமும் அமிர்தலிங்கத்திற்குச் சொல்கிறோம்; கேட்டுக் கொள்கிறோம்; வேண்டிக் கொள்கிறோம்; அவரும் உறுதியுடன் செயல்பட்டு, ஒரு தீர்வை ஏற்படுத்தா விட்டால், தமிழீழத் தமிழர்கள் நிலையான வாழ்வைக் காண்பதே மிகக் கடினமாகி விடும். அந்தத் **தீர்வு தமிழீழ விடுதலையே.**

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது** (671)

**- தமிழ்நிலம் : இதழ்எண்: 36: (1-4-84)**

# 24. தமிழீழம் அமைய இரண்டே இரண்டு வழிகள்!

தமிழீழத்தில் மீண்டும் கொந்தளிப்பு தொடங்கியுள்ளது. இந்நிலை இன்னும் கொடுமையானதாக மாறலாம். இதை அவ்வளவு எளிதாக எவரும் தடுத்து விட முடியாது. விடுதலையின் விலை இக் காலச் சூழ்நிலையில் சிறிது கூடுதலாகத்தான் இருக்கும். அறிவியல் முன்னேற முன்னேற மக்கள் மனவியலுக்குக் கொஞ்சம் மதிப்புக் குறையவே செய்யும். அறிவியல், மக்களை 'ஒரு கூட்டம்' என்றே மதிப்பீடும். அவர்களின் உணர்வுநிலைக்கு அறிவியல் அத்துணை மதிப்பளியாது. எனவே மக்களின் உரிமை உணர்வுகளை விடுதலை வேட்கைகளைக் கருவிகளாலேயே அரசியலார் ஒடுக்கிவிட முற்படுவர். அரசியலும் அறிவியலும் ஒன்று சேர்ந்ததால்தான் உலகம் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இத்தகைய காலக்கட்டத்தில்தான் நம் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறுகிறது. என்ன செய்வது? போராடித்தான் தீரவேண்டும்.

இனி, இக் காலத்தில், எழும் எந்த ஒரு மக்கள் எழுச்சியையும், அரசியல் சிக்கலாக மாற்றிவிடும் வல்லமை இக்கால அரசியல்காரர்களுக்கு இயல்பாகவே கைவந்த கலையாகப் போய்விட்டது. நமக்கும் எதையும் அரசியல் கண்கொண்டு பார்ப்பதே வழக்கமாகி விட்டது. உண்மையாகப் பார்த்தால் எல்லாம் அரசியல்தான்! அஃதாவது எதுவும் அரசியலில்தான் போய்முடிய வேண்டும். அதற்காக எல்லாவற்றையுமே

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அரசியலில் தொடங்க வேண்டும் என்று எண்ணிவிடக் கூடாது. காதல் உணர்வெல்லாம் கலியாணத்தில் போய்முடியும் என்பதால், காதலே கலியாணமாகி விடக் கூடாது. காதலுணர்வு வேறு; கலியாணவுணர்வு வேறு. இரண்டையும் தனித் தனியாகவே சுவைக்க வேண்டும். இதைவிட இன்னும் ஒரு விளக்கமான உவமை கொடுத்தால், எல்லார்க்கும் இது விளங்கிவிடும். உலகம் நிலையாமை உடையதுதான்; நாம் அனைவரும் என்றேனும் இறந்துவிடப் போவது உண்மைதான். ஆனால், அதற்காக வாழத் தொடங்கும்போதே, அதே சிந்தனையாக நாம் இருந்துவிடக் கூடாது.

இவற்றைப் போன்றதுதான் விடுதலை உரிமை உணர்வும். விடுதலை உரிமைப் போராட்டம் என்பது அரசியலன்று. உணர்வியல்! மனஉரிமையியல்! அது வெற்றி பெற்று நாடு கிடைத்த பின்னரே அஃது அரசியலாக மாறவேண்டும். அதுவரை அஃது ஓர் உரிமைப் போராட்டமே! எனவே மக்கள் உரிமை நல நோக்கு அடிப்படையிலேயே அது சிந்திக்கப்பட வேண்டும். அரசியல் அடிப்படையில் சிந்தித்தால் அதற்கு முடிவே ஏற்படாது. தொடங்கிய இடத்திலேதான் நாம் நின்று கொண்டிருக்க வேண்டும்.

திருமணமாகிய மகனும் மகளும், குடும்பத்திலிருந்து பிரிந்து தனியாகப் போய்க் குடித்தனம் நடத்த விரும்புகிறார்களென்றால், அதைக் குடும்பம் சுமையானது; பல இடர்ப்பாடுகள் உடையது, என்னும் உலகியல் அடிப்படையில் சிந்திக்கவோ, நம் வல்லமையையெல்லாம், அவர்கள் மேல் பாய்ச்சி அவர்களின் உரிமை வாழ்வு வேட்கைக்குத் தடைபோட்டு விடவோ கூடாது. "ஒவ்வொருவரும் உரிமைபெற்று, இன்பம் துன்பம் இரண்டையும் தெரிந்து கொள்ள வேண்டும். விடுதலைக் காற்றை நுகர வேண்டும்' என்னும் மாந்தவியல்— உயிரியல் அடிப்படையிலேயே எவரும் அதைச் சிந்திக்க வேண்டும்.



கத்தி நம் கையில் உள்ளதால், எல்லாரையும் வெட்டி வீழ்த்திவிடலாம் என்பதும், துமுக்கி (துப்பாக்கி)யை நாம் கையில் எடுத்துக் கொண்டதால், எல்லாரையும் சுட்டுப்பொசுக்கி விடலாம் என்பதும் அரசியல் அகந்தையே தவிர அரசியல் அறமாகாது. இப்படிப்பட்டவர்களுக்கு இறுதியும் அப்படியே இருக்கும் என்பது வரலாறு எனவே மக்கள் உரிமை உணர்வை — விடுதலை வேட்கையை — இரக்க உணர்வோடும், வாழ்வியல் அன்பு உணர்வோடும் சித்திக்க வேண்டும்.

இக்கால் தமிழீழ விடுதலை உணர்வு யாராலும் இவ்வாறு சிந்திக்கப்படவில்லை. ஆட்சியாளர்களாகிய செயவர்த்தனாவும், இந்திராவும் மட்டுமல்லர், தமிழீழ, தமிழக, அரசியல் தலைவர்களும் கூட, அதை அரசியலாகவே சிந்திக்கின்றனர். எனவேதான், இவ்விடுதலைப் போராட்டங்கள் தீராத இழுபறிச் சிக்கலாகவே இருக்கின்றன. காலமும், அறிவியல் வளர்ச்சியும் அவர்களுக்குத் துணையும் செய்கின்றன. ஒருவகையில் தூண்டியும் விடுகின்றன.

இந்நிலையில், நம் தமிழகத் தலைவர்களும், இச் சிக்கலைத் தீர்க்க, **'இந்திய அரசே படையனுப்பு'** என்றும் **இல்லையானால் தமிழகமே கிளர்ந்தெழுந்துபடை நடத்திச் செல்லும்'** என்றும் பலவாறு கூக்குரலிடுகின்றனர். இஃது, உண்மையிலேயே அரசியலும் ஆகாது; உரிமை உணர்வியலும் ஆகாது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

முதலில், இந்திய அரசு படையனுப்புவதென்பது என்றைக்குமே நடவாதது. காரணம் **தமிழர்களுக்குச் சார்பாகவும், செயவர்த்தனாவிற்கு எதிராகவும் இந்திரா அரசு செயல்படவே படாது. ஏனெனில் இரண்டு பேருமே தமிழினத்திற்கு எதிரிகள்.** இதை இன்னமும் விளங்கிக் கொள்ளாமலிருப்பதுதான் நமக்கு மிக வியப்பாக உள்ளது. விளங்கிக் கொண்டால், இந்திராவிடம் இன்னமும் நம்பிக்கை வைத்திருப்பதில் பயனே இல்லை. (ஒருவேளை தங்களுக்கு அது பயனளிக்கலாமோ, என்னவோ?) அவர்கள் இரண்டுபேரும் தமிழினத்தையே ஒழித்துக்கட்ட முயலுவார்களே தவிர, காக்க மாட்டார்கள்.

இனி, இரண்டாவது, அப்படியே, நாம் நினைப்பதற்கு நேர்மாறாக, இந்திரா அரசு இலங்கைக்கு ஓர் ஒப்புரவு (சமாதான) நோக்கத்திற்காக, (அதுவும் தமிழரைக் காக்கும் நோக்கத்துடன் இருக்காது) ஒரு படைப் பகுதியை அனுப்பினாலும், அந்நிலை என்ன விளைவை உருவாக்கும் என்று சொல்லவே முடியாது. **அதுவே மூன்றாம் உலகப் போருக்கு அடிகோலினாலும் வியப்பதற்கில்லை.** எனவே, இந்த நச்சுத்தேர்வை நம்மினும் மிகுந்த சாணக்கிய அறிவு படைத்த இந்திராகாந்தி செய்யவே மாட்டார். செய்தாலும் அது தமிழினத்திற்கே மேலும் அழிவை உண்டாக்கும்படியே இருக்கும் (இதை நம் அரசியல் தலைவர்கள் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.)

இவ்விக்கட்டான நிலையில் தமிழீழ வெற்றிக்கு வேறென்னதான் செய்ய முடியும்? அதற்கு, இரண்டே இரண்டு வழிகள்தாம் உண்டு.



அவற்றுள் ஒன்று, இந்திரா காந்தி உண்மையாகவே தமிழீழத் தமிழர்கள் மேல் (இங்குள்ள தமிழர்கள் மேல் அன்று) இரக்கம் கொண்டு, அவர்கள் முற்றுமே அழிந்து போய்விடக்கூடாது என்றும், அவர்களும் உரிமை பெற்று வாழட்டும் என்றும் இனிமேல் ஒருவேளை நினைத்தால், (அவ்வாறு நினைப்பார் என்பது நம் உள்ளத்தில் சிறிதும் படவே இல்லை.) **தமிழீழப் போராட்ட இளைஞர் அணிகளின் தலைவர்களை உடனே அழைத்து, அவர்களின் விடுதலைக் கோரிக்கைக்கான உண்மையான காரணங்களை அக்கறையுடனும் அன்புடனும் பரிவுடனும் கேட்க வேண்டும். அத்துடன் அவை செயல்படுத்தக்கூடியவையனால், நடுநிலை உள்ளத்துடன் அவற்றைச் சிந்தித்துச் செயலுக்குக் கொண்டு வர வேண்டும்.** இதை, எந்தவகைப் படையையும் அனுப்பாமலேயே, மிக அமைவாக அவரால் செய்ய முடியும். ஆனால், செய்வாரா என்பதை யாராலும் சொல்ல முடியாது.

இனி, இதை அவர் செய்யாத விடத்து, தமிழீழ விடுதலைக்கென்று உள்ள இரண்டாவது வழி, **தமிழீழப் போராளிகள் கைகளை வலுப்படுத்துவது; அஃதாவது அவர்கள் அறிவியல் நிலையில் மிகு வளர்ச்சி பெற்ற படைக் கருவிகளை வாங்கிக் கொள்வதற்கு நாம் பண வகையில் உதவுவது அவற்றைக் கொண்டு விடுதலைப்போரை நிகழ்த்தும் வல்லமை-மன உரம்-அவர்களிடம் உண்டு.**

ஆனால், நம்மிடம் அவர்களுக்குப் பொருள் வகையில் உதவி செய்யும், உள்ள ஈரம் இருக்கிறதா? இருந்தாலும் அதைச் செய்து விடும் துணிவும், துறவுள்ளமும் நமக்கு வருமா? அவர்களுக்காக இரக்கப்படும் நம்மிடம்-நம் தலைவர்களிடந்தான்-கோடி கோடியாகக் குவிந்து கிடக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இறதே! அவற்றில் பத்தில் ஓரிரண்டு பங்கைச் செல விட்டாலும் போதுமே! அவர்கள் கைகளைக் கருவிகள் வலுப்படுத்திவிட முடியுமே! ஆனால், நாம்தாம் பேச்சில் வல்லவர்களாயிருக்கிறோமே உயிரைக் கொடுத்தாலும் கொடுப்போம்; சேர்த்து வைத்த பணத்தைக் கொடுக்கமாட்டோமே! அதைத்தான் நாம் சுவரொட்டிகளாக அச்சிட்டு மாநாடுகளையும் தேர்தல்களையும் நடத்தி, அரசியல் செய்து கொண்டிருக்கின்றோமே! பின் எப்படிக் கொடுப்போம்? எனவே, இந்திராவையே படையனுப்பக் கேட்டுக்கொண்டே இருப்போம், தமிழீழத்தில் கடைசித் தமிழன் இருக்கும் வரை! தமிழனே வீறு கொண்டு எழு! ஆனால் மடியில் உள்ள பணத்தைக் கை விட்டு விடாதே! நீ அரசியல் பண்ண அஃது என்றுமே வேண்டும்! வாழ்க தமிழ்! வாழ்க வாழ்க தமிழினம்!

—தமிழ்நிலம்: இதழ் எண்37: (22-4-84)

# 25. இலங்கை - அதுலத்முதலியும் இந்தியாவின் பி. சி. சேத்தியும் ஒரே மனப்பான்மையரே!

**பஞ் ாபியர், அசாமியரிடம் கொடுமையான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, இந்தியா செயவர்த்தனாவைத் தட்டிக் கேட்க முடியாது!**

**இந்திய தேசியப் பாதுகாப்புச் சட்டம். ஆங்கிலேயரின் ரௌலட் சட்டத்தைவிடக் கொடுமையானதே!**

**தேசிய இனங்களின் விடுதலை உணர்வை இந்திய அரசு மதிக்கவேண்டும் !**

**தமிழீழ விடுதலையை ஆறப் போடுவதன் நோக்கம், அதன் போக்கைத் திசைமாற்றுவதே ஆகும்!**

பஞ்சாபில் நிலைமை நாளுக்கு நாள் மிகக் கொடுமையாகி வருகிறது. செய்தித் தாள்களில் வரும் செய்திகளை விட, அரசுச் சார்பிலும் அகாலிகளின் சார்பிலும் வன்முறைகளும் அடக்குமுறைகளும் மிகக் கொடுமையாகவும் கடுமையாகவும் அங்கு நடைபெற்று வருகின்றன. அகாலிகள் தனிநாடு கேட்பதை அரசு மூடி மறைத்து வருகிறது. பஞ்சாபின் சிக்கலைத் தீர்க்க அரசு ஒழுங்கு நிலைகளைக் கையாளும் போக்கையே கடைப் பிடிப்பதாகக் கூறுவது மிகவும் பொய். பஞ்சாபின் போராட்டத்தை அடக்க இந்திய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது, ஆங்கிலேயர் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்க ரௌலட் சட்டத்தைப் பயன்படுத்தி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யதை விடக் கொடுமையானது. விடுதலைப் போராட்டங்களின் தொடக்கங்களும் வடிவங்களும் வெவ்வேறு வகையாக இருந்தாலும் நோக்கம் ஒன்றே.

உலகெங்கும் உள்ள நாடுகளில் விடுதலைக் கிளர்ச்சி வளர்ந்தோங்கி வருகின்ற காலம் இது. தேசிய இனங்களின் இடையில் மட்டுமன்று. அடக்கி ஆளப்பெறும் மக்களிடையிலும் கூட உரிமைக் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் ஆளுகின்ற பகுதியினர் அக் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் ஏதாவது ஒரு காரணம் காட்டி அடக்கவே செய்கின்றனர்.

இந்தியாவிலும், இலங்கையிலும் மக்களிடையில் நடைபெறும் உரிமைப் போராட்டங்கள் ஒரே வகையைச் சார்ந்தவைதாம்! ஆனால், இங்கு நடைபெறும் அசாமியர், பஞ்சாபியர், மிசோக்கள், நாகாலாந்தியர் (நாகர்கள்) முதலியவர்களின் போராட்டங்களை இந்திய அரசு வேறு வேறு வடிவங்களில் மக்களுக்குக் காட்டுகின்றன. எனினும் அவையும் விடுதலைப் போராட்டங்களே!

தேசிய இனப் போராட்டங்களை, இனப் போராட்டங்கள் என்றோ, மதப் போராட்டங்கள் என்றோ, அவ்வினங்களில் உள்ள சிறுபான்மையரின் - குமுகாயப் பகையாற்றல்களின் (சமூக விரோதசக்திகளின்) வன்முறைகள் என்றோ ஆளும் பகுதியினர்கொச்சையும் இழிவும்படுத்தி வருகிறார்கள். இந்நிலை அவர்களுக்கே நல்ல முடிவுகளைத் தராது. இது மக்களின் உரிமைகளை ஒடுக்குகின்ற பழைய கையாளுமையே!

இந்தியாவைப் பொறுத்த வரையில், இஃது ஓர் ஓரினத் தேசமே அன்று. அல்லது தம்முள் ஒன்றிப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



போகும் தேசிய இனங்களைக் கொண்ட நாடும் அன்று. முற்றிலும் வேறுபட்ட மொழிகள், இனங்கள், பண்பாடுகளைக் கொண்ட, என்றுமே ஒன்றிப் போக இயலாத மக்களைக் கொண்ட நாடாகும் இந்தியா. மேலும் அவ்வினங்கள் ஒற்றுமைப்பட்டு ஒன்றிப்போகும் நிலையில், ஆளும் கூட்டத்தினர் என்றைக்குமே நிலைகளைச் சரிப்படுத்தி விட முடியாது. வெறும் ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று வாய்ப்பந்தல் போட்டு, 'எங்களுக்குள் வேறுபாடுகளே இல்லை' என்று வெளிநாட்டினரை ஏமாற்றலாமே தவிர, இங்குள்ள தேசிய இன மக்களை ஏமாற்றிவிட முடியாது. புதிய கருவிகள் பழைய போக்குகள் என்னும் நிலையில் இங்குள்ள மக்களை என்றென்றுமே அடிமைப்படுத்தி அடக்கி ஒடுக்கி ஆண்டுவிட முடியும் என்றும் நினைத்து விட முடியாது.

எனவே, இங்குள்ள தேசிய இனப் போராட்டங்களைப் புறக்கணிப்பது போலவே, தமிழீழப்போராட்டத்தையும் நினைத்து அதனை ஆறப்போடும் முயற்சி தவறானது என்று எச்சரிக்க விரும்புகிறோம். தமிழீழ விடுதலையை ஆறப்போடுவதன் நோக்கம், அதைத் திசை திருப்புவதற்கே ஆகும் என்பதும் நாங்கள் அறியாத ஒன்றன்று. அனைத்துக்கும் காலம் ஒரு முடிவைக் கற்பிக்கத்தான் போகிறது என்பதை மட்டும் இப்பொழுதைக்கு இங்கே சொல்லி வைக்கிறோம்.

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 38 (6-5-84)**

# 26. முதலமைச்சர்க்கு ஒரு வேண்டுகோள் !

**தமிழக அரசில் 'அயலகத் தமிழர் நல்வாழ்வுத்துறை' அமைச்சுப் பிரிவை உடனே ஏற்படுத்துங்கள்!**

**தமிழர் வாழ்வியல் சிக்கல் உலகறிந்த ஒன்றாகி விட்டது!**

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தமிழக முதல்வர் ம. கோ இராமச்சந்திரனார் அவர்களுக்கு,

ஐயா வணக்கம்!

இக்கால் உலகம் வாழ் தமிழரின் சிக்கல் உலகச்சிக்கல் ஆகி வருகிறது. தமிழர்கள் உலக நாடுகள் பலவற்றிலும் போய்க் கடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வாழத்தொடங்கி, இப்பொழுது அவ்வந் நாட்டுச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப, பலவகை அரசியல், குமுகாயச் சிக்கல்களுடனும் வாழ்ந்து வருவதைத் தாங்களும் அறிவீர்கள்! ஒவ்வொரு நாட்டிலும் அவர்களுக்கு வேறு வேறு தேவைகளும் வேறு வேறு வாழ்வியல் சிக்கல்களும் உருவாகி வருகின்றன.

எல்லா நாடுகளிலும் அவர்களுக்கு உள்ள சிக்கல்களை விட, அண்டையில் இலங்கையில் வாழும் தமிழர்களின் சிக்கல் பெரும் அரசியல் சூழ்ச்சிக்கும், குமுகாயச் சீரழிவுக்கும் ஆளாகி உலகமே தீர்க்க முடியாத ஒன்றாகி நிற்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான ஏதிலிகள், ஆதரவும் அடைக்கலமும் தேடித் தமிழ்த் தாயகத்திற்கும், வேறு பல நாடுகளுக்கும் வந்தவாறும் சென்றவாறும் உள்ளனர். அரசியல் முறையில் அவர்களின்



சிக்கலைத் தீர்ப்பதும், அவர்களுக்கு வாழ்வளிப்பதும், தமிழக ஆட்சி நிலையில் நமக்கு இயலாதனவாகி இருக்கின்றன. தமிழகமே வடநாட்டினரின் தில்லியாட்சிக்கு, அரசியல், குமுகாயவியல், பொருளியல் மற்றும் பண்பாட்டியல் நிலைகளுக்குப் பெரும் அடிமையாகி நிற்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

ஒவ்வொரு நாளும் இச் சிக்கல்கள் மேன்மேலும் அதிகமாகிக் கொண்டு வருகின்றனவேயல்லாமல் குறைந்தபாடில்லை. தாயகம் நாடி அடைக்கலம் தேடி வந்த அவர்களுக்கு, நம் தமிழக அரசும் ஏதோ அவ்வப்பொழுது சிறுசிறு ஆதரவுகளையும், வாழ்வியல் உதவிகளையும் செய்து வருகின்றதன்றி, நிலையான ஓர் அரசியல் தீர்வை நம்மால் செய்ய முடியவில்லை. அவ்வாறு செய்யவும் இன்றுள்ள நிலையில் நம்மால் முடியாது.

இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் சிக்கலே ஒரு புறம் தீர்க்கப் பெறவியலாமல் இருக்கின்ற நிலையில், சிங்கப்பூர், மலேசியா, மொரீசியசு, பர்மா, அந்தமான், போலும் அயல் நிலங்களிலும், ஆந்திரம், கருநாடகம், கேரளம், மகாராட்டிரம் போலும் அயல் மாநிலங்களிலும், நம் தமிழர்களின் வாழ்க்கை, பெரிதும் அவலத்திற்கு உள்ளாகி வருவதை நாம் அன்றாடம் உணர வேண்டியவர்களாகி வருகிறோம்.

சிங்கப்பூர், மலேசியா வாழ் தமிழர்கள் மேலும் அங்கு வாழ்வதற்குரிய குடியுரிமை, வாழ்வுரிமை பெற முடியாதவர்களாகி, எப்பொழுது தாயகம் திரும்புவமோ என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பர்மா தமிழர்கள் ஏற்கனவே தம் வீடு நிலங்களையும் சொத்துகளையும் பர்மா அரசிடம் பறிகொடுத்து விட்டு ஏதிலிகளாய் இங்கு வந்து நிற்கின்றனர்.

அந்தமானில் தமிழர்கள், வங்காளியர்களின் சுரண்டல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

மொரீசியசில் உள்ளவர்கள் தமிழ்க் கல்வி கற்பதற்கும் இயலாதவர்களாகி நம் மொழி, பண்பாடுகளை மறந்து வருகின்றனர்.

கருநாடகத்திலும், ஆந்திராவிலும், மகாராட்டிரத்திலும், கேரளத்திலும் வாழ்கின்ற தமிழர்களுக்குக் கல்வி, குடியிருப்பு, தொழில், வாழ்வுரிமை முதலிய பலவகையான இடர்ப்பாடுகள் தலை தூக்கியிருக்கின்றன.

இந்நிலையில், உலகம் வாழ் அனைத்துத் தமிழர்களுக்கும் உள்ள அன்றாட வாழ்வியல், அறிவியல், அரசியல் போராட்டங்களுக்கு நாம் துணை போகின்றவர்களாக இருக்கிறோம். தமிழர்களுக்குரிய தாய் நிலத்தவர்கள் என்ற முறையில் அவர்களுக்குப் பலவகையிலும் உதவும் இனவியல் கடமைகள் நமக்குண்டு. அவர்களின் தாழ்ச்சியான நிலைகளை அப்படியே நாம் புறக்கணித்து விடமுடியாது. அவர்களின் தாய்மொழிக் கல்விநிலைக்கும், பண்பாட்டு அரசியல் நிலைகளுக்கும், நமக்குள்ள அதிகார நிலைகளில் நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியும். இவற்றை அயல்நாட்டுச் சிக்கல்கள் என நாம் ஒதுக்கிவிட முடியாது. அது நமக்குகந்த பண்பாடும் அன்று; இனநலவுணர்வு சான்ற உரிமைச் செலுத்தமும் அன்று. தன் இனத்தைத் தானே அழிக்கும் அல்லது அழியப் பார்த்திருக்கும் கொடுமையே ஆகும்.



எனவே, நம் தமிழக அரசின் அமைச்சரவையில், **அயலகத் தமிழர்களுக்கான நல்வாழ்வுத் துறை** என்னும் ஒரு பிரிவை உடனே அமைத்து, உலகிலுள்ள வேறு நாடுகளில் உள்ள தமிழர்களின், அவர்களின் பல்வேறு தேவைகளின் புள்ளி விளத்தங்களை உடனடியாக நாம் திரட்டியாக வேண்டும்; அவர்களுடன் உடனே நாம் அரசியல் முறையில் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். இவற்றுக்கெல்லாம் ஒரு நிலையான தொகையாகப் பலகோடி உருபாக்களை நாம் ஒதுக்கியாக வேண்டும்.

ஏற்கனவே, தமிழரல்லாத பலவேறு மொழி, இன மக்கள் தமிழகத்தில் வந்து, இங்கு வாழும் தமிழர்களின் வாழ்வியல், நிலவியல் சுரண்டல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அத்துமீறிய சுரண்டல்களையும் நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அதன் வழி, நம் தாயகம் நோக்கி வருகின்ற இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, கருநாடக, மகாராட்டிரத் தமிழர்களுக்கு நாம் வாழ்வளித்தாக வேண்டும். அடிபட்டும், அல்லற்பட்டும் வருகின்ற அவர்கள் நம்மிடம் அல்லாமல் வேறு எங்கே புகலிடம் தேடிப் போவார்கள்?

எனவே, இதுபற்றி நீங்கள் உடனடியாகச் சிந்தித்து, அறிஞர்களைக் கலந்து கருத்தாய்ந்து ஒரு நல்ல முடிவை விரைவில் தெரிவித்து, நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம். தங்களின் நல்லெண்ணச் செயற்பாட்டை அறிய நாளும் காத்திருக்கிறோம்.

—**தமிழ்நிலம்: இதழ் எண் 42:(5-8-84)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 27. இந்திராகாந்தியும் செயவர்த்தனாவும் வரலாற்றடிப்படையில் தமிழினத்தின் ஒரே வகையான எதிரிகளே!

**தமிழினத்திற்கு அவர்களால் இன்று மட்டும் இல்லை, என்றுமே மீட்சி கிடைக்காது!**

**கிளர்ந்துவரும் தமிழினத்தை அடியோடு வலிவிழக்கச் செய்யும் அவர்களின் ஏற்பாடே, இன்றைய இலங்கைக் கொடுமைகள்!**

இலங்கையில் கண்ணுக்குக் கண்ணாகக் கொடுமைகள் நடக்கின்றன. தமிழினம் பூண்டோடு சிதைக்கப்படுகிறது; பார்க்கின்றோம்; கேட்கின்றோம். ஆனால், ஏதும் செய்ய இயலாதவர்களாக வெலவெலத்துப் போய் நிற்கிறோம்!

ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுகள் மூலைக்கு மூலை நடைபெறுகின்றன. இருந்தும் காட்சிகள் தொடர்கின்றன. என் செய்வது? எங்கே போய் முறையிடுவது? இந்திய நாடோ, இந்திராவோ, இலங்கைத் தமிழர்களின் இன அழிவை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனரே தவிர, அதட்டிக்குரல் கொடுக்கவும் மனம் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் என்ன?

வேறொன்றுமில்லை; இந்திராகாந்தியும் செயவர்த்தனாவும் வரலாற்று அடிப்படையில் தமிழினத்தின் ஒரே



வகையான எதிரிகளே! அவர்களால் தமிழினத்திற்கு இன்று மட்டுமன்று, என்றுமே மீட்சி கிடைக்காது! இஃது உறுதி! உறுதி! இம்மியும் பொய்யில்லாத உறுதி!

கடந்த 83-ஆம் ஆண்டு சூலை மாதக் கலவரத்திற்கு மேல் இந்த ஆண்டுக் கலவரங்கள் தொடங்கிவிட்டன! சென்ற ஆண்டாகிலும் **பார்த்தசாரதி நாடகம்** நடந்தது. இந்த ஆண்டு **இந்திரா காந்தி நாடகமே** நடக்கிறது! பார்த்தசாரதிக்குப்பின், செயவர்த்தனேவும் அவருடைய மகனும், தமிழீழத்தின் இரண்டாம் எதிரியாகிய இலங்கை அமைச்சர் அதுலத் முதலியும் பலமுறை இந்தியாவுக்கு வந்து இந்திராகாந்தியைச் சந்தித்துப் பேசி, விருந்துண்டு போய் விட்டனர். சிக்கல் தீர்ந்த பாடில்லை; இன்னும் அப்படியேதான் இருக்கிறது.

அவர்கள் பேச்சுரை நாடகம், தமிழர்களின் சிக்கலைத் தீர்ப்பதற்காக இல்லை என்பதும், கிளர்ந்து வரும் தமிழினத்தை அடியோடு வலிவிழக்கச் செய்யும் அவர்களின் ஏற்பாடே இன்றைய இலங்கைக் கொடுமைகள் என்பதும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து விட்டன. இது தொடர்பாக நாம் முன்பே பலமுறை எச்சரித்திருக்கின்றோம். இருந்தும் இங்குள்ள தலைவர்கள் இன்னும் இந்திரா காந்தியை நம்பிக் கொண்டிருப்பது வியப்பினும் வியப்பாய் இருக்கிறது.

இன்றும் வெளிப்படையாகச் சொல்கிறோம். இன்றுள்ள நிலையில், இலங்கைச் சிக்கலைத் தீர்க்க இரண்டே இரண்டு வழிகள்தாம் உண்டு.

ஒன்று, தமிழக விடுதலையை உலகுக்கு வெளிப்படையாக அறிவித்துத், தமிழீழப் போராட்டத்துடன் இணைந்து போராடுவது (முதலில் கருத்தளவில் போராடுவதே போதும்).

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இரண்டு, தமிழீழப் போராளிகளின் கைகளை நம்மால் முடிந்த ஒரே ஒரு வழியில் வலுப்படுத்துவது! அஃதாவது அவர்களுக்குக் கருவிகள் வாங்க நம்மால் இயன்ற தொகைகளை—குறைந்தது ஐம்பது கோடி உருபாக்களைத் திரட்டிக் கொடுப்பது.

இந்த இரண்டு வழிகளில் அல்லாமல் தமிழீழக் கிளர்ச்சிக்கு இங்குள்ள தமிழர்களால் இங்கிருந்து கொண்டு, வேறு எதுவுமே பயனுடையதாகச் செய்துவிட முடியாது.

இக் கருத்துகள் இங்குள்ள பலருக்கு வேண்டாதவையாகவும், வெற்றுரைகளாகவும் சிலருக்கு அச்சந் தரும் முயற்சிகளாகவும் படலாம். இவர்களின் பயனற்ற பல் வேறு செயல்களை விட, இவையொன்றும் அத்துணைக் கீழான அல்லது பயனற்ற கருத்துரைகள் அல்ல என்பதைக் காலம் உணர்த்தத்தான் போகிறது.

இக் காலகட்டத்தில் தமிழர்களுக்கு நாம் ஒன்றை மிகவும் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறோம். இலங்கையிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, தமிழர்கள் அரசியல்காரர்களை நம்பி, விடுதலையை முன்னெடுத்துச் செல்ல இயலாது. அடுத்து, சாதி, மத வேறுபாடுகளைத் தவிர்க்காமல் நாம் முழு அரசியல் விடுதலை பெற முடியாது. இனி, அரசியல் விடுதலை பெறாமல் பொருளியல் மறுமலர்ச்சி தோன்றவே தோன்றாது. இந்த விடுதலை மெய்ம்மங்களை தமிழீழ, தமிழக விடுதலைப் போராளிகள் நன்கு மனத்தில் பதிய வைத்துக் கொள்வார்களாக!

—தமிழ் நிலம்: இதழ் எண்-43 (19-8-84)

# 28. அதிகாரம் வேண்டுகிறார் அமிர்தலிங்கம்! ஆட்சி வேண்டுகின்றனர் இளைஞர்கள்!

ஆகத்து மாதக் கடைசியில் இலங்கையில் செயவர்த்தனே கூட்டிய வட்டமிசை மாநாட்டில் மீண்டும் கலந்து கொண்டனர் தமிழர் கூட்டணித் தலைவர்கள். அது தொடர்பாகக் 'கடந்த 8 மாதங்களுக்குப் பிறகு உண்மையான சிக்கல் என்ன என்பதை முதல் தடவையாக நாம் உணர்கிறோம்' 'என்றும், யாநிலப் பாராளுமன்றங்களுக்கு அதிகாரத்தை மாற்றுவது தொடர்பாக நடந்த பேச்சுரை உதவும்படியாக இருந்தது' என்றும், தமக்கு 'இது மகிழ்ச்சியாக உள்ளது' என்றும் அமிர்தலிங்கம் கூறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'இந்தப் பேச்சுகள் இலங்கைத் தமிழரின் சிக்கல் தீர்வுக்கு உதவும்படியாக இருந்தன' என்றும், அமிர்தலிங்கம் கூறிய அதே குரல் உணர்ச்சியுடன், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் அதுலத் முதலியும் கருத்துத் தெரிவித்ததாகச் செய்திகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

செய்திகள் உண்மையாக இருக்குமானால் நாம் வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு புறத்தில், தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணயம் வைத்து வீர இளைஞர்கள் தமிழீழ விடுதலைக்குத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், செயவர்த்தனே அரசுடன், அதிகாரப் பகிர்வுக்குப் பேச்சுரை நடத்தி வருகின்றனர் தமிழீழ

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஒன்றிய முன்னணித் தலைவர்கள். இது விடுதலை உணர்வு ஒருமுகப்பட்டு வருவதைச் சிதறடிக்கும் முயற்சியாகவே நமக்குப்படுகிறது. ஒரு பக்கம் உடன்பாட்டுக்கான இணக்க முயற்சிகள்! மறுபக்கம் மாறுபாட்டுக்கான தீர்வுமுயற்சிகள்!

இந்த இரண்டுங்கெட்டான் நிலைகளாலேயே தமிழீழ விடுதலை மேலும் மேலும் பின்தள்ளிப் போவதுடன், விடுதலைக்காகப் போராடி வரும் இளைஞர்களுக்கும் ஓர் இக்கட்டான சூழலே தொடர்ந்து வருவதாக உள்ளது. பொதுமக்கள் வேறு இதனால் மிகவும் தாக்கப்படுகின்ற நிலை இன்னும் ஓயாமல் ஒழியாமல் நடந்து வருகிறது.

எதிரிகள் தமிழினத்தின்மேல் ஒரு சிறு அளவாவது நல்லெண்ணம் கொண்டவர்களாக இருந்து, அவர்களின் இனஅழிப்புமுயற்சிகளைத் தளர்த்தும்அல்லது தவிர்த்துக் கொள்ளும் முயற்சி உடையவர்களாக மாறிவருவார்களானால், நாம் ஒருவாறு அமைதிப் பேச்சுக்குச் செவிசாய்ப்பதிலும், அதன்வழி இதற்கொரு தீர்வுகாண முயல்வதிலும் பொருளுண்டு. ஆனால், சிங்கள அரசோ தன் கொடுங் கைகளை இன்னும் தளர்த்திக் கொள்ளவே இல்லை. அதற்கு மாறாக, மேலும் மேலும் அது தன் தமிழின அழிப்பு முயற்சியில் இசுரேலியர்களின் கொடும் படைகளிடமும், பிரித்தானியரின் பாதுகாப்புக் கூலிப் படைகளிடமும், தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாகப் போராடுவதுடன், தென்னாப்பிரிக்கா, பாக்கித்தான், அமெரிக்கா முதலிய நாடுகளின் போர்க்கருவிகளையும் கப்பல்களையும் அன்றோ வருவித்துத் தன்னை வலுப்படுத்திக் கொண்டு வருகிறது.



ஒருபுறம் வட்டமிசையின் அமைதிப் பேச்சுக்கு அழைப்பு; மறுபுறம் இசுரேலின் கொலைப் படையான மொசாத்துக்கும், பிரிட்டனின் கூலிப் படைக்கும் அழைப்பு! இவ் விரண்டகமான சூழ்ச்சியை ஏன் கூட்டணி இன்னும் விளங்கிக் கொள்ள மறுக்கிறது? இதில் என்ன பயன் விளைந்து விடும் என்று அது நம்பிக்கை கொண்டிருக்கிறது?

எட்டு மாதங்களுக்குப் பிறகு தமிழர் சிங்களவர்களுக்கிடையில் ஏற்பட்ட உண்மையான சிக்கல் என்ன என்பதை இப்பொழுதுதான் உணர்வதாகவும், அதற்கே மகிழ்ச்சியடைவதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறுவாரானால், கடந்த ஆண்டு முழுவதும் கூட்டணி நடத்திய பேச்சுரைகளும் இந்திராவின் சிறப்புத் தூதுவர் பார்த்தசாரதி நடத்திய பேச்சுகளும் என்ன அடிப்படையில் நடத்தப்பட்டன என்பதையும், அதன் பயன் என்ன என்பதையும் அவர் கூறமுடியுமா? ஏற்கனவே, கடந்த முப்பதாண்டுகளாக உள்ள தமிழினத்தின் கோரிக்கைகள் என்ன ஆயின? அவை பற்றிய அனைத்து முயற்சிகளுமே சிங்களவர்களுக்கு விளங்கவே இல்லை என்று கூறுகிறாரா திரு. அமிர்தலிங்கம்? இஃது என்ன விழுந்து விழுந்து எழும் வேடிக்கைப் பேச்சு?

நாம் மிக்க அன்போடு கூட்டணிக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். அருள்கனிந்து மக்களை ஒன்றும் தெரியாதவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டாம். செயவர்த்தனாவுடனோ, பிற சிங்கள ஆளும் இனத்தினுடனோ உடன்படிக்கைப் பேச்சு என்னும் நிலையில், நீங்கள் ஏதாவது செயற்கரிய செயல் ஒன்றைச் செய்வதாகக் கருதிக் கொண்டிருப்பீர்களானால், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்னும் நிலையில், தமிழீழத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழர்களுக்கு வேண்டுவது அரசியல் விடுதலையே; அஃதாவது தனித்தமிழீழமே! வெறும் அதிகாரப் பகிர்வோ, பதவிப் பகிர்வோ அன்று என்பதைச் சிங்களவர்களுக்குத் தெளிவாகத் திட்டவட்டமாகத் தெரிவித்து விடுங்கள்!

நம் இனத்தின் இளைஞர்களெல்லாம் மந்தை மந்தையாகச் சாகடிக்கப்படும் நிலையில், நம் இனப் பெண்டிரெல்லாம் குழுக்குழுவாய்க் கற்பழிக்கப்படும் நிலையில், நாம் அவர்களின் பிணங்களுக்கிடையிலும், அவல ஒலங்களுக்கிடையிலும் அமைதிப் பேச்சுப் பேசி, உடன்படிக்கை என்னும் பெயரால் சிரித்து மகிழ்ந்து கைகுலுக்கிக் கொண்டிருப்பதில் ஓர் எள்ளத்துணையும் பயனில்லை. பார்த்தசாரதியின் பேச்சுரை நடந்து கொண்டிருந்தபொழுது, சென்னையிலிருந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வண்ணப் பட்டத்தை செய்தித்தாள் வானில் பறக்கவிட்டு, மக்களைக் கழுத்து வலிக்க அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கச் செய்துவிட்டு, இறுதியில் பெருமூச்சு விடச் செய்தீர்கள்.

இப்பொழுது மேலும் கற்பனை விண்ணூர்திகளைப் பறக்கவிட்டு வேடிக்கை காட்டுகிறீர்கள். வேண்டாம் இந்த வீடண விளையாட்டுகள்! எத்தனை நாளைக்கு நாமெல்லாம் உயிர் வாழ்ந்துவிடப் போகிறோம்?

நம் வீர இளைஞர்கள் போர்க்களத்தில் குருதி நீச்சல் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் செவிகளில் மீண்டும் இந்தப் பழைய புளித்துப்போன உடன்படிக்கை முகாரிப் பண்ணையே இசைத்துக் காட்டாதீர்கள். பரணிப் பாடலைக் கேட்கவே அவர்களின் வீர உள்ளங்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் விரும்பிப் பெறவிருக்கும் விடுதலைநாளின் வெற்றிமுழக்கம் இதோ, கேட்கப் போகிறது! அருள் கனிந்து அதற்கு உங்கள் முயற்சி தடுப்புச்சுவராக அமைய வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறோம்! வெல்க தமிழீழப் போராட்டம்! வாழ்க தமிழீழம்!

**—தமிழ் நிலம்: இதழ் எண்: 44 (2-9-84)**

# 29. இலங்கைச் சிக்கலை ஐந்தாண்டுக்குள் தீர்க்கவில்லையானால், இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதுமே அழிந்துபடும்!

**யார் தலையீடு செய்தாலும், என்னவகைப் பேச்சுகள் நடந்தாலும், இறுதியில் தமிழீழம் பெறுவதே முடிவாக இருக்கும்!**

**இலங்கைத் தமிழர் அழிக்கப்பட்டால், உலகில் சிங்களர் ஒருவரும் மிஞ்சாமல் அழிக்கப்படுவர் என்பதை செயவர்த்தனே உணரவேண்டும்!**

நாளுக்குநாள், வேளைக்கு வேளை இலங்கைத் தமிழர்கள் அங்குள்ள சிங்கள வெறியர்களால் அழிக்கப்பட்டுக் கொண்டே உள்ளனர். உலகம் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கவே பூட்டோ தூக்கிலிடப் பெற்றது போல், தமிழர்கள் செத்துக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக, அனைவரையும் விட நாம்சொன்ன கருத்துகள்தாம் நடந்து வருகின்றன. ''பேச்சுரைகளால் பயனில்லை; அஃது ஓர் ஏமாற்று; கண்துடைப்பு'' என்று '**தமிழ் நிலம்**' தான் முதன் முதலில் கருத்தை வெளிப்படுத்தியது. 'இல்லை அதனால் பயன்கிடைக்கும்; இந்திராகாந்தி இரக்கம் வைத்துவிட்டார்! இதோ நடந்துவிடும்; அதோ நடந்துவிடும்' என்றெல்லாம் இங்குள்ள தலைவர்கள் வாய்வீச்சு வீசினார்கள். படை திரட்டிக் கொண்டு சிலர் பாயப் போனார்கள். தில்லிக்கும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சென்னைக்கும் இலங்கைக்கும் சிலர் ஆலாய்ப் பறந்தார்கள்! இன்னும் சில திறமைசாலிகள் 'தமிழகமே திரண்டு எழும்' என்று நாவீரம் பேசித் தங்கள் பெயருக்கு நல்ல விளம்பரம் தேடிக் கொண்டார்கள். சிலரோ, மாநாடு, பேரணி என்றெல்லாம் கூத்தாட்டம் காட்டிப் பணத்தை வாரிக் குவித்துக் கொண்டார்கள். ஆனால், அந்தோ, அனைத்தும் புசுவாணங்களாகவே போய் விட்டன! ஊமை வெடிகளாகவே போய்விட்டன.

'இலங்கைத் தலைவரும் இந்தியத்தலைமையமைச்சரும் தமிழரைப் பொறுத்தவரையில் ஒரேகருத்தினர்தாம்' என்பதை நாம்தாம் ஆணித்தரமாக அறைந்து கூறினோம். ஆனால், எவரும் அதைக் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. மேலும் மேலும் இந்திராகாந்தியால் இலங்கைத் தமிழினம் விடிவுபெறும் என்றே நம்பிக் கிடந்தனர்; நம்பிக் கொண்டே உள்ளனர். ஆனால், அந்த அம்மையார் அரசியலில் ஒநாய் என்று எவருமே உணரவில்லை.

பொதுவாகத் தமிழினத்தைப் பற்றிக் கூறவேண்டுமானால் தனக்குத்தானே துணைவராத ஒரு பேயினம் இது! தனக்குத்தானே அழித்துக் கொள்ளும் ஒரு நாயினம் இது! தன்னைத் தானே காட்டிக் கொடுத்துக் கொள்ளும் ஒரு நரியினம் இது! (நல்லவர்கள் பொறுத்துக் கொள்க!)

உண்மையானவர்களின் — நேர்மையாளர்களின்— கருத்துகள் இதன் செவிகளுக்கு எட்டவே எட்டா! நயவஞ்சகர்களின் நயப்புரைகளுக்கே செவிகொடுக்கும் தன்மை உடையவர்கள் இவர்கள்! எனவே நம் கருத்துகள், வேண்டுதல்கள் அனைத்தும் பாலை நிலத்து நிலவு ஒளியாகப் பயனின்றிக் கழிந்தன! கழிகின்றன! அங்குப் பெய்யும் மழையைப் போல் வீணாகப் போயின; போகின்றன!



நாம் என்ன செய்ய இயலும்? 'நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார், சொற்பொருள் சோர்வுபடும்' என்னும் இனநலப்பேராசான் இன்னுரைக் கொப்ப, நம் கருத்துரைகள் சோர்வுபட்டுப் போயின. கோடி கோடியாய்க் குவித்து வைத்திருப்பவர்களே, இந்த மீட்பு முயற்சியில் நாடி தளர்ந்து, நரம்பு துவண்டு கிடக்கின்றனர். 'ஆ' 'ஊ' என்னும் அலட்டல் ஒலிகளும் 'ஓ' 'ஏ' என்னும் உறுமல் ஓசைகளும் தமிழினத்தை மீட்குமா? ஆனால் மீட்கும் என்று அவர்கள் நயப்பாசை காட்டி மக்களை வயப்படுத்தி வைத்திருக்கிறார்கள்; அவர்களை ஒன்றுக்குமே உதவாத ஆட்டுக்குட்டிகளாய் ஆக்கி வருகிறார்கள்! அவர்களுக்கு இவர்களைத் தவிர வேறு எவரையும் சிந்திக்கத் தெரியாது! அந்த அளவில் இவர்களுக்கு அவர்கள் முழு அடிமைகள்! இனி, நிலை இப்படியே போனால் என்னாவது?

எந்தமிழ் ஈழ இளைஞர்களே! வீறுகொண்ட வேங்கைகளே! விடுதலைப் புலிகளே! அதனால்தான் சொல்லுகிறோம். இங்கு ஏற்கனவே அடிமைப்பட்டு, முதுகெலும்பு முறிந்து இந்திராக் குழுமத்திற்கு என்றென்றும் எடுபிடிகளாய், இளைத்த துடைப்பங்களாய்ப் போன, இவ்வேதுங்கெட்ட தமிழகத்தில் அவல மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் எங்களைப் போலும் தவளைக் கூட்டத் தலைவர்களை ஒருபோதும் நம்பாதீர்கள்! நாங்கள் ஒருகாலும் உங்களுக்குத் துணை வர முடியாது!

நாங்கள் பணந்தின்னிப் பேய்கள்! பகட்டு விளம்பரக் குடுகுடுப்பைக்காரர்கள்! ஏதிலிப் பிணங்களை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு, வழியில் போகிறவர்களைக் கறக்கும் பழிகார நரிக்குறவர்கள்! இந்த நிலையில் எங்களுக்குக் கிடைக்கும் தமிழீழப் பிணங்களை மட்டும் நாங்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கள் சும்மா விட்டுவிட முடியுமா? மடியில் முடிந்த எங்கள் காசுகளை எடுக்கவியலாதபடி எங்களால் ஒப்பாரி மட்டுமே வைக்க முடியும்? மற்றதெல்லாம் எங்களால் எப்படி முடியும்? வீரம் என்பது எங்களுக்கு ஏது? அது தான் இந்திராக்களின் கால்களில் ஏற்கனவே விழுந்து கிடக்கிறதே!

எப்படியோ, நீங்கள்தாம் உங்களுக்காகப் போராட வேண்டும். உங்கள் மூச்சியக்கம் உள்ளவரையிலும் இந்த ஏதுங்கெட்ட தமிழினத்திற்காகப் போராடுங்கள்! போராடிப் போராடிச் சாகுங்கள்! விடாதீர்கள்! எங்களுக் கும் அப்படிப்பட்ட நிலை ஒன்று வரும்வரை, எங்களால் எதுவுமே செய்ய இயலாது! அசையக் கூட முடியாது!

**எவ்வாறேனும் கிளர்ந்து வரும் இலங்கைச் சிக்கலை இன்னும் ஓர் ஐந்தாண்டுக்குள் தீர்க்கவில்லையானால், இலங்கையில் உள்ள தமிழினமே முழுவதும் அழிந்துபட்டுப் போய்விடுமே! ஐயகோ! யார் தலையீடு செய்தாலும் என்ன வகைப் பேச்சுகள் நடந்தாலும் இறுதியில் தமிழீழம் பெறு வதே உங்கள் முடிவாக இருக்கட்டும்! மூச்சு முட்டப் போராடுங்கள்!**

இன்னொன்றையும் உங்களிடத்தில் இந்த நேரத்தி லேயே சொல்லிக் கொள்கிறோம். உங்களுக்கு எங்களால் எந்த வகையாலும் உதவ முடியாவிட்டாலும் எங்களிடத் தில் உள்ள பணத்தையாவது உங்களுக்குத் தந்து உதவ லாம்! ஆனால் அதையும் தரவியலாத பேராசைக்காரர் களாக நாங்கள் இருக்கிறோம்! எங்கள் குடும்பப்பாசங் களும், வாழ்க்கை ஆசைகளும் பதவி அங்காப்புகளும் அவற்றை உங்களிடத்தில் தூக்கித் தரவியலாமல், ஏன், கிள்ளியும் தர இயலாமல் எங்களைத் தடுத்துக் கொண்டு நிற்கின்றன!

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



எனவே இலங்கை வைப்பகங்களில், அங்குள்ள முதலாளி களின் வீடுகளில் நீங்கள் கொள்ளையடிப்பதைப் போல, எங்கள் இல்லங்களில் மூடிக் கிடக்கும் இரும்புப் பெட்டி களையும் நீங்கள் கொள்ளையடியுங்கள்! அவற்றில் தேங்கிக் கிடக்கும் பண வெள்ளத்தையும் உங்கள் விடுதலை வயலில் பாயவிடுங்கள்! அப்போதாவது தமிழீழ விடுதலைப் பயிர் செழித்து வளரட்டும்!

அப்படியே, மாந்த இனக்கொலையிற் கொடியவன் செயவர்த்தனேவுக்கும் ஒன்றைச் சொல்லி வையுங்கள்:

**இலங்கையில் உள்ள தமிழர்கள் அழிக்கப்பட்டால், அதையடுத்து, உலகின் எந்த மூலையில் போய் ஒளிந்து கொண்டிருந்தாலும், அங்குள்ள சிங்களவர்கள் அனைவரும் தேடிப்பிடித்து ஒருவர் கூட எஞ்சாமல் திட்டமிட்டு, அழிக்கப் படுவார்கள் என்பதை அவ் வரக்கனுக்குக்கூறி எச்சரிக்கை செய்யுங்கள்.**

இறுதிவரை உங்கள் மூச்சுகளே உங்களுக்கு உதவட் டும்! உங்கள் கைகளே உங்களுக்காகப் போராடட்டும்! உங்கள் தோள்களே உங்கள் துமுக்கிகளைச் சுமந்து திரியட்டும்! மீண்டும் சொல்கிறோம்! உங்களுக்காக நீங்களே போராடுங்கள்! எங்களை நம்பவேண்டாம்! நாங்கள் உங்களைவிட அடிமைகள்! நாடி நரம்பில்லாத வர்கள்! கோழைகள்! எங்கள் உரிமைக்கே போராடாத இளித்தவாயர்கள் நாங்கள்!

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 46(14-10-84)**

# 30. இலங்கைச் சிக்கலை, இந்தியா உலக ஒன்றியப் பேரவைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்!

இலங்கையில் உள்ள சிங்கள அரசின் கொடுமையால், தமிழினம் நாளுக்கு நாள் அழிந்துகொண்டே வருகிறது. ஒவ்வொரு நாளும் குறைந்தது இருபது தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். பல நூறு இளைஞர்கள் தொடர்ந்து, உயிர்ச்சிதைவால் துன்புறுகின்றனர். வீடுகளில் உள்ள இளம்பெண்கள், படைத்துறை வெறியர்களால் ஒவ்வொரு நாளும் தூக்கிச் செல்லப் பெற்றுப் பெண்மையை இழந்து கொலை செய்யப் பெறுகின்றனர். தமிழர்கள் வீதிகளிலும் நடமாட அஞ்சிக் கிடக்கின்றனர். ஒவ்வொரு நொடியும் என்ன நடக்குமோ என்று அஞ்சிய வண்ணம் ஏராளமான தமிழர்கள் தம் பெண்டு பிள்ளைகளுடன் முடிந்த வழிகளிலெல்லாம் தமிழகத்திற்கும் வேறு அயல்நாடுகளுக்கும் சென்று ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

உலக உருண்டையில் இத்தகைய கொடுமை நிலைகள், உயிர்த்துன்பங்கள், வேறு எந்த நாட்டிலும் எந்த இனத்துக்கும் இன்றுவரை நேர்ந்ததில்லை. மாந்தத் தன்மையே அற்ற கொடிய சிங்களவர்களால், நேரும் இத்தகைய அரக்கச் செயல்களை உலகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதுதான் வியப்பிலும் வியப்பாகவும், துன்பத்திலும் துன்பமாகவும் இருக்கிறது. அன்றாடச் செய்தித்தாள்களைப் பார்த்தவுடனேயே





ஓர் அவலம் நம் மனங்களைக் கவ்விக் கொள்கிறது. இத் துயரச் சாயல்களுக்கிடையில், வேறு எந்த நிகழ்ச்சியும் நமக்கு மனநிறைவு தருவதில்லை. வேறு எதிலும் மனம் ஈடுபடுவதில்லை. ஐயகோ! இந்த அவலநிலைகள் எப்பொழுதுதான் மாறுமோ, தெரியவில்லையே!

தமிழகத்தில் உள்ள அரசோ, தலைவர்களோ ஏதும் செய்ய முடியாத கையற்ற நிலையில்தானே இருக்க வேண்டி உள்ளது. இங்குள்ள தலைவர்கள் வேண்டுகோள்கள் விடுப்பதைவிட வேறு ஒன்றும் செய்ய முடியாதவர்களாகவே இருக்க வேண்டி உள்ளது.

அண்மையில் நடந்த தேர்தலால், திராவிட இனத்திற்கு ஒரு பெரும் தாக்கம்வேறு நேர்ந்துள்ளது. மக்கள் வேறு, தெரிந்தோ தெரியாமலோ, தங்களுக்கு உகந்த ஓர் ஆட்சியைத் தேடிக் கொள்ள இயலாதவர்களாக முற்றிலும் வடநாட்டு இந்தி வெறியர்களையே நம்பித் தங்களை ஒப்படைத்துள்ளனர். நடுவண் அரசில் உள்ளவர்களுக்கோ, இலங்கையில் உள்ள தமிழர்களின் சிக்கலை நேரடியாகத் தீர்ப்பதற்கு மனம் வரவில்லை. பெரிய ஆற்றல் வாய்ந்தவராகத் தம்மை உலகுக்கு அறிமுகப்படுத்திக் கொண்ட இந்திரா காந்தியோ, தமிழீழச் சிக்கலைத் தீர்க்காமல், பேச்சுரை, தூதுரை என்று ஓராண்டுக்கும்மேல், சிங்களர் கொடுமைகளை எண்ணெய் ஊற்றி வளர்த்தார். என்ன செய்வது? ஆடு, தன்னை வெட்டுபவனையே நம்புவதுபோல், மக்களும் இந்திரா கட்சியையே நம்பி அரசை அதன் கைகளில் ஒப்படைத்துள்ளனர்.

இம் மாதத் தொடக்கத்தில் தலைமையமைச்சர் இராசீவ் காந்தியால் எடுக்கப்பட்ட படகுப்பிடி நிகழ்ச்சி

ஓரளவுஆறுதல் தந்துள்ளது. அதன்பின்னர் சிங்கள அரசு சிறிதே வளைந்து, தான் சிறைப்படுத்தியிருந்த 17 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவித்துள்ளது. இதுவரை நடந்த கொடுமைகளுக்கெல்லாம், இந்த ஒரு நிகழ்ச்சிதான் ஒரு சிறு அளவு நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது ஆனாலும் காலை ஒடித்ததற்குக் காதைப் பிடித்துத் திருகுவது போன்ற நிகழ்ச்சியே இது. வெறித்தனமும் கொலைத்தனமும் மிகுந்த சிங்கள ஓநாய்களுக்கு இந்த எதிர்ப்பு என்ன உணர்வை வருவித்துவிடும்?

எனவே, இந்தியத் தலைமையமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. இராசீவ் காந்தி, உண்மையிலேயே இதற்கொரு தீர்வுகாண விரும்புவாரானால், இச் சிக்கலை உலக ஒன்றியப் பேரவையில் (ஐ.நா வில்) ஒரு பெருஞ் சிக்கலாகத் தீர்மானம் எழுப்பி முறையிடுதல் வேண்டும். உ. ஒ. தின் அமைதிப் படையையாகிலும் தேவையானால், போர்ப்படையையாகிலும் இலங்கைக்கு உடனடியாக அனுப்பி வைக்கக் கோரிக்கை எழுப்புதல் வேண்டும். உ. ஒ. தில் உறுப்பினர்களாக உள்ள 157 நாடுகளில் ஒன்றுதானே இத்தகைய முயற்சியைச்செய்ய முடியும் இந்தியாவே பின்வாங்கும்போது, வேறு எந்த நாடு இந்தச் சிக்கலை உலக ஒன்றியப் பேரவையில் தீர்மானமாகக் கொண்டு செல்ல முடியும்? இலங்கையில் உள்ள தமிழினத்தின் தாயினம் உள்ள நாடு இந்தியா தானே! பின் ஏன் இந்தியா தயங்கவேண்டும்? தன் நாட்டுப் படையைத் தான் அனுப்பி நடவடிக்கை எழுப்புகிற துணிவும், அறிவும், அக்கறையும் இந்தியாவிற்கு இல்லையானாலும் உ. ஒ. படையை அனுப்ப அந்தப் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கூடவா நிறைவேற்ற இந்தியாவால் இயலாது? நடுவணரசு தமிழினத்தைத் தன் பகையினமாகக் கருதினால்தான் அது வாளாவிருக்க முடியும். அவ்வாறில்லை என்று கருதினால், ஏன் இந்திய அரசு உடனடியாக இந்த நடவடிக்கையை எடுக்கக் கூடாது? பொறுத்திருந்து பார்ப்போம்.

—**தமிழ்நிலம்: இதழ் எண்: 51(27-1-85)**

# 31. ஈழத் தமிழர்களின் ஈகக் குருதியிலே குளித்து முழுகுகிறார் தொண்டைமான்!

**கற்பிழந்த தமிழ்ப் பெண்களின் கண்ணீரில்**
**மஞ்சள் பூசுகிறார் தொண்டைமான்!**

**தமிழினத்தின் இறுதி வீடணன் தொண்டைமான்!**

**தமிழினத்தின் கொடும் பகைவன் செயவர்த்தனாவின்**
**அரசியல் அடிவருடி தொண்டைமான்!**

**நூற்றுக்கணக்கான மலைத்தோட்டக்**
**காணிகளுக்கு முதலாளி அவர்!**

**செயவர்த்தனா ஏறும் படைக்குதிரை தொண்டைமான்!**

*நுறுங்குபெய் தாக்கிய கூழ்ஆர வுண்டு,*
*பிறங்குஇருங் கோட்டோடு பன்றியும் வாழும்!*

—**அறநெறிச்சாரம்**

*கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து*
*நல்லறி வாளர் இடைப்புக்கு-மெல்ல*
*இருப்பினும் நாய்இருந்தற்றே, இராஅ(து)*
*உரைப்பினும் நாய்க்குரைத் தற்று!*

—**நாலடியார்**

*மானமும் நாணும் அறியார், மதிமயங்கி*
*ஞானம் அறிவார் இடைப்புக்குத் தாமிருந்து*
*ஞானம் வினாஅய் உரைத்தல் நகையாகும்!*

—**பழமொழி**

வற்றிய குளத்தில் வயிறு நிரப்பும் கொக்குகள் போல, சிலர், தமிழினத்திற்கு வந்துற்ற கேடுகளுக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கிடையில் வயிறு நிரப்புவதற்காகவே, அவ்வப் பொழுது தமிழர் தலைவர்கள் என்று தங்களைப் பலவாறும் விளம்பரப்படுத்திக் கொள்வது. அக் கேடுகளில் ஒன்றாகவே கருதப்படவேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட தமிழீழத் தலைவர்களில் ஒருவரே, தமிழீழத்தில் இந்தியத் தமிழர்களாகக் கணக்கிடப் பெறும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைவராக இருந்து கொண்டு, அவர்களால் தம்மை நூற்றுக்கணக்கான குறுக்கங்கள் உள்ள மலைத் தோட்டங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்ட திரு. எசு. தொண்டைமான் என்பவர்.

இவர் இலங்கைத் தொழிலாளர் பேராயம் (காங்கிரசு) என்னும் தோட்டத் தொழிலாளர் கழகத்துக்குத் தலைவர். இவர் தலைமையில் ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் தொழிலாளர்கள் இயங்குகிறார்கள். அனைவரும் இந்தியத் தமிழர். கண்டி, நுவரலியாப் பகுதிகளில் இவர்கள் குடியிருக்கிறார்கள். இவர்களைக் காட்டிக் காட்டிச் சிங்கள அரசிடம், நல்ல பிள்ளையாக நடந்து கொண்டு, தம் சாய்காலையும், பதவியையும், பணத்தையும் ஒருங்கே வலுப்படுத்திக் கொள்வதே தொண்டைமானின் தொண்டு.

1961-இல், இலங்கையின் வடகிழக்கு மாநிலங்களில் தமிழர்கள் அறப்போராட்டம் நடத்தியபொழுது, அப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தால் இவருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படும் என்று அப்பொழுதைய சிறிமாவோ பண்டார நாயகா அரசு மிரட்டியதிலிருந்து, தமிழர்களுக்கு எதிராகவே குரல் கொடுத்து வருபவர் திரு. தொண்டைமான். இப்படி எதிர்க்குரல் கொடுப்பதாலேயே அவர் ஒவ்வொரு சிங்கள அரசவையிலும் அமைச்சராக இருக்க முடிகிறது. இப்பொழுதும் அவர் சிற்றூர்களின் தொழிலமைச்சராக இருக்கிறார். இவர் தமிழ் நாட்டிலிருந்து அங்குச் சென்ற இந்தியத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்.



இவர் பதவி நலங்கருதிப் பல வேளைகளில் அமைதியாக இருந்து, தம்முடைய குடும்பம், வாழ்க்கை என்று மட்டும் இன்பங்கண்டு வருபவர். ஆனால், சில வேளைகளில் சிங்கள அரசுக்கும், தம்மைக் குதிரை யோட்டும் கொடியவர் செயவர்த்தனாவிற்கும், எச்சில் சோற்றுக்கடனாக, நாய்க்குள்ள நன்றியுணர்வுடன், சிலசில கருத்துகளை கக்குவார். அவற்றில் தமிழர்களுக்கு மாறான எதிரான நச்சுத்தன்மைகளே நிறைந்திருக்கும். தமிழினத்தின் இறுதி வீடணன் இவராகத்தான் இருக்க முடியும்.

இவர் அண்மையில், தமிழீழத்தைப்பற்றித் திருவாய்(!) மலர்ந்துள்ள கருத்துகள் கொடிய நச்சுத் தன்மை வாய்ந்தவை.

அவை, "இலங்கையைத் துண்டு போட அனுமதிக்க முடியாது. இலங்கை ஒரே நாடு என்னும் அடிப்படையில்தான் தமிழர் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும். தமிழீழம் பிரிவதை அன்றைய இந்திரா காந்தியும் விரும்பவில்லை; இன்றைய இராசீவ் காந்தியும் விரும்பவில்லை. இலங்கைஅரசு, இலங்கை வாழ் தமிழர்களோடு இணக்கமான உறவு கொள்வதையே விரும்புகிறது. ஆனால் இனக்கலவரத்துக்கு முகாமையான காரணம் விடுதலைப்புலிகளும் வேறு சிலருந்தாம்! இலங்கை ஒரு நாடாக இருக்கவேண்டும் என்ற கொள்கைக்கு மாறு

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பாடான எந்த முடிவையும் இலங்கை அரசு ஏற்காது. விடுதலைப்புலிகள் கருவிகள் ஏந்தி நடத்தும் போராட்டத்தைக் கைவிடும் வரை, இலங்கையின் படைத்துறை நடவடிக்கைகளை நிறுத்த முடியாது'' என்பன ஆகும்.

இவை செயவர்த்தனா கூறியவையா? தொண்டைமான் கூறியவையா? இவை செயவர்த்தனாவின் கொடிய மனத்திினின்று புறப்பட்டவை; தொண்டைமானின் தொண்டையிலிருந்து வெளியேறியவை என்பதில் ஐயமில்லை. ஈழத் தமிழர்களின் ஈகக் குருதியிலே குளித்து முழுகுகிறார் தொண்டைமான்! அங்குக் கற்பிழந்த தமிழ்ப் பெண்களின் கண்ணீரில் மஞ்சள் பூசுகிறார்! தமிழினத்தின் கொடும் பகைவன் செயவர்த்தனாவின் அரசியல் அடிவருடியே தொண்டைமான் என்பதை வெளிப்படுத்திவிட்டார்; ஒருவேளை இவரை, இவர் தாய் சிங்களவனுக்குப் பெற்றெடுத்து விட்டாரோ? ஐயுறுகிறோம்.

—தமிழ்நிலம்: இதழ் எண்: 53 (10-3-85)

# 32. தமிழீழ விடுதலைப் போராளிகள் தங்கள் மன இறுக்கங்களைத் தவிர்த்து ஒன்றுபட வேண்டும்!

## இந்தியாவின் உதவியை எதிர்பார்த்து மேலும் காலத்தை வீணடிக்க வேண்டாம்!

நாளுக்கு நாள் இலங்கையில் தமிழர்களுக்குற்ற கொடுமைகள் மிகுந்து வருகின்றன. ஏனென்று கேட்க, உலகில் எந்த அரசும் முன்வரவில்லை. உலகை ஒன்றியப் பேரவையும் தனக்கிருப்பது ஊமை அதிகாரமே என்பதை மெய்ப்பித்துக் கொண்டுள்ளது. தமிழீழத்தில் உள்ள தலைவர்களோ ஆளுக்கொரு நாடாகச் சென்று, அங்கு, நாள்தொறும் விழுகின்ற பிணங்களைக் கணக்குக் காட்டி, உதவி என்கின்ற பெயரால், தங்கள் மடிகளையும் வயிறுகளையும் நிரப்பிக் கொண்டுள்ளனர். மேனிலையில் எத்தனைப் பேர்கள் உள்ளனரோ, அத்தனைத் தலைவர்களும் சென்னையிலும், மதுரையிலும், திருச்சியிலும், தில்லியிலும் தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டு, நாள்தோறும் ஓர் அறிக்கையைத் தங்கள் தங்கள் இயக்கங்கள் பெயரால் செய்தித் தாள்களில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமிழகத்தில் ஒவ்வொரு பிழைப்பைத் தேடிக் கொண்டு, நிலையாகவே இங்குத் தங்கிவிடத் தீர்மானித்து விட்டனர்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈழப் புரட்சி அமைப்பும், தமிழீழ விடுதலை இயக்கமும்,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஈழமக்கள் விடுதலை முன்னணியும் ஒன்று சேர்ந்து விட்டதாகச் செய்தித்தாள்களில் அறிக்கையும் படங்களும் வருகின்றன. இன்னும் முகாமையான இயக்கங்கள் ஒன்றுசேர்வது பற்றி எச் செய்தியும் இல்லை. ஒன்றிணைந்தவர்கள் மற்றவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லையோ அல்லது மற்றவர்கள் இவர்களுடன் ஒன்று சேர மறுக்கிறார்களோ தெரியவில்லை. இந்நிலையில் அனைத்து இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும் மன இறுக்கமாகவே உள்ளனர் எனத் தெரிகிறது. இந்தநிலை மிகமிக வருந்தத்தக்கது.

ஏற்கனவே கூட்டணித் தலைவர்கள், இந்திராகாந்தியினுடைய சூழ்ச்சிக்கு ஆட்பட்டுப் பார்த்தசாரதியின் பேச்சுரை நாடகத்தாலும், வட்டமிசைக் கூத்தாலும், காலத்தை மிகவும் தள்ளிப்போட்டு, சிங்கள ஆட்சியினை மிகவும் வலுப்பெறும்படி இடங்கொடுத்து விட்டார்கள். இன்றோ, இவ் விளைஞர்கள் இராசீவ் காந்தியை நம்பிக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. இதைவிட அறியாமை வேறொன்றும் இருக்க முடியாது.

ஆரிய இனம் தமிழர்களுக்கு என்றுமே உதவியதாக வரலாறில்லை. வடவாரிய இனத்தவர் சிங்கள ஆரியர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுத் தமிழினத்தைக் காப்பார்கள் என்பதை வரலாறறிந்த எவருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனவே, தமிழீழ விடுதலைக்கு இந்தியா ஒருபோதும் உதவாது. அவ்வாறு ஒரு வேளை அதன் உதவி காலத்தாழ்ச்சியாகக் கிடைத்தாலும், அது தமிழீழத்திற்கு எவ்வகையிலும் நன்மை பயக்காது. இதை எல்லாரும் கல்மேல் செதுக்கி வைத்துக் கொள்ளலாம். இந்திரா காலத்திலிருந்தே, அமிர்தலிங்கத்



திற்கும், அவரையொத்த அரசியல் நன்மை நாடிகளுக்கும் நாம் தெள்ளத் தெளிவாகக் கூறிவருவது இது.

எனவே, தமிழீழ விடுதலையை விரும்பும் இயக்கப் போராளிகள் அனைவரும் இனியேனும், இவ்விறுதிக் காலத்திலேனும், தங்கள் மன இறுக்கங்களைத் தளர்த்திக் கொண்டு, அல்லது தவிர்த்துக் கொண்டு, அனைவரும் ஒன்றிணைந்து சிங்களரின், இனஅழிப்புக்கெதிரான முயற்சிகளைச் செய்து, தமிழினத்தைக் காக்கவும், தமிழீழத்தை வென்றெடுக்கவும் வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். மற்றபடி இந்தியாவின் உதவியை எதிர்பார்த்து மேலும் காலத்தை வீணடிக்க வேண்டாம். இவ் விக்கட்டான நேரத்தில் இராசீவ்காந்தி அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் வெளிநாட்டுச் செலவு மேற்கொண்டதே, தமிழீழச் சிக்கலைப் புறக்கணிக்கவே ஆகும் என்பதை அரசியல் பார்வையுள்ளவர்கள் நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

தமிழீழ மறவர்கள், தம்பி பிரபாகரனும், தம்பி முகுந்தனும் ஒன்று சேர்ந்தால் அனைத்தும் சரியாகிவிடும் என்று மனமார நம்புகிறோம். நம் அன்றைய வேட்கையும் இதுதான்! இன்றைய வேண்டுகோளும் இதுதான்! இல்லெனில் இந்தியாவை நம்பி இவர்கள் இலவு காத்த கிளிகளாகப் போக வேண்டியிருக்கும் என்று அன்புடன் கூறிக் கொள்கிறோம்.

—தமிழ் நிலம்: இதழ் எண்-57 (26-5-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 33. இலங்கையில் பகைச் செயல் நிறுத்தம்!

செயவர்த்தனே—இராசீவ் பேச்சுரையின் முடிவில், சூன் மாதம் 18-ஆம் பக்கல் முதல், இலங்கையில், தமிழீழ விடுதலைப் போராளிகளும், அரசும், **மூன்று மாதக் காலத்திற்குப் போர் நிறுத்த** ஒப்பந்தம் செய்து **கொள்வதெனவும் அப்பொழுதுதான் தாங்கள் எடுத்த முடிவுப்படி அரசியல் முறையில், இரண்டு தரப்பினரும் பேச்சுரை நடத்தித் தமிழீழச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியும் என்றும் தீர்மானித்தனர்.** ஆனால் இதுவும் கடந்த கால முயற்சிகளைப் போல் செயலுக்குப் பொருந்தி வராத, வெறும் காலத்தைக் கடத்தும் கண் துடைப்பு முயற்சியே என்பதற்குப் பேச்சுரை நடந்து கொண்டிருக்கும் பொழுதே, இலங்கையின் படைத்துறை யாழ்ப்பாணப் பகுதிகளில், தமிழர்களைச் சுட்டுக் கொல்லும் வன்முறை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததே சரியான சான்றாகும்.

பேச்சுரைத் தீர்மானத்திற்குப் பின்னும் இலங்கைக் கொடுமைகள் முன்னினும் அதிக அளவில் நாள்தோறும் நீடித்துக் கொண்டிருந்தன. இதற்கிடையில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும், போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பற்றி, அதன் தொடர்பான பலரும் பலவாறான கருத்துகளைப் பல கோணங்களில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரான அதுலத் முதலியே, இலங்கைப் படையுடன் சேர்ந்து, தாமே முன்னின்று தமிழர்களைச் சுட்டுக் கொன்று குவித்து வந்தார். பேச்சுரைக்கு யாரும் மதிப்பு வைத்ததாகவே கருத முடியாமல் இருந்தது.



அதுவும் இரண்டு தலைவர்களின் பேச்சின் முடிவில் வெளியிடப் பெற்ற அறிக்கையில், போர் நிறுத்தத்திற்கு எந்த வகையான கட்டுப்பாட்டையும், எவரும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன், மொத்தமுள்ள முகாமையான ஆறு விடுதலைப் போராளர் குழுவில், ஐந்து குழுக்களே போர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், விடுதலைப் புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை எதிர்த்து வருவதாகவும் கூறி, விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் போர்நிறுத்தத்தை ஏற்காவிடில், இந்திய அரசுக்கு அவர்கள்விடை கூற வேண்டியிருக்கும் என்று வேறு அச்சுறுத்தப்பட்டது.

இனி, பேச்சுரையில் அமைவான அரசியல் தீர்வுக்குப் போர் நிறுத்த ஒப்பந்தமே சரியானது என்று முதலில் கருத்துக் கூறிய செயவர்த்தனே, சூன் மாத இடையில் போர் நிறுத்த அறிவிப்பு நாளுக்கு இரண்டு நாள்களுக்கு முன், கொழும்புவில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் போர்நிறுத்தம் ஏற்பட்டுக் கூட்டுப்பேச்சு தொடங்கப் படுவதற்கு முன்னர், **விடுதலைப் போராட்டக்காரர்கள் முதலில் இரண்டு கட்டுப்பாடுகளை ஏற்றாக வேண்டும் என்றும், அவற்றுள் ஒன்று, அவர்கள் அனைத்துப் போராட்டக் கருவிகளையும் கீழே போடவேண்டுமென்றும், இரண்டு, அவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமென்றும்** கூறினார்.

ஆனால், சூன் 18-ஆம் நாளன்று போர் நிறுத்தம் பற்றிப் பேசிய இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் ''இது **பகைச்செயல் நிறுத்தம் மட்டுமே; போர் நிறுத்தம் அன்று**'' என்று, அவர்கள் எடுக்கப் போகும் நடவடிக்கைக்கு விளக்கம் அளித்துள்ளார்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இவ்வாறு ஆளுக்கொரு பேச்சும், நாளுக்கொரு கொடுமையாகவும் நடந்துவரும், தமிழின அழிப்பு முயற்சிகளை முன் வைத்து, எடுக்கப்பட்ட ஒப்பந்தம் இலங்கை அரசு எல்லா நிலைகளிலும் முன் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது என்பதையே நேரடியாகவும், மறைமுகமாகவும் நமக்குப் புலப்படுத்திக் காட்டுகிறது.

எஃது எப்படியாயினும், எந்த முயற்சியானாலும், மனத் தூய்மையுடனும் உண்மையுடனும் இரு தரப்பினரும் செயல்பட்டாலொழிய வெற்றி காண்பது கடினம் என்பதையே இன்றுவரை நாம் அனைத்து நிலையிலும் உணர்ந்தும், உணர்த்தியும் வருகிறோம். இந்நிலையில் விடுதலைப் போராளிகளும், இலங்கை அரசின் எத்தகைய பசப்புச் சொற்களிலும் அல்லது செயல்களிலும் ஒரேயடியாக நம்பிக்கை வைத்துவிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம். **ஏனெனில் உண்மையல்லாத கரவான ஒப்பந்தங்கள், போரை விடக் கொடுமை நிறைந்தவையும், கோழைமை வாய்ந்தவையுமே ஆகும் என்பதை மறந்துவிடவேண்டாம்.**

—தமிழ் நிலம்: இதழ் எண்: 59 (23-6-85)

# 34. திம்புப் பேச்சில் தென்பில்லை!

**பஞ்சாப் முடிவு தமிழீழக் கோரிக்கையில் தாக்கமுண்டாக்கும்!**

**இராசீவின் நெருக்கடிநிலைக் கருத்து இந்தியாவின் எதிர்காலத்தைச் சீர்குலைக்கும்!**

**அரசின் கருத்துகளுக்கு ஒத்துப்போய்த் தங்கள் நலன்களைக் காத்துக் கொள்ளும் தந்நலக்காரர்கள் எப்பொழுதுமே இருப்பர்!**

**எந்தச் சூழலிலும் மக்களுக்கு நலஞ்செய்யும் கருத்துகளைத் துணிவுடன் கூறுபவர்களே நாட்டின் வளர்ச்சியை நிலைநிறுத்துகிறார்கள்!**

**மீண்டும் நெருக்கடிநிலை வந்தால், நீங்குவதற்கு நீண்டகாலம் ஆகும்!**

**இந்திராவை விட, இராசீவ் வல்லதிகாரத்தை மிகுதியும் விரும்புகிறார்!**

பூடான் மாநிலத்தில் உள்ள திம்பு நகரில் தமிழீழ ஒப்புரவுப் பேச்சுகள் ஒருவாறு தொடங்கி, மீண்டும் ஆகத்து 12-இல் நடைபெறும் என்று அறிவிக்கப் பெற்றுள்ளது. இடையில் கடந்த சூன் மாதம் 18-ஆம் பக்கல் முதல் **'பகைச் செயல் நிறுத்தம்'** (பலர் 'போர் நிறுத்தம்' என்று கூறுவது சரியன்று) இலங்கை அரசு, தமிழீழப் போராளிகள் ஆகிய இரு தரத்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஆனால், திம்புப் பேச்சுகள் நடந்து கொண்டிருக்கும் அதேபொழுது இலங்கை அரசு, அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் நடத்திக் கொண்டுதான் இருந்தது. எனவே, அவற்றை எதிர்கொள்ளவும், எதிர்த்தும் விடுதலைப் போராளிகளும் சில நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. ஆனால், செயவர்த்தனா அரசு வழக்கம்போல் குற்றத்தையும், ஒப்பந்த மீறலையும் போராளிகள் மீதே சுமத்தியது. இதிலிருந்தே அது நாணயமாக நடந்து கொள்ளவில்லை என்பதும் அதன் கரவான நடவடிக்கையும் வஞ்சகமான எண்ணமும் தெளிவாக விளங்குகின்றன.

**மேலும், இரு தரப்பினரும் பேசி முடிவெடுக்கவேண்டிய நிலைக்கு மாறாக, இலங்கை அரசு தான் ஒரு முடிவை எடுத்துக்கொண்டு பேச முற்படுகிறது. இந்நிலை எப்படிச் சரியானதாக இருக்க முடியும்? எனவே, திம்புப் பேச்சால் எவ்வகையான நன்மையும் விளையப் போவதில்லை என்பதை இப்பொழுதே நாம் கூறிவிட முடியும். இதுவும் ஓர் அரசியல் கண்துடைப்பே!**

போராளிகள் தமிழீழத்தையே விரும்புகின்றனர். ஆனால், அரசோ, சில அதிகாரங்களை மட்டுமே பகிர்ந்து கொள்ள விரும்புகிறது. மற்றபடி சிங்களமே ஆட்சிமொழி. புத்த மதமே அரசு மதம்! நாடு பிரிக்க முடியாதது; இலங்கை சிங்களவருடைய நாடே என்னும் முடிவுகளில் இலங்கை அரசு உறுதியும் வீறாப்பும் காட்டுகிறது. இந்நிலையைத் தவிர்க்கத்தானே விடுதலை விரும்பும் இளைஞர்கள் போராடுகிறார்கள்!

எனவே, ஒப்புரவின் (சமாதானத்தின்) நடுப்புள்ளியையே எவரும் எட்ட முடியாமல் போய்விடும் என்பதில்



ஐயமே இல்லை, ஆனால், இலங்கை அரசு இப் பேச்சில் எந்த வகையான முடிவையும் எதிர்பார்க்கவில்லை என்பதை அதன் ஒப்பந்த மீறல் நடவடிக்கைகளே உறுதி செய்துவிட்டன. இனியென்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது? இந் நிலையில் ஏன் இலங்கை அரசு பேச்சைத் தொடர விரும்புகிறது! உண்மையில் அது பேச்சைத் தொடர விரும்புவது ஒப்புரவுக்காக அன்று; இவ் விடைக் காலத்தில் தன்னை ஒரு பெருந் தாக்குதலுக்கு அணியப் படுத்திக் கொள்ளவே ஆகும் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இதற்கிடையில், கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக இழுத்துப் பறித்துக்கொண்டு, ஏராளமான உயிர்களைப் காவு கொண்ட பஞ்சாப் சிக்கலில் இப்பொழுது திடுமென ஒரு தீர்வு ஏற்பட்டுள்ள நிலை மிகவும் கரவானது; கொடுமையானது, லோங்கோவால் ஒரு மதத் தலைவரே தவிர, அரசியல் தலைவரல்லர். அவர் இந்திராவின் கையாளாக முன்பே செயல்பட்டவர். அவரைக் கையோங்கச் செய்வதற்காகவே, பிந்தரன் வாலேயைத் தீர்த்துக்கட்டினார், இந்திரா. பிந்தரன் வாலே கலிசுத்தான் அமையவேண்டும் என்று போராடியவர். அவர்பின்னால் பல்லாயிரக் கணக்கான விடுதலைப் போராளிகள் இருந்தனர். அவர்களைப் படிப்படியாக வலுவிழக்கச் செய்யும் உத்திக்காகவும் இந்திய மக்களிடம் பிந்தரன்வாலே ஒரு பிரிவினைக் காரர், இந்துமதத்தை வெறுப்பவர் என்னும் கருத்து பரவுவதற்காகவுமே, அவரை இந்திரா ஆதரிப்பவர் போல் வளரவிட்டார்.

ஆனால், இந்திராவின் கருத்து, கலிசுத்தான் என்னும் அவருக்கு வேண்டாத மரத்தை அடியோடு வெட்டி



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யெறிய வேண்டும் என்பதுதான் லோங்கோவால் சீக்கியர்களின் எட்டப்பன்! உடனடியாக இதில் தீர்வு ஏற்பட்டால், சீக்கிய இளைஞர்களின் எதிர்ப்பைக் கடுமையாக எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதற்காகவும் கலிசுத்தான் விடுதலைப் போராளிகளைச் சிறிது சிறிதாக அடக்கி ஒடுக்கவேண்டும் என்பதற்காகவுமே இராசீவ் காந்தி, இந்திரா மேற்கொண்ட மெத்தனப் போக்குத் தந்திரத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். இனி, இறுதியாக இப்பொழுது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தப் பார்க்கவே, பஞ்சாப் சிக்கலுக்கு லோங்கோவாலுடன் விரைவு விரைவாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். இதில், **அந்த இரண்டாவது மாங்காய் எது? அதுதான் தமிழீழம்!**

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுக் கருத்துப் போலவே, இலங்கையில் செயவர்த்தனாவும் தேசிய ஒருமைப்பாடு பேசுகிறவர். இரண்டு நாடுகளையும் பார்ப்பனீய முதலாளியமே ஆட்சி செய்கிறது. எனவே, இவ்விரண்டின் ஒன்றில் பிரிவினை ஏற்பட்டால், அது மற்ற நாட்டிலும் ஏற்பட வாய்ப்பளித்து விடும் என்பதையும், அவ்வாறு ஏற்பட விடக்கூடாது என்பதையுமே, கடந்த சூன் மாதத்தில் இந்தியா வந்திருந்தபொழுது, செயவர்த்தனாவும்-இராசீவும் பேசி முடிவு செய்திருக்க வேண்டும். இப்பொழுது அவ்விரண்டு முடிவுகளில் ஒன்று வெளியாகி விட்டது. இன்னொரு முடிவான தமிழீழக் கோரிக்கையில் ஏற்பட வேண்டிய தீர்வு, திம்புப் பேச்சின் இறுதியில் அறிவிக்கப்பட இருக்கிறது. அம் முடிவுக்கு தமிழீழ விடுதலைப் போராளிகள் இசையாவிட்டால், இரண்டு நாட்டு அரசின் தாக்கங்களுக்கும் அவர்கள் ஆளாக வேண்டியிருக்கும் என்பதே, இறுதியில் இந்தியா அவர்கள் முன் எடுத்து வைக்கப்போகும் தீர்வு. எனவே,



பஞ்சாபின் முடிவு தமிழீழக் கோரிக்கைக்குத் தாக்கமாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

மற்றும் இராசீவ் நெருக்கடி நிலையைக் கொண்டுவரப்போவதாக அறிவித்திருப்பது இதை உறுதி செய்கிறது. மற்றபடி, பஞ்சாப் சிக்கலுக்காகவே இராசீவ் நெருக்கடி நிலையைக் கொண்டுவர வேண்டியிருக்கும். ஏனெனில் அதுவே இப்பொழுது நாட்டில் உள்ள சிக்கல்கள் அனைத்திலும் முகாமையானதும், தொடர்ந்து தொல்லை தரக்கூடியதும், ஏன், இராசீவ் காந்தியின் உயிருக்கே ஏதம் விளைவிக்கக் கூடியதுமான சிக்கல். இனி, அதில்தான் இப்பொழுது ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டதே பின்னர் தற்கு நெருக்கடி நிலை பற்றிய முத்தாய்ப்பு என்றால், அது தமிழீழச் சிக்கலை வலிந்து தீர்ப்பதற்கே ஆகும். அதே சமயம் அதற்கான தேவையும் இன்னும் அசாம், நாகாலாந்து, மிசோரம், ஒரிசா முதலிய மாநிலங்களிலும் உள்ளது. அவற்றிலும் இந் நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே இராசீவின் திட்டம்.

திம்புப் பேச்சில் இலங்கையின் முடிவுக்கு, அஃதாவது பிரிவினை கூடாது என்னும் நிலைக்குத் தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒத்துப்போக வில்லையானால், அதே பொழுது இங்குள்ள மேற்கூறிய மாநிலங்களின் சிக்கல்களைக் காரணம் காட்டி நெருக்கடி நிலையை அவர் கட்டவிழ்த்து விடுவார். அவ்வாறு நிகழுமானால், தமிழீழப் போராளிகள் இந்தியாவில் இருப்பது தவிர்க்கப்படும். அல்லது இலங்கை அரசிடம் அவர்கள்பிடித்துக் கொடுக்கப்படுவார்கள் என்பது உறுதியாகத்தெரிகிறது.

அது தொடர்பாகத் தமிழ்நாட்டில் எழும் கிளர்ச்சிகளும் எழுச்சிகளும் (ஒரு வேளை இங்குள்ள தமிழர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

களுக்கும் தலைவர்களுக்கும் உண்மையிலேயே (!) மானச் சீற்றம் (ரோஷம்) வந்து அவை நடந்தால், அவை...) நெருக்கடி நிலையின் எஃகுப் பிடிக்குள் அடக்கி ஒடுக்கப் பட்டுவிடும் என்பது இந்திய அரசின் (அஃதாவது இராசீவ் கும்பலின்) கணிப்பு. அண்மையில், இதுவரை யில் இருந்த J.I.C. என்னும் உளவுத்துறையை அழித்து அதனினும் ஆற்றல் வாய்ந்த N S.B. தேசியப் பாது காப்புக் களரி என்னும் அனைத்து உளவுக் கிளைகளும் உள்ளடங்கிய, மிகப் புதியமான ஓர் உளவு அமைப்பை இராசீவ் ஏற்படுத்தியிருப்பதும் இதன் பொருட்டே என்று எண்ண வேண்டியுள்ளது. இனி இன்னொன்றை யும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். மீண்டும் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டால், அஃது 75-இல் இந்திராகாந்தி அறிவித்த நெருக்கடி நிலை போல் இராது, அதைவிட மிகக் கொடுமையாகவும் கடுமையாகவும் இருக்கும். பெரும்பாலும் அதுதான் இவ்விந்திய நாட்டின் இப்பொழுதைய ஆட்சியின் இறுதி நெருக்கடி நிலை அறிவிப்பாக இருக்கும்.

அந்நிலை வருமானால், அனைத்துப் போராட்ட உணர்வுகளும் அடியோடு கல்லியெறியப்படும். எதிர்க் கட்சிகள் எல்லாம் ஆளுங் கட்சிக்குள் கவர்ந்து கொள்ளப் பெற்றுக் கரைத்துக் கொள்ளப்படும். சில அடங்காத எதிர்க் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் எங்கிருப் பார்கள் என்றே சொல்ல முடியாது! வீரமும், தன்மான மும், விடுதலை வேட்கையும் கொண்டவர்கள் மட்டுமே நாட்டின் எதிரணியில் இருப்பார்கள். ஆனால் அவர் களின் தொகை மிகவும் குறைவாகவே இருக்கும். பிறகு நாடு என்னென்ன மாற்றங்களை எய்தும் என்று இப் பொழுதைக்குச் சொல்ல முடியாது.

இந்நிலையில், இங்குள்ள தமிழினத் தலைவர்களும் தளபதிகளும் என்ன செய்யப் போகிறார்கள்? ‘மண்டல்குழு’ என்று மண்டையைக் குழப்பிக்கொண்டே இருக்கப் போகிறார்களா? அல்லது மண்டல விடுதலைக் குத் தங்களை முன்னிருத்திக் கொள்ளப் போகிறார்களா? காலம் விடை சொல்லட்டும்.

—தமிழ்நிலம்: இதழ் எண் 61 (28-7-85)

# 35. திம்புவுக்குப் பின்னும் இலங்கையில் பேச்சு தொடருமாம்!

துபாயிலிருந்து வெளிவரும் **வளைகுடாச் செய்திகள்** (Gulf News) என்னும் செய்தி இதழுக்கு அண்மையில் தலைமை அமைச்சர் **இராசீவ் காந்தி** அளித்த நேருரை யில், **தமிழீழப்பேச்சு, திம்பு மாநாட்டுக்குப் பின்னும் இலங் கையில் தொடரும்** என்ற கருத்தை வெளிப்படுத்தியிருக் கிறார்.

இக் கருத்து அதிர்ச்சியையும்-அச்சத்தையும் தருவ தாக உள்ளது. இதில் இரண்டு கருத்துகள் தெளிவா கின்றன. அவை,

1. திம்பு நகரிலேயே இப் பேச்சு முடிவடையாது. அஃதாவது அவ்வாறு முடிவடையக் கூடாதென்றே திட்டமிட்டுப் பேச்சு நடத்தப்பெறுகிறது-என்பது.

2. திம்புவுக்குப் பின், இலங்கையிலேயே இப் பேச்சு தொடரும் என்னும் கோட்பாட்டில், போராளிகளை, இலங்கைக்கே வரச்செய்வது- என்பது,

இவற்றுள் முதல் கருத்து கரவானது. அஃதாவது பேச்சு திம்புவில் முடிவடைந்து விடக்கூடாது என்னும் கொள்கையை உள்ளடக்கியது. பேச்சுரை நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் கூறப்பெறும் இக்கருத்து இலங்கை அரசுக்கு ஊக்கமளிப்பதாகவும், போராளி களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும் இருக்கிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இப்பொழுதைய நிலையில், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்று வரும் தமிழீழச் சிக்கல்களைக் குறித்த பேச்சுக்கான தீர்வு, திம்புவில் இரண்டே இரண்டு சுற்றுப் பேச்சில் முடிவுக்கு வந்துவிடும் என்று யாரும் எதிர்பார்ப்பது இயலாததுதான். இதை, இந்திய அரசைவிட, இலங்கை அரசைவிட, தமிழீழப் போராளிகளும் அவர்களைச் சார்ந்து நிற்கும் தமிழகத் தலைவர்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அந்நிலைக்குரிய காரணம் போராளிகளிடம் இல்லை. இலங்கை அரசே அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை நயன்மை உணர்வு கொண்ட உலகப் பார்வையாளர்கள் அனைவருமே உணர்வர்.

ஆனால், திம்புவில் இப் பேச்சு முடிவடைந்துவிடக் கூடாதென்பதும், இரண்டு சுற்றுப்பேச்சுக்குப் பின்னும் இம்மாநாடு திம்புவில் தொடரக் கூடாது; இலங்கையில்தான் நடைபெறச் செய்ய வேண்டும் என்பதும் ஆன இரண்டாவது கருத்து முன்னரே, இந்திய இலங்கை அரசுகள் பேசி முடிவெடுத்திருக்கக் கூடிய செய்தியாக வன்றோ தெரிகிறது. இந்த முடிவை அவை ஏன் எடுக்க வேண்டும்? தேவையானால் 3-ஆவது சுற்றுப்பேச்சையும் இங்கேயே நடத்தலாமே! இரண்டு எதிரிகளையும் ஒரு பொதுவான இடத்தில் கூடச் செய்வதுதானே முறை. அதுவும், 3 ஆவது கட்டத்திலும் இப்பேச்சு தொடரவேண்டிய தேவையிருந்தால், இரு தரப்புப் பேச்சாளர்களிலும், முதல் தரப்பினரை, அஃதாவது இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனாவையும், தமிழீழப் போராளிகளின் மேனிலைத் தலைவர்களையுமன்றோ நேருக்கு நேர் கலந்து பேசச்செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு அவர்கள் இலங்கையில் போய்ப் பேச்சைத் தொடரவேண்டும் என்று முடிவெடுத்திருப்பது



எவ்வளவு பொருளற்றதும் (அபத்தமானதும்) ஏதமானதும் (ஆபத்தானதும்) ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில், புண் எவ்வளவு கடுமையானதோ, மருத்துவமும் அவ்வளவு கடுமையாகவும், கவனமாகவும் நடைபெறவேண்டும் என்பதே நம் கருத்து. மேலும், புண் என்பது வெறும்புண் அன்று; புரையோடிய புண்; எனவே, அறுவை ஒன்றைத் தவிர, மேல் மருந்தென்னும் பேச்சுரைகள் இத் தீர்வுக்குப் பயன்படப் போவதில்லை என்பதைத் தொடக்கத்தில் இருந்தே கூறி வருகிறோம். எனவே, பேச்சுகள் இந்தியாவில் நடந்தாலும், இங்கிலாந்தில் நடந்தாலும் இதில் இணக்கத்துக்கு வரவேண்டிய முதல் தரப்பினர் இலங்கை அரசினரே! ஏனெனில், அவர்களே அனைத்துச் சிக்கலுக்கும் காரணமானவர்கள்; முதலானவர்களே முதலுக்குக் காரணமானவர்களே, முடிவுக்கும் காரணமானவராக இருக்க முடியும். இலங்கை அரசு இதை இன்று வரையில் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில், ஏதோ ஓர் அடிப்படையில், தமிழீழப் போராளிகளை இலங்கைக்குள் அனுப்பி வைப்பதற்கான முயற்சியாகத்தான் இக் கருத்து இருக்க முடியும். இஃது, ஓநாய்க் குப்பத்துள் வெள்ளாடுகளை ஒப்புரவுக்கு அனுப்புகின்ற செய்திதான்! இராசீவ் காந்தி குள்ள நரியாக இருந்து, இச்செயலைச் செய்ய வேண்டாம் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறோம்.

இனி, புலிகள் பசித்தாலும் புல்லைத் தின்னமாட்டா என்பதைப் போராளிகள் மெய்ப்பிக்க வேண்டும் என்று அவர்களுக்கும் எச்சரிக்க விரும்புகிறோம்.

—தமிழ்நிலம்: இதழ் எண்: 62(11-௮-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 36. திம்புவின் அணுகுமுறை பாராட்டவேண்டிய அரச தந்திரமன்று!

**திம்புப்பேச்சு சிங்களத் தாக்குதலை உண்டாக்கிப் போராளிகளை அச்சுறுத்தலுக்கும், வேறு வழியில்லாத ஒப்புதலுக்கும் வற்புறுத்துவதே!**

**விளம்பரமும், வாய் வீறார்ப்பும் இருந்தால், அரசு கழுதையையும் குதிரையாக உருவாக்கிக் காட்டும்!**

**இலங்கைத் தமிழர் பேச்சில் இராசீவ் ஈடுபாடு, அரசியல் திறமை என்று பேசுவது, முட்டாள்தனமும் அடிமைத் தனமுமே ஆகும். தொல்லை தந்து பணியவைக்கும் உத்தியே அது!**

**தமிழரின் ஒட்டுமொத்தமான இறுதிப் போராட்டக் காலம் இது!**

**போராளிகள் உறுதியைக் கைவிட வேண்டா;**

**ஒருபுறம் தமிழின அழிவு! ஒருபுறம் ஒப்புரவுப் பேச்சு!**

**கொடுமையும் சூழ்ச்சியும் நிறைந்த அணுகுமுறை இது!**

திம்புப்பேச்சு ஒருபுறம்! இலங்கையில் தமிழின அழிப்பு மறுபுறம்! இதுவா இராசீவின் அரச தந்திரம்? இங்குள்ள இந்திராக் கட்சியினர்க்கு இது விளங்கவில்லையா? நடுநிலைமை அணுகுமுறை என்றால் இப்படியா செயல்படுவது? இந்த ஓரவஞ்சனைக்குப் பெயர்தான் ஒப்புரவுப் பேச்சா? தன்மானமுள்ள எவனும் இதை ஒப்பமாட்டான்? பொறுக்கித் தின்னும் இந்திராக்கட்சித்



தலைவர்களுக்குத் தன்மானம் இல்லாமல் இருக்கலாம். நடுநிலையறிவு கூடவா இல்லாமல் போய் விட்டது?

சிங்களக் கயவர் கொடுமை நாளுக்குநாள் மிகுகிறது. திம்புப்பேச்சு தொடங்கியதிலிருந்து இக் கொடுமையைப் பற்றி இராசீவ் ஒருமுறை கூட வாயே திறக்கவில்லையே! அடிப்பவனைக் கண்டித்து ஒரு பேச்சும் பேசாமல், அடிவாங்குபவனை 'அமைதியாக இரு; ஒத்துப்போ' என்று கூறிவரும் கொடுமையை என்னென்பது? சிங்களத் தாக்குதலை மறைமுகமாக ஊக்கி விடுவதும், கொடுமை நிகழ்த்தச் செய்வதும், தமிழீழப் போராளிகளை அச்சுறுத்திப் பணியச் செய்வதும், வேறு வழியில்லாத ஒப்புதலுக்கும் வற்புறுத்துவதுமே ஆகும்.

தமிழீழப் போராட்ட இயக்கத்தினரை நாடு கடத்தியது, தமிழினத்தின்மேல் தொடுத்த அச்சுறுத்தலே! உரிமைக்குப் போராடுபவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதும்; அதன்வழி நாட்டு நுழைவுப் போராட்டத்திற்கு மக்களை எழுச்சிக் கொள்ளச் செய்வதுமான அதிரடி மருத்துவமுறை, இங்குள்ள தலைவர்களின் நோக்கத்தைத் திசை திருப்புகின்ற உத்திகளே!

தலைவர்களை வெளியேற்றிவிட்டு, 'இங்குள்ள தந்நலக்காரர்களால்தாம் பேச்சு தடைப்படுகிறது' என்பதெல்லாம் கொடுமையான குற்றச்சாட்டு. பேச்சு தொடங்கிய பின்னரும், இலங்கைக் கயவாளிகள் தங்கள் கொடுமைகளைக் கைவிடாமல் இருப்பது இந்திய அரசியல்காரர்களுக்குத் தெரியவில்லையா?

'டெசோ' நடத்திய தொடர்வண்டிப் போராட்ட விளைவைக்கூட, இங்குள்ள இந்திராக் கட்சித் தலைவர்கள் தில்லியில் போய், இராசீவ் காந்தியைச்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சந்தித்ததால் ஏற்பட்ட விளைவு என்று திசை திருப்புவதை மக்கள் உணரவேண்டும். அதிகாரமும், விளம்பரமும் வாய்த் தித்திரிக்கமும் இருந்தால் கழுதையைக் கூடக் குதிரையாக விலைபோக்கிக் காட்டலாமே!

இந் நிலையில் சில தவிர்க்கவியலாத அழுத்தம் காரணமாகத் திம்புப் பேச்சில் தொடர்ந்து ஈடுபட விரும்பும் தமிழீழப் போராளிகள், தமிழீழம் ஒன்றே என்னும் தங்கள் குறிக்கோளில் சிறிதும் நெகிழ்ச்சி காட்டாமல் இருப்பது நல்லது. அதற்கிடையில், இந்தியாவின் பேச்சுக்கு ஒத்துழைப்புத் தர விரும்பினால், முதலில் பேச்சுரைக்கு மூல அடிப்படையாக, **''பேச்சுரை முடியும் வரை இருதரப்பாரும் போராட்டங்களை நிறுத்தி வைக்க வேண்டும்''** என்பதையே, இந்தியாவின் முயற்சிகளுக்கு முத்தாய்ப்பாக வைக்க வேண்டும்.

கலைஞர் அவர்களின் இன்றைய ஈடுபாடு மிகவும் மதிக்கத் தக்கதும், போற்றிக் கொள்ளத் தக்கதும் ஆகும். போராடாமல் தமிழினம் எந்தப் பயனையும் பெற்றுவிட முடியாது. போராடித்தான் எதையும் பெறமுடியும் என்னும் நிலை வந்துவிட்ட பின், நாம் பின்வாங்க வேண்டியதில்லை. ஆனால், இடையில் குறுக்கி ம் எந்த அரசியல் நலனையோ, சலுகையையோ நாம் புறக்கணிக்க வேண்டும். கலைஞர் தொடர்வண்டிப் போராட்ட முடிவு பற்றியும், அடுத்த போராட்டத் தொடக்கம் பற்றியும், அண்மையில் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்த, **'உரிமைத் தமிழீழம்தான் ஈழத் தமிழர்களின் நலன்காக்கும் ஒரேவழி என்பது 'டெசோ'வின் அசைக்க** முடியாத **நம்பிக்கையாகும். தமிழ் ஈழத்தை ஆதரிப்பதும், ஈழத்தமிழர் நலனுக்காகக் கவலைப்படுவதும் பிரிவினைக் கொள்கை என்றால், நாங்கள் அந்தக்**



**குற்றத்தை** (குற்றமா அது? கொடுமை நீக்கம், உரிமை மீட்பு குற்றமாகுமா? அதை ஏன் குற்றம் என்று கலைஞர் ஒப்புக் கொள்ள வேண்டும்?) **செய்துகொண்டே இருப்போம்''** என்று கூறியிருக்கும் கருத்தைத் தமிழர் அனைவரும் வரவேற்க வேண்டும்.

கலைஞர் அவர்கள் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை. ''உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி, இடைக்கண் முரிந்தார் பலர்'' -என்னும் திருக்குறளில், தன் வலிவை உணராமல், தன் அளவு மீறிய வினையில் ஈடுபடுவது எவ்வளவு அறியாமையோ, அவ்வளவு அறியாமை மிக்கது, தன் வலிவை உணர்ந்தும் ஒருவர் அவ்வினையில் ஈடுபடாமல், செய்தக்க செய்யாமல், காலத்தை வீணாக்குவது என்பதை கலைஞர் உணர்தல் வேண்டும். தமிழினத்தின் உயிரைத் தம்மின் உயிராகக் கலைஞர் கருதவேண்டும். அரசியல் பதவி பெறும் முயற்சியில் அவ்வுயிர் வீணாய்ப் போவதை விட,தமிழின உரிமை மீட்பு முயற்சியில் அதுபோவது, அவர்க்கு எவருக்குமே இல்லாத வரலாற்றுப் பெருமை தருவதாகும். எனவே தமிழீழக் கொள்கையில் அவர் சிறிதும் தளர்ச்சி காட்ட வேண்டியதில்லை. நேற்று வந்த பழனியாண்டிகளின் அச்சுறுத்தலுக்கும் இளைஞர் இந்திராப் பேராயக் குட்டித் தலைவர்களின் மிரட்டலுக்கும், கலைஞர் அவர்கள் பின் வாங்கவேண்டியதில்லை. தங்கள் தந்நலத்துக்காகத் தமிழினத்தையே அடகு வைக்கத் துணிந்துவிட்ட அவ்வின நலக்கேடர்களின் குருட்டுப் போக்குக்கு ஓர் இறுதி முடிவு வரும்.

தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தை அல்லது கோரிக்கையை முன்னெடுத்துச் செல்ல இதுவே தக்க

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நேரம். அவ்வாறான ஒரு தக்க போராட்டத்தைக் கலைஞர் நேரம் பார்த்து அறிவிப்பாரானால் அவரைப் பிற்பற்றித் தமிழகமே எழுச்சியுறுவது திண்ணம்! அத்தகைய வீர வெற்றிப் போராட்டத்தை அவரே முன்னறிவிக்கவேண்டும். மற்றபடி உதிர்ந்து போகும் வெறும் அரசியல் சில்லுண்டி நலன்களுக்கு அவர் கருத்துச் செலுத்துவது அவருக்குத் தாழ்ச்சியையே கொடுக்கும்.

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

—தமிழ் நிலம்: இதழ் எண்-63 (8-9-85)

# 37. ஓநாய் புத்தம் பேசுகிறது !

அண்மையில், இலங்கைக் குடியரசுத் தலைவரும், உலகப் பெரும் மாந்தக் கொடுமையாளரும், உலகப் பெரும் பொய்யரும் ஆகிய செயவர்த்தனா, அனுராதபுரத்தில் நடந்த தேசிய விளையாட்டு விழாவில் பேசிய பேச்சை உலக அறிஞர்கள் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அவர் பேச்சு மிகக் கரவானது! பொய்யானது; ஏமாற்றுத்தனமானது. அந்த அரசியல் ஓநாய், ஆட்டுக் குட்டியைப் போல் ஏதோ அறம் பேசியுள்ளது. அங்குப் பேசுகையில், தமது நாட்டில் அஞ்சத்தகுந்த வன்முறை விரைவில் மறைந்துவிடும் என்றும், தீய செயல்கள் அதிக காலம் நீடிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். அத்துடன் நில்லாது, தம்மை ஏதோ புத்தனைப்போல் கருதிக்கொண்டு, வன்செயல்களால் அந்த நகர மக்கள் அடைந்த தொல்லைக்கு அவர் இரங்கல் தெரிவித்துள்ளார். அஃதோடு அமைதியை விரும்பும் மரபிலும் மதத்திலும் தாம் தோன்றியிருப்பதாகக் குறிப்பிட்டு, 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சிறையாளி எவரும் தம் ஆட்சியில் தூக்கிலிடப்படவில்லை என்று புத்தம் பேசியுள்ளார். மாந்தனோ, வேறு உயிர்களோ அரத்தம் சிந்துவதைத் தாம் விரும்பவில்லை என்று அவர் அறமொழி புகன்றிருக்கிறார்.

அஞ்சத் தகுந்த வன்முறை (பயங்கர வாதம்)-என்பதாக, யாரை எண்ணிக்கொண்டு அவர் குறிப்பிட்டாரோ, அவர்களைவிட அந்தச் சொல் அவருக்குத்தான் மிகவும் பொருத்தமாக இருக்க முடியும் என்பதை அவரே நன்கு

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

உணர்வார். உலகம் தோன்றியதிலிருந்து செயவர்த்தனாவைப் போல் வன்கொடியவர் ஒருவர் தோன்றியே இருக்க முடியாது என்பதை இங்குள்ள இந்திராக் கட்சியினர் தவிர அனைவருமே நன்கு அறிவர். அவ்வாறிருக்க இவர் வேறு யாரையோ அதற்குப் பொறுப்பாக்கிப் பேசியிருப்பது மிகவும் கரவானது

இனி, அவர் அமைதியை விரும்பும் மரபிலும், மதத்திலும் தோன்றியவராம். இதை யார் நம்பமுடியும்? ஓரினத்தில் மட்டும் அவர் தோன்றியிருக்கவில்லை. ஒரு கலப்பினப்பிறவி (Hybrid) அவர். மேலும் அவர் புத்த மதத்தைச்சார்ந்தவர் என்றால் புத்தமதத்திற்கே இழுக்கு அவரைவிட புத்தமதத்திற்கு ஒரு கொடியவர் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்திருக்க இயலாது. அந்த அளவுக்கு அவர் ஓரு மாந்தக் கொடியவர்.

அவர்தாம் சொல்லுகிறார், '1977 ஆம் ஆண்டிலிருந்து தாம் எவரையுமே தூக்கிலிடவில்லை' என்று. இதைவிட உலகப் பெரும் புளுகு இதுவரையிலும் எவருமே கூறியிருக்க முடியாது. தூக்கிலிடுவது மட்டுந்தான் கொலை அல்லது கொடுமை என்று கருதியிருக்கிறாரோ, அவர்? சுட்டுக் கொல்வது, வெட்டிக் கொலை செய்வது உறுப்புகளைச் சிதைத்து அணு அணுவாய் உயிரைப் போக்குவது, தீ வைத்துக் கொளுத்துவது, பெண்களைக் கற்பழித்துச் சிதைப்பது, எரிகின்ற தீயில் குழந்தைகளைத் தூக்கி எறிவது முதலிய கொடிய கொலைச் செயல்களெல்லாம், தூக்கிலிடும் கொடுமைக்கு ஈடாகாவோ? இவற்றை விடவும் கொடிய செயல்களை இனி உலகில் எவருமே செய்துவிட முடியாது என்பதை வரலாறு கூறும்.



ஆனால், நமக்கு வியப்பானது அல்லது விளங்காதது என்னவென்றால், இவ்வாறான கொடிய செயல்களுக்கெல்லாம் உறைவிடமான செயவர்த்தனாவை, ஏன் இந்திய ஆட்சித் தலைவர்கள் மட்டும் மிகவும் 'புனித'ராகக் கருதுகிறார்கள் என்பதுதான். மறைந்த இந்திரா காந்தியும் சரி, விரைவில் மறையப்போகிற இராசீவ் காந்தியும் சரி, செயவர்த்தனாவை ஒரு புத்தன் என்றே கருதி வந்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்களும், செயவர்த்தனாவின் கரவான அரசியல் தந்திரங்களும், பொய் புளுகுப் பேச்சுகளும், கொடிய வன்முறை வாலாட்டங்களுமே நல்ல மரபான, மத அரசியல் முறைகள் என்பதாகக் கருதியிருக்கிறார்களோ என்னவோ? எப்படியாயினும் உண்மை உறங்கலாம்; ஆனால், செத்துவிடாது என்பதைச் செயவர்த்தனாவானாலும், இராசீவ் ஆனாலும் அழுத்தமாகப் புரிந்து கொள்ளட்டும்!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 63 (8-9-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 38. உலக ஒன்றியப் பேரவை (U.N.O.) உறங்குகிறதா? அல்லது ஊமையாகி விட்டதா?

**வெறும் தீர்மானங்களே அதற்குப் போதுமா? நடவடிக்கை தேவையில்லையா?**

**உறுப்பு நாடுகளில் நடைபெறும் மக்களினக் கொடுமைகளைக் கட்டுப்படுத்தும் அல்லது தடுத்து நிறுத்தும் முயற்சிகளை ஏன் அது செய்யவில்லை? உ.ஒ.பே. (U.N.O-ஐ.நா.) எதற்கு? அதைக்கலைத்து விடலாமே! கொடுமை உலகமே!**

**இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலையைப் பார்த்தும் நீ ஏன் கண்களை இறுக்கிக் கொண்டாய்?**

***உலக ஒன்றியப் பேரவையின் சட்ட திட்டங்களைப் பாரீர்!***

*மாந்தக் கொடுமைகள் ஒரு நாட்டின் உள்நாட்டு நிகழ்ச்சிகள் ஆகா.*

1. ஒரு நாட்டின் உள்முகச் செயல்களில் மற்றொரு நாடு தலையிடக் கூடாது.

[உ.ஒ.பே. (ஐ.நா.) அமைப்பியல் ஆவணம்: எண் 2 (7)]

2. எனினும் மக்கள் உரிமைகளும், கண்ணியமும் கொடுமைகளுக்கு உள்ளாகின்ற சூழ்நிலைகளில், இந்தத் தடையை மீறி, ஒருநாடு வேறொரு நாட்டின் உள்முகச் செயற்பாடுகளில் தலையிட்டுச் செயற்படலாம்.

[உ.ஒ.பே. (ஐ.நா.) —நெறிமுறை எண். 1 (3)]



**இனப் படுகொலை குற்றவியல் (Criminal) குற்றம்!**

எந்த அரசும் சொந்த நாட்டிற்குள்ளேயே கூட, தன் நாட்டுக் குடிமக்கள் மீது இனப் படுகொலை புரிந்தால், அ'து அனைத்துலகக் கவலைக்குரிய சிக்கல் ஆகும்; அனைத்துலகச் சட்டப்படி அது குற்றவியல் (Criminal) குற்றமாகும். அ'து உ. ஒ. பே. (ஐ. நா. மன்றம்) தடுத்து நிறுத்த வேண்டிய குற்றமாகும்.

—1948 -உ.ஒ.பே. தீர்மானம்.

If a Government Pertetrates genocide even with in its territory against its own citizens, it is a matter of International concern. It is a crime under International law which the UNITED NATIONS Comprevent.

—1948 - உ.ஒ.பே U.N.O. Resolution

—தமிழ்நிலம்: இதழ் எண்: 65(20-10-85)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 39. பிரபாகரன் சிந்திக்க வேண்டும்!

**நான்கு எருதுகளும், ஓர் அரிமாவும்** (சிங்கமும்) என்னும் கதையை நான்காம் வகுப்பிலேயே படித்திருப்பார் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன். ஓர் ஆண்டுக்கு முன்னர்தான் (10.4 85-இல்) தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கமும் (L.T.T.E.), தமிழீழ விடுதலை அமைப்பும் (TELO), ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணி (EPRLF)யும், ஈழப் புரட்சி அமைப்பும் (EROS) ஒன்றிணைந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி, (ENLF) என்னும் அமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொண்டு, சிங்கள வல்லதிகார அரசுக்கெதிராகவும், அடித்து நொறுக்கியும், சுட்டுப் பொசுக்கியும் அழிக்கப்பட்டு வரும் தமிழீழத் தமிழர்களின் விடுதலைக்குச் சார்பாகவும், தங்கள் ஆற்றல், போர்த்திறன், வீரம் அனைத்தையும் ஒருமுகமாகப் பயன்படுத்துவது என்று உறுதி கொண்டனர். அவர்களுக்கெல்லாம் இணையாகவும், இன்னும் சொன்னால் கூடுதல் வலிவும், சிறந்த போர்த் திறமும், துணிவும், மக்கள் நலமும், தொலை நோக்குடன் திட்டமிட்ட செயலமைப்பும் ஒருங்கே கொண்ட உமாமகேசுவரனின் (முகுந்தனின்) இயக்கமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) அவர்களுடன் இணைக்கப்பெற்று அவ்வமைப்பு முழுமைப் பெறவில்லையானாலும், ஏதோ ஒருவகையில் ஓர் ஒற்றுமை அமைப்பு உருவாகியதே என்று, தமிழீழம் அமைய வேண்டும் என்னும் கவலை கொண்டிருக்கும் உலகத் தமிழின மக்களும், தமிழகத் தலைவர்களும் ஓரளவு மகிழ்ச்சியோடிருந்தனர்.



ஆனால், தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒற்றுமைப்பட்டதாகவும், ஒருங்கிணைந்து போராடுவதாகவும் அறிவித்தார்களே தவிர, செயலில் அவ்வாறு இயங்காதிருந்தது அவர்களின் இணைவால் மகிழ்ச்சியடைந்தவர்களுக்கு ஓர் ஆற்றொணா வருத்தத்தையும், நம்பிக்கையின்மையையுமே தந்து கொண்டிருந்தது.

தம்பி பிரபாகரனும், தம்பி உமா மகேசுவரனும், அவர்களை நம்பியிருந்த விடுதலைப் போராட்டத் தொண்டர்களும் தமிழீழம் பெறுவதைத் தங்கள் வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டு, ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இத் தமிழ் மண்ணில் அடியெடுத்து வைத்த தொடக்க ஆண்டுகளில், 'தென்மொழி'யே அவர்களுக்கு வரவேற்பு இல்லமாகவும், உணர்வூட்டிக் கொள்ளும் பாசறையாகவும் அமைந்திருந்தது. இன்று அவர்களின் போராட்ட முயற்சிகளையும், வீரச் செயல்களையும், தங்கள் தங்கள் அரசியல் வளர்ச்சிக்கும், பொது நல மேம்பாட்டிற்கும் உறுதுணையாகவும், உற்ற கருவியாகவும் பயன்படுத்திக்கொண்டு வருகின்ற சிறிய - பெரிய தலைவர்கள் சிலருக்கும், தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்பில் வந்து தங்களைப் புதிதாக இணைத்துக் கொண்ட போராளிகள் பலருக்கும் தெரிந்திருக்காது! சிலர் தெரிந்திருந்தாலும், அவ் வுண்மைகளை வெளிப்படுத்தித் தங்கள் வாய்ப்புகளையும், வளர்ச்சிகளையும், புதிய மதிப்புகளையும் குறைத்துக் கொள்ள விரும்பாமல் இருப்பார்கள்.

ஆனால், இந் நிலைகளெல்லாம், அன்றைய காலக்கட்டத்தில், ஒவ்வொருநாள் காலையிலும்-மாலையிலும்-இரவிலும் தென்மொழிப் பாசறைக்கு வந்து, தங்கள் போராட்ட முயற்சிகளை வளர்த்தெடுத்துக் கொண்ட

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

விடுதலை இயக்கத் தலைவர்கள் பிரபாவுக்கும், அவர்களுடன் அன்று மிகவும் நெருக்கமாக இருந்து செயற்பட்ட முன்னணிச் செயல் மறவர்களுக்கும், இன்னும் இன்று போராட்டக் களத்தில் நேரடியாக இப் போராளிகளைப் போல் குதித்துப் போராடாமற் போயினும்' தங்கள் தங்கள் தலைமைக்கும், தகுதிக்கும், உணர்வுக்கும், தமிழீழ விடுதலை ஈடுபாட்டுக்கும், வாய்ப்பு வசதிகளுக்கும் ஏற்ற வகையில் மிகஅணுக்கமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் திருவாளர்கள்: **அமிர்தலிங்கம், மங்கையர்க்கரசியார், யோகேஸ்வரன் இணையர், சந்திரகாசன், ஈழவேந்தன், கோவை - மகேசன், காசிஆனந்தன், சேனாதி இராசா, இரத்தின சபாபதி, கா.பொ.இரத்தினம்** முதலியவர்களுக்கும் மறந்து போயிருக்காது என்று நம்புகின்றோம்; அவர்கள் மறந்திருந்தாலும் கூட, அது தமிழினத்தின் இயல்பான வீழ்ச்சிக்கான குணம் என்று கருதுவோமே தவிர, நன்றி மறந்த செயலாக என்றுமே கருதி வருந்தமாட்டோம். ஏனெனில், நன்றியை எண்ணியும்-எதிர்பார்த்தும் என்றுமே நாம் செயல்பட்டதில்லை, இவற்றைக்கூட, தம்பி பிரபாகரனின் அன்பு மறந்த வீர உள்ளத்திற்கு நினைவூட்டுவதற்காக, அப்படியொரு கட்டாயத் தேவைக்காகக் கூறினோமே தவிர, எவ்வகையான—ஓர் எள்ளின் மூக்கத்துணைப் பெருமைக்காகவும் அன்று என்பதை எம்மை நன்கு அறிந்த தென்மொழி உள்ளங்கள் தெளிவாக அறியும். இவை நிற்க.

இக்கட்டுரை எழுதுவதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்பிருந்தே எம் உள்ளத்தில் ஒரு பேரவலமும், பேரச்சமும் குடிகொண்டிருக்கிறது. அது, தம்பி பிரபாகரனின்-அவர் இயக்கத்தின் அடாவடியான நடவடிக்கையால் ஏற்பட்ட ஒரு விளைவாகும். ஆம். அவர், அவருடன் உளமுவந்து ஒன்றிணைந்த போராட்ட இயக்கம் ஒன்றின் தலைவர்



**சிறி சபாரத்தினத்தைச்** சுட்டு வீழ்த்தியதாகும். அவ்வீரமகனின் நெஞ்சில் ஊடுருவிய துமுக்கிக் குண்டு, நம் நெஞ்சில் வந்து தங்கிவிட்டது போலும் ஓர் உணர்வு நம்மை ஆட்கொண்டு உள்ளது.

இது நிகழ்ந்திருக்கவே கூடாத ஒரு கொடிய நிகழ்ச்சி. தம்பி பிரபாகரனின்மேல் நமக்கிருந்த நம்பிக்கையும்-மதிப்பும் என்றுமே குறைந்தது இல்லை. அவரும், தம்பி உமாவும், திருவாளர்கள் அமிர்தலிங்கம் இணையரும் இறுதியாக நம் வீட்டில் நம்முடன் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த அந்நாளில் கூட, நம்மிடம் ஆற்றாமையாக, ''ஐயா, உமா மகேசுவரனுக்குக் கொடுக்கும் ஆதரவு போல் நீங்கள் எங்களிடம் காட்டுவதில்லையே, ஏன்?'' என்று கேட்டதற்கு, ''தம்பி, அப்படிக் கருதுவது தவறு. தமிழின மீட்சியில் முதலாவது குறிக்கோளாகத் தமிழீழம் பெறவேண்டும் என்னும் முயற்சியில் யார் யார் ஈடுபட்டிருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்குமே நம் ஆதரவு பொதுவானது. இதில் வேறுபாட்டுக்கே இடமில்லை. இவ்வுண்மை தொடக்க நாளிலிருந்து நம்முடன் பழகும் உங்கள் அனைவருக்குமே தெரியும். ஒரேயொரு வேறுபாடு உண்டு. உமா அன்றிலிருந்து இன்றுவரை நம்மிடம் வந்து போய்க்கொண்டிருக்கிறார். நீங்கள் தாம் வருவதைப் படிப்படியாய்க் குறைத்தும், இறுதியில் தவிர்த்தும் கொண்டீர்கள். எனவே, உங்கள் உள்ளத்திற்கு என் ஈடுபாடு வேறுபாடாகப் படுகிறது. வேறொன்றுமில்லை'' என்று கூறினோம்.

இதையும் இங் கெதற்காக எடுத்துக் கூறுகிறோம் எனில், அன்றிலிருந்து இன்றுவரை, விடுதலைப் போராளிகளை நாம் வேறுபாடாகவே கருதியதில்லை. பிறரைப் போல் வெளிப்படையாக, ஒரு சார்புணர்வு கொண்டு

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

எழுதியதுமில்லை. எவ்வாறேனும் தமிழனுக்கென்று ஒரு தனி நாடு இவ்வுலக உருண்டையில் கட்டாயம்- அதுவும் விரைந்து உருவாக வேண்டுமென்பதும், அதுவும் தமிழீழத்தில்தான் அந் நல்வாய்ப்பும் சூழலும் முதலில் ஏற்பட்டுள்ளதால் - அதற்கு முழுமூச்சுடன் துணை நிற்க வேண்டும் என்பதும் நம் அசைக்க முடியாத கோட்பாடும் நம்பிக்கையும் முயற்சியும் ஆகும். அவ்வாறான ஓர் உள்ளத்தில் என்றென்றும் பசுமையாகக் குமிழியிட்டுக் கொண்டிருக்கும் அன்புடன்தான், தம்பி பிரபாவுக்கு இதை எழுதுகிறோம்.

அவர் அண்மையில் எடுத்துக்கொண்ட, கொலை முயற்சி ஓர் உள்ளழிப்பு முயற்சியே ஆகும் என்பதைத் தெளிவாக உணரவேண்டும். புறப் பகையும் பொதுவான எதிரியும் வலிவாக வளர்ந்திருக்கும் இக் காலக் கட்டத்தில், நம் ஈடிணையற்ற கொள்கைக்கென நம்முடன் துணையாக நின்று இயங்கும் ஒரு சிறு அணுவும்-துணுக்கும்-துரும்பும் கூட நம்மால் அழிக்கப்பட்டுவிடக் கூடாது. போராளிகளின் போர்த்தந்திர முறைகள், உத்திகள், படை வகுப்புகள் (வியூகங்கள்) போன்ற அணுகுமுறைகள் யாவையாயினும், அவை ஒருமுகமான உணர்வுடன் பகையின் மீதுதான் கொண்டு செலுத்தப் பட வேண்டுமே தவிர, நம் இனத்தின் பக்கம், இன்னும் சிறப்பாகச் சொன்னால் நம் முனைப்பின் பக்கம், அஃதாவது நம்மோடு தோளோடு தோளாக நின்று இயங்கும் நம்மவர் பக்கம் (அவர் எத்தனைக் குற்றங்கள் செய்தவராக அல்லது செய்பவராக இருந்தாலும், அக் குற்றங்கள் நம்மை நோக்கியே செய்யப்பட்டிருந்தாலுமே கூட) திரும்பவே கூடாது என்பதைத் தமிழீழத்திற்காகத் தங்கள் உயிர்களைத் தூசாக எண்ணிப் போராடும் போராளிகளுக்கு, குறிப்பாகத் தம்பி பிரபாகரனுக்குச்



சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். நம் ஆற்றல் முழுவதும் எதிரியின் அடித்தளத்தையே தகர்க்கின்ற வகையில் செலவிடப்பட வேண்டுமே தவிர, நம்மையே நோக்கிய தற்கொலை முயற்சிகளில் அது செலுத்தப் படக் கூடவே கூடாது.

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. (852)

என்பார் நம் மூல முதல் இனக்காப்பாளரான திருவள்ளுவப் பேராசான்.

இதன் பொருள், ''நம்முடைய ஒற்றுமையையே தகர்த்துப் பிளவையே கருதி நம்மில் ஒருவன் நாம் வெறுப்பனவற்றைச் செய்வானாயினும், அவனோடு மாறுபாடு கொள்ளாமலிருப்பதும் அவனுக்கு அழிவைச் செய்யாமலிருப்பதும், தலையாய கோட்பாடு ஆகும்'' என்பது. இக் கருத்து இன நல முயற்சிக்குப் பயன்படும் தலையாய உன்னிப்பாகும்.

அடுத்து, இன்னொரு கருத்தும் கவனிக்கத் தக்கது.

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. (886)

இதன் பொருள், 'பகையானது, ஒன்றாக இணைந்தவர்களுக்குள்ளேயே தோன்றுமாயின், அழியாமை நிலைப்பது கடினம். அஃதாவது, நாம் படிப்படியாக அழிந்து படுவோம்' என்பது. இதுவும் நம் முதுமொழி ஆசான் அவர்களின் இன நலக் கருத்துதான்.

அடுத்து, இன்னொரு திருவாய்க் குறளையும் நாம் நன்றாக எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அறிவிலார்தாம் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (843)

அஃதாவது, அறிவுணர்வான் ஆராயும் திறனிழந்து, மனவெழுச்சியால், மேம்பட்டு நிற்கும் அறிவிலாதவர்கள், தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் அழிவு, அவர்களின் எதிரிகளாலும் செய்வதற்கு அரியதாகும்.

தம்பி பிரபாவும், பிற போராளிகளும் இம் மூன்று திருக்குறள் மெய்ம் மொழிகளையும் நன்கு நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

நமக்குள் நாமே போரிட்டுக் கொண்டு அழிவது, நம்மினத்தைக் காத்து, மீட்பதற்கு மாறாக, அழித்து அடிப்புதைத்துக் கொள்வதாகும் என்பதை மறத்தல் வேண்டா. **பகைவன் நம்மைவிட வலியவன் அல்லன். நாமே அவனைவிட வேறுபாடுகள் கொண்ட மெலியவர்கள்.** இந் நிலையில் நம் கொள்கை நிறைவேறுவதெப்படி? நான்காம் வகுப்புக் கதையில், கூடிமேய்ந்த நான்கு எருதுகளும் தனித்தனியாகப் பிரிந்தபின் என்ன நிகழ்ந்தது என்பதை யாரும் மறந்திருக்க முடியாதே! தம்பி பிரபாகரன் சிந்திக்க வேண்டும்.

—**தென்மொழி சு:22, ஓ 6 (ஏப்-மே '86)**

# 40. திம்புவில் பேச்சு தொடங்கி ஓராண்டு ஆகியும் இன்னும் தீர்வு இல்லையே!

**இலங்கை அரசு வலுப்பெறவே சூழ்ச்சி நடைபெறுகிறது!**

**இந்திய அரசால்தமிழினம் எப்பொழுதுமே நன்மை பெற முடியாது!**

**தமிழீழம் இல்லையேல் தமிழ்நாடு என்று தமிழர்கள் கோரிக்கை எழுப்ப வேண்டும்!**

தமிழீழத் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு தொடங்கி சரியாக ஓராண்டு ஆகிறது. கடந்த 8-7-85-இல் திம்புவில் போராளிகளும் இலங்கையில் உள்ள ஆட்சிக் குழுவினரும் முதல் கட்டப் பேச்சைத் தொடங்கினர். அப் பேச்சு இரண்டு மூன்று கட்டங்களாக அமைந்தும் பயனொன்றும் ஏற்படவில்லை.

இப் பேச்சுகளில் இந்தியா ஏதோ அமைதியாகத் தலையிட்டு, ஒப்புரவு முயற்சி செய்வதாக உலகம் நம்பிக் கொண்டிருக்கிறது. இப்படி நம்ப வைக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவின் கருத்து; இலங்கையின் கருத்தும் அதுவே.

ஆனால் நடப்பதோ வேறு. அமைதிப் பேச்சு என்னும் பெயரில், இலங்கை அரசு, நேரடியாகவும் மறைமுகமாகவும் இசுரேல், இங்கிலாந்து, பாக்கிசுதான், அமெரிக்கா போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு பொருளுதவி பெறுவதும், படைக்கருவிகளை வாங்கிக் குவிப்பதுமான செயல்களைத் தீவிரமாகச் செய்து

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வருகிறது. இவ்வடிப்படையில் இலங்கையில் உள்ள தமிழர்கள் நாள்தோறும் கொன்று குவிக்கப்பட்டு வருகிறார்கள். திம்புப் பேச்சுக்குப் பின்னர் ஏறத்தாழ 4000 தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டும், கொலை செய்யப்பட்டும் 1000க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். போராளிகளிலும் நூற்றுக் கணக்கான பேர் அழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தில்லி அரசைப் பொறுத்த வரையில் என்றுமே அது தமிழர்களுக்குச் சார்பாக நடந்து கொண்டதுமில்லை; நடந்து கொள்வதுமில்லை; இது வரலாறு. ஏதோ தன் கடமையைச் செய்வது போல் நாடகம் ஆடிக் கொண்டிருக்குமே தவிர, உண்மையாக அது தமிழர்களுக்குச் சார்பாக என்றுமே கருத்துத் தெரிவித்ததில்லை. அது ஈழத் தமிழர் சார்பாக நடுநிலைப் பேச்சில் ஈடுபடுவது போல், மறைமுகமாக இலங்கை அரசுக்கே துணை போய்க் கொண்டுள்ளது.

ஈழத்தமிழர் அழிவைப் பற்றி இந்தியா இதுவரை இலங்கை அரசுக்கோ, செயவர்த்தனாவிற்கோ நேரிடையாக ஒரு கண்டனம் தெரிவித்ததுகூட இல்லை. ஏதோ தெருவில் போகிற ஒரு வழிப் போக்கர், இரண்டு தரப் பார்க்கும் ஏற்பட்ட ஒரு தெருச் சண்டையில் தலையிடுவதைப் போல், அமைவு செய்வதாகப் பேசிக் கொண்டுள்ளதே தவிர, வேறு தீவிரமான, உண்மையான தீர்வு முயற்சியில் ஈடுபடவில்லை.

தமிழீழச் சிக்கலில் உண்மையான தீர்வு தமிழீழமே. இதை எந்த வகையாலும் வேறு முயற்சியில் திசை திருப்பி விட்டு விட முடியாது. ஆனால், இந்தியா தமிழீழம் அமைவதை உள்ளத்தாலும் விரும்பவில்லை; செயலாலும் அவ்வாறு ஈடுபட முயலவில்லை. இஃது உலகமறிந்த ஒன்று. இன்னும் சொன்னால் தமிழீழ முயற்சி என்பது, தமிழீழத் தமிழர்க்கும், சிங்களவர்க்கும் ஏற்பட்ட இனச் சிக்கல். இதில் அமைதியான ஒப்புரவு முயற்சிக்கே இடமில்லை.



இதுவரை தமிழீழப் போராளிகள் தமிழீழக் கோரிக்கைக்குச் சிறிதும் குறைவான ஒருவேண்டுகோளை முன் வைத்ததில்லை. இதுவும் உலக மக்களுக்குத் தெளிவாக்கப் பெற்றிருக்கிறது.

இந்த நிலையில் இந்தியா பேச்சு நடத்துவது என்பது ஒரு போலியான ஒப்புரவு முயற்சியே. இதற்கு ஏற்ற ஒருவராகத் தமிழீழக் கூட்டணியின் தலைவராக திரு அமிர்தலிங்கத்தைப் பிடித்து, இவ் வீணான பேச்சு முயற்சியில் இந்தியா ஈடுபடுத்திக் கொண்டிருப்பது, ஈழத் தமிழர் சிக்கலை ஒருபோதும் தீர்வு செய்துவிட உதவிட முடியாது.

திரு. அமிர்தலிங்கமும் அவரது கூட்டணியினரும், இறுதியாக நடத்திய கொழும்புப் பேச்சு என்பது வெறும் ஓர் அரசியல் நாடகமே. அவர்கள் அப் பேச்சின் ஒரு பகுதியை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பிய பின், திரு அமிர்தலிங்கம் செய்தியாளரிடம் தெரிவித்த செய்தியை உன்னிப்பாக ஆராய்ந்தால், இப் பேச்சால் எவ்வகை நன்மையும் ஏற்படப் போவதில்லை என்றே உணர வேண்டி இருக்கிறது. அவருடைய உரையிலிருந்து, தமிழீழத்திற்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று நம்புவதற்கு எதுவுமில்லை.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

"இலங்கைத் தமிழர் சிக்கலை ஒரு கட்டிட அமைப்புக்கு ஒப்பிட்டால், அக் கட்டிடத்திற்கான அடிவாரமோ திட்டமோ, கொழும்புப் பேச்சில் முடிவாகவில்லை" என்பதைத் தெளிவாகவே கூறியிருக்கிறார் அவர். அஃதாவது இது வெறும் வீண் பேச்சு என்று மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறிய செய்திகள், கூட்டணியின் பேச்சு முயற்சி எதுவுமே பயனளிக்காது என்று தெரிவிப்பதுடன், சிக்கலைத் திசை திருப்புவனவாகவே உள்ளன.

தொடக்கத்தில், வடக்கு-கிழக்கு மாநிலங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று கூறிவந்த இவர், இதை இணைப்பு என்று கூட்டணி கருதவில்லை. ஒரே மாநிலம் என்பதுதான் எங்கள் கருத்து - என்பதாகப் பிதற்றியிருக்கிறார். இவராகக் கருதிக் கொள்ளும் இக் கருத்தே செயலாகி விட முடியுமா என்பதைக்கூட இவர் எண்ணிப் பார்க்கவில்லை என்று தெரிகிறது

'தமிழர் பகுதியில் சிங்களர் குடியேற்றம் தொடர்பான சிக்கலும் தீர்க்கப்படவில்லை' என்று இவர் கூறியிருப்பது இதுவரை இவர்கள் வெறும் உமியையே உரலிலிட்டு இடித்திருக்கிறார்கள் என்பதையே புலப்படுத்துகிறது.

தமிழீழக் கோரிக்கை என்னும் முடிவுக்கு நாம் வர வேண்டிய காரணங்களிலேயே இவரும் இவரது அரசியல் கூட்டணியும் இன்னும் தெளிவாக்கிக் கொள்ளவில்லை என்று இவரது பேச்சு உணர்த்துகிறது.

இவர் மேலும் வெளிப்படுத்திய செய்திகளில் எந்த வகையான ஒரு சாரமும் இல்லை. ஏதோ போனோம், வந்தோம் என்று சொல்வதற்குப் பகரமாக, அஃதாவது தம் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாமல், 'திட்டமில்லை, முடிவு செய்யப்படவில்லை, இறுதித் திட்டம் அறிவிக்கப் படவில்லை, கவலையளிப்பதாகவே உள்ளது' என்றவாறு, விளக்கெண்ணெயில் விழுந்த வெண்டைக்காயைப் போல வழவழா கொழ கொழா என்றே பேசியிருக்கிறார். இந்த ஏனோதானோ பேச்சுகளுக்காகக் கூட்டணி ஏன் இத்தனை நாள்களைக் கடத்தியிருக்க வேண்டும்?



இறுதியாக, இவர் கூறிய ஒரு கருத்தைப் பாருங்கள். இலங்கை அரசியல் சட்டத்துக்கு உள்பட்டுத் தீர்வு காண வேண்டும் என்னும் இலங்கையரசின் கருத்தைப் போராளிகளிடம் தெரிவித்துள்ளாராம்; இது குறித்து அவர் ஒன்றும் சொல்ல முடியாதாம்; போராளிகள்தாம் முடிவு செய்ய வேண்டுமாம்.

இவ்வளவும் கூறிவிட்டுக் 'கொழும்புப் பேச்சில் ஏற்பட்ட **முன்னேற்றம்** குறித்து (என்ன முன்னேற்றமோ தெரியவில்லை!) நடுவணரசு அதிகாரிகளிடம் விளக்குவோம்" -என்று வேறு, மேலும் மேலும் இதேபடியான பேச்சுரைப் போக்குவரத்திலேயே எங்கள் காலத்தைக் கடத்திவிட இருக்கிறோம்; இனி எதிர்காலத் தமிழர்கள் தாம் ஏதாவது செய்யவேண்டும் என்று கூறாமல் கூறியிருக்கிறார்.

போராளிகள் முன்பே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்:

"கூட்டணியின் பேச்சுக்கும் முடிவுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை. தமிழீழக் கோரிக்கையிலிருந்து நாங்கள் எந்த ஒரு படிக்கும் இறங்கி வர முடியாது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

எங்கள் உயிர் இருக்கும் வரை போராடுவோம்'' -என்று. திரு. அமிர்தலிங்கமும் அவர் கூட்டணியினரும் என்ன சொல்கிறார்கள்; நாங்களும் உயிர் இருக்கும் வரை, தமிழக அரசின் விருந்தாளிகளாக இருந்துகொண்டு, பேச்சு பேச்சென்றே பேசிக் கொண்டிருப்போம்'' என்கிறார்களா? இதைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டியதுதானே?

ஆனால், திரு. அமிர்தலிங்கம் குழுவினர் உணர வேண்டும். இன்னொரு முறை போய் செயவர்த்தனாவுக்கு முன்பாக எதிர் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டு, இன்னும் கூடுதலான அதிகாரங்களுடன் எதிர்க் கட்சியாக இருந்து, எஞ்சியுள்ள கொஞ்ச நஞ்சம் வாழ்க்கையையும் அரசியல் பதவி நலம் காண்பதில், செலவழிப்பதே தங்கள் கூட்டணியினரின் கனவு என்று கருதியிருக்க வேண்டாம்.

இவரோடு முன்னர் ஒருகால் மிக நெருக்கமாகவும் உண்மை அன்பொடும் அவரின் நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டு பழகியிருந்தோம் என்னும் பழைய நட்புரிமையால் கூறிக் கொள்கிறோம்: **உங்கள் அரசியல் பதவி ஆசை பாசங்களுக்காக, தமிழினத்தின் ஒட்டு மொத்தமான ஈராயிரம் ஆண்டுக்கால உரிமை முயற்சிகளை எதிரிகளின் கால்களில் அடகு வைத்து விடாதீர்கள்.**

அதே உணர்வில் போராளிகளுக்கும் ஒரு வேண்டுகோள்: **போராளிகளே, உங்கள் உறுதியான முயற்சியில் ஓர் இம்மியும் தளர்ந்து விடாதீர்கள். உங்களை ஒற்றுமைப் படுத்திக் கொள்ளுங்கள்; வலுப்படுத்திக் கொள்ளுங்கள்; போராடுங்கள்! போராடுங்கள்! எஞ்சியிருக்கும் எங்களுடைய உடல்களெல்லாம்கூட நார் நாராகக் கிழித்**



**தெறியப்படும் வரையில் போராடுங்கள்! நம் இனத்துக்கே ஒட்டு மொத்தமான அழிவு நேரிடுவதாயினும் உங்கள் போராட்டத்தை நிறுத்தாதீர்கள். நாம் அனைவரும் அடிமைகளாக வாழ்ந்திருந்து வாரிக் கட்டிக் கொள்வது ஒன்றுமேயில்லை. உரிமைக்காகப் போராடி உயிரை இழந்து போவதை விட, இவ்வுலகில் வேறு உயர்ந்த வாழ்க்கை என்பது எதுவுமே இல்லை! வெல்க உங்கள் முயற்சி! வாழ்க தமிழீழம்! வாழ்க தமிழ்நாடு!**

—தமிழ்நிலம்: இதழ் எண் 73(27-7-86)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 41. தமிழீழத் தீர்வே தமிழினத் தீர்வு!

பேச்சுரை என்னும் பெயரில் அரசியல் தில்லு மல்லுக் காரர்களுக்கும், ஆட்சியதிகாரக் கொடுமையாளர்களுக் கும், அரசியல் இரண்டகர்களுக்குமே, கொண்டாட் டங்கள் கூடி வருகின்றன. தமிழீழத் தமிழர்களின் நிலையோ, மேலும் மேலும் மிகவும் கொடுமையுற்று வருகின்றது.

வெட்ட வெளிச்சமாகத் தெரியும் செயவர்த்தனா வின் தமிழ் இன அழிப்பு முயற்சியையும், வெறியாட்டத் தையும், ஏதோ, புரியாதன போலவும், இவற்றில் ஏதோ மருமம் இருப்பது போலவும், இந்தியா நடந்து கொள்ளும் பசப்புத்தனங்களும், பதறுதல் இல்லாத மெத்தனங்களும், அவற்றுக்கு உகந்த நல்ல கையாட்க ளாகக் கிடைத்த அமிர்தலிங்கம் குழுவினரின் கையாலா காத்தனங்களும், தமிழின அழிவை முடுக்கமாக்கிக் கொண்டுள்ளன. சா வருத்தம் கொள்ளவேண்டிய இக் காட்சிகளை யெல்லாம் சாகாமல் பார்த்துக் கொண்டி ருக்கத்தான் வேண்டியிருக்கிறது.

வீணான இந் நடவடிக்கைகளில் தமிழினப் போராளி களையும் இழுத்துப் பிடித்து, அவர்களின் உள் வேகங் களைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளாலும், உள்ளுடைவுக் கரவடங்களாலும், அமைவுப்படுத்தி, அவர்களின் வீரப் போராட்ட முயற்சிகளை ஒன்றுமில்லாமல் செய்தும் வருகிறது, இந்தியா.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



அவர்கள் தம் போராட்ட முயற்சிகளை நிறுத்திக் கொள்ளுமாறும், அவர்கள் அமிர்தலிங்கம் குழுவினர் தம் பேச்சுரைக்கு இடையூறாக எதுவும் கருத்துக் கூறா திருக்குமாறும், ஏதிலிகளுக்கு ஆதரவு, போராளிகளுக்குப் புகலிடம் என்னும் தந்திர உத்திகளால் தடுத்து நிறுத்தப் பார்க்கிறது, இந்திய அரசு!

இந்தக் கொடுமைகளுக்கு எதிராக வாய்ப்பூட்டுப் போடப்பட்ட வீரக் காளைகளாகப் போராளிகள் கையமர்த்தம் செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு உட்படுத்தப்பட்டுக் கிடக்கின்றனர். என்னே! தமிழினத்துக்கு வந்த கொடுநிலை! இந்த இனத்துக்கு என்றுதான் காலத்தால் பூட்டப்பட்ட அடிமை விலங்குகள் ஒடிக்கப்படுமோ, தெரியவில்லையே!

கழுதை தேய்ந்து கட்டெறும்பாவதைப் போல், தமிழீழக் கோரிக்கை, மாநில அதிகாரப் பகிர்வு என்னும் நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு விட்டதே! இந்தத் தீர்வையும் மானங்கெட்ட நிலையில் பேசி வரை யறைப் படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கிடக் கிறதே, அமிர்தலிங்கம் கூட்டணி! அழிக்கப்பட்ட தமிழீழப் பொதுமக்களின் சாம்பல் மேடுகளின்மீதும், புதை குழிகளின்மீதும் இருந்து கொண்டன்றோ, இந்த இட்லரினும் கொடிய வல்லாண்மைக் கயவனிடம் பல் லிளித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர், கோழையர் கொழுந்துகளான இக் கூட்டணியினர். இவர்களுக்கு இனி மேலும் வீர உணர்வு வரும் என்பதை நாம் எப்படி எதிர் பார்ப்பது?

எனவே, போராளிகளுக்குத்தான் நாம் ஏதாவது சொல்லியாக வேண்டியுள்ளது. அவர்களைத்தான், இனி

இவ்வினம் நம்பியாக வேண்டியுள்ளது. ஆம்! இனியும் கூட்டணியினரிடம் இருந்து நேரிடையாக இவர்கள் விலகி நிற்கிறார்கள் என்பதைக் காலந் தாழ்த்தாமல், உலகுக்கு உணர்த்திவிட வேண்டியதுதான்!

பதைத்துச் செத்துக் கொண்டிருக்கின்ற பொது மக்களின் புதை மேடுகளை இனியும் பட்டியல் போட்டுக் காட்டி, உலக நாடுகளை உதவிக்குக் கூவி அழைக்கும் மாந்தத் தன்மை நிறைந்த போக்குகளை விடுத்து, இரக்கத்திற்கு அப்பாற்பட்ட சிங்களப் பதர்களை, நாம் நேருக்கு நேராகச் சந்திக்கின்ற போர்க்களப் போராட்டங்களை உடனடியாகக் கட்டமைக்க வேண்டியதுதான்; அவற்றுக்கான உதவிகளை இங்குள்ள அரசியல் நோக்கும், வாய் வீச்சுத் தகிடுதத்தமும் நிறைந்த தமிழகத் தலைவர்களிடமும், இந்தியத் தலைவர் களிடமும், இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் பயனேதுமில்லை என்று உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நமக்கு நாமேதாம் போராளிகள்; துணையாளிகள்; விடுதலை வீர மறவர்கள்! நம்மால் முடிந்ததை இரண்டில் ஒன்று, முடிந்த அளவில் பார்த்துவிட வேண்டியதுதான்! இனியுங் காலங் கடத்திப் பயனில்லை; நம்மிடமுள்ள கருவிகள், நான்கைந்து நாள் போருக்குக்கூட போதாதவைதாம். இருப்பினும், நம் வீரமும், அறிவுக் கூர்மையும் முனை மழுங்காத போர்க் கருவிகளாக நம்மிடம் உள்ளன. இவற்றைக் கொண்டு நாம் வாழ்வதா-சாவதா என்று முனைந்துவிட வேண்டியதுதான்.

**தமிழீழத் தீர்வில்தான் தமிழினத் தீர்வே** அடங்கிக் கிடக்கிறது. இத்தனைப் போராட்டத்திற்கும், இத்தனை



இழப்புக்கும் பின்னரும் நாம் இந்த நிலையினின்று ஓரளவு இறங்கி வந்தாலும், இந்த இனத்திற்குற்ற இழிவையும், இழப்பையும் என்றைக்குமே மீட்டுக் கொள்ள முடியாது. **என்றைக்கும் நாம் அடிமைகள்தாம் என்பதை உலகெங்கும் உள்ள தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் நாம் எழுதி வைத்துக் கொள்ள வேண்டியதுதான். அப்படிப்பட்ட ஓர் இழிவான வாழ்வு நேர்வதைவிட, ஒட்டு மொத்தமாக நாம் அனைவரும் அழிந்துபோவதே நல்லது.**

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 74(14-9-86)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 42. வீடு வேண்டும் என்ற நிலையிலிருந்து திண்ணை வேண்டும் எனப் போராளிகள் இறங்கி வரலாமா?

**தமிழீழக் கோரிக்கையைக் கைவிடக் கூடாது!**

**தமிழினமே அழிவதானாலும், எதிர்காலத் தமிழனுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கிவிட்டே அழிய வேண்டும்!**

**தமிழினம் தன்னை மீட்டெடுத்துக் கொள்ளும் இறுதி நேரம் இது!**

**அனைவரும் இணைந்து நின்று போராடுவோம்!**

கடந்த மாதம் தமிழக அரசு தமிழீழப் போராளிகளிடம் நடந்து கொண்ட அரசியல் பண்பாடற்ற அதிரடி நடவடிக்கைகளுக்குப் பின்னர், தமிழீழப் போராளிகளில் சிலர் அவர்கள் கொண்ட மனவுறுதியில் சிறிது நெகிழ்ச்சி காட்டி வருவதாகத் தெரிகிறது. அதுபற்றிப் பல்வேறுபட்ட கருத்துகளும் அறிக்கைகளும் அன்றாடம் வெளிவந்த வண்ணமாகவே உள்ளன. அவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, உறுதியும் ஊக்கமும் மிக்க நம் தமிழீழப் போராளிகள், தங்கள் தமிழீழக் கோரிக்கையில் எங்குத் தளர்ச்சியுற்று விட்டார்களோ என்று கவலையுடன் எண்ணத் தோன்றுகிறது.

சென்ற நவம்பர் மாத இறுதியில், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர், கொழும்பில் நடந்த ஒரு



செய்தியாளர் கூட்டத்தில், தமிழீழப் போராளிகள் தங்களின் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு, மாநிலத் தன்னாட்சி முறைக்கு இறங்கி வந்திருப்பதாகவும், போராளிகளில் ஒரு சிலரே இன்னும் அந்நிலைக்குத் தடையா யிருப்பதாகவும் கூறியதாகச் செய்தி வந்தது. அப்பொழுது அச்செய்தி முழு உண்மையாக இருக்க முடியாது என்றே கருதியிருந்தோம்.

ஆனால், அண்மையில் சிறந்த திறனாய்வாளரும் நடுநிலைச் செய்தியாளருமாகிய திரு. குல்தீப் நய்யார் எழுதிய அரசியல் திறனாய்வுக் கட்டுரையில், 'யாழ்ப்பாணத்துடன் முழுமையாக இல்லாவிட்டாலும், கிழக்கு மாநிலத்தில் மூன்றில் இருபகுதிகள் இணைக்கப்படக் கருதப்பெற்று வரும் மாநிலக் குழுக்கள் மூலம் மாற்றப்படும் அதிகாரம் உண்மையாகவிருந்தால் இலங்கையினுள் ஒரு தமிழ் மாநிலமாக ஈழத்தை ஏற்றுக்கொள்ளத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் அணியமாக இருக்கின்றன' என்று குறிப்பிட்டுள்ளதைப் பார்த்தவுடன், நாம் ஐயப்பட்டது சரியாகவே போய்விட்டதே என்று எண்ணி ஆற்றொண்ணாக் கவலைகொண்டோம்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், ''இலங்கையிலிருந்து தனிநாடாகப் பிரிந்து போக வேண்டுமெனப் போராளிகள் குழுக்கள் வலியுறுத்தவில்லை'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உண்மை எதுவாக விருப்பினும், தமிழீழப் போராளிகளுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

—என்னும் திருக்குறளை நாம் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். யானை வேட்டைக்குப் புறப்பட்டவன் முயலின் பின்னால் போகலாமா? வீடு வேண்டும் என்ற நிலையிலிருந்து, திண்ணையில் இடம் கிடைத்தாலும் போதும் என்னும் நிலைக்கு வரலாமா?

தமிழினம் தன்னை மீட்டெடுத்துக் கொள்ளும் இறுதி நேரம் இது. பல்வேறு தரப்பட்ட தமிழ் மக்களும் பல நாடுகளிலும் உள்ள தமிழின மக்களும் ஒருங்கிணைந்து நின்று தங்கள் உரிமைகளுக்குப் போராட வேண்டிய நேரம் இது. இக்கால் உள்ள தமிழினமே அழிவதானாலும், எஞ்சியுள்ள எதிர்காலத் தமிழினத்துக்கென்று உலகில் ஒரு நாட்டையாகிலும் உருவாக்கிவிட்டே அழியத் தமிழன் ஒவ்வொருவனும் உறுதி செய்து கொள்ள வேண்டிய நேரம் இது.

தமிழனுக்கென்று உலகில் இரண்டே இரண்டு நாடுகளைத்தான் இப்பொழுதுள்ள உலகச்சூழ்நிலையில் உருவாக்கிக் கொள்ள இயலும். ஒன்று தமிழரின் தாயகமாகிய **தமிழ்நாடு;** இரண்டு இலங்கைத் தமிழரின் வரலாற்றுக்கால வாழ்நிலமாகிய **தமிழீழம்.** இந்த இரண்டு நாடுகளுந்தாம் உலகில் வாழும் பதினேழரைக் கோடித் தமிழின மக்களின் தொன்று தொட்ட நிலங்களாக, இப்பொழுதைக்கு இருக்கின்றன. இந்த இரண்டு நிலங்களும் வல்லதிகார ஆட்சியின் கீழ் வேற்றின மக்களிடம் அடிமைப்பட்டுக் கீழ்மையுற்றுக் கிடக்கின்றன.

தமிழ்நாடு, 'குடியரசு' என்னும் பெயரால் இந்தியாவை ஆண்டுவரும் பார்ப்பன வணிக வடநாட்டு இந்தி வெறியரிடமும், தமிழீழம், ஆரிய இனச் சிங்கள வெறியரிடமும் கிடுக்கிப் பிடியில் சிக்கிக் கொண்டு கிடப்ப



தைப் போல் கிடக்கின்றன. இவ்விரண்டு நிலங்களையும் விரைவில் மீட்டாக வேண்டும். இதற்கு இரண்டு நிலப் பகுதிகளிலும் விடுதலைப் போராட்டங்களைத் தொடங்கியாக வேண்டும்.

எதிர்பாராத வகையிலும், நல்ல வாய்ப்பாகவும், சூழலின் அழுத்தங்களாலும், தமிழீழத்தில் விடுதலைப் போராட்டம் வெடித்து விட்டது. ஆனால் தமிழகத்திலோ, இங்குள்ள அரசியல், இனநலத் தலைவர்களின் தந்நலவுணர்வாலும், ஒருவருக்கொருவர் மனமேவாத தன்மையினாலும், ஒருவரையொருவர் வஞ்சித்துக் கீழறுப்புச் செய்யும் இழிவுச் செய்கையாலும், தலைவர்களுக்கிருக்கும் அடங்காத பண நசையினாலும், விடுதலைப் போராட்டத்திற்கான அடிப்படை உணர்வுகளே இன்னும் முளையிடாமல் உள்ளன. எனவே மலர்ந்துவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கே உலகத் தமிழர்களின் உடனடி ஆதரவு தேவைப்படுகிறது. தமிழகத்திலும் அந்தத் தேவையுணர்வால்தான், இரண்டகர்கள், காட்டிக் கொடுக்கும் கயவர்கள், உடன் பிறந்தே இனத்தைக் கொல்லும் நச்சுப் பூச்சிகள் ஆகியவர்கள் தவிர, பிற அனைத்துத் தமிழர்களும் தமிழீழத்திற்குக் கருத்து, உணர்வுகள் வழிப் பேராதரவு கொடுத்தும், பொருள்கள் வழிப் பேருதவி நல்கியும் வருகின்றனர்!

இந்த நிலையில், இந்திய அரசினரும் இலங்கைச் சிங்கள வெறியினரும் தம் ஓரினத் தன்மையாலும் ஒரதிகார ஆட்சி முறைமைகளாலும் திரைமறைவில் பேசி, வெளிப்படையாக நடத்திவரும் பேச்சுரை நாடக நடிப்புகளாலும், தமிழீழப் போராளிகள் நடத்திவந்த பெரு முயற்சிகளுக்கு இடைத் தொய்வும் இடையூறும் ஏற்பட்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

டுள்ளன என்பது உண்மையானாலும், அதற்காக, இவ்வளவு பெரிய அளவாகத் தொடங்கிய இனமுயற்சியில்—அதன் பெருநோக்கான கொள்கையிலேயே நாம் ஒரு நெகிழ்ச்சி ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், அதன் இன வருத்தத்தையும் இன முன்னேற்ற இழப்பையும் யாராலும் அளவிட்டு உரைத்துவிட முடியாது.

எதிரி கொடியவன்தான்! வலியவன்தான்! இன்னுஞ் சொன்னால் சூழ்ச்சி மிக்கவன்; நேர்மையற்றவன் என்னும் வகையில் என்னென்ன சொற்களுண்டோ அத்தனைக்கும் பொருத்தமானவன்தான் இலங்கைச் சிங்களவனும், அதன் தலைவனும்! ஆனால், அதற்காக நாம் கொள்கையில் தளருவதா? - ஐயகோ, இஃதெவ்வளவு பெரிய கொடுமை! இக்கொடுமையின் முடிவு என்னவாக இருக்கும்? எதில் போய் முடியும் என்று சிந்திக்க வேண்டாமா?

எனவே, தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்று எந்தப் போராட்டக்குழு அல்லது குழுக்கள் சொன்னதோ, அல்லது சொன்னவையோ, தெரியவில்லை. அவ்வாறு திரு. குல்தீப் நய்யாரிடம் அவை தெரிவித்திருக்குமானால், அவை போராட்டக்குழுவாகத் தம்மை வளர்த்தெடுத்துக் கொண்டதிலேயே பொருளில்லை. ஏதோ ஓர் உணர்வின் அடிப்படையில் அல்லது ஒரு வேகத்தின் அடிப்படையிலேயே அவை அக் கொள்கையை அவ்வாறு கையெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்! பிறகு, சூழ்நிலைக்கேற்பவும், எதிர்ப்பு நிலைகளைக் கருதியும் அதைக் கைநெகிழ்த்திருக்க, திருவள்ளுவர் மொழியில் சொல்வதானால் கைதூவி (1021) இருக்க வேண்டும்! அந்தோ, இரக்கம்! இழிவு!



இனி, குல்தீப் நய்யார் கட்டுரையில் இன்னொரு செய்தியும் காணப் பெறுகிறது. அது போராளிக் குழுவின் இன்னொரு தலைவராக உள்ள திரு. உமாமகேசுவரன் (முகுந்தன்) அவர்கள் கூறியதாக உள்ள கருத்து. அஃது, ''இந்தியாவைத்தான் நாங்கள் மிகவும் நம்பியிருக்கிறோம். இந்நாடுதான் எங்களுக்கு உறுதியாக எதையும் செய்ய வேண்டும்'' என்பது.

இந்தக் கருத்தும் பொருளற்ற அல்லது பயனற்ற கருத்தே. **தமிழ்நிலம்** இது தொடர்பாகத் தொடக்கத்திலிருந்தே எவரும் கூறாத வகையில், மிக உறுதியான கருத்தைக் கூறி வந்திருக்கிறது. இந்தியா என்று முகுந்தன் சுட்டுவது தமிழ் நாட்டையும் அதில் உள்ள தமிழினத்தவர்களையும் கருதிக் கொண்டே என்று நினைக்கவேண்டியிருக்கிறது. மற்றபடி அவர், இப்பொழுதுள்ள வடநாட்டுக்கார இந்திவெறியரையும் பார்ப்பன -வணிக நடுவண் ஆட்சியாளரையும் நினைத்தார் என்று கொண்டால் அவர் இப்பொழுதுள்ள இந்தியாவைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்றே பொருள்படும். ஏனெனில், இப்பொழுதுள்ள நடுவணாட்சி என்பது, பச்சைப் பார்ப்பனர்களும், அவர்களுக்கு அனைத்து நிலைகளிலும் ஒன்றித் துணை போகும் கொழுத்த முதலாளியக் கொள்ளையர்களும் கொண்ட ஒரு வெறிக் கும்பல் ஆட்சிதான் என்பதை அவர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆரியப் பார்ப்பனர் எங்கேனும் எப்பொழுதேனும் தமிழினத்தவரின் விடுதலைக்கு அல்லது முன்னேற்றத்துக்குத் துணையாக இருக்க முடியுமா? வரலாற்றில் எங்கேனும் இந்த வியப்பான நிகழ்ச்சி நடந்துள்ளதாகக் காட்ட முடியுமா? ஆட்டுக் குட்டிகளுக்காக எங்கேனும் ஓநாய் துணை போனதாகக் கூற முடியுமா? முகுந்தன்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழீழத்தவர். எனவே அவர்க்கும் அவரைப் போன்றவர்களுக்கும் இந்தியாவைப் பற்றியும், அதன் தலைமையமைச்சரான இராசீவின் இனத்தைப் பற்றியும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை;

பார்ப்பன இனம் நாகப் பாம்பை விடக் கொடிய நஞ்சு உள்ள இனம். அதில் எங்கேனும் ஒரிரண்டு சவலைப் பாம்புகள் இருக்கலாம். ஆனால் அவற்றைப் போன்றவர்கள் இராசீவ் ஆக வர முடியாது! எனவே தமிழின உரிமை மீட்புக்கு அல்லது விடுதலைக்குப் பார்ப்பன இனத்தின் இயக்கத்தையோ துணையையோ, தமிழ்த் தேசிய இன விடுதலைக்காகப் பாடுபடும் அல்லது பாடுபடப் போகும் எந்தப் போராளியும் எதிர் பார்க்கவே கூடாது. அஃது இது வரை தமிழீழப் போராளிகள் பெற்ற ஏமாற்றத்தைப் போலத் தொடர்ந்த ஏமாற்றத்தையும் அவமானத்தையுமே தரும். இந்த உண்மை நம் அன்புக்குரிய உமாவுக்கு (முகுந்தனுக்கு) ஓரளவு முன்பே தெரிந்திருந்தாலும் எவ்வாறு அவர் அப்படிக் கூறினார் என்று தெரியவில்லை. ஒருவேளை அடுத்த படியில் கால் வைத்திருக்கிறாரோ, என்னவோ? எஃது எப்படியானாலும் போராளிகள் ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும்;

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (964)

இனி எவ்வாறேனும் காலப் போக்கில் நம் தமிழீழப் போராட்ட மறவர்கள் அரசியல் **அமிர்தலிங்கத்தைப்** போல், அத்துணையளவு தாழ்ந்து போய்விட மாட்டார்கள் என்று நம்புகிறோம்; தாழ்ந்து போய்விடக் கூடாது என்று எச்சரிக்கிறோம். தாழ்ந்துபோய்விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 77(7-12-86)**

# 43. தன்மதிப்பும் தன்மானமும் பாராமல் இனநலம் கருதித் தமிழீழப் போராளிகள் பிரபாகரனுடன் ஒன்றுபட்டு, அவர் தலைமையில் இயங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்!

**தமிழின அழிவைத் தடுக்க இதைத் தவிர வேறு வழியில்லை!**

தமிழீழக் கொடுமைகள் நாள்தோறும் மிகுந்து வருவது அளவற்ற அச்சத்தையும் துயரத்தையும் தமிழர் அனைவர்க்கும் தந்து கொண்டிருக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. தமிழரிலேயே இக் கொடு நிலைகளைக் கண்டு கவலைப் படாதவர்களோ, உள்ளம் நடுங்காதவர்களோ இருப்பார்களாயின், அவர்கள் கட்டாயம் தமிழர்களாகவோ அல்லது தமிழர்களுக்குப் பிறந்தவர்களாகவோ உண்மையாக இருத்தல் முடியாது;

இன்றுள்ள தமிழினச் சூழல் தமிழினத்திற்கு என்றைக்குமே ஏற்பட்டிருக்க முடியாதது; வரலாற்றிலும் இப்படியொரு நிலை இருந்ததாக எவரும் சொல்ல இயலாது; ஒருவேளை தமிழக வரலாறே இருண்டு கிடந்த களப்பிரர் காலத்தில் இவ்வாறு இருந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. ஆனால் அக் காலத்தில் ஒருவேளை அவ்வாறிருந்திருக்கலாம்; பார்ப்பனியமும் மத மூட நம்பிக்கைகளும் அயலவர் ஆளுமையும் கொழுந்துவிட்டு எரிந்திருந்த நேரம் அது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஆனால் இன்றோ அறிவியல் முழு வளர்ச்சிபெற்று மாந்தவியல் முழு மலர்ச்சியுற்று, உரிமையியல் நன்கு கிளர்ச்சியடைந்து வளர்ந்து வரும் காலம். இன்றைக் குப் போய் ஈழத் தமிழினம் இவ்வாறு அடிபட்டுச் செத்துக் கொண்டிருக்கிறது. இங்கிருக்கும் தாய்த் தமிழர்களாகிய நாமெல்லாரும் ஏமாளிகளாகவும் இளித்தவாயர்களாகவும் வெறுங்கையர்களாகவும் ஏதும் செய்ய இயலாதவர்களாகவும் பார்த்துக் கொண் டிருக்கிறோம் என்றால், இதை விட இழிவு இந்த இனத் திற்கு வேறு என்ன உண்டு! இதைவிடக் கொடுமை வேறு எங்கு உண்டு?

எனவே, இந்த நிலையில் இனிநாம் செய்ய வேண்டிய முயற்சி, கடைப்பிடிக்க வேண்டிய உத்தி ஒன்றே ஒன்று தான் உண்டு. அஃது நமக்குள் நாம் ஒன்றுபடுவதே! இந்தியைத் திணிக்கவும், வடநாட்டுப் பார்ப்பனிய வணிக ஆட்சியை நிலைப்படுத்தவும், நடுவணரசு எந்த ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பேசும் கரவான உத்தி யைக் கையாளுகிறதோ, அதே ஒற்றுமை, ஒருமைப் பாட்டு உத்தியை நாம் கடைப் பிடித்துத்தான், அதை முறியடிக்க வேண்டும். இந்த வகையில் இன்னும் நாம் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது கொஞ்சமும் சரியன்று.

நமக்குள் இருக்கின்ற அனைத்து அரசியல் பொரு ளியல், சாதி, மத, கட்சி, கொள்கை வேறுபாடுகள் அனைத்தையும்உடனடியாகக் களைந்து கொண்டு, நாம் ஓருருப் பெறுதல் வேண்டும். ஒரே உணர்வு பெறுதல் வேண்டும். அவ்வகையில் நம் அனைவருக்குமே நோக்கம் ஒன்றாதல் வேண்டும். இன்றைய நிலையில் தமிழின மீட்சிதான்நமக்கு அரசியலை விடவும், பொருளியலை



விடவும், மற்ற இலக்கிய, கலை, பண்பாட்டியல்களை விடவும் முகாமையானதாக இருத்தல் வேண்டும்.

இனி, இதே நிலையைத்தான் தமிழீழப் போராளி களும் மேற்கொள்ளுதல் வேண்டும். இனியும் நாம் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது நம் அறியாமை யையே அல்லது உணராமையையே காட்டுவதாகும்.

ஆகவே, நம் தமிழீழப் போராளிகள் அனைவரும், அனைத்துக் குழுக்களும், தங்களுக்குள்ள எந்த வகை யான மதிப்பு, மான, உயர்வு தாழ்வு நிலைகள் அனைத் தையும் களைந்துவிட்டுத் தங்களுக்குள்ளே எல்லா நிலை களிலும் கையோங்கி நிற்கும் **தமிழீழ விடுதலைப் புலிகள்** அணியுடன் — தம்பி பிரபாகரனுடன் - ஒன்றாக இணைந்து, ஓருருவாகி நமக்குக் கண்ணுக்குத் தெரிந்த முதற்பகையான சிங்களக் கொடியவர்களை நேருக்கு நேர் நின்று எதிர்த்துப் போராடுதல் வேண்டும்.

இல்லெனில், நம் இன முன்னேற்றம் மிக மிகப் பின் தங்கிப் போவது உறுதி. இனி, அம் முன்னேற்றம் என்பது கூட ஒருபுறம் கிடக்கட்டும். இனமே இல்லாமற் போகின்ற இழி நிலை ஏற்பட்டு விடாமல் கட்டிக் காப்ப தும் இப்பொழுதைக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

நாம் தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறோம். நம் மற்றைய எந்தப் போராட்டமும் — இந்தியெதிர்ப்பு, மண்டல்குழு அறிக்கை-கல்வி, பதவி, விழுக்காட்டுரிமை போன்ற எதுவும் இப்பொழுதைக்குத் தேவையில்லாதன என்பது நம் முற்ற முடிந்த கருத்தாகும். வீட்டையே உரிமையாக்க வேண்டிய நாம் கதவுக்கும், பலகணிக்கும், திண்ணைக்கும் கோரிக்கை யெழுப்பிக் கொண்டிருப்பது

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மக்களை ஏய்த்து விட்டு, நம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒரு அரசியல் கரவடமே- தந்திரமே - ஆகும். எனவே தமிழ்நாட்டு விடுதலைக்காக நாமும், தமிழீழ விடுதலைக்காக அப் போராளிகள் குழுக்களும், ஒரு தலைமையின் கீழோ, அல்லது ஒரு கூட்டுத் தலைமையின் கீழோ முதன் முதலாகவும் உடனடியாகவும் ஒன்றுபட வேண்டும் என்று முன்னுணர்வுடனும் முழு அறிவுடனும் முழு அன்புடனும் வேண்டிக் கொள்கிறோம்! மற்றவனுக்கு அடிமையாக இருப்பதை விட நமக்குள் ஒருவர்க்கு நாம் அடிமையாவது ஒன்றும் இழுக்கன்று. அதில் யாருக்கும் முதல் அடிமையாக்கிக் கொள்ள நாம் அணியம்!

—தமிழ்நிலம்: இதழ் எண்:80 (10-2-87)

# 44. இலங்கைச் சிக்கல் இராசீவ் கருத்துகள்!

இம்மாதத் தொடக்கத்தில் நிகழ்த்தப் பெற்ற குடியரசுத் தலைவரின் பாராளுமன்ற உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, அவையில் நடந்த கருத்துரைகளுக்கு விடையளித்துப் பேசிய தலைமையமைச்சர் திரு. இராசீவ் காந்தி, தி. மு. க. உறுப்பினர் வை. கோபால்சாமி தெரிவித்த கருத்துகளுக்கு, இலங்கைச் சிக்கல் தொடர்பாகக் கூறிய விடையளிப்புக் கருத்துகள் கவனிக்கத் தக்கன.

தொடக்கத்தில் திரு. வை. கோபால்சாமி, இலங்கை அரசுமீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திப் பேசியதைத் தொடர்ந்து, "இலங்கை அரசின் படைத்துறைத் தாக்குதலுக்கு அங்குள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் ஆளாகியிருக்கிறார்கள். **இந்தியா உரிய நடவடிக்கை எடுக்கக் காலந்தாழ்த்துமானால், இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒழித்துக்கட்டப்பட்டு விடுவார்கள்"** என்று கூறினார். இதை மற்ற தமிழக உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டு பேசினார்கள்.

இக் கருத்துக்கு விடையளிக்கையில்தான் இராசீவ் காந்தி கீழ்வரும் நான்கு கருத்துகளைக் கூறியிருக்கிறார்.

**"இலங்கை அரசின் படைத்துறை நடவடிக்கைகளினால் அங்குள்ள தமிழர்கள் ஒழித்துக் கட்டப்படும் ஒரு நிலை நிகழும் என்று இந்தியா நம்பவில்லை.** யாழ்ப்பாணத் தீவகப் பகுதியை அத்தகைய நடவடிக்கை மூலம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இலங்கை அரசு கைப்பற்றும் என்றும் இந்தியா கருத வில்லை.'' என்றும்;

''வடக்கு மாநிலத்திலிருப்பவர்கள் தங்களைப் பாது காத்துக் கொள்ள முடியும்'' எனத் தாம் நம்புவதாகவும்;

''கோபால்சாமி குறிப்பிட்டதைப் போல இலங்கையில் வன்முறை அதிகரிக்கவில்லை'' என்றும்; 'மாறாகக் குறைந்திருப்பதாகவும்';

''மீண்டும் பேச்சுகள் தொடங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க இலங்கை அரசும் போராளிகள் குழுக்களும் போர் நிறுத்தம் செய்யவேண்டும். இலங்கை இனச்சிக்க லுக்குப் பேச்சுகள் மூலமே தீர்வு காண வேண்டுமே யன்றிப் படைத்துறை நடவடிக்கை மூலம் அன்று'' என்றும் இராசீவ் கூறினார்.

இராசீவின் இந்த நான்கு கருத்துகளும், தமிழினத் தின் மேல் அவர் கொண்டிருக்கும் எண்ணத்தைத் தெளி வாக நாம் அறிந்து கொள்ளப் போதுமானவை ஆகும். இதற்குப் பின்னும் தமிழினத் தீர்வுக்கு (அது தமிழீழத் தைப் பற்றியதானாலும் சரி, தமிழகத்தைப் பற்றிய தானாலும் சரி.) இராசீவ் காந்தியையோ, இந்தியா வையோ, தமிழினத்தில் உள்ள எவராவது ஒருவர் நம்பிக் கொண்டிருப்பாரானால், அவர் உண்மையிலேயே தமிழினப் போலியாகவே இருத்தல் முடியும்; அல்லது தமிழரில் பேதையாகவோ, அல்லது முழு அடிமையுணர்வு கொண்டவராகவோதான் இருக்க முடியும்.

இராசீவ் கூறிய முதல் கருத்தில், தமிழர்கள் அனை வரும் ஒழிந்தபின்தான் இந்தியா ஏதாவது நடவடிக்கை எடுப்பது பற்றிச் சிந்திக்கும் என்பதும் அவ்வாறு ஒழிந்து



போவதையே இராசீவ் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார் என்பதும் உட்பொருளாக இருப்பதை, அவரை ஏமாளித்தனமாக நம்பிக் கொண்டிருக்கும் அருமைத் தமிழர்களே அருள்கனிந்து விளங்கிக் கொள்ளுங்கள்.

இரண்டாவது கருத்தில், ''யாழ்ப்பாணத் தமிழர்கள் தங்களைத் தாங்களே தாம் காத்துக் கொள்ள வேண்டும்; இந்தியாவோ, தாமோ ஒருபோதும் காப்போம் என்று எதிர்பார்க்க வேண்டாம்' - என்று அவர் புலப்படுத்தி யிருப்பது விளங்கவில்லையா?

இனி, மூன்றாவதாக அவர் கூறியதில், இலங்கையில் சிங்களவர் இப்பொழுது தமிழர்களை அழித்துக் கொண் டிருப்பது அதிகமில்லையாம்; குறைவாம்; அஃதாவது இன்னும் அதிகமான எண்ணிக்கையில் தமிழர்கள் சாகடிக் கப்படவில்லையே என்று இராசீவ் கவலைப்படுவது நன்கு தெரிகிறது அன்றோ?

அடுத்து, அவரின் நான்காவது கருத்தில், போராளி கள் சிங்களப் படையினர் அழிக்க வரும்பொழுது, தங்கள் தற்காப்புக்காகக் கூடப் போராடக்கூடாது; அஃதாவது தாங்கள் எடுத்த கருவிகளைக் கீழே போட்டுவிட்டு அழிந்துபோக அணியமாக இருக்க வேண்டும் - என்பது போல் பேசியிருக்கிறார். இது வழக்கமாகக் கூறும் அவர் அறிவுரையே!

இடைக்காலத்தில் இவரின் மாயவேண்டுகோளுக்கு இணங்கிப் 'போர் நிறுத்தம்' ஒன்று நிகழ்ந்தது; அக்கால் போராளிகள் அமைதியுடன் இருக்கவே, சிங்களக் கய வர்கள் அவர்களைச் சுட்டும் வெட்டியும் கொன்றது இராசீவுக்குத் தெரியாதது போலவே பேசியிருக்கிறார்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்த நிலையில், போராளிகளும் சரி, போராடாமல் தமிழீழம் கிடைத்து விடும் என்றும், அதில் தங்களுக்கும் ஏதாவதொரு பதவி உண்டு என்றும் வாயைப் பிளந்து கொண்டு கிடக்கும் தமிழீழ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, இனியும் இராசீவ் காந்தியையோ இந்தியாவையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இளித்தவாயர்களாக இல்லாமல், அனைவரும் ஒன்று கூடி, இங்குள்ள அரசியல் தலைவர்களுடன் (வேறு வழியில்லையே) கலந்து பேசி, உடனடியாக இவ்விரண்டு நாட்டிலும் அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்த ஏதுங் கெட்ட தமிழினம் இனிமேலாவது உயர்ந்து போவதற்கான ஒரு வழியைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று மிகவும் மன்றாடி வேண்டிக் கொள்கிறோம். செய்வார்களா?

—தமிழ் நிலம்: இதழ் எண்-82 (10-3-87)

# 45. 3000 தமிழர் இலங்கைச் சிறையில் வாடுகின்றனர்! கேட்க ஆளில்லை!

**18 மாதங்களாய்க் கொடுமைத் துன்பம் தாளாமல்
பட்டினி கிடந்து சாகத் துடிக்கும் அவர்களை விடுவிக்க,
உலகத் தமிழர்களே, செயவர்த்தனேவுக்கு
வேண்டுகோள் மடல் விடுங்கள்!**

இலங்கைத் தமிழர்கள் 3000 பேர் இலங்கை வெளிக்கடைச் சிறையில் வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கடந்த 18 மாதங்களாக உடல் வருந்த உயிர் துடிக்கக் கொடுமைப்படுத்தப் பெற்று வருகின்றனர். இறுதியில் அவர்கள் உண்ணாநோன்பு மேற்கொண்டு விடுதலைக்கு ஏங்குகின்றனர். உயிருடன் செத்துக் கொண்டிருக்கும் அவர்களை உடனே விடுவிக்குமாறு தொலைவரி வழியாகவும் இரக்க வேண்டுகோள் மடல்கள் வழியாகவும் இலங்கைத் தலைவர் செயவர்த்தனேவை இங்குள்ள தமிழர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ள வேண்டுகிறோம்.

பேரளவில் இளைஞர்களாகவே உள்ள அந்த அரசியல் சிறையாளிகள் எந்த உசாவலும் வழக்குமன்ற நடவடிக்கையும் இல்லாமல் நீண்டகாலம் சிறையிலிருப்பதால், மனம் நொந்து, தங்களைச் சட்டப்படி வழக்குமன்ற உசாவலுக்குக் கொண்டு வரவேண்டும், இல்லெனில் விடுவிக்க வேண்டும் என்று கேட்டும், அவ்வாறு செய்யவில்லையானால் தாங்கள் சாகும் வரை உண்ணாநோன்பு மேற்கொள்ளப் போவதாகவும், இலங்கைக் குடியரசுத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தலைவர் செயவர்த்தனேவுக்கு நீண்ட வேண்டுகோள் மடல் ஒன்றைக் கடந்த 21-3-87 அன்று அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இதுபோலும் வேண்டுகோள் மடல்களைப் பலமுறை அரசுக்கு அனுப்பி வைத்தும், அவர்கள் மேல் இரக்கப் படாத அரக்கத்தனமான அரசு, இதுவரை எந்த வகை நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு முன்னும் இவ்வாறு பலமுறை இவர்கள் உண்ணாநோன்பு இருந் திருக்கின்றனர். ஆனாலும் பயனில்லை. இவர்களுள் சிலர் கடந்த 41 மாதங்களாகவே சிறையிலிருந்து கொடுமைப் படுத்தப்பட்டு வருகின்றனர். இதுபற்றியும் அரசுக்குத் தெரியும்.

எனவே, இவ் வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள், பொது நிறுவனங்கள், அரசியல் தொண்டர்கள் அனை வரும் திரள் திரளாகக் கையெழுத்திட்டு ஒரு வேண்டு கோளைச் செயவர்த்தனேவுக்கு உடனே அவர்களை விடு விப்புச் செய்யுமாறு அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

—தமிழ்நிலம்: இதழ் எண் 84 (10-4-87)

## 46. இலங்கைத் தமிழரை அடியோடழிக்க எண்ணுகிறார் செயவர்த்தனே!

வன்முறையை ஒடுக்குவது என்னும் பெயரால், இலங்கையிலுள்ள தமிழர்களை ஒட்டு மொத்தமாக அழித்தொழிக்க இருபதாம் நூற்றாண்டு இட்லர் செய வர்த்தனே திட்டமிட்டுவிட்டார். இந்நிலையில் உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அவர்களைக் காத் தாக வேண்டும். இந்திய அரசோ, இஃது அயல்நாட்டுச் சிக்கல் என்று சொல்லி, செயவர்த்தனே செய்யும் இன அழிவு முயற்சிகளைத் தடுத்து நிறுத்தத் தயக்கம் காட்டு கிறது.

இங்குள்ள தமிழினத் தலைவர்களும் இக்கால் ஒன்றும் செய்வதற்கு இயலாமல் கையற்ற நிலையில் வெறுமனே வாயெதிர்ப்பை மட்டும் காட்டி வருகிறார் கள். இவ்விக்கட்டான நிலையில் வெறும் வாயெதிர்ப்பு களோ, பேரணிகளோ, உணர்ச்சி ததும்பும் அறிக்கை களோ ஒன்றுக்கும் பயனில்லாமல் போய்விடும்.

**எனவே இந்திய அரசை இவ்வகையில் உணர்வடிப் படையில் ஊக்கம் கொண்டு இயங்கச் செய்யத் 'தமிழ்நாடு தனிநாடாக வேண்டும்' என்னும் கோரிக்கையை இங்குள்ள முதல்வரிசைத் தமிழ்த் தலைவர்கள் எழுப்புதல் வேண்டும். இதுவே நாம் எதிர்பார்க்கும் பயனை விளைவிக்கும். இயலுமானால், இவ்வெதிர்ப்புக் குரலை இங்குள்ள வர்கள் அனைவரும் ஒருமுகமாக எழுப்பியாக வேண்டும். தமிழினத் தலைவர்கள் செய்வார்களா?**

—தமிழ்நிலம் : இதழ் எண்: 86(25-5-87)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 47. போராளிகள் சோர்வடைய வேண்டா !

**காலம் கனிகிறது; விடுதலைக்கு நாம்**
**இன்னும் விலை கொடுத்தாக வேண்டும்!**

**வஞ்சகம் வீழும்; இரண்டகம் சாகும்;**
**உண்மை வெல்லும்!**

பலவகையான குழப்பங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இடையேயும் தமிழீழ விடுதலைப் போராளி(புலி)கள், தமிழீழப் போராட்டத்தை மிக நன்றாகவே எதிர் கொண்டு, களத்திலிருந்து விலகாமல் போராடி வரு கிறார்கள். உயிர்ச் சேதங்கள் நாம் நினைத்ததற்குக் கூடுதலாகவே நேர்ந்து வருகின்றன. என்றாலும், மிகவும் உள்ளமுங்கிப் போன, பின் தங்கிய ஒரு பேரினத்தின் விடுதலை மீட்சிக்கு இதை விடவும் கூடுதலான விலை கொடுத்தே ஆகவேண்டும்.

இந்த வகையில் யாருமே மனஞ் சோர்ந்து போக வேண்டியதில்லை. குறிப்பாக விடுதலைப் போராட்டத் தில் வெகு மூவுரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விடுதலை வீரர்கள் துளியும் ஊக்கமிழந்து, மனம் சோர் வடைந்து விட வேண்டுவதில்லை.

தீமைகளும் கொடுமைகளும் மாந்தவியலுக்கு எதி ராக நின்று அழிவுகளை மேற்கொள்ளும் நிலையில், உயிர்ச் சேதங்களும், நலக் கேடுகளும் நாம் எதிர்பார்ப் பதை விடவும் கூடுதலாகவே தோன்றும். ஆனால் உண்மையான மக்கள் நல முயற்சிகள் தோல்வியடைவ



தில்லை. எனவே கொடுமைகளைப் பார்த்து எவரும் அஞ்சிவிட வேண்டா. ஊக்கம் இழக்க வேண்டா. மேலும் மேலும் உறுதிப்பாடே நம் உள்ளத்தில் தோன்றுதல் வேண்டும்.

காலம் கனிகிறது; விடுதலைக்கு இன்னும் நாம் மிகுதியான விலை கொடுத்துத்தான் ஆகவேண்டும். இறுதி வெற்றி தமிழனுடையதே! தமிழின வரலாற்றில் களப் பிரர் காலம் இருண்ட காலமாகக் கருதப் பெறுகிறது. சிங்களவர் காலம் அதனினும் இருண்டதாகவே இருந் தாலும், எவ்வளவுதான் கொடுமையானதாகவே ஆனா லும், இதற்கும் ஒரு விடிவும் வடிவும் உண்டு என்பதை உறுதியாக நாம் நம்ப வேண்டும்.

தீயவை சூழும்பொழுது, பகைகள் ஒன்று திரண்டு முட்டமிட்டுக் கொண்டுதான் வரும். இருப்பினும், கார் காலம் போய்க் குளிர் காலம் மாறி வருவது போலப் போர்க் காலம் போய், நலிவு நிலைமாறி விடுதலை இள வேனில் வரத்தான் வரும். அக்கால் வஞ்சகம் வீழும்; இரண்டகம் சாகும்; சூழ்ச்சிகள் தலை கவிழும்! எங் கணும் உரிமையே துளிர்விடும்! உண்மை வெல்லும்! உறுதி!

**தமிழ்நிலம்: இதழ் எண் : 88(20-7-87**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 48. திலீபன்கள் இறக்கக் கூடாது !

விடுதலைப் புலிகளின் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, அவர்களின் முதல் வரிசை வீரர்களில் ஒருவரான **திலீபன்** என்னும் தமிழீழ மறவர் ஒருவர் அண்மையில் பன்னிரண்டு நாள்கள் உண்ணா நோன்பிருந்து (நீரும் அருந்தாமல்) உயிர் விட்டார் என்ற செய்தி நமக்கு மிகப் பெரும் வருத்தத்தையே கொடுத்தது. அவர் மறைவால் தமிழகத் தலைவர்களில் பலரும் மிகவும் துடிதுடித்துப் போயினர் என்பதை அவர்கள் விட்ட செய்தித்தாள் அறிக்கைகள் தெரிவித்தன.

'உண்ணா நோன்பு' என்பது காந்தியார் கைக்கொண்ட ஒருவகைப் போராட்ட முயற்சி என்பது சரிதான். ஆனால், காந்தியார் காலம் வேறு; இராசீவ், **இந்திரா** (காந்தி என்னும் சொல்லை இவர்கள் பெயருடன் சேர்த்து வழங்கவே மனம் கூசுகிறது.) காலம் வேறு. அன்று வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள்; அவர்கள் இரக்கக் குணம் உள்ளவர்கள். இன்று இக்கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சிறிதும் இரக்கக் குணம் இல்லாதவர்கள். மாந்தப் பண்பு என்பது இவர்களிடம் மருந்துக்கும் இல்லை என்பதற்கு, திலீபனின் இறப்பே சான்றாகும்.

இப் பார்ப்பனக் கொள்ளையர்களுக்கு இந்திக்காரனின் உயிர் என்பது வேறு; தமிழனின் உயிர் வேறு; அவன் உயிர் இவனுக்கு விலை மதிப்பில்லாதது; தமிழனின் உயிர் சாய்க்கடைப் புழுவின் உயிர்க்குச் சம



மானது. எனவே இவர்களிடம் போய் இரக்கத்தை எதிர்பார்ப்பது, எருமை மாட்டுச் சாணியில் வைரத்தைக் கிளறிப் பார்ப்பதைப் போன்றது. இதற்கு இவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள். எதிர்பார்ப்பவர்களே முழுப் பொறுப்பாளிகள்.

திருக்குறளில் யாரிடம் இரக்கத்தை எதிர்பார்க்க வேண்டும் என்பதற்குப் பொய்யாமொழி ஒன்று உண்டு:

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னி(று)
இரப்புமோர் ஏஎர் உடைத்து. (1033)

—அஃதாவது ஒளிவு மறைவில்லாமல் உண்மையே நிரம்பியுள்ள நெஞ்சையுடையவராய், தமக்குற்ற உயிர்க் கடமையையும் அறிகின்றவர்கள்முன்னம் நின்று இரக்கின்ற நிலையும் கூட ஒருவகைப் பெருமை உடையது— என்பது அதன் பொருள்.

கேட்கப் படுபவன் கவடில்லாத நெஞ்சத்தைக் கொண்டவனாகவும், உயிர்க் கடமையை உணர்ந்தவனாகவும் இருத்தல் வேண்டும். இரக்கமற்ற அரக்கர்களுக்குமுன் போய் 'என் உயிரைப் பணயம் வைத்துச் சாகும் வரை ஒரு கொள்கைக்காக உண்ணா நோன்பு இருக்கப் போகிறேன்' என்று எத்தனைத் திலீபன்கள் கூறி நோன்பு மேற்கொண்டாலும் அந்தத் திலீபன்களும் சாவைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்பது திலீபன்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்; ஏனெனில் அவர் இளைஞர்; இறவாக் கொள்கையர்; மறம் விளைத்த வடிவம்! மானம் கொப்பளிக்கும் உணர்வு! ஆனால் அவர் வீரத்தை அடையாளம் கண்டு கொண்ட பிரபாகரன்களுக்குத் தெரியாதோ, திலீபன் இறந்துதான் போக வேண்டி இருக்கும் என்று? அவ்வாறு தெரிந்திருந்தால்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்த அரக்கர்களிடம் எதற்குப் போய் இரக்கத்தை எதிர் பார்த்துக் கிடக்க வேண்டும்?

ஒருமுறை கோவை அறிவியல் அறிஞர் கோ. துரைசாமி அவர்களிடம், அவர்களுடைய வீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அக்கால் **முரசொலி** — செய்தித்தாள் வந்தது. இந்தி யெதிர்ப்பு முழங்கிய 1965-இன் கால கட்டம் அது. அத் தாளில் கலைஞரின் சூளுரைப் பேச்சு ஒன்று அச்சாகி இருந்தது. 'இந்தி வந்தால் என் உயிரை விட்டாகிலும் **நான் தடுப்பேன்**' என்று கலைஞர் பேசியிருந்தார். இதை வாய்விட்டுப் படித்த கோவை. கோ. து. அவர்கள், 'என்ன மயிருக்காக'டா (அவர் கூறிய சொல்லை அப்படியே எழுதுவதற்கு அறிஞர்கள் பொறுத்துக் கொள்க.) உன் உயிரை விட வேண்டும்; அவன் உயிரை எடுப்பேன் என்றன்றோ கூறியிருக்கவேண்டும்' என்று உணர்வு மிகச் சொன்னார்.

அந்த உணர்வுதான் தமிழர்க்கு இக்கால் வேண்டும். அதைத் தவிர்த்து விட்டு, **உண்ணா நோன்பிருப்பதும், உயிரை விடுவதும்** திலீபன்களுக்கும் அவரைப் போன்ற கொள்கை வீரர்களுக்கும் அழகுடையதும் அன்று; அறிவுடையதும் அன்று!

திலீபன் இறப்பு - ஈகம் மிகப் பெரியது; பெருமையுடையது! இந்த மண்ணுள்ளளவும் விண்ணுள்ளளவும் தமிழர்களால் மதிக்கத்தக்கது. ஆனால் அவற்றை விடவும் அவர் உயிர் பெருமையுடையது; விலை மதிப்பற்றது; அந்த வீரம் இனி யாருக்கு வரும்? அப்படி வருவதானால் தமிழர்கள் இக்கால் மேலும் மேலும் அடிமைப் பட்டுக் கொண்டிருப்பார்களா? வேறுபாடு கொண்டு விளங்குவார்களா?

திலீபன்கள் வேண்டும்! இன்னும் நூறு - ஆயிரம் - பதினாயிரம் திலீபன்கள் வேண்டும்! ஆனால் உண்ணா நோன்பிருந்து உயிரை விட அன்று; உண்டு முறுக்கேறி எதிரிகளின் உயிர்களை வாங்க! ஏ! எதிர்காலத் தமிழகமே! எங்கே உன் வீரத் தாய்மார்கள்? விளைவித்துத் தரச் சொல் அவர்களிடம் ஆயிரக்கணக்கான திலீபன்களை! அப்பொழுதுதான் உன் அடிமைத் தனத்திற்கு ஒரு விடிவு தோன்றும்! செய்வாயா? உய்வாயா?

—**தமிழ்நிலம் : இதழ் எண்: 92('0-10-87)**

# 49. விடுதலைப் புலிகள் பணியக்கூடாது!

**கருவிகளை எக்காரணம் கொண்டும்**
**ஒப்படைக்கக் கூடாது!**
**தமிழினத்தின் இறுதிப் போர்தான் தமிழீழப் போர்!**
**எனவே இதில் தமிழர்கள் பின்வாங்கக் கூடாது!**

தமிழீழத்தில் இப்பொழுது விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் நடைபெற்று வரும் போராட்டம் அன்று, போர், தமிழீழத்தின் விடுதலைக்காக மட்டும் நடைபெறுவதாக நாம் நினைக்கவில்லை. தமிழினத்தின் விடுதலைப் போரே இ'து என்றே கருத வேண்டியிருக்கிறது.

ஒப்பந்தம் என்னும் பெயரால், இந்திய அரசு கரவாக, சிங்களவர்கள் தமிழர்கள்மேல் தொடுத்த போராட்டக் கருவியை வாங்குவது போல், போராட்டத்தையே தாங்கள் கையிலெடுத்திருக்கிறார்கள். மற்றபடி அமைதி ஒப்பந்தம் என்றால் படையெதற்கு; படைக் கருவிகள்தாம் எதற்கு?

மேலும் இருதரப்பினர்க்கும் ஆன ஒப்பந்தம் என்றால், இருதரப்பினர்க்கும் நிறைவளிக்கக் கூடிய வகையிலன்றோ அதனுடைய நடைமுறைகள் இருத்தல் வேண்டும். அதில் இரு தரப்பினரும் அன்றோ கையெழுத்திட வேண்டும். ஞாயம் தீர்க்கப் போனவனும், போராடிக் கொண்டிருப்பவர்களில் வலியவனும் மட்டுமே உடன்பாடு செய்து கொண்டால், அ'து

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

**அமைதி ஒப்பந்தமாக** இருக்க முடியாது; மெலியவனை ஒழித்துக் கட்ட வலியவனுக்குத் தரும் **ஆதரவு ஒப்பந்தமாகத்தான்** இருக்க முடியும்.

எனவேதான் இதில் குந்தகம் விளைந்தது. விளைந்த குந்தகத்தை இப்பொழுது மெலியவன்மேல் போட்டுவிட்டு, ஒப்புரவு செய்ய வந்தவன், வலியவன் கையிலுள்ள கருவியை வாங்கிக் கொண்டு, பற்றாததற்குத் தானும் தன் கருவிகளைக் கொண்டும் அடக்கி, ஒடுக்கி, அழிக்கின்ற முயற்சியே இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தியப் படையின் முற்றுகையாகும்.

**இதை வெறும் அமைதி முற்றுகை என்று மட்டும் சொன்னால் போதாது. தமிழினத்தின் இறுதிப் போர் என்றுதான் சொல்ல வேண்டும்! எனவே இதில் தமிழினத்தின் சார்பில் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின் வாங்கக் கூடாது.**

ஓரடி பின்வாங்கினாலும் அத்துடன் தமிழின விடுதலை முயற்சிகள் அத்தனையையும் குழியில் போட்டு மூடி மேடை கட்டி விடுவார்கள். அத்தகைய திட்டத்துடன்தான் இராசீவின் இந்தியப் படை இலங்கையில் நுழைந்துள்ளது.

**செயவர்த்தனேவுக்கு ஆதரவாக இருக்க, இன்னுஞ் சொன்னால், செயவர்த்தனேவுக்காகத் தான் போர் செய்து தமிழினத்தை அழிப்பதற்கே படை! அமைதி ஏற்படுத்துவதற்காக அன்று. அமைதிப்படை என்பது உலகத்தின் கண்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய கறுப்புத் துணியே!**



**இராசீவ் பார்ப்பனன்** தமிழர்கள்மேல் நேரடியாகப் போர் தொடுக்க முடியாது; இப்படிச் சுற்றி வளைத்துத் தான் போர் தொடுக்க முடியும்; இல்லா விட்டால் தமிழர் எழுச்சியை அடக்கி வைக்கவும் முடியும்.

எனவே இதைப் போராட்டம் என்று சொல்லிவிட முடியாது; ஒட்டு மொத்த, தமிழினத்தின் மேல் தொடுத்த போர் என்றே சொல்ல வேண்டும்.

**ஆம், தமிழீழ விடுதலைக்காக மட்டும் இது நடைபெறவில்லை. தமிழினத்தின் விடுதலைப் போரே இது!**

**இப் போரின் முதல் படைத்தலைவனே பிரபாகரன்! அடுத்தடுத்துப் பிரபாகரன்கள் இனிமேல்தான் தோன்றுவார்கள்.**

எனவேதான் தமிழினமே அழிந்தாலும் சரி; அயலானுக்கு அடிமைப்பட்டு இனித் தமிழினம் வாழ்ந்திருக்கக் கூடாது!

வாழ்க்கைக்காகப் பகைவனிடம் பணிந்தும் குனிந்தும் உரிமைகளைப் பறிகொடுத்தும் பிழைப்பதைவிட, வீரத்தின் காலடியில் உயிர் துறப்பதே மேல்!

காலத்தால், வஞ்சகர்(துரோகி)களும், காட்டிக் கொடுக்கும் **சிதம்பரங்களும், பழனியாண்டிகளும், வீடண,** சுக்ரீவன்களாக அழிந்து விடுவர்!

ஆனால், **பிரபாகரன்களும், திலீபன்களும்** அழிய மாட்டார்கள்! அழியாப் புகழ் பெறுவார்கள்!

தமிழர்களை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் இந்திய அரசின் கரவான எண்ணங்களை,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சூழ்ச்சியான நடவடிக்கைகளை இத் தமிழின மக்கள் இன்னும் உணரவில்லை. அதனால்தான் நாம் அவர்களுக்கு உண்மையை உணர்த்த இத்தனைப் பாடுபட வேண்டியிருக்கிறது; இத்துணையும் எழுத வேண்டியிருக்கிறது. பார்ப்பனர்கள் நடத்துகின்ற செய்தித்தாள்களும் சரி - நம்மவர்கள் நடத்தும் செய்தித் தாள்களும் சரி, பிணந்தின்னிக் கழுகுகளுக்குச் சார்பாக நடந்து கொள்ளும், பணந்தின்னி நரிகளாகவே, உண்மையான செய்திகள் வெளிவராமல் பொய்ச்செய்திகளையும், புளுகு மூட்டைகளையும், கற்பனைக் கதைகளையும் வெளியிட்டு, இங்குள்ள மக்களைக் குழப்புகின்றன. வானொலி, தொலைக்காட்சி அனைத்திலும் இந்திய அரசுக்குச் சார்பாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவுமே செய்திகளையும், படங்களையும் சொல்லியும் காட்டியும் வருகிறார்கள்.

புலிகளின் போராட்டத்திற்கும் தமிழீழ மக்கள் ஆதரவில்லை என்பதும், பெண்களையும் குழந்தைகளையும் முன்வைத்துப் புலிகள் போராடுகிறார்கள் என்பதும் பச்சைப் பொய்! விடுதலை வேகம் கொண்ட உண்மையான வீரத்தை இழிவுபடுத்தவும், களங்கப்படுத்தவும், மாசுறச் செய்யவும், பொது மக்களுக்கு அவர்களிடமுள்ள ஆதரவையும் இரக்கத்தையும் குறைக்கவுமே இந்திய அரசும் சிங்கள அரசும் கட்டிவிடும் கதைகளும் கற்பனைகளுமே ஆகும், அவை. அவைபற்றி இந்திய அரசு ஒரு சான்றையுமே காட்டமுடியாது.

அங்குள்ள பொதுமக்களுக்கு உதவுவதுபோலவும், உணவளிப்பது போலவும் படம் பிடித்துத் தொலைக் காட்சியில் காட்டிப் பெருமைப்படும் இந்திய அரசு, புலிகளின் எந்த நடவடிக்கையையும் ஏன் படம் பிடித்துக்



காட்டவில்லை? இதற்கு மாறாக அவர்களிடம் இருந்த செய்தித் தாள்களையும், தொலைக்காட்சி, வானொலிக் கருவிகளையும் அழித்ததுடன், தானும் அவர்களைப் பற்றிய எந்த உண்மையான செய்தியையும் வெளியிடுவதில்லை.

நம்மிடமும் உண்மையான - போதுமான - செய்திப் பரப்பு கருவிகளும் இல்லை. இருக்கின்ற ஓரிரண்டு செய்தித் தாள்களையும் அரசு மிரட்டியும், அச்சுறுத்தியும், அவர்களுக்குச் சார்பான, வலியூட்டக்கூடிய செய்திகளையே வெளியிடச் செய்கிறது. இவற்றால் பொது மக்களுக்குப் போதிய உண்மை தெரிய வழியில்லை.

இங்கிருக்கும், காசுக்கு மலந்தின்னும் பச்சைத் திருடர்களும், வஞ்சகர்களும், காட்டிக் கொடுப்பாளர்களுமாகிய அரசியல் புரட்டர்களும் புலிகளுக்கு எதிராகவும், அரசுக்குச் சார்பாகவுமே நடந்து கொள்கின்றனர். எனவே, பொதுமக்களுக்கு உண்மை தெரிய வழியில்லை!

இப்பொழுது தொடங்கியுள்ள தமிழீழப் போர் தமிழினப் போரே!

இதில், தமிழினத்தின் ஒருபகுதி அழியநேரிட்டாலும் உலகிலுள்ள அத்தனைத் தமிழர்களும் உணர்ச்சி பெறுவது திண்ணம்.

**இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுக் காலமாக நடக்கும் இனமீட்புப் போரில் இத்தனைப் பேர்களாகிலும் சாவாமல் இருத்தல் முடியாது; இதில் வியப்பொன்றும் இல்லை!**

**இனியும் நாம் தப்பிப் பிழைத்துத் தம்பிரான்களுக்கு அடிமையாக இருக்க வேண்டுமா என்பதே கேள்வி.**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நாம் கூறும் ஒவ்வொரு சொல்லும், செயலும் விடுதலைப் புலிகளுக்கு நாம் கையெடுத்துத் தரும் ஆதரவுக் கருவிகள்!

விடுதலைப் புலிகளின் வீரத்துக்கு நாம் தோள் கொடுப்போம்! இங்கும் அத்தகைய போராட்டத்தைத் தோற்றுவிப்போம்!

இந்திய அரசின் பசப்புரைகளைப் போராளிகள் துளியும் நம்ப வேண்டாம்!

போர் தொடரட்டும்! தமிழினம் பொங்கி எழட்டும்!
வாழ்க தமிழினம்! மீள்க தமிழ்நாடு!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 93 (24-10-87)

## 50. முரணான ஒப்பந்தம்!

இந்திய அரசியல் பிக்கல் பிடுங்கல்களை மறைக்கும் திட்டமாக உருவாக்கப்பட்ட இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் அரசியல் பின்பாட்டுக்காரர்களை யெல்லாம் நிலையாகவே வாய் மூடவைத்து விட்டது. தப்பித் தவறி வாய் திறந்தவர்கள் பதவிகளைத் துறந்தவர் களாகவே ஆயினர்.

தமிழீழ மக்கள் இலங்கைச் சிங்களப் படையினரால் கொன்று குவிக்கப்பட்ட நிலையில், இந்திய ஆரியப் படையும் கடந்து சென்று தங்களின் நெடுநாள் போரின்மை வெறியைத் தீர்த்துக் கொண்டு வருகிறது. இந் நிகழ்ச்சியும் எதிர்பார்க்கப்பட்டதே. மேலும் எதிர் பார்த்த காலத்தினும் பிந்தி நடந்தது என்றும் கூறலாம். தமிழ்நாட்டை ஆளும் தலைவர்களும், தமிழினத் தலை வர்களும் அமைதி நோன்பு நோற்கும் நிலை தமிழினத் திற்குப் பல அவல நிலைகளுக்கு மேல் ஏற்படும் அவல நிலையாக ஏற்பட்டுள்ளது.

'தமிழீழப் போராளிகளைத் தமிழர்கள் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது' என்பது இராசீவின் இடைச் செருகல். சுரணையற்ற - வாய் மூடியினத்தில் சிலர் மட்டும் கருவியேந்துதலை அவர் இவ்வாறு கணிக் கிறார் எனக் கூறலாமா?

இரு எதிரிகளிடையில் மீண்டும் இணைந்து வாழ்வதற் குரிய வரையறைகளை ஒத்துக்கொண்டு வாழ வகை



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

செய்வது ஒப்பந்தம் எனக் கொள்வோம். இவ் விருவர் களிடை ஒப்பந்தம் ஏற்பட, சந்து செய்ய, சான்றாக அமைய இடையில் யாரேனும் இருப்பதுண்டு. ஆனால் ஒப்பந்தம் என்பது எதிரிகளிடையே தவிர, ஓர் எதிரிக்கும் நடுவில் நிற்பவர்க்கும் இடையில் நடக்காது.

அதே வகையில், இப்போது இந்திய இலங்கை ஒப்பந்தம் நடக்க வேண்டியது சிங்கள அரசிற்கும் தமிழீழத் தலைவர்களுக்கும் இடையில். நடுவில் நின்றதோ இந்திய அரசு. நடந்த ஒப்பந்தமோ இந்தியத் தலைமையமைச்சர்க்கும் இலங்கைச் சிங்களக் குடியரசுத் தலைவர்க்கும் இடையில். எனவே இது ஒப்பந்தம் என்பதா? இது சூழ்ச்சித்திட்டமாக இருக்கவே வாய்ப் புள்ளது.

அதற்குப்பின் நடந்த நிகழ்ச்சிகளோ அதை உறுதிப் படுத்துகின்றன.

விடுதலைப் புலிகளின் தலைவர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாக ஒரு நாடகம் — அமைதிப் படை என்ற பெயரில் வலுவான கருவிகளுடன் இந்தியப் படை இலங்கைக்குச் சென்றது. இலங்கை மக்கள் இன்புற்று அமைதியாக வாழத் தொடங்கியதாகத் தொலைக் காட்சிக் கற்பனை நாடகங்களுக்கிடையில் அடிக்கடி ஒளி பரப்புதல் நடைபெற்றது. அனைத்துப் பிரிவினரும கருவிகளை ஒப்படைப்பதாகத் தொலைக் காட்சியில் காட்டப்பட்டது.

படிப்படியாக இலங்கைப் படைக்குப் பணிச்சுமை குறைந்தது. இந்தியப் படை அப் பணிகளை ஏற்றுக் கொண்டது. போராளிகள் இருதலைக் கொள்ளிகளுக்



களாயினர். ஒப்பந்தத்தின்படி அனைத்தும் சரியாக நடந்து வருகின்றன.

சந்து செய்ய வந்தவர் ஒப்பந்தப்படி எதிரி நாட்டிற் குத் துணை போனார். ஒருதலைப் பக்கமானார். மறுபக்கத்தலைகளை வெட்டி வீழ்த்தி வருகிறார். தமிழினத்தை அழிக்கத் தமிழகத் தமிழனின் வரிப்பணம் பயன்படுகிறது. கேட்பதற்கு யாருமில்லா ஏதிலியின மானோம். தமிழினத்தின் அவலத்தை எடுத்துரைக்கும் தலைவரில்லா இனமானோம்.

அவ்வப்போது தமிழ் நாட்டிற்கும் ஓர் அரசுண்டு, அதற்கும் முதலமைச்சர் ஒருவருண்டு என்றபடி ஒரு சில வெற்றறிக்கைகள் அமெரிக்காவிலிருந்து வந்ததாகச் செய்தித்தாள்கள் நினைவூட்டி வருகின்றன. புலிகள், போராளிகள் என்ற சொற்கள் படிப்படியாக வன்முறை யாளர்கள், தீவிர'வாதி'கள் என்று மாற்றப்பட்டு வருகின்றன.

இந்திய அமைதிப் படையால் இலங்கை இனி அமைதி(!) நாடாக மாற்றப்பட்டு விடும் என்பது உறுதி.

புத்தம்(!) சரணம் கச்சாமி!

—தமிழ்நிலம் : இதழ் எண்: 93 (24-10-87)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 51. யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படை!

(24-10-87 'இந்து' டி. பி. எசு. செயராசு செய்தியின் பின்னணி)

அக்டோபர் 10 காரிக்கிழமை, யாழ்ப்பாணத்தில் நிலவிய குறுகியகால அமைதியும் கலைந்தது. கலைத்தது யார்? 'சாந்தி சேனை' என்றும், 'அமைதிப் படை' என்றும் பொய்முகம் புனைந்த இந்தியப் பாசிச ஆளும் கும்பலின் வன்முறைப் பிரிவான இந்தியப் படை!

10-10-87 காலை இந்தியப் படை யாழ்ப்பாணம் தமிழ்ச்செய்தித் தாள் அலுவலகங்கள் இரண்டின்மீது பாய்ந்து, செய்தியாளர் உட்பட ஊழியர் அனைவரையும் தளைப்படுத்தியது. அலுவலகங்களை மூடி முத்திரையிட்டனர். அது போதாதா? அந்த அலுவலகங்களை வெடி வைத்துத் தகர்த்தும், அமைதியைக் குலைத்தும் இந்தியப்படை விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுத்தது.

யாழ்ப்பாணத்தின் மீது ஐந்து முனைகளில் இருந்து இந்தியப்படை தாக்குதல் தொடுத்தது. பொது மக்களை இந்தியப் படை தாக்காது என்ற நம்பிக்கை பொய்த்தது. அவர்களின் தங்கல்களில் இருந்தும், வானூர்திகளில் இருந்தும் கண்டபடி சுட்டுக் கொண்டே இருந்தனர். ஆனால், வானூர்தித் தாக்குதல்



இல்லை எனப் பாசிச இராசீவ் அமெரிக்காவில் நேருரையளித்தார்.

யாழ்ப்பாணத்தின் ஒன்றுமறியாப் பொது மக்களை அன்றைய நிலவரப்படி இந்தியப்படை கொன்றது 198 பேர்; படுகாயப்படுத்தியது 485 பேர் (குறைந்த பக்கம்).

யாழ்ப்பாணத்தின் மின்சாரத்தைத் துண்டித்து இருளுக்குள் ஆழ்த்தியது, இந்தியப் படை. காலவரம்பற்ற ஊரடங்கு உத்தரவைப் பலநாள்கள் தொடர்ந்து நீடித்து வாழ்க்கையையும் சீர்குலையச் செய்தனர். சாலை தொடர்வண்டிப் போக்கு வரத்துகளை நிறுத்தினர். செய்தித்தாள்களோ, கடிதங்களோ வரவில்லை. பொய்களை மூலப் பொருளாக்கிய 'ஆகாசவாணி'ச் செய்திகளோ நம்பகத் தன்மையை இழந்தன.

யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரிக்கும், மருத்துவமனைக்கும் மின்சாரம் இல்லாமல் செய்தது இந்தியப் படை.

மூன்று இலக்கம் மக்கள் வீட்டை விட்டு வெளியே ஓடினர். இந்தியப்படை முன்னேறும் இடங்களில் எல்லாம் கொடுமைகளுக்கு அஞ்சி மக்கள் ஓடினர். கிடைத்த படகுகளிலும் தப்பி ஓடினர்.

'இந்தியத் தாய்' என மகிழ்ந்த யாழ் மக்கள் இந்தியப் பாசிச ஆளும் கும்பலின் வன்முறையைக் கண்டு அஞ்சினர். இந்திய ஆளும் கும்பல் தனது தன்னல நோக்கத்துக்காக என்ன செய்தாலும் விடுதலைப் புலிகளைக் கொலை செய்யும் போரைத் தொடங்கா என நம்பிற்று. இந்தியா மீது யாழ் மக்களின் நம்பிக்கை சீர்குலைந்தது. உண்மை நிலை இவ்வாறிருக்கையில் யாழ்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மக்களுக்கு இவர்கள் உணவு ஊட்டுவதாகப் படம் பிடித்துப் போடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 3 அயிர மாத்திரி (கிலோ மீட்டர்) தொலைவில் உள்ள கொக்குவில் -இல் இந்தியப் படையின் வீரர்கள், யாழ்ப் பல்கலை வளாகத்துக்கு அருகில் இருந்த விடுதலைப் புலிகளின் பாசறையை வளைத்து நொறுக்க, மிகத் தேர்ந்த தலைசிறந்த அதிரடிப்படையை அருகில் இருந்த சுடுகாட்டில் திருகு ஊர்தி மூலம் இறக்கினர். புலிகளின் மும்முனைத் தாக்குதலில் 29 பேர் இறந்தனர். ஒருவர் தளைப்பட்டார். எஞ்சியோர் தப்பிப் பிழைத்து ஓடும்போது கொக்குவில் பிரம்படிச் சந்தில் 40 ஏதுமறியாப் பொது மக்களைக் கொன்றனர். புறமுதுகிட்ட அதிரடிப் படையை மீட்க விரைந்த இந்தியப் படையினர் கவச ஊர்திகளைப் பொதுமக்கள் மீது ஏற்றி ஏழு பேரைக் கொன்று மகிழ்ந்தனர்.

இவர்களிடம் விடுதலைப் புலிகள் கருவிகளை ஒப் படைத்துவிட்டுக் கட்டுப்பாடின்றி அடிமைப்பட்டால் என்ன ஆகும்?

உங்கள் அரணில் இருந்து தகரி(பீரங்கி)கள் யாழ் நகருக்குள் சகட்டு மேனிக்குக் குண்டுகளைப் பொழிகிறதே எனக் கேட்டதற்கு, தேவையான குறைந்த அளவு வலிவே பயன்படுத்தப்படுவதாக இந்தியப்படை அதிகாரி கூறுகிறார்.

இவ்வாறெல்லாம் யாழ்மக்களைக் கொலை செய்யும் இந்திய ஆளும் கும்பல், பொது மக்கள் சாவுக்குப் 'புலிப் படை பொதுமக்களைக் கவசமாகப் பயன்படுத்துகிறது'



என ஒரு பொய்யை நிலை நிறுத்தியபின், இந்திய அதிகாரி எகத்தாளமிடுகிறார். புலி, ஆட்டுக்குப் பின்னால் பதுங்கியதை நான் அறிந்ததேயில்லை. புலி அவ்வாறு பதுங்கவில்லை. ஆனால் நயவஞ்சக நரிகள் ஆன இந்திய ஆளும் கும்பலுக்கு யார்தான் அஞ்சாமல் இருக்க இயலும்? போர் நிறுத்தத்துக்கும், அதன்பின் கருவி ஒப்படைப்புக்கும் புலிகள் இணங்கிய போதிலும், 15 நாள்களாகக் கொலை வெறியிலேயே கருத்தாக இருக்கிறது ஆளும் கும்பல்.

2000 விடுதலைப் புலிகளைக் கொலை செய்ய 28000 இந்திய வீரர்கள்! அம்மட்டோ? இந்தியக் கடற்படை, வானூர்திப் படையின் பேரழிப்புத் தகரி(டாங்கு)கள் வானூர்தி மூலம் யாழ் செல்கின்றன. போரின் தொடக்கத்திலேயே இந்தியப் படையினரின் அழிம்புகள், செயவர்த்தனாவின் யாழ் அதிகாரிகள் அவரிடமே முறையிடும் அளவுக்குப் போயின.

இனப்படுகொலைஞன் செயவர்த்தனாவை நல்லவர் ஆக்கிவிட்டார் பாசிச இராசீவ். உலகளாவிய தமது ஊழல்களில் இருந்து மக்களின் கவனத்தைத் திருப்பவும், தமது கவைக்குதவாத காவு ஒப்பந்தத்தை ஈழமக்கள் மீது திணிக்கவும், விடுதலைப் புலிகளை மட்டுமல்லாது யாழ் மக்களையும் கொலை செய்கிறார். இதற்கு இந்திய மக்களின் பணம் நாள் ஒன்றுக்கு உருபா 3 கோடி வீண் ஆகிறது. உயிரிழந்த இந்திய வீரர்கள் 153 பேர் ஆவர்.

—தமிழ்நிலம்: இதழ் எண்: 94(10-11-87)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 52. சிங்களப் படையை விட இந்தியப் படை நூறு பங்குக் கொடுமை!

○ இந்திய அரசு, இலங்கையிலுள்ள இந்தியப் படைக்காக ஆண்டுதோறும் 15000 கோடி உருபாவைச் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 6 கோடி உருபா அளவில் இப்பொழுது செலவாகிக் கொண்டுள்ளது.

○ இலங்கையிலிருந்து இங்கு வருபவர்கள் இந்தியப் படையின் அழிவைப் பற்றி ஏராளமாகச் சொல்கிறார்கள்.

○ இந்தியப் படையினரால் நாள்தோறும் 500 வீச்சுக் குண்டுகளுக்கு மேல் ஏவப்படுகின்றன; சிங்களப் படையினர் கூட ஒரு நாளுக்கு 40, 50 வரைதாம் பயன்படுத்தினர்.

○ இந்தியப் படையினர் புலிகளை அழிப்பதாகக் கூறிக் கொண்டு பொதுமக்களை அழிக்கின்றனர். அவ்வகையில் ஏறத்தாழ ஐயாயிரம் பேரை அழித்திருக்கின்றனர். கட்டடங்களைத் தீக் கொளுவுகின்றனர். பெண்களைக் கற்பழிக்கின்றனர். கடைகளை, நகைகளைக் கொள்ளையிட்டுச் சூறையாடுகின்றனர். வயல்களை, விளைவுப் பொருள்களை அழிக்கின்றனர். மரங்களை வெட்டிச் சாய்க்கின்றனர். பல ஆயிரக் கணக்கான இளைஞர்களைச் சிறைப்படுத்தியிருக்கின்றனர். ஏறத்தாழ 1500 விடுதலைப் போராளி



களைச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். 50 ஆயிரத் திற்கும் மேற்பட்டவர்களை வீடற்றவர்களாக ஆக்கிப் படைத்துறை ஏதிலியர் தங்க வைப்புகளில் அடைத்து வைத்துள்ளனர். மற்றும் 50 ஆயிரம் பொதுமக்கள் காடுகளில் ஒளிந்து கொண்டிருக்கின்றனர்.

○ சிங்களப் படையினர் பயன்படுத்திய படைக் கருவிகளை விட 50 — 100 மடங்கு ஆற்றல் வாய்ந்த எண்ணிக்கை மிகுந்த கருவிகளையும் குண்டுகளையும், ஊர்திகளையும் பயன்படுத்துகின்றனர்.

○ சிறைப்பட்ட நூற்றுக் கணக்கான போராளிகளை அந்தமானில் உள்ள இந்தியச் சிறைக்குக் கொண்டு போய் அடைத்துள்ளனர்.

○ அவர்கள் செய்யும் கொலை வெறியாட்டங்களும், படுகொலைகளும் முன்னர்ப் பங்களாதேசில் செய்தவற்றையும் விடக் கூடுதலானவை; கொடுமையானவை!

○ திசம்பர் 3-ஆம் பக்கல், யாழ்ப்பாணம் பலாலி வானூர்தி நிலையத்தில், இந்தியப் படைத் தளபதியிடம் சென்னையிலிருந்து சென்ற செய்தியாளர்கள், "இந்தியப் படை வீரர்கள் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களைக் கற்பழிப்பதாகக் கூறப்படுகிறதே, அ'து உண்மையா?" என்று கேட்டனர். அதற்கு அவர், "இந்தியப் படை வீரர்கள் தேவதைகளும் அல்லர் பேய்களும் அல்லர்" ஆனாலும் அவர்களைப் பற்றிக் கூறும் இக் குற்றச்சாட்டு பொய்" என்று விடை கொடுத்தார்.

இவ் விடையில், 'அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்' என்பதை முதலில் மறைமுகமாக ஒப்புக்கொண்ட அவர், பின் வரியில் அக் குற்றச் சாட்டை மறுத்திருக்கிறார்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஆனால், கடந்த 12-10-87-முதல் 17-10-87-ஆம் நாள் வரை உள்ள ஆறு நாள்களில் மட்டும் இந்தப் படையினரால் கற்பழிக்கப் பெற்ற பெண்கள் பற்றிய விளக்கங்கள் இதோ!

12-10-87-இல் யாழ் மருத்துவமனையில் குண்டுக் காயங்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டுவந்த நோயாளிப் பெண்களில் பலரையும் கொடூரமான முறையில் கற்பழித்த பின்னர்க் கொலை செய்தனர். அன்றே கதுமலை, உரும்பிராய், கொக்குவில் ஆகிய பகுதிகளில் ஏராளமான பெண்கள் (எண்ணிக்கை தெரியவில்லை) இந்தியப் படையினரால் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப் பட்டனர். கற்பழிக்கப்பட்ட பெண்களில் உயிர்தப்பிய 13 பெண்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

13-10-87-அன்று யாழ்ப்பாணத்தில் தேடுதல் வேட்டை என்ற பெயரில் வீடு வீடாகச் சென்று அமைதிப் படையினர் குழந்தை, சிறுவர், முதியோர், பெண்கள் என்று பாராமல் 60 ஒன்றுமறியாப் பொது மக்களைக் கொன்று குவித்தனர் வீடுகள், தெருக்கள் எனக் காணும் இடமெங்கும் பிணங்களே தென்பட்டன. தெருக்களில் கிடந்த பிணங்கள் பெரும்பாலும் எல்லாமே படைத்துறை வண்டிகளால் நசுக்கப்பட்டுச் சிதைவுற்றுக் காணப்பட்டன.

14-10-87-இல் உடுவிலில் 15 பெண்கள் இந்தியப் படைகளால் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பெண்களின் உணர்வு உறுப்புகள் கடித்துக் குதறப்பட்டிருந்ததாகவும், உடல் முழுவதும் அரத்தக் காயங்கள் இருந்ததாகவும், பின்னர் இவர்களின் உடல்கள் இரும்புத் தொடரி பொருத்திய



கவச ஊர்திகளின் கீழ்ப் போடப்பட்டு நசுக்கப் பட்டதனால், சப்பாத்தி போலச் சப்பட்டையாய்ச் சிதைந்து விட்டதாகவும், இவற்றை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

15-10-87-அன்று யாழ்ப்பகுதியில் கண்மூடித்தனமாகக் குண்டுகள், (ஆட்லரி செல்கள்) வீசப்பட்டன. ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டனர். நிறைய பேர் படுகாயமுற்றனர். ஏராளமான பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இவர்களுள் 11 பெண்களின் சடலங்கள் ஓர் அறையில் காணப்பட்டன. உடைகள் இல்லாத நிலையில் அந்தப் பெண்களின் உணர்வு உறுப்புகள் வெட்டப்பட்ட நிலையிலும், மாந்தப் பல் அடையாளங்கள் காணப்பட்ட நிலையிலும் இருந்தன (இவர்களுள் சிலர் திருமணம் ஆன பெண்கள்). இவர்கள் அல்லாமல் 40 பெண்கள் இந்தியப் படையினரின் தாவடி(முகாம்)களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து கற்பழிக்கப் பட்டுப் பின் இரும்புக் கவச ஊர்தியால் அடையாளம் தெரியாதவாறு நெரித்துக் கொல்லப்பட்டனர்.

—அன்றே மட்டகளப்பு மாவட்டத்தில் உள்ள மயிலம் வெளியில் உள்ள தமிழர் வீடுகள் 300-ஐ எரித்தனர். அங்குள்ள சர்வோதய அலுவலகத்தில் இருந்த 25 பெண்கள் கற்பழித்துக் கொல்லப்பட்டனர்.

—அதே நாளில் கிரான், வாழைச்சேனை, சந்திவெளி, முறக் கொட்டாஞ்சேனை, வந்தாறு மூலை ஆகிய இடங்களில் ஏராளமான இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டதுடன், அவர்களின் உடைகளையப் பெற்று வீதியில் அம்மணமாக நடக்க வைத்து, நிற்க வைத்து அவமானப்படுத்தியுள்ளனர்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

16, 17-10-87 ஆகிய நாள்களில் மட்டக் களப்பில் 10 இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இவர்களில் 7 பேர் இறந்துள்ளனர். மீதி மூவரின் நிலை கவலைக் கிடமாக உள்ளது. கற்பழிக்கப்பட்ட பெண்களின் உடல்கள்மேல் கடித்துக் குதறப்பட்ட காயங்கள் காணப் பட்டன. மேலும் பல பெண்களைக் காணவில்லை.

—16-10-87-இல் உரும்பிராய்ப் பகுதியில் 14 பெண்கள் பிடித்துச் செல்லப்பட்டனர். 17-10-87-இல் இரவு உரும்பிராயில் 24 இளம் பெண்கள் பிடித்துச் செல்லப்பட்டனர்.

—இக் கொடுமைகள் இன்றுவரை தொடர்ந்து நடை பெற்ற வண்ணமாகவே உள்ளன. இதை இல்லை என்று எவராகிலும் மறுக்க முடியாது. இந்தியப் படைத்துறை யினரின் கொடுமைக்குச் சிங்களரே தாழ்வில்லை என்று யாழ்ப் பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

△ இத்தனை அழிம்புகளையும் செய்துவிட்டு, ஒன்றுமே செய்யாதது போலவும், அங்கு அமைதி காக்க மட்டுமே போனது போலவும், உணவு, மருந்துகள் உதவி செய்து உயிர்களைக் காக்க முற்படுவது போலவும், புலிகளைப் பிடிக்க மட்டுமே போனவர்கள் போலவும் பொய்யாகவும், கவடமாகவும் செய்திகளைச் செய்தித் தாள்கள் வழியாகவும், வானொலி, தொலைக்காட்சி வழியாகவும் பரப்புகின்றனர்.

△ இப்பொழுதுள்ள நிலையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் அங்கு இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அது மட்டுமல்லாமல், 4000 இந்தியக் காவல்துறைப் படையினர் இலங்கையின்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



வடக்குப் பகுதியில் பணியாற்றவும் கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

△ இவர்கள் கப்பல் கப்பலாக உணவுப் பொருள் களையும், மருந்துப் பொருள்களையும் இங்கிருந்து அங்குள்ள மக்களுக்குக் கொண்டு செல்வதாகக் கூறப் படுவது, உண்மையிலேயே அங்குள்ள இந்திய, சிங்களப் படைகளின் பயன்படுத்தத்திற்கே அன்றி வேறு பயனுக் காக அன்று. இவர்களுக்கெனப் பயன்படுத்தியவை போக, எஞ்சியவற்றையே அங்குள்ள பொது மக்களுக்கு வழங்குவதைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர் செய்திகள் பரப்புகின்றனர்.

—தமிழ்நிலம்: இதழ் எண்: 96(16-12-87)

## 53. பிரபாகரன் கொல்லப்படுவானானால், தமிழகத்தில் பஞ்சாப் நிலைகள் தொடங்கும் !

**வடவர்களும், பார்ப்பனர்களும் வாழ முடியாத**
**ஒரு சூழ்நிலை உருவாகும்!**
**நடுவணரசு அலுவலகங்கள் இயங்க முடியாது!**
**தமிழர் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு!**
**கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு**
**போராட வேண்டிய காலம் வந்துவிட்டது!**

உலகம் இதுவரை கண்டிராத மாபெரும் வீரன் பிரபாகரன்! அலெக்சாண்டர், நெப்போலியன் போன்றோர் இவன்முன் மிக எளிய வீரர்களே! தமிழினத்தையே தலைநிமிரச் செய்யும் வல்லாண்மை மிக்கவன் பிரபாகரன்! அவன் தலைமையில் உலகத் தமிழினமே ஒன்று திரண்டு தன் உரிமைக்குப் போராட வேண்டிய கால கட்டம் உருவாகி வருகிறது. தமிழரின் வீரத்திற்கே கொடுமுடியாக அவன் என்றும் நிற்பான்! அவன் ஒரு வளைச் சூழ்ந்து கொண்டு பத்தாயிரம் இந்தியப் படைஞர்கள் ‘வச்சிர வியூகம்’ வகுத்துள்ளார்களெனில், அவர்கள் வீரர்களாக இருக்க முடியாது; சோற்றுக்குப் போராடும் வெறும் கோழைகளாகவே இருக்க முடியும்.

இனியும் பிரபாகரனைக் குறிவைத்து அவன் உயிரைக் காவு கொள்ளத் திட்டமிட்டிருக்கும் இராசீவ், படை வீரர்களை விடப் பெரிய கோழை. இராவணன் வீரத்தினும் விண்ணளவு உயர்ந்து நிற்கும் துணிவும் உறுதியும் கொண்டது பிரபாகரனின் வீரம் என்றால், அன்றாடம் தம் பாதுகாப்பிற்கெனப் பொதுமக்களின் வரிப்பணத்தில் ஒரு கோடி உருபாவையும், பிரபாகரனைப் புலந்தேடும் கும்பலுக்கு நாள்தோறும் பத்துக்கோடி உருபாவையும் தண்ணீராய்ச் செலவிடும் இராசீவின் கோழைத்தனம் — இராமனின் பேடித்தனத்தை விடவும் இழிவானது!

ஒருபுறத்தில் இத்தனைக் கீழான — மலிவான — அரசியல் சூழ்ச்சிகளையும் — தந்திரங்களையும் செய்து கொண்டு மறுபுறத்தில் பொய் பரப்புதல், கொடுமை ஊக்குதல், ஊழல் செய்தல், அனைத்ததிகார வெறி பிடித்து ஆடுதல் ஆகியவற்றில் செயவர்த்தனா கொம்பாதி கொம்பன் என்றால், இராசீவோ சிம்பாதி சிம்பன்! ஐயகோ! உலகம் இதுவரையிலும் கண்டிராத கொலை வெறியன் இராசீவ்! இந்தியா குடியுரிமை பெற்ற கடந்த நாற்பதாண்டுக் காலத்தில், இவர் காலத்தில் தான் இந்தியாவில் கொலையுண்டவர்களும் குண்டடி பட்டுச் செத்தவர்களும் மிகுதி. இதிலிருந்தே இவரின் ஆட்சித் திறமையின்மையை ஒட்டு மொத்தமாகக் கணித்துக் கொள்ளலாம்.

இராசீவின் அணுகுமுறை, தமிழீழத்தைப் பொறுத்த மட்டில் அளவு மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. அவரின் படைத்துறைக் கையாளுமையில் துளியும் ஈரமும் இல்லை; வீரமும் இல்லை வெறும் கீழ்த்தரமான பழிவாங்குதல் உணர்ச்சியும், ஆரிய இனத்தின் இயல்பான அழிவுணர்ச்சியுமே மேலோங்கி நிற்கிறது. தமிழினத்தின்மேல் கொண்ட அவரின் தனிப்பட்ட வெறுப்புணர்வே, தமிழீழத்தில் செயல்பட்டு நிற்கிறது. தாம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

திட்டமிட்டு வெளிப்படுத்திய இலங்கை—இந்திய உடன்பாட்டுத் திட்டம் தோல்வியுறத் தோல்வியுற, நாளுக்கு நாள் அவரின் ஏமாற்ற உணர்வுகள், வெறுப்புணர்வுகளாகி, வஞ்சந் தீர்க்கும் பகையாக இறுகியுள்ளன என்பதை அவருடைய நடவடிக்கைகள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

விடுதலைப் புலிகளில் ஒருவரையே தூதனுப்பவும், பிறகு அவரைத் தனிப்படுத்திச் சுட்டுக் கொல்லவும் கூட அவர் மனம் துணிகிறதென்றால், அவரின் மாந்தத் தன்மையும், போர் அறமும் அவரை விட்டு விலகியே விட்டன என்பதே பொருள். அவரின் தாயினும் சாலக் கொடியவராகவும், இதுவரை வேறுஎவரிடமும் இல்லாத அரக்கத்தனம் உடையவராகவும் மாறிவிட்டார். இனி, அவரின் கொடிய விலங்குத் தன்மையிலிருந்து அவர் மீள்வார் என்று எதிர்பார்ப்பது அறியாமை.

ஆனால், அவர் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளட்டும். மாந்தத் தன்மையின் மிக்கோங்கிய பண்பாட்டு வளர்ச்சியின் அடிப்படையிலும், அறிவியல் மறுமலர்ச்சியின் அளவு மீறிய பொதுமையின் விளைவாலும், மங்கி மறைந்து போய்க் கொண்டிருந்த ஆரிய — தமிழின வெறுப்புணர்வை மீண்டும் என்றென்றும் அழியாத பகையுணர்வாக அவர் வளர்த்து விட்டார். அவர் ஒருவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளால், தமிழினமே அவர் இனத்தின்மீது ஆறாத சினங் கொண்டு நிற்கிறது இனி அதைத் தணிவிப்பது மிக மிகக் கடினம்.

ஆனாலும், தமிழினம் இனியும் மருட்சியடைய வேண்டியதில்லை. இனி, பிரபாகரனே அழிக்கப் பட்டாலும்கூட, அவனின் வீரவுணர்வும் வீழாத நினைவும் தமிழரிடையே காட்டுத்தீயாக என்றென்றும்



கனன்று வளர்ந்து பரவிக் கொண்டுதான் இருக்கும்! அது காலப் போக்கில் ஊழித் தீயாகப் பெருகி, ஆரிய இனத்தின் அடி வேரையே சுட்டுச் சாம்பலாக்குவது உண்மையிலும் உண்மை! அக்கால் தமிழ்நிலத்தில் வடவர்களும், ஆரியப் பார்ப்பனர்களும் வாழ முடியாத ஒரு சூழல் உருவாகும்!

இப்பொழுதைய பஞ்சாப் நிலைகள் அப்பொழுது தமிழகத்திலும் தொடங்கும். நடுவணரசு அலுவலகங்கள் அக்கால் இங்கிருந்து இயங்க முடியாது. படைத்துறையிலும், காவல் துறையிலும் மண்டிக் கிடக்கும் தமிழர்கள் தங்கள் துமுக்கிகளையும், போர்க் கருவிகளையும் ஆரியத்திற்கு எதிராகத் திருப்பிப் பிடிக்க வேண்டியிருக்கும். தமிழர் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. எல்லை மீறினால் அவர்கள் கைகளில் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு போராட வேண்டிய காலத்துக்கும் கட்டாயத்திற்கும் ஆட்பட்டே தீருவர் என்பதை இராசீவ் போலும் அரசியல் மூடர்கள் உணர்ந்து கொள்ளட்டும். அவர்களுக்குப் பாதுகாப்பாக இன்றைக்கு இயங்கிக் கொண்டு, அவர்களின் கால்களைக் கழுவிக் குடித்துப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் மூப்பன்களும், சிதம்பரங்களும், பழனியாண்டிகளும், தங்கபாலுகளும், மண்டை சிதறிச் சாகின்ற நேரம் வரும்! அக்கால் இராசீவ் இனத்தின் இழவுகளை எடுக்க இங்கு எவருமிரார்.

எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

—தமிழ்நிலம்: இதழ் எண்:102 (31-3-88)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 54. பஞ்சாபும் தமிழீழமும்!

உலகெங்கும் உள்ள தேசிய இனங்கள் உள்ளுணர்வு பெற்று, எழுச்சியுற்றுத் தங்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், முழு இறையாண்மை கொண்ட ஆட்சிக்காகவும் போராடி வருகின்ற காலம் இது. தேசிய இனச் சிக்கலே தோன்றாது, அல்லது தோன்றக் கூடாது, அல்லது தோன்றுவதற்கு வழியில்லை என்று கருதப் பெற்று வந்த பொதுவுடைமைஉருசியாவில்கூட, அண்மைக் காலமாகத் தேசிய இன மோதல்களும், அவற்றின் விளைவாக உரிமைக் குரல்களும் எழத் தொடங்கியுள்ளன.

இந்தியாவைப் பொறுத்த அளவில், இஃது அரசியல் விடுதலை பெற்ற நாளிலிருந்தே, இங்குத் தேசிய இனக் குமுறல்கள் இருந்தே வருகின்றன. இன்னுஞ் சொன்னால், விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே அந்த உணர்வுகளும், நோக்கங்களும் இருந்தன என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த உணர்வுகளால் வெள்ளையரிடமிருந்து கிடைக்க வேண்டிய விடுதலை எங்குத் தள்ளிப் போய் விடுமோ அல்லது தவிர்ந்து விடுமோ என்று கருதிய நேரு, அன்றே ஓர் உறுதிமொழியை, அக்கால் தனிநாடு கேட்டுக் கொண்டிருந்த தேசிய இனங்களுக்குக் கொடுத்தார். அஃது, 'இந்தியா விடுதலை பெற்ற பின், ஒன்றுபட்டு இயங்கும் குடியரசாட்சியின் நடைமுறைகள் பிடிக்காமல் அதனின்று விலகிப்போக விரும்பும் மாநிலங்களுக்குப் பேராயக் கட்சி, தனியாட்சி வழங்கும்' என்பது.



ஆனால், இன்றோ நிலைமை தலைகீழாக மாறிப் போனது. என்னவோ, இந்தியா என்பது நேருவின் குடும்பச் சொத்தைப் போலக் கருதிக் கொண்டு 'அதைப் பிரிக்க முடியாது; தனிப்படுத்த முடியாது' என்றெல்லாம் வம்படி வழக்கடியாய்ப் பேசி, வல்லாண்மையாட்சி நடத்திக்கொண்டு வருவதுடன், தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்றெல்லாம், இல்லாத ஒன்றை இட்டுக் கட்டித் தேசிய இனங்களின் முழு வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர், வணிகப் பார்ப்பனியத் தில்லி ஆட்சியர் அதிலும் இராசீவோ, பாட்டனுக்குப் பேரன் பத்துப்படி மேலானவன் என்பது போல் இந்தியாவைத்தன் குடும்பச் சொத்தாகவே மாற்றித்தாம் வைத்ததுதான் வரிசை, இட்டதுதான் சட்டம் என்று ஏகத்தாளம் பேசி, எக்களிப்பாய் நடந்து வருகிறார், அரசியலில் முற்றி முதிராத சின்னப்பையல் இராசீவ். எனவே வருகின்ற விளைவுகளை அவர் அறியாதவராகவே இருந்து வருகிறார்.

அரசியலிலோ, பொருளியலிலோ அல்லது இனவியலிலோ ஒரு நாட்டுக்கு ஏற்படுகின்ற சிக்கல் எதுவாயினும், அச் சிக்கலுக்கான தீர்வு எதுவாக இருக்க முடியும் அல்லது இருக்க வேண்டும் என்று, ஆட்சித் தலைமையில் உள்ளவர்கள், ஆராய்ந்து அளந்து பார்த்தே முடிவு செய்தல் வேண்டும் இன்னும் அந்த ஆராய்ச்சியும், இடம், பொருள், ஏவல் என்பன பற்றியும் காலம், கருத்து, வேகம் என்பன பற்றியும், ஒரு முறைக்குப் பலமுறை எண்ணிப் பார்த்து நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். அதுதான் சிக்கலுக்குரிய உண்மையான தீர்வை அணுகுவதற்கு உதவ முடியும்.

அதுவல்லாமல், தம்மிடம் படைவலிமை உள்ளதென்று, அதிகார வெறிகொண்டு, கண்ணை மூடிக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கொண்டு, எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்றபடி ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மாறாக, மேலும் பல சிக்கல்களை இண்டு இணுக்குகளிலும், சிக்கு சிணுக்குகள் விழும்படி செய்துவிடும் என்று அறிதல் வேண்டும். இன்று, இந்தியாவிற்கே முகாமைச் சிக்கல்களாகவுள்ள கலிசுத்தான் போராட்டத்தையும், தமிழீழப் போராட்டத்தையும் பிள்ளையார் பிடிப்பதாகக் கருதிக் கொண்டு குரங்காகப் பிடித்ததுமன்றி, அது பிள்ளையாரேதான் என்று எத்தகைய பின் விளைவுகளையும் எண்ணிப் பாராமல் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று முரண்டு பிடித்து வருவது, இராசீவின் அரசியல் அறியாமையைக் காட்டுவதுமன்றி, அகங்காரங் கொண்ட மனச் செருக்கையும் மெய்ப்பித்துக் காட்டுவதாகும்.

இராசீவுக்கு இப்பொழுதுள்ளனவாகக் கருதப்படும் இரண்டு தலைவலிகள், பஞ்சாபில் நடைபெறும் கலிசுத்தான் போராட்டமும், இலங்கையில் நடைபெறும் தமிழீழப் போராட்டமும்! இந்தத் தலைவலிகளை இராசீவே தம் தவறான அணுகுமுறைகளால் அதிகப் படுத்திக் கொண்டு வருகிறார்.

சீக்கியர் 'கலிசுத்தான்' கேட்பது ஒரு தேசிய இனப் போராட்டமே! அங்கே இந்துக்கள் என்னும் பெயரால் கொல்லப்படுபவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களே! அவர்களுடைய ஆளுமை அதிகாரக் கைப்பற்றுதல்களையும் கொடுமைகளையும் பொறுத்துக் கொள்ள முடியாமலேயே, சீக்கியர்கள் கலிசுத்தான் தனிநாட்டுப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இலங்கையிலும் நிலைமை ஏறத்தாழ இதைப் போன்றதே. சிங்களப் பேரின மேலாளுமையும் தமி



ழினத் தாழ்ச்சிக் கொடுமைகளையும் பொறுத்துக் கொள்ள இயலாமலேயே, அங்குள்ள நீண்ட காலக் கோரிக்கைகள் வெற்றி பெறாத நிலையில், இறுதியாகத் தமிழீழப் போராட்டத்திற்கு எனக் கருவிகளைக் கைகளில் எடுத்துக் கொண்டு போராட முன் வந்துள்ளனர்.

பஞ்சாப் போராட்டத்தில் பெரும்பாலும் பார்ப்பனர்களே மடிவதைத் தில்லிப் பார்ப்பனீய ஆட்சியாளர்கள், தாங்கிக் கொள்ள முடியாமல், படைத்துறையினரைக் கொண்டும், ஊர் காவல் படையினரைக் கொண்டும், கலிசுத்தான் போராட்ட வீரர்களை அடக்கி ஒடுக்கவும், முடிந்தால் அழித்தொழிக்கவும் முற்பட்டுள்ளனர். ஆனால், பார்ப்பனர்கள் கொல்லப் படுவதை மூடி மறைத்து, வெறும் 'இந்துக்கள் கொல்லப் படுகிறார்கள்' என்று, மக்களிடம் சீக்கியர்கள்மேல் வெறுப்புணர்வு ஏற்படும்படி விளம்பரப்படுத்துகின்றனர். அத்துடன் கலிசுத்தான் போராட்டம் ஒரு தேசிய இனப் போராட்டம் என்பதையும் மூடி மறைத்து, அ'து ஒரு வன்முறையாளர் போராட்டம், தேசப் பகைப் போராட்டம் என்றெல்லாம் கொச்சைப்படுத்துகின்றனர்.

அதே போல் இலங்கையிலும் தொடக்கத்தில், 'தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள்' என்பதை வெளிப் படையாகச் சொல்லாமல், 'இந்தியர்கள் கொல்லப்படுகிறார்கள்' என்று கரவாகச் சொல்லி, அஃது ஒரு தேசிய இனப் போராட்டம்-விடுதலைப் போராட்டம் என்பதை மூடி மறைக்கப் பார்த்தார்கள். பின்னர் அவ்வாறு கொல்லப்படுவது தமிழினந்தான் என்று உலகத்திற்கு வெட்ட வெளிச்சமாகிய பிறகு, அஃது ஒரு வன்முறைப் போராட்டம் என்றும், குழுகக் கொடுமையாளர்கள்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நாட்டுப் பகைவர்கள் என்றெல்லாம் அதன் தகுதியைக் குறைத்துக் கூறிக் கொச்சைப்படுத்தி வருகிறார்கள்.

பஞ்சாபில் 'பார்ப்பனர்களை' 'இந்துக்கள்' என்றும் இலங்கையில் 'தமிழர்களை' 'இந்தியர்கள்' என்றும், தேசிய இனப் போராட்டங்களை மதத்தின் பெயராலும் நாட்டின் பெயராலும் அவர்கள் மறைத்துச் சொல்லுவானேன்? அதுதான், தேசிய இனப் போராட்டங்களை அவர்கள் திட்டமிட்டு ஒடுக்குகின்ற கரவான செயல் என்று அறிதல் வேண்டும்.

மேலும், தேசிய இன உரிமைகளை ஓர் இனம் கோரிக்கைகளாக எழுப்புமாயின், அதன் தாக்கமுறும் உரிமைகள் என்னென்ன? அவற்றை அது பெறுவதற்கான வாய்ப்புகள் எவையெவை? -என்பன போன்ற அணுகுமுறைகளை ஓர் அரசு கவனியாமலேயே, கருத்துக் கொள்ளாமலேயே, அப் போராட்டங்களைத் தனக்கிருக்கும் பெருத்த படை வலிவுகளையும் கருவி வலிவுகளையும் கொண்டு அடக்க நினைப்பதும், ஒடுக்க முனைவதும் அதிகார வெறியும் ஆளுமைச் செருக்கும் கொண்ட செயல்களாகும்.

இந்தியா என்பதை ஒரு நாடாகக் கருதிக் கொள்வதும், இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களையும், உலகில் என்றுமே நிகழாத வியப்பான ஒரு மாந்த மரபு நிலைக்குப் பொருத்தமில்லாத வகையில், ஒரு தேசிய இனமாக ஆக்க முயற்சி செய்வதும், ஆணைப் பெண்ணாக்கும், ஆனையைப் பூனையாக்கும் அடாவடித்தனமான அறியாமை முயற்சியாகும். இது இராசீவ் போன்ற கோமாளிகளுக்கே அல்லது அவரது தாய் போன்ற இராமாயணக் கைகேயிகளுக்கே தோன்றுகின்ற



கோணல் உத்தியாகும்; இது மாந்த அறிவியலுக்கும் மனவியலுக்கும் பொருந்தாதது.

எனவே, இராசீவின் இந்தக் கோணல் அணுகுமுறைகளால் பலப்பல சேதங்களும் ஏதங்களும் இந்த அரசியல் வானில் ஏற்பட்டு வல்லிடிகளாகவும் கதிரவ மின்னல்களாகவும் அடாவடித்தனங்களையும் அரக்கத்தனங்களையும் உண்டாக்கி வருகின்றன.

என்றுமே பொய் பொய்தான்! மெய் மெய்தான்! துமுக்கிக் குண்டுகளாலும், பெருங்குழாய் வெடி (பீரங்கி)களாலும், தகரி(டாங்கி)ப்படை, காலாட் படை, கப்பல் படை, வானூர்திப் படைகளாலும் பொய் மெய்யாகி விடாது! மெய் பொய்யாகி விடாது! பொறுக்கித் தின்னிகளாலும், பரந்துபட்ட பெரிய நிலப் பரப்பில் கொள்ளையடிப்பதும், அங்கு ஓடி இங்கு ஓடி வாய்ப்பாக, எளிமையாகத் தங்களை மறைத்துக் கொள்ளும் பணமுதலைகளாலும், எத்தனை ஒருமைப் பாடுகளும், தேசிய நீரோட்டங்களும் பேசப்பட்டாலும், பரப்பப்பட்டாலும், தேசிய இன முயற்சிகள் தொய்வடையா; இல்லாமற் போய்விடா; தவறாகவும் ஆகிவிடா. என்றேனும் அவை உள்ளுணர்வு கனன்று வெடித்துச் சிதறச் செய்யும் புரட்சியால், இந்தியா சுக்கு நூறாகப் பிரிவுபடப் - பிளவுபடப் போவது இமயமலை போன்ற உண்மையே!

அந்த - நடைபெறப் போகும் உண்மை நிலையை எண்ணிப்பார்த்து, அதற்குகந்தபடி, தம்மைத் தகவமைத்துக் கொண்டு, தம் தன்மதிப்புப் பாராமல், விருப்பு வெறுப்பு நோக்காமல் - கலிசுத்தான் போராளிகளையும், தமிழீழ விடுதலை வீரர்களையும் நேரில் அழைத்துப் பேசி, ஓர் இனநலச் சமன்பாட்டுக்கு வழியமைக்கவில்லையானால், இராசீவின் அரசதந்திரமும், படை வலிமையும், ஆட்சியதிகாரமும் காலப்போக்கில் அவரைக் கீழே தள்ளி விடும் என்பதை அப் பெரிய (!) அரசியல் மேதை(!) உணர்ந்து கொள்வது நல்லது! இல்லையெனில் இங்குள்ள தேசிய இனங்களின் இடுக்கிப் பிடிகளில் அவர் சிக்கிச் சிதைய வேண்டியிருக்கும்.

—தென்மொழி: சுவடி 24: ஓலை : 3 (மார்ச்-ஏப் 88)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 55. தமிழர்க்கு வாழ்வுரிமைகளும் தனிநாடும் கிடைத்து விடக் கூடாதென்பதே இந்தியாவின் கொள்கை!

**தீட்சித் இதைத் தெளிவு படுத்தினார்,
அதனால்தான் தனிஈழக் கோரிக்கையை
இந்தியா ஆதரிக்கவில்லை.**

**ஆனால், தமிழீழத்தை மீட்டெடுப்பதே
புலிகளின் உயிர்க் கொள்கை!**

கடந்த 16-7-88 செவ்வாயன்று கொழும்பில், 'இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஓராண்டுக் காலம்' என்ற தலைப்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் கழகத்தின் சார்பில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. அங்கு இந்திய உயர்ஆணையர் தீட்சித் பேசும் பொழுது, ''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நீக்கி விட்டுத் தமிழீழப் போராளிகளிடம் இலங்கை நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொண்டால் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. இப்படியொரு நிலைமை உருவாகி விடக் கூடாதென்பதே இந்தியாவின் நோக்கம். அதில் இந்தியா எச்சரிக்கையாக இருக்கிறது'' என்று, இந்தியாவின் கரவான உள்நோக்கத்தைத் தெளிவு படுத்தினார்

அவர் மேலும் பேசுகையில் இலங்கைத் தொடர்பான இந்தியாவின் கொள்கைகளைப் பலவகையிலும் வெளிப்படுத்தித் தெளிவாகப் பேசியுள்ளார்.



''இலங்கை மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தரப்பட வேண்டும் என்ற சிக்கலுக்குக் காலப் போக்கில் தீர்வு ஏற்படும். அதற்காக விடுதலைப் புலிகளுடன் இந்தியா பேச்சு நடத்தி வருகிறது. ஆனால் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தைத் தவிர்த்துவிட்டு, இலங்கை, விடுதலைப் புலிகளுடன் தானே புதிய பேச்சுகளைத் தொடங்கினால், தனிஈழம் உருவாவதைத் தடுக்க முடியாது'' என்று தீட்சித் இலங்கையை எச்சரித்தார்.

இவ்வெச்சரிக்கை, இந்தியாவின் மறைமுக வல்லதிகாரக் கொள்கையை உறுதிப்படுத்துவதுடன், புலிகளைக் காட்டி, இலங்கை ஆட்சியை எப்பொழுதும் தன் கைக்குள்ளேயே வைத்திருக்க விரும்புகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறது அத்துடன் போராளிகளுக்கும் இலங்கை ஆட்சிக்கும் ஒரு நல்லுறவு ஏற்படுவதையோ அதன் வழி இலங்கையில் அமைதியான ஆட்சி நடைபெறுவதையோ, இவற்றினால் தமிழினத்திற்கு ஒரு நல்விளைவு உருவாவதையோ விரும்பவில்லை என்பதையும் இப் பேச்சு தெளிவாகக் காட்டுகிறது. அதில் அச்சுறுத்தல் உணர்வும் கலந்தே இருப்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனி, தீட்சித் மேலும் பேசுகையில், இந்திய ஆட்சியினரின் உள் மனத்தில் அழுந்திக் கிடக்கும், ''தமிழர்க்கு இறைமை ஆட்சி உரிமைகள் உள்ள ஒரு நாடு கிடைக்கவே கூடாது'' என்னும் கரவான எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். அவர் பேச்சைக் கவனியுங்கள்.

''இலங்கையில் (அல்லது இந்தியாவிலுமோ வேறு எங்குமோ) **தமிழர்களுக்கெனத் தனிநாடு ஒன்றை உருவாக்குவது இந்தியாவின் நோக்கமன்று**. (இதைத்தான்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நாம் கடந்த முப்பது ஆண்டுகளாக நம் மக்களுக்குக் கூறி வருகிறோம். அதை இப்பொழுது தீட்சித் (அஃதாவது இராசீவ் பிறங்கடையினர் கருத்தை) உறுதிப்படுத்திக் கூறுகிறார். இதை நம் வீடணத் தமிழர்கள் மூப்பனாரும் சிதம்பரங்களும் கவனிக்க வேண்டும்.)

இனி இன்னும் தீட்சித் கருத்தை உண்மைத் தமிழர்கள் கவனிக்க வேண்டும். **இலங்கையில் பிரிவினையை உருவாக்குவதற்கான வேலையில் இந்தியா இறங்கினால் இந்தியாவும் உடைந்து சிதறுவதற்கான தொடக்கப் பணிகளைத் தொடங்கியதாகத்தான் பொருள். தனிஈழக்கோரிக்கையை** (அஃதாவது தனிஈழம் அமைவதை) **இந்தியா ஒரு போதும் ஆதரித்ததில்லை. தனி ஈழக் கோரிக்கையை ஏற்பதென்பது இந்தியா இதுவரை எந்தக் கொள்கைகளுக்காக வழக்காடியதோ,** (அஃதாவது இந்தியா ஆரிய இனத்தவர்களாலேயே நிலையாக ஆளப்பெற வேண்டும் என்பதுதான் அவர்கள் கொள்கை— என்பதைத் தமிழர்கள் இப்பொழுதேனும் விளங்கிக் கொள்க) — **அவை அனைத்தையும் தவிர்ப்பதாகும். பிளவுபடாத பல இன மக்களைக் கொண்ட நாட்டையே இந்தியா எப்பொழுதும் வலியுறுத்தியுள்ளது.**

(எப்பொழுதும் என்றால்; வரலாற்றுக் காலத்திலிருந்தா? இல்லையே, அப்பொழுதெல்லாம் இந்தியா ஒன்றாக இருந்ததில்லையே! இந்திய ஆரியர்களின் கைகளில் ஐரோப்பிய ஆரியர்கள் இந்திய ஆட்சி உரிமையை (சுதந்திரத்தை) ஒப்படைத்ததிலிருந்து தானே, - இந்தக் கரவான ஓரின நுகர்வுரிமையை - (ஏக போக சுதந்திரத்தை)ப் பிற இனத்தவர்களுக்கு விட்டு விடக் கூடாது; நிலை நாட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம தோன்றியிருக்க முடியும். நேரு, அவருக்குப்



பின் அவர் மகள், அவருக்குப் பின் அவர் பெயரன் என்னும் வரிசையில் வந்த வலியுறுத்தம்தானே அது.)

தீட்சித்தின் இந்தக் கருத்துக்கு இலங்கை மகாவேலி மீவளர்ச்சி (அபிவிருத்தி) அமைச்சர், காமினி திச்சநாயக அக் கருத்தரங்கிலேயே தன் உணர்வு ஒப்புதலை அளித்துக் கீழ்வருமாறு கருத்தறிவித்திருக்கிறார்.

''திராவிடர்கள் (அஃதாவது தமிழர்கள்) பலமுறை இலங்கை மீது படையெடுத்தனர். ஆனால் சிங்கள அரசன் **துட்டகைமுனு** திராவிட(தமிழ்)அரசன் ஒருவனை முறியடித்து உரிமை இலங்கையை ஏற்படுத்தினான். (அதற்குமுன் இலங்கையின் பெரும்பகுதி தமிழரசர் கையிலும், ஒரு சிறு பகுதி (மேற்கே) சிங்கள அரசரின் கையிலும் இருந்தன. துட்டகைமுனு என்பவன் இராசீவ் போன்ற ஆரிய இனவெறியன். அவன் கைக்கு இலங்கை வந்தபின்தான் சிங்களவர் ஆட்சியை, இப்பொழுது இராசீவ் செய்கிற முயற்சியைப் போல் செய்து நிலைப்படுத்திக் கொண்டான்.) அந்தச் சிங்கள அரசன் (துட்டகை முனுவின்) அரத்தம் ஒரு துளியாவது நம் அனைவரின் உடலிலும் ஓடிக்கொண்டுள்ளது'' என்றார். (துட்டகை முனுவின் அரத்தம் சிங்களவன் உடலில் இன்றும் ஓடினால், பாண்டியன் நெடுஞ்செழியன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பனிமலை நெற்றியில் புலிபொறித்த கரிகாற் பெருவளத்தான் - ஆகியோர் அரத்தங்கள் தமிழினத்தவர்களின் உடல்களில் ஓடக் கூடாதா, என்ன?)

இனி, அக் கருத்தரங்கில் பேசிய இலங்கை உரிமை (சுதந்திர)க் கட்சி உறுப்பினர் அனில் சிங்கே, இந்திய— இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து (ஆனால், தமிழர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

களுக்குச் சார்பாக அன்று), தீட்சித்துக்கு விடை கூறும் வகையில் கீழ்வருமாறு பேசியதும் நாம் நினைவில் வைக்கத்தக்கது.

"இலங்கைக் குடிமக்களில் 95 விழுக்காட்டுப் பேர் ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. இலங்கை உச்ச நெறி மன்றம்கூட ஒருமனதாக அதை ஆதரிக்கவில்லை. நடுவர் சிலர் ஒப்பந்தத்திற்கு எதிரான கருத்தையே தெரிவித்துள்ளனர்.... வங்கதேசப் போரில் இறந்த வீரர்களை விட அதிகமான வீரர்கள் இலங்கையில் இறந்து விட்டனர்.... இந்திய—இலங்கை ஒப்பந்தம் ஒரு முழுத் தோல்வியாகும். இலங்கை உரிமை (சுதந்திர`க் கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்திய—இலங்கை ஒப்பந்தம் நீக்கப்பட்டு விடும்."

இவரின் இந்தப் பேச்சுக்குத்தான், தீட்சித் "**இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நீக்கிவிட்டுப் புதிய பேச்சுகளைத் தொடங்கினால், தனி ஈழம் உருவாவதைத் தடுக்க முடியாது**" என்று விடை தந்து பேசினார்.

எதை மனத்தில் வைத்துக்கொண்டு தீட்சித் இப்படிப் பேசினாரோ, தெரியவில்லை. ஆனால் அவர் சொன்னபடி '**இந்திய — இலங்கை ஒப்பந்தம் தவிர்க்கப்பட்டுத்தான் போகும் என்பதில் ஐயமில்லை. அதன்படி, தனி ஈழமும் உருவாகித்தான் தீரும். இதை யாராலும் தவிர்த்து விட முடியாது.**"

தெரிந்தோ தெரியாமலோ, அனில்சிங்கேவும் தீட்சித்தும் இந்த உண்மையை உறுதிப்படுத்திக் கூறியதாகவே நாம் கருதுகிறோம்.

**ஒழிக இலங்கை — இந்திய உடன்பாடு!**
**வாழ்க தனித்தமிழ் ஈழம்!**

**—தமிழ்நிலம் : இதழ் எண்: 108 (15-8-88)**

# 56. விரும்பப்படாத - வேண்டாத - விருந்தாளியாக இந்திய அமைதிப்படை இலங்கையில் இருப்பது எதற்கு?

**அவர்களே விரும்பி அழைக்கப்பட்டபோது சென்ற இந்தியப் படை, அவர்களே வெளியேறச் சொல்லும்போது திரும்ப வேண்டியதுதானே முறை!**

**இந்தியப் படையைத் திரும்ப அழைத்துக் கொள்ள விரும்பாத இராசீவின் நோக்கம் என்ன?**

ஏறத்தாழ இரண்டாண்டுகளாக இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்து வருகிறது. 1987 சூலை முதல் சிங்கள அரசுக்கும் தமிழர்களுக்கும் ஓர் ஒப்புரவை உண்டாக்கி, இலங்கையில் ஓர் அமைதியான சூழலை உருவாக்குவதற்காக—என்று இராசீவால் அனுப்பப்பட்ட படை, நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 17 கோடி உருபா மேனி இதுவரை 12000 (பன்னிரண்டாயிரம்) கோடி உருபாவை (நம் வரிப் பணத்தில்) செலவிட்டுக் கொண்டு இருந்து வருகிறது.

அமைதியை ஏற்படுத்தச் சென்ற இடத்திலும் இப் படை சும்மாயிராமல் ஆயிரக்கணக்கான போராளிகளையும், தமிழின மக்களையும் கொன்று குவித்துள்ளது. பல்லாயிரக்கணக்கான சொத்துகளைக் கொள்ளையிட்டும், பல நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தும், பல நூறு தமிழ் இளைஞர்களை அடித்தும் நொறுக்கியும் உறுப்புச் சிதைவுகள் (சித்திரவதைகள்)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

செய்து கொடுமைப்படுத்தியுமே வந்திருக்கிறது. இன்னும் அந்தக் கொடுமைகள் மாயவில்லை.

சிங்களப் படையினரால்தான் ஏறத்தாழ 10 இலக்கம் உயிர்ச் சேதங்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக நேர்ந்துள்ளன என்றால், இந்தியப் படையினரால், கடந்த இரண்டாண்டுகளில் ஏறத்தாழ 2 இலக்கம் தமிழின உயிர்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றன. 50 இலக்கத்திற்கும் மேலான உருபா மதிப்புள்ள செய்துகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. சிங்களவர்களிடமிருந்து தமிழர்களைக் காப்பதாய்க் கூறிக் கொண்டு, அவர்களினும் மேலாக இலங்கைத் தமிழினத்திற்கு ஊறு விளைவித்துக் கொண்டுள்ள இவ்விந்தியப் படைகளுக்கு நேர்ந்துள்ள அழிவுகளும் உயிர்ச் சேதங்களும் பொருளிழப்புகளும் கொஞ்ச நஞ்சமன்று.

இத்தனை அழிம்புகளையும் செய்து கொண்டு, இந்தியப்படை அங்கே நன்றாகக் காலூன்றிய நிலையில், இன்னும் தங்கள் நாட்டில் இருப்பது, தமிழினத்துக்கும், சிங்கள இனத்துக்கும், கெடுதல் தவிர வேறு எந்த நன்மையும் தந்து விடாது என்பதை, மிக அண்மையில் சிங்கள அரசு உணர்ந்து கொண்டு விட்டது. மேலும், தங்கள் நாட்டுக்கு அமைதியை நிலைநாட்டுதற்கென்று வந்த இந்தியப் படை, தங்களின் அரசியல் வல்லதிகாரத்தை ஆழப்படுத்துகின்ற முயற்சியைப் படிப்படியாக வலுப்படுத்தி வருகின்ற நிலையையும் சிங்கள அரசு விரும்பவில்லை.

அத்துடன் இம்முயற்சிக்கு அடிப்படையாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில், பொதுத் தேர்தல் என்னும் ஓர் அரசியல் நாடகத்தை நடத்தி, ஈ. பி. ஆர். எல்.எப். என்னும் ஒரு போராளிப் பொம்மைக் கட்சியைப் பல சூழ்ச்சிகளுக்கும் இடையில் வெற்றி பெறச் செய்து, அதன் பெயரால், ஒரு போலி மாகாண அரசை ஏற்படுத்தி வைத்துக் கொண்டு, அவ்வரசின் ஆட்சித் தலைவர் **வரதராசப் பெருமாள்** என்னும் தலையாட்டித் தம்பிரான் வாயால், இந்திய அரசுக்கும், இராசீவுக்கும் சார்பான பல்வேறு அறிக்கைகளையும் முழக்கங்களையும் வெளிப்படுத்தச் செய்து கொண்டிருந்தது, இந்திய வல்லதிகார அரசு.



அண்மையில், இலங்கை அரசுத் தலைவர் பிரேமதேசா அவர்கள் இந்திய வல்லரசின் செயற் பின்னணிகளையும் கரவான சூழ்ச்சிகளையும் தெரிந்து கொண்டு, தமிழீழ விடிவுக்காக விடாப்பிடியோடும், வீரத்தோடும் உறுதியோடும் ஊக்கத்தோடும் போராடி வருகின்ற **தமிழீழ விடுதலைப் புலி**களுடன், நேரடியான மனந்திறந்த கலந்துரையாடல் செய்து, ஒரு நல்ல விளைவுக்கு அடிப்படையாகவும், தங்கள் முடிவைத் தாங்களே தேர்ந்து கொள்ளும் வகையிலும், **"வரும் சூலை மாதத்திற்குள் இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும்"** என்னும் கட்டளையை வெளிப்படுத்தினார்.

இந்திய அரசு இதனால் மிகவும் அதிர்ச்சியுற்று, மிகுந்த மனக்கலக்கம் அடைந்துள்ளது. உடனே வழக்கம் போல் வடக்கு கிழக்கு மாகாணப் போலியரசின் பொம்மைத் தலைமையை வைத்துக் கொண்டு, பிரமதேசாவின் கருத்துக்கு எதிரான கருத்துகளைத் தொலைக்காட்சி, வானொலி வாயிலாகப் பொது மக்களையும், போலிப் போராளிகளையும் நேருரை கண்டு நித்தமும் பரப்பி வருகிறது

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈழத் தமிழர்களும் இந்திய அரசின் இப் போலி நடவடிக்கைகளை இனங் கண்டு கொள்ள வேண்டும்.

இந்திய அரசுக்குத் தமிழினத்தின் மேலோ, அது சிங்கள அரசால் கொடுமைப் படுத்தப்படுகிறது என்ப திலோ, எவ்வகையான அக்கறையோ இரக்கமோ இல்லை. பொதுவாகவே இராசீவ் அரசுக்குத் தமிழினத் தின் மேல் எள் மூக்கத்துணை அக்கறையோ, அன்போ இல்லை; இருக்கவும் வாய்ப்பில்லை. தனக்கு நன்றாக அடிமைப்பட்டுக் கிடக்கின்ற ஒரு பணியாளன் இடத்தில், ஒரு சூழ்ச்சியான பணக்காரன் ஒருவனுக்கு எந்த அளவில் ஒரு போலித்தனமான பொய்யான அன்பு இருக்குமோ, அந்த அளவுக்குதான் தில்லியின் மேலாளுமை வல்லதி கார அரசுக்குத் தமிழின முன்னேற்றத்தில் அன்பு இருக்கும்.

மற்றபடி இவ்வினம் எந்த நிலையிலும், தன் னாளுமை பெறக்கூடாது என்பதுதான் அதன் கொள்கை, கோட்பாடு, நோககம், கவனம் எல்லாம். இனி, சிங்களவர்களைப் பற்றியோ அதற்கு அணுவளவும் இரக்கமோ ஈடுபாடோ இருக்க வேண்டிய தேவையே இல்லை. ஆனால் தன் வல்லதிகார ஆளுமை இலங்கை யிலும் பரவ வேண்டும். அதன் வழித் தன் ஆட்சியை விரிவு செய்து கொள்ள வேண்டும் என்பது இந்திய அரசின் கரவான சூழ்ச்சியான எண்ணம்! இதன் பொருட்டும், தமிழினம் விடிவு அல்லது தனியாட்சி பெறக் கூடாது என்பதன் பொருட்டும், இந்தியப் படை இலங்கையில், இருந்தாக வேண்டும் என்பதே அதன் இப் பொழுதைய அரசியல் கொள்கை! எதிர் காலந்தான் அதற்கு விடை கூற வேண்டும்.

—தமிழ்நிலம் : இதழ் எண்: 123(15-6-89)

# 57. வெட்கங்கெட்ட இராசீவ்! வீரங்கெட்ட இந்திய அமைதி(!)ப் படை! மானங்கெட்ட வடக்கு - கிழக்கு மாகாணத் தலைவர் வரதராசப் பெருமாள்!

**இரண்டு நாள்களில் புலிகளை அடக்குவோம் - அமைதி காண்போம் - என்று கொக்கரித்தவர்கள் இரண்டு ஆண்டுகளாகியும் இளித்த வாயர்களாக அங்கு நிற்பது ஏன்? இழுக்கு! அவமானம்!!**

**இந்தியாவிலேயே அமைதி காணாத இராசீவ், இலங்கையில் அமைதி காப்பது எப்படி?**

**இதுவே அரசியல் பித்தலாட்டம்!**

வரும் சூலை 23-ஆம் பக்கலுக்குள் இந்திய அமைதிப் படை என்னும் பெயரால் இலங்கையில் குழப்பத்தையும் கொடுமையையும கொள்ளையையும் தமிழ்ப் பெண்கள் கற்பழிப்பையும் நிகழ்த்திக் கொண்டிருக்கும் இந்திய வல்லாண்மைப் படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று அந்நாட்டு ஆட்சித் தலைவர் பிரேமதேசா வெளிப்படையாகவே அறிவித்தார்.

ஆனால் அதற்கு இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவோ, ''இலங்கையில் முழு அமைதியை ஏற்படுத் தாமல் இந்தியப் படை திரும்பாது'' என்று எதிர்விடை கூறினார்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் படையின் அரசியல் பேச்சாளர் பாலசிங்கம் இராசீவின் காதுகள் செவிடு படும்படி நல்ல அழுத்தமான விடையைக் கூறி யுள்ளது பெரிதும் மகிழத்தக்கது. அவர் இந்திய செய்தித்தாள் செய்தி வரைவாளர் ஒருவர்க்குக் கூறிய பின்வரும் கருத்துகள் நடுநிலையாளர்கள் சிந்திக்கத் தக்கன.

'ஏறத்தாழ 1½ இலக்கம் இந்தியப் படை இரண்டாண் டுகளுக்கு மேல் முழுத் தன்னதிகாரத்தோடு செயல் பட்டும், அங்கிருக்கும் விடுதலைப் புலிகளைக் கட்டுப் படுத்தவோ, அடக்கவோ முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் வடக்கு மாகாணத்தில் அவர்களுக் குள்ள சாய்காலும் பாதுகாப்புமேயாகும்.''

''இந்திய அமைதி காப்புப் படையை, இலங்கையில் அமைதியைக் காப்பதற்கும், விடுதலைப் புலிகளிட மிருந்து படைக் கருவிகளைக் கைப்பற்றி, அவர்கள் தாக்குதலிலிருந்து மக்களை மீட்பதற்குமே இந்தியா அனுப்பி வைத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்திய அமைதிப்படை அமைதியைப் பாதுகாக்கவில்லை. அஃது ஒரு வன்கவர்பு (ஆக்கிரமிப்பு)ப் படையாகவே உள்ளது.''

''அமைதிப் படை அங்குச் சென்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் 5000க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப் பட்டு விட்டனர். மற்றொரு 3000 பேருக்குக் காயம். 75 ஆயிரம் வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று பெயர் சுட்டி 3 ஆயிரம் பேர்களைத் தங்கள் படைப் பாசறைகளில் இந்திய அமைதிப்படை சிறை வைத்துள்ளது. இந்த நிலையில் தான் அப் படை தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்கு வதற்காக இலங்கையில் இருப்பதாகக் கூறப்படுகிறது''



''இலங்கைத் தமிழர் சிக்கல் தொடர்பாக இந்தியா வுக்கு உறுதியான அணுகுமுறையோ, ஒருமித்த கருத்தோ இல்லை. அதைத் தவிர, இராசீவின் செய லகம், உளவாய்வுப் படை (ரா), ஒற்றுத்துறை 'ஐ.பி) இராசீவ் அரசின் வெளியுறவுத்துறை, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம், இந்திய அமைதி காப்புப் படை முதலிய ஒவ்வோர் அமைப்பும் தாங்கள்தாம் முகாமை யானவர்கள் என்று கருதும் நிலை உள்ளது.''

''இலங்கை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மாகா ணக்குழு ஆட்சி இல்லை; இந்தியப் படையின் ஆட்சிதான் நடக்கிறது. இந்தியப் படையின் விரிவுப் பகுதியாகவே ஈழ மக்கள் புரட்சி விடுதலை முன்னணியின் ஆட்சி நடைபெறுகிறது''

''விடுதலைப் புலிகளை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியப் படையினரால் ஒடுக்க இயலவில்லை என்பதை இலங்கை அரசு உணர்ந்து விட்டது.''

''படை வலிவால் விடுதலைப் புலிகளைப் பணிய வைக்க முடியும் என்று இந்திய அரசு நினைத்தது; அதில் தோல்வி அடைந்தது.''

''போரை நடத்த நாங்கள் எப்பொழுதுமே விரும்பி யதில்லை. நாங்கள் அனுப்பிய தூதுகளையெல்லாம், வல்லரசு ஒன்றின் செருக்கு மனப்பான்மையோடு இந்தியா தவிர்த்தது.''

''இந்திய அரசு, எங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. நாங்கள் முழுக்க அடிபணிய வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.''

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

''இந்திய அரசுடன் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, இந்திய அமைதி காப்புப் படை எங்கள் மீது தாக்குதல் நடத்துகிறது. ஒரு நல்லெண்ண அறிகுறி என்ற அடிப்படையிலாவது அவர்கள் சண்டையை நிறுத்தியிருக்க வேண்டும்.''

—பாலசிங்கத்தின் இக் கருத்துகள், இராசீவை வெட்கங்கெட்டவராகவும், இந்திய அமைதிப் படையை வீரங்கெட்டதாகவும், வடக்கு-கிழக்கு மாகாணத் தலைவர் வரதராசப் பெருமாளை மானங்கெட்டவராகவும் நமக்குப் புலப்படுத்தவில்லையா?

இந்தியாவிலேயே அமைதி காக்க முடியாத இராசீவ் இலங்கையில் போய் அமைதி காப்பேன் என்பது எப்படி? குப்பையேறிக் கோழி பிடிக்க முடியாத குப்பன் வானம் ஏறி வைகுந்தம் காட்ட முற்படும் வேடிக்கைக் கதையிது! இதைவிட இன்னொரு பழமொழியே இதற்கு இன்னும் பொருத்தமான பழமொழி! 'தன் பெண்டாட்டியை அடக்க வக்கில்லாத தாண்டவராயன், அடுத்த வீட்டு அடங்காப் பிடாரியை அடக்குவேன் என்றானாம்.'

இதை விட இராசீவுக்குப் பெருத்த அவமானமும் இழுக்கும் வேறென்ன இருக்க முடியும்?

—**தமிழ்நிலம்: இதழ் எண்: 124(30-6-89)**

# 58. இராசீவ் செய்த சூழ்ச்சியே தமிழீழத் தலைவர்களின் படுகொலைகள்!

'இந்தியப்படை வெளியேறினால் புலிகளால் மக்கள் உயிர்க்கு ஏதம் (ஆபத்து) ஏற்படும்' என்று, இந்திய அரசும், அங்குள்ள மற்ற போராளிக் குழுக்களும் அடுத்தடுத்து மக்களிடம் கூறி வருகின்றன. இதைப் புலிகள் அறவே மறுத்து, 'இந்தியப்படை வெளியேறினால், புலிகளால் மற்ற தமிழ்க் குழுக்களுக்கும், பொது மக்களுக்கும் எந்த வகையான ஏதமும் (ஆபத்தும்) உயிர்ச் சேதமும் இரா' என்று கூறி வந்தனர்; வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தியப் படைகளை வெளியேறக் கோரும் புலிகள், தங்கள் மேல் வைத்த நம்பிக்கை வலுப்பட நடந்து கொள்வார்களே தவிர, அந்நம்பிக்கை குலையுமாறு புலிகள் மட்டுமல்லர், அரச தந்திரமும் போராட்ட அறிவும் மிக்க வேறு எவருமே இத்தகைய அழிவு வேலைகளில் ஈடுபட மாட்டார்கள். வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைக்கக் கூடாது என்பது அவர்களுக்குத் தெரியாத அறிவுக்கூறு (விவேகம்) அன்று; புலிகள் அவ்வளவு முட்டாள்களும் அல்ல. 'தினமணி'கள் கூறுவது போல, அவர்களுடைய எதிர் காலத்தை அவர்களே இத்தகைய செயலில் ஈடுபட்டுப் பாழடித்துக் கொண்டு விட்டார்கள் என்பது, அவர்களின் அரச தந்திரத்தையும் ஆற்றலையும் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டுக் காட்டுவதாகும்!

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்தியப் படைகள் வெளியேறக் கூடாது என்பதற்காகப் பொய்யாகவும் புனைசாக்காகவும் பலவேறு காரணங்களை, இந்திய அரசும் அங்குள்ள இரண்டகப் போராளிக் குழுக்களும் இட்டுக் கட்டிக் கூறிவரும் இந்த நேரத்தில், வெறும் வாயை மென்று கொண்டிருக்கும் அவர்களுக்கு நல்ல அவலை இடித்துக் கொடுத்தது போலும் செயல்களில் ஈடுபட மாட்டார்கள். அவ்வாறு ஈடுபட்டுத் தங்கள் அரசியல் வாய்ப்புகளைக் கெடுத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் உலக அறிவுக் குறைவானவர்கள் அல்லர்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அதிபர் பிரேமதேசாவும் பேச்சு நடத்துவது இந்தியாவுக்கு எதிரானது என்பது இராசீவின் கருத்தாகும். அதே சமயத்தில், பிரேமதாசா வரும் சூலை 29-க்குள் இந்திய அமைதிப் படையை வெளியேறச் சொன்னது, தம் தன்மானத்திற்கும், உலக அரங்கில் தமக்குள்ள பெருமைக்கும் இழுக்காகும் என்பதும், தாம் இலங்கைத் தமிழர் சார்பாக ஆனால் மிகச் சூழ்ச்சியாக எடுத்த மறைமுக அதிகார விரிவுபடுத்தத்திற்கு, வெளிப்படையாகக் கிடைத்த படுதோல்வி என்பதும் இராசீவின் கருத்துகள்!

எனவே, எந்த முயற்சியைச் செய்தாவது, இவ்வரசியல் சரிவுகளைச் சரிகட்ட அவர் நினைத்தார். வேறு எந்த வழியும் அவருக்குப் புலப்படாத நிலையில், தம் உளவுப்படைகள் (RAW) மூலம் தமிழீழத் தலைவர்களைத் தீர்த்துக் கட்டுவது என்றும், அப் பழிகளை இடைவிடாத விளம்பரக் கருவிகளின் மூலம், புலிகளின் மேல் போட்டு விடுவதுஎன்றும் திட்டமிட்டார்.



இதன் விளைவாக மூன்று ஆக்கமான பயன்களை-ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை வீழ்த்திவிட முடியும் என்பதும் அவர் நோக்கம்!

ஒன்று, தமிழீழத்தில் உள்ள தமிழ் மக்களிடத்தில், புலிகளுக்கிருக்கும் ஆதரவைக் குறையச் செய்வதும், அவர்களுக்குப் புலிகளின் மேல் ஒரு வெறுப்பை உண்டாக்குவதும்;

இரண்டு, இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறினால், அங்குள்ள மக்களுக்கு ஏதும் (ஆபத்தும்) அழிவும் நேரும் என்று இந்தியா ஓயாமல் ஒழியாமல் செய்யும் பொய்க் கருத்துப் பரப்பலை மெய்யாக்கி, அமைதிப் படை அங்கிருப்பதை ஞாயப்படுத்தி விடுவதும்;

மூன்று, தமிழர் தலைவர்களை அழித்தொழிப்பதன் மூலம், தமிழினத்தின் வலிவைக் குறைப்பதும்; அதனால் தனி நாட்டுக் கொள்கையைக் கைவிடும்படி செய்வதும்-ஆகும்!

மேலும், இவ்வளவு காலமாகத் தலைவர்கள் அழிக்கப்படாமல், இக்கால் நடந்த கொலைகளும், பிரேமதேசா வைத்த கெடுவைப் பொருளற்றதாகச் செய்யும் நோக்கத்தில் இதுவரை இக்கொலைகளைப் பற்றிய இலங்கையரசின் அறிக்கை வராத நிலையில் இந்திய அரசே இவை விடுதலைப் புலிகளால் நேர்ந்தவை என்று கூறுவதும், கொலை செய்ததாகக் கருதப்படும் மூன்று இளைஞர்களில் (விசு, அலோசிசு, விக்னேசு) இருவர் கொலை நடந்த இடத்திலும், ஒருவர் பின்னரும் சுடப்பட்டுக் கொல்லப்பட்ட செயல்களும், தலைவர்கள்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மூவரில் தப்பித்த ஒருவரான சிவசிதம்பரத்தின் வாய் மூலம் எதையும் இதுவரை வெளிப்படுத்தாத கமுக்க நிலையும் இப் படுகொலைகள் புலிகளால் இன்றி, இந்திய உளவுப் படையால்தான் நேர்ந்திருக்கவேண்டும் என்னும ஐயத்தை உறுதிப்படுத்துகின்றன. அடுத்து நடந்த உமாமகேசுவரன் (முகுந்தன்) கொலையோ அதை மேலும் வெளிப்படையாகவே உறுதிப்படுத்துகிறது.

எனவே, இச்சூழ்ச்சிகளையெல்லாம் நன்கு விளங்கிக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும், அவர்கள் அங்குள்ள தமிழினத்தின் விடிவுக்காகவும், உலகத் தமிழினத்தின் எதிர்கால நலனுக்காகவும் எடுக்கின்ற எத்தனை நடவடிக்கைகளானாலும் அவற்றின் மேலும் நம்பிக்கை வைத்து இங்குள்ள தமிழர்கள் தொடர்ந்து இத்தமிழின விடுதலை மேம்பாட்டு முயற்சிகளில் தொய்வின்றி ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்!

இந்திய அரசு கூறுவனயாவும் பொய்யே! பொய் தவிர வேறில்லை! இராசீவ் தமிழினத்தின் மாபெரும் எதிரி! அவரிடத்தில் ஓர் இம்மியும் தமிழினத்துக்கான நலனை எதிர்பார்ப்பதில் ஒரு சிறு நன்மையும் இல்லை. வாழ்க தமிழினம்! வளர்க அவர்தம் உரிமைக்கான போராட்ட முயற்சிகள்! தனித் தமிழீழம் கண்டே தீருவோம்; தனித்தமிழ் நாடு பெற்றே தீருவோம்!

**தமிழ்நிலம்: இதழ் எண் : 125(15-7-89)**

# தமிழீழம், தமிழ்நாடு, இந்தியா.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 1. தமிழீழப் போராட்ட எழுச்சி, தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கைக்கும் உதவட்டும் !

இந்தியாவில் உள்ள தேசிய இன மக்கள், உரிமை எழுச்சிக்காகப் போராட வேண்டிய காலகட்டம் இது. தில்லியின் வல்லாட்சியானது, இன்றைய நிலையில் அனைத்துத் தேசிய இனங்களின் தனிவளர்ச்சியை ஏதாமொரு வகையில் ஒடுக்கிக் கொண்டே வருகிறது. அசாமியரின் இன எழுச்சிப் போராட்டத்தையும், பஞ்சாபியரின் தன்னதிகாரக் கோரிக்கை எழுச்சியையும் தன் வல்லதிகாரக் கொடுங் கைகளால் கடுமையான அடக்குமுறைகளின் வழி, அடக்கி ஒடுக்கப் பார்க்கிறது தில்லி. தேசியம், ஒருமைப்பாடு என்னும் முதலாளியக் கோட்பாடுகளின் அடிப்படையில், மாநிலங்களின் நயன்மையான இன நலக் கோரிக்கைகளைப் புறக்கணிப்பதும், இழிவுபடுத்துவதும், படைத்துறைகளையும், காவல் துறையையும் கொண்டு வன்முறைகளை ஏவி விடுவதும் தில்லியின் வழக்கங்களாகி விட்டன. பொதுவாகவே, இந்தியா தன்னுரிமை பெற்ற நாளிலிருந்து. அதன் ஓரினக் கருத்துக் கோட்பாடு, ஆரியத்தின் சார்பாகவும், அவ்வினத்தின் சாதிய, மதவியற் கொள்கைகளை நிலை நிறுத்தும் முயற்சியாகவுமே, இருந்து வருகிறது.

தென்னாட்டுத் திராவிட இனங்களிடையில், இது பற்றிய ஒரு முணுமுணுப்பு இடை நாளிலிருந்தே இருந்து வந்தாலும், போதிய இனநலக் கருத்தெழுச்சிக்குரிய சரியான வடிவம் கிடைக்காமல் தேசியப் போர்வையில், அவை மறைக்கப்பட்டே வந்திருக்கிறது. ஆனால் தில்லியின் கரவான போக்கை, இக்கால் தென் மாநிலங்கள் நன்குணர்ந்து வருகின்றன. தேசிய இனங்களின் உரிமைக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கிளர்ச்சிகளை வித்திட்டு வளர்த்தெடுக்க வேண்டிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகூட, ஏனோ தன்னைப் பிற்போக்கு ஆற்றல்களுடன் இணைத்துக்கொண்டும், அக் கட்சிக் கோட்பாடுகளுக்குப் புதுவகையான விளக்கங்களைக் கூறிக்கொண்டும் தில்லியின் இன எழுச்சி ஒடுக்கல் முறைக்கே தன் மறைமுக ஆதரவைக் கொடுத்து வருகிறது.

இலங்கைத் தமிழர் சிக்கல் அனைத்துலகப் பார்வைக்கு வளர்ந்து விட்ட இந்நிலையில், தமிழ்த் தேசிய இனம் ஒரு புதிய எழுச்சி பெற்றுத் தமிழர்களுக்கென ஒரு தனிநாட்டைச் சமைத்தெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு வருகிறது. எனவே, இந்தக் கால நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழகத் தமிழர்களும், என்றோ எழுப்பப்பட்டுப் பலவகையான அரசியல் சட்டச் சூழல்களால் கைவிடப் பெற்ற. அல்லது தள்ளி வைக்கப் பெற்ற, **தனித் தமிழ்நாட்டுக்** கோரிக்கையை முழு மூச்சுடன் செயலபடுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்றே நாம் கருதுகிறோம்.

இக்கால் உள்ள தமிழ்நாட்டுத்தலைவர்களுக்கு ஆட்சியில் உள்ள எதிர்க்கட்சியைக் குறை கூறுவதும், அதை ஆட்சியிறக்கம் செய்துவிட்டுப் பதவியை அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதுமே நோக்கமாயிராமல். தில்லிப் பிணைப்பிலிருந்து, ஒட்டு மொத்தமாகத் தமிழ்நாட்டை விடுவிப்பதையே முழு நோக்கமாகக் கொண்ட போராட்டத்தைத் தொடங்குவதே, தம் தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப் போராட்ட வெற்றியில்தான் எதிர்காலத் தமிழினத்தின் மறுமலர்ச்சியே அடங்கியுள்ளது என்பதைத் தமிழ்த் தலைவர்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறோம். அத்தகைய எழுச்சிக் குரல் எந்த அணியிலிருந்து, எந்த மூலையிலிருந்து வந்தாலும், அவ்வணியுடன் நம் இரு கைகளையும் பிணைத்துக் கொள்ள நாம் என்றும் அணியமாயிருக்கிறோம் என்பதை இப்பொழுதைக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 30(8-1-84)**

# 2. தமிழீழப் போராளிகளை ஒன்றுபடக் கூறும் தமிழகத் தலைவர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டால் என்ன ?

தமிழர்களுக்குள் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை. சேர, சோழ, பாண்டியரின் ஆட்சிக் காலத்திலிருந்து, இன்றுவரை, அவர்கள் அரசியலிலும், இனவியலிலும், பல்வேறு அணிகளாகவும், சாதி மத வேறுபாடுகளின் பல்வேறு கூறுகளாகவும், குழுக்களாகவும் பிரிந்தே இருக்கிறார்கள். வரலாற்றடிப்படையில் நோக்கினால், தமிழர்களிடம் வந்து மோதிய பிற அரசர்களைப் பார்ப்பதைவிட, தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே மோதிக் கொண்ட, கதைகளும் காட்சிகளுமே மிகுதி. தமிழர்கள் தமிழர்களாலேயேதான் அழிக்கப்பட்டு, அடக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றார்களேயொழிய, வேறு இனத்தவர்களால் அவ்வாறு செய்யப்பட்டார்கள் என்று எவராலும் சொல்ல முடியாது.

இன்றும் கூட, ஆரியப் பார்ப்பனர்களால் தமிழர்களுக்கு வரும் கேடுகளை விடத் தமிழர்களுக்குத் தமிழர்களால் வரும் கேடுகளே, சுரண்டல்களே, அழிவுகளே மிகுதி. வெறும் பேச்சுக்காகவே சாக்குக்காகவே, முழுப் பழிகளையும் பார்ப்பனர்கள் மேல் போட்டுவிட்டு, நாம் நம்முடைய இழிவுகளையும், இன நலத் தாழ்ச்சிகளையும் நிலைப்படுத்திக் கொண்டு, இன்னும் சொன்னால் வளரவிட்டுக் கொண்டிருக்கிறோம். பார்ப்பான் நமக்கு நேரிடையாகச் செய்யும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கேடுகளை விட, நம்மவன் நமக்கு, அதிகமாக, நேரடியாகச் செய்யும் கேடுகளே அளவிறந்து காணப்படுகின்றன. பார்ப்பனியம் என்றென்றும் தமிழர்களை மறைமுகமான கேடுகளுக்கு உள்ளாக்கும் மதப்பூசல்கள், சாதிப் பூசல்கள் முதலியவற்றை உருவாக்கி வந்திருந்தாலும்கூட, அவற்றால் நாமே நம்மை அடக்கி ஒடுக்கிக் கொள்ளும் செய்திகளே செயல்களே அதிகம்.

பார்ப்பனர், அவர்கள் வகையில் அவர்களின் இனத்தைக் காத்துக் கொள்ளச் செய்கின்ற முயற்சியை நாம், மாந்த இனநலக் காப்பின் இயற்கைக் கோட்பாட்டின்படி தவறு, குற்றம் என்று சொல்லிவிட முடியாது. நமக்கு நாமே பலவகையான தீங்குகளையும், இன அழிப்பு முயற்சிகளையும் செய்து கொண்டு பழியை அவர்கள் மீது போட்டு விடுகிறோம். பெரியார், தமிழின நல மீட்பு முயற்சியில், பார்ப்பனர்களுக்கென்று சொன்னதைவிட, நமக்குச் சொன்னதே அதிகம்.

வெளிப்படையாகச் சொல்வதானால், அவர்கள் நூற்றுக்கு மூன்று பேரே! அம் மூன்று பேரும் அவர்கள் நலத்திற்கான முயற்சியைச் செய்து கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்? நாம் தொண்ணூற்றேழு பேர்களாக இருந்து கொண்டு ஏன் மேலும் மேலும் தாழ்ந்து போகிறோம்? நமக்குள் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை. நாமே ஒருவருக்கொருவர் சாதி பேசிக் கொண்டும், மதம் பேசிக் கொண்டும், கட்சி பேசிக் கொண்டும், நமக்குள்ளேயே ஒருவரையொருவர் அழித்துக் கொள்கிறோம். மிக மிகச் சிறுபான்மையினத்தவனான அவன், மிக மிகப் பெரும்பான்மையினத்தவரான நம்மை எப்படி இத்தனை நூற்றாண்டுகளாக அடக்கி ஆண்டுவிட முடியும்? இஃதென்ன பேதைமை! முயற்சியின்மை! சோம்பேறித்தனமான, சூழ்ச்சி நிறைந்த பேச்சு!



பார்ப்பான் நம்மைச் சாதி, மதப் பூசல்களால் வேறுபடுத்தினான் என்றால், நாம் ஏன் இன்னும் விழித்துக் கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும்? விழித்துக் கொள்ளாத ஏழை, எளிய மக்கள்தாம் பார்ப்பனியத்திற்கு ஆட்பட்டுக் கிடக்கிறார்கள், அல்லது துன்புறுகிறார்கள் என்றால், விழித்துக் கொண்டவனுந்தானே - அஃதாவது கற்றுத் தேர்ந்த தமிழனுந்தானே, சாதி வெறியனாகவும், மதமூடனாகவும் இருக்கின்றான்! பார்ப்பான் ஒருவன் எங்காவது ஒரு தாழ்த்தப்பட்டவனை, அல்லது பிற்படுத்தப்பட்டவனை, சாதிக்காகவோ, மதத்திற்காகவோ வெட்டிக் கொன்றான்; அல்லது குத்திக் கொன்றான் என்று கூற முடியாதே! அதுவும் அறிவியல் வளர்ச்சிக் காலத்தில் அவ்வாறு கூறுவதற்கு இடமே இல்லையே!

நம்முள் எத்தனைப் பேர், சாதிக்காகவும், மதத்திற்காகவும் வெட்டிக் கொண்டும், குத்திக் கொண்டும், அடிதடி பட்டுக் கொண்டும் சாகிறவர்கள்! இன்றைக்கு இந்த நிலை இன்னும் அதிகமாகிக் கொண்டன்றோ வருகிறது. எனவே, தமிழனின் தாழ்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் இன்றைக்கும் பார்ப்பானையே காட்டிவிட்டு, அவன் மேலேயே முழுப்பழியையும் போட்டு நாம் தப்பித்துக் கொள்ள நினைப்பது கொடுமை! அறியாமை! விழிப்பின்மை! சூழ்ச்சி! இந்தப் பழைமைக் குற்றச் சாட்டையே இன்னும் வலுப்படுத்திக் கொண்டு பேசி விடுவதால் நம் இனம் ஒற்றுமையாகி விடாது! அதற்கு இன்றைக்குள்ள பல்வேறு கட்சியெழுச்சிகளும், சாதி, மத எழுச்சிகளுமே வலிவான சான்றுகளாகும்!

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

எனவே, நமக்குள் ஒற்றுமையில்லை என்பதற்கு நம்மையே குற்றங் கூறிக் கொண்டு, உணர்ந்து கொண்டு மனந்திறந்து ஒப்புக் கொண்டு, நாம் ஒன்றுபட முயற்சி செய்வதும், மேலேற முனைவதும், முன்னேறப் பாடுபடுவதுந்தான் அறிவுடைமையே தவிர, பார்ப்பானையே நம் அனைத்துக் கீழ்மைகளுக்கும் குறை கூறிக் கொண்டு, நாம் சாதிவெறிக் குழிக்குள்ளும், மதவெறிக் கொடுமைக்குள்ளும் விழுந்து கிடப்பது அறிவுடைமையும் உண்மையான முயற்சியும் ஆகிவிடாது.

இனி, இந்த மனப்போக்கின் மறுதலை உணர்வினால் தான் தமிழீழத்தை வென்றெடுக்க, தமிழீழப் போராளிகளை ஒன்றுபடுமாறு நாம் ஏதோ அக்கறையுள்ளவர்கள் போல் கூறி வருகிறோம். அவர்கள் ஒன்றுபட வேண்டும் என்பதை எந்த வகையிலும் நாம் குறை கூறிவிட முடியாது! ஆனால், இங்குள்ள தமிழகத் தலைவர்கள் - தமிழினத்தை-அதன் நலத்தை-அதன் மொழியைக் காப்பதாகக் கூறும் தலைவர்கள்-முதலில் தங்களுக்குள் ஒன்றுபட்டால் என்ன? அதனால் வரும் தாழ்ச்சி என்ன? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா, நாம்!

—தமிழ் நிலம்: இதழ் எண்-42 (5-8-84)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 3. தமிழீழப் போராட்டத்திற்குப் பொதுமக்கள் படையை தமிழக அரசு அனுப்பவேண்டும்!

**தில்லி உதவியை இனியும் எதிர்பார்ப்பது**
**அறியாமை; அடிமைத்தனம்!**

**தமிழினம் தன்னைத்தானே காக்கும் துணிவைப் பெறுக!**

**தமிழக அமைச்சர்கள் அனைவரும் கோழைகள்;**
**இனப்பகைவர்கள்! நலம் விரும்பிகள்!**

**இவர்களால் ஒன்றுஞ் செய்யமுடியாது!**

**தமிழின முன்னேற்றத்திற்கு இவர்கள்**
**பயன்பட மாட்டார்கள்!**

**இளைஞர்கள் எழுச்சி பெறாதவரை**
**தமிழ் இனத்தை மேம்படுத்த முடியாது!**

**முதிய தலைவர்களை நம்பி இனிப் பயனில்லை!**
**தமிழினமே எழுச்சி பெறுக!**

இலங்கை சென்ற வெளியுறவுச் செயலர் ரமேசு பண்டாரியும், அங்குள்ள தமிழினப் பகைஅரசும் கூடிப் பேசி, இலங்கைக்குச் சார்பான ஓர் அறிக்கையை இந்திய அரசின் பெயரால் வெளியிட்டுள்ளனர். அதில், சிங்கள-தமிழீழச் சிக்கலுக்கு ஒற்றுமையும் ஒருமைப்பாடும், ஓர் அரசு ஆளுமையுமே தேவை என்பது வலியுறுத்தப் பெற்றுள்ளது. இது தமிழர்களுக்குத் தில்லி செய்யும் இரண்டகம்! வஞ்சகம்! கொடுமையிலும் கொடுமை! இதைத்

தமிழினத் தலைவர்கள் எனப்படுவோர் ஒன்று கூடி முறியடிக்க வேண்டும்!

தில்லி யாட்சியர் மீண்டும் இணக்கமான பேச்சு என்னும் முறையில் தமிழினத்தைக் குழிதோண்டிப் புதைக்கவே முற்பட்டு விட்டனர் என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

இத்தனையாயிரம் தமிழர்களின் கொலைக்குப் பின்னும், ஏறத்தாழ ஓரிலக்கம் இலங்கைத் தமிழ் ஏதிலிகளின் வரவுக்குப் பின்னும், பலநூறு பெண்களின் கற்பழிப்புக்கும், பல்லாயிரம் இளைஞர்களின் உயிர்ச் சிதைவுகளுக்கும் பின்னும், தில்லி இன்னும் மாந்தக் கொலையாளி செயவர்த்தனாவிடம் மனங் கோணாமல் பேச வேண்டும் என்றே எண்ணிக் கொண்டிருக்குமானால், தமிழீழ விடிவு எங்குதான் உள்ளது? எப்பொழுதுதான் நிகழும்? இதை இங்குள்ள தமிழினத் தலைவர்களும், இளைஞர்களும் மிகத் தீவிரமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

கொன்று குவிக்கப்படும் நிலை இன்னும் தீர்ந்த பாடில்லை. இங்குள்ள அனைவரும் பேசிப் பேசியே இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு தீர்வை எதிர்பார்க்கின் றனர். இங்குள்ள அ.தி.மு.க. அரசும் தான் பதவியில் அமர்ந்ததே போதும் என்று, மீண்டும் திட்டங்கள் தீட்டுவதும், பொருளை ஒதுக்குவதும், அவற்றால் கொள்ளையடிப்பதும் போன்ற வழக்கமான செயல்களிலேயே கருத்தைச் செலுத்துவதும், காலத்தைக் கடத்துவதும் ஆக உள்ளது. உருப்படியான ஒரு தீர்மானமோ தீர்வோ திட்டமோ தமிழீழச் சிக்கலைப் பொறுத்த வரையில் அது வெளியிடவில்லை. அது வெளியிடும் என்றும் இனி நாம் எதிர் பார்க்க முடியாது.



தமிழக அமைச்சர்கள் அனைவரும் கோழைகளே! அவர்கள் இனப் பகைவர்களே என்பதும், தந்நலம் விரும்பிகளே என்பதும் தெரிந்துவிட்டன. இவர்களால் இனித் தமிழினத்திற்கென்று எதுவும் செய்ய முடியாது. தமிழினத்திற்கு இவர்கள் என்றுமே பயன்பட மாட்டார்கள் என்பது முடிவாக விளங்கி விட்டது. இனி மேலும் நாம் தில்லியின் உதவியைப் பெறுவதென்பது அறியாமையும் அடிமைத்தனமுமே ஆகும். தமிழினம் தன்னைத்தானே காத்துக்கொள்ள அணியமாகிவிட வேண்டும்; அத்தகைய துணிவைப் பெறவேண்டும். இங்குள்ள இளைஞர்கள் எழுச்சி பெறாதவரை தமிழினத்தை என்றுமே மேம்படுத்த முடியாது. இங்குள்ள முதிய தலைவர்களும் இனிப் பயன்பட மாட்டார்கள்.

எனவே தமிழக அரசு தமிழீழப் போராட்டத்தில், தானே ஈடுபட வேண்டும். வங்க அரசின் **முக்தி வாகினி** படையைப்போல், ஒரு பொதுமக்கள் படையை உடனே கட்டமைக்க வேண்டும். அதை இலங்கைக்கு அனுப்ப வேண்டும். இதற்கென எவர் ஆணைக்கும் காத்திருக்க வேண்டியதில்லை. தாறுமாறாக ஏதாவது நடப்பின் உடனே **தனித்தமிழ் நாட்டு விடுதலையை** வெளிப்படையாக அறிவித்து விட வேண்டும். தமிழினமே எழுச்சி பெறுக! நாம் ஒருங்கிணைந்து நம் உரிமைகளை நாமே காத்துக் கொள்ளும் காலம் வந்துவிட்டது! மேலும் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது, நம்மே நாமே அழித்துக் கொள்வதாகும்! எண்ணுக! இயங்குக!

**—தமிழ்நிலம்: இதழ் எண் 54 (31-3-85)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 4. இலங்கைச் சிக்கலில், தமிழ்நாடு அரசின் கண்துடைப்பு முயற்சிகள்!

**ம. கோ. இரா. சரியான நடவடிக்கை எடுக்க அஞ்சுகிறார்!**

**திராவிட இயக்க வீரர்கள் ஏன் அடிமையாகப் போனார்கள்?**

**பணத்திற்கும், பதவிக்கும் தங்கள் தன்மானத்தையும், துணிவையும் அடகு வைத்து விட்டார்களா?**

**கோழைத்தனமான முடிவுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இவர்கள் யார்?**

**தமிழீழம் அமைத்துக் கொடுப்பதற்கே இவர்கள் முயற்சி செய்ய வேண்டும்!**

**தமிழ்நாட்டின் உரிமைகளை விற்று இவர்கள் குளிர்காயப் பார்க்கிறார்கள்!**

**கலைஞரின் தமிழீழம் ஒன்றே என்னும் கோரிக்கைக்கு நம் மனமார்ந்த பாராட்டுகள்!**

தமிழீழச் சிக்கல் ஏதோ இப்பொழுதுதான் தொடங்கியுள்ளதைப்போல், இலங்கையில் நாளுக்கு நாள் குண்டடிபட்டும், நெருப்பில் எரிக்கப்பட்டும் செத்துக் கொண்டிருக்கையில், அழுகின்ற பிள்ளைக்கு விரலில் நெய்தடவி விடுவதுபோல், தமிழக முதல்வர் மீண்டும் தம் அரசியல் கூட்டாளிகளைக் கூட்டிக் கொண்டு, தில்லிக்கு உலாப் போய், ஏதோ ஒன்றரை முழம் கோரிக்கையை, இராசீவ் காந்தியிடம் நீட்டியுள்ளார். இதைவிடக்கோழைத்தனம் வேறுஇருக்கமுடியாது.



இவர் அழைத்துச் சென்ற அரசியல் கூட்டாளிகள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் என்று வேறு சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஏதோ 'ஓர் ஆள் குழு' (One man Commission) என்பார்களே, அப்படிப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களையும், அரசியல் ஊதியத்திற்காகவும், பதவி நலத்திற்காகவும், பண வாடைக்காகவும் எதையுமே விட்டு விடவும், விற்றுக் கொள்ளவும், வேட்டிகளை வரிந்துக் கட்டிக் கொண்டு நிற்பவர்களெல்லாம் மக்கள் படிநிகராளிகள் என்று பெயர் பண்ணிப் பட்டியலிட்டுக் கொண்டு, அழைத்துப்போய், தில்லியில் உள்ள தலைமை யமைச்சரின் அறையில் போட்டுள்ள மெத்திருக்கைகளில் உட்கார வைத்திருக்கிறார்.

ஏதோ, **'கரிசனம் கட்டிக்கொண்டு அழுகிறது; கட்டுச் சோறு புட்டுக்கொண்டு அழுகிறது'** என்பார்களே, அது போல், தமிழீழ மக்கள்மேல் அக்கறைப்பட்டு, 'வெங்காய' அழுகை அழுதுகொண்டு போன இவர்கள், அங்கு என்ன எழுதிக் கொடுத்தார்கள்? 'இலங்கையில் தமிழ் மக்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் சம வாழ்வு வாழ, அவர்கள் ஏற்கத்தக்க வகையில், அரசியல் தீர்வுகாண, செயவர்த்தனேவுடன் பேச்சுப் பேசிக் கிழிக்க வேண்டும்' என்று தண்டனிட்டு வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இராசீவ் பட்டத்திற்கு வருவதற்கு முன் இந்தியப் பேரரசி இந்திரா(ணி) அம்மையாரிடம் ஏற்கனவே கொடுத்த வேண்டுகோளுக்கு (இவர்கள் **பாஷையில் 'மகஜர்'**) என்ன தீர்வு ஆனதோ? சிறப்புத் தூதுவர் பார்த்தசாரதி(யார்) தில்லிக்கும் - கொழும்புக்கும் பறந்து, பறந்து பேசினாரே! அஃது என்ன ஆனது?

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இரண்டு மாதங்களுக்கு முன், அயலக உறவுச் செயலர், இரமேசு பண்டாரி போய் இலங்கையை இரண்டு மூன்று நாள்கள் சுற்றிப் பார்த்து விட்டு, '**இலங்கை இட்லரிடம்**' பேசிவிட்டு வந்தாரே, அதுவும் வெறும் பேச்சுத்தானோ? இவர் இருவருமாகிலும் அயல்நாட்டவர். வட்டமிசை மாநாடென்று, 'பயனில்லை' என்று பண்ணிப் பண்ணிச் சொல்லியும், தம் '**பந்தாவை**'யும், '**பவிசை**'யும் விடா மல், (பொறுத்துக் கொள்ளுங்கள்; தமிழில் இப் போலி உணர்வுகளைக் குறிக்கச் சொற்களில்லை.) பேச்சுப் பேச் சென்று திருப்பித் திருப்பிப் பேசினாரே அமிர்தலிங்கம், அஃதென்ன காற்றில் கரைந்து போய்விட்டதா?

இனி, இராசீவ் போய்ப் பேச வேண்டும் என்று இப் பொழுதைய தூதுக்குழு கேட்கிறது! 'இந்த நாடகம், இந்த மேடையில்', எத்தனை நாள் நடக்கும் தெரிய வில்லையே! அதற்குள் இலங்கைத் தமிழினம் என்ன ஆகுமோ, புரியவில்லையே! ஆட்சியாளர்கள் சூழ்ச்சி யாளர்களாகவும், அதிகாரக்காரர்கள் 'சதிகாரத்' கேடர் களாகவும் இருந்துவிட்டால் குடிமக்கள் அடிமாடுகளாகச் சாகவேண்டியதுதானே, அன்றிலிருந்து இன்று வரை யுள்ள வரலாறு! இவர்கள் ஆள்வதைவிட மாள்வது நன்று! கோழைகளும் மோழைகளும் வரலாற்றை மீட்க முடியாது!

பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சா தவர். (723)

—**தமிழ்நிலம்: இதழ் எண்: 56(28-4-85)**

# 5. தமிழீழம் விடுதலை பெறுவதை ம. கோ. இரா. அரசு விரும்பவில்லையா?

**தி. மு. க.-வின் அமைதிப் போராட்ட வீரர்களை எதற்காகச் சிறையில் அடைக்க வேண்டும்?**

**கலைஞரைச் சிறையில் அடைப்பதால் தமிழக அரசுக்கு இழுக்கே!**

**கலைஞரையும், தொண்டர்களையும் உடனே விடுதலை செய்க!**

**தமிழீழம் அமைவதில் தமிழக அரசு, தி. மு. க.-வுடன் ஒத்துப் போகவேண்டும்!**

**தில்லியரசின் இறுமாப்பான போக்கைத் தமிழக அரசு கண்டிக்க வேண்டும்!**

இலங்கையில் தமிழீழம் அமைவதை வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த 10 நாள்களாக நடுவணரசு அலுவலகங்களின்முன் அமைதியான முறையில் மறியல் செய்து, ஏறத்தாழ இருபதினாயிரம் தொண்டர்களைச் சிறைக்கு அனுப்பி உள்ளது.

உண்மையான தமிழன் ஒவ்வொருவனும் வரவேற்க வேண்டிய போராட்டம் இது. இவ்வகையில் கலைஞரின் வலிவான உறுதியான தமிழீழக் கொள்கையை நாம் மனமுவந்து போற்றுகிறோம்; வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம். அவரும் அவர் தொண்டர்களும் இக் கொள்கையை வலியுறுத்தி நேர்மையான முறையில் அமைதியான போராட்டம் நடத்தி அதன் மூலம் தமிழர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

களின் உண்மையான உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியும் தில்லியின் செருக்கான, புறக்கணிப்பான போக்கை உலகுக்கு உணர்த்தியும் வருவதை மிகவும் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

கலைஞர் இதுவரை வரலாற்றில் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் இது தலைசிறந்தது; தமிழின வரலாற்றிலேயே பெருமதிப்புப் பெறுவது. தேசியப் புரட்டல் கொள்கைகளைப் பேசியும், ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பொய்யாகவும் புளுகாகவும் நடித்துக் காட்டியும் தம் வயிறு கழுவி வருகின்ற மூப்பன்களுக்கும், பழனியாண்டிகளுக்கும் வேண்டுமானால், கலைஞரின் இந்தப் போராட்டம் தவறாகவும், வரம்பு மீறியதாகவும் படலாம். இன்னும் போலிப் பொதுவுடைமை பேசும் இராமமூர்த்திகளும், நம்பூதிரி பாடுகளும் இப் போராட்டத்தைக் கண்டு, முகஞ்சுளிக்கலாம். ஆனால், உண்மையான தமிழர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் பல்லாண்டுக்கால இன முன்னேற்ற முயற்சிகளுக்கு இப் போராட்டம் ஊக்கமளிப்பது; உறுதிதருவது! இதன்வழித் தமிழினத்தின் ஒட்டுமொத்தமான விடிவுக்குக் கதவைத் திறந்திருக்கிறார் கலைஞர், என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்காக, மீண்டும் ஒருமுறை கலைஞர் அருட்செல்வனாருக்கும், அவரைப் பின்பற்றும் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களுக்கும், நம் தலைதாழ்ந்த அன்பு கலந்த வணக்கங்களையும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழீழத் தமிழர்களை ஒழித்தே கட்டுவது என்னும் கொடுமையான அரக்கத் தன்மையில் நடந்து கொள்ளும் சிங்கள வெறியன் செயவர்த்தனாவின் அகங்காரமும்-அடாவடித்தனமும் கொஞ்சமும் குறைத்து மதிப்பிடக் கூடியன அல்ல. இனி அவனின் பூதகணங்களாக இருந்து இயங்கும் அதுலத்முதலி போன்ற எம கிங்கரன்களும், புத்தரின் துவராடைக்குள் ஒளிந்து நிற்கும் இட்லரின் இழிபிறவிகளும் சேர்ந்து நாள்தோறும் தமிழர்களைக் கொன்று குவிப்பதையே தம் அன்றாட வாழ்க்கைப் பணிகளாகச் செய்து வருவதையும் எவரும் மறுத்துப் பேசியோ மறைத்துப் பேசியோ இங்குள்ள தமிழரை அமைதிப்படுத்தி விட முடியாது மூப்பன்களுக்கும், பழனியாண்டிகளுக்கும், இராமமூர்த்திகளுக்கும், நம்பூதிரி பாடுகளுக்கும் அவர்களின் உடல் தசைகள் எவ்வளவு முக்காமையானவையோ, அவ்வளவு முக்காமையானது தமிழின விடுதலை; தமிழீழ விடுதலை. தில்லித்திமிரில் அவர்களின் கொக்கரிப்புகள் கலைஞரை யன்று, அவரின் கடைத்தொண்டனையும் அசைத்து விடமுடியாது; அடக்கி விடமுடியாது.

இந்தப் பணந்தின்னிகளுக்குத்தாம் வடவரின் கலவை அரத்தம் உடல்களில் ஓடிக்கொண்டுள்ளது. ஆனால் இந்தத் திராவிடக் குஞ்சுகளுக்கிருக்க வேண்டிய சூடும் சுரணையும், மானமும், மதிப்பும் எங்கே போயின? 'தமிழீழம் தனிநாடாக விடுதலை பெறுவதைத்தான் நாங்களும் ஆதரிக்கிறோம்' என்று இராசீவ்காந்தியின் செவிட்டுப் பறைகள் அறுபடுமாறு உரக்கக் கூவிவிட வேண்டியதுதானே! ஏன் இவர்கள் பின்வாங்க வேண்டும்? அன்னை இந்திரா கொடுத்த அதிகார முலைப்பால் இன்னும் இவர்களின் வாய்களில் ஒழுகுகின்றதோ? அல்லது தமிழீழம் விடுதலை பெறுவதை ம. கோ. இரா. அரசு விரும்பவில்லையோ?

எனவே தப்பித்தவறித் தமிழினத்திற்குக் கலைஞர் வழிக் கிடைத்த ஒரே உரத்த குரலையும் நெரித்து விடலாம என்று, அடிமைத் தமிழக அரசு நினைத்துவிட வேண்டாம். அவரின் எழுச்சியைக் காட்டியேனும் தில்லிச் செவிடர்களின் திமிர்ந்த மூளைகளுக்குத் தமிழர்களின் தணியாத தமிழீழ ஆதரவை உடனே கூறி விடிவு காண முயற்சி செய்திட, இங்குள்ள திராவிட அரசின் உண்மைத் தமிழர்களும் உணர்வுத் தமிழர்களும் (அவ்வாறு சிலர் இருந்தால்) முன்வருவார்களாக!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 57(26-5-85)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 6. இலங்கைத் தமிழர்களுக்கு உற்ற நிலை எதிர்காலத்தில் இந்தியத் தமிழர்களுக்கும் கட்டாயம் வரும்!

**இன்றுள்ள தமிழினத்தை ஒன்றுபடாமல்**
**செய்பவர்கள் அரசியல் தலைவர்களே!**
**தமிழின நலனுக்காகப் பாடுபடும் கட்சிகள்,**
**இயக்கங்களின் மேனிலைத் தலைவர்கள் தன்னினக்**
**கொள்ளைக்காரர்களாகவே இருக்கின்றனர்!**
**தமிழ்ச் செய்தித்தாள்களில் ஒன்றுகூட, தமிழ்**
**மொழிக்காகவோ, இன நலனுக்காகவோ பாடுபடவில்லை!**
**வரலாற்று நிலையில் அழுத்தப்பட்ட ஓர் இனத்தின்**
**உண்மை நிலை இவ்வாறு இருந்தால், அந்த இனம்**
**தன்னை ஈடேற்றிக் கொள்வது மிகவும் கடினம்!**

உலகம் முழுவதும், தமிழினத்திற்குப் பெருங் கேடுகள் உருவாகிக் கொண்டு வருகின்றன. ஆங்காங்காங்குள்ள நாடுகளில் தமிழர்கள் நாடோடிகளாகத் துரத்தியடிக்கப்பட்டு வருகின்றனர். தங்கள் உரிமைகளையும், உடைமைகளையும் படிப்படியாக இழந்து வருகின்றனர்.

உலக மக்களிடையில் அரசியல், வாழ்வியல், இன மேம்பாட்டுக் கிளர்ச்சிகள் தொடங்கியுள்ளதால், அவ்வவ் வினங்கள் அவரவர் இன மக்களை மட்டுமே பேணவும் காக்கவும் ஆன, மன உணர்வில் வளர்ந்து வருகின்றன. எனவே வேறு நாடுகளுக்குப் புதுப்புதுச் சிக்கல்கள் தோன்றியுள்ளன. ஏதிலிகளாக, நாடோடிகளாக இன்று தமிழர்கள் நாடுவிட்டு நாடு ஓடிக்கொண்டு இருக்கின்றனர். உலக ஏதிலிகளில் முதல்நிலை ஏதிலியாக, எந்த நாட்டையோ, நிலப்பரப்பையோ உரிமை கொண்டாட முடியாத நிலையில் இன்று தமிழினம் உள்ளது. இதன் முதல் அவலக் கதைதான் இன்றைக்குத் தொடங்கி முடியாமல் இருக்கும் தமிழீழப் போராட்டம்.

இந் நிலையில், தமிழ்நாடு என்று கூறப்பெறும் நம் நிலத்தின் துயரப்பாடுகள் எவை எவை என்று பார்ப்போமானால், துன்பம் தொண்டையை அடைக்கிறது. நெஞ்சாங்குலையை நிறுத்துகிறது.

இங்குள்ள தமிழர்கள் எதைப் பற்றியும் கவலை கொள்ளாத மொழி, இன, நாட்டுணர்வற்ற நிலையில் நசிந்து கொண்டு வருகின்றனர். இதைப்பற்றி அனைவரும் கவலைப்படுவது போல நடித்து நாடகமாடிக் கொண்டு வருகிறோமேயன்றி, ஒரு நிலையிலாவது நாம் ஒன்றுபட்டு, நம் இனநல முன்னேற்றத்தில் ஓரடி எடுத்து வைத்துவிட முடியாதவர்களாக ஆகி வருகிறோம்.

இங்குள்ள இயக்கங்கள், கழகங்கள் (நம் இயக்கம் உள்பட) அனைத்தும் வெறும் வாய்ப்பேச்சளவிலேயே, நாள்தோறும், மாதந்தோறும் மலை மலையான கருத்துகளை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கிறோம். செயலளவில் ஓர் இம்மியையும் நகர்த்த முடியாதவர்களாகவே இருக்கிறோம்.

மேலும் மேலும் மாநாடுகள், கூட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்கள் கட்சி கட்சியாகச், சாதி சாதியாகத் தொழில் தொழிலாக நடத்திக் கொண்டு வருகிறோம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இவற்றால் யாருக்கு என்ன பயன் விளைந்துவிடப் போகிறது.

நம் இன முன்னேற்றத்திற்குப் பார்ப்பான் மட்டும் எதிரி அல்லன். வடநாட்டுக்காரன், பெரும் பெரும் பண முதலாளிகள், மதத் தலைவர்கள், சாதித் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் அனைவருமே எதிராகச் செயல்பட்டு வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம் அவர்களின் தாறுமாறான செயலியக்கங்களை எவராலும் தடுத்து நிறுத்த முடியாதபடி இங்குள்ள நிலைகள் மிகவும் இறுகலாகிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். ஒருவர் கிழக்கே போனால் ஒருவர் மேற்கே, மக்களை ஓட்டிக்கொண்டு போக விரும்புகிறோம். இதற்காகவே கூட்டங்கள், மாநாடுகள், ஊர்வலங்கள் இங்கு நடக்கின்றன. ஓர் இயக்கத்தின் இரண்டு நாள் மாநாட்டுக்காக ஐந்து இலக்கம் பத்து இலக்கம் பணம் ஏழை மக்களிடையில் தண்டப்படுகிறதில்லாத இயக்கங்கள் இல்லை; கோடிக் கோடியாக வைத்துக் கொண்டிருக்கும் இயக்கங்கள் தண்டுவதுதான் பெரும் மனத் துயரத்தைத் தருகிறது. மாநாட்டுக்கு வருபவர்கள் குடும்பம் குடும்பமாகக் கட்டுச்சோற்றைக் கட்டிக் கொண்டு வரும் ஏழை எளியமக்களே! அவர்கள் தம் மடிகளில் கட்டி வந்துள்ள சிறு சேமிப்புகளை மாநாடுகளில் வந்து தலைவர்களுக்கு மாலைக்காகவும் அன்பளிப்பாகவும் அவிழ்த்துக் கொடுப்பது மனத்தை மிகவும் வருத்துகிறது. இஃது ஒருவகையான இன உள்ளரிப்பே. இப்படிப்பட்ட மக்களை எவராலும் ஈடேற்ற முடியாது.

மக்களுக்கான போராட்டங்களை ஆள்பவர்களிடம் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர மக்களிடமே வைத்துக் கொள்ளக் கூடாது. கருத்துகளை விளக்க



மாநாடு தேவைதான். ஆனால் 50 ஆண்டுகளாகச் சொன்ன கருத்துகளையே சொல்லிக் கொண்டிருப்பதற்கு எதற்கு மாநாடுகள்? கடவுள் இல்லை எனபதற்கு ஒரு கட்சி என்றால், கடவுள் உண்டு என்பதற்கு ஏன் கட்சி வைத்துக் கொள்ள மாட்டான்? கடவுள் உண்டு இல்லை என்பது உலக மக்களின் சிக்கல்; தமிழினச் சிக்கல் இதுவன்று இழந்துபோன அரசியல், பொருளியல், மொழி, இன, பண்பாட்டு உரிமைகளை மீட்பதே நாம் இப்பொழுது தீர்வு காண வேண்டிய செய்தி. கடவுள் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும்; இல்லாமற் போனாலும் போகட்டும்; தமிழர்களுக்குரிய தனிச்சிக்கலன்று இது; உலகத்துக்கே உரிய, அறிவாளிகளுக்குரிய சிக்கலை எடுத்துக் கொண்டு தமிழினத்தை எப்படி முன்னேற்றுவது?

அதுபோல் திருக்குறளையும் சிலர் மத நூலாக்கப் பார்க்கின்றனர் திருக்குறள் ஒரு வாழ்வியல் நூலே; வழிபாட்டு நூலன்று. தெளிவான வாழ்வியல் கருத்துகளாலன்றி வெறும் நூல் வழிபாட்டால் ஓர் இனம் முன்னேறி விடாது; இனம் இருந்தால்தான் சமயம், மொழி, கலை, பண்பாடு அனைத்தையும் காத்துக் கொள்ள முடியும். இனத்தை இழந்துவிட்டு மொழியை இழந்துவிட்டு நாட்டு, அரசியல், பொருளியல் உரிமைகளை இழந்துவிட்டு, வெறும் கருத்துகளையும் அவை கூறும் நூல்களையும் மட்டும் வைத்துக் கொண்டு எவரும் செயல்களை உருவாக்கி விடமுடியாது.

தமிழின முன்னேற்றத்திற்கு இப்பொழுது அடிப்படை உரிமைகள் தேவை. தமிழ்நாட்டில் தமிழன் வாழ முடியவில்லை; படிக்க முடியவில்லை. தமிழில் பேசிப் பழகிப் படித்து முன்னேற முடியவில்லை. இப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பொழுதே தமிழன் தமிழனாக இல்லை. இன்னும் ஐம்பதாண்டுகள் போனால், தமிழ் இருக்கும்; தமிழன் இருக்க மாட்டான். மேலும் ஓர் ஐம்பதாண்டுகள் போனால் தமிழ் என்பது நூல்களில் மட்டுமே இருக்கும்; பேச்சில் இருக்காது

இந்த நிலைகளையெல்லாம் நேருக்கு நேராகப் பார்த்துக்கொண்டும், உணர்ந்து கொண்டும், பணத்துக்கும், பதவிக்கும் கட்சிகள் நடத்திக் கொண்டிருக்கின்றனர் தமிழர் தலைவர்கள்.

இவற்றை இளைஞர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். திசைமாறிப் போய்க் கொண்டிருக்கும் அவர்கள் தமிழ்மொழியின் பக்கமும், தமிழின ஒற்றுமையின் பக்கமும், தமிழ்நாட்டு விடுதலையின் பக்கமும் திரும்பி நின்று, முயற்சி செய்தால் தவிர, இலங்கையில் ஏற்படுவது போலும், ஒட்டுமொத்தமான இன அழிவு என்பது, இந்தியாவிலும் தடுக்க முடியாததாகிவிடும்.

இங்குள்ள மதங்களும், சாதிகளும் போதாவென்று, தலைக்குத்தலை, ஆளுக்கு ஆள், கட்சிக்குக் கட்சி, தமிழர்களைப் பலநூறு கூறுகளாகப் பிரித்துக் கொண்டு போராட்டம், மாநாடு, பேரணி, சீரணி என்று பல நாடகங்களைப் போட்டு வருகின்றனர் இங்குள்ள தலைவர்கள்.

பிறந்தநாள் கொண்டாட்ட ஆசை, துறவிகளாக-முனிவர்களாகத் தங்களைக் கூறிக் கொண்டிருப்பவர்களையும் விட்டபாடில்லை. அரசியலில் மக்கள் எவ்வாறு உண்மைக்கும், போலிக்கும் வேறுபாடு தெரியாமல் இருக்கிறார்களோ, அப்படியே மதத்தில், மொழியில், பண்பாட்டில், பொருளியலில் கூட மக்கள் உண்மை



யுணராமல் இருக்கிறார்கள். அனைத்திலும் கவர்ச்சிகளே முன் நிற்கின்றன. மேனாமினுக்கிகளே மேலுக்கு வருகின்றனர்.

தமிழர்களுக்கு மொழியுணர்வை ஊட்டினால்தான் இனவுணர்வு வரும். வெறும் இனவுணர்வை மட்டுமே தனித்துப் பிரித்து, எந்த மக்களினத்திடையிலும் ஊட்டி விடமுடியாது.

நம்முடைய வாய்ப்புக் குறைவு என்னவென்றால், இன்றுள்ள தமிழினத்தை, இங்குள்ள அரசியல் தலைவர்களே, தங்களின் தந்நல வேட்கைக்காக, ஒன்று சேர விடாமல் தடுத்துக் கொண்டுள்ளனர். தமிழின நலனுக்குப் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டிருக்கும் இயக்கங்களும், அவற்றின் தலைவர்களும் தன்னலக் கொள்ளையர்களாக இருக்கின்றனர்.

அவர்களுக்குகந்தபடி ஆளுக்கொரு செய்தித்தாளைத் தம் போக்குக்குத் துணையாக்கி வைத்துக் கொள்கின்றனர். அவையோ, திரைப்படச் சாய்கடையையும், அரசியல் நரகலையும் கலந்து மக்களைச் சீரழிக்கின்றன. சிந்தனைத் திறமற்றவர்களாக்குகின்றன. இங்குள்ள தமிழ்ச் செய்தித்தாள்களில் ஒன்றுகூட, தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவோ, இன நலனுக்காகவோ, அல்லது பொதுஅறிவு விளக்கத்திற்காகவோ ஒரு துளியும் பாடுபடவில்லை.

வரலாற்று நிலையில் அழுத்தப்பட்ட ஓரினத்தின் உண்மை நிலை இவ்வாறு இருக்குமானால், அந்த இனம் தன்னை எவ்வாறு ஈடேற்றிக் கொள்ள முடியும்? அது மிக மிகக் கடினம்.

எனவே, தமிழர்கள் தங்கள் முன்னேற்ற நலன்களுக்கும், உரிமை வேட்புக்கும் தடையாகவுள்ள சாதிகள், மதங்கள், கட்சிகள், முதலிய அனைத்துக் கட்டுப்பாட்டு அடிமை நிலைகளிலிருந்தும் வெளியேறி, தமிழக விடுதலை உணர்ச்சியை வளர்த்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். எண்ணிப் பார்ப்பார்களாக.

—தமிழ்நிலம் : இதழ் எண்: 60 (7-7-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 7. 'தமிழீழம்' 'தனித் தமிழ்நாடு'- இரண்டுக்குமாகவே உலகத் தமிழினம் போராட வேண்டும!

**அஞ்சி அஞ்சிச் சாவதில் பயன் இல்லை!**
**ஆங்கிலத்தைத் தூக்கிப்பிடித்து,**
**இந்தியைத் தவிர்க்கக்கூடாது!**
**தமிழுக்காகவே இந்தியைத் தவிர்க்கவேண்டும்!**

கடந்த கிழமை திராவிடர்கழகம் இந்தி எதிர்ப்பு மாநாட்டைச் சென்னை - பெரியார் திடலில் நடத்திப் பல தீர்மானங்களை நிறைவேற்றி, ஓர் எதிர்ப்பு முயற்சியை அரசுக்குத் தெரிவித்துள்ளது.

திராவிடர் கழகம், நமக்கு எதிரான இயக்கம் அன்று; தோழமைக் கழகமே! ஆனாலும், அதன் செயற்பாடுகளும், அணுகு முறைகளும் நம் தமிழின முன்னேற்றத்தை முறையாக எடுத்துச் செல்வதற்குப் போதுமானவையாக இல்லாமல் இருப்பதுடன், சில நிலைகளில் போலித்தனமானவையாகவும் இருப்பதும், ஏதோ ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்திடையில், தம் பொது லஈடுபாட்டைத் தக்கவைத்துக் கொள்ளவும, புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டும்என்ற அடிப்படையிலேயே அமைந்திருப்பதால், தமிழின நலம் கருதியும், காலத்தின் அருமையும், தேவையும் கருதியும் நாம் அதனையும், அதன் செயற்பாடுகளையும் இக்கால் திறனாய்வு முறையில்



எடுத்துக் கூறியாக வேண்டியுள்ளதற்குப் பெரிதும் வருந்துகிறோம்.

இந்த வகையில் நாம், இதுவரை நேரிடையாக எந்தக் கருத்தையும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக இவ்வாறு எடுத்துக் கூறிட முன்வந்ததில்லை. ஆனாலும், இக்கால், தவிர்க்கவியலாத சில விளைவுகளை நோக்கி, அதைப்பற்றியும் சிற்சில கருத்துகளைக் காணவேண்டிய கட்டாயத்துக்குக் கொணரப்பட்டுள்ளோம். எதிரான நோக்கலன்று; சார்பான நோக்கிலேயே இக் கருத்துகள் இங்குக் கூறப்பெறுகின்றன என்பதை அன்பர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நம் மதிப்பிற்குரிய, மானமிகு **வீரமணி** அவர்களின் தமிழின முன்னேற்ற முயற்சிகளையும், செயற்பாடுகளையும், உணர்ச்சிபளவிலும், உழைப்பின் அடிப்படையிலும் என்றுமே நாம் பாராட்டவும் போற்றவும் கடமைப் பட்டவர்கள். தேவையான இடத்தில் தொலைவில் நின்றும், இணைந்து-இயங்கியும் நாம் அவ்வாறு பாராட்டியும்-போற்றியும் வந்திருக்கிறோம். ஆனாலும், அவரின் முயற்சிகளிலும், தமிழின முன்னேற்ற அணுகு முறைகளிலும், அவை தொடர்பான போராட்ட நிலைகளிலும், சில முரண்பாடான போக்குகள் தோன்றிய பின்னர், நாம் ஒதுங்கியும், ஒதுக்கப்பட்டுமே இருந்து வருகிறோம். இருப்பினும் அவர் முயற்சிகளுக்கு எதிர்ப்பான நிலைகளை நாம் அன்றும்-இன்றும் எந்த நிலையிலும் கடைப்பிடித்ததில்லை, இனியும் அத்தகைய நிலைக்கு நாம் வந்து விடப் போவதுமில்லை. ஆனாலும், கருத்துநிலையில், தமிழின நலம் நோக்கி, அவர் போக்குகளை உண்மையாகவும்-உறுதியாகவும்நடத்திடவேண்டும் என்னும் கவலையுடன் வெளிப்படையாகச் சிலவற்றைச் சொல்லியே ஆகவேண்டும் என்ற காலக் கட்டாயம் வந்துவிட்டது. இந்த வகையில் சில சொற்களை நாம் எச்சரிக்கையுடனும், தோழமையுணர்வுடனுமே கையாள விரும்புகிறோம். இவ்வாறு வெளிப்படையாக எழுதுவதற்காக, நடுநிலையும் அழுத்தமுமான உணர்வுடன், தமிழ் நலமும், தமிழின நாட்டு நலமும் கருதும் மெய்யன்பர்கள் நம்மைப் பொறுத்துக் கொள்வார்களாக.

நம் இந்தி எதிர்ப்பு முயற்சிகள் இன்று-நேற்று ஏற்பட்டனவல்ல. சரியாகச் சொன்னால்,கடந்த அறுபது



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஆண்டுகளாக நாம் இந்தியை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகிறோம். 1926-ஆம் ஆண்டிலேயே, இந்தி எதிர்ப்புக் குரல் தொடங்கிவிட்டது. தந்தை பெரியார் அவர்கள், தாம் தம் 7-3-1926 -ஆம் நாள், **'குடி அரசு'** இதழிலேயே முதன் முதலாக **'தமிழிற்குத் துரோகமும் இந்திமொழியின் இரகசியமும்'** என்று இந்தியை எதிர்த்தும், கண்டித்தும், ''தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும் பல கேடுகளில் (ஆபத்துகளில்) இந்தியும் ஒன்று'' என்று எச்சரிக்கை செய்தும், விரிவாகவும்-விளக்கமாகவும் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். அப்பொழுதெல்லாம், இந்தி திணிக்கப்படவில்லை என்பதை நாம நினைவில் கொள்ளவேண்டும். இருப்பினும், பின்னால் இந்தத் தமிழினத்துக்கு வரவிருந்த மிகப் பெருங்கேட்டை முன்னமேயே உணர்ந்து, முன்னறிவித்த பெருமை அவருடையது. அப்பொழுதெல்லாம் நாமும், இன்று இந்தியைத் தீவிரமாக எதிர்க்கும் பலரும் (அறுபது அகவையைத் தாண்டியவர்களைத் தவிர) பிறந்தே இருக்கமாட்டோம். எனவே, நாம் பிறப்பதற்கு முன்பிருந்தே **'இந்தி'** எனும் நச்சுச்செடிக்கு, இங்கிருந்து எதிர்ப்புக் குரல் கிளம்பிவிட்டது. அந்த முதல் குரலும், தந்தை பெரியாருடையது என்று எண்ணும்பொழுது நாம் வியப்பும், அதே சமயத்தில் சொல்லவொண்ணாத் துயரமும் கொள்கிறோம்.

இனி, தந்தை பெரியார் அந்தக் கட்டுரையைத் தொடர்ந்து இந்தியை எதிர்த்துப் பல மாநாடுகளை நடத்தியும், பல நூற்றுக் கணக்கான தீர்மானங்களை நிறைவேற்றியும் நில்லாமல், பல போராட்டங்களையும் தம் இறுதிக்காலம் வரை செய்து கொண்டிருந்தார் அந்தப் போராட்டங்களில் பங்குகொண்ட பெருமக்கள், பெரும் புலவர்கள், பெருந்தலைவர்கள், பேரறிஞர்கள் அனைவரும் 'தமிழக இந்தி எதிர்ப்பு' வரலாற்றில் நெடுகவும் வருகிறார்கள்; இன்னும் வந்து கொண்டு தானிருக்கிறார்கள்.

எனினும், இந்தி எனும், அன்று தோன்றிய நச்சுச் செடி, இன்று படிப்படியாய்ப் பார்ப்பனர்களாலும், வடவர்களாலும், வல்லாட்சியாளர்களாலும் பெரிய நச்சு மரமாக வளர்க்கப்பட்டுப் பரவி, நம் அனைத்து மொழி, இன, நாட்டு, கலை, பண்பாட்டு முயற்சிகளையும் முன்னேற்றங்களையும் துளிர்க்கவும், வளரவும் விடாமல் நாளொரு பேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் கால்கொண்டு காழ்த்து வருகிறது.



அந்த இந்தி எனும் சண்டி மாட்டை-மதங்கொண்டு வெறிபிடித்துத் தமழினத்தையே கட்டுக்குலைக்க வந்த வடநாட்டு யானையை இன்னும் நாம் அடக்கமுடியாமல், தந்தை பெரியார் அவர்களால் எண்ணியும்-எழுதியும், எதிர்ப்புக் காட்டியும், தீர்மானங்கள் போட்டும், போராட்டம் நடத்தியும். சிறை சென்றும், இம்மியும் அடக்கவோ, ஒடுக்கவோ இயலாமற்போன, அதே வழிகளை நாமும் கடைப்பிடித்து இந்தித் திணிப்பை ஒடுக்கிடவோ, ஒழித்தோ விடமுடியுமா என்பதே நமது கேள்வி.

**'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை'** என்பார் திருவள்ளுவர். தந்தை பெரியார் அவர்கள் கையாண்ட அதே முறைகளை, அந்த அளவில் கூட கையாளாமல், அவர் ஈட்டியை எடுத்துக் குத்தியிருந்தால் நாம் ஆணியைக் கொண்டு குத்துவதைப்போல், அவர் தகரி (பீரங்கி)யைக் கொண்டு வேட்டுக் கிளப்பியிருநதால், நாம் பட்டாசு வெடிகளைக் கொளுத்தி, அந்த வெறி யானையின் முன்னர்ப்போடுவதுபோல், நாமும் சலசலப்புகளைக் கிளப்புவதும், தகரக் குவளைகளை எடுத்துத் தட்டிக் காட்டுவதும், தீப்பந்தங்களைப் போன்ற தீர்மானங்களை, வெறும் வாய்ச் சொற்களால் கொளுத்தி வீசி எறிவதும், போராட்டங்கள் என்னும் பெயரில் வண்ண வாணங்களையும், விளம்பரப் பூ'மத்தாப்புகளை' யும் கொளுத்திப் பெரியார் திடலிலிருந்து வெளியிட்டுக் காட்டுவதும், ஏற்கனவே நாம் கண்டும், காட்டியும், கையாண்டும் புளித்துப்போனவையும், சலித்துப் போனவையுமான வழிமுறைகள் இல்லையா, என்பதே நம் அடுத்த கேள்வி.

தந்தை பெரியார், 1930 ஆம் ஆண்டு, தஞ்சை - நன்னிலத்தில் கூட்டிய 'சுயமரியாதை மாநாட்டிலேயே' (திராவிடர் கழகமாகக் கருக்கொண்டு உருவாகாமல் இருந்தபொழுதே) இந்தியை எதிர்த்துப் பேசியும், தீர்மானம் போட்டும் காட்டினார். அதன்பின் 1937 இல் இராசாசி இந்தியைக் கட்டாயமாக்கியதை, அதே ஆண்டு இறுதியில், மாநாடு கூட்டிக் கண்டித்துத் **'தமிழ் நாட்டைத்**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

**தனி நாடாகப் பிரிக்கவேண்டும்'** என்னும் வரலாற்றுப் புகழ்மிக்கத் தீர்மானத்தையும் நிறைவேற்றிக் காட்டினார்.

இன்று, நாம் அதுபோல் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவும், நிறைவேற்றவும் தொடை நடுங்கிக் கொண்டு, அஞ்சியஞ்சி, **'இப்படியே இந்தியைத் திணித்துக் கொண்டிருந்தால், இந்தியா சுக்கல் சுக்கலாக உடைந்து விடும்'** என்று பேசியும், அப் பேச்சையே கூடத் தீர்மானமாக நிறைவேற்றத் துணிவின்றி, **'ஆங்கில மொழியையே இணைப்பு மொழியாக் ஆக்கவேண்டும்'** என்று ஆங்கிலத்தையே தூக்கிப் பிடித்தும் தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கிறோம். காட்டாற்று வெள்ளம்போல் கரைபுரண்டு வருகின்ற இந்தித் திணிப்புக்கு இந்த எதிர்ப்பும், இணைவான இனிப்புப் பேச்சும் போதுமா, என்பதே நம் மூன்றாவது கேள்வி.

சூடற்றுச் சுரணையற்று, நாம் காட்டுகின்ற உள்ளுணர்வுகளையும், கருத்துகளையும் கோரிக்கைகளையும், எதிர்ப்புகளையும், போராட்டங்களையும், ஒரு சிறு அளவிலும் காதிலோ, கருத்திலோ வாங்கிக் கொள்ளாத வடநாட்டு இந்தி வெறியர்களுக்கும், வல்லதிகார வஞ்சகர்களுக்கும், நெஞ்சில் ஈரமும்-இரக்கமும் அற்ற அரசியல் கொடியவர்களுக்கும் பெரியார் என்னும் அரிமாவாலேயே இவ்வகையான முயற்சிகளின் வழி உண்மையை உணர்த்த முடியவில்லை என்றால், அவரேந்திக் கீழே போட்டுவிட்ட, எரிந்துபோய்க் கரியாகி விட்ட போராட்ட நெய்ப் பந்தங்களை நாம் எடுத்து வீசி என்ன பயன்? யார் அஞ்சிக் குலை நடுங்கப் போகிறார்கள்? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாவா?

1978 ஆகத்து 15-இல் பெரியார் திடலில், மானமிகு வீரமணி கூட்டிய 'இந்தி எதிர்ப்பு மாநாட்டிலேயே' நம்மை ஏதோ, மதிப்பும் அன்பும் காட்டி அழைத்துக் கலந்துகொண்டு கருத்துரையாற்றக் கேட்டுக் கொண்டதால், நாம் அன்றே, அங்கேயே, கலைஞர், செட்டி நாட்டரசர், கி.ஆ.பெ, குன்றக்குடி அடிகளார், கி.இராமலிங்கனார் போன்ற தலைவர்களையெல்லாம் மேடையில் வைத்துக்கொண்டு சொன்னோம் : "இந்தியை எதிர்ப்பதெல்லாம் வீணான முயற்சிகள்; இந்தியை எதிர்க்க



முடியாது; பெரியாரை விட நாம் ஒன்றும் அதிகமான முயற்சியை அதில் செய்து விட முடியாது; எனவே இந்தியை எதிர்த்து மாநாடுகள் கூட்டுவதையும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதையும், போராட்டங்கள் நடத்துவதையும் கூட நாம் விட்டுவிட வேண்டும். இவ்வகையாலெல்லாம் நம் ஆற்றலை இழந்துகொண்டே போகக்கூடாது; நாம் இந்தியை எதிர்ப்பதை விட்டு விட்டு இந்திய அரசையே எதிர்க்கவேண்டும். தமிழ்நாட்டைத் தனி நாடாகப் பிரிக்கப் போராடவேண்டும். தமிழ்நாடு தனியாகப் பிரியும்வரை இந்தியும் ஒழியாது; வடநாட்டுச் சுரண்டலும் வல்லாண்மையும் ஒழியா; பார்ப்பனியமும் ஒழியாது; இந்து மதமும் ஒழியாது; அதனால் தமிழும் வாழாது; தமிழனும் தலையெடுக்கமாட்டான்" என்று.

இது போலும் கருத்துகளை நாம் கூறுவதாலேயே 'திராவிடர் கழகம்' நம்மை ஒதுக்கி வைத்திருக்கிறது என்பதையும், நம் மிகச்சிறிய இயக்க முயற்சிகளுக்கும், ஆங்காங்கே, தரப்பெறுகின்ற ஆதரவைத் தடைப்படுத்தி, வளரவிடாமல் செய்கின்றார்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம். எவருக்கும் எதிராகவோ, அல்லது நம் வாழ்க்கை உயிர் பிழைப்புக்காகவோ, எந்த முயற்சியையும் நாம் தொடங்கவில்லை; செய்து கொண்டும் வரவில்லை. இமயமலை போலும் நலன்களைக்கூட, நாம் எடுத்துக்கொண்டு சுமந்து நிற்கும் கொள்கைக் குன்றுக்காக, எற்றி உதைத்து விட்டு, எட்டி எறிந்து, இடறாமல் நடை போட்டு வருகிறோம். இந்த நிலைகளை நாம் எந்த விளம்பர நோக்கத்துடனும் கூறவில்லை. இந்திரா காந்தி இராசீவ்காந்தி அல்லர், எந்தக் காந்தியையுமே, நம் மொழி, இன, நாட்டு நலக் கொள்கையில் என்றுமே பொருட்படுத்தியதும், மதித்ததும் கூட இல்லை. 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்னும் கொள்கையுணர்வில் மூச்சு விட்டுக் கொண்டிருப்பது எம் வாழ்க்கை. இம் மூச்சு அதன் பொருட்டு நிறுத்தப்படும் என்பதற்காக நாம் வருந்திக் கொண்டும் அஞ்சிக் கொண்டும் வாழ வேண்டிய தேவை நமக்கில்லை. ஊரை அடித்து உலையில் கொட்ட வேண்டிய இன்றியமையாமையும் எமக்கில்லை. இன்றும் அரிசியும், பருப்பும், உப்பும், புளியும் அன்றாடப் பட்டியலிலேயே சேர்க்கப் பெற்றுள்ளன. எனவே, நாம் இன்றிறந்தாலும் ஒன்றுதான்; என்று இறந்தாலும் ஒன்று

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தான்; எனவே எவருக்காகவும் அஞ்சிக்கொண்டு, நமக்கென்று தேர்ந்துகொண்ட மொழி-இன-நாட்டு நலக் கருத்துகளைப்பற்றி உண்மைகளை யாருக்காகவும் ஒளிக்க வேண்டுவதில்லை.

இவற்றை யெல்லாம் நல்ல நெஞ்சுணர்வோடு எண்ணிப் பாராமல், எம்மேல் இல்லாத பழிகளையும் இழிவுகளையும் சாற்றிக்கொண்டும், தூற்றிக்கொண்டும் கோழைகளையும் வயிறு கழுவ வாழ்க்கை நடத்தும் மோழைகளையும் தூண்டிவிட்டுக் கொண்டும், எம் தூய மொழி இன, நாட்டு நலத் தொண்டுக்கு மாசு கற்பித்து, எம்மையோ எம் கருத்துகளையோ வீழ்த்திவிட முடியாது என்பதால், இக் கருத்துகளை இத்துணை அழுத்தந்திருத்த மாக வெளியிடவேண்டியிருக்கின்றதென்று அன்பர்கள் கருதிக்கொள்ள வேண்டுகின்றேன். மற்று, இனநல, நாட்டுநலக் கொள்கையில் நாம் தொய்வு கொள்ள வேண்டிய தேவை என்ன வந்தது? யாருக்காக நாம் அஞ்ச வேண்டும்? பின்னர் ஏன் நம் முயற்சிகளில் இத் துணைத் தொய்வு? அச்சம்? கோழைத்தனம்?

என்ன இந்தி எதிர்ப்பு வேண்டிக்கிடக்கிறது இன்னும்? மாநாடுகள் எதற்கு? தீர்மானங்கள் எதற்கு? சொல்லிக் கொண்டிருந்தவர்களுக்கே, சொல்லிக் கொண்டிருந்த வற்றையே, சொல்லிக்கொண்டிருப்பவர்கள், சொல்லிக் கொண்டிருக்கிறோம்! இவற்றால் யாருக்கு என்ன புதுப் பயன் விளைந்து விடப்போகிறது? ஏன் நம்மிடத்தில் இந்த அடிமைத்தனமும் மடிமைத்தனமும்? நாங்கள் கூட்டினால், இந்தி எதிர்ப்பு மாநாடு சிறப்புறாது, என்ன பயனும் விளைந்துவிடாது என்பது போலவே தான் நீங்கள் கூட்டினாலும்! ஏன், கலைஞர் கூட்டுவது தானே. அவர் கூட்டினால் வடநாட்டு அரசு, ஓரளவுக்கு அஞ்சும்! ஆனால், அவர் அவர்களைப் பார்த்து அஞ்சு கிறார். 'அஞ்சுவதும், நாணுவதும், ஆமைபோல் வாழு வதும், கெஞ்சுவதுமாக' எத்தனை நாளைக்குக் கிடப்பது?

இந்தியைப் பற்றித்தான் எல்லா வரலாறும் இங்குள் ளவர்களுக்குத் தெரியுமே! கடந்த அறுபது ஆண்டு களாக அதுபற்றிய விளக்கங்களும், அதை எதிர்த்துத் தகர்க்க வேண்டிய தேவைகளும்தாம் மலைமலையாகக் கூறப்பட்டு வந்துள்ளனவே! இன்னும் யாரைத் தட்டி



யெழுப்ப இம் மாநாடுகள்? யாருக்கு உணர்வூட்டுவதற்கு இம் முயற்சிகள்? யாரை ஏமாற்றுவதற்கு இப் போராட் டங்கள்?

நாம் இனி எழுப்ப வேண்டுவது, மக்களை அன்று; நம்மைத்தான் நாம் எழுப்பிக் கொள்ளவேண்டும்!

நாம் இனி உணர்வூட்ட வேண்டுவது, இளைஞர் களுக்கு அன்று; நமக்குத்தான் உணர்வூட்டிக் கொள்ள வேண்டும்!

நாம் இனி, ஏமாற்றுவதற்காகப் போராட்டங்கள் நடத்தக்கூடாது; ஏமாறாமல் இருக்கின்றோம் என்கிற போராட்டங்களை நடத்தவேண்டும்!

எழுதியிருக்கின்ற இந்தி எழுத்துகளை அழித்தால் அவன், மீண்டும், நம்முடைய வரிப்பணத்தை எடுத்தே நன்றாக, அழுத்தந் திருத்தமாகவும், முன்னையவற்றையும் விடப் பெரிதாகவும் எழுதிக்கொள்கிறான்!

நாம் தூக்கும் கரிநெய் [தார்]ச் சட்டிக்கும் எழுது தூரிகைக்கும் செலவழிக்கும் பணத்தை, வெடி மருந்துக் கும், துமுக்கிக்கும் (துப்பாக்கி) செலவழிக்க வேண்டும். அதே எழுத்துகளையாகிலும் மண்ணெய் கொண்டு அழிக்காமல், துமுக்கிகொண்டு சுடப்போகிறோம் என்று அறிவிக்க வேண்டும். இந்திக்காரனைச் சுடாமற் போனாலும், இந்தி எழுத்தையாவது சுடும்படியான புதிய போராட்டத்தை, உந்துவேகம் கொண்ட உணர் வுச் செயலை நாம் நடத்திக்காட்ட வேண்டும்.

இதற்குப் பெயர்தான் 'தம்மின் தம் மக்கள் அறி வுடைமை'!

தந்தை பெரியார் கரிநெய்ச்சட்டி எடுத்துக் கொண்டு போய் இந்தியை அழித்தால், நாம் துமுக்கி கொண்டாவது அந்த எழுத்தைச் சுட்டுக்காட்டிப் போராடவேண்டாவா? இப்படிச் செய்தாலன்றோ, நமக்குப் பின் வருபவர்களா கிலும், அதே துமுக்கியை எடுத்துப் போரிட வருவார்கள்!
எனவே, பறவைகளை விரட்டுகின்ற முறையில், 'ஆலோலம்' என்னும் 'இந்தி எதிர்ப்புக் கருத்துகளை மாநாடுகளில் எடுத்துக் கூறி அல்லது பாடி, இந்தி

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

என்னும் காட்டெருமையை விரட்ட முடியாது. அதைக் கல்லால் அடித்துத் துரத்துகின்ற வகையில், ‘தனித்தமிழ் நாடு’ என்னும் கொள்கைக் கல்லால் அடித்து விரட்ட வேண்டும். ‘தமிழ்நாடு தனிநாடு’ ஆகாமல் இந்தி ஒழியாது; யாராலும் ஒழிக்க முடியாது. இதனைத் தெளிவாகத், தந்தை பெரியார் அவர்கள் உணர்ந்துதான் 1937-இலேயே தனித்தமிழ் நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தினார்கள். ஆனால், உயிர் மூச்சான இந்தக் கொள்கை என்னாயிற்று? ஏன் கைவிடப்பட்டது? இந்தக் கொள்கையை முன்வைத்து நாம் போராடினால் என்ன? ஏன் அச்சம்? அச்சப்பட்டு அச்சப்பட்டுத் தமிழினம் இத்துணைக் காலம், ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் அடிமையுற்றது போதாதா? அடுத்த தலைமுறையில் இப்பொழுதுள்ள போராட்ட நிலைகள் என்னாகும்?—என்பவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, அவற்றுக்கெல்லாம் முற்ற முடிந்த முடிவாக-வலித்தமான-ஒரு முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டாவா?

வீரமணி நடத்துகின்ற இந்த இந்தியெதிர்ப்பு மாநாட்டைக் கலைஞர் நடத்தினால், எல்லா நிலையிலும் இன்னும் வலுப்பெற வாய்ப்பிருக்குமே! மேலும் இது போன்ற மாநாடுகளைக் கடந்த அறுபது ஆண்டுகளாகச் சென்னையிலேயே நடத்திக் கொண்டிருப்பதை விட, வட மாநிலங்களில், குறிப்பாகத் தில்லியிலேயே போய் நடத்தினால், இன்னும் எழுச்சியாக இருக்காதா?

வடநாட்டுத் தலைவர்களையும், இங்கு நடைபெறும் இந்தி எதிர்ப்பில் சேர்ப்பது ஒருவகை விளம்பரத்திற்குத் தானே பயன்பட முடியும்? அவர்களால் என்ன விளைவு ஏற்பட்டு விடமுடியும்? அவர்கள் இந்தியை எதிர்க்கவில்லை; இந்திரா பேராயத்தை—அதன் ஆட்சியை எதிர்க்க இதையொரு வாய்ப்பாகத்தானே பயன்படுத்திக் கொள்கிறார்கள்! மேலும், அவர்கள் இந்தியை எதிர்ப்பதானால், அத்தகைய எதிர்ப்பை நம் தென்னாட்டு உறுப்பினர்களுடன் சேர்ந்து பேசுவதுதானே முறை! அந்த வகையில் அவர்கள் வடநாட்டுத் தலைவர்களையும் இணைத்துப் போராடலாமே! அவ்வாறில்லாமல், அவர்கள் தென்னாட்டில் கூட்டப்பெறும் மாநாடுகளில் வந்து, இந்தியெதிர்ப்புக் கருத்துகளை இங்குள்ள மக்களிடமே கூறுவதால் என்ன விளைவு ஏற்படப்போகிறது? அவர்



களின் பொருட்டாகவே நாம் ஆங்கிலத்தை வேறு அளவிறந்து தூக்கிப்பிடித்துப் பேச வேண்டியிருக்கிறது.

இந்நேரத்தில், இங்குள்ள திராவிடர் கழகத் தோழர்களுக்கு நாம் ஒன்றைத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

நாம் ஆங்கிலத்தை முன்னிருத்தி இந்தியை எதிர்க்கத் தேவையில்லை. தமிழ்மொழியை முன்னிருத்தியே-தமிழ் மொழியின் வளர்ச்சியையும் வளத்தையும் முன்வைத்தே-இந்தியை நாம் எதிர்க்கவேண்டும். நாம் நம் தாய் மொழிக்காக இந்தியை எதிர்த்துப் போராடுகையில், இந்திக்காரர்கள் ஆங்கிலத்துக்காக இறங்கிவரட்டுமே! இப்பொழுது நாம் தமிழுக்காக இந்தியை எதிர்க்கிறோமா, அல்லது ஆங்கிலத்துக்காக அதை எதிர்க்கிறோமா? ஏன், இதில் குழப்பம் உண்டாக்க வேண்டும்?

தமிழ்மொழியை எண்ணுகையில் நமக்கு ஆங்கிலமும் சரி, வேறு எந்த மொழியும் சரி, அனைத்தும் இந்தியை போலவே அயல் மொழிகளே! ஆங்கிலம் என்றால் சருக்கரை மொழி; தமிழ் என்றால் வெல்லமா? இந்த மனப்பான்மையுடன் நாம் இந்தி எதிர்ப்புச் செய்யும் வரையில் நம் கோரிக்கையும் வெற்றி பெற முடியாது; நாமும் தன்னுரிமை பெறமுடியாது.

ஆங்கிலம் என்கிற மொழியின் பயன்படுத்தத்திற்காக நாம் அதைப் படித்துக்கொள்வதென்பது வேறு; அதற்காக நாம் இந்தியை எதிர்ப்பது என்பது வேறு; தமிழுக்காகவே நாம் இந்தியை எதிர்க்கின்றோம் என்பதைப் பட்டையை உரித்தாற்போல் பளிச்சென்று வடநாட்டானுக்கு அடித்துச் சொல்ல நாம் ஏன் தயங்க வேண்டும்?

நம்மைப் பொறுத்தவரை, ஆங்கிலமும் இந்தியும் ஒன்றுதான். ஆங்கிலம் அறிவியல் மொழியானால் என்ன? அதற்கு மட்டும் நாம் அடிமை ஆகலாமா? ‘இந்திமொழி வேண்டாம், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்கு’ என்று நாம் சொல்லும்போது, ‘ஆங்கிலம் என்னும் வேறு நாட்டு மொழிக்காக’ நாம் வழக்குரிமை (வக்காலத்து)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வாங்குவதாக அவர்கள் கூறுவார்களே தவிர, நம் தாய் மொழி தமிழுக்காகப் போராடுவதாக அவர்கள் கூற மாட்டார்களே!

அண்மையில் சென்னை, உயர் நெறி மன்றத்தில், இந்திப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு சலுகையைக் காட்டி மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டும் என்று தொடுக்கப்பெற்ற வழக்கொன்றில், 'இந்தியை எதிர்த்ததை, தமிழ் மொழியின் பாதுகாப்புக்கு போராடியதாகக் கருதுவதற்கு இடமில்லை' என்று தீர்ப்பு வழங்கியதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் (தினமணி 28-11-85) (வழக்கு மன்றத் தீர்ப்பின் பிறபகுதிகள் நம் கருத்துக்கு மாறுபட்டவையாகவே உள்ளன என்பதை நாம் கவனிக்கவேண்டிய தேவையில்லை).

ஆங்கிலம், இந்தி-தொடர்பான இந்தக் கருத்தையும் 1978-ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய வீரமணி அவர்கள் கூட்டிய மாநாட்டிலேயே நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம் என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

எனவே, நம் தாய்மொழியான தமிழ்மொழியை வளர்க்கவும் வளப்படுத்தவுமே நாம் இந்தியை எதிர்க்க வேண்டும். இதே காரணத்துக்காகவுமே சமற்கிருதத்தையும் நாம் தவிர்க்கிறோம்; அல்லது எதிர்க்கிறோம் என்பதையும் அறிதல் வேண்டும்.

ஆங்கிலம் இந்தியாவின் இணைப்புமொழி ஆக வேண்டும் என்பதை வடநாட்டு இந்தி வெறியர்களும், இங்குள்ள தேசிய அடிமைகளும் ஒப்பமாட்டார்கள். இதற்குக் காரணம் வடவர்க்கு இந்திமொழியின் மேல் உள்ள வெறியும், இங்குள்ள தேசியத் திருடர்களுக்குத் தமிழ்மொழியின் மேல் உள்ள பற்றின்மையுமே! அது போலவே, இந்தியை எதிர்ப்பதற்கும் நாம் தமிழை விரும்புவதே, அதன் மேலுள்ள பற்றே காரணமாக இருக்க வேண்டும்.

'சப்பான் மொழியில் படிக்க சீனர் விரும்பமாட்டார்கள்' என்பதை, 'இந்தியில் படிப்பதைத் தமிழர் விரும்ப மாட்டார்கள்' என்பதற்கு மதிப்பிற்குரிய வீரமணி



எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். 'அவ்வாறு கூறும்போது தமிழர் ஆங்கிலத்தில் மட்டும் படிப்பதை ஏன் விரும்ப வேண்டும்?'

'எனக்குத் தமிழ்ப்பற்று இல்லாமல் இல்லை' என்று வீரமணி சொல்ல வேண்டுவதில்லை. அவ்வாறு இல்லை என்று யார் சொன்னது?

'ஆங்கிலம் அறிவியல் மொழியாக வளர்ச்சிபெற்றிருக்கிறது' —என்பதில் நமக்குக்கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், 'அந்த அளவுக்குத் தமிழும் வளர்ச்சிபெற வேண்டும்' என்னும் கருத்து இன்னும் தோன்றவில்லையே என்பதுதான் நம் வருத்தம்; மனக்குறை! அந்நிலை எளிதில் முடிகிறதோ இல்லையோ அந்த நோக்கமே நமக்கு வேண்டியதில்லை என்று நாம் சொல்லமுடியுமா? அப்படியானால், தமிழுக்காக நாம் ஏன் இத்தனை முயற்சிகள் செய்யவேண்டும்? எனவே, இந்திமொழிக்கு மட்டுமன்று, சமற்கிருதத்திற்கு மட்டுமன்று, ஆங்கிலத்திற்கும் நாம் அடிமையாகி விடக்கூடாது என்பதே நம் வலித்தமான ஒன்றிணைந்த கொள்கையாக, உணர்வாக இருத்தல் வேண்டும். இந்தக் கருத்து, இன்றுள்ள சூழலில் இயலாமல், அல்லது நிறைவேறாமல் இருக்கலாம். நாளைக்கும் அது நிறைவேறக்கூடாது என்றிருக்கலாமா? எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

ஆங்கிலத்தை நாம் விரும்பிக் கற்கலாம்; அதன்வழி, இன்றுள்ள அறிவியல் பயனையும் நாம் பெறலாம். ஆனால், வாழ்வியல் பயனையும், இழந்துபோன உரிமைகளையும், இனநலத்தையும் நாம் நம் தாய்மொழி வழியாகத்தானே பெறமுடியும்!

இந்தியோ எதற்கும் பயன்படாத வெற்றுமொழி. இந்திய தேசிய நீரோட்டம், இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பதற்காக மட்டுமே இந்தியைக் கற்கவும், தொழில்மொழியாக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், அதனால் முழுப்பயன் பெறுபவர் அல்லது பெறப்போகிறவர்கள் வடநாட்டுக்காரர்களும் இந்தி வெறியர்களும் பார்ப்பனர்களுந்தாம். தமிழரோ இந்தியால் என்றுமே இரண்டாந்தரக் குடிமக்களாகவே இருக்க முடியும். ஆங்கிலத்தை ஏற்பதும் ஓரளவு இத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தகைய விளைவைத்தானே ஏற்படுத்தும்? ஆங்கிலத்தை, நம் தமிழ்மொழியை இன்றைய அறிவியல் வாழ்க்கைக் கேற்பத் தகுதியுடையதாகச் செய்வதுவரையே, பயன் படுத்திக் கொள்ளும்படி செய்தல் வேண்டும். இறுதிவரை யிலான, நிலையான முடிவு ஆங்கிலமே என்று இருக்கும் படி நாம் ஏற்றுக்கொள்ளவும் கூடாது; அவ்வாறு காலப் போக்கில் ஆகிவிடும்படி நாம் விட்டு விடவோ, திட்ட மிடவோ கூடாது.

ஏற்கனவே வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் ஆங்கி லத்தையும், பிரெஞ்சையும் செருமனியையும், சீன, உருசிய மொழிகளையும் அந்தந்த நாடுகளில் படித்தும் பேசியும் வருவதுடன், தங்கள் தாய்மொழியான தமிழைப் படிக்க வாய்ப்பின்றியும், மறந்தும் வருகின்றனர். அத்தகைய நிலை ஆங்காங்குள்ள சூழல்களாலும் ஏற்படுகிறது. அந்த நிலைகளைத் தடுக்கவும் அவர்களுக்கிருக்க வேண்டிய தமிழ் ஈடுபாட்டை வளர்த்தெடுக்கவும் ஆன கவலையும், முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டிய இந் நேரத்தில், நம் அனைத்து முயற்சிகளும், போராட்டங்களும், நம் தாய்மொழியான தமிழை நோக்கியும், இன அடிமை நீக்கத்தையும் உரிமை மீட்பையும், நாட்டு விடுதலையை யும் கருத்தில் கொண்டுமே செய்யப்பட வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாதது.

எனவே, விளம்பரத்திற்காகவும், நம்மேல் மக்கள் வைக்கவேண்டிய நம்பிக்கைக்காகவுமே நாம் வீணான போராட்டங்களையும், பயனற்ற முயற்சிகளையும் செய்துகொண்டிராமல், திட்டமிட்டுதுணிவான, ஒட்டு மொத்தமான நாட்டு விடுதலை முயற்சியைக் கையி லெடுக்கவேண்டும் என்றும், அதையும் கலைஞர் முன் னின்றுசெயல்படுத்த வேண்டும் என்றும், பிற தமிழின நலங்கருதும் தலைவர்கள் இன்றைய அரசியல் பயன் களைக் கருத்தில் கொள்ளாமல் அதற்குத் துணிந்து, துணை நிற்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்துலக அளவில் இராசீவ்காந்தி தம் கைகளை வலுப்படுத்திக் கொள்ளும் அரசியல் தந்திர முயற்சிகள் நாள்தோறும் வேறு வேறு வகைகளில் திட்டமிட்டுச்



செய்யப்பெற்று வருகின்றன. கிழக்காசிய வல்லதிகார நாட்டுத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடி, மக்களின் உண்மை யான கோரிக்கைகளை நசுக்கிக் கீழ்மைப்படுத்தி வருவ தும், அவர்களுடன் இணைந்து இராசீவ் காந்தியும் அத் தகைய முடிவை நோக்கித் திட்டமிட்டு வருவதும் இந்தி யாவையே குடியரசு என்னும் பெயரால் ஓரதிகார ஆட் சிக்கும், மன்னர் மரபு தழுவும் ஒரு குடும்ப ஆட்சிக்கும் உட்படுத்த முயன்று வருவதும், இந்நிலையில் இந்தியத் தேசிய இனங்களின் உரிமையுணர்ச்சிகளே எதிர்காலத்தில் குழி தோண்டிப் புதைக்கப்படும் வாய்ப்புக் கூறுகள் வலிமை பெற்று வருவதும் உற்று நோக்கத் தக்கன. எனவே, நாம் உண்மையான தமிழின முன்னேற்றத்தை யும், உரிமை மீட்பையும், நலத்தையும் விரும்புவோ மானால், அத்தகைய முயற்சிகளுக்கான காலம் இதுவே என்று கருதி, இங்குள்ள அனைத்து இயக்கங்களும் தமிழ்த் தேசிய உரிமைக் குரலை உடனே எழுப்பியாகவேண்டும் என்று, மன, அறிவு, செயல் காழ்ப்பின்றி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

**தமிழ் நிலம் 'இதழ் எண் : 68(12.1.86)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 8. தமிழீழப் போராளிகளின் மேல் தமிழக அரசு நடவடிக்கை: கொடுமை ! அவமானம் !

★ தில்லி முடிவுகளுக்குத் தமிழக அரசு துணை போகக் கூடாது !

★ பாலத்தீனம், தென்னாப்பிரிக்கா-விடுதலை முயற்சிகளை ஆதரிக்கும் இந்திய அரசு, தமிழீழப் போராளிகளிடம் ஏன் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும்?

கடந்த கிழமை தமிழக அரசு தமிழீழப் போராளிகள் ஆயிரக்கணக்கான பேர்களைத் திடுமென, யாரும் சற்றும் எதிர்பார்க்காத முறையில் தளைப்படுத்தியதும், இயக்கத் தலைவர்களையும் அவமானப் படுத்தும் வகையிலும், இலங்கைக் கயவர்கள் மகிழ்ச்சியும் ஊக்கமும் பெறும் வகையிலும், அவர்களைக் கடுமையான வகையில் காவல் துறை ஆய்வுகளுக்கு உட்படுத்தியும், கடுமையான கொலைக்குற்றவாளிகள், கொள்ளைக்காரர்கள் போல் அவர்களைப் பல கோணங்களில் படங்கள் பிடித்தும், உசாவல் செய்தும், வீட்டுக் காவலில் வைத்தும் இழிவு படுத்தியதும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கத் தக்க செயல்களாகும்.

உலக வரலாற்றிலேயே தமிழினத்திற்கு 'இப்படியோர் தலைக்குனிவும் தாழ்ச்சியும் இதுவரை ஏற்பட்டதில்லை.



இந்நிகழ்ச்சி தமிழின முன்னேற்றத்திற்கான அனைத்து முயற்சிகளையும் பின்னடையச் செய்ததுடன் தமிழின முன்னேற்றத்திற்குப் பாடுபடும் போராளிகளையும் அரசியல் தலைவர்களையும் வலுத்த மனச்சோர்வுக்கும், அச்சத்திற்கும் உள்ளாக்கி விட்டது. தமிழக அரசும், முதலமைச்சரும் இந் நடவடிக்கைகளின் வழி, தமிழக வரலாற்றில் தீராத ஒரு பழியைத் தேடிக் கொண்டனர்.

இன்றைய தமிழக அரசு எப்பொழுதுமே, வடநாட்டுத் தில்லிப் பார்ப்பனிய முதலாளிய வல்லதிகார ஆட்சிக்குத் துணைபோவதாகவே அன்றும் இன்றும் நடந்து கொண்டு வருகிறது.

தமிழர்களுக்கு மாறான இந்தித் திணிப்பில் அதன் அமைச்சர்கள் ஓரிருவரைத் தவிர, முதல் அமைச்சரும் அமைச்சர்கள் பிறரும் இரட்டைப்புனைவு போட்டுக் கொண்ட அரசியல் நாடக நடிகர்களாகவே நடந்து கொள்கின்றனர். புதுக்கல்விக் கொள்கையில் தில்லிக்குத் தலையையும், தமிழக மக்களுக்கு வாலையும் காட்டுகின்ற விலாங்குபோலவே செயல்படுகின்றனர். இவை தவிர, பிற தமிழின முன்னேற்ற முயற்சிகள் அனைத்திலுமே என்றுமே அவர்கள் நேர்மையாகவோ உண்மையாகவோ அல்லது வெளிப்படையாகவோ நடந்து கொண்டது இல்லை.

மக்களை ஏமாற்றுவதற்கு ஏதோ தமிழ் மொழிக்கென்றும் தமிழக மக்களுக்கென்றும் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில நடவடிக்கைகளை எடுப்பதும், செயல் திட்டங்களை அறிவிப்பதும், பெரியார், அண்ணா என்று பலபடப் பேசி அவர்களுடைய கொள்கைகளுக்கு நேர் மாறாக நடந்து கொள்வதுமே அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அரசியலில் அவர்களுக்கு வரும் கொள்ளை ஊதியங்களை வைத்துக் கொண்டு, தமிழும் தமிழினமும் தமிழ் நாடும் எக்கேடு கெட்டால் என்ன என்று கருதியபடி, ஏனோதானோ போக்கிலேயே அவர்கள் இதுவரை ஆட்சி நடத்தி வந்திருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழீழப் போராட்டத்தையே தலை குப்புறக் கவிழ்க்கும் வகையில் அவர்கள் இக்கால் எடுத்துக் கொண்ட கடுமையான காவல்துறை நடவடிக்கைகள், அவர்களின் உள் நோக்கங்களையே பளிச்செனக் காட்டி விட்டன. அவர்களிடம் இனியும் தமிழக மக்கள் நம்பிக்கை காட்டிப் பயனில்லை என்றாகி விட்டது.

ஆனாலும் போராளிகள் மனந்தளர வேண்டியதில்லை. விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவும் நடக்கும்; இதை விடவும் நடக்கும். எந்த நடவடிக்கைகளும் புறத் தாக்குதல்களும் அவர்கள் எடுத்துக் கொண்ட விடுதலை நோக்கத்திற்கும் தூய்மையான, தந்நலமற்ற போராட்டத் திற்கும் முன்னர்க் கால்தூசுகளைப் போன்றவையே !

எனவே போராளிகள் தாம் கொண்ட உறுதிப்பாட்டிலும், கொள்கை நோக்கிலும் சிறிதும் மாற்றமடையத் தேவையில்லை. மேன்மேலும் அவர்கள் யானை போன்ற வலிவும், அரிமா போன்ற சீற்றமும் கொண்டு செயல்பட்டே ஆக வேண்டும். அவ்வாறு அவர்கள் போராடுவார்கள் என்னும் நம்பிக்கையும் நமக்குண்டு.

கடந்த மூவாயிரமாண்டுக் காலத் தமிழினத்தின் தாழ்ச்சி வரலாறு, இவர்களின் இடைவிடாத, தொய்வு போகாத போராட்ட முன்னேற்ற முயற்சிகளால் முறியடிக்கப் படவேண்டும்; பட்டே ஆகவேண்டும் என்பதே நம் கோட்பாடும், கோரிக்கையும், வேணவாவும் ஆகும்.



அதற்கென நாம் என்றும் அவர்களுடன் தோளோடு தோளாக இணைந்தே நிற்போம் என்பதும் தேவையானால் போராட்டக்களத்தில் குதித்து நம்மை முழுமையாக ஈடுபடுத்தியும் கொள்வோம் என்பதும், நாம் அவர்களுக்குக் குருதியால் எழுதிக் கொடுக்கும் விடுதலை உறுதிப் பட்டயமாகும்!

ஆயிரம் கோடித் திண் தோள்கள் உண்டு! - எந்த
ஆட்சிக்கும் அஞ்சுவமோ? - அட
வாயுரம் காட்டி, வல் லாண்மைகள் செய்யினும்,
வஞ்சரைக் கெஞ்சுவமோ? - பெற்ற
தாயினும் மேலான தமிழ்நிலம் மீட்பதில்
தயக்கமும் தாழ்ச்சியும் ஏன்? - ஒரு
நாயினம் புலிகளை ஆளுவதோ - நரி
நாயகம் செய்வது வோ?
மூண்டெழு வீர் தமிழ் வீரர்களே! - இனி
வீழ்ச்சி நிலைகளில்லை ! - நாம்
ஆண்ட மறவர்கள்! சீறும் சிறுத்தைகள்!
அல்லல்கள் ஏற்பதில்லை ! - புல்
பூண்டுகள் யானை தடுப்பதுவோ? மேகம்
பொருதி மலை கரைமோ? - கடல்
பொங்குவதை ஒரு துடுப்பும் தடுக்குமோ?
போர்க்குணம் தூங்கிடுமோ?

வெல்க தமிழக விடுதலை! வாழ்க போராளிகள்! வளர்க அவர்கள் தாயக வேட்கை!

**தமிழ் நிலம்**: இதழ் எண்: 76 (2-11-86)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 9. இராசீவ் காந்தி - இராமச்சந்திரன் சூழ்ச்சிகள், தமிழினத்தின் நிலையான அடிமைக்கு அடிகோலிவிட்டன!

❋ **பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் பிணக்குழிகளின் மேல், இராசீவ் - செயவர்த்தனா ஆரிய - இனநல ஒப்பந்தம் !**

❋ **போராளிகளின் முயற்சி அடியோடு சாய்க்கப்பட்டது!**

❋ அடுத்த முயற்சி தமிழகத்தைத் தனி நாடாக ஆக்குகின்ற முயற்சிதான் !

❋ தமிழர் ஒவ்வொருவரும் பிரபாகரனையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது? தமிழக! இளைஞர்கள் தாம் எதிர்காலத் தமிழ் ஆட்சியைச் சமைத் தெடுக்க வேண்டும்.

**இன்னும் இருபதாண்டிற்குள்ளேனும் தனித்தமிழகத்தை மீட்டெடுப்போம்!**

❋ தமிழ்த்தலைவர்கள் இனியேனும் மன இறுக்கத்தையும் தந்நல உணர்வையும் தவிர்த்து' அனைவரும் ஒன்றுபட்டு

❋ இயங்கி, உண்மையான இன விடிவுக்கான ஆக்கம் கருத வேண்டும் ! எழுக ! இணைக ! முனைக !முடிக்க!

மக்கள் போராட்டங்கள் அனைத்திலும் நாட்டு விடுதலைப் போராட்டமே முதலிடம் பெறுவது. அப்



போராட்டம் உரிமை மீட்பின் அடிப்படையில் செய்ய பெறுவது. இதற்கு உணர்வு, அறிவு, செயல் மூன்றும் நிறைவுடனும், தொடர்ந்தும், துணிவுடனும் இயங்குதல் வேண்டும்.

விடுதலை உரிமைப் போராட்டம் தேவை என்று உணர்வது முதல் படிநிலை அதற்குரிய வீரர்களை ஒருங்கு திரட்டுவது இரண்டாம் படிநிலை; அவர்களை ஓர் இயக்கமாகக் கட்டியமைத்துப் பயிற்சி செய்விப்பது மூன்றாம் படிநிலை; அவர்களைக் கொண்டு நேரடியாக வோ வேறு முறையிலோ போராடுவது நான்காம் படிநிலை; இறுதியாக அப் போராட்டத்தில் வென்றெடுப் பது ஐந்தாம் படிநிலை.

இவ்வைந்து படிநிலைகளிலும் ஒன்றன்பின் ஒன்றாகக் காலடி வைத்து முன்னேறுவதற்கு, அப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைவரோ ஒரு குழுவோ எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கும் என்பது நேரிடையாக உணரவேண்டிய பாடம். வெளியிலிருந்து கொண்டு எவ்வளவும் பேசலாம்; திட்டமிடலாம். ஆனால் களத்தில் இறங்கிப் பார்க்கும் பொழுதுதான், இதன் இடர்ப்பாடுளும் இழப்புகளும் ஏதங்களும் (அபாயங்களும்) தெரிய வரும்.

மேலும், முன் கூறிய ஒரு போராட்டத்தின் ஐந்து படிநிலைகளிலும் ஒன்றன் பின் ஒன்றாகக் கடந்து செல்கையில் எத்துணை உழைப்பும், எவ்வளவு பொருள் செலவும் அறிவுக் கூர்மையும், செயல்திறமும் ஆளுமையும் தேவை

என்பதை இதில் ஈடுபடுபவரே உண்மையாக அறிய முடியும். இன்னும், ஒவ்வொரு படிநிலையிலும் எவ்வளவு அகப்புறப் போராட்டங்களுக்கும், சூழ்ச்சி இரண்டகங்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

களுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் பட்டறிவால் அன்றிப் படிப்பறிவாலும் உணர முடியாது.

மொத்தத்தில் இன, நில உரிமைப் போராட்டங்களைத் தொடங்குவதும், அவற்றை வழிநடத்திச் செல்வதும், இவ்வுலகில் செயற்கரிய செயல்களாகும். இச்செயல்களைக் குறைத்து மதிப்பிடுவாரும் குறை கூறித் திறனாய்வு செய்வாரும் வீரமற்ற கோழைகளாகவும், எதிரிகளாகவுமே இருக்க முடியும். இவ்வுண்மைகளை உணர்ந்து கொண்டு, தமிழீழத்தில் நடந்துவரும் விடுதலைப் போராட்டங்களை மதிப்பிடுவோர், நம் தமிழீழ விடுதலைப் போராளிகள் எவரையும், (அவர்கள் எந்தச் சிறிய, பெரிய இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்) இவர்களைக் குறைவாகக் கருதி விட முடியாது. அவ்வாறு குறை கூறுவார்ப்பற்றி உண்மையான போராளிகள் கவலைப் படமாட்டார்கள். இஃது ஒரு புறம் இருக்கட்டும்.

நாம் இங்குக் கூற வந்தது, இத்தகைய அருமையும் பெருமையும் வீரமும் முயற்சியும் ஊக்கமும் செறிந்து விளங்கிய தமிழீழப் போராட்ட இயக்கங்களை, அரசியல் சூழ்ச்சியாலும், ஆட்சி வெறியாலும், மாந்தத் தன்மையற்ற—இரக்கமற்ற—தன்மையாலும், அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கி அடிபணிய வைத்து விட்டனரே, ஊழல் மன்னன் இராசீவ் காந்தியும், உலகின் தலையாய கொடுமை விலங்கன் செயவர்த்தனனும், என்று எண்ணுகையில் உள்ளம் பதறுகிறது; உயிர் கருகுகிறது; உடல் வெலவெலக்கிறது!

இவர்களின் அப்பன் வீட்டு சொத்துகளையா விடுதலைப் போராளிகள் வேண்டும் என்று கேட்கின்றனர்? உலக நிலப்பரப்பில் இவர்கள் மேய்கின்ற நிலங்களுக்கு இவர்கள் எப்படி உரிமை கொண்டாடுகின்றனரோ அப்படியே, தமிழர்கள் வாழ்கின்ற நிலங்களுக்கு அவர்கள் உரிமை கொண்டாடுகின்றனர். மூக்குள்ள உயிர்களெல்லாம் அவ்வவற்றிற்கு முடிந்த அளவில் உலகப் பொதுக் காற்றை உறிஞ்சிக் கொள்ள வேண்டியதுதானே! இதில் இவர்களுக்கு என்ன நோப்பாளம் வந்துவிட்டது? உயிர்களின் இனநல உரிமையைத் தடுப்பதற்கு இவர்கள் யார்? கைகளில் படை வரிசைகளை வைத்திருப்பதாலேயே இவர்கள் மாந்தஉரிமைக்கு எல்லை வகுத்து, இறைமையை வரையறுத்து விடுவதா? கொடுமை கொடுமை! மிகவும் கொடுமை!

ஆனால், இவர்களின் கொடுமையை விட மிகமிகக் கொடிய கொடுமையாகும், இப் போராளிகள் நடந்து கொண்ட கொடுமை! இவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையில் நடந்து கொள்ளாததுதான் அனைத்துக் கொடுமையிலும் கொடுமை ஆகும். போராடும் பொழுதுகளில்தாம் இவர்கள் ஒருங்கிணைந்து போராடவில்லை. எத்தனையோ சொன்னோம்; எவருமே செவிகளில் போட்டுக் கொள்ளவில்லை! போனால் போகட்டும். அது போராளிகளின் இயல்புகளில் ஒருவகை என்று கூட அமைவு கொண்டோம். ஆனால் எதிரிகளுக்கு அடிபணியும் போது கூட ஒற்றுமை இல்லையே! ஒருவர் கைமேல் விழுந்தால் இன்னொருவர் கால்மேல் விழுகின்றார்! அடுத்தவர் நெடுஞ்சாண் கிடையாக நீட்டி விழுகிறார் இஃதென்ன இழிவு! அந்நிலை எதிரிகளுக்கன்றோ ஊதியமாகித் தலைக் கிறக்கத்தைக் கொடுத்தது.

இறுதியிலாகிலும் இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து **'அனைவருமே போராடிச் சாவோமேயன்றி அடிபணிய மாட்டோம்'** என்று வீறு முழங்கியிருந்தால், இந்திரா காந்தி மகன் அனைவரையுமே சுட்டுப் பொசுக்கி



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யிருப்பாரோ? அதைப் பார்த்துக் கொண்டு உலகத் தமிழர் அனைவருமே சும்மா இருந்து விடுவாரோ? 'சுட்ட நண்டுக்குச் சுடாத நண்டுகள் காவலிருந்து, நரிக்கு நாயணம் ஊதி நல் விருந்து தந்ததைப் போல' அழைக்கும் முன்பே, போராளிகளின் கோழைத்தனம், அடிபணிய மறுத்த புலிகள் இயக்கத்தையுமன்றோ அடிப்படுத்தி விட்டது! இத் தமிழின வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் இனி எதைக் கொண்டு ஈடு கட்டுவது? பஃறுளியாற்றையும் குமரிக் கோட்டையும் கொடுங்கடலுக்குக் காவு கொடுத்த பாண்டியன், வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டானே, அந்த மரபு வழி வந்தோரா இற்றைத் தமிழர்? ஐயகோ! நெஞ்சு பற்றியெரிகிறதே!

'பிரிந்து கிடந்தால் சாவிலும் தனித்தனிப் பிணமாகத்தான், எரிந்து கருக வேண்டும்' என்பதை இனியேனும், எண்ணிப் பார்த்து, இழந்த தமிழின உரிமையை மீட்கப் புறப்படும் தமிழ்ப் போராளிகள் ஒன்று சேர்ந்து இயங்கவேண்டும் என்பதே அவர்கள் முன்வைக்கும் நம் வேண்டுகோளாகும். இழந்ததற்கு வருந்தாமல் எதிர் வதற்குத் துணிவு கொள்வோம்.

கருமம்செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்!

—தமிழ்நிலம் : இதழ்எண் : 89 (10.8.1987)

# 10. தமிழ்நாட்டு அரசியல் குழப்பத்தால் தமிழீழப் போராட்டம் அடக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சப்படுகிறது!

★ தமிழகத்தில் அரசியல் மோதல்களைத் தூண்டி விட்டுத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைஅடக்கப் பார்க்கிறது, இந்திய அரசு!

★ தேடுதல் சாக்கில் விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் அழிக்கவும் பார்க்கிறார் இராசீவ்!

★ இடுக்கிப் பிடியில் சிக்கித் தவிக்கிறது தமிழினம்!

★ அனைத்துக்கும் ஒரே முடிவு தமிழக விடுதலையை முன்னெடுத்துப் போவதே!

**இளைஞர்களின் கையில் எதிர்காலத் தமிழகம்**

தமிழீழத் தமிழர்களுக்கு நாளுக்கு நாள் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. போராளிகளைத் தேடுகின்ற முயற்சியில் இந்தியப் படை, போராளிகளை அடியோடு அழித்தொழிக்க முற்பட்டு விட்டது. இது தொடர்பாகத் தமிழக மக்களின் கவனம் திசை திருப்பப்படும் நோக்கத்தில், இங்குள்ள அரசியல் கட்சிகளிடையே பூசல்களையும் போராட்டங்களையும் தூண்டி விட்டுத் தமிழகத்தின் அரசியல் கட்டுக் கோப்பைச் சீர்குலைக்கவும், தேர்தலைப் படிப்படியாகத் தள்ளிப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

போடவும், குடியரசுத் தலைவர் ஆட்சியைத் தொடர்ந்து நீடிக்கவும் உறுதி செய்து கொண்டு, செயல்படுகிறது இராசீவ் அரசு!

தங்களுக்குச் சார்பான நிலை தோன்றும் வரை, அதாவது இந்திரா கட்சிக்கு ஆட்சித் தலைமை கிடைக்கும் வரை நிலைகளைத் தளர விடாமல், இதுதான் சரியான நேரமென்று கருதித் தமிழ் நாட்டில் தொடர்ந்து குழப்பங்களை உருவாக்கிக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார் இராசீவ்.

அவருக்கு அ. தி. மு. க. வோ, வேறு கட்சிகளோ முகாமை அல்ல. அ. தி. மு க.வில் அமைதி ஏற்பட வில்லையானால், அடுத்து தி. மு க. தான் ஆட்சிக்கு வரும் என்று கணித்து, தமிழ் நாட்டில் மீண்டும் திராவிட இனத்தை ஆட்சிக் கட்டில் ஏற விடாமல், மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுகிறார் இராசீவ். தமிழகம் அமைதியுறுவதோ, தமிழக மக்கள் நலமுடன் வாழ்வதோ அவருக்கு நோக்கமாகத் தெரியவில்லை. தமிழினத்தை இந்தக் கால கட்டத்திலேயே மீண்டும் தலையெடுக்காமல் செய்து விட வேண்டும் என்பதே அவரின் தலையாய நோக்கமாகத் தெரிகிறது.

இதற்கெனத் தமது கைக்கூலியாகத் செயல்படும் செயலலிதா அணியைத் தூண்டி விட்டு, மக்களிடம் அரசியல் குழப்பங்களையும் ஆட்சி வெறுப்புத்தனங் களையும் ஏற்படுத்த முயல்கிறார் தலைமை அமைச்சர் இராசீவ். தமிழினத்தைப் பொறுத்தமட்டில் இந்திராவை விட நூறு பங்குக் கொடியவர் இவர். தமிழினத்தை மேலேறவே விடக்கூடாது என்னும் தமது கரவான திட்டத்தை இக் கடுமையான நேரத்தில் செயல்படுத்தவும், நிலைப்படுத்தவும் பார்க்கிறார்.



தமிழகத்தின் இத்தகைய அரசியல் சூறாவளி தனங்களுக்கிடையில், தமிழீழ விடுதலைப் போராட் டத்தைப் பூண்டோடு அழித்தொழிக்கவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தேடிப் பிடித்துக் கொலை செய்யவும், அங்குள்ள இந்தியப் படைகளைத் தூண்டி விட்டிருக்கிறார்.

இந்நிலையில், இங்குள்ள அ. தி. மு. க.வினர் தங்களு பூசல்களையும், போராட்டங்களையும் மிகுத்துக் கொண்டு, ஓர் அணியை ஓர் அணி ஒழிக்கவும் அழிக்கவும், அரசியல் சட்ட நிலைகளில் சிக்க வைக்கவும், இராசீவுக்குக் காவு கொடுக்கவும் முற்பட்டு முவ்வுரமாகச் செயல்பட்டு வருகின்றனர். நாள்தோறும் ஒருவருக்கொருவர் ஏசிப் பேசுவதும், குற்றஞ்சாட்டிக் கொள்வதும், தாங்கள் முன்பு ம. கோ. இரா. காலத்தில் மறைமுகமாகச் செய்து வந்த சட்ட மீறல்களையும், வஞ்சகத் தனங்களையும், கரவுச் செயல்களையும், கையூட்டுகளையும், குமுகாய குற்றங்களையும் ஒருவர் மேல் ஒருவர் வெளிப்படுத்திக் கொள்வதும், சொல்லளவில் சேற்றையும் குப்பை களையும் வாரி வீசிக் கொள்வதும் காணவும் கேட்கவும் பொறுக்க முடியவில்லை. இவற்றுக்காகத் தமிழினத்தில் பிறந்ததற்கும், தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்ப தற்கும், வெட்கமும் துயரமும் பட்டுத் தலை குனியவும் வேண்டியிருக்கிறது!

இப்பொழுதுள்ள அரசியல் இழிவில், அன்புக்கோ, பண்புக்கோ, அறத்துக்கோ, அறிவுக்கோ இங்கு வேலை யில்லை என்பதால், பொதுநலம் கருதும் தூய தொண்டுள்ளம் கொண்ட நம் போன்ற அனைவரும் அடங்கி ஒடுங்கி வாயடைத்துக் கிடக்க வேண்டியுள்ளது.

கடந்தகால வரலாற்றில் தமிழினம் எத்தனையோ இருண்ட கால வரலாறுகளைச் சந்தித்திருக்கிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

எனினும் இப்படிப்பட்டதோர் இழி நிலையை இப்பொழுதுதான், இந்தப் புண்மனச் செம்மல் ம. கோ. இரா. காலத்தில்தான் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இது வரலாற்றில் மிக மிக வெட்கக்கேடான காலம். தங்களைக் கடந்த காலங்களில் வெண்ணெய் வெட்டி வீரர்கள் என்றும் மறவர்களென்றும் வீம்புக்காகப் பேசிய வீரர்கள் இன்று கயமைக் களத்தில் மலத்லை வாயிலிட்டு அதக்கித் துப்பும் சொற்சிலம்பமும், தாங்கள் காசுக்கு விலைபோய் அரசியல் கற்பைப் பறிகொடுத்த இழிநிலை மல்லாட்டங்களும், அரம்பக் களரிகளும் ஆடிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வீர சூர வெட்டித் தனங்களைப். பார்த்துத் தமிழர்களின் பண்பாட்டு விளக்கமாகிய திருக்குறளின் அறிவுரைகளும், கழக இலக்கிய வீர வரலாறுகளும், சிவனிய, மாரியச் சமய மெய்ப்பொருள் சான்ற தேவாரத் திருவாசகத் திருப்பாவை நல்லிசைப் பாக்களும் நாணி நடு நடுங்கிக் கோணிக் குறுகிப் போய் விட்டன போல் நமக்குப் படுகிறது.

எப்படியும் ஒட்டு மொத்தத்தில் தமிழின வரலாறும் தமிழின வீறும் மிகமிகக் கீழ்மையுற்று நெடுஞ் சாண் கிடையாகச் சரிந்து சாய்ந்து கிடக்கின்றன. இதுதான் நல்ல சமயமென்று கருதும் இராசீவுகளும், அவர்களுக்குத் துணைபோகும் மூப்பன்களும், சிதம்பரங்களும், பழனியாண்டிகளும் ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட உள்வேர்த்துக் காலம் பார்த்துக் கிடக்கின்றனர். இவ்வனைத்து நிலைகளுக்குமான ஒரே தீர்வு தமிழக விடுதலையை நாம் முன்னெடுத்துப் போவதே! இதை உண்மையான தமிழின நலம் கருதும் தமிழகத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளுவார்களா? அவர்கள் அவ்வாறு உணரத் தவறினால் இளைஞர்கள் இதைக் கையெடுத்துக் கொள்வார்களா? எப்படியோ இளைஞர்களின் கையில்தான் எதிர்காலத் தமிழகம் இருக்கிறது!

*தமிழ் நிலம்: இதழ் எண்: 100 (20-2-88)*

# 11. தமிழீழப் போராளிகள் சண்டை நிறுத்தக் கோரிக்கை பயன்தராது!

**❋ கருத்து வேறுபாடுகள் உள்ளகுழுக்கள் என்றுமே தாங்களாகச் சண்டையை நிறுத்திக்கொள்வதற்கு வாய்ப்பே இல்லை!**

- ❋ பேச்சுரை, பேச்சுரை என்றே அரசு நெடுங்காலம் கடத்திவிட்டது!
- ❋ தமிழீழம் ஒன்றே நோக்கம்!
- ❋ ஆக்கமான முறையில் இந்திய, மாநில அரசுகள் முடிவெடுப்பதே தீர்வுக்கு வழி வகுக்கும்!

தமிழீழச் சிக்கல் தொடர்பாகக் கடந்த மாதம் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல் கருத்தாளர் பாலசிங்கம் முதலியோர்களிடமும், அங்குள்ள பிற போராளிக் குழுக்களுடனும், தமிழீழச் சிக்கலில் ஈடுபாடுடைய பிற அறிஞர்கள் சிலருடனும், பேச்சுரை நடத்தியுள்ளார். ஆனால் ‘ஊரே கூடித் தள்ளினாலும் ஓரடியும் நகராத தேர்’ போலத் தமிழீழச் சிக்கல் இருந்தபடியேதான் இருக்கிறதென்றே நாம் மதிப்பிட வேண்டும்.

பேச்சுரை பேச்சுரை என்று திம்புப் பேச்சுகளிலிருந்து இதுவரை பத்துப் பன்னிரண்டு பேச்சுரைகள் விடுதலைப் போராளிகளுடன் இந்திய அரசும் பிற தலைவர்களும் தூதர்களும் நடத்தி விட்டனர். இதனால் நெடுங்காலம் சென்றதுதான் மிச்சம். ஆனால் இ ன் ன மு ம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஆள் மாறிப் பேச்சு நடத்திக்கொண்டிருப்பது, இச் சிக்கல் மேலும்மேலும் பல துணைச்சிக்கலை விரித்துக்கொண்டே போவதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, சிக்கலும் தீர்ந்தபாடில்லை; சிணுக்கும் அறுந்தபாடில்லை.

இராசீவைப் பொறுத்தவரை அவரிடம் ஒரு கருத்து தெளிவாக இருந்தது அனைவருக்குமே தெரியும். அதுதான் தமிழர்களுக்கென்று தமிழீழத்திலோ, தமிழகத்திலோ அல்லது வேறு எங்கோ ஒரு தனி நாடு அமைந்து விடக் கூடாது என்பது. ஆனால், அக் கொள்கையை அவர் தெளிவாகக் கூற முடியாமல் மறைமுகமாக, இந்திய அமைதிப்படை என்ற பெயரால், ஈழத்தில் தமிழர்களைச் குறிப்பாகப் போராளிகளை, இன்னும் குறிப்பாக தமிழீழக் கோரிக்கையில் மிகவும் உறுதியாகவும் இறுதி யாகவும் வலிந்து நிற்கும் விடுதலைப் புலிகளை அழித் தொழித்துத், தமிழீழக் கோரிக்கையின் வலிவைக் குறைக்கவே இறுதிவரை வேலை செய்தார்.

அந்தக் காலக்கட்டத்திலெல்லாம் தமிழக முதல்வர் அவரின் கரவான நடவடிக்கைகளைப் பற்றியோ, தமிழ் மக்கள் அழிந்து படுவதைப் பற்றியோ, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தம் கருத்தைப் பளிச்சென்று மக்கள் முன்னோ இராசீவின் முன்னோ வைக்காமல் மழுப்ப லாகவே, அரசியல் தந்திரத்துடன், வழ வழா, கொழ கொழா என்றே, மிக மிக மேலோட்டமாகக் கருத்தறி வித்து வந்தார். அது, அன்றைய சூழ்நிலையில் வலிவற்ற அவரின் அரசியல் பின்னணிக்கு உகந்ததாகவே இருந்த தென்று, அவரும் அவரைச் சார்ந்தவர்களும் கூறிக் கொண்டனர்.

ஆனால், அதிகாரம் கைக்கு வந்து, நடுவணரசிலும் தமக்கு ஒரு வாய்ப்பான, ஆதரவான சூழ்நிலை அமைந்த வுடன், 'கொண்ணை ஊ கொழுக்கட்டை கிடைத்ததைப் போல'. கைகளில் தேசிய



முன்னணி அரசின் தலைவர் வி. பி. சிங், இச் சிக்கலை ஒப்படைத்தார். தமக்குக் கிடைத்த அதிகார ஏற்றத்தால், கலைஞர் இப்பொழுது, தமிழீழப் போராளிக் குழுக் களிடம் பேசிவிட்டு, ஞாயம் பேசுகின்ற வகையில், **'உடன் பிறப்புப் போரை நிறுத்துங்கள்'** என்று பேசுகிறார். திருச்சி மாநாட்டில் தீர்மானமும் போட்டிருக்கிறார்! (அவர் திருவாயால் கூறிய உரை' "சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள்" என்பது—சகோதர யுத்தம் என்று சமற் கிருதத்தில் கூறினால்தான் அவர் குரலின் 'ஒலி' கணீரென்று ஒலிக்கும் என்பது அவர் கருத்துப் போலும்! இனி, அவர் இதே முறையில் அவைத் தலைவரைச் 'சபாநாயகர்' என்றும், தலைவரை 'அக்கிராசனர்' என்றும் ஒலிக்கலாமே! அதிகாரம் தலைக்கு ஏற ஏற அடிப்படைக் கொள்கைகள் அவருக்கு மறந்து விடும் போலும்!)

நம்மைப் பொறுத்தவரை, ஓர் இனப் போராட்டத் திற்கு இத்தகைய நரித்தந்திர ஞாய முடிவுகள் பொருந்தா. தமிழீழத்தில் நடைபெறுவது பங்காளிகள் சண்டை யில்லை. இனப்போர்! தமிழீழ விடுதலைப் போர்! அதை 'ஞாயம்' பேசியோ, ஒப்புரவு பேசியோ, முனை மழுக்கி முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; அதன் வழி தமக்கு ஒரு 'நல்ல' பெயர் கிடைக்க வேண்டும்—என்னும் கருத்தெல்லாம், கலைஞரின் அரசியல் போக்கிற்கு உகந்ததாக இருக்கலாம்; பெருமையாகவும் இருக்கலாம். ஆனால் தமிழினத்துக்கு அது நல்லதன்று! தமிழீழச் சிக்கலுக்கும் அது தீர்வன்று!

தமிழீழப் புலிகளின் தீர்வே தமிழினத்திற்கு ஏற்ற நல்ல தீர்வு பிரபாகரன் எடுக்கும் முடிவுதான் தமிழீழத்திற்கு மட்டுமன்று, தமிழினத்துக்கே உகந்தது. தமிழர்களுக் கென்று ஒரு தனி நாடு அமைந்தே ஆக வேண்டும் என்பது

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தான் முடிவான கொள்கை! அதில் இம்மி குறைந்தாலும் அது தூய நெய்யில் எண்ணெயைக் கலப்பதைப் போலச் சிறப்புக் குன்றிப் போகும்! தயிரில் தண்ணீர் கலப்பதைப் போல நீர்த்துப் போகும்! கன்னெய்யில் மண்ணெய் கலப்பதைப் போல ஆற்றல் குன்றிப் போகும் பிரபாகரனும், பத்மநாபாவும், வரதராசப்பெருமாளும் பிற போராட்டக் குழுத் தலைவர்களும் ஒரே தரத்தினர் அல்லர். பிரபாகரன் மாவீரன்! பிற குழுக்களின் தலைவர்கள் வீரர்களாக இருக்கலாம்! இப்பொழுதுள்ள நிலையில் தமிழினத்தின் அடிமைத்தனத்தை மீட்டெடுத் துத் தமிழர்களுக்கென்று ஒரு தனி நாட்டை உருவாக்க, பிரபாகரனைப் போன்ற மாவீரனே தேவை. மற்றபடி மற்ற குழுக்களின் தலைவர்களைப் போன்ற வீரர்களோ, தலைஞரைப் போன்ற அரசியல் தலைவர்களோ அல்லர். நாம் எதிர்பார்க்க வேண்டுவது வெறும் அரசியல் உரிமைகள் மட்டுமல்ல; ஆளுகின்ற உரிமையே ஆகும்!

கருத்து வேறுபாடுகள் உள்ள குழுக்கள் என்றுமே தாங்களாகவே சண்டையை நிறுத்திக் கொள்ள வாய்ப்பே இல்லை. இப்பொழுதைய நிலையில் ஒன்றுபடுவதற்கும் கூட வாய்ப்புகள் குறைவே! காரணம் போராளிக் குழுக்களின் ஒவ்வொரு தலைவரும் தாமே தமிழீழ விடிவுக்குக் காரணமானவராக இருக்கவேண்டும் என் றெண்ணும் பேராசைதான்! இங்கு தி. மு. க., அ.தி.மு.க. வுடன் ஒன்று சேருமா? அது முடியாது என்பதற்கு என்ன ஞாயமோ, அந்த ஞாயம்தான் அவர்களுக்கும்.

வரலாற்றை யாரும் உருவாக்க முடியாது. வரலாறு தான் ஒரு மாவீரனை உருவாக்க வேண்டும்! பிரபாகரன் உண்மையிலேயே வரலாற்றால் உருவாக்கப் பெற்ற தலைவன்! அவனை அரசியல் குப்பை மேட்டுக்கு யாரும்



இழுத்து வந்துவிட முடியாது! போர்க்களந்தான் அவன் பிறப்பிடம்! போர்க்களந்தான் அவன் இறப்பிடமாகவும் இருக்க முடியும்!

தமிழீழத்தில் போராளிகள் ஒன்றுபட வேண்டும் என்றால், பிற போராளிக் குழுக்கள் அனைத்தும் தங்கள் தங்கள் தன்மானம், அளவிறந்து தங்களை மதித்துக் கொள்ளும் தன்மை, இவற்றை அடியோடு விட்டு விட்டுப் பிரபாகரனிடம் கைக்கோத்துக் கொள்வதே வழி! மொத்தத்தில் தமிழீழ விடுதலைதான் பெரியது! அதை நோக்கித்தான அனைத்து முயற்சிகளும், குறிப்பாக இந்திய, தமிழக அரசுகளும் கூட அவ்வாக்கமான முடிவுடன் இணைந்து—நடைபோடுவதே சரியானதாகவும் முறையானதாகவும் இருக்கும்!

பிழைத்தால் அனைவரும் ஒட்டு மொத்தமாக பிழைப்போம்! அழிந்தாலும் ஒட்டுமொத்தமாக அனை வரும் அழிவோம்! இந்தக் கோட்பாட்டிற்குப் பிரபாகரனே கீழிறங்கினாலும் அவன் மாவீரம் மழுக்கல் உடையது ஆன் என்பதை வரலாறுதீர்மானிக்கும் என்பதே நமது கருத்து!

— தமிழ் நிலம் : இதழ் எண் : 134 (15-2-90)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 12. ஆயிரம் அரசியல்காரர்களை உருவாக்கலாம்; ஒரு விடுதலை வீரனை உருவாக்குவது கடினம்!

❋ **பிரபாகரனை வைத்துத்தான் தமிழினம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்! பொறாமைப்படும் போராளிகள் உண்மையை உணர்வது நல்லது!**

❋ **அறத்திற்கே மதிப்பில்லாதபொழுது அறவழி எப்படி வெற்றி தரும்?**

❋ **மண்டேலாவையும் யாசர் அராபத்தையும் ஏற்றுக் கொள்ளும் இந்தியா, பிரபாகரனை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை?**

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைப் பொறுத்தவரை நாம் சொல்ல வேண்டியதை முழுவதும் வெளிப்படையாகச் சொல்ல முடியாத ஓர் அற இக்கட்டு (தர்மசங்கடம்) நமக்கு உண்டு. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அவர்க்கு நம் மேல் எப்பொழுதுமே நல்ல எண்ணம் இருந்தது இல்லை. பல நிலைகளில் அவர் எதிர்பார்த்தபடி அல்லது விரும்பியபடி-நாம் நடந்து கொள்ளவில்லை என்ற மனக்குறை நம் மேல்



அவருக்கு உண்டு. அதை அவர், நாம் அவரை மதிக்காத தன்மையாக மதிப்பிட்டுக் கொள்கிறார் போலும். எனவே நாமும் நம்மைப் போல் தமிழின நலத்திற்காகவே பொதுமை வாழ்விற்கு வந்த ஓரிரண்டு அறிஞர்களும் கூறுகின்ற நடுநிலையான கருத்துகளை என்றுமே அவர் போற்றிக் கொண்டதும் இல்லை; கொள்வதும் இல்லை.

இனி, இரண்டாவதாக, பொதுநிலையில் உரைத்துப் பார்க்கவேண்டிய எதையும் அரசியலாக்கியே பார்க்கின்ற வேட்கையும் விருப்பமும் கலைஞருக்கு இயல்பானது. தமிழ், தமிழின நலக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய செய்திகளைக் கூட, அவர் அரசியல் கண்ணோட்டத்திலேயே பார்த்து முடிவு செய்கிறார்.

அரசியல் என்பது எப்பொழுதும் நிகழ்காலச் சிக்கலையே தீர்த்து வைக்க உதவும் ஓர் உத்தி என்பதை அவர் உணர்ந்து கொள்வது நல்லது. எதிர்காலத்திற்குரிய விளைவுகளை அது தொடங்கி வைக்கலாம்; ஆனால், தீர்த்து வைக்க முடியாது. எனவேதான் உடனடிப் பயன் பெற நினைப்பவர்கள் யாவரும் அரசியலிலேயே நுழைய விரும்புகிறார்கள்.

பிரபாகரன் வெறும் அரசியல் நோக்குடையவன் அல்லன்; அரசியல் அவனுக்குத் தெரியாது. வீரத்தின் தொகுப்பு அவன். எனவே, விடுதலை வீரனாக வளர்ந்து நிற்கிறான். விடுதலை வீரனுக்கு அரசியல் தந்திரம் தெரியாது. போர்த்தந்திரம் வேறு; அரசியல் தந்திரம்



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வீரனுக்குத் தன் கொள்கை நோக்கம் (இலட்சியம்) தான் பெரிது. அரசியல்காரர்க்குக் கொள்கை நோக்கம் பெரிதில்லை. தேவையுமில்லை.

ஆயிரம் அரசியல்காரர்களை நாம் உருவாக்கலாம்; ஒரு விடுதலை வீரனை நாம் வளர்த்து உருவாக்குவது கடினம். பிரபாகரனையும், உமாமகேசுவரன் என்னும் முகுந்தனையும் நாமே நேரில் பார்த்துப் பழகி அறிந்து கொண்ட உண்மைகள் இவை. முகுந்தனுக்கு வீரத்தனம் இருந்த அதே அளவுக்கு அரசியல் உணர்வும் இருந்ததைப் பின்னர்தாம் நாம் உணரமுடிந்தது.

ஓரிரண்டு ஆண்டுக்குப் பின்னரே பிரபாகரனின் வீரம் நமக்குப் புலப்பட்டது. தமிழின வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் மலை போல் நிற்பவன் பிரபாகரனே! அவன் வீரத்திற்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை. அவன் அறிவையும்,பண்பையும் விட அவன் வீரமும், உறுதியும், தமிழினத்தின் மேல் கொண்ட பற்றும் நாம் பெரிதும் மதிக்கத் தகுந்தவை. எனவே, யாரும் அவனை முனை மழுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம்! காளைக்குக் கொம்பு சீவுவது போல், அவனை அனைவரும் ஊக்கப்படுத்த வேண்டும். அந்தப் புலி வீரனை யாரும் அரசியல் கூண்டுக்குள் அடைத்து வைக்க விரும்புவது நம் அருந்தமிழின நலத்திற்கு நல்லதில்லை. அவனை வைத்துத்தான் தமிழினம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும்! அவனைப்



பார்த்துப் பொறாமையால் புழுங்கும் வரதராசப் பெருமாள்கள் போலும் அரசியல்காரர்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்வது நல்லது.

இந்தியப் படையுடன் குடித்துவிட்டுக் கும்மாளம் போட்டு, அறிவற்ற உணர்வில் உளறிக் கொட்டிக் கிளறி மூடுகின்ற வரதராசப் பெருமாளர்களும், ஈ.பி.ஆர்.எல்.எப், டெலோ, ஈ.என்.டி.எல்.எப், பிளாட் போலும் விடுதலைப் போராளிப் படை வீரர்களை விட ஆயிரம் மடங்கு உயர்ந்தவன் பிரபாகரன் என்பதை, 1976-இல் நாம் ஈழம் சென்று வந்ததிலிருந்து, இன்றுவரை, மிக ஆழமாகவும் அகலமாகவும் தமிழீழ விடுதலையுணர்வுகளையும் போக்குகளையும் மட்டுமன்று, தமிழினத்தின் ஒட்டு மொத்த படிநிலை வளர்ச்சி வரலாறுகளையும் அலசி ஆராய்ந்த பின்னரே சொல்கிறோம்.

எனவே, தமிழீழப் போராளிக் குழுக்களுக்கும் சரி, இங்கு அவர்களிடையே ஓர் ஒப்புரவையும் அமைவான ஓர் உடன்பாட்டையும் ஏற்படுத்த முயன்று வரும் தலைவர்களுக்கும் சரி, குறிப்பாகத் தமிழக முதல்வர் கலைஞருக்கும் சரி, பிரபாகரன் வீரத்தைக் குறைத்து மதிப்பிட்டோ அவன்மேல் குற்றஞ்சாட்டியோ எந்த முடிவுக்கும் யாரும் வந்துவிட வேண்டாம்.

பிரபாகரனின் செயல்பாடுகளில் எந்தக் குறைபாடு இருந்தாலும், அவற்றைப் பெரிதுபடுத்தவே கூடாது. சில நேரங்களில், தமிழினத்தில் சில பேரை, சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக அழிக்கின்றதாகக் கூறப் பெறும் முயற்சிகளையும் சேர்த்தே நாம் கூறுகிறோம். பூனைகளும், ஆட்டுக்குட்டிகளும் வேண்டுமானால் செடி கொடிகளுக்குச் சேதம் விளைவிக்காமல், புதரிடுக்குகளுளிம், மரம் மட்டைகளிலும் வளைந்து நெளிந்து

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

குனிந்து, குறுகிக்கொண்டு செல்லலாம். வீரம் பொதுளிய ஒரு களிற்று யானை அவ்வாறு செல்ல முடியாது. அதுபோகின்ற போக்கில், அதன் காலடிகளில் சிக்கிச் சிதையும் புல், பூண்டுகளும், முட்புதர்களும் இருக்கவே செய்யும். விடுதலை வேழங்களின் கள நடைகளின் வரலாறுகளில் எல்லாம் இது பொது நிகழ்ச்சி.

ஆகையால், எந்த முயற்சியானாலும் பிரபாகரனை முன் வைத்தே அனைத்து முடிவுகளும் இருத்தல் வேண்டும் என்பதைக் கலைஞர் உட்பட அனைவர்க்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். எவரும் தம்மை, தம் நிலையை, தம் பதவி நலன்களை மட்டும் முன் வைத்து முடிவெடுக்கக் கூடாது. இனி, இன்னுஞ் சொன்னால், பாலசிங்கங்களின் முடிவு கூட பிரபாகரனின் முடிவாக இருந்துவிடக்கூடாது என்று பிரபாகரனுக்கும் கூட கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இறுதியாக, இந்நிலையில் இன்னொன்றையும் கூட தலைவன் பிரபாகரனுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். விடுதலை வீரன், பேச்சுகளால் தன்னிறைவு பெறக்கூடாது. பேச்சுகள் விடுதலையை உருவாக்கிய தாக வரலாறில்லை. எனவே, பேச்சுரைக்கு இனி அவர் விரலும் நீட்ட வேண்டுவதில்லை.

—தமிழ் நிலம் : இதழ் எண் : 135 (28-2-90)

# 13. இந்தியாவும் இலங்கையும்!

எப்பொழுமே ஆளும் இனத்தினர், ஆளப்படும் இனங்களை, அடக்கி ஒடுக்கவும், உரிமைகள் கேட்பதைத் தடுக்கவும் ஒரே வகையான நடைமுறைகளையே கையாளு கின்றனர்.

அவற்றுள் தேசியம், ஒருமைப்பாடு நாட்டு நலன் என்பனவாகக் காரணங்கள் காட்டப்படும் உத்தி ஒன்று. அடுத்து, தனக்குச் சார்பான வல்லாண்மை நாடுகளை ஒன்றிணைத்துக் கொள்ளும் உத்தி இரண்டு. இன்னும், நாட்டு முன்னேற்றங்கள், வளர்ச்சித் திட்டங்கள் இவற்றை அடிப்படையான காரணங்களாகக் காட்டி, மக்கள் மொழி, இன, சமய, சாதி வேறுபாடுகளைத் தவிர்த்துக் கொண்டு ஒன்றுபட வேண்டும் என்னும் பலவேறான கூற்றுகள், நடைமுறைக் கோட்பாடுகளை நயன்மையாக (நியாயமாக) மக்கள் கருதும்படி கூறி, உரிமை யெழுச்சி களை அடக்குவது போலும் உத்திகளும் உண்டு.

இக்கால் நடந்துவரும், இந்திய, இலங்கை இன நலப் போராட்டங்களையும், இந் நாடுகளின் ஆளும் இனத் தினர், மேற்காட்டிய காரணங்களைக் காட்டியே அடக்க வும் ஒடுக்கவும், முடிந்தால் அழிக்கவும் ஒழிக்கவுமே பார்க்கின்றனர்.

இந்தியாவில் நாகாலாந்து, மிசோரம், அசாம் பஞ்சாப், ஒரிசா ஆகிய மாநிலங்களிலும் வேறுசில வாழ் வினங்களுக்கிடையிலும் இனநல மீட்சிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்திலும், பிற தென் மாநிலங்கள் ஒன்றிரண்டிலும் கூட இப் போராட்டங்கள்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கனன்று இன்றோ நாளையோ வெடிக்கும் என்னும் நிலையில் இருந்து வருகின்றன.

இலங்கையில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் உள்ள இனப்போராட்ட எழுச்சிகள் கடந்த முப்பதாண்டுக் காலமாகவே நடைபெற்று வருகின்றன. இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெறும் இப் போராட்டங்கள் ஒரே வகையாகவே அடக்கியொடுக்கப்படுவதை அவற்றைக் கூர்ந்து நோக்குபவர்கள் நன்கு உணர்வார்கள்.

முன்பொருமுறை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் இலலித் அதுலத் முதலி தன் நாட்டின் அரசியல் கருப்புச் சட்டங்களுக்கு நயன்மை கற்பித்துப் பேசுகையில், 'நாங்கள் கொண்டு வந்துள்ள சட்டங்கள் கொடுமையானவை என்று கூறப்படுகின்றன. ஆனால், இவை கடந்த 1976-இல் இந்தியாவில் நெருக்கடி நிலைக் காலத்தில் இந்திராகாந்தியால் கொண்டுவரப்பட்ட சட்டங்களைப் போன்றவையே' என்று கூறியதைப் பலர் கவனித்திருக்கலாம். அவர் கூறியதில் உண்மை இல்லாமல் இல்லை.

இப்பொழுது, அண்மையில் கூட இலங்கைத் தலைவர் செயவர்த்தனே, இலங்கையின் தேசியத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பதற்காக வன்முறையாளர்களை ஒடுக்கியாக வேண்டிய கட்டாயம் இருக்கிறதாகக் கூறியுள்ளார். இக் குரல் இந்திராகாந்தியுடையது என்று நமக்கு எல்லாருக்கும் நன்கு தெரியும்.

இதில் இன்னோர் உண்மையையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்திராகாந்திக்கு எல்லா வகை ஆளுமை நிலைக்கும் உருசியா பின்வலிவாக உள்ளதைப் போலவே, செயவர்த்தனேவுக்கும் அமெரிக்கா பின்வலிவாக உள்ளதை நாம் அறிய வேண்டும்!



அண்மையில் ஆகத்து 15 விடுதலைநாள் உருசியாவில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பொதுவாக உருசியாவில் உள்ள இந்தியத் தூதுவ அதிகாரிகளுடன் உருசிய உள்துறை, வெளிநாட்டு அரசியல் துறை அதிகாரிகள் மட்டுமே கலந்துகொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு விழாவில் உருசிய முதல் துணைத் தலைமை அமைச்சர் அவர்களும், வெளிப்புற உறவு அமைச்சர், தொழிலமைச்சர்களுடன் பங்கு கொண்டுள்ளனர் என்பது உற்று நோக்கத்தக்கது. இனி, இதைவிட, அவர் பேசியது மிகவும் கவனிக்கத்தக்கது. அவர் பேச்சில் இந்தியாவில் நடைபெறும் உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவதற்குத் தலைமையமைச்சர் இந்திராகாந்தியின் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையான ஆதரவு தெரிவிக்கப் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையான நிலை விளக்கம் என்ன? செயவர்த்தனேவுக்கு அங்குள்ள தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க, அமெரிக்கா எந்த அளவு துணை போகிறதோ, அந்த அளவுக்கு,இங்குள்ள அசாம், பஞ்சாப் இன்னும் தமிழகத்தின் உரிமையெழுச்சிகள் உருசியப் பின் பலத்துடன் அடக்கி அழிக்கப்படும் என்பதே!

பஞ்சாபில், அமிர்தசரசு பொற்கோவிலில் இருந்த அகாலி தள வீரர்களுடன் பாக்கித்தானிய வீரர்களும் இருந்ததாகக் கூறப்படும் அதே வேளையில், இந்தியப் படை வீரர்களுடன் உருசியப் படையைச் சேர்ந்த அதிகாரிகளும் சிலர் இருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

எனவே, உரிமையெழுச்சியை அடக்கவும் ஒடுக்கவும் ஆன முயற்சியில் இலங்கையும் இந்தியாவும் ஒரேவகையான முறைகளைத்தான் கடைப்பிடிக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இரண்டு திருடர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கள் எப்பொழுதுமே ஒருவர்க்கு ஒருவர் மாறாகச் செயல் பட முடியாது. ஆகவே, இந்த வகையில், இந்திராகாந்தி யும், செயவர்த்தனேவும் வேறுவேறானவர்கள் அல்லர். அதேபோல் இருவர்க்கும் பொது எதிரியாக இருக்கும் இனமும் தமிழினமே! இந்நிலையில் தமிழினம் இருவரிட மிருந்தும் அன்பையோ ஆதரவையோ இரக்கத்தையோ, அல்லது இணக்கமான முறையில் அரசியல் தீர்வையோ எதிர்பார்ப்பது அறியாமையிலும் அறியாமையே!

அமெரிக்கா என்றால் அமெரிக்காவுக்குச் சார்பான அத்தனை நாடுகளும், (பாகித்தான் இசரேல் முதலிய நாடு கள்) செயவர்த்தனேவுக்கு துணை போவது இயல்பே! அதுபோல் உருசியா என்றால், இந்திராவுக்குப் பொது வுடைமைநாடுகள், பொதுவுடைமைக் (வலது, இடது) கட்சிகள், தலைவர்கள் துணை போவது இயல்பே!

இதில் விழிப்பாயிருக்க வேண்டியவர்கள் தமிழர்களே அவர்கள் இங்கிருப்பவர்களாய் இருந்தாலும் சரி, இலங்கையில் உள்ளவர்களாய் இருந்தாலும் சரி 'எதிரி யின் எதிரி நண்பன்; நண்பனின் எதிரி,—எதிரி' என்னும் வகையில், இந்திராவுக்கும், செயவர்த்தனேவுக்கும் நண்பர் கள் யாராக இருந்தாலும் அவர்கள் தமிழர்களுக்கும், தமிழினத் தேசியப் போராட்டத்திற்கும் எதிரிகளே! இதைத்தமிழர்கள் முற்றாக உணர்ந்து கொண்டு தம் முன் னேற்றச் செயல் திட்டங்களை அமைப்பது இன்றியமை யாதது!

— தமிழ் நிலம் : இதழ் எண் : 43 (19-8-89)

# 14. இந்தத் தலைமுறையில் நடுவணரசிடமிருந்து விடுவித்துக் கொள்ளாவிடின் எப்பொழுதும் நாம் அடிமை தான்?

**நம் மொழி, பண்பாடு, கலைகள் எ[illegible] ஆரியப்படுத்தப் படுகின்றன?**

- **தமிழினத்தை மறைமுகமாக அழிக்கின்ற சூழ்ச்சியை[illegible] தமிழீழச் சிக்கலில் தில்லி அரசு கையாள்கிறது!**
- தமிழினப் பேராயக் கட்சியினர் உண்மையறிந்து இன உணர்வு பெறவேண்டும்!
- தமிழினத் தலைவர்கள், பிறரை முன்வைக்கக் கூடா தென்னும் சூழ்ச்சி தவிர்த்து, பல முயற்சிகளையும் ஒன்று படுத்த வேண்டும்!
- காலம் கருதாத நிலையில், வேறு எம் முயற்சியும் இப்பொழுது தேவையில்லை!
- **தமிழினமே ஒன்றுபட்டு இயங்குக!**

தமிழின விடிவிப்புக்கான காலம் கனிந்துள்ளது. ஆனால் வீணே கழிந்துகொண்டுள்ளது. நம் தேசிய இன விடுதலைக்குரல் வலிவாக இன்னும் தில்லிக்கு எட்ட வில்லை. தமிழீழ விடுதலைக்கே தில்லி செவிசாய்க்க வில்லை. செவிசாய்க்கும் என்னும் நம்பிக்கையும் இல்லை. இந்த நிலையில் தமிழக விடுதலைக் குரலை அவர்கள் திக்கப்போவதே இல்லை. இந்தியாவில், இன்றைய நிலை யில் அசாம், பஞ்சாப், மிசோரம், நாகாலாந்து, ஒரிசா

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

முதலிய பல மாநிலங்களில் தேசிய இன விடுதலைக்கான முயற்சிகளும் முத்தாய்ப்புகளும் தொடங்கிவிட்டன. இந்தியாவிலிருந்து தேசிய இன விடுதலை பெறுவதற்குரிய தகுதியும் தேவையும் பெற்ற முதல் மாநிலம் தமிழகமே !

ஆனால் இது கண்மூடி அடிமைப்பட்டுக் கிடப்பது பெரிதும் வருந்தத்தக்கது. அனைத்துலகும் ஒன்று என்னும் எண்ணம் வேறு. அனைத்துரிமைகளும் பெறவேண்டும் என்னும் கோரிக்கை வேறு ; முன்னது பொதுவானது; பின்னது சிறப்பானது ! மேலும் தில்லியரசு நமக்குள்ள உரிமைகளை என்றுமே முழுமையாக வழங்கப் போவதில்லை மாறாக, நம் இனத்தின் தனிச்சிறப்புக் கூறுகளையும் நலன்களையும் ஒன்றுமற்ற பிற காட்டு விலங்காண்டி இனங்களுடன் பங்கு போட்டுக் கொள்ளவே திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நூற்றை இழந்து ஒன்றைப் பெறுவதே நமக்குப் போதும் என்று கருதிவிடக் கூடாது. இந்திக்கு நூறு கோடி ! தமிழுக்கு ஒரு கோடி ! இந்தியை விடத் தமிழ் நூறு மடங்கு தாழ்ந்ததா ? மூடர்களையும் அடிமைகளையும் தவிர, அறிவுள்ளவர்களும், உணர்வுள்ளவர்களும் இதை எப்படி ஏற்க முடியும் ? எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழர் அனைவரும் ஒன்றிணைந்து ஓங்கிக் குரல் கொடுத்தால் தவிர, நமக்குள்ள எல்லாமே இன்னும் சில ஆண்டுகளில் பறிபோய்விடும். இந்தத் தலைமுறையில் நாம் நடுவணரசிடமிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளவில்லையானால், வேறு எப்பொழுதுமே எந்தச் சூழ்நிலையிலுமே நம்மை விடுவித்துக் கொள்ளமுடியாமற் போய்விடும். பின்னர் என்றென்றுமே நாம் அடிமைகளாகத்தான் கிடக்க வேண்டும்!

இன்றைய நிலையில் இந்தியத் தேசியம் என்னும் பெயராலும், ஒருமைப்பாடு என்னும் பெயராலும் நம்



மொழி, பண்பாடு, கலைகள் ஆகிய அனைத்துக் கூறுகளுமே ஆரியப்படுத்தப்படுகின்றன. நம் இலக்கியங்கள், வரலாறுகள் அனைத்தும் மூடி மறைக்கப்படுகின்றன. மற்ற இனங்களுக்கு அஃது ஊதியம் ; நமக்கு இழப்பு ! இந்த நிலைகள் தொடருமானால், பிற முன்னேறாத இனங்களுடன் நாமும் முன்னேறாத இனமாகவே கிடக்க வேண்டும். இது கொடுமை ! மிக மிகக் கொடுமை ! இஃது ஓர் இன அழிப்பு முயற்சியே!

இந்தியாவிலேயே மிகவும் பண்பட்ட, அறிவு வளர்ச்சியுற்ற, மிகச்சிறந்த முதிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழினம், வேறு காட்டு விலங்காண்டி இனங்களுடன் ஒன்றிணைந்து தன் தனிச்சிறப்பியல் கூறுகளை இழந்து கொண்டு, பின் தங்கிக் கிடக்கவேண்டும் என்னும் அறியாமைக்கும் அடிமைப்படுத்தத்திற்கும் நாம் இசைந்துவிடக் கூடாது. நமக்கென்று நம் நாட்டை நாம் பெற்றுத் தீர வேண்டும் என்பதைக் கட்டாயக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

தில்லிக்கு நேர் எதிர் முயற்சிகளைத் தமிழகமும் தமிழர்களுந்தாம் செய்ய முடியும். ஏனெனில் ஆரியத்துக்கு நேர் எதிரான கூறுகளைக் கொண்டது தமிழினமே ! எனவேதான் தமிழினத்தை ஒருமைப்பாடு என்னும் பெயரால் தில்லி ஒடுக்கப்பார்க்கிறது; ஒழிக்கப் பார்க்கிறது. இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு தமிழீழச் சிக்கலில் அது கையாளுகின்ற முறையே, தமிழினத்தை மறைமுகமாக அழிக்கின்ற சூழ்ச்சியையே, தமிழீழச் சிக்கலில் தில்லி அரசு கையாள்கிறது. இங்குத் தில்லிக்கு அடிமையாகிக் கிடக்கும் பேராயக் கட்சிகள் இந்த உண்மையை உணர்ந்து, தமிழின உணர்ச்சி பெற வேண்டும்.

இங்குள்ள முன்னணித் தலைவர்கள் பிற சிறிய இயக்க முயற்சியாளர்களை முன்வைக்கக் கூடாதென்னும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சூழ்ச்சியைக் கையாண்டு வருகின்றனர். அவர்கள் வேண்டுவதெல்லாம் பொருளும் புகழும் பதவிகளுமே! இவற்றோடு தமிழின முன்னேற்ற முயற்சியை ஒன்றாகக் கருதிவிடக் கூடாது. எனவே அவர்களின் தன் முனைப்புச் சூழ்ச்சிகளைத் தவிர்த்துக் கொண்டு, தமிழ்த்தேசிய இன விடுவிப்புக்கான முயற்சிகள் அனைத்தையும் ஒன்றுகூட்டி வலிவுபடுத்த வேண்டும். இதனைச் செய்வதற்கு அவர்கள் தவறுவார்களானால், அவர்களின் வரலாறு வெறும் குப்பை மேடுகளாகிவிடும் என்று எச்சரிக்கின்றோம்.

இப்பொழுதுதான், தமிழின விடுதலை முயற்சிகளை முன்வைப்பதற்கான காலம் கனிந்துள்ளது. எனவே காலங் கருதாத வேறு எந்த முயற்சியும் இப்பொழுது தேவையில்லை. இந்தியெதிர்ப்புகூட, தனி நிலையில் நமக்கு வெற்றியைத் தேடித்தராது. தமிழகம் தனி நாடாவதே இக்கால் நாம் எடுத்துச் செல்லும் முழு முயற்சியாகவும் முதல் முனைப்பாகவும் இருத்தல் வேண்டும். அதற்குத் தமிழினம் ஒன்றுபட்டாதல் வேண்டும். தமிழினமே ஒன்றுபட்டு இயங்குக!

—தமிழ் நிலம் : இதழ் எண் : 55 (14-4-85)

# 15. இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத குறையை மறைக்க, இராசீவ் நமீபியா விடுதலையை மேலே தூக்கிப் பிடித்துள்ளார்!

'தாய்க்குப் பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளது' என்பது ஒரு பழமொழி. இராசீவ் காந்தி, தாம் இந்திராகாந்தியின் மகன் தான் என்பதை, அவர் ஆட்சியேறிய ஒவ்வொரு நொடியும் மெய்ப்பித்துக் கொண்டுள்ளார். 'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும்' என்பார்கள்! அந்தத் தாயின் இந்தக்குட்டி இருபத்து நாலடி, அஃதாவது தாயைப்போல மூன்று மடங்கு பாயும் என், பதை, மிக அண்மைக் காலங்களிலேயே காட்டிவிட்டது.

தன்முனைப்புத் தன்மை, முதிய தலைவர்களை மதியாமை, அதற்கு மாறாக அவர்களைப் புறக்கணித்தல் விளம்பரத் தந்திரம், ஊதாரித்தனம், தன் பிள்ளை பட்டினி கிடக்க, ஊர் பிள்ளையை ஊட்டி வளர்க்கும் நய வஞ்சகக் கொடுமை, படைத்துறையைக் கொண்டு தீர்வு காண்பது முதலிய மக்கள் நல அரசியலுக்கு மாறான நடைமுறைகளில் உலகில் இந்திராவுக்கு நிகர் இந்திரா தான். அந்த முறைகளை அப்படியே மகன் கடைப் பிடிக்கவில்லையானாலும், அவற்றினின்று இன்னும் வளர்ச்சியுற்ற-வடிவம் மாற்றப்பட்ட-தன்மைகளிலேயே அவர் அரசியல், பொருளியல், மக்களியல் தீர்வுகளுக்கு விடை காண முற்பட்டுள்ளது மிகத் தெளிவாகத் தெரிய வந்துள்ளது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்திரா காலத்திலிருந்த அசாம், பஞ்சாப், ஒரிசா, மிசோரம், நாகாலாந்து கலவரங்கள் இன்னும் தீர்ந்த பாடில்லை. பற்றும் பற்றாததற்கு குசராத்தில் தோன்றியுள்ள இடஒதுக்கீட்டு எதிர்ப்புப் போராட்டம் வேறு புகை கிளப்பிக் கொண்டுள்ளது. இவற்றை ஏதோ புதுமுறையில் அணுகப் போவதாக முதலில் கூறிய இராசீவ், அதே படைத் துறையையும் குண்டு, குழாய்களையும் கொண்டு தான் அடக்கி வருகிறார். இந்த வகையில், தாய் பேசிய கொடுமையான சொற்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. செயலில் எந்த வகை மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை

ஆப்பிரிக்காவின் தென்மேற்கில் உள்ள நாடு நமீபியா. ஏறத்தாழ எழுபது ஆண்டுகளாக, அது, தென் ஆப்பிரிக்காவின் வெள்ளையர் அரசின் ஆளுமையில் சிக்கிச் சீரழிந்து கொண்டுள்ளது. நமீபியாவில் உள்ள மக்கள் தொகையில் ஒன்பது பங்கினர் கறுப்பர்கள் எனப்படும் நீக்ரோக்கள் ஒரு பங்கே வெள்ளைக் குடிமக்கள். மிக மிகச் சிறுபான்மை மக்களிடம், அங்குள்ள மிக மிகப் பெரும்பான்மை இன மக்கள் பல வேறு கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நிலைகளை எவரும் மறுக்கவோ மறைக்கவோ இல்லை.

ஆனால், இங்கிருந்து ஏறத்தாழ, 6,000 கற்கள் தொலைவிலுள்ள பெரும்பான்மை மக்களின் விடுதலைக்காக, இந்தியா அண்மையில் கூட்டுச்சேரா மாநாட்டில் தீர்மான நடவடிக்கைகள் மூலமாக எடுத்துள்ள முயற்சிகள், அந்நாட்டின் கொடுமையான தென்னாப்பிரிக்க வெள்ளை ஆட்சியை நடுங்க வைத்துள்ளன. இந்த நிலையில் தமிழீழப் போராட்டத்தைப் பற்றி ஏன் அது முழுக் கவனமோ அக்கறையோ கொள்ளவில்லை ?

பதினெட்டுக் கற்கள் தொலைவில், தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் தமிழீழத்தைப் பற்றிக் கவலைப்படாத



இராசீவ் காந்தி, மிக நீண்ட தொலைவில் உள்ள நமீபியா சிக்கலில் இவ்வளவு அக்கறை காட்டுவது, பக்கத்து வீடு தீப்பற்றி எரிகையில், பக்கத்து ஊர் மக்களுக்காகக் கவலைப்படுவதே ஆகும். ஒரு வேளை இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத குறையை, மறைப்பதற்காகவே, இராசீவ் நமீபியா விடுதலையை மேலே தூக்கிப் பிடித்துள்ளாரோ ? தமிழர்கள் என்றால் தில்லியரசுக்கு அவ்வளவு இளைக்காரமா ? எண்ணிப் பார்த்துத் தமிழர்கள் தக்க முயற்சியில் ஈடுபட வேண்டாமா ? எப்பொழுது, யார் என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி!

— **தமிழ் நிலம்:** இதழ் எண் : 56 (28-4-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 16. உத்திகள் வேறு; உறுப்பினர் வேறு; நாடகம் புதியது; முடிவு பழையது!

சூழ்நிலைகள் வேறாக இருந்தாலும், அரசியல்காரர்களுக்குச் சூழ்ச்சிகள் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கும். இரமேசு பண்டாரி, ஏதோ மலையைக் கிள்ளி எலியைப் பிடித்ததுபோல, இராசீவ்-செயவர்த்தனே சந்திப்புக்கு ஏற்பாடு செய்தாராம்! இலங்கைச் சிக்கல் குறித்து எதுவுமே பேசமாட்டேன் என்று செயவர்த்தனே ஏதோ கிடந்தது போலவும், இரமேசு பண்டாரி போனவுடன் ஏதோ இணங்கியது போலவும், குடும்ப இணையொடும், கூட்டுக் கொலையாளிகள் துணையொடும், ஏதோ திருமண விருந்துக்கு வருபவர்போல இந்தியா வந்தார், இக்கால இரண்டாம் இட்லர் செயவர்த்தனா. வந்தவுடன் வரவேற்புச் சடங்குகள்; வாழ்த்துகள்; விருந்துகள்; விருந்தைச் சுவைத்துக் கொண்டே பேச்சுகள்! இடையில் இலக்கக் கணக்கான குடிமக்களை இழந்து நிற்கும் வங்காள தேசம் சென்று இறப்புக்கு இரங்கல்கள்! முடிவில் பழைய பாட்டையே பாடும் பச்சையான ஏமாற்று அறிக்கை! திட்டமிட்ட அரசியல் நாடகத்தை நன்றாகவே நடித்தனர், இராசீவும் செயவர்த்தனேவும்! இடையில் கோமாளிக் குடியரசுத் தலைவரின் கோல ஆரவார விருந்தும் சிறப்புறவே நடந்தது!

இயற்கைப் புயலால் கொல்லப்பட்ட வங்காள தேச மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது அங்கே! ஆனால், அதே இலக்கக் கணக்கான ஒன்றுமறியாத் தமிழீழ



மக்களைச் செயற்கையாகக் கொன்றுகுவித்த கொடியவனிடம் ஏன் என்றுகூடக் கேட்கப் படவில்லை, இங்கே! அக்கொடியவனும், வருத்தம் தெரிவித்ததாத ஒரு வரிச் செய்தியும் வரவில்லை. வந்த கொலையாளிகள் முகத்திலும் வெற்றிக்களிப்பு! வரவேற்ற கொலையாளிகள் முகத்திலும் அதே வெற்றிக்களிப்பு! அங்கு, இலக்கக் கணக்கான தமிழீழ மக்களை, இளைஞர்களாகவும், கன்னிப் பெண்களாகவும், குழந்தைகளாகவும் பார்த்துக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் கொடியவர்களும், இங்கு அசாமிலும் பஞ்சாபிலும் குசராத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கும் கொலை வெறியர்களும், வங்காள தேசத்தில் இயற்கையால் அடித்துச் செல்லப்பட்ட உயிர்களுக்கு இரங்கலும் வருத்தமும் தெரிவிக்கிறார்கள்! நாடகத்தின் உத்திகள் புதியன! உறுப்பினர்கள் புதியவர்கள்! கதை புதியது! முடிவோ பழையது!

முடிவு, அறிக்கையாக வெளிவந்தது! ‘விரிவான மனந்திறந்த பேச்சு நடந்ததாம்! (நடந்திருக்கலாம்!) அனைத்து வகையான வன்முறைகளும் குறைந்து இல்லாமற் போக வேண்டுமாம்’. (ஆமாம். இப்படியே போனால் இறுதியில் ஒரு தமிழன் கூட இல்லாமல்தான் போய்விடுவான் போல் இருக்கிறது!) இறுதியில் இலங்கையில் பதட்ட நிலையைத் தணிக்கவும், (தணிக்கிறார்களாம்; வங்காளப் புயல் போல் இயற்கையாகவா கேடு வந்தது, தணிப்பதற்கு?) இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வு ஒன்று காணவும்... (... எத்தனை நாளைக்குத்தான் தேடித் தேடிக் காணப் போகிறார்களோ? வெட்கம் வெட்கம்!) ......உகந்த சூழ்நிலையை உருவாக்கவும்...... (இவர்கள் உருவாக்குவதற்குள்ளே தமிழினமே உருக்குலைந்து போகும்...) இந்தியாவும், இலங்கையும் ஒப்புக் கொண்டனவாம்! (எப்படி ஒப்புக் கொண்டன! அதில்தான் இருக்கிறது. தமிழீழத்தின் உயிர்த்துடிப்பே!) இனச்சிக்கலுக்குத் தீர்வு, இலங்கை

—த-24

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

யின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமாம்! (எப்படியிருக்கிறது, முடிவு?).

ஒற்றுமைக்காகவா செயவர்த்தனா இத்தனை ஆயிரம் தமிழர்களைக் கொன்றான்? ஒருமைப்பாடு என்றால், இலங்கையில் உள்ள குடிமக்கள் எல்லாருமே சிங்களவர் என்ற முறையிலா? ஒரே இனமாக இருக்கச் செய்வது தானே ஒருமைப்பாடு, இவர்கள் அகராதியில்! இராசீவும் இங்கு அதைத்தானே செய்து கொண்டிருக்கிறார்! எனவே இரண்டு நாட்டுத் தலைவர்களும் தங்களுக்கு வேண்டாத வர்களையெல்லாம் ஒழித்துத் தீர்த்துவிட்டு ஒற்றுமை நோக்கி ஒருமைப்பாடு வேண்டிப் பேசி முடிவு கட்டி விட்டார்களாம்!

தமிழீழ இனமே, எங்கள் தாயினமே! இனி நீ என்ன செய்யப்போகிறாய்? இராசீவ், செயவர்த்தனா இன்றைக்கு மட்டும் இல்லை. இனி என்றைக்குக் கூடிப்பேசினாலும், இன்னும் எத்தனைப் பார்த்தசாரதிகளும், இரமேசு பண்டாரிகளும் எத்தனை அதுலத் முதலிகள், விக்கிரம சிங்காக்களிடம் பேசிப் பேசித் தீர்த்தாலும் இதே தீர்வு தான்; இதே முடிவுதான்! நீயும் பல்லை இளித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்கத்தான் போகிறாய். கேட்டுக் கேட்டுக் காது புளிக்கத்தான் போகிறது. வேறு என்ன செய்ய முடியும், உன்னால்? நீ அப்படி! உன் தலைவர்கள் அப்படி! எனவே, தூக்கிய வாளை நீ உறையில் போட்டுக் கொள்ளப் போகிறாயா? இல்லை, இரண்டில் ஒன்று பார்த்து விடுவதென்று எதிரியின் மார்பை நோக்கி வீசப் போகிறாயா? இந்திராவானாலும் இராசீவ் ஆனாலும் செயவர்த்தனா ஆனாலும் ஒரே கூட்டுக் குடும்பந்தான்! ஆனால், நீயும் நானுந்தான் வேறு! ஏன், நீயும் உன் தம்பி களுமே வேறுபட்டுக் கிடக்கவில்லையா? பின் நாம் அழிய வேண்டியவர்கள் தாமே! அழிவதற்காக அழாதே! அழுவதற்காகவேனும் அழி! அழிவைத் தவிர நமக்கு வேறு வழியில்லை, நாம் ஒன்றுபடாத வரை!

—**தமிழ் நிலம்** : இதழ் எண் : 58 (9-6-85)

# 17. இராசீவ் காந்தி எப்படிப்பட்டவர்?

'இராசீவ் காந்தி இளைஞர்; புதுமை நோக்குள்ளவர்; அறிவியல் ஆர்வத்துடன் செயல்படுகிறார்; எனவே இவரின் தாயார் ஆண்ட காலத்தைவிட, இந்தியா, இவர் காலத்தில் நிறைய முன்னேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன'—என்று இராசீவ் காந்தி ஆட்சியில் அமர்ந்த தொடக்கத்தில் அரசியல் நோக்கர்கள் ஒரு சிலர் எண்ணினர்.

ஆனால் இவரின் படிப்படியான செயற்பாடுகள், இவர் நாட்டின்மேல் கொண்ட அக்கறையையும் ஆர்வத்தையும் விட, தம்முடைய சாய்காலை அதிகப்படுத்திக் கொள்வ திலும், உலக அரங்கில் தமக்கொரு நிலையான இடத்தைப் பெற்றுக் கொள்வதிலும் மிகவும் துடிப்பாக இருக்கிறார் என்பதையே வலியுறுத்திக் காட்டுகின்றன.

பதவிக்கு வந்தவுடன், இவர் தமக்குத் தடையாக இருக்கும் பழம் பெருந்தலைவர்கள் சிலரைத் த ௌ ழியில் இருந்து அப்புறப் படுத்திவிட்டுத் தமக்குகந்தவாறு, தம் போக்குக்கு இயைபான தலைவர்களையும் அதிகாரிகளை யும் துணையாக்கி நெருக்கமாக வைத்துக் கொண்டார். ஏற்கனவே நாட்டிலுள்ள பஞ்சாப், அசாம் சிக்கல்களை, உடனே கவனஞ்செலுத்தாமல், மெத்தனமாக இருந்து ஆறப்போட்டதுடன் அவ்வப் பகுதிகளின் எழுச்சிகளை வன்முறைகளைக் கொண்டும், கருப்புச் சட்டங்களைக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கொண்டும் அடக்கி ஒடுக்கிப் போராட்டக் காரர்களில் பலரை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்து வருகிறார்.

தமிழீழச் சிக்கலைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுபவரைப் போல, மறைமுகமான அரசியல் வலிமை பெறும் வாய்ப்புகளை இலங்கைத் தலைவர் செயவர்த்தனாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். பலகோடி உருபா மதிப்புப் பெறும் போர்க் கருவிகளைக் கொண்ட வானூர்தி, இலங்கைக்குச் செல்லும் வழியில், திருவனந்தபுரத்தில் இறங்கிய பொழுது 'அவற்றில் என்ன, தமிழர்களைக் கொல்லுவதற்கான கருவிகள் என்றா எழுதப்பட்டிருக்கிறது?' என்று கேட்டு, அவ் வானூர்தியைக் கன்னெய் நிரப்பி, எந்தவகை ஊறுபாடும் இன்றி இலங்கைக்கு அனுப்பி வைத்த ஒரு செயலே, இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலையை அவர் நிறுத்த விரும்பவில்லை என்பதைக் காட்டப் போதுமான சான்றாகும்.

அரசியல் தந்திர முறையுடன், உருசியாவுடனும், அமெரிக்காவுடனும் நடுநிலைத் தொடர்பு கொண்டவர் போல், அண்மையில் உருசியாவுக்கும், அமெரிக்காவுக்கும் தம் வெளிநாட்டுச் செலவை மேற்கொண்டதும், அதன் விளைவுகளும், அவர் ஒரு பெரிய அரச தந்திரியைப் போல் காட்டினாலும், அங்குள்ள தலைவர்களிடம் அவர் கமுக்கமாகப் பல செய்திகளைப் பேசி வந்த செயல் அவர் இந்தியத் தேசிய இன நலன்களுக்கு உகந்தவராக இல்லை என்பதையே காட்டுகிறது. அத்துடன் இந்தியத் தேசிய இன எழுச்சிகளை அவர் ஒடுக்குவதற்கு அந் நாடுகள் துணைநிற்கும் என்று அந் நாட்டுத் தலைவர்களும் பிரிட்டிசுத் தலைமையமைச்சரும் வெளிப்படையாக உறுதியளித்திருப்பதிலிருந்தே அவருடைய வெளிநாட்டுச் செலவின் நோக்கம் என்னவாக இருக்கும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ள முடியும். இனி, இவர் அமெரிக்க முதலாளிகளுக்கு வேறு, இந்தியாவில் வந்து



தொழில்களைத் தொடங்கும்படி அழைப்பு விடுத்த செயது மேலும் மேலும் இவர் வெளிநாட்டு வல்லரசுகளுக்கும், தரகு முதலாளியக் கொள்ளையடிப்புக்குமே துணைபோக விரும்புவதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இனி, அமெரிக்கச் செய்தியாளரிடையில் இவர் பேசும் பொழுது, அவர்களுக்களித்த ஒரு விடையில், 'இந்திய நிகரமை (சோசலிச)க் கொள்கை உருசியாவுடையதோ, அமெரிக்காவுடையதோ, அல்லது வேறு எந்த நாட்டுடையதோ அன்று; அஃது ஒரு தனி வகையில் அமைந்தது — என்று கூறியிருப்பது, இந்தியாவில் மத முறையிலான பார்ப்பனீய ஆட்சியை நிலைநிறுத்தும் இவர் விருப்பத்தையே உறுதிப்படுத்திக் காட்டுகிறது.

இவையெல்லாவற்றையும்விட, இவர் அண்மையில் செய்தியாளர் கூட்டத்தில், நெருக்கடி நிலைமேல் இவர் கொண்ட நம்பிக்கையையும், விருப்பத்தையும் தெளிவாக வெளிப்படுத்திய செய்தி, நம்மையெல்லாம் அதிர்ச்சியுற வைத்திருக்கிறது. அவர் தம்மை நிலைப்படுத்திக்கொள்ள எத்தகைய நிலையையும் கொடுமையையும் கூட மேற்கொள்ளத் தயங்காதவர் என்பதையே இது காட்டுகிறது.

இவற்றையெல்லாம் ஊன்றிக் கவனிக்கையில், இராசீவ் காந்தியைவிட இந்திராவே எவ்வளவோ நல்லவர் என்று எண்ணும்படி இவர் நடவடிக்கைகள் இருக்குமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இதன் வழி, இந்தியாவுக்கு நேர்ந்த இக்கொடுமையான அரசியல் அச்சுறுத்தம் என்று நீங்குமோ என்று ஏங்க வேண்டியுள்ளது. அந்த அளவுக்கு இராசீவ் காந்தி கொடியவராகி விடுவாரோ? பொறுத்திருந்து பார்ப்போம்!

— **தமிழ் நிலம்** : இதழ் எண் : 60 (7-7-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 18. செயவர்த்தனாவை நல்லவராக்கப் பார்க்கிறார் இராசீவ்!

**திம்புப் பேச்சின் வழி இரத்தக் கறைகளைத் துடைக்க முயற்சி !**

**தமிழீழ விடுதலைப் போராளிகள் விழிப்புணர்ச்சி பெற்று, இனியேனும் தங்களுக்குள் உள்ள பூசல்கலை ஒழித்துக் கட்டுக !**

**திராவிட இயக்கங்கள் ஒன்றிணைந்தாலன்றி அவற்றிற்கு எதிர்காலம் இல்லை !**

**சாதிகளின் பெயரால் தமிழின ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சி வருந்தத்தகுந்தது ! சாதிச் சலுகைகளுக்காகப் போராடுவது தமிழினத்தை நிலையான அடிமைக்கும்**

**தமிழர்களின் ஒரே போராட்டம் தமிழீழம் அல்லது 'தமிழ்! நாட்டுப் போராட்டமே !**

**'தமிழீழக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்காது'** என்று இராசீவ் காந்தி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டபின் இன்னும் திம்புப்பேச்சில் நம்பிக்கைக் கொள்வது, வீணான, வெறும் வம்புப் பேச்சாகவே முடியும். இராசீவ் காந்தி ஒரு ஆவின்தோல் போர்த்திய புலி! செயவர்த்தனாவோ புலித்தோல் போர்த்திய ஓநாய்! இவர்கள் இருவரையும் தமிழர்களோ, விடுதலைப் போராளிகளோ இன்னமும் நம்பிக் கொண்டிருப்பது, வறண்ட பாறையில் நீரூற்றுக்காகக் காத்துக் கொண்டிருப்பதைப் போன்றதே! எனவே, தமிழீழ இளைஞர்கள் தங்களுக்குள் விழிப்



புணர்ச்சி பெற்றுத் தாங்கள் ஒன்றிணைந்தால் தவிர, வேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்டு, தங்களுக்குள் உள்ள உட்பூசல்களைக் களைந்து ஒரே குழுவாக முழு மூச்சுடன் சிங்கள வெறியர்களை எதிர்த்துப் போராடுவதே தங்கள் தவிர்க்க வொண்ணா உயிர்க்கடமை என முனைப்பாகச் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

திம்புப் பேச்சு வழியாகவோ, அல்லது வேறு தில்லுமுல்லான நடவடிக்கைகளாலோ, செயவர்த்தனாவின் மேல் உள்ள அரத்தக் கறைகளையும், கொலைப் பழிகளையும், இன அழிப்பு வேக்காளத்தையும் துடைத்துவிட்டு, அல்லது மூடி மறைத்துவிட்டு, உலக நாடுகளின் கண்களுக்கு, அவரை ஒரு புனித புத்தனாகவும், அமைவிணக்க ஒப்புரவாளனாகவும் (சமாதானப் பிரியனாகவும்), மிகவும் நல்லவனாகவும் ஆக்கவேண்டும் என்று முயற்சி செய்யப் பார்க்கிறார், இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி. இந்தத் தகிடுதத்த, தந்திர மந்திரங்களையும் ஏமாற்று எகத்தாளங்களையும் நம்மவர்கள் குறிப்பாக நம் இளைஞர்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லையே என்பதுதான் நம் கவலை.

'ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க; இன்றும் இன்னே செய்க' என்பதற்கிணங்கத் தமிழின முன்னேற்றத்தின் ஒட்டு மொத்தமான முயற்சிஎன்பது இன்றையநிலையில் தமிழினத்திற்கென்று, தமிழீழத்திலோ, தமிழகத்திலோ ஓர் உரிமையான, முழு இறைமை வாய்ந்த அரசு அமையவேண்டும் என்பதுதான். அதிலும் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ அவ்வாறு அரசு அமைக்கும் வாய்ப்பு, தமிழீழத் தமிழர்களுக்குத்தான் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்த வாய்ப்பை எண்ணிச் சிதறலில்லாமல் நாம் அனை



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வரும் பயன்படுத்திக் கொண்டு, முனைந்து போராடிப் பெறுதல் வேண்டும். அல்லாக்கால், இவ்வினம் இன்றிருப்பதை விட, படிப்படியாக இன்னமும் வாழ்வியல் உரிமைகளை இழந்து கொண்டே போக வேண்டியிருக்கும். அக்கால் நலிவுகளும், நசிவுகளும், அழிவுகளும், அழிம்புகளும், இன்று இவ்வினத்திற்கு இருப்பதைவிட, மிகுதியான, அளவில் ஏற்படும். அக்கால் நாம் மிகவும் தொல்லைகள் படவேண்டியிருக்கும்.

இன்று நம் கண்முன்னாகப் பலர் மடிவதைப் பார்க்க வேண்டியுள்ளது. அதைப் பார்த்து நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையென்றாலும், கூப்பாடு போடவாகிலும் வழி இருக்கிறது; நம்மால் முடிகிறது. ஆனால், நடுக்கடலில், புயலில் மாட்டிக்கொண்ட கப்பல் சிறிது சிறிதாக நீருள் முழுகுவதை வெறுமனே பார்த்துக் கொண்டுதான் இருக்க முடிவதைப்போல், எதிர்காலத்தில் நம் இனம் படிப்படியாக அழிவதையோ, அழிக்கப்படுவதையோ, நாம் வெறுமனே பார்த்துக் கொண்டுதான் இருக்கமுடியும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எனவே, தமிழீழப் போராட்டத்தை நாம் வலுப்படுத்துவதும், தமிழக விடுதலைப் போராட்டத்திற்குக் களம் அமைத்துத் திட்டமிடுவதுமே நம்மின் இன்றைய முழு முயற்சியாக இருத்தல் வேண்டும்.

இப்பொழுது நடைபெற்றுவரும் திம்புப்பேச்சு வெறும் வம்புப்பேச்சாகவே முடிவடையும். இதன் வழியாக, செயவர்த்தனா மேல் உள்ள அரத்தக்கறைகளைத் துடைத்தெடுப்பதும், உலக நாடுகளின் கண்களுக்கு, அவரை நல்லவராக்கிக் காட்டுவதும், தமிழீழப் போராட்டத்தை மெலிவு அடையச் செய்வதுமே இராசீவ் காந்தியின்குறிக்கோளாக இருக்கும் என்று கருதவேண்டியுள்ளது. அதனால், தமிழீழப் போராளிகள் இவ்வகையான நெகிழ்ச்சி நடவடிக்கைகளை நம்பாது, விழிப்புணர்வு



பெற்று இனியேனும் தங்களுக்குள் இருக்கும் உட்பூசல்களை அறவே ஒழித்துவிட்டு ஒன்றுபட்டு, மேலும் தீவிரமாகப் போராடுதற்கும், தமிழீழத்தை வென்றெடுப்பதற்கும் தங்களை அணியப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அதற்கிசைவாக, இப்பொழுதைய நிலையில், தமிழினத்தை ஒட்டுமொத்தமாகக் காக்க வேண்டுவதே இங்குள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ள தலையாய பணி என்பதை நம் தலைவர்கள் உணர்தல் வேண்டும். மற்றபடி, சில்லறைக் கோரிக்கைகளை அவர்கள் அறவே கைவிடுதலும் வேண்டும். திராவிட இயக்கங்கள் ஒன்றிணைந்தாலன்றி அவற்றிற்கு எதிர்காலம் என ஒன்றிருக்க இயலாது.

இக்கால் திராவிட இயக்கம், சாதிகளின் பெயரால் அனைவரையும் ஒன்று திரட்டுவதும், சிற்சில உரிமைகளுக்ும், கோரிக்கைகளுக்கும், சலுகைகளுக்கும்போராடுவதும் மேலும் நம் முயற்சிகளைத் சிதற அடிக்கும். அந்நிலை பெரிதும் வருந்தத்தக்கதாம். இதனால், சாதிகள் மேலும் இறுகல் தன்மையைத்தான் பெறும். அவ்வாறு போராடுவதால் பெறும் சலுகைகளும், தமிழினம் ஒன்றுபட வேண்டிய கட்டாயத் தேவையைத் திசை திருப்பிவிடும். பின்னர் அதனை ஒன்றுபடுத்துவது மிகவும் கடினமாகிவிடும். பின் மேலும் மேலும் இவ்வினத்தை நிலையான அடிமைத்தனத்திற்கே கொண்டு சேர்க்கும்.

எனவே, தமிழர்களின் ஒட்டுமொத்தமான ஒரே போராட்டம், இன்றைய நிலையில், தமிழீழம் பெறுவதே! அதே சமயத்தில் தனித் தமிழ்நாட்டுப் போராட்டத்தை முன்னறிவிப்பதும் முன்னெடுத்துச் செல்வதுமே தேவை என்பதை இங்குள்ள தமிழர்கள் உறுதியாக எண்ணிக் கொள்வார்களாக!

— **தமிழ்நிலம்** : இதழ் எண் : 62 (11-8-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 19. தமிழீழக் கோரிக்கையைப் பின்வாங்கச் செய்வதே இராசீவ்காந்தியின் நோக்கம்!

**ஈழப்போராளிகள் ஏமாறவேண்டாம்! உங்களின் பின்வாங்கல் தமிழினத்தையே வேரறுக்கக் கூடும்! எச்சரிக்கை!**

### தமிழ்நாட்டுக் கோரிக்கையே தமிழீழத் தீர்வை உறுதிப்படுத்தவல்லது !

இந்தியத் தலைமை யமைச்சர் இராசீவ் காந்தி இலங்கைப் போராளிகளுடன், புதுதில்லியில் ஒன்றரை மணி நேரம் பேசியுள்ளார். திம்புப் பேச்சின் தொடர்ச்சியாக மூன்றாவது முறை நடக்கும் பேச்சுரை இது. ஒன்றரை மணிநேரம் நடந்த இப் பேச்சில் இராசீவ் காந்தி ஈழப் போராளிகள் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்ததாகச் செய்திகள் வந்துள்ளனவே தவிர, அவற்றுக்கு விடையாகவோ, தம் கருத்தாகவோ ஒன்றும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

முன்னர் ஏற்பட்ட கலவர நிறுத்தம், இலங்கை அரசால் பலமுறை அஃதாவது ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து நாள்தோறும் மீறப்பட்டு வந்ததும் பல நூற்றுக்கணக்காக ஒன்றுமறியாத தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும், கொளுத்தப்பட்டும் வந்ததும் இராசீவுக்கு நன்றாகத் தெரியும். போராளிகள் தங்கள் வன்முறையை நிறுத்தவில்லை என்று கூறிக்கொண்டே சிங்கள வெறியர்களும் படைத்துறையும் இந்த அத்துமீறல்களை நடத்தியிருக்கின்றனர். இதுபற்றி இராசீவ் காந்தி தம் கேரளச் சுற்றுச் செலவின்பொழுது கவலை தெரிவிப்பதாகச்



சொன்னாரே தவிர, ஒரு சொல்லும் அதைக் கண்டித்துச் சொல்லவில்லை என்பதை நாடு அறியும். கவலை தெரிவிப்பது வேறு; கண்டனம் தெரிவிப்பது வேறு. அதுவும் இந்தக் கவலையைத் தாமும் பகிர்ந்து கொள்வதாகச் செயவர்த்தனன் தெரிவித்துள்ளது, இராசீவின் கவலையைப் பகடி (கேலி) செய்வதாகவே உள்ளது.

திம்புப் பேச்சு தொடங்கிய மூன்று மாதங்களாக இலங்கை, நாளுக்கு நாள் அதன் கொன்று குவிப்புகளை மிகுதிப்படுத்தியே வந்துள்ளதே அன்றி, ஒரு நாளையும் வெறு நாளாக விடவில்லை. இந்த நிலையிலும் கூட இராசீவ் காந்தி வாய்மூடி ஊமையாகவே இருந்து வந்தது, அவருக்குத் தமிழினம் எவ்வாறேனும் ஒடுக்கப்பட வேண்டும், வலிவிழக்க வேண்டும் என்ற எண்ணமிருப்பதையே உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் தமிழினம் ஒரு நாடு பெறுவதை இந்தியா விரும்பவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலும் இணக்கப் பேச்சு என்னும் சூதாட்டத்தை இந்திய அரசு வலுக்கட்டாயமாக மேற்கொண்டு வருகிறது. தமிழ் மக்கள் அழிய அழிய, போராளிகள் தம் தமிழீழக் கோரிக்கையில் இறங்கி வருவார்கள் என்பதும், அக் கோரிக்கையைப் பின்வாங்கச் செய்ய வேண்டும் என்பதுமே இராசீவின் நோக்கம் என்பதை அவர் நடவடிக்கைகள் காட்டுகின்றன. அதற்கான நாடகத்தையே இணக்கப் பேச்சு என்னும் திரையுடன் இந்தியா நடத்தி வருகிறது! இந்த நாடகச் சூதாட்டத்தில் சகுனியாகவும் பகடைதாயாகவும் தமிழக முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் பயன்படுத்தப்பட்டு வருகிறார். தமிழினம் உரிமை பெறுவதில் இராசீவைப் போல இராமச்சந்திரனுக்கும் விருப்பமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்த நிலையில் தமிழீழப் போராளிகள் மிக விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் அமைவுடனும் (நிதானத்துடனும்) நடந்துகொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறோம். அவர்கள் தமிழீழக் கோரிக்கையிலிருந்து ஓர் இம்மியும் பின்வாங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும்! அவர்களின் பின்வாங்குதலோ, நெகிழ்ச்சியோ தமிழினத்தை அடியோடு வேரறுத்துவிடும் என்பதை மறந்துவிட வேண்டாம்!

மேலும் தமிழீழப் போராட்டத்தில் இந்தியாவைப் பணிய வைப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அ'து, இலங்கைத் தமிழர் தமிழீழத்திற்காகப் போராடும் இதே வேளையில் தமிழ் நாட்டிலும், தனித் தமிழ் நாட்டு விடுதலைக் கோரிக்கை எழுப்பப்பட வேண்டும். இன எழுச்சி முறையிலும் சரி, போர்த் தந்திர முறையிலும் சரி, இதுவே சரியான திட்டமாக இருக்க முடியும்.

இந்த இடத்தில், இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழீழப் போராளிகளுக்குத் தமிழீழக் கோரிக்கை தான் முகாமையானது; தேவையானது. இந்தியாவில் தமிழ்த் தேசிய இனச்சிக்கலை எழுப்புவதோ தனித் தமிழ் நாடு அமைவதோ அவர்களுக்கு முகாமையானதாகவோ தேவையானதாகவோ படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். உலகத் தமிழினம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் ஈடேற்றிக் கொள்ளவும் வேண்டுமானால் இந்த நூற்றாண்டுக்குள், அஃது ஒரு தனிநாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அடுத்த நூற்றாண்டு ஒரு மின்னணு அறிவியல் நூற்றாண்டாகத் தொடங்கும்.



ஆகையால், அக்கால் மக்கள் உரிமைகள் வலுப்பெற வாய்ப்பில்லை என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும் இன்றுள்ள நிலையில், தமிழ்நாட்டுக் கோரிக்கையே, தமிழீழக் கோரிக்கையைவிட முகாமையானதாக நமக்குப் படுகிறது. அதுவே தமிழீழத்தையும் கூட மீட்டெடுக்க வல்லது. இலங்கையில் தமிழினத்தை அதன் சிறுபான்மை நோக்கி ஒரு தேசிய இனம் என்றுகூட ஒப்புக்கொள்ளாத நிலையில், தமிழ்நாடு அமைவது எவ்வளவு இன்றியமையாதது என்பதை இங்குள்ளவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நமக்கென்று ஒரு வீடு கேட்கும் உரிமை இருக்க, அதன் இறவாணத்தில் நிற்க இடம் கேட்டோ, அல்லது இன்னொரு வீட்டில் உள்ள திண்ணையில் படுக்க இடம் கேட்டோ நாம் ஏன் போராடிக் கொண்டிருக்க வேண்டும்? எண்ணிப் பார்க்கவும்.

-- **தமிழ் நிலம்:** இதழ் எண்: 64 (22-9-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# பஞ்சாபும் இலங்கையும்!

## இந்திய ஓரவஞ்சனைக்கு ஓர் எடுத்துக்காட்டு!

உலகின் பல்வேறு நாடுகளில் இன்று நடைபெற்று வரும் இனக் கலவரங்கள், இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியிலாவது, அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலாவது, ஓர் உலகப் போர் நடைபெறப்போகும் என்பதற்கான அறிகுறிகள் ஆகும். இக் கலவரங்கள் ஒருபுறம் இருக்க, இவை அனைத்தும் ஒரேவகையான மதிப்பீடுகளைப் பெறுகின்றனவா என்பதை அறிஞர்கள் சிந்திக்கவேண்டும். இல்லை என்பதே நம் முடிவு.

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் நிறவெறிக் கொடுமை, சிறுபான்மை மேலாளுமை ஆட்சியதிகார வெள்ளையர்களால், அந்நாட்டின் உரிமைக் குடிகளான பெரும்பான்மைக் கறுப்பினம் பெறுகின்ற இன அழிவை எடுத்துக் காட்டுவதாகும். ஆனால், இந்தியாவிலும், சிறுபான்மை வந்தேறிகளான ஆரியப் பார்ப்பன இனம், முதலாளியத்தோடு கைகோத்துக் கொண்டு, இங்குள்ள பெரும்பான்மையான திராவிட இனத்தை - இந்நாட்டின் பழங்குடி மக்களை - வருணாசிரம, இந்து மதக் கோட்பாடுகள் என்னும் கரவான தந்திர உத்திகளால், அடக்கி ஆண்டு அதனை மேலே ஏறவிடாமல் கொடுமைப் படுத்தி வருவதுடன் அவற்றைத் தேசியம் (Nationalism), ஒருமைப்பாடு (Integration) என்னும் புனுகு பூசி மெழுகப் பார்க்கிறதே, அதை எப்படி வேறாகக் கருதமுடியும்?

உலகின் மிகப் பழந் தேசிய இனங்களிலும் மிக மிகப் பழமை வாய்ந்ததும், பண்பாடு நிறைந்ததும், அனைத்து



நிலைகளிலும் அறிவார்ந்ததுமான ஓர் இனம் தமிழினம். இதனை எவருமே மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஆனால், இதன் இன்றைய நிலை என்ன? இதன் குமுகாயப் பண்பாட்டு நிலைகளாலேயே, அரசியல் அடிமைத்தனமும், இனத் தாழ்ச்சியும் பெற்று, இன்றைய உலகில், இஃது ஒரு நாடோடி இனமாக, ஓர் ஏதிலி இனமாக, இதன் அடிப்படை வாழ்வியல் கூறுகளாகிய மொழியையும், கலை, பண்பாடுகளையும் நாகரிகச் செழுமையையும், பொருளியலையும், அரசியல் ஆளுமையையும் முழுவதும் இழந்து தவிக்கிறதே! இதைப் பற்றி எந்த நாடு கவலைப்பட்டது; அல்லது படுகிறது? இது தன் சொந்த நாட்டிலேயே பலவாறான துன்பங்களுக்கு ஆளாக்கப் பெற்று வருகிறதே; இக் கொடுமையை யார் எதிர்த்துக் கேட்டது; அல்லது கேட்பது?

தமிழினக் கொடுமைக்கு உச்சகட்டமாக, இன்று இலங்கையில், சிங்கள வெறிச் சிறுமதியர்களால் அங்குள்ள ஈழத் தமிழினச் சிறுபான்மையர் பெற்றுவரும் இனக் கொடுமை இருந்து வருகிறதே! இதைப்பற்றி எந்தவொரு நாடாகிலும் உலகப் பொது மன்றில் வாய் திறக்கவில்லையே! நாளுக்கு நாள், வேளைக்கு வேளை, நொடிக்கு நொடி அங்குத் தமிழின மக்கள் கொன்று குவிக்கப்படுகின்றனரே! அறிவியல் வளர்ச்சியும், மாந்தவினப் பொதுமையும் பரவலாகப் பேசப் பெற்றுவரும் இவ்வுலக அரசியல் அரங்கில் இப்படிப்பட்ட ஒரு கொடுமை வேறெங்கும் நிகழ்ந்திருக்க முடியாது. ஆனால், மாந்தவிரக்கம் காட்டப் பெறவில்லையே! கேள்வி கேட்பாரற்று, நட்ட நடுநாட்டில், வெட்ட வெளிச்சத்தில், பட்டப் பகலில் அங்கு நடந்துவரும் படுகொலைகளைக் கண்டு, எந்த நாடும் பதறவில்லையே! உலக

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அரசியல் அதிகாரம் செல்லுபடியாகவில்லையே! உலக ஒற்றுமை என்னும் ஊமைப்பேச்சு உயிரற்றுப் போனதே!

"படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்" என்னும்படி, நம் இந்திய அரசும், மிகவும் அண்டை அயல்நாடான இலங்கையில் அன்றாடம் நடைபெறும் இவ் இனவெறிக் கொள்கையை, வெறும் வம்புப் பேச்சு வக்கணைகளால் அன்றோ வறிதே காலக்காற்றில் ஆறப்போட்டு வருகிறது. தமிழர்களுக்கென்று ஒரு தனி நிலம் இல்லாக் கொடுமையாலன்றோ, இந்தக் கொம்பேறி மூக்கு இந்திய அரசு, சிம்பேறி நிற்கிறது! இதன் இரண்டகம் தெரியாததா? வஞ்சகம் விளங்காததா? வண்ணச் சொற்புனைவுகள் அறியமுடியாதவையா? ஆனாலும் விடிவில்லையே! இடி விழுந்துகொண்டே இருக்கிறதே!

அண்மையில் பஞ்சாபில் நடந்த 14 இந்து மதத்தவர் கொலைக்குக் கொதித்தெழுந்த இந்திய அரசு, பல்லாயிரக் கணக்காக நடைபெறும் தமிழினக் கொலைக்குச் செயவர்த்தனனிடம் பல்லிளிப்புக் காட்டிப் பேசுகிறதே தன்னின மக்கள் ஒருசிலர் செத்தால் ஒரு தீர்வு! தமிழின மக்கள் பல்லாயிரக்கணக்கில் செத்தாலும் அதற்கு வேறோரு தீர்வா? 'இந்து' என்னும் மடமை மதக் கோட்பாடும் இங்கு எடுபடவில்லையே! ஏனென்றால், கொல்லப்படுவது தமிழினம்! கொல்வது ஆரிய இனம்! சிங்களன் வேற்று நாட்டான் என்பதினும் மேலாக ஆரிய இனக் கரிசனம் கட்டிக்கொண்டு அழுகிறதே! அங்குத் தமிழின வெறுப்புப் பிட்டுக் கொண்டு ஒழுகுகிறதே!

பஞ்சாபில் 14 பேர் படுகொலையாம்! உடனே தில்லியில் படைத்துறை தூள் கிளப்புகிறது! காவல் துறை கால் பரப்புகிறது! நகர்முழுவதும் '144' கட்டவிழ்த்து



விடப்படுகிறது! எச்சரிக்கைகள் எரிமலைச் சீற்றம் என வீசப்பெறுகின்றன. கடையடைப்பு! போக்கு வரத்துத் தடை! கண்டதும் சுடச் சொல்லிக் கட்டளைகள்! கொலையாளிகளின் வேட்கைக்கு அரசே கட்டியங்கூறி முற்றுகையிடுகிறது! அடடா! என்ன பதற்றம்! எத்துணைச் சுறுசுறுப்பு!

எங்கிருந்து வந்தது, இராசீவ் காந்தி அரசுக்கு இத்துணை அக்கறை? அதுதான் இனச் சார்பு! மதச் சார்பு! 'தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடுகிறது, பஞ்சாபில்! இலங்கையில் நேரும் தமிழினப் படுகொலைக்கோ, இராசீவ் காந்தியின் நெஞ்சம், வற்றிய பாலை நிலமாகக் கானல் நீரைக் கண்ணீராய்ப் பொழிகிறது. என்னே கொடுமை! என்னே கொடுமை!

இந்த ஏதுங்கெட்ட தமிழினத்திற்கு இந்த இரண்டகம் இன்னும் விளங்கவில்லையே! இந்திய அரசின் ஓர வஞ்சகத்திற்கு இதனினும் வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்? எண்ணிப் பார்க்கட்டும் தமிழினம்! எழுச்சி கொள்ளட்டும் தமிழர்கள்!

—**தமிழ் நிலம்** : இதழ் எண்: 73 (27-7-86)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

**21. ஆப்பிரிக்க விடுதலைக்கு உதவுவது போல் ஒருபுறம் உலகை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் இலங்கைத் தமிழின அழிவை மறைமுகமாக ஊக்கப்படுத்தும்**

# இராசீவ் காந்தியே! தலைமையமைச்சர் பதவியைவிட்டு உடனே நீங்குக!

'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்னும் பழமொழி திரு. இராசீவ் காந்தியைப் பொறுத்த மட்டில் நூற்றுக்கு நூறு உண்மை என்பது அவர் பதவிக்கு வந்த ஓராண்டுக் காலத்திற்குள் நன்கு தெரிய வந்த செய்தி என்றாலும், இக்கால் அது நூற்றுக்கு இருநூறு மடங்கு உண்மை என்று ஆகி வருகிறது.

தம்மை நாட்டு மக்களிடம், அன்றாடம் நன்கு விளம்பரப்படுத்திக் கொள்வதிலும் உலக நாடுகளுக்கு அடிக்கடி தாம் சென்று, அந் நாடுகளுடன் இணக்க உணர்வு வைத்துக் கொள்வதிலும், அந் நாடுகளின் தலைவர்களை அடிக்கடி இந்தியாவுக்கு அழைத்து அவர்களின் மனப்போக்குக்குத் தகுந்தபடி விருந்தளித்தல், பாராட்டுதல், பரிசளித்தல், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் முதலிய அரச தந்திரங்களைக் கையாள்வதிலும், இந்திரா காந்தி கற்றுக் கொடுத்ததற்கு மேலும் பல மடங்கு உத்திகளைக் கையாண்டு, இன்று உலகத் தலைவர்களில் ஒரு தனிச் சிறந்த இடத்தைப் பெற்று வருகிறார். இந்த நிலைகள் பற்றி இக்கால் நாம் ஒன்றும் கூறுவதற்கு விரும்பவில்லையேனும், அவர் இவ்வாறு தம்மை வலுப்படுத்திக் கொண்டு, ஒரு வல்லாண்மை மிக்க தலைவராக ஆகி இவ் விந்திய நாட்டில் உள்ள அனைத்துத் தனித் தேசிய இனங்களையும் அழித்து ஒழித்துவிட்டு, அனைவரையும் ஒரே இந்தியத் தேசிய இனம் என்னும் செயற்கைக் கட்டுக்குள்ளே கொண்டு வர நினைக்கும் கரவான முயற்சியைத் தான் நாம் பலவாறு கண்டிக்க வேண்டியுள்ளது.

உலக மக்களைக் கவர்கின்ற நோக்கில் அவர் ஆடிக் கொண்டிருக்கும் அரசியல் நாடகங்களிலேயே தலை சிறந்தவையாக இருப்பவை, தென்னாப்பிரிக்க இனவெறி அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்ற முறையில் அவர் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளும், இலங்கை இனச் சிக்கலுக்குத் தீர்வு காணுதற்கென்று அவர் செய்து வருகின்ற சிற்சில வெளிப்படையான, மறைமுகமான செயல்களும் ஆகும்.

நிறவெறி ஆளுமையையோ, இனவெறி ஆட்சியையோ ஒருவர் கண்டிக்க விரும்புகிறார் என்றால், முதலில் அவர் அத்தகைய நிற இனப் பாகுபாடுகளை மனத்தாலும் நினையாத, பாராட்டாத ஒருவராக இருத்தல் வேண்டும். ஆனால், இராசீவ்காந்தியை இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களில் அத்தகைய வேறுபாடுகளைப் பாராட்டாத மனவுணர்வு கொண்டவராகக் கருதவே முடியாது. முதலில் அவர் ஒரு பச்சைப் பார்ப்பன உணர்வினராகவும், இந்து மதவெறியராகவும் உள்ள தன்மையை எவரும் மறுத்து விட முடியாது. இதற்கு அவர் போட்டிருக்கிற பூணூலும், அவர் செய்கின்ற மதச் சடங்குகளுமே சான்று. இத்தகைய மனவுணர்வு கொண்ட அவர் ஆப்பிரிக்கக் கறுப்பு நிற மக்களுக்கு இரங்குவதாக, உலகம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மெச்சத் தகுந்த பற்பல நடவடிக்கைகளில் இறங்கிச் செயலாற்றுகிறார் என்றால், அவை அவரின் உலக விளம்பரத்துக்காகவும், அரசியல் நிலையில் தம்மை வலுப்படுத்திக் கொள்வதற்காகவுமே இல்லாமல் வேறு எதற்காக இருக்க முடியும் ?

ஆப்பிரிக்கக் கறுப்பர் இனத்திற்காக இரங்குகிற, வருந்துகிற ஒருவர் தலைமையமைச்சராக உள்ள ஒரு நாட்டில், தீண்டாமையும், காணாமையும், சாதியிழிவுகளும் இருக்க முடியுமா ? எழுபத்தைந்து கோடி மக்கள் வாழுகின்ற இந்நாட்டில் ஏறத்தாழ இருபது கோடி மக்கள் இழிசாதி மக்களாக, தாழ்ந்தவராக, கீழானவர்களாக, கோயில் குளங்களில் நுழைவதற்கு இயலாமல் இன்றைக்கும் புழுப் பூச்சிகளாகச் சாய்கடைகளிலும், குப்பை மேடுகளிலும், சேரிகளிலும், கழிவு நீர்த் தேக்கங்களின் ஓரங்களிலும், மலைகளில் உள்ள புதர்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால், இவற்றைப் பற்றியெல்லாம் இரங்காத, கவலைப்படாத, அவர்களின் மீட்சிக்கு ஓர் இம்மியளவும் துணை செய்யாத, அவர்களைத் தாழ்த்திக் கொண்டுள்ள மேல்சாதி இனத்திலுள்ளவராகப் பெருமையுடன் கூறிக் கொள்ளும் ஒருவர், எங்கோ இருக்கின்ற கறுப்பர் இனத்திற்காக இரங்குவதை, வருந்துவதை, கவலைப்படுவதை உண்மை என்று ஒப்ப முடியுமா ? எனவே இஃது இராசீவ் காந்தி ஆடும் அரசியல் நாடகங்களிலேயே தலையாயது.

இனி, அவர் இலங்கைத் தமிழர்கள் சார்பிலாடும் ஒப்புரவு(சமாதான) நாடகம் இன்னும் வேடிக்கையானது; கரவானது; மிகக் கொடுமையானது. இலங்கைத் தமிழர்களை இவர் மக்களாகவே கருதவில்லை. ஏனென்றால் அவர்கள் தமிழர்கள். இந்த இந்திய நாட்டிலேயே திருவாளர் இராசீவ் காந்தி இனத்தவர்களுக்கு ஆகாத இனம் இந்தத் தமிழினம் ஒன்றுதான். இதை இந்த நாட்டின், மக்களின், வரலாறு நன்கு தெரிந்த அனைவருமே நன்கு உணர்வர். எனவே இராசீவ் காந்தி கறுப்பு ஆப்பிரிக்க நீக்ரோ இனத்தை விரும்பினாலும் விரும்புவார்; தமிழர்கள் முன்னேறுவதையோ அவர்கள் அரசியல் மீட்சி பெறுவதையோ என்றைக்கும் எந்த நிலையிலும் விரும்பமாட்டார். இன்னும் சொன்னால் அவரின் சொந்த இனமான பார்ப்பன இனத்திலேயே கூடத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் என்றால் அவருக்குப் பிடிக்காது. இதற்கு, இவர் பாட்டனார் நேரு, இராசாசி, டி. டி. கிருட்டிணமாச்சாரி முதலியோரிடமும், இவர், தாயார் இரா. வெங்கட்ராமன் முதலியோரிடமும், இவர், இக்கால் வெளியுறவுத் துறைச் செயலாளர்களாக இருந்த பார்த்தசாரதி, வெங்கடேசுவரன் ஆகியோரிடமும் நடந்து கொண்ட அரசியல் அதிகார நடைமுறைகளே சான்றுகளாகும்.



எனவே, இப்படிப்பட்ட வடநாட்டுப் பச்சைப் பார்ப்பனக் குடிவழியின் வெளிப்பாடாக உள்ள திரு. இராசீவ் காந்தி, இலங்கைத் தமிழர் மேல் அக்கறை கொள்வார் என்பதும் அன்றும் இன்றும் என்றுமே நம் பக்கைக் குரியதன்று. இவ்வுண்மையைத் திம்புப் பேச்சு தொடங்கிய போதும், அதைத் தொடர்ந்து, திவாரிகளும், பண்டாரிகளும், பார்த்தசாரதிகளும், சிதம்பரங்களும் பேச்சுரை நடத்த இலங்கைக்கும் தில்லிக்கும் மாறி மாறி நடைபோட்டு வந்த போதும் 'தமிழ் நிலம்' 'இப்பேச்சுகள் வெறும் அரசியல் கண்துடைப்பு நாடகங்களே', என்றும், 'இவற்றால் ஒரு பயனும் விளையப் போவதில்லை' என்றும், 'இவை செயவர்த்தனே அரசு தன்னை வலுப்படுத்திக் கொள்ள ஏற்படுத்தித் தரும் கால இடைவெளியே' என்றும் தெளிவாகக் கருத்தறிவித்தது. இதைப் போராளிகள் உட்பட முன்னுணர்வில்லாத நம் தலைவர்களும் கண்டுகொள்ளவே இல்லை.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இப்பொழுதோ நெருக்கடி முற்றிய நேரம். இலங்கைப் போராட்டம் தொடங்கி ஏறத்தாழ நான்கு ஆண்டு காலத்தை, இந்திரா காந்தியும், இராசீவ் காந்தியும், திட்டமிட்டு, இலங்கையரசுக்கு விட்டுக் கொடுத்து இலங்கைத் தமிழர்களில் ஏறத்தாழ எண்ணாயிரம் பேர் அழிந்து போகக் காரணமாயினர்.

இலங்கைத் தமிழர் சிக்கலைக் கையில் எடுத்த போதே செயவர்த்தனாவோ, தமிழீழப் போராளிகளோ என்ன கருதுகிறார்கள் என்று தெரிந்து கொள்ளாமலேயே இராசீவ் காந்தி, 'தமிழீழத்தை இந்தியா ஆதரிக்க முடியாது' என்று வெளிப்படையாகத் தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்க இனவெறி வெள்ளையரசின் கொடுமைப் பிடியிலிருந்து நமீபியா முதலிய நாடுகள் விடுதலை பெற வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிற இராசீவ் காந்தி, அரபியர்களின் கொடுமையிலிருந்து பாலத்தீனியர்கள் காக்கப் பெற வேண்டும் என்று கூறுகிற இராசீவ் காந்தி, சிங்கள இனவெறி அரசின் கொடுமைகளிலிருந்து தமிழீழம் விடுதலை பெறக் கூடாது என்று கூறுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? தமிழினம் விடுதலை பெற்ற ஒரு தனியினமாக ஆகக் கூடாது என்று அவரும் அவரைச் சார்ந்தவர்களும் விரும்புவதுதான் அதற்குக் காரணமாக இருக்க முடியுமேயன்றி வேறு என்ன?

ஆப்பிரிக்கப் பொருளமைப்பின் உச்ச மாநாட்டில் தென்னாப்பிரிக்காவின் இனவெறி ஆட்சிக்குச் சில மேலை நாடுகள் உடந்தையாக இருப்பதை இராசீவ் கடுமையாகக் கண்டித்துள்ளார். ஆனால், இலங்கை இன அழிவுக்குக் கனடா, இசரேல், பிரிட்டன், பாகித்தான், அமெரிக்கா முதலிய நாடுகள் துணை போவதைக் கண்டித்து ஒரு



பேச்சும் பேசவில்லை. அதே போல் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசின் பொருளியல் முற்றுகையை எதிர்த்து முன்னரங்கு நாடுகள் போராட வேண்டும் என்று அறிவித்த இராசீவ் காந்தி யாழ்ப்பாணத்துக்கு எதிராகச் செயவர்த்தனே அரசு செய்யும் கடும் பொருளியல் முற்றுகையைக் கண்டித்து ஒன்றும் பேசாததற்கு என்ன காரணம்? ஆப்பிரிக்க மக்களுக்குக் காட்டும் கரிசனம் தமிழீழத் தமிழர்களுக்கு ஏன் காட்டப் பெறவில்லை? ஆப்பிரிக்க மக்களுக்கு 52 கோடி உருபா பொருளுதவியை அறிவித்த இராசீவ் தமிழீழத் தமிழர்களை ஏன் அழிந்து போக விட்டு விட்டார்?

எனவே, இராசீவ் காந்தியின் இவ் வேறுபாடான கரவான நடைமுறைகளைக் கண்டித்து, உலகத் தமிழின முன்னேற்றக் கழக அன்பர்களும், தென்மொழி, தமிழ் நிலம் அன்பர்களும் பிற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், தலைமையமைச்சர் இராசீவ் காந்திக்கு உடனே கீழ்வரும் செய்தியை ஆங்கிலத் தொலைவரி வழியாக, நான்கைந்து பேர் சேர்ந்தோ, தனித் தனியாகவோ கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும் என்றும், அவ்வாறு தொலைவரி கொடுத்த செய்தியைத் தமிழ் நிலத்துக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தொலைவரி ஆங்கிலத்தில் கொடுக்க வேண்டும். அதன் தமிழ் வாசகம்.

''ஆப்பிரிக்க விடுதலைக்கு உதவுவது போல், ஒருபுறம் உலகை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் இலங்கைத் தமிழின அழிவை மறைமுகமாக ஊக்கப் படுத்தும் இராசீவ் காந்தியே, நீங்கள் தலைமையமைச்சர் பதவியை விட்டு உடனே நீங்குங்கள்.''

இதன் ஆங்கில மொழி பெயர்ப்பும்
தொலைவரி விடுக்க வேண்டிய வாசகமும்!

"HONOURABLE PRIME MINISTER RAJIV GANDHI RESIGN YOUR POST FOR INDIRECTLY INDUCING THE GENOCIDE OF SRILANKAN TAMILS WHEN EVEN DISGUISING THE WORLD LIKE HELPING THE AFRICAN LIBERATION PEOPLES."

—தமிழ் நிலம் : இதழ் எண் : 79 (31-1-87)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 22. இந்தியாவின் ஓரவஞ்சனை !

அண்மையில் கொழும்புவில் விடுதலைப் புலிகள் இயங்கிக் குண்டு வெடிப்பு நிகழ்ச்சி ஒன்றையும் அதற்குச் சில நாள்களின் முன்னர் வழிப்போக்கர் பேருந்துகளை நிறுத்திச் சிங்களர்களைச் சுட்டுக்கொன்ற நிகழ்ச்சியையும் நடத்தினர் என்பதற்காக, இந்திய அரசு அவர்களுக்குக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது அத்துடன், அந் நிகழ்ச்சிகளால் சேதமுற்ற இடங்களையும், கொல்லப்பட்ட பிணங்களையும் தொலைக்காட்சியிலும் போட்டுக் காட்டி மக்களுக்கு விடுதலைப்போராளிகளின் மேல் வெறுப்பு ஏற்படும்படி செய்தது.

இதற்குமுன் சில நேரங்களிலும் இவ்வாறு விடுதலைப் போராளிகளால் சிங்களர்க்கு நேர்ந்த அழிவுகளை ஓரிரண்டு முறை வெளிப்படுத்திக் காட்டித் தமிழீழ விடுதலைப் போராட்ட முயற்சிகளைப் பெரிதும் கொச்சைப் படுத்திக் காட்டியுள்ளது இந்திய அரசு.

ஆனால் இதுவரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றும், பல நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துச் சிதைத்தும், ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களைச் சிறையிலடைத்து உறுப்புச் சிதைவு செய்தும் வருகின்ற செயவர்த்தனே சிங்கள அரசை எந்தச் சூழ்நிலையிலும் ஒரு சிறு அளவில் கூட கண்டித்ததோ, அக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டியதோ இல்லை. ஓரிரு முறை வருத்தம் தெரிவித்ததோடு சரி ஏன் இவ்வாறு இந்தியா ஓரவஞ்சனையுடன்



நடந்து கொள்ள வேண்டும் ? இஃது அரசியல் கொடுமையன்று; இனவியல் கொடுமை என்பது இதுதான்.

இராசீவ் காந்திக்கும் செயவர்த்தனேவுக்கும் தமிழினம் அடிமைப்பட்டே கிடக்க வேண்டும் என்பதுதான் கருத்து. ஏனெனில் இருவரும் ஆரிய இனத்தவர்கள். ஆட்சியைக் கைப்பற்றிய ஆரிய இனம் ஆண்டு கொண்டே இருக்க வேண்டும் என்பதுவே அதற்குள்ள கொள்கை. ஆட்சியுரிமையில் தங்களுக்கும் பங்கு கேட்பதால் தமிழினத்தின் மேல் அவ்வினத்திற்கு வெறுப்பு. அதை எவ்வாறேனும் அடக்கி ஒடுக்கி விடவேண்டும் என்றே இருவரும் நினைக்கின்றனர். இல்லையானால் எவ்வாறேனும் அழித்துவிட வேண்டும் என்றே முனைகின்றனர்.

அண்மையில் செயவர்த்தனே இதை வெளிப்படையாகவே சொல்லியுள்ளார். ‘இலங்கையில் தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதுவே என் நோக்கம்’ என்று தெரிவித்திருக்கிறார். இராசீவ் காந்தி இவ்வாறு வெளிப்படையாகக் கூறவில்லையேனும் அவரின் மனக் கருத்து இதுதான்.

தமிழினத் தலைவர்கள் இன்னும் செயவர்த்தனாவையும் இராசீவ் காந்தியையும் நம்பிக் கொண்டிருப்பதுதான் நமக்கு வியப்பினும் வியப்பாயிருக்கிறது. இவர்களின் ஓரவஞ்சனையையும் உள்ளக் கரவையும் தெரிந்து கொண்டால், தமிழினம் ஒன்றுபட வாய்ப்பிருக்கிறது. அது நடக்குமா ?

—தமிழ் நிலம் : இதழ் எண் :85 (20-4-1987)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 23. இந்தியா செய்த உணவு உதவிகள்! இராசீவின் இரண்டாவது நாடகம்!

## அழிபட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உணவு, மருந்து உதவுவது வஞ்சகமான ஒரு சூழ்ச்சியே!

சிங்களவர்களிடம் தமிழர்கள் நேரடியான போரில் அழிபட்டுச் செத்துக் கொண்டிருப்பது கடந்த நான்கு ஆண்டுகளாக நாளுக்கு நாள் தொடர்ந்து நடந்து வரும் ஒரு செய்தியாகும். இதில் இவ்வளவு நாள் இல்லாத அக்கறை இராசீவுக்கு அஃதாவது இந்தியாவுக்கு இப்பொழுது ஏற்பட்டிருப்பது ஒரு காலத்தின் கோளாறே ஆகும். இந்தியாவின் **'இரண்டாவது நாடகம் இது.** முதல் நாடகம் **திம்புப் பேச்சு** தொடங்கிப் பல காட்சிகளாக நடந்தேறியது, அனைவர்க்கும் தெரியும். முதன் முதல் தொடங்கிய திம்புப் பேச்சிலிருந்து, இறுதியாக நடந்த கொழும்புப் பேச்சு வரை, **தமிழ் நிலம்** அந்த நாடகத்தைத் தெளிவாகவும், நேர்மையாகவும், நடுநிலையாகவும் திறனாய்ந்திருந்தது. பலர் தொடக்கத்தில் தமிழ் நிலத்தின் கருத்துக்கு ஒத்துவரவில்லையானாலும், போகப் போக அவரவர்களின் கருத்துப் போலத் தமிழ்நிலம் கருத்தையே முடிந்த முடிவாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது—அவர்கள் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளவில்லையானாலும், தெரிந்து சொன்னாலும், தெரியாமலே சொல்லி வந்தாலும், அவையெல்லாமும்—தமிழின நலத்தைப் பொறுத்த வகையில்—தமிழ்நிலத்தின்



தெளிவான சிந்தனையையும், முன்னறிவுத் திறமையுமே காட்டுவனவாக அமையும்.

அது போலவே, இப்பொழுது தமிழீழத் தமிழர்களின் மல் திடுமென அக்கறை காட்டி, உணவுப் பொருள்களையும், மருந்துகளையும் இந்தியா உதவியதும் ஒரு பச்சையான வஞ்சகமான, கரவான நாடகம் என்பதையும், இப்பொழுது இந்த உதவியை வரவேற்று நிறைவடையும் தமிழ்த் தலைவர்களும், வடபுல அரசியல் எதிர்க் கட்சித் தலைவர்களும், ஏன்—தமிழீழப் போராளிகளும் கூட—இதன் உண்மையை விரைவில் உணரவே செய்வர்! இ'து ஒருபுறம் இருக்கட்டும்.

தமிழீழ நேரடிப் போராட்டம் தொடங்கிய 1983-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, இந்திய அரசினரின் கணக்குப் படியே வைத்துக் கொள்வதானாலும் ஏறத்தாழ பத்தாயிரம் தமிழர்கள்--ஏதும் அறியாத பொதுமக்கள்—இலங்கையில் மாண்டு மடிந்திருக்கின்றனர். உண்மைக் கணக்கில் இத்தொகை இரண்டு மூன்று மடங்காகப் பெருகியிருந்தாலும் வியப்படைவதற்கில்லை. இன்றைய நிலையில் இலங்கைச் சிறைகளிலும் படைத்துறைப் பாசறைகளிலும் 5000-க்கும் மேற்பட்டவர்கள் பணயச் சிறையாளிகளாக உள்ளனர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை, அங்குள்ள தமிழர்கள் மேல் நடத்திய இத்தனை அழிம்புகளுக்கும், அழிவுகளுக்கும் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்பதை வரலாறு மறக்காது; மன்னித்தும்விடாது. இவ்வகை நடவடிக்கைகளால் இராசீவும் செயவர்த்தனாவும் தமிழர்களுக்கு எதிரான இரட்டைப் பிறவிகள் என்பது வெளிப்படையானது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இராசீவ் ஏற்படுத்திக் கொடுத்த கால இடைவெளியே, செயவர்த்தனாவை இந்த அளவுக்கு வலிவடையவும் அகங்காரம் கொள்ளவும் செய்தது எனில் அதுவெறும் வெற்றுக் குற்றச் சாட்டாகாது என்பதை உண்மையிலேயே தமிழின நலம் நாடும் நடுநிலையாளர்கள் உணர்ந்து கொள்வர்.

இப்பொழுதும் இராசீவ் தொடங்கி நடத்திய உணவு, மருந்து உதவிகளும் ஒரு பொய்யான—போலியான நடவடிக்கையே என்பதைக் கீழ்வரும் விளப்பர ஆரவார உத்திகள் விளக்கும்:

தொடச்சத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு உதவப் போவதாக விளம்பரப் படுத்தப் பட்ட பொருள்கள் ஏறத்தாழ 3000 கல்லெடை (டன்)களாகும்! (1-6 87-ஆம் நாளைய செய்திப்படி) அஃதாவது 1000 க. எ. அரிசி, 1000 க. எ. சருக்கரை; 1000 க. எ. பருப்பு, பிற உணவு வகைகள்,மற்றும் பிறவும்-ஆகும். பின்னர் 2-ஆம் நாளைய செய்திப்படி அஃதாவது விளம்பரப்படி இந்த மூவாயிரம் கல்லெடை ஏறத்தாழ 1000 கல்லெடைப் பொருள்களாகக் குறைந்தன. 1000 க. எ. அரிசி, 850 க. எ. யானது. பருப்பு 50, உப்பு 5, காய்கறிகள் 8, உணவெண்ணெய் 18, புளி 150, சருக்கரை 100 க. எ. முதலியனவாகக் கழுதை தேய்ந்து கட்டெறும்பாயின. இறுதியாக 4-6-87-இல் உண்மையிலேயே வானூர்தி வழியாகச் சாய்க்கப்பட்ட பொருள்கள் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; வெறும் 22.5 கல்லெடைப் (டன்) பொருள்களே ஆகும். மலைபோல் விளம்பரம்! மண்ணாங்கட்டியளவு உதவி (உதவுவதற்காகக் கொண்டு சென்ற மீதி 2980 கல்லெடை உணவுப் பொருள்களும் என்ன ஆயினவோ? தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்குதுறை அதிகாரிகள், ஆட்சித்



துறையினர், மற்றும் மொய்த்ரா பேலும் நடுவணரசுத் துறை அதிகாரிகள் போன்றவர்களுக்குத்தான் வெளிச்சம்!

அதுவும் ஏறத்தாழ 30 இலக்கம் பேர்கள் வாழ்கின்ற இலங்கையில், ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் வாழும்—யாழ்ப்பாணப் பகுதிகளான ஆனைக்கோட்டை, உரும்பிராய், வடமாராச்சி, காங்கேசன் துறை, சாவகச் சேரி, சுன்னாகம் ஆகிய ஐந்து, அல்லது ஆறு ஊர்ப் பகுதிகளில் மட்டுந்தாம் உணவுப் பொருள்கள் போடப் பெற்றன. இனி, போடப்பெற்ற பொருள்களும் அஃதாவது பொட்டலங்களும் மரங்களின் உச்சியிலும், வீட்டுக் கூரைகளிலும், மக்கள் வாழாத வெட்டவெளிகளிலும், மக்கள் நடமாடாமல் படைத்துறையினரே நடமாடிக் கொண்டிருக்கும் தெருக்களிலும் விழுந்தன. விழுந்த உணவுப் பொருள் படைத்துறையினரே எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும்படி விழுத்தப் பட்டிருந்தன.

இனித் தப்பித் தவறிப் பொதுமக்கள் கைகளில் கிடைத்த பல பொருள்களையும் சிங்களப் படைத்துறை வீரர்களே அடித்துப் பறித்துக் கொண்ட செய்திகளும் நமக்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளன. இந்நிலைகளையெல்லாம் பற்றி என்ன சொல்வது? எவ்வாறு மதிப்பிடுவது? 'பிச்சை' கொடுத்ததாம் பெருமாளு; அதைப் பிடுங்கினதாம் அனுமாரு' என்று சொல்வார்களே, அப்படிச் சொல்வதா? இல்லை, 'அனுமாரு பிடுங்கும் என்று தெரிந்தும் பெருமாளு' 'பிச்சை' கொடுத்தது' என்பதா? இனி, 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்றபடி, இலங்கைத் தமிழர்க்கு இராசீவ் தந்த 'இத்தனையூண்டு' உதவியையும் பெறாமல் பெற்ற தமிழர்களுக்கு, மேலும் கிடைத்தது உயிர்ச்சேதந்தான்! உதவி கிடைத்த அரைமணிக்குள்ளாகவே 20 தமிழர்கள் உயிரோடு எரிக்கப் பட்டிருக்கிறார்கள்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இனி, உண்மையிலேயே அங்குள்ள தமிழர்களுக்குச் 'செய்தக்க' உதவியைச் செய்யாமல், செய்யத் தேவையில்லாத—காலத்தால் செய்யாத-இப் புல்லிய—பயனற்ற உதவியை இராசீவ் ஏன் செய்ய வேண்டும்? அவர் கருத்து தான் என்னவாக இருக்கும்?

1. இராசீவ் மேலும், இந்திய அரசின் மேலும் இச் சால் ஏற்பட்டுவரும், அரசியல், பொருளியல் குற்றச் சாட்டுகளிலும் குழப்பங்களிலும் மனம் செலுத்திக் கொண்டிருக்கும் பொதுமக்களைத் திசை திருப்புவது.

2. இந்தியா, இலங்கைக்குச் சார்பாக இருப்பதாகக் கூறப்படும் கருத்தை நீக்குவது.

3. உலக அரங்கில் தமிழர்களுக்கு உதவினதாகக் காட்டிக் கொள்வது.

4. இலங்கைத் தமிழர்களின் பேரழிவால் மனங் கொதித்துப் போயிருக்கும் தமிழகத் தமிழர்களின் எழுச்சிகளையும் போராட்டங்களையும் தடுப்பது.

5. அண்மையில் நடைபெறவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலில் தமக்கு வாய்ப்பான ஒரு சூழலை உருவாக்குவது.

6. போராளிகளைத் தமக்குச் சார்பாக ஆக்கிக் கொள்வது.

7. என்றென்றும் தமிழீழம் கிடைக்காமல் இருக்க மறைமுகமாக இலங்கைக்குத் துணைநிற்பது.

இவற்றைவிட வேறு என்ன காரணங்களுக்காக இவ்வுதவியை இராசீவ் செய்திருக்க முடியும்? நீங்கள்தாம் எண்ணிப் பாருங்களேன்!

—**தமிழ் நிலம்** : இதழ் எண்-87 (10.6.1987)

# 24. தமிழின மக்களிடம் இந்திய அரசு நடந்து கொள்வது கொடுமை !

**தமிழ்நாட்டில் தமிழரைக் காக்கின்ற**

**அரசாக அமையவில்லையே !**

**இவற்றுக்கெல்லாம் ஒரே விடிவு,**

**தமிழ்நாடு தனியாகப் பிரிவதே !**

மிகக் கரவாக, இந்திய அரசு அமைதி ஒப்பந்தம் என்னும் பெயரில், சிங்களக் கொடுங்கோலன் செயவர்த்தனாவுடன், கலந்து பேசி இலங்கைத் தமிழரின் நிலையான அடிமைத்தனத்திற்கு அடிகோலி விட்டது. அங்குள்ள போராளிகள் பல வகையான அரசியல் சூழ்ச்சிகளுக்கும் இடையில் மிகவும் வஞ்சகமாக ஏமாற்றப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்கூட அவர்கள் விரித்த சூழ்ச்சி வலையில் விழுந்து விட்டது என்றால், பேசுவதற்கு வேறு என்னதான் இருக்கிறது? நிலைகள் எல்லாமும் தலைகீழாக மாறி விட்டன. அமைதிப்படை என்னும் பெயரால், இந்தியப் படையினர் வலிவான போர்க்கருவிகளுடன், ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் இலங்கை மண்ணில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகளில் தேக்கி வைக்கப் பெற்றுள்ளனர்.

அமைதியை நிலை நாட்டுவதற்கே கருவிகள் தேவைப் படுகின்றன என்றால், தங்கள் உரிமை நலன்களைக் காத்துக் கொள்வதற்காகக் கருவிகளை வைத்துக் கொள்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கிறோம்' என்று போராளிகள் கேட்பதில் என்ன தவறு? ஏறத்தாழ ஐம்பதாயிரம் பொது மக்களையும் ஆயிரக் கணக்கான போராளிகளையும் காவு கொடுத்த பின்னால், மிகவும் கரவுத்தனமாகத்-தந்திரமாகப் போராளிகளிடம் உள்ள கருவிகள் வாங்கப்பட்டிருக்கின்றன, சில விடங் களில் பறிக்கப்பட்டிருக்கின்றன என்றால், இலங்கைத் தமிழினத்துக்கு இந்தியப் படைகளால் என்ன பாதுகாப்பு ஏற்பட்டு விடும் என்று கருதுகிறார்களோ தெரியவில்லை.

திலீபனின் பெரும் ஈக மறைவிற்குப் பிறகு, மேலும் விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பதினைந்து பேர், சிங்களப் படையினரின் கைகளில் அகப் பட்டு, அவர்களால் மாய்க்கப்படும் முன்னர், தாங்களே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்றால் நிலைமை அங்கு எத்துணை கொடுமையாக உள்ளது என்பதை உய்த்துணர முடிகிறது.

இங்கும் சரி, அங்கும் சரி, தமிழின மக்களிடம் இந்திய அரசு நடந்து கொள்ளும் முறை கொடுமை! கொடுமை! இதற்கெல்லாம் காரணம் தமிழ் நாட்டில் தமிழரைக் காக் கின்ற அரசாக அமையாமல், காட்டிக் கொடுக்கின்ற அரசாகவன்றோ அமைந்திருக்கிறது! மொத்தத்தில் இங்குள்ள தலைவர்களின் தந்நலப் போக்கினால்தான்) தமிழ்மக்கள் மிகவும் துயர்ப்பட வேண்டியுள்ளனர். அவர் களின் முயற்சி காலம்கருதியதாக இருப்பின், தமிழினத் திற்கு ஒரு விடிவு எப்பொழுதோ தோன்றியிருக்கும். அவ் விடிவு தமிழ்நாடு தனியாகப் பிரிவதே!

—**தமிழ்நிலம்:** இதழ் எண்.92 (10-10-87

# 25. இராசீவ்காந்தியின் நோக்கம் தமிழர்களை அடியோடு அழித்து ஒழிப்பதே!

## இங்குள்ள பழனியாண்டி, செயகாந்தன், மூப்பன், சிதம்பரன்களின் நோக்கம் அதற்குத் துணை போவதே!

இராசீவ் காந்தியும் செயவர்த்தனேவும் ஒரே ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேர்களுக்கும் நேர் எதிரியினம் தமிழினமே! நேரு காலத்திலிருந்தே இந்தியா வில் ஆரிய இனத்திற்குத் தலையாய நேர் எதிரியினமாகத் தமிழினத்தைக் கருதும் உணர்வு படிப்படியாக மேலோங்கி வந்திருக்கிறதை வரலாற்றடிப்படையில் அரசியல், இன நோக்கு உடையவர்கள் நன்கு உணரமுடியும்.

தமிழீழப் போராட்டத்தை இந்திராகாந்தி ஒரு வாறான இனவிடுதலைப் போராட்டம் என்று ஒப்புக் கொண்டிருந்தாலும், இலங்கையில் தமிழர்கள் சிங்கள அரசால் அழிக்கப்படுவதை நேரடியாகக் கண்டிக்கவோ தடுத்து நிறுத்தவோ முடியாமல் - விரும்பாமல் இருந்த தையும் எல்லாரும் அறிவர்.

இலங்கையில் தமிழர்கள் பெருவாரியாக அழிக்கப் பட்டுக் கொண்டிருக்கையில் ஒருபுறத்தில் தமிழீழப் போராளிகளை ஊக்குவதுபோல் ஊக்கிக் கொண்டே,



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மறுபுறத்தில், செயவர்த்தனேவுக்கும் அவர் சார்பாளர்க்கும் இந்திராகாந்தி பலமுறை வரவேற்புக் கொடுத்தும் வாழ்த்துப் பாடிக்கொண்டுமே இருந்ததுடன், மறைமுகமாக அங்குத் தமிழர் அழிபடுவதையும் தூண்டிவிட்டுக் கொண்டு இருந்தார்.

இது தொடர்பாகவும், இன்னும் இந்திய மண்ணில், அசாம், பஞ்சாப், நாகாலாந்து, திரிபுரா, தமிழ்நாடு முதலிய மாநிலங்களில் ஏற்பட்டுவரும் தேசிய இன எழுச்சிகளை அடக்கி ஒடுக்குவது தொடர்பாகவும், அரசுச் சார்பான முயற்சிகளை மிகுதியாக விளம்பரப்படுத்தவும், தேசிய இன முயற்சிகளின் ஞாயங்களையும் அவற்றின் போராட்டங்களையும் முறியடிக்கவும் அவற்றின்மேல் பொய், புளுகு முதலிய திரிபுக் கருத்துகளைப் பரப்பவும், அவற்றை வன்முறைப் போராட்டங்கள் என்று கருத்துப்பரப்பி மக்களிடை அவற்றின்மேல் வெறுப்புண்டாக்கவும், தேசிய ஒருமைப்பாட்டில் விருப்புண்டாக்கவும், நாடு முழுவதும் பரவலான கருத்துப் பரப்புதலுக் கேற்றவகையில், வானொலி, தொலைக்காட்சி வாய்ப்புகளை, இந்திராகாந்தி விரிவு படுத்திக் கொண்டார்.

இனி, இந்திராகாந்திக்குப் பின், அவர் மகன் இராசீவும் தாய்போன வழியிலும், அதை விட இன்னும் மிகையாகச் செய்கின்ற முறையிலும், அரசுக் கருவிகளைத் தந்திரமாகவும், தமக்கே உரிய வகையிலும் ஆழமும் அகலமும் படுத்திக் கொண்டார். அத்துடன் நில்லாது, இந்திரா கையாண்ட அதே பிரித்தாளும் தந்திரத்தைத் தமிழீழ விடுதலைக் குழுக்களிடம் பயன்படுத்தி, அவர்களுக்கிடையில், உளவுப் படைகள் மூலமாக, வெளிப்



படையாகவும் நிலையாகவும் பிளவுகளை உண்டாக்கி அவர்களை ஒருவரால் ஒருவர் அழிபடவும் செய்தார் ஒன்றுபட்டு விடாமல் இருக்கவும் பார்த்துக் கொண்டார்.

ஆக, இந்திய அரசால், தமிழீழப் போராளிகள், தங்களுக்குத் தாங்களாகவே, எதிர்த்து நின்றும், சிங்களவர்களாலும், உளவுப் படைகளாலும் சிறிது சிறிதாகச் சிதைக்கவும் அழிக்கவும் பட்டனர்.

இதற்கெல்லாம் தலையாய காரணம் தமிழர்கள் தமிழீழத்திலோ, அதன் பின்னர் தமிழ்நாட்டிலோ ஆட்சி உரிமையோ, விடுதலையோ பெற்றுவிடக் கூடாது என்று இராசீவ் ஆரியக் கும்பல் உறுதியாக எண்ணியதே ஆகும். அவ்வாறு தமிழர்கள் இந்தியாவிலோ, அல்லது இலங்கையிலோ ஆளும் உரிமை பெற்றுவிட்டால், இந்தியாவில் ஆரியப் பார்ப்பனரின் ஒட்டுமொத்த அதிகாரத்திற்குச் சரிவு ஏற்பட்டு விடும் என்று அவர்கள் அஞ்சுவதே காரணம். இந்த இனவியல் அடிப்படைக் காரணத்தை இங்குள்ள அரசியல், பொருளியல் கட்சிகள் நன்றாகவும், முழுமையாகவும் விளங்கி கொள்ள வியலாது; வெளிப்படையாகச் சொன்னால் விளங்கிக் கொள்ளவும் விரும்புவதில்லை. அதற்குக் காரணமாக இருப்பதும் தமிழர்களைப் பற்றி அவர்களுக்குள்ள ஒரு மதிப்பீட்டுக் குறைவுதான்.

(இந்த அடிப்படையான உண்மைகளை உணராதவர்கள் தமிழீழத்தின் போராட்ட நிலைகளில் இந்தியாவின் தலையீட்டை அவரவர்களுக்குத் தெரிந்த சிற்சில வெளிப்படையான காரணங்களைக் கற்பித்துக் கொண்டு பற்பலவாறு மதிப்பிட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றதை நாம் பார்த்து வருந்தியிருக்கிறோம். ஆனால் என்ன,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

செய்வது? காலந்தான் அவர்களுக்கு இவ்வகையில் ஒரு தெளிவை உண்டாக்க வேண்டும்.)

அதனால்தான், பாலத்தீன விடுதலை இயக்கத்தை ஏற்கும்—யாசர் அராபத்துக்கு அடிக்கடியும், பல சிறப்புகளுடனும் வரவேற்புக் கொடுக்கும் இராசீவ்காந்தி, தமிழீழ விடுதலையை ஏற்க மறுக்கிறார். இவர்களின் போராட்டத்தை வன்முறை என்கிறார்.

இன்னும் வெளிப்படையாகச் சொல்வதனால், அவர் நமீபியா விடுதலை இயக்கத்தை வரவேற்பதும், தென்னாப்பிரிக்காவில் வெள்ளையரின் இனவெறிக் கொள்கையைக் கண்டிப்பதும், தாய்லாந்து புரட்சிக்கு உடனடியாக ஆதரவு தெரிவித்ததும், அவரை உலக அரசியல் அரங்கில் உயர்த்திக் கொள்ளும் கரவான நடவடிக்கைகளே!

இல்லெனில் தமிழீழப் போராளிகளின் தமிழீழக் கோரிக்கையை என்றுமே - இத்தனையாயிரம் தமிழர்களின் சாவுக்குப் பின்னரும் எதிர்த்துக் கொண்டிருப்பாரா, இராசீவ்காந்தி? அத்துடன் நில்லாது அவர்களின் உண்மையான வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தையும், அவர்களையும், வன்முறை, என்றும், தீய ஆற்றல் (சக்தி)கள் என்றும் கொச்சையும் அவமானமும் படுத்திப் பேசுவாரா? இல்லை, உலகிலேயே இன்றுவரை பிறந்த எந்த அரசியல் கொடியவனையும் நல்லவனாக்கி விடுகின்ற அளவுக்கு மக்கள் அழிவை உண்டாக்கிக் கொண்டிருக்கும் செயவர்த்தனேவுக்கு வெளிப்படையான ஆதரவும் மறைமுகமான ஊக்கமும் கொடுத்துக் கொண்டிருப்பாரா?



1983-இலேயே கடுமையாகி விட்ட தமிழீழம் போரை, பலநூற்றுக்கணக்கான தமிழர்களின் அழிவுக்குப் பின்னரும் 1985 வரை இழுத்து நீட்டிக்கச் செய்து திம்புப் பேச்சைத் தொடங்குவாரா? இனி, திம்புப் பேச்சிலேயே போராளிகளின் ஒரே நோக்கைத் தெளிவாகக் கண்டு கொண்ட இராசீவ் 1987வரை, அந்தப் பேச்சு, இந்தப் பேச்சு, அந்தத் தூதுவன், இந்தத் தூதுவன் என்று இழுத்து இழுத்துக் காலத்தைக் கடத்தி-இவ் விடைக் காலத்தில் செயவர்த்தனா வலிவடையவும், போராளிகள் மெலிவடையவும் செய்து, 1987 இறுதியில், செயவர்த்தனாவையும் ஓரங்கட்டிவிட்டு, இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பி, யாழ்ப்பாணத்தைத் தரம் கையாகப் படுத்தவும், புலிகளை அழிக்க முற்படவும் நேரடியாகப் போர் தொடுப்பாரா?

ஆப்பிரிக்க நாடான சைரேவுக்குச் சொந்தமான வானூர்தியைப் போர்த்தளக்கல் வாடகைக்கு எடுத்து, 419 கடுமையான போர்க் கருவிகளையும், 15 . 20 கல்லெடையுள்ள வெடிமருந்துகளையும் இலிசுபனில் ஏற்றி இலங்கைக்கு அனுப்ப — அந்த வானூர்தி எரிபொருள் தீர்ந்துபோகவே, திருவனந்தபுரத்தில் வந்து 9.2.85இல் இறங்க—அதை அங்குள்ள இந்தியக் காவல்துறை தலைப்படுத்த, 'அக் கருவிகளில் என்ன, தமிழர்களைக் கொல்வதற்காக என்றா எழுதப்பட்டுள்ளது' என ஏகத்தாளம் பேசி, அவ் வானவூர்தியை இலங்கைக்கு விடுவிக்க இராசீவ்காந்தி கட்டளையிட்டாரே, அப்பொழுதே வெளிப்படையாகத் தெரிந்து விட்டது, இவர் தமிழினத்தை ஒட்டுமொத்தமாகவே அழித்தொழிக்க செயவர்த்தனாவுடன் கூட்டுச் சேர்ந்து விட்டார் என்னும் கரவான உள்நோக்கம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஆகத்து, 85-இல் இவர் உறுதிமிகு கொள்கையாளர்களான புலிகள் இயக்கக் கருத்தாளர் பாலசிங்கத்தையும், 'டெலோ' இயக்கத்தைச் சேர்ந்த சத்தியேந்திராவையும், 'புரொடெக்' இயக்கத்தைச் சேர்ந்த சந்திரகாசனையும் நாடுகடத்தித் தமிழீழ விடுதலைப் போராட்ட வேகத்தை நயச் சூழ்ச்சியாக அழிக்க முன்பே திட்டமிட்டார். ஆனால், மக்கள் எழுச்சியால் மண்டியிட்டார். நாடு கடத்தப்பட்டவர்கள் மக்கள் கிளர்ச்சியால் வரவேற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

ஆனால், இப்பொழுதும் கூட, கடந்த அக்டோபர் மாதம் அமைதிப்படை எனும் பெயரால் இலங்கைக்கு அனுப்பப் பெற்ற இந்தியப் படையைக் கொண்டு தமிழீழப் புலிகளை அடியோடு அழிப்பதும், அதன் வழி தமிழின முன்னேற்றத்தின் ஆணிவேர் சல்லிவேர்களையெல்லாம் அக்கக்காக அறுத்தெறிவதுமே இராசீவ் காந்தியின் மறைமுகத் திட்டமாகும். இஃது ஒன்றும் கணிப்பாகவோ கற்பனையாகவோ நாம் சொல்வதில்லை. இராசீவ்காந்தியே தம் வாய்மூலமாகத் தெரிவித்த கருத்தாகும். 'விடுதலைப் புலிகளை அடியோடு அழித்தொழிப்பதுதான் இந்தியப் படையின் வேலையாகும்' என்று அவர் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை அழிப்பது என்றால், தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தை ஒழிப்பது என்பதுதானே பொருள். உரிமையை ஒழிப்பது என்பது இனத்தை நிலையாக அடிமைப்படுத்தும் செயல். ஓர் இனத்தை நிலையாக அடிமைப்படுத்துவதும் அதை ஒழிப்பதும் ஒன்றுதான். அதன் பின்னர் ஓர் இனத்திற்கு உரிமை வாழ்க்கை என்பது என்ன இருக்கிறது? என்றென்றும்



அடிமையாகவே கிடந்து, மண்ணோடு மண்ணாக மட்கிப் போக வேண்டியதுதானே !

இவ்வாறான இராசீவின் மறைமுகத் திட்டத்திற்கும் நேரடி முயற்சிக்கும் ஆதரவு காட்டிக் கை கொடுப்பதே இங்குள்ள பழனியாண்டி, செயகாந்தன், சிதம்பரம், மூப்பன் போலும் சோற்றுக்குக் கையேந்திகளின் நோக்கமும், செயலுமாகும். மற்றபடி இங்குள்ள 'சோ'க்களின் முயற்சி பற்றி நாம் சொல்ல என்ன இருக்கிறது? அஃது அவர்களுடைய இனப் பணியாகும். ஆனால் பழனியாண்டிகளுக்கும், செயகாந்தன்களுக்கும் சிதம்பர, மூப்பன்களுக்கும் என்ன வந்தது? தாங்கள் உண்ணும் பீச் சோற்றுக்காகத் தங்கள் இனத்தையே காட்டிக் கொடுக்கும் - அடகு வைக்கும் — கருவறுக்கும்—செயல் தானே அவர்கள் செய்வது?

எனவே தமிழர்கள் மிக எச்சரிக்கையாக இருந்து, இப்பொழுதுள்ள கால நிலைகளை நன்கு உணர்ந்து, சூழலை அறிந்து, இவ்விக்கட்டான இடர்ப்பாடான நிலைகளிலிருந்து, கடந்த மூவாயிரமாண்டு ஆரிய—தமிழர் போராட்டத்தில் அழிந்து போகாமல் மிச்சம் மீதியுள்ள தமிழினத்தையாகிலும் அழிபடாமல் காத்துக் கொள்வார்களாக

— தமிழ் நிலம் : இதழ் எண்: 94 (10-11-87)

## 26. பார்ப்பனீய முதலாளியங்களின் இன, அரசியல் கருத்துகள் இருக்கும் வரை

# இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை உணர்வுகள் வெற்றி பெறா! பிரிவினை உணர்வும் வளர்ந்தே தீரும்!

இந்தியாவைப் பொறுத்த அளவில், வேறு எந்த நாட்டையும் விட, ஆளுகின்ற இனம், ஆளப்படுகின்ற இனங்களைவிட மிகக் கொடுமையானதும், சூழ்ச்சி மிக்கதும், மக்கள் மேல் அன்பில்லாததும், மக்களை விலங்குகளுக்கும் கீழான தன்மையில் மதிப்பதும், பிறவியிலேயே வேறுபாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கற்பிப்பதும் ஆன ஓர் இனமாக இருப்பது, இங்குள்ள மக்கள் அனைவருமே என்றென்றைக்கும் கவலைப்படுகின்ற ஒரு செய்தியாக இருக்கிறது.

ஆம்! இங்குதான் ஆரியப் பார்ப்பனர்கள் அரசியலில் ஆளும் இனத்தவராகவும், பொருளியலில் கொழுத்த முதலாளிகளாகவும், குமுகாய அளவில் உயர்ந்த மேலாண்மை (மேலாதிக்கம்) உள்ள இனமாகவும், மத நிலையில் அதிகாரத் தலைமைப் பிரிவாகவும், சாதி நிலையில் தலைமைச் சாதிக் குலமாகவும் தங்களை மேலேற்றி நிறுத்திக் கொண்டு, இந்த நாட்டு மக்களை மிகக் கீழாகப் போட்டு, அவர்களை முன்னேற விடாமல் அழுத்தி மிதித்துக் கொண்டு உள்ளனர். இது வேண்டுமென்றோ, வெறுப்பாலோ, மிகைப்படுத்தியோ சொல்லப் பெறுவதன்று; முழு உண்மையாகக் கூறப்பெறுவது.



ஆசிய ஆரியர்களான இந் நாட்டுப் பார்ப்பனர்கள், ஐரோப்பிய ஆரியர்களான வெள்ளைக்காரர்கள் இந் நாட்டை விட்டு வெளியேறும் பொழுது, அவர்கள் விட்டுச் சென்ற ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டதுடன், அவர்களின் வருகைக்கு முன்பிருந்தே தாங்கள் கைப்பற்றி மேலோங்கியிருந்த இன, மத, குமுகாய, கலை, பண்பாட்டு வல்லாண்மைகளை அழுத்தமாக நிலைப்படுத்திக் கொண்டனர்.

அதன் பின்னர், கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாகப் பார்ப்பன வணிக வல்லதிகார ஆட்சியாக ஒரு காசுமீரப் பார்ப்பன நேரு குடும்ப ஆட்சியாகவே— இந்திய ஆட்சி நடந்து வந்தது. நேரு, இந்திரா, இராசீவ் —என்னும் முப்பார்ப்பனக் கொடுந்தலைமை முழு வல்லாண்மை ஆட்சியில், இந்தியாவில் வேறு எந்தத் தேசிய இனமும் அதிகாரத்திற்கு வரவொட்டாமல் அடக்கி ஒடுக்கப் பெற்றது. தமிழினத்தின் நிலைகளையோ சொல்லவே வேண்டுவதில்லை இந்தியத் தமிழ்நிலத்தில் தமிழர்கள் எத்துணையளவு துன்பமும் துயரமும் பட்டார்களோ, உரிமைகளை இழந்தார்களோ, அதைவிட இலங்கைத் தமிழ்நிலத்தில் அங்குள்ள தமிழர்கள் அங்கும் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த அதே ஆரியப் பார்ப்பனர்களான சிங்கள ஆட்சியினரால் அடக்கியொடுக்கிக் கொடுமைப்படுத்தப்பட்டுக் குற்றுயிராயும் கொலையுயிராயும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைக்காக, அங்குள்ள தமிழ் இளைஞர்கள் பல்வேறு குழுவினராகப் பிரிந்திருந்தாலும், கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகக் கருவிப்போர் நடத்திப்போராடி வருவதை உலகமே வியந்து கவனித்துக் கொண்டுள்ளது. அவ்வாறு போராடி வருகின்ற அனைத்துக் குழுக்களிலும்,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மிகவும் வலுப்பெற்ற பிரிவாக, இறுதி வரை தம் ஒரே கொள்கை **'தமிழீழ விடுதலைக் கொள்கையே'** என்னும் இலக்குடன் போராடி, இலங்கையின் வடக்குப் பகுதியிலுள்ள தமிழீழத்தை இன்றைக்கு முழுவதும் தன் கையகப் படுத்தியுள்ள, **பெருமாவீரன் பிரபாகரன்** தலைமையிலுள்ள **விடுதலைப்புலிகள்** குழு இருந்து வருவது, உலகத் தமிழினத்தை மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கும் உள்ளாக்குகிற ஒரு சிறப்புச் செய்தியாகும்.

தொடக்கத்தில் **பெருமாவீரன் பிரபாகரனை** குருவிக் குஞ்சைப் போல் நசுக்கிக் கசக்கிப் பிழிந்து விடலாம் என இங்குள்ள பார்ப்பனீய அரசு கனவு கண்டது! அதற்காகச் சில சூழ்ச்சிக் கோணங்கள் (வியூகங்கள்) அமைத்து, இங்குள்ள படையைத் தந்திரக் கரவாக அங்கு அனுப்பி, முற்றிலும் தமிழர்களையும் தமிழின வரலாற்று நாயகன் பிரபாகரனையும் அழித்தொழிக்கத் திட்டமிட்டது; ஏறத்தாழ இரண்டாண்டுகளாகியும் இரண்டாயிரங்கோடி உருபா செலவிட்டும், அவ் விமயமலை வீரனை இம்மியும் அசைக்கவும் முடியாமல், எதிர்த்தும் நிற்க இயலாமல் தோல்வி வெட்கத்துடன் இந்தியா திரும்பியது. அதற்குள் இராசீவின் கொடுங்கோலாட்சிக் கதையும் முடிந்து போனது. அதுவுமின்றித் தமிழகத்திலும் தி.மு.க. ஆட்சி வந்தது. தில்லியிலும் தேசிய முன்னணி, ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனாலும், இலங்கையில் பிரபாகரன் வலிமை பெற்றிருப்பது பார்ப்பனர்களுக்குப் பிடிக்கவில்லை.

தமிழகத்திலுள்ள கலைஞராட்சிக்கும், தமிழீழத்தில் வலிமை பெற்றுள்ள விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புடுத்தி அவ்வப்பொழுது எதையேனும் தேசிய முன்னணி அரசுத்தலைமைக்கு எரிச்சல் வரும்படி சொல்லிக்கொண்டு



வருகின்றனர். அத்துடன் தமிழகத்திலும் வன்முறை, பிரிவினை உணர்வு, அவற்றுக்குக் கலைஞர் ஆதரவு என்றெல்லாம் கூறி, நடுவணரசு உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தூண்டி வருகின்றனர்.

இந்த நிலையில், பார்ப்பனர்களுக்கு நாம் வெளிப்படையாக ஒன்றைச் சொல்லிக் கொள்ளுகிறோம், "இந்தியாவில், பார்ப்பனீய, முதலாளியங்களின், இன அரசியல் தாக்குதல்கள் இருக்கும் வரை இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்னும் போலியுணர்வுகள் வெற்றி பெறப்போவதில்லை. மாறாக அவற்றுக்கு இனி என்றுமே தோல்விதான்! அது மட்டுமன்று, அவ்வினம் அஞ்சிக் கொண்டிருக்கும் பிரிவினை உணர்வும் வளர்ந்தே தீரும்"- என்பதைப் பார்ப்பனர்கள் ஆழமாகத் தங்கள் உள்ளங்களில் பதித்துக் கொள்வார்களாக!.

—தமிழ் நிலம் : இதழ் எண்: 137 (30-4-90)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 27. தொலைக்காட்சி ‘இராமாயணம்’ ஆரிய திராவிடப் போரை, மீண்டும் தட்டி எழுப்பும்படி அமைந்திருக்கிறது!

**இராமாயண ஒளிபரப்பு நோக்கம்**
**தமிழின வெறுப்பை வளர்ப்பதே!**
**இராவணன் வழியாகத் தமிழினத்தை**
**அவமானப் படுத்துகின்றனர்!**

கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் தில்லித் தொலைக் காட்சியின் ஒளிபரப்பில், இராமாயணம் ஒளிப்பரப்பாகி வருவதை அனைவரும் அறிவர்!

இலங்கையில் விடுதலைப் போர் தொடங்கியுள்ள இந்த நேரத்தில், திட்டமிட்டுத் தில்லி ஆட்சியால் இராமாயண ஒளிபரப்பு நடந்து வருவது, தமிழினத்தின் வலிவைப் பழங்கதைகளைக் காட்டி ஒடுக்குவதற்கே உதவும் என்பதை, அதன் கதைப் போக்கையும் உரையாடல்களையும் நிகழ்ச்சிகளையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் அனைவரும் உணர முடியும்.

உரையாடல்களுக்கு நடு நடுவே ஆரிய — திராவிட இனவுணர்வுகள் தூண்டப்படுவதை அனைவரும் அறியலாம்.



தமிழினத்தை இழிவுபடுத்தும், கோழைமை வாய்ந்ததாகக் காட்டும் காட்சிகளும் உரையாடல்களும் தமிழர் மனத்தை மிகவும் புண்படுத்துவனவாக உள்ளன. பொதுவாகத் தொடக்கத்திலிருந்தே இடையிடையே உள்ள உரையாடல்கள் தமிழின மக்களை—திராவிட இன மக்களைக் கீழ்மைப் படுத்துவனவாகவே அமைந்து உள்ளன.

குறிப்பாகச் சென்ற கிழமை, 6-3-88-இல் ஒளிபரப்பான காட்சியில், இந்திரசித்து, இராவணன் அவையில் நடந்து கொண்ட காட்சிகளும், பேசிய உரையாடல்களும் இராவணனையும், அவன் அவையினரையும் மட்டும் இழிவுபடுத்தவில்லை; தமிழினத்தையே அவமதிப்பனவாகவும் இழிவுபடுத்துவனவாகவும் அமைந்திருப்பதைக் காண, கேட்க மனம் மிகவும் புண்பட்டுப் போனது.

கதைப்படியே எடுத்துக் கொண்டாலும், இராவணன் மிகப் பெரும் வீரன். கோழை உணர்வு கொண்டவனல்லன். நேர்மையாளன். ஒழுக்கத்தில் சிறந்தவன். அவன் தெய்வத்திற்கிணையாக வைத்துப் போற்றப் பெற்றவன். ‘இலங்கேசுவரன்’ ‘இராவணேசுவரன்’, என்றே அவன் புகழப்பெறும்படி வாழ்ந்திருக்கின்றான். யாரினும் அவன் இறைப்பற்றாளன்; தென்னாட்டுக்கே உரிய அறிவு மதமாகிய ‘சிவனிய’ மதத்தைச் சார்ந்தவன். நேரடியாகப் போரிலோ அறிவிலோ அவனை அவன் காலத்தில் வெல்லுவதென்பது யாராலும் முடியாததாகவே இருந்தது. மிகப்பெரும் இசைத்துறை வல்லுநன். இறை அருள் பெற்றவன். சிவனை நோக்கி எவருமே செய்ய இயலாத பெரும் தவமியற்றி அரிய ஆற்றல்களைப் பெற்றிருந்தான் என்று வால்மீகியே குறிப்பிடும் அளவுக்கு அவன் பெருமை அளவற்றது. அத்தகைய ஆற்றல்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

வாய்ந்த மாபெரும் திராவிட மாவீரனை, இராமன் என்னும் ஒரு கோழை பல சூழ்ச்சிகளால் வென்றான் என்பதே கதை !

இவ்வாறான அறிவும் திறமும் வீரமும், அரிய ஆற்றல்களும், கலை, பண்பாடுகளும்,ஒழுக்கமும் சான்ற அவனை, ஒரு மிகப்பெரும் கோழையாகவும் ஒழுக்கக் கேடனாகவும் தொலைக்காட்சி இராமாயணத்தில் காட்டப் பெறுவது கொடுமையிலும் கொடுமை! எந்த மானமுள்ள தமிழனும் பொறுத்துக் கொள்ள இயலாதது.

மேலும் இராமயணக் கதை என்பது எங்கோ, எப்பொழுதோ, நடந்த ஆரிய திராவிட இனப் போரையே அடிப்படையாகக் கொண்டதென்பதும், அதில் வரும் வாலி, சுக்கிரீவன், அநுமன் முதலிய வானரக் கூட்டம் என்பது திராவிட அஃதாவது தமிழினத்தவர்களே என்பதும், வீடணன் முதலியவர்கள் தமிழினத்தவரை ஆரியர்க்குக் காட்டிக்கொடுத்த வஞ்சகர்களே என்பதும்,சவகர்லால் நேரு உள்ளிட்ட வரலாற்றுப் பேராசிரியர்கள் அனைவரும் ஒருமுகமாகக் கருத்தறிவித்த பின்னும், தொலைக்காட்சியில், இப்படிப்பட்ட இராமாயணக் கதையைத் தம் அதிகார, ஆணவ, பண வலிவோக்கத்தின் மமதையால் தில்லி வட வராட்சியும், இராசீவும் திட்டமிட்டு நாடெங்கும் பரப்பி வருவது, மீண்டும், தமிழின ஒடுக்கத்திற்கே அல்லது அழிப்புக்கே வழியமைத்துக் கொடுக்கும் கரவான அமைதிப் போர்த் தந்திரமே ஆகும்.

எனவே, இதை மீண்டும் ஒளிபரப்பக் கூடாதென்று, தமிழின நலம் நாடும் தலைவர்களும் மானமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அறிக்கைகளும் கோரிக்கைகளும் விடுப்பதுடன், போராட்டங்களும் நடத்துதல் வேண்டும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010



தெரிந்தோ தெரியாமலோ, அல்லது உணர்ந்தோ உணராமலோ, தமிழினம் மிகக் கொடுமையான அரசியல் இனவியல் அழிவுச் சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், அது தன்னிடத்துள்ள இன, மத, சாதியக் கட்சி வேறுபாடுகளிலிருந்து தன்னை மீட்டுக் கொண்டு புறத்தே வரும் பருமனான இப் பகை நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ள முயற்சி செய்யவில்லையானால், இனி எதிர் காலத்தில் அது தன் ஒட்டு மொத்த வீழ்ச்சியினின்றும், அழிவிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள முடியவே முடியாது என்பதை அனைத்துத் தமிழர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தித் திணிப்பு என்பது மொழியாலும்,தமிழகத்தில் இப்பொழுதுள்ள குடியரசுத் தலைவர் ஆட்சியென்பது அரசியலாலும், இராமாயண ஒளிபரப்புப் போன்றவை இனத்தாலும், தமிழினத்தின் மேல் ஒட்டு மொத்தமாகச் சூழ்ந்திருக்கும் போர் முட்டங்களாகும். அத்துடன் இலங்கைச் சூழலால் தமிழின அழிப்பு வேலை ஏற்கனவே தொடங்கப்பட்டு நடந்து வருவதையும் நாம் அறிவோம். இந்த நிலையில் அரசியல் பதவிகளுக்காக இங்குள்ள தமிழர்கள் அடித்துக் கொண்டும் பிடித்துக் கொண்டும் கிடப்பது அறிவுடைமையாகாது.

தமிழினத் தாக்கங்களைத் தமிழகப் பொது மக்கள் உணரவில்லை. அவர்கள் உணராமல் இருப்பதற்கு நம் அரசியல் தலைவர்களே காரணம். அவர்களை ஏமாற்றி வாழ்வதே தலைவர்களது குறிக்கோளாகும். இந் நிலையில், தமிழின நல நாட்டமுடையவர்களே பெரும் அளவில் இம் முயற்சிகளில் பங்கு கொள்ள வேண்டும். அதனடிப்படையில் ஒரு பெரும் பேரினக் கிளர்ச்சி தொடங்கப் பெறுதல்

வேண்டும் அந் நிலையில் என்ன நடக்கும் ? தமிழகத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளல்ல; தொலைக்காட்சி நிலையங்களே உடைபடும் ! இந்தி எதிர்ப்பன்று, இந்திய எதிர்ப்பே இங்கு நடக்கும் ! இராசீவ் இல்லை; இராசீவ் இனமே இங்கிருந்து விரட்டியடிக்கப் பெறும். அது எப் போது ? காலம் விடை சொல்லும் !

—**தமிழ் நிலம்:** *இதழ் எண் : 101 (12-3-88)*

# 28 தந்திரங்களும், சூழ்ச்சிகளும் தமிழின மீட்சிக்கு உதவா! நேரிடையான போரே தேவை!

★ **தமிழகத்தில் வரிகொடா இயக்கத்தைத் தொடங்க வேண்டும் !**

★ **தில்லியிடம் போரிடாமல், தமிழீழ மக்களைக் காக்க முடியாது !**

★ **திராவிடக் கட்சிகள் மாநில எதிர்ப்பைக் கைவிட்டு நடுவணரசிடம் எதிர்ப்புக் காட்டவேண்டும்.**

★ **தமிழினத்தின் இறுதிக்கால முயற்சி இது !**

★ **துணிவுடனும், தெளிவுடனும் கொள்கைகளை வெளிப்படுத்துவது நல்லது !**

★ **பெரியார் செய்யத் தவறிய தனிநாட்டுப் போராட்டத்தை நாம் செய்வோம் !**

தமிழீழத் தமிழர்களின் போராட்டம் ஓர் உள்நாட்டு உரிமைப் போராட்டமாகவே உருவாகிவிட்டது. அங்குள்ள தமிழர்கள் ஒட்டு மொத்தமாகவே கொன்று குவிக் கப்படுகிறார்கள். அந்நிலையை உலகெங்கணும் உள்ள தமிழின மக்கள் தடுக்கவும் முடியாமல், எடுக்கவும் இயலா மல் தவியாய்த் தவிக்கிறார்கள். அவர்களுக்கு மிக அருகில் உள்ள தமிழ்நாட்டுத் தமிழர்களாலேயே ஒன்றும் செய்ய இயலவில்லை. மொத்தத்தில் தமிழினம் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருவதாகவே உணரலாம்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்நிலையில் நாம் என்ன செய்துவிட முடியும்? நம் நிலை அங்குள்ளவர்களின் நிலையைவிடக் கீழானது; கேடானது. நாம் இங்கு அடிமைகள். தில்லியின் துமுக்கிக் கைகளுக்கு நாம் ஆட்படாமல் போனாலும், அதன் அதிகாரக் கைகள் நம்மை மிகவும் அழிவுக்கு உள்ளாக்கி வருகின்றன. இக் காலக்கட்டத்தில் நாம் நம் உண்மையான கொள்கையைத் தெளிவாக வெளிப்படையாக அறிவிக்காமல், வெறும் அரசியல் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கொண்டு நம்மை மீட்டு கொள்ள இயலாது. நேரிடையான போராட்டங்களின் வழியாகவே, நம் இனத்தை நாம் விடுவிக்க முடியும். அந்த உணர்வுக்கு நம்மைத் தில்லிவடவர் கொண்டு வந்து விட்டனர்.

விரைவில் நாம் நம் கருத்துகளை-அரசியல் வெறுப்புகளை ஒத்துழையாமை இயக்க வழியாகவோ, வரிகொடா, இயக்க வழியாகவோ, தில்லிக்கு உணர்த்தியாக வேண்டும். தில்லியிடம் போரிடாமல், தமிழக மக்களையோ தமிழீழ மக்களையோ காக்க முடியாது. எனவே, இங்குள்ள, தமிழின நலம் நாடும் திராவிட இயக்கங்கள், கட்சிகள் அரசியல் முறையில் இங்குள்ள மாநில அரசை எதிர்த்துக் கொண்டிருப்பதைக் கைவிட்டு, உரிமை முறையில், நடுவணரசிடம் தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படையாகக் காட்டுதல் வேண்டும். தமிழினத்தின் இறுதிக் கால முயற்சி இது. எனவே மிகத் துணிவுடனும், தெளிவுடனும் கொள்கைகளை வெளிப்படுத்துவது நல்லது. அண்மையில் மயிலை மாங்கொல்லையில் நடந்த கூட்டத்தில் கலைஞர், 'இலங்கைத் தமிழர்களைத் தில்லியரசு காப்பாற்றத் தவறினால், இந்தியாவிலிருந்து தமிழகம் பிரியும்' என்று கருத்தறிவித்துள்ளார் (விடுதலை, சென்னை, 24-2-85). நாம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்திவரும் கருத்து இது. கலைஞர் இப்பொழுதாவது அதை வெளிப்படுத்தியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.



பெரியார் செய்யத் தவறிய அல்லது அவருடன் சேர்ந்து ஒத்துழைப்புத் தரத் தவறிய தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தை இப்பொழுது நாம் செய்யத் தொடங்க வேண்டும். தனித் தமிழகம் பிரியாமல், நமக்கென்று, ஒரு முழு இறைமைசான்ற உரிமைத் தமிழ் நிலத்தை அமைத்துக் கொள்ளாமல், தமிழினத்துக்குள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள இயலாது. இதை நாம் ஒவ்வொருவரும் வெளிப்படையாக வலியுறுத்தும் காலம் வந்துவிட்டது. நமக்குள்ளிருக்கும் அனைத்து வேறுபாடுகளையும் மறந்துவிட வேண்டும். நம் தனி நிலைகளைத் துறந்துவிட வேண்டும். நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்! தமிழ்நாடு தமிழருக்கே!

— **தமிழ் நிலம்**: இதழ் எண் : 52 (24-1-85)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 29. தமிழக விடுதலைக் கோரிக்கையே தமிழீழத்தையும் வென்றெடுக்க வல்லது!

நாமெல்லாரும் எதிர்பார்க்கும் அல்லது நம்பியிருக்கும் அளவுக்குத் தமிழீழம் அவ்வளவு அண்மையில் கிடைக்குமாறு தெரியவில்லை. அதற்கு அடிப்படையான காரணங்கள் மூன்று. ஒன்று, தமிழ்ப் போராளிகளிடம் நாம் விரும்புகிற மன இணக்கம் இன்னும் ஏற்படவில்லை; எனவே, ஒட்டுமொத்தமான, வலிவான ஒருங்கிணைந்த போராட்டத்திற்கு வாய்ப்பில்லாமலே இருக்கிறது. இரண்டு, கொடுமையும் கயமையும் நிறைந்த இலங்கை ஆட்சியினர் தம்மைப் பலவகையிலும் வலுப்படுத்திக் கொள்ள, அமைதிப் பேச்சுகள் என்னும் பெயரால் வழியமைத்துக் கொடுத்து விட்டது. மூன்று இந்திய அரசு தேன் தடவிய பேச்சாலும் நஞ்சு தடவிய நெஞ்சாலும் கரவாக நடந்து, இலங்கைக்கு மறைமுகமான ஆதரவும், நமக்கு வெளிப்படையான சொல்லளவு ஆறுதலும் தந்து கொண்டிருப்பதும், அதைத் தமிழீழப் போராட்ட இயக்கங்களுள் சில நம்பிக்கொண்டு கிடப்பதும் ஆகும்.

இம் மூன்று காரணங்களாலும் தமிழீழப் போராட்டத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டிருந்தாலும், அதன் நம்பிக்கையில் இன்னும் நமக்கு ஒரு சிறு தொய்வோ நெகிழ்வோ ஏற்படவில்லை. அல்வாறு ஏற்படவும் வாய்ப்பில்லை. நாம் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சொல்லி வருவதுபோல், இங்குள்ள பொருள்



வலிவுடைய தமிழின இயக்கங்கள், தமிழீழப் போராளிகளுக்கு ஒரு கணிசமான தொகையைக் கருவிகள் வாங்க, ஒப்பந்தத்தின் பெயரிலாகிலும் கொடுத்திருக்கலாம். அந்த ஒப்பந்தமும், நம் உதவியால், அவர்கள் தமிழீழம் பெற்றால், நம் தமிழ்நாட்டு விடுதலைக்கு அவர்கள் உதவ வேண்டும் என்பதாகவும் இருந்திருக்கலாம். இந்த நிலைகளையெல்லாம் நாம் இவ்வளவு வெளிப்படையாகப் பேசவேண்டிய தேவை ஏன் வந்தது என்றால், கமுக்கமாகப் பேசிக்கொள்ள நம் ஒருவருள்ளும் மனவொற்றுமையோ, நம்பிக்கையோ இன்னும் ஏற்படவில்லை என்பதால்தான்.

ஆனால், நம் கருத்துப்படி, அல்லது ஆசைப்படி, நடைபெறாமற் போனதற்குக் காரணம் இங்குள்ள தமிழின நலம் நாடும் கட்சிகள் அல்லது நாடுவதாகக் கூறிக்கொண்டுள்ள பணத்தால் வலிவுள்ள இயக்கங்கள் மனத்தால் மெலிவுள்ள அல்லது நலிவுள்ளவையாக இருப்பதுதான். நாம் (நம்மைப் பொறுத்தவரையில் ஒரு வகையிலும் வலிவான இயக்கமாக இன்னும் வளர முடியவில்லையே—அதுவும் ஒரு காரணந்தான்—என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வலிவிருந்தால் நாம் அவ்வாறு நடந்திருப்போமா என்பதைக் காலந்தான் உணர்த்திக் காட்ட முடியும்) ஆனால், இப்பொழுதுள்ள நிலையில் இதையெல்லாம் பேசி, நடக்கப் போவது ஒன்றுமில்லை. ஓர் ஆற்றாமைக்காகத்தான் இதைக் கூற வேண்டி உள்ளது, இது நிற்க

இனி, இக் கட்டுரைத் தொடக்கத்தில், தமிழீழத் தொய்வுத் தொடர்பாகக் கூறிய மூன்று காரணங்களை இனிமேலாகிலும் நாம் தவிர்த்துக்கொள்ள இயலுமா என்பது பற்றிப் பார்க்க வேண்டும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இவற்றுள் இத் தொய்வுக்கு முதல் காரணமாகக் கூறப்பெற்றது, தமிழீழப் போராளிகளின் இயக்கங்களுக்குள்ள ஒற்றுமையின்மை. இந்நிலை, இந்த அளவில் மட்டுமே நின்றிருந்தாலும் தாழ்வில்லை. அதனால் ஒன்றும் அவ்வளவு பெரிய இழப்புகள் நேர்ந்துவிடப் போவதில்லை. ஆனால், ஒற்றுமையில்லாத தன்மையை விட, தங்களுக்குள் ஒன்றையொன்று அழித்துக்கொள்கின்ற தன்மை அதிகமாகிக் கொண்டே வருவதுதான், நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாததாகவும் மிகவும் உள்ளம் நைய வேண்டியதாகவும் உள்ளது. தமிழினத்தின் பலவாறான உள்முகத் தன்னழிவுகள், இவ்வின முன்னேற்றத்தையே பெரிதும் தடைப்படுத்தி வருகின்றன என்பதை நம்முற்கால இக்கால அரசியல் வரலாறுகள் தெளிவாக உணர்த்துகின்றன. ஆனாலும், நாம் இதிலிருந்து இன்னும் மீள முடியாதவர்களாகவே உள்ளது, நம்மைப் பெரிதும் அழிவுக்குள்ளாக்கி அடியோடு அழித்து விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

வெறும் அரசியல் நிலைகளில், அஃதாவது, பதவிப் போராட்டப் போட்டிகளில் இவை இருப்பது போலவே, விடுதலைப் போராட்ட முயற்சிகளிலும் இருப்பது, இவ்வினத்தை என்றுமே ஈடேற்றாது என்பதை நாம் ஒவ்வொருவரும் உறுதியாக நெஞ்சில் இருத்திக் கொள்ள வேண்டும். இந்த இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சில பொதுக்குற்றங்களை நம்மில் ஒருவர் நம் இனநலம் பற்றிக் குறிப்பிடுகையில், நாம் ஒவ்வொருவரும் அக்குற்றம் நம்மிடம் இல்லாதது போலவும், பிறரிடம் இருப்பது போலவுமே கருதிக் கொள்கிறோம். ஏனெனில் பொதுமாந்த மனவியல்பு அப்படி. ஆனால், நம் போல் உண்மையிலேயே பொதுநலம் கருதுபவர்



களுக்கு அப்படிக் கருதிக் கொள்வது கூடாது. இங்கு உண்மையில்லாதவரும் உண்மையுள்ளவர் போல் நடிக்கின்றனர். உண்மையுள்ளவரும் உண்மையில்லாதவர் போல் பிறர் கருதுமாறு இயல்பாகவே நடக்கின்றனர். பெரும்பாலும் போலிகளுக்கே நடிக்க, முடிகிறது. உண்மைகள் நடிக்க இயல்வதில்லை. எனவே, நிலைகள் தடுமாறிப் போகின்றன. விளைவுகள் தலைமாறிப் போகின்றன.

நம் விடுதலைப் போராட்ட முயற்சிகளிலும் சில நிலைகள் இப்படித்தான் உள்ளன. ஆனாலும், எப்படியோ அம் முயற்சிகளை நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பாராட்டவும், ஊக்கவுமே செய்கின்றோம். என்றாலும், நம் பாராட்டும், ஆதரவும், ஊக்கமும் முழுவதும் பயன்படாத வகையிலும், அல்லது வீணாகிப் போகும் அளவிலும், அப் போராட்ட இயக்கங்கள் தங்களுக்குள்ளேயே பொருதிக்கொள்ளும் பொழுது நாம் என்ன செய்யமுடியும்?

நாம் அனைவரும் நமக்கென ஒரு பொது எதிரி, வரலாற்றுப் பகைவன் ஒருவன் இருக்கிறான்-என்பதை மறக்கவே கூடாது. அத்துடன் நமக்குள் பல வேறுபாடுகள் இருந்தாலும் சிறப்பான பொதுவான ஒரு நோக்கம் இருக்கின்றது, என்பதையும் நாம் மறந்துவிடவே கூடாது. ஆனால், இதை நாம் எங்கே செய்கிறோம்? நேர்மை பேசும், பொதுநலம் உண்மையாகக் கருதும்—அனைவரும் நாம் இதை ஒரு நொடிப் பொழுதேனும் எண்ணிப் பார்க்கவே வேண்டும். இதுவரை, (நம் மனச்சான்றின் பார்வையுடன் சொல்லுங்கள்) நாம் எண்ணிப் பார்த்தோமா? அவ்வாறு எண்ணிப் பார்க்கின்ற அன்றுதான் நம் முயற்சிகள் வலுப்பெறமுடியும். அதுவரை நம் அறிவு, இயக்கங்கள், முயற்சிகள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீரே! பாலை நில நிலவே !

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இனி, பேச்சு, பேச்சு என்று நாம் பேசுகின்ற கால இடைவெளிக்கு இடமே தரக்கூடாது. இந்தப் பேச்சால் முதலில், எதிரியின் தாக்குதல் குறைந்ததா? இல்லையே. மாறாக எதிரியின் கைகளையன்றோ வலுப்படுத்தியுள்ளது. இவ் விணக்கப் பேச்சு என்றைக்குத் திம்புவில் தொடங்கினதோ அன்றிலிருந்து இன்று வரை ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்னும் வகையில், நாளுக்கு நாள் மேலுக்கு மேல் சிங்கள வெறியரின் தாக்கங்களும் அழிவுகளும் அதிகமாகி உள்ளனவே தவிர, ஓர் எள்முக்கத்துணையும் குறையவில்லையே! இனியும் பேச்சு எதற்கு? இதைப் பேச்சு தொடங்கு முன்பிருந்தே சொல்லி வருகிறோம். இன்னும் போராளிகள் இதனை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பேச்சைத் தவிர்ப்பதால் சில விரும்பத்தகாத விளைவுகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருந்தாலும், அவற்றையும் நாம் வரவேற்கவே வேண்டும். சாகத் துணிந்தவனுக்கு கடல்நீர் முழங்கால் ஆழமன்றோ? ஒன்றால் நாம் அனைவருமே வாழ்ந்தாக வேண்டும். அன்றால் நாம் அனைவருமே போராடிச் செத்தாக வேண்டும்! இதில் பேச்சென்ன மூச்சென்ன? இப்பொழுது மட்டும் வாழவா வாழ்கிறோம்? செத்துக்கொண்டுதானே உள்ளோம்! எனவே, இனியும் எதிரி வலுப்பட நாம் கால இடையீடு தருதல் கூடாது.

அடுத்து, இந்தியாவின் அணுகுமுறையே கரவானது; ஓரவஞ்சனையானது; நயன்மையில்லாதது; நடுநிலையற்றது. நாம் இன்னும் அதை நம்பிக் கொண்டுதானே உள்ளோம். இதுவரை இராசீவ்காந்தியின் வாயிலிருந்து, இலங்கைப் பேயர்களைக் கண்டிக்கும் ஒரு சொல்லாகிலும் வெளியே வந்துள்ளதா? எவராவது சொல்ல முடியுமா? கண்டிக்கவே மனம்வராத அவர்களிடம், நன்மையான



முடிவை எதிர்பார்க்க முடியுமா? ஆனால், ஏனோ, எப்படியோ தெரியவில்லை, இந்தியாவின், இராசீவ் காந்தியின் கரவான, நம்மை மெலிவுபடுத்தும் முயற்சிகளில் இன்னும் நம் போராளிகளில் சிலர் நம்பிக்கை வைத்துள்ளனர். இது, நம் முயற்சிகளை எங்குக் கொண்டு போய் விடுமோ, தெரியவில்லை! அஃது அவர்களுக்கும், அந்த இராசீவ் காந்திக்குமே வெளிச்சம்! நம் கருத்துகள் காலத்தால் பொய் போகாதவை என்பதை அந்தக் காலமேதான் உணர்த்த வேண்டும். அதுவன்றி, வேறு வகையாக, நாம் இதைவிட வெளிப்படையாக எப்படி உணர்த்துவது?

இனி, இறுதியாகவும் உறுதியாகவும் நாம் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

தமிழீழம் கிடைத்துத்தான், தமிழ் நாட்டுக்கான முயற்சிகள் நடைபெற வேண்டும் என்பதாக இதுநாள் வரை, ஒருவகையாக, நாம் நம்பியிருந்தோம். ஆனால் இன்றைய நிலையில், தமிழீழ முயற்சிகள் அவ்வளவு நம்பிக்கை ஊட்டுவனவாக இல்லை. நம்பிக்கை இயல்பான நம் உள்ள ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பினும், தமிழீழப் போராளிகளின் செயல் முயற்சிகளும், நடைமுறைப் போக்குகளும் அந் நம்பிக்கையை உடைப்பனவாகவே உள்ளன.

எனவே, தமிழ்நாட்டுக் கோரிக்கையை நாம் உடனடியாக எழுப்பியாக வேண்டும். அதை இங்குள்ள தமிழினக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வெளிப்படுத்தியாக வேண்டும். இதற்காக நாம் எந்த நிலையிலும், யாருடனும் ஒன்றிணைய இரு கைகளை நீட்டி அணியமாக உள்ளோம். இந்தக் கோரிக்கைதான் இந்திய அரசை உடனடியாகத் தமிழீழத் தீர்வை நோக்கி நடையிடச் செய்யும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

உந்து வேகத்தைக் கொடுப்பதாக இருக்கமுடியும்! தமிழ் நாட்டில் இப்படியொரு கோரிக்கை, இலைமறை காயாக இருப்பது நடுவணரசுக்கும், இராசீவ் காந்திக்கும் தெரியும். இருப்பினும் அது, வெறும் குரல் கோரிக்கை யாகத்தான் இருக்கிறது என்பதாலும், அதைக் கை வைத் துப் பெரிதுபடுத்தக்கூடாது என்னும் தந்திர உத்தியாலும், இதுவரை, எந்தவகையான நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் முன்வராமல் இருக்கின்றனர். ஆனால், இங் குள்ள அனைத்து இனநலக் கட்சிகளும் ஓங்கி அக் கொள்கையை ஒரு பெரும் முழக்கமாக எழுப்பும்பொழுது, அவர்கள் கட்டாயம் அதைச் செவி மடுத்தே ஆகவேண் டும். அதன்பின் அவர்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் மிகு வேகமாகத் தீவிரமடையும் என்றா லும், அத் தீவிரந்தான், தமிழீழ நெருப்பை நீறுபூற்றி அணைக்க ஓர் உந்து விசையை அவர்களுக்குத் தரும். இந்த அணுகு முறை பயனளிக்குமே தவிர, எவ்வகையி லும் பயனில்லாமல் போகாது என்பதை உறுதியாக எண்ணிக்கொள்ள வேண்டும். மேலும், இந்தக் கோரிக்கை இங்கிருந்து எழுப்பப்பெறுமாயின், உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களின், ஒட்டுமொத்தமான விடுதலைக் குரலும் அக் கோரிக்கை முழக்கத்துடன் ஒன்றிணையும் என்பதில் ஐயமே இல்லை.

ஆனால், இங்கிருக்கும் ஏனோதானோபோக்குகளைக் கொண்ட இயக்கங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமே! அஃது என்று நடக்குமோ? பொறுத்திருந்துதான் சொல்ல முடியும்.

தென்மொழி : 21, ஓ 11 (செப்.-85)

# 30. பட்டாசு மருந்துகளை வெடி குண்டுகளாக்கித் தமிழீழ விடுதலைப் போராளிகளிடம் கொடுங்கள்! தமிழினம் உய்யட்டும்!

## பட்டாசுத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு வேண்டுகோள்!

தமிழனுக்குத் தேவையான உணர்வுகள் என்றுமே வளர்வதில்லை. தேவையில்லாத உணர்வுகள் மிகுதியும் வளர்ந்து விடுகின்றன. அடிமையுணர்வுக்கும் போலிப் பொழுது போக்குணர்வுகளுக்கும் இவன் என்றுமே பஞ்சை இளித்துக் கொண்டு அடிமைப்பட்டு விடுகிறான். தாய் மொழி உணர்வு, தன்னின உணர்வு, உரிமை உணர்வு, தமிழ்நாட்டு உணர்வு என்பன போன்ற வாழ்வியல் உணர் வுகள் என்றுமே இவனுக்குத் தேவையில்லாத உணர்வு களாக ஆகிவிடுகின்றன.

மூடநம்பிக்கைகள், விருந்து வேடிக்கைகள், பொழுது போக்குகள் என்றால், இவன் குடும்பம் குடும்பமாக அவற்றில் வீழ்ந்து கும்மாளம் போடத் துணிந்து விடு கிறான். இவன் கொண்டாடும் திருவிழாக்கள், 'பண்டிகை கள்' ஆகியவை நடைபெறும் காலத்தில், இவன் அரும் பொருளைச் செலவு செய்து வீணாக்கும் உணவுப் பண்டங் கள், விலைமதிப்பற்ற பொருள்கள், நேரங்கள் முதலிய வற்றுக்கு அளவே இல்லை. அறியாமையால் சில செலவு கள், பகட்டுக்காகச் சில செலவுகள். பொழுது போக்கு

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

காகச் சில செலவுகள் என அந்தக் காலங்களில் இவன் செய்யும் கூத்தாட்டங்களால் இவன் என்றென்றும் நிலையான அடிமையாகவே போய்விடுகிறான்.

அண்மையில் தீபாவளி என்னும் விளக்கணிவிழா வரவிருக்கிறது. இதன் பெயரே தமிழ் இல்லை. எனவே இவ்விழாவும் தமிழர்களுக்கானதில்லை என்று தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது இந்தியாவில் கொண்டாடும் விழாக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு திராவிடர்களுக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு உரியவை அல்ல.

ஆவணி அவிட்டம், விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை, தீபாவளி, கிருஷ்ணஜெயந்தி, ஸ்ரீராம நவமி, விஜயதசமி, மாசிமகம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், தமிழ் வருஷப்பிறப்பு, தெலுங்கு வருஷப்பிறப்பு, ஆடிக்கிருத்திகை, ஆடிஅமாவாசை, கோகுலாஷ்டமி முதலிய அனைத்தும் ஆரியப்பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கை, நலன்களுக்காக ஏற்படுத்திக் கொண்ட மூட நம்பிக்கை, புராண அடிப்படை கொண்ட விழாக்களே! இவற்றிலும் இவைபோலும் பிறவற்றிலும் வாழ்வியல் அறிவுக்கோ அறிவியல் அறிவுக்கோ பொருத்தமான செய்தி ஒன்றுகூட இல்லை.

இவற்றின் பெயர்களைப் பார்த்தாலே இவை தமிழர் விழாக்கள் அல்ல என்று வெளிப்படையாகத் தெரியும். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் சார்பில் நின்று இதை நாம் சொல்லவில்லை. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் சார்பிலேயே நாம் இதனைச் சொல்லுகிறோம். இவ் விழாக்களில் ஏதேனும் கடவுள் உண்மை உள்ளது என்று எவராவது மெய்ப்பிக்கமுடியுமா? மூடத்தனத்தையும் அறியாமையையும் விட இவற்றில் ஏதேனும் சிறு நன்மை உள்ளது என்று கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் எவரேனும் கூறமுடியுமா?



மக்களை ஏமாற்றி, மூடநம்பிக்கையில் ஆழ்த்தி, அவர்கள் விழிப்படையக் கூடாது என்பதற்காகவன்றோ இவ் விழாக்களை ஏற்படுத்தினார்கள் பார்ப்பனர்கள். அதுவும் பெண்களை அடிமைப் படுத்தும் தலையாய நோக்கமே இவ்விழாக்களுக்கு வேராக அமைந்து கிடக்கிறது. ஆண்களில் பெரும்பாலார் பெண்களைச் சார்ந்தவர்களே ஆகையால், மத, மூட, அறியாமை, அடிமைத் தனங்களில் அவர்களை ஈடுபடுத்தினால்தான், ஆண்களும் அவற்றைக் கைவிடாமல் பின்பற்றி வருவார்கள் என்பதுவே பார்ப்பனர் கொள்கை. பெண்கள் அடிமைத் தனத்தில் இரண்டு நன்மைகளைப் பார்ப்பனியம் எதிர் நோக்குகிறது. வருணாசிரம, சாதி வேறுபாடுகள் நிலையாக இருப்பதற்கும், இந்துமதக் கோட்பாடுகள் அழியாமல் இருப்பதற்கும், பெண்களை அடிமையாக வைத்திருப்பது பயன்பட்டது. இன்றும் மேலே கூறிய திருவிழாக்கள் கொண்டாடப்படுவதற்குப் பெரிதும் காரணமாக இருப்பவர்கள் பெண்களே! இன்னும் வெளிப்படையாகச்சொல்வதானால், பெண்கள் முன்னேறாமல் இருப்பதால்தான், நாம் குமுகாய, அரசியல் நிலைகளில் கூட இன்னும் முன்னேறாமல் இருக்கிறோம்.

எனவே, இம் மூடநம்பிக்கை விழா ஆரவாரங்களை நாம் விட்டொழிக்க வேண்டும். தமிழீழத்திற்காகப் போராடும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் இத்தகைய மூடநம்பிக்கைகளும் ஆரிய அடிமைத்தனங்களும் அளவுக்கு மீறி உள்ளன.

அண்மையில் வரவிருக்கும் 'தீபாவளி' விழாவுக்காக மிகப்பெரும் ஆரவார வாணிகக் கொள்ளைகள் நடை-

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பெறுகின்றன. அவை அனைத்திலும் முகாமையான வாணிகம் 'பட்டாசு' வெடி வாணிகமே! வெடிகளும் எரிகளும், வண்ணப் புகைச்சல்களும் என்று ஏறத்தாழ 140 வகைப் பட்டாசுப் பொருள்கள் வரவிருக்கின்றன என்று சொல்லப்பெறுகிறது ஏறத்தாழ 40 கோடி உருபா இவற்றில் முதலீடு செய்யப்பெற்று, மக்களின் கைகளிலிருந்து வணிகர்களின் கைகளுக்கு மாற இருக்கிறது. நாட்டுப் பாதுகாப்புக்கும், பல அரிய வேதியல் விளைவுகளுக்கும் மிக இன்றியமையாத பலவகை மருந்துகள், வீணான வெடிகளாகவும் புகைகளாகவும் கருகி, மக்களின் காதுகளையும், கண்களையும் கெடுத்து, உடல் நலன்களையும் சீரழிக்கப் போகின்றன. ஏற்கனவே பல உயிர்கள் இந்த ஆரவார வெடிச் சேதங்களில் பலியாகிஉள்ளன. இன்னும் இவ்விழா முடிவதற்குள் எத்தனைப் பேர் உயிர்கள் போகுமோ, சொல்லமுடியாது!

பின், ஏன் இத்தனைக் கேடான விழாவை அரசு தடை செய்யாமல் உள்ளது? அதைத்தான் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும், அரசியல் தந்திரங்களிலேயே தலையாயது இதுதான். மக்களை இத்தகைய விழா வேடிக்கைகளில் ஈடுபடுத்தினால்தான், அவர்கள் அரசியலில் நடக்கும் ஏமாற்றுகளைத் தெரிந்து கொள்ளமாட்டார்கள். அதனால், உரிமை, புரட்சி முதலிய போராட்டங்களில் ஈடுபட மாட்டார்கள் என்பது ஆளுகின்ற ஆட்சியாளர்களின் தந்திரமாகும். எனவே இவற்றை எந்த முதலாளிய, மத அரசும் தடை செய்வதில்லை.

இந்தியாவில் இப்பொழுதுள்ள முதலாளிய ஆட்சி மாற்றப்படும்வரை இத்தகைய மூடநம்பிக்கைகள், ஏமாற்றுகள், எத்துகள், பொருளியல் சீரழிவுகள் முதலியவை



இருந்து கொண்டுதான் இருக்கும். எனவே நாம் எத்துணையளவுதான் எழுதினாலும் கத்தினாலும், இவற்றை உடனடியாக விலக்கிவிட முடியாது.

ஆனால், இந்த நேரத்தில் நாம் ஓர் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். அஃதாவது இந்த 'தீபாவளி' விழா வேடிக்கையில் பயன்படுத்தப்படும் 'பட்டாசு' வெடிகளில் புகைச்சல்களில் நூற்றுக்கு 75பங்கு நம் தமிழ்நாட்டில் உள்ள சிவகாசியில்தான் செய்யப்பெறுகிறது. ஏன் உலகில் உள்ள பல நாடுகளுக்குமே இங்கிருந்துதான் வெடிகள் போகின்றன. எனவே, நம் சிவகாசியில் உள்ள தமிழர்களான நம் பட்டாசு முதலாளிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோளை நாம் இவ்வேளையில் முன் வைக்க விரும்புகிறோம்.

'அன்பான சிவகாசி' பட்டாசுத் தொழிற்சாலை முதலாளிகளே! தமிழினத்துக்கு இப்பொழுது நேர்ந்துள்ள கொடுமையான நிலைகளை, நீங்கள், இப்பொழுது இலங்கையில் உள்ள சிங்களக் கயவர்களால் அங்குள்ள ஈழத்தமிழர்களுக்கு நடக்கும் இன அழிவுகளிலிருந்து மிக நன்றாக உணர்ந்திருப்பீர்கள். அந்நிலைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நம் இளைஞர்களுக்குப் போதுமான போர்க்கருவிகள் இல்லை. இங்குள்ள இந்திய அரசும், அங்கு வீழ்த்தப்படுவது நம் தமிழினம் என்பதால், பார்த்தும் அவர்களுக்கு உதவி ஏதும் செய்ய விருப்பமில்லாமல், பாராதது போல் உள்ளது. எனவே, நம் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்குத் தேவையான வெடிகுண்டுகளை, நீங்கள் இந்தத் 'தீபாவளி' வெடிகளுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைக் கொண்டு செய்து தருவீர்களானால் சீரழிந்து கொண்டிருக்கும் நம் தமிழினம் உய்ந்துவிட வழிபிறந்து விடும்! செய்வீர்களா? இல்லையெனில், நீங்களும் அழிந்து உங்கள் 'பட்டாசு'த் தொழிலும் அழிந்து, நம் வரலாறே அழிக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்!

—**தமிழ் நிலம்**: இதழ் எண் : 46 (14.10.84)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# தமிழீழப் பாடல்கள்



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 1. நெஞ்சை உருக்கும் நிலை!

நெஞ்சை உருக்குதடா! — நம்
நினைவைக் கருக்குதடா! — ஒரு
பஞ்சைப் பழுதென ஈழ நிலத்தினில்
பைந்தமிழ்த் தாயினம்
அஞ்சி வாழும் நிலை (நெஞ்சை)

கெஞ்சி மருகுகின்றார் — கொடுங்
கேட்டில் கருகுகின்றார்! — ‘த்சொ’
கொஞ்சமோ துயர்! எஞ்சுமோ உயிர்!
குடிமைத் தமிழினம்
மிடிமைப் படும்நிலை (நெஞ்சை)

கூறுகூறாய்ப்பிரிந்தார் — பல
குடும்பங்களாய்க் கரிந்தார்! — அட
ஆறுமோ துன்பம் தீருமோ என
ஆண்ட தமிழினம்
மாண்டு வரும்நிலை (நெஞ்சை)

குலைக்குள் வெயர்த்ததடா! — நம்
குடர்க்குள் சிலிர்த்ததடா! படு
கொலைக்கும் புலைக்குமாய் அலைக்கப்பட்டே,
கொற்றத் தமிழினம் (உயர்
செற்றப் படும்நிலை (நெஞ்சை)

ஏழ்மைத் தொழிலாளர் — மலை
ஏறும் உழைப்பாளர் — இனி
வாழ்வா இல்லை உயிர் வீழ்வா எனும்படி
வாய்மைத் தமிழினம்
நோய்மைப் படும்நிலை (நெஞ்சை)

அழிவுக்குள் ளாகினரே! — ஓ!
ஆதர வற்றனரே! — பல
இழிவும் இழப்புமாய் ஏதிலி யாய்விட்ட
ஈழத் தமிழினம்
வாழத் தகாநிலை (நெஞ்சை)

—தென்மொழி சு:14, ஓ 5.6 (செப்-அக்’77)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 2. இன்னும் பொறுத்திடலாமோ?

இன்னும் பொறுத்திடலாமோ? — தமிழ்
ஈழத்தில் நந்தமிழ்த் தாயினம் நாளும்
முன்னும் வெறியர்க ளாலே — அந்த
மூடராம் சிங்களக் காடைய ராலே,
மன்னும் கொடுமைகள் தாங்கி — நெஞ்சு
மாழ்கி மாழ்கி மடிந்திடும் செய்தி!
துன்னும் துடுக்கினைச் சாய்க்க — இளந்
தோன்றல்க ளே! உடன் மூண்டெழு வீரே!

மாண்டு மடிந்திட லானார் — இளம்
மங்கையர் கற்பை இழந்திட லானார்!
நீண்ட நெடுந்துயர்க் காதை — இன்னும்
நின்றிடும் என்ற நிலையில்லை அங்கே!
ஆண்ட தமிழினம் தம்பி! — இன்றைக்
காளப் படுவதில் மீக்கொடும் போக்காம்!
ஈண்டுத் தயங்கிட லாமோ? — தமிழ்
இளைஞர் இளைஞைகளே, எழு வீரே!

சிங்களர்க் கும்தமி ழர்க்கும் — ஒரு
சேர இணைந்திடும் போக்கினி இல்லை!
தங்கும் தமிழறம் எங்கே! — வெறி
தாக்கிடும் சிங்களர் போர்க்குணம் எங்கே!
எங்கும் பொருந்திடல் இல்லை — இனி
எந்தமி ழீழம் அமைதலே நன்றாம்!
பொங்கும் புரட்சியைக் காண்பீர் ! — உயிர்
போவதும் வாழ்வதாம் விடுதலைப் போரில்!



தன்னந் தனித்தமி ழீழம் — பெறின்
தாங்குமோ என்பது வீணர்கள் பேச்சு!
சின்னஞ் சிறிதெனும் நாடு — பல
சீருடன் உரிமையில் வாழ்ந்திடும் போதில்
மின்னும் விளைவுக ளோடு — உயர்
மேன்மைத் திறமும் உழைப்பும் மிகுந்தால்
தின்னும் உரிமை வராதோ? — முதல்
தேவை, தமிழர்க்கு விடுதலை ஒன்றே!

நெஞ்சை நிமிர்த்துக தம்பி! — உன்
நேரிய பார்வையைக் கூராக்கு தம்பி!
பஞ்சைய ரல்லரே நாமும் — சேர
பாண்டிய சோழர்தம் வழியினர் அன்றோ!
மிஞ்சும் துயர்வெள்ளம் மேலே — இனி
மேலும் பொறுத்திடல் கோழையர் வேலை!
அஞ்சிடும் சாவுகள் கோடி — எனில்
அஞ்சாமை பெற்ற உரிமைகள் கோடி!

—தென்மொழி சுவடி: 17, ஓலை-11 (சூன்-சூலை 81)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 3. தமிழ் மானம் நிலைபெறும்!

பாராண்ட தமிழ்வேந்தர் பைந்தமிழைத் தலைவைத்தே
நீராண்ட இலங்கையினை நிழலாண்ட கதைகேட்டோம்!
நீராண்ட இலங்கையினை நிழலாண்ட கதைமாறிப்
போராண்ட செந்நிலமாய்ப் புலமாறிக் கொண்டுளதே!

தென்புலத்தார் வடபுலத்தைத்
திசைவென்று கொடிநாட்டி
வன்புலத்துச் செந்தமிழை வாழவைத்த
கதைகேட்டோம்!
வன்புலத்துச் செந்தமிழை வாழவைத்த கதைமாறிச்
சிங்களத்துப் புல்லியர்கைச்
சிதைந்தழியக் கொண்டுளதே!

தென்னகத்துப் பெருஞ்சோழன்
தேர்ந்தபடை முன்னனுப்பி
முன்னகத்துச் சிங்களரை முறியடித்த கதைகேட்டோம்!
முன்னகத்துச் சிங்களரை முறியடித்த கதைமாறி
என்னகத்துத் தமிழர்க்கே
இடர்மிகுத்துக் கொண்டுளதே!

சிங்களரைச் சிதறடித்துச் சீர்த்திமிகு செந்தமிழர்
தங்களது யாழகத்தில் தனித்தரசு நாட்டுவரோ?
தங்களது யாழகத்தில் தனித்தரசு நாட்டுவரேல்
மங்கிவரும் தமிழ்மானம் மண்ணுலகில் நிலைபெறுமே!

**தென்மொழி : சு : 23, ஓ -5(ஏப் -மே '87)**



## 4. போக்கற்றோம்! போக்கற்றோமே!

இலங்கையிலே குருதியாற்றில்
எந்தமிழர் பிணம்மிதக்கும்!
எரிதழுவும் வீடுகளை!
என்செய்வோம்! என்செய்வோமே!

விலங்கினங்கள் ஊர்புகுந்து,
வெவ்வாயில் உயிர்கவ்வி,
வெற்றுடலைக் குதறுகின்ற
வெறிகண்டோம்! வெறிகண்டோமே!

கலங்கையிலே நமதுவிழி
கண்ணீரைப் பொழியும்! உளம்
கனன்றுவிம்மும்! குலைவெடிக்கும்
கையற்றோம்! கையற்றோமே!

புலங்கெட்டோம்! பொறிகெட்டோம்!
போயொளியும் வழியில்லை!
புன்மையிது! அடடா! ஓர்
போக்கற்றோம்! போக்கற்றோமே!

**—தென்மொழி: சு. : 22, ஓ. - 2 (திச. 85—சன. 86)**



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 5. ஆனால், தமிழ் நெஞ்சங்களே! வீரத் தமிழ் மறவர்களே! உங்களைப் பதறப் பதற வாரிக் கொடுத்து விட்டோமே!

''அண்டையிலே தமிழ்நாடு!
அதுதான் எம் தாய் வீடு!
பண்டையிலே பூத்த தமிழ்ப்
பாலந்தான் எம் பீடு!
கொண்டையிலே பூ கசங்கக்
கொடியிடையில் துணி கசங்கத்
தண்டையிலே ஒலி அழுங்கத்,
தங்கை அக்கை நீ(ந)தென்றால்,

வந்திடவா மாட்டார்கள்!
வாழவைத்த அண்ணன் மார்?
கொந்திடவா மாட்டார்கள்,
சிங்களவன் குலை உயிரை?
தந்திடவா மாட்டார்கள்
தாலிகளின் தனிமதிப்பை?—

இந்தபடி எண்ணீரோ
எந்தமிழத் தாய்மாரே?
எங்களுடை தங்கையரே!
எங்களுடை அக்கையரே,
செங்கழுகு புறாக்குஞ்சின்
சிறகடித்து மேல்பறந்து



பொங்கு(அ)ரத்தம் பீறிடவும்
போகும் உயிர் வீறிடவும்
சிங்களவன் உம்மைச்
சிதைத்திடும்அப் போதினிலே!

''எட்டி முழக்க மிட்டால்
எட்டிலக்கம் பேர் வருவார்!
கொட்டி அழைத்திட்டால்
கோடிக்குக் குறையாது!
அட்டியில்லை, தமிழ்நாட்டின்
அண்ணன் மார் தம்பிகள் மார்!
கெட்டி வயிரங்கள்
கேட்பதற்கு வருவார்கள்!

சிங்களவர்க் கெங்களுடை
செய்தி தெரியாது!
பொங் குணர்வுத் தமிழர் குலம்!
பூரித்த வீரர் குலம்!
திங்களொடும் பரிதியொடும்
தீரப் பிறந்தவர்கள்!
மங்காத வீரம்,
மலையுடைக்கும் வீறுநடை!

பக்கத்தில் வாழ்கின்றார்!
பதினெட்டுக் கற்கள் தாம்!
முக்கி எழுந்தால்
முழங்கால் கடல்நீர்தான்!
எக்கிக் குரல்கொடுத்தால்
இடுப்பொடிக்க வந்திடுவார்!
சிக்கி விட்டால் சிங்களவன்
சிறு குடலும் மிஞ்சாது!



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சொன்று குவித்திடுவார்,
சிங்களவக் காடையரை!
தொன்றுதொட்ட வீரம்
தொலைந்தழிந்தா போயிருக்கும்?
என்றேனும் ஓர் நாள்
ஈழம் கிடைக்காதா?''—
என்றெண்ணி இருந்தீரோ?
நம்பிக்கை இழந்தீரோ?

சோழன்மார் பாண்டியன்மார்
சேரன்மார் முந்தையர்கள்—
ஈழத் திருநாட்டின்
எம்மின் உடன்பிறந்தோர்—
போழ உடல் பிளக்க,
புகைக்குழலின் இடிவெடிக்கு
வீழ, உயிர் கழல,
வீறிடும் அப் போதினிலே!

ஆனாலும் வீரர்களே!
ஆர்த்தெழுந்த நெஞ்சங்காள்!
போனாலும் ஒருமுறைதான்
போனஉயிர் மீளாது.
மானத் தமிழீழம்!
மற்றெதற்கு வாழ்வுநலம்?
கூனாத் தமிழ்வீரம்!
கொப்புளிக்கும் செம்மாப்பு!

—என்றபடி போரிட்டீர்!
எதிர்பார்த்துக் காத்திருந்தீர்!
தின்றுழலும் வாழ்க்கையிலே
தீனிப்பை நிறைந்துவிட்டால்



குன்றெதிரே பகையாகிக்
குலைநடுங்க வந்தாலும்
நின்றெதிர்க்க மாட்டாத
நெடுமரமாய் இருந்துவிட்டோம்!

சாதிக்குப் போரிடுவோம்!
சழக்குமதக் கூறிடுவோம்!
வீதிக்கு வீதி
விரிசலுற்றுப் போய்விட்டோம்!
பாதிக்குக் குறைந்துவிட்டோம்!
பண்பாடு கலையிழந்தோம்!
ஏதினிமேல் முன்னேற்றம்?
எதற்கினிமேல் வாழ்ந்திருப்போம்?

தமிழீழம் கேட்கின்ற
தங்க மறவரை நாம்
அமிழாத வீரப்போர்
ஆங்கதனில் பறிகொடுத்தோம்!
உமிழ்கின்ற புன்பகையின்
உயிர்குடிக்கத் தவறிவிட்டோம்!
தமிழீழ மறவர்களே!
தாழ்ச்சியில்லா வீரர்களே!

மாயாத் தமிழினத்தின்
வாகைக் களிறுகளே!
சாயாத் தமிழ்மரபின்
சாகா உருவங்காள்!
காயாத உங்கள்
குருதியின்மேல் ஆணையிட்டோம்!
தாயகத்தை மீட்போம்!
தமிழீழம் காண்போமே!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 22(14-8-83)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 6 சிங்கள இனமே! சிங்கள இனமே!

எந்தமிழ் இனத்தார் இந்நில வுருண்டையில்
    எந்தப் பகுதியில் இருந்தாலும்—அவர்
சொந்தம் நமக்கே! நாமவர்க் கென்றும்
    சொந்தம் சொந்தம் என்றுரைப் போம்!
உந்தும் உணர்வும் உறவும் அவர்பால்
    உண்டுண் டென்றே முழக்கிடுவோம்!—அவர்
சிந்தும் கண்ணீர், செந்நீர் எதற்கும்
    சீறி எழுந்தே வழக்கிடுவோம்!

ஈழத் தமிழ்க்குலம் சிங்கள ரால்உறும்
    இடர்கள், இழிவுகள் நினைந்திடுவோம்!—அவர்
வாழத் துடித்தும் வறுமைப் பட்டும்
    வடிக்கும் நீரில் நனைந்திடுவோம்!
ஆழக் கடலும் அரசுப் பிரிவும்
    அவர்க்கும் எமக்கும் தடையில்லை!—எம்
வேழப் பெருந்தோள் எழுந்தால், தமிழர்
    வெற்றி நடைக்கெதிர் நடையில்லை!

சிங்கள இனமே! சிங்கள இனமே!
    சிறுமை செய்தாய் தமிழினத்தை!—நீ
இங்குள தமிழரை எண்ணிலை போலும்!
    எங்குள ராயினும் செந்தமிழர்
பொங்குணர் வுக்கடல்! புகையும் எரிமலை!
    போழ்வாய் அரிமா! பொருகளிறு!—அவர்
வெங்குரு தித்துளி ஒன்றிருக் கும்வரை
    வீழ்ச்சியி லாதது தமிழினமே!

—தென்மொழி : சுு. : 14, ஓ. : 5, 6 (செ. - அக். '77)



# 7. தந்தை செல்வா தம் பெயர் சொன்னால், தழைக்கும் தமிழீழம்!

எடுப்பு

தந்தை செல்வா தம் பெயர் சொன்னால்
தவறாமல் தழைக்கும் தமிழீழம் தன்னால்! (தந்தை)

தொடுப்பு

சிந்தையில் எரியும் உரிமைச் சுடர்விளக்கம்!
செழுந்தமிழ் மணக்கும் விடுதலை முழக்கம்! (தந்தை)

முடிப்பு

முந்தையர் நாட்டின் முழுஉரி மைப்போர்
மூண்டிடக் கொளுத்திய வாய்மையின் திருப்பேர்!
தந்தையர் ஆண்ட தமிழீழத் தாயகம்
தமிழருக் காக்கிய வரலாற்று நாயகம்! (தந்தை)

குலைநடுங் காத கொள்கையின் குன்றம்!
கூர்மை நோக்கிலோ உயர்அற மன்றம்!
மலையகம் இணைந்த மணித்தமி ழீழம்
மாய்க்கும் பதவியை உதறிய வேழம்!' (தந்தை)

செயல்திறம் மிகுந்த சிந்தனை வெள்ளம்!
செருக்கும் மறம்விளையும் தூய்நெறி உள்ளம்!
அயலவன் சிங்களன் ஆளுமை ஒதுக்கியே
அன்னைத் தமிழீழ நாட்டினைப் புதுக்கிய (தந்தை)

(31-3-81 அன்று தமிழீழத் தந்தை மூதறிஞர்
செல்வநாயகம் அவர்களின் 83-ஆவது
பிறந்தநாள் நினைவாக எழுதப்பெற்றது)

தென்மொழி : சுு : 17 ஓ : 11 (மார். — ஏப்: 81)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 8. பேச்சுரையால் தமிழீழம் பிறப்பதில்லை! உரிமையெண்ணம் சாவதில்லை!

பேச்சுரையால் தமிழீழம்
  பிறப்பதில்லை!
பிறந்துவிட்ட உரிமையெண்ணம்
  சாவதில்லை!
மூச்செல்லாம் விடுதலைக்கே!
  முயற்சி யாவும்
முழுவுரிமை பெறுவதற்கே!
  முனைந்தோர் கையின்
வீச்செல்லாம் பகைப்புலத்தை
  வீழ்த்துதற்கே!
வினையெல்லாம் தமிழீழம்
  சமைப்பதற்கே!
ஏச்செல்லாம் இழிவெல்லாம்
  உரமே ஆகும்!
இளைஞர்படை எழுந்துவிட்டால்
  கொடுமை சாகும்!

பதவியெல்லாம்—நாற்காலி
  நலன்கள் எல்லாம்—
பாய்ந்துவரும் எழுச்சிக்குத்
  துணையும் ஆமோ!
உதவியெல்லாம் உரிமையினை
  மீட்டிடாது!
உயிர்மீட்டும் விடுதலைக்கே
  உரஞ்சேர்க்காது!



பொதுவான நடைமுறைகள்
  உணர்வை வீழ்த்தும்!
பொய்ச்சலுகை, தூதுரைகள்
  காலந் தாழ்த்தும்!
மெதுவான போக்குகளைத்
  தவிர்த்தல் வேண்டும்!
மெத்தனங்கள் சூழ்ச்சிக்குக்
  கைத்தாளங்கள்!

உலகமென்னும் உருண்டைக்குள்
  தமிழர்க்காக
உரிமையுள்ள ஒருநாடு
  தோன்றல் வேண்டும்!
கலகத்தால் இனமழிந்து
  சாகும் முன்னம்—
கயவரெல்லாம் தமிழ்க்குலத்தை
  அழிக்கும் முன்னம்—
பலகற்ற சூழ்ச்சியினால்—
  அதிகாரத்தால்—
பைந்தமிழர் நைந்தழிந்து
  ஒழியு முன்னம்
விலகட்டும் பகை! உரிமைக்
  கதிர்தோன்றட்டும்!
விடியட்டும் தமிழீழம்!
  விளங்கட்டும்மே!

விடுதலைக்குத் தோள்கொடுக்கும்
  இளைஞரெல்லாம்!
வேற்றுமைகள் மறந்தொருங்கே
  அணிசேரட்டும்!



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கெடுதலைக்குக் குழிவெட்டி
    மண்மூ டட்டும்!
கீழறுப்பு வேலைகட்குத்
    தீவைக் கட்டும்!
அடுதலையைத் தொடங்கட்டும்!
    படைசூ ழட்டும்!
ஆர்ப்பரிப்பு வானத்தைக்
    கிழித்தே கட்டும்!
படுதலையில் காலிடறப்
    பகையோ டட்டும்!
பதவிநலம் நாடுபவர்
    உளஞ்சா கட்டும்!

—தமிழ்நிலம்: இதழ் எண்: 29(25-12-83)



# 9. சீரழிவும் செஞ்சோற்றுக் கடனும்!

சிங்களவக் கொடியர்
    செயுந்தீங்கு போதாவென் (று)
இங்கமைதிப் படையென்றே
    இந்தியப் படைதானும்
சென்று தமிழர்களைச்
    சீரழிப்ப தென்னவோ?
சென்று தமிழரைச்
    சீரழிப்ப தென்னவென்றால்,
என்றுந் தமிழினத்தை
    ஈடேற வொட்டாமல்
நின்றென்றும் அடிமையராய்
    நிலைப்படுத்தும் நோக்கமன்றோ?

ஆடவரைக் கொன்றும்
    அரிவையரைக் கற்பழித்தும்
காடையர் சிங்களவர்
    செய்துவந்த கயமையையே
இந்தியப் படைஞரும்
    செய்கின்றார் என்றறிந்தும்
நந்தமிழ ருள்,சிலரும்
    நயப்படுத்தல் என்னவோ?
நந்தமிழ ருள்,சிலரும்
    நயப்படுத்தல் தாம்உண்ணும்
செஞ்சோற்றுக் கடனென்று
    செப்பிடவும் வேண்டுதற்கே!

—தென்மொழி: சு 23, ஓ.: 11 (நவ. - திச.: '87)





FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 10. தமிழீழ மறவரைத் தமிழால் வணங்குவேன்!

மாந்த உரிமைகள் மறுக்கப் படுவதைக்
காந்தும் உளத்தொடு கருத்தினும் செயலினும்
இந்நில வுருண்டைமேல் எவரெழுந் தெதிர்த்துச்
செந்நிறக் குருதியைச் சிந்துகின் றாரோ—

விண்ணசை வுறஎவர் வெற்றி விடுதலைப்
பண்ணிசை முழக்கிப் பாடுகின் றாரோ—

அவரை வாழ்த்தும்இவ் வார்வ நெஞ்சம்,
தவறிலா விடுதலைப் புலிகளைத்— தமிழீழ
உரிமை வேள்விக்கு உயிர்தரும் இளைஞரை—
வரிநிறம் மாறா வேங்கை வயவரை—
குறிதிசை திறம்பாக் கொள்கை மறவரை—
உரம்நெகி ழாத உரிமை உளங்களை—
விலையில் லாதஅவ் வீர உயிர்களைத்
தலைதரை தாழ்த்துத் தமிழால் வணங்குமே!

—தென்மொழி : சு. : 18, ஒ. : 10 (மே - சூன் '82)



# 11. புலியோ புலி!

புலியோ புலி, புலி புலி புலி!
பொங்கிப் பாயும் மறப்புலி!
வலிவோ வலி! ஆனால் இந்திய
வஞ்சப் படைக்குப் பலி பலி பலி!

ஆண்ட தமிழர் மாண்ட உரிமை
அனைத்தும் மீட்கும் திறப்புலி!
நீண்ட முயற்சி செய்து கழுத்தை
நெரித்த படைக்குப் பலி பலி பலி!

செந்தமிழர் மறவன் பிரபா கரனின்
சீறும் மறவர் புலிப்படை!
இந்தியப் படைக்குத் தவிப்புக் காட்டி
ஈகம் செய்தது வெளிப்படை!

ஈழத் தமிழர் உரிமை கோரும்
எழுச்சி கொண்ட வீரர்கள்!
பாழும் இனத்தை மீட்கத் துணிந்த
பாண்டிய சோழ சேரர்கள்!

அடிபட் டோய்ந்த புலிகள் மீண்டும்
அதிர்ந்து வீறும் நாள்வரும்!
குடிகள் அழுத கண்ணீர் அவர்க்குக்
கொடுமை வீழ்த்தும் வாள்தரும்!

—தென்மொழி : சு. : 23, ஒ. - 10 (செப். - அக். 87')



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 12. இனம், நிலம் மீட்க இணைந்து செய்க!

அட! அட! தமிழனே! நீ
ஆர்க்கிறாய்; வேர்க்கி றாய்; பின்
ஆரேனும் சவண்டன் வந்தே
அடக்கினும் அடங்கிக் கொள்வாய்!

கெடக்கெடச் சுவையும் கண்டாய்!
கீழ்மை, உள் ளரிப்பும் கொண்டாய்!
கேடுகள் உணர்வாய்; ஆனால்,
கெடுகிறாய்;கெ டுகின் றாயே!

சுடச்சுட ஒளிரும் என்று
சொல்வார்கள் பொன்னை! நீயோ
சுட்டதும் கரியாய்ப் போவாய்!
சுருண்டிடும் அட்டை யாவாய்!

'படப்பட அறிவு வீறும்'—
பட்டறி வுரை ஈ தென்பார்!
பயனிலை உன்னி டத்தில்!
படப்படப் பட்டே போனாய்[ —1

இலங்கையில் எழுச்சி கண்டே
இங்குள்ள தமிழர் எல்லாம்
இதோ,நம் இனத்திற் கென்றே
எழுந்ததோர் ஆட்சி என்றார்!

துலங்கிடும் தமிழர் வாழ்க்கை
தோன்றிடும் உரிமை என்றார்!
தோன்றிய எழுச்சி நீண்டு
தொடர்ந்தது! தொடர்ந்த தந்தோ!



கலங்கினர், உடல்,உள் ளங்கள்!
கதறினார்; கருகிச் செத்தார்!
கணக்கிலாத் தமிழர் கூட்டம்
கரைந்தது கரைந்த தந்தோ!

நலங்கிளர்ந் தெழும்என் றே, நாம்
நாட்குநாள் காத்தி ருந்தோம்!
நண்ணிய திறுதி நாளும்!
நரித்தனம் வென்ற தைய்யா! —2

ஓநாயும் நரியும் கூடி
ஒப்பந்தம் பேசித் தீர்க்க,
ஓங்கிய கோபு ரம்போல்
ஒடிந்தன கனவெல் லாமும்!

பீநாசி மணந்த துண்டோ?
பேய்ச்செய வர்த்த னாவும்
பிழையான இராசீ வும் —தாம்
பேசிய தாரே கண்டார்?

பூநாறும் கூடைக் குள்ளே
புலவுநா றியதைப் போல
புலிவீரம் மாறிப் போன
புதுக்கதை கேட்டோம், அம்மா!

பாநூறு பாடி வெற்றி
பராவிடக் காத்த உள்ளம்
பதைத்தது; கொதித்த தந்தோ!
பழுத்ததோ அடிமைக் காய்தான்! —3

நெடுமரம் ஒன்றில் ஏறி
நெட்டுக்கே வீழ்ந்த தைப்போல்—
நெடுங்கடல் பயணம் செய்தே
நீருக்குள் மூழ்கி னாற்போல்—



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கொடுவாளின் பிடிசெய் யப்போய்க்
குத்திட்டு மாண்ட தைப்போல்—
குரல்எழ மருந்து தின்று,
குடல்வெந்து செத்த தைப்போல்—
விடுதலை வேண்டிச் செய்த
வீரப்போர் முடிவில் மக்கள்
விடிவில்லா அடிமைப் பட்டு
வீழ்ந்ததை என்ன சொல்வோம்!
கெடுதலை ஊழ்தான் செய்த
கெடும்பென்றே எண்ண லாமா?
கீழ்க்குணம் அழியா மக்கள்
என்றுமே அடிமை தானா? —4

எந்தமிழ் இனமே! இன்னும்
எத்தனை ஊழிக் காலம்—
எத்தனை ஆட்சி யோர்க்கே—
இருப்பாய், நீ அடிமை யாக?
சொந்தத்தைப் பகைக்கின் றாய்,நீ!
சொந்தத்தை வெறுக்கின் றாய்,நீ!
சொந்தத்தை இரண்ட கத்தால்—
சூழ்ச்சியால் அழிக்கின் றாய்,நீ!
எந்தச்சூழ் நிலையி லும்,நீ
எதிரியை நம்பு கின்றாய்!
எதிரிக்கே உழைக்கின் றாய்,நீ!
எதிரியை வாழச் செய்வாய்!
செந்தமிழ் மொழியை நம்பு!
செந்தமிழ் இனத்தை நம்பு!
செந்தமிழ் நாட்டை மீட்க
ஒன்றுசேர்! செயல் முழக்கு! —5

—**தென்மொழி: சுவடி:23, ஓலை.8 (ஆக-செப்'87)**



# 13. பிரபாகரன் பிறந்தநாள் வாழ்த்து!

'பிரபா கரன்'என்னும் பிள்ளை வேங்கை
உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து
திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!
பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன்-அவன்
உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!
ஓங்குகவன் புகழென்றே
ஒலிப்பாயே முரசம்!

இந்தியப் பெரும்படைக்கு எதிர்நின்ற வெம்புலி!
கொந்திய நெஞ்சாங் குலையினி லிருந்து,அவன்
சிந்திய அரத்தத்தால் சிவந்தது தமிழீழம்!
பிந்திய தமிழ்மறம் பேணிப்புரந் தான்!- அவன்
வந்தலர்ந்த நாள்மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்
வளர்கஅவன் புகழென்றே
மீட்டுகவே யாழும்!

மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!
இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!
திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த
சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன்-அவன்
பிறந்தொளிர்ந்த நாள்நினைந்து பேரிகையே
பெற்றான்காண் பெரும்புகழும்! [முழங்கு!
பிளிறுகவே வேழம்!

—**தென்மொழி : சுவடி:24, ஓலை:4 (அக்.-திசு. '89)**



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 14. ஓ' பிரபாகரனே! கதிர்க் கையனே! நீ எங்கே இருக்கிறாய்?

ஓ! பிரபாகரனே! கதிர்க் கையனே!
தமிழீழத்தின் அடிமையிருள்
போக்க வந்த வீரத்திருச்சுடரே!
தமிழினத்தின் தன்மான ஒளிவிளக்கே!
இந்திய நாய்களின்
வேட்டை மானே!
நீ எங்கே இருக்கிறாய்?

உன்னைச் சுட்டுக் கொல்லப் போவதாய்-
உன் ஆர்த்த அரியணை மேனிக்குக்
குறிவைத்திருப்பதாய்ச்—
சொல்லிச் சொல்லி
எள்ளி நகையாடுகிறார்களே,
இராசீவின் வஞ்சக வேடர்கள்!
தஞ்சம் கோராத தமிழனே!
அஞ்சாமையின் தொகுப்பே!
நீ, எங்கே இருக்கிறாய்?

கனிவுக்குக் கைகொடுத்து,
கல் போன்ற நின் தோளை நீவி, — உன்
கழுத்துக்குக் கத்திவைக்கும் எத்தர்கள்,
உன்னைச் சுட்டுப் பொசுக்கக்
குறிவைத்துத் திரிகிறார்களாமே!
மறம் மாண்ட தோற்றமே!
அறம் மாண்ட தமிழினத்தின்
ஆற்றல் மறவனே!
விழுப்புண் வேங்கையே!
நீ எங்கே யிருக்கிறாய், சொல்!



பேராண்மையனே! வீரப் பெரியோனே!
ஊறஞ்சா வெல்படைத் தலைவனே!
இந்திய எலிப் பகையை
உயிர்த்தழிக்கும் நாகமே!
உன் உயிர்க்கு விலைபேசிய போதும்,
உள்ளம் நடுங்காத
தமிழினத் தானைத் தலைமகனே!
உன்னை ஓர் இலக்கம்
கொல் படையும் ஊர் ஊராய்,
காடு காடாய்த்
தேடி வருகிறார்களாமே!

அடல் தகையும் ஆற்றலும் சான்ற
படை வேந்தனே!
உன் விளையாட்டுக்கு
முற்றுப் புள்ளி வைக்க,
இந்திய சூழ்ச்சிப் படைகள்
கைகளில் கருவி யேந்திக்
கண்களில் சூழ்ச்சி யேந்தி
உலா வருகின்றனவாமே!
நீ, எங்கே இருக்கிறாய்!
சொல் மகனே! சொல்!

கூற்றுடன் மேல்வரினும்
கூடி எதிர்க்கும் ஆற்றலே!
வேல் கொண்டு எறியினும்
அழித்திமைக்கா விழித்த கண்ணனே!
இராசீவுக்கு,
உன் செங்குருதி வேண்டுமாம்!
உன் புடைத்து விம்மிய தோள்களும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

உடல் தசைகளும் வேண்டுமாம்!
உடல் புதைபோய், உனை வீழ்த்த
வெறி கொண்டலைகிறது அந்த
வீணப் பிறவி!

எதிரி விரகர்களுக்கு
எரிமலையே! ஏற்றமே!
உன் தோற்றமே
தொள்ளாயிர இந்திய வீரர்களை
மலைத் தோடச் செய்யுமென்றால்
உன் நெஞ்சாங்குலையைத் தின்ன
நீட்டிய ஃவேட்டெஃகத் தோடு,
அலையோ அலையென்று
அலைகின்றார்களாமே, இந்திய
வேட்டை நாய்கள்!
நீ எங்கே உழல்கிறாய்! சொல்!
எந்தக் காடு மேடுகளில்
அல்லாடுகின்றாய், சொல்!

வெட்சிக் கானத்து
    வேட்டுவர் ஆட்டும்
கட்சி காணாத
    கடமா நல்லேறே!
புறநானூற்றுச் செல்வமே!
    தமிழர் வீரப் புதையலே!
கடந்த ஐந்தாண்டுக் காலமாய்
    நூறாயிரம் இந்தியக் கழுதைகள்
    மேய்ந்து தின்றும்
நுனி மழுங்கவில்லை — எம்
தமிழரின் வீரம் — என்று,
பனி உலகுக்குப் பறைசாற்றும்
    பழம் பாண்டியத் திருமறமே!



சுழலும் இசை வேண்டி
    உயிர் வேண்டா வீரனே!
உயிர் அஞ்சா மறவனே!
உலகில் வேறெந்த வீரனுக்கும்
இல்லாத ஓங்கிய பெருமை
உனக்குண்டு; உன் வீரருக் குண்டு!
உலகின் மூன்றாம் வலிமை வாய்ந்த
இந்தியப் படைக்கே சூளுரைத்தாய், நீ!
முயல் வேட்டை யன்று, நீ
        விளையாடுவது!
    யானை வேட்டை! ஆம்!
    காட்டு யானை வேட்டை!

வீட்டுக்காக வன்று நீ போரிடுவது!
நாட்டுக் காக! தமிழீழ நாட்டுக்காக!
நாற்பத்தைந்து இலக்கம்
    தமிழர்க்காக, உன் தோள்கள்
புடைத்து வீறு கொண்டெழுந்தன!
உன்னைச் சுற்றி ஓர் இலக்கம்
எதிரிப் படைப் போர் மறவர்!

நாலு பக்கம் வேடர் சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல்,
நீ வேட்டையாடப் படுகிறாய்!
கழகத் தமிழினத்தின்
கவின் தொகுப்பே!
நீ எங்கே இருக்கிறாய்?

இலங்கையில் இராவணன் இருந்தாலன்றோ
உனக்குத் துணைவருவான்!
நீ இருப்பதோ, பகைவரின் வீடு!



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

நீ உழல்வதோ வல்லிருள் காடு!
உனக்குத் துணை உன் பீடு!
உருப்படுமா இந்த நாடு?
பகைவர் கைகளில்
அகப்படாத அருந்தமிழ்ப் பேறே!
அன்னைத் தமிழீழத்தின்
ஒரு தனி மகனே!

ஒப்பற்ற தமிழின வீறே!
முன்னை, கடந்த
ஈராயிரம் ஆண்டு
முதுமை அடிமை விலங்கை
முறித்தகற்ற வந்த சீரே!
முடிந்ததடா உன்னோடு
தமிழினத்தின் விடுதலைப் போரே!
அகன்ற வானின்
அல்லல் நிலாவே!
புகன்று விடு! நீ எங்கே
புறப்பட்டுப் போனாய்?
எங்கே இருக்கிறாய்?

ஐந்து கோடித் தமிழர்கள் இங்கே
உனக்காக அன்றாடம்
தவமிருக்கிறோம்!
உயிர் நோன்பு நோற்கிறோம்!
உன்னை நோக்கி
உழலும் உயிரைத் தேக்கி,
உன் கொள்கை முயற்சியை ஊக்கி
உனக்குதவுவோம் பகையைப் போக்கி!
செங்களம் துழாவும் செங்கதிர்க் கையனே!

எங்களை விடுவிக்க வந்த ஏந்தலே!
எங்கே நீ இருக்கிறாய்!
அங்கே நாங்களும்
உன் உடனே இருக்கிறோம்!

அஞ்சாதே! நீ!
அனைவரும் உன்
உயிரோடு உயிராய்ப்
பின்னிப் பிணைந்திருக்கிறோம்!

ஆற்றல் மறவனே!
அமைந்ததடா விடுதலை ஈழம்!
அழியாமல் விளங்கிற்றடா உன் புகழ்!
நீ வாழ்க!
உன் கொடிவழி வாழ்க!

(தென்மொழி : சு : 24 ஓ : 1,2 (பிப். -மார். 8 ))



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 15. இந்தக் குழந்தைகள் தமிழக் குழந்தைகள்!

இந்தக் குழந்தைகள்
தமிழக் குழந்தைகள்;
இலங்கையில் செத்துக்
கொண்டிருக்கும்!
இந்தக் குழந்தைகள்
மாந்தக் குழந்தைகள்;
ஏனோ. உலகம்
புறக்கணிக்கும்!

இந்தக் குழந்தைகள் பிறக்கையில் பெற்றோர்
எதுநினைத் தாரோ தெரியவில்லை!
இந்தக் குழந்தைகள் துமுக்கிக்கே
இரையா கும்என அறியவில்லை!
பயிர்களை அழித்திடும் பூச்சிகள் கொன்றிடப்
பற்பல மருந்துகள் கண்டறிவோம்!
உயிர்களை அழிக்கும் சிங்களக் கொடியரை
ஒழித்திடும் மருந்தெது? விண்டறிவோம்!

—தமிழ்ச்சிட்டு : குரல் : 18, இசை : 4(நவ. —திசம். 86)



## 16. அழுகிறாய் கண்ணே! அழாதே!

அமிழ்த வாய் திறந்தே
அம்மா அம் மாவென்(று)
அழுகிறாய்—கண்ணே! — அழாதே!
தமிழீழம் பெற வுன்
தாயும் தந்தையும்
தம்முயிர் தந்தனர்—அழாதே!

சிங்களக் கொடியர்
சிதைத்த தமிழருள்
சிக்கினர் அவர்களும்! — அழாதே!
இங்குனக் காயிரம்
பெற்றோர் இருக்கையில்
ஏனழு கின்றாய்? — அழாதே!

நம்மவ ருக்கொரு
நாடு கிடைத்திடும்!
நலம் வரும் உனக்கும்! — அழாதே!
அம்மா, அப்பா,
அண்ணன், அக்கையாய்
அனைவரும் இருப்போம்! — அழாதே!

— தமிழ்ச்சிட்டு . குரல் : 18, இசை : 5
(திச. 86 - சன. 87)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 17. யாருக்காக அழுகிறாய்?

யாருக்காக அழுகிறாய் மகளே! — நீ
யாருக்காக அழுகிறாய் மகளே!
ஊருக்காக அழுகிறாயா? — இல்லை,
உனக்காக அழுகிறாயா? (யாருக்)

நேருக்கு நேராகவே
நின்றுசுடும் கொலைஞர்களை
பேருக்கு அமைதிப்படை
எனும்பெயரால் அனுப்பினரோ? (யாருக்)

வேருக்குள் வெந்நீர்விட்டே
விளையும் என்றே சொன்னாரோ?
நீருக்குள் நஞ்சை ஊற்றி
நீயருந்தத் தந்தாரோ? (யாருக்)

பெற்றவரைக் கொன்றாரோ?
பிணங்களின்மேல் குவித்தாரோ?
கற்றநிலை குலைந்ததுவோ?
கஞ்சிக்கும் வழியிலையோ? (யாருக்)

—தமிழ்ச்சிட்டு குரல்: 19 இசை: 7 (மார்ச் ஏப் '88)



## 18 தமிழீழப் பெண்கள் எழுச்சிப் பண்!

நீண்ட காலம் பூண்ட அடிமையும்,
நெடிய காலம் இழந்த உரிமையும்,
மாண்டு மடிந்த இருளொடு மாய்ந்தன!
மங்கையரே! ஒன்று திரண்டெழு வீரே!
மலர்ந்தது மலர்ந்தது தமிழீழம் என்றே!

எதிரிகள் படைகளும் தூள்தூள் ஆயின;
எம்முடை அண்ணனும் தம்பியும் சாய்ந்தனர்!
கதிரவன் முளைத்தது சிவந்த வானிலே;
கன்னியரே! ஒன்று சேர்ந்தெழு வீரே!
காத்த வீரரைக் கைதொழு வீரே!

ஆண்டான் அடிமை வேற்றுமை ஒழிந்தது;
ஆண்பெண் சமமென முரசும் ஒலித்தது;
வேண்டிய விடுதலைப் பண்ணும் இசைத்தது;
வீரப் பெண்டிரே இணைந்தெழு வீரே!
விடிவை நோக்கிப் புறப்படு வீரே!

சிவப்பு நிலத்தினில் பசுமை செழித்தது!
சிந்திய குருதியால் உரிமை கொழித்தது!
தவப்பு தல்வரின் உயிர்களும் சிரித்தன!
தங்கை தமக்கையர் கற்புமே எரித்தது!
தாய்க்குலத் தீர்!வந்து கூடிடு வீரே!

இழந்த உரிமைகள் மீண்டன இங்கே!
எல்லா நலன்களும் பெறஊது சங்கே!
பழந்தமிழ் ஈழம் சமைத்திடு வோமே!
பாரினுள் நாமும் உயர்ந்திடு வோமே!
பாங்கியரே! அணி திரண்டெழு வீரே!

—தென்மொழி சு: 23 ஓ: 3(பிப்- மார்ச்87)



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 19. தமிழீழ வாழ்த்துப் பண்!

தங்கத் தாயகம் தமிழீழம் வாழ்க!
தமிழர்கள் உரிமையால் தழைத்தின்பம் சூழ்க!
பொங்கிய உணர்வினால் பூத்தது நாடு!
புதுமையும் நலன்களும் பொலிந்ததெம் வீடு!

ஊமைகள் பேசினர்; ஒழிந்ததிங் கடிமை!
உன்மத்தம் தொலைந்தது; ஓய்ந்தது மிடிமை!
ஆமைகள் எழுந்தன! ஆர்த்தன புலிகள்!
அயலவர் ஆட்சி அகன்றது நாட்டில்! (தங்கத்)

ஒற்றுமை மலர்ந்தது; உரிமைகள் கண்டோம்!
ஒழிந்தன பிளவுகள்! உறவுகள் கொண்டோம்!
வெற்றி முரசங்கள் விண்வெளி தோயும்!
வீரச் சுடரொளி நிலமெங்கும் பாயும்! (தங்கத்)

—தென்மொழி : சுு. : 1, ஒ. : 8, (மே - சூன். '85



# தமிழீழம் பற்றிப் பிற பொதுக் கருத்துகளும், சில சிறப்புச் செய்திகளும்!

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 1. தமிழீழம் பற்றிப் பிறர் என்ன சொல்கிறார்கள்?

## 1. *செயவர்த்தனாவும்! தமிழர் விடுதலை முன்னணியும்!*

*சென்ற மாத இறுதியில் புதுதில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாடுகளை ஒட்டிப் புது தில்லிக்கு வந்தார் செயவர்த்தனா*

*செயவர்த்தனா இந்தியத் தலைமையமைச்சருடனும் சி. பார்த்தசாரதியுடனும் நடத்திய பேச்சுகளையும்; தமிழர் ஒன்றிய விடுதலை முன்னணித் தலைவர்கள் சி. பார்த்தசாரதியுடனும், தலைமையமைச்சருடனும் நடத்திய பேச்சுகளையும்; இக்காலத்தில் இங்கே இலங்கைத் தமிழ் அமைச்சர் எசு. தொண்டைமான் இருதரப் பாரிடமும் பேசியவற்றையும் கொண்டு நாம் அறிவது என்ன?*

*1. தமிழர் ஒன்றிய முன்னணித் தலைவர்கள் 1977 தேர்தலின்போது முன்வைத்த தமிழ் ஈழ விடுதலை என்கிற ஈழத் தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கையை விட்டுவிட முன்வருகின்றனர்.*

*2. ஈழத் தமிழர்கள், இலங்கை இந்தியத் தமிழர்கள் அனைவர்க்கும் ஒரே தேசத்தை இலங்கை அரசின் கீழே பெற்று வாழத் தங்கள் கட்சி ஒப்பினால் அதை ஏற்க அணியமாக இருக்கின்றனர்; இலங்கையில் வாழும் இந்திய*

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

முசுலிம்களும் இவர்களுடன் இணைந்து கொள்வதை வர வேற்கின்றனர்.

ஆனால், இந்தியாவில் உள்ள ஒரு மாநிலம் பெற் றுள்ள அளவிலாவது காவல்துறை, மற்ற ஆளுமைத்துறை அதிகாரங்கள் வேண்டும் எனக் கருதுகின்றனர்.

3. செயவர்த்தனா மேற்கண்ட செய்திகளில் ஒரே தேசியக் குழு என்பதை ஏற்கவில்லை; தொண்டை மானும் இதற்கு ஆதரவு தரவில்லை.

4. இன்று இலங்கையில் வாழும் 11 இலக்கம் மலை யகத் தமிழர்களில் எவ்வளவு பேரை இந்தியா அழைத்துக் கொள்ள முடியும் என்பதில் இலங்கை அர சுக்கும் தெளிவு இல்லை; இந்திய அரசுக்கும் உறுதி இல்லை; தொண்டைமானுக்கும் உறுதி இல்லை.

இந்த நிலையில் செயவர்த்தனா கூட்ட இருக்கும் இலங்கை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் என் பதில் தமிழருக்குத் தனியான ஒரு தேசியக் குழு அல்லது இரு தேசியக் குழுக்கள் என்பதில் எதைமுன் வைத்து ஆராயும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை.

மேலே கண்ட நிலைமைகளைக் கொண்டு நமக்குப் புரிவது என்ன?

1. தமிழர் ஒன்றிய முன்னணித் தலைவர்கள் இங் குள்ள தி.மு.க., அ.தி.மு.க.வினரைப் போன்றே தமிழ்— தமிழர் என்கிற உணர்ச்சிப் போர்வையில் என்றும்போல் பதவி—மதிப்பு—பணம் இவற்றைக் காப்பாற்றிக் கொள் வதிலும் நடைபெறுவதிலுந்தாம் முனைப்பாக இருக் கின்றனர்.



2. மலையகத் தமிழர்களின் எந்த உரிமைக்கும் உறுதி தர இலங்கை அரசு முன் வராது; தொண்டை மானும் முன்வரவில்லை.

3. இந்திய அரசு இலங்கையில் எது நடந்தாலும் அஃது அந்நாட்டின் உள்நாட்டுச் சிக்கல் என்றே கூறி இலங்கைச் சிங்கள வல்லாளுமை குலையாமல் பார்த்துக் கொள்ள என்றும் உறுதியாக நிற்க இருக்கிறது.

இதன் விளைவாக ஈழச் சிக்கலும், மலையகத் தமிழர் சிக்கலும் என்றுமே தீர்க்கப்பட மாட்டா என்ப தும்; மேலே சொன்ன எந்தத் தரப்பாரும் இம் மக்கள் சிக்கல்களுக்குத் தீர்வுகாண விரும்பவில்லை என்பதும்; தங்கள் தங்கள் சொந்தச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளவே இவர்கள் விரும்புகின்றனர் என்பதும் மிகத் தெளிவாகும்.

இனி ஈழம், படையினரின் வேட்டைக் காடாக மாறும்; மலையகத் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்படுவார்கள், —பல இலக்கக் கணக்கில் ஏது மற்றவர்களாக இந்தியாவுக்குத் துரத்தப்படுவார்கள். இந்த அஞ்சத்தக்க நிலையை நாம் அனைவரும் எதிர் நோக்கி நிற்கிறோம் என்பதே இவற்றிலிருந்து புல னாகும் உண்மை.

இந்த நிலையில் தமிழீழ விடுதலை அணிகளை ஒருங்கே இணைப்பதும், அவர்களின் விடுதலைப் போருக்குப் பயனுள்ள அனைத்து ஆதரவுகளையும் அனைவரும் அளிப்பதும், நீண்ட நெடிய போராட்டத் துக்கு அவர்களும் மற்றும் விடுதலை விரும்பிகளும் அணியம் ஆவதுமே தீர்வு ஆகும்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இலங்கை இனவெறி அரசோ, இந்திய அரசோ, இந்த இரண்டு அரசுகளின் பேச்சுரைகள் மூலமே ஈழமலையகத் தமிழரின் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என நம்புகிற இலங்கைத் தமிழ்த் தலைவர்களோ அல்லது இந்தியத் தமிழ்த் தலைவர்களோ இனிமேல் ஈழமலையகத் தமிழர்களின் எதிரிகளே ஆவர்.

பேச்சுரைகளில் இவர்கள் காலந் தாழ்த்துவது சிக்கல்களைக் குழப்புவதற்கு மட்டுமே பயன்படும்; இலங்கை அரசு தமிழரை நசுக்கிட எல்லா ஏற்பாடுகளையும் வலிவாகச் செய்து கொண்டு மிக விரைவில் தமிழரைக் கொன்று குவிக்கவே வழிவகுக்கும்.

இந்திய அரசு இலங்கைப் படைக்கு வலிவு ஊட்ட இங்கேயே சிங்களப் படைகளுக்குப் பயிற்சி அளிக்க முன் வந்தாலும் நாம் வியப்பு அடைய வழி இல்லை.

தமிழரின் இழிநிலை இங்கும் அப்படி; இலங்கையிலும் அப்படி; எங்குமே அப்படி.

—ஆசிரியவுரை, '**சிந்தனையாளன்**' 10-12-83

## 2. இலங்கைத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வு ஈழமே!

இலங்கையில் இனப்படுகொலை நடந்து மாதங்கள் பல முடிந்து விட்டன. இதற்கிடையில் அமெரிக்கத் தூதுவர்கள், சீனத் தூதுவர்கள் இன்னும் பல வெளிநாட்டுத் தலைவர்களையும் சே. ஆரும் அவர் தம் துணைவர்களும் சந்தித்து விட்டனர். தொடக்கத்தில் இந்தியாவின் நல்லெண்ணத் தூதுவர்களையே தேவையில்லை



என ஒதுக்கித் தள்ளிய சே. ஆர். செயவர்த்தனா இன்று அவர்களையும் வரவேற்று ஏதோ ஓர் உடன்படிக்கைக்கு வர முயற்சி செய்வதாகத் தோன்றுகிறது.

தொடக்கத்தில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் வெயின்பேகரையும் அவர்தம் துணைவர்களையும் சந்தித்து 90 நிமையம் பேசிய செயவர்த்தனே, பின்னர் சீனத்தின் முகாமைத் தூதுவர்களையும் சந்தித்து பேசியுள்ளார். இவர்கள் எல்லோரும் ஈழ விடுதலைக் கெதிராக சே. ஆர்.விற்கு உதவி செய்ய உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகின்றது. இறுதியாக இந்திய நல்லெண்ணத் தூதுவர் பார்த்தசாரதி இலங்கையில் நிற்கும்போது மீண்டும் அமெரிக்காவின், வெளிநாட்டுக் கொள்கைக்குப் பொறுப்பான ஒருவரையும் கண்டு பேசியுள்ளார் ஒன்றியத் தேசியகட்சி அரசின் பாராளுமன்றக் கூட்டத்திலும் இந்த அமெரிக்க முகாமையரைக் கலந்து கொண்டுள்ளார். 9-11-83-இல் நடந்த இப் பாராளுமன்றக் கூட்டத்தில் சிறிலங்கா எச் சமயத்திலும் திருகோண மலையை விட்டுக்கொடுக்கக் கூடாதென்றும், அது தொடர்ந்து சே. ஆர். அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்க வேண்டுமென்றும், இவர் அறிவுரை கூறியுள்ளார். அத்துடன் இலங்கைத் படைத்துறைக்குத் தம்மாலான முழு உதவியையும் செய்வதாக உறுதியளித்த இந்த அமெரிக்கக் கனவான், ஈழப் போராளிகளைச் சிறை செய்து அனைத்துலக முறையாக அவப் பெயர் வாங்காமல் அவர்களை அந்தந்த இடங்களிலேயே கொலை செய்து விடும்படியும் அறிவுரை கூறியுள்ளார்.

இதன் பின்னர் சே. ஆர். செயவர்த்தனா இந்தியத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தியின் சிறப்புத் தூதுவருடன் பேசும்பொழுது திருகோணமலைத் துறைமுகம்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

சிறிலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதிலிருந்தே அங்கு ஏதோ சூது நடக்கின்றது என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம். இவை தவிர மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்து அவற்றை மாகாண அவைகளாகவோ அன்றி வேறேதாவதாகவோ ஆக்கி ஈழச் சிக்கலைத் தீர்க்கலாம் என்றும் சே.ஆர். பார்த்தசாரதியுடன் பேசியுள்ளாராம்.

இச்சமயத்தில் ஈழதேச மக்களுக்கு மாத்திரமல்லாமல், இந்திய அரசின் கவனத்திற்கும் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றோம். இலங்கையில் இருக்கக் கூடிய அனைத்துத் தமிழ் பேசும் மக்களின் சிக்கலுக்குத் தீர்வு சமநிலைத் தனி ஈழமே தவிர வேறொன்றுமில்லை. ஏனெனில் ஈழதேச மக்கள் தமது விருப்பத்திற்காகவோ, அன்றி, உலகத்தில் உள்ள தமிழனுக்கு நாடில்லை என்றோ நாடு கேட்கவில்லை. மாறாக 35 ஆண்டுகளாகச் சிங்களப் பெருந் தேசியக் கருத்தால் அடக்கப் பட்டு, அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு எமது இனமே திட்டமிட்டு அழிக்கப்படும் சூழ்நிலை தோன்றிய பின்பே நாம் தனிநாடு கோரிப் போராடத் தொடங்கினோம். 1981-ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்களை உருவாக்கி அதனைக் குட்டிப் பாராளுமன்றம் என்றும் இதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் சிக்கல்கள் தீர்ந்து விடும் என்றும் தம்பட்டம் அடித்தார்கள். ஆனால் நடந்ததென்ன? மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பது வெறும் காற்றடித்த பை. இதனால் மக்களுக்கு எவ்வகை விடுவிப்பும் இல்லை என்று மா. அ. அவைத் தலைவர்களே ஒப்புக் கொண்டார்கள். நிலைமை இப்படி இருக்கும்பொழுது மாவட்ட இணைப்புகள்



என்பதோ அன்றி மாகாண அவை என்பதோ இயலுகின்ற செய்தியா? எளிய சிறுசிறு சலுகைகளையே நடைமுறைப்படுத்த முடியாமல் எல்லாவற்றையும் ஏட்டளவில் வைத்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு, தமிழ் பேசும் மக்களுக்குக் கூடுதலான உரிமைகளைக் கொடுக்கப் போகின்றதென்றால் அது வெறும் பகடிக் கூத்து. சில சலுகைகளையே நடைமுறைப்படுத்த முடியாத அரசு எங்களுக்குக் கூடுதலான உரிமைகளைத் தரும் என்பது எப்படி இயல்வதாகும்! அப்படித்தான் தந்தாலும்கூட அவை நடைமுறைப்படுத்தப்படுமா? இவையெல்லாம் மிகவும் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய கேள்விகள் ஆகும்.

ஒன்றிய தேசியக் கட்சி பதவிக்கு வந்து 6 ஆண்டுக் காலத்தில் இதுவரை 4 முறை இனக் கலவரம் நடந்துள்ளது. தொடக்கத்தில் இனக் கலவரங்களாக இருந்த இவை 1983-ஆம் ஆண்டு முதல் இனப் படுகொலையாக மாறியுள்ளது. இவ்வினப் படுகொலையைத் தடுப்பதற்குப் பகரமாகச் சிங்கள இனவெறியர்களுடன் கைகோத்து இனப் படுகொலைகளுக்கு மேலும் புகை போட்ட சே. ஆர். செயவர்த்தனா தமிழ் பேசும் மக்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தரப்போகின்றாராம் இது வேடிக்கையாய் இல்லையா? அஃதாவது ஒரு தேசிய இனத்தைப் பெரும் கொலைகளிலும், அழிவுகளிலும் இருந்து காக்க முடியாத, இல்லையேல் இனப் படுகொலைகளுக்கே காரணமாய் இருக்கும் ஓர் அரசின் கீழ், நாம் தொடர்ந்து ஒன்றாய் வாழ முடியுமா? எனவேதான் கூறுகின்றோம், இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தச் சிக்கலுக்குத் தீர்வு ஈழமே தவிர வேறொன்றுமில்லை. ஏனைய தீர்வுகள் சில சமயத்திற்கு

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தற்காலிகத் தீர்வுகளாய் இருக்குமேயன்றி நிலையான தீர்வுகளாய் இருக்க முடியாது.

இங்கு இன்னுமொரு முகாமை உண்மையை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். சிறிலங்கா அரசு திருகோணமலைத் துறைமுகம் என்பதில் மிக உறுதியாக உள்ளது. பார்த்தசாரதியுடன் பேசும்போதே இவர்கள் இதை நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார்கள். இதுகூட அமெரிக்க வெளிநாட்டமைச்சரின் கருத்தின் பின்னரே முன் வைக்கப்பட்டுள்ளது. எனவே இன்றும் அமெரிக்க அரசு திருகோணமலைத் துறைமுகத்தில் எவ்வளவு அக்கறையாய் உள்ளது என்பதையும் நாம் நுணுக்கமாக ஆராய வேண்டும்.

திருகோணமலைத் துறைமுகமானது சிறிலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்வரை, அது இந்தியாவுக்கு ஏதமானது என்பதை இந்திய அரசு விளங்கிக் கொள்ள வேண்டும். அமெரிக்கா சிறிலங்காவினும் இந்து மாக்கடல் பகுதியில் தன்னுடைய ஆளுமையை நிலைநிறுத்த முயற்சி செய்வதையும் நாம் உணர வேண்டும். அமெரிக்காவின் இவ்வாளுமை வெறிக்குச் சீனாவும், பாக்கித்தானும் கூட உடந்தையாய் இருப்பது தெட்டத் தெளிவாக உள்ளது.

எனவே இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சிக்கலுக்குத் தீர்வு ஈழ தேச விடுதலையே அன்றி வேறெதுவுமாய் இருக்க முடியாது. எனவே ஈழதேச விடுதலைக்காக இறுதிவரை போராடும் நாம் அதே சமயம் ஈழமண்ணில் (இதில் திருகோணமலை உள்ளடங்கும்) அமெரிக்க ஆளுமையின் காலடிச் சுவடு படவும் அனுமதிக்க மாட்டோம். எனவே உலக அமைதியையும் மாந்த விடுதலையையும்



விரும்பும், இந்திய மக்களே, அனைத்துலக முற்போக்குப் போராளிகளே ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு உங்கள் முழு ஒத்துழைப்பைத் தாருங்கள்.

—ஆசிரியவுரை, **ஈழமுழக்கம்** (நவ-83)

## 3. இலங்கைத் தமிழர் சிக்கலும்! இந்திய அரசின் தீர்வும்!

''எங்கள் சிக்கல் பற்றி நாங்கள் இலங்கை அரசுடன் பேச்சுரைகள் நடத்திச் சலித்து விட்டோம். அதிலும் குடியரசுத் தலைவர் செயவர்த்தனாவுடன் பேச்சுரை நடத்துவதில் நாங்கள் நம்பிக்கை இழந்து விட்டோம். ஆனால், இந்த முறை இந்தியாவின் நடுவண் அரசு இதில் தலையிட்டிருக்கிறது. எனவே வழக்கமாக எங்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தபின் அந்த முடிவிலிருந்து பிறகு நழுவிவிடுவது போல், இந்த முறை இலங்கை அரசினால் செய்ய முடியாது. அதனால்தான் நாங்களும் இதற்கு இணங்கி இருக்கிறோம்.''

—இவ்வாறு, இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அமிர்தலிங்கம் அவர்கள், கடந்த திசம்பர் 3, 4 நாள்களில் சென்னையில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

அஃதாவது இந்திய அரசின் தலையீட்டின் காரணமாகவே, தாம் செயவர்த்தனா அரசுடன் மீண்டும் பேச்சுரை நடத்த ஒப்புக் கொண்டதாகக் கூறியிருக்கிறார்.

பொறுப்பு இந்திய அரசின் தலைமீது சுமத்தப்பட்டிருக்கிறது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இந்திய அரசின் நிலை என்ன?

"இலங்கைத் தமிழர் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள ஆய்வுநிலை முடிவுகளின் அடிப்படையிலும், இலங்கையின் ஒருமைப்பாட்டு வரையறைக்கு உட்பட்ட வகையிலும் இச் சிக்கலுக்கு ஒருதீர்வு காணப்படும்".

—இதுதான் அதிகார முறையாக அறிவிக்கப்பட்டுள்ள, இந்திய அரசின் கொள்கை.

"இந்தியா எந்தத் திட்டம் அல்லது கோரிக்கைகளையும் வைக்கவில்லை. திரு. பார்த்தசாரதி இருமுறை இலங்கைக்குச் சென்று அந்த அரசுடன் நடத்திய பேச்சுகளின்போது உருவாக்கப்பட்டவையே அவை" என்றும் வெளியுறவு அமைச்சர் தெளிவாக்கியிருக்கிறார்.

அஃதாவது அவை செயவர்த்தனா அரசின் முடிவுகளே என்று கூறாமல் கூறியிருக்கிறார்.

என்ன அந்த முடிவுகள்?

24 மாவட்ட அவைகளாக இப்போது இருக்கும் ஏற்பாட்டை மாற்றி, 9 மாநில அவைகளாக அமைப்பது.

அவற்றில் வடக்கு—கிழக்கு மாநிலங்களில் தமிழ் பேசும் மாவட்டங்களைக் கொண்டு வருவது.

சட்டமியற்றுதல், சட்டம்—ஒழுங்கு ஆகிய துறைகளில் முடிந்த அளவு தன்னாட்சி அதிகாரங்களை இம் மாநில அவைகளுக்கு வழங்குவது. ஆனால் நாட்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு இலங்கை அரசின் பொறுப்பிலேயே இருந்து வரும்.

தமிழீழத்தின் தலைநகரம் என்று இவர்கள் அறிவித்த திருகோணமலையைப் பொறுத்தவரை தன்னதிகாரத்



துறைமுக ஆணைக்குழு ஒன்றே அதனை ஆளுமை செய்யும்.

இவைதாம் அவை. இவற்றில் முந்தைய மாவட்ட அவைகள் மாநில அவைகளாக மாறுகின்றன என்பதைத் தவிர, வேறு எந்தப் புதுமையுமில்லை.

தமிழ்ப் பகுதிகளெல்லாம் ஒரே மாநில அவையின் ஆளுமையின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கூட்டணியின் குறைந்த பக்கக் கோரிக்கைக்கூட தவிர்க்கப்பட்டு விட்டது.

திருகோணமலை, தன்னதிகாரத் துறைமுக ஆணைக் குழுவினால் ஆளப்படும் என்பதும் வழக்கம் போலவே இருக்கும் என்ற பொருள்படுவதுதான்.

இலங்கையை 9 மாநில அவைகளாக அமைப்பதே இந்திய அரசை ஏமாற்றத்தான் என்பது புரியவில்லையா?

பெரும்பான்மையான மாநில அவைகளின் முடிவு-மக்கள் நாயக முறையிலான தீர்வு என்ற பெயரில் தமிழர்களின் கோரிக்கைகளை, அனைத்துலக இசைவுடன் புறக்கணிக்கத்தான் இந்த ஏற்பாடு.

இல்லையென்றால், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி என்றுள்ள சிங்களவர்களுக்கு இஃது எதற்கு?

தமிழ் மாநிலம்—சிங்கள மாநிலம் என்று இரு பகுதிகளடங்கிய ஒரு நாடாக இலங்கையை அறிவிக்க இணங்கியிருக்கலாமே?

உண்மையாகவே நாட்டைப் பிரிப்பது ஒன்றுதான் தங்களுக்குள்ள மறுப்பு; மற்றபடி தமிழர்களுக்குரிய தேசிய உரிமைகளை வழங்குவதில் சிக்கலில்லை என்று

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

இலங்கை அரசு கருதுமானால், மலையகத் தமிழர்கள் வாழ்கிற பகுதியுட்பட்ட எல்லாத் தமிழ்பேசும் பகுதிகளு மடங்கிய ஒரு தமிழ் யாநிலத்தை நிறுவ அது ஒப்புக் கொண்டிருக்க வேண்டும்.

இந்திய அரசுக்கும் உண்மையாகவே இலங்கைத் தமிழரின் தேசிய உரிமைகளைக் காப்பதில் அக்கறை இருக்குமானால், அது போன்றதொரு ஏற்பாட்டிற்குத் தான் இலங்கை அரசை இணங்க வைத்திருக்க வேண்டும்.

அது செய்யப்படாததால், இலங்கை—இந்தியா இரு அரசுகளுக்குமே உண்மையாகவே இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு நயன்மை (நியாயம்) வழங்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையில்லை. 1983 சூலை-ஆகத்து இனப் படுகொலைகளால் அனைத்துலக இரக்கத்தைப் பெற்றுவிட்ட தமிழர்களுக்கு நயன்மை வழங்கப் பட்டுவிட்டதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினால் மட்டும் போதும் என்கிற மனப்பான்மைதான் உள்ளது என்பது தெற்றென விளங்குகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, இந்திய ஏற்பாட்டின் மூலம் உருவாகும் தீர்வை இலங்கையரசு மீற முடியாது என்பது போலவும், இந்தியஅரசின் கட்டாயத்தின் காரணமாகவே தாங்கள் தமிழீழத்திற்கு மாற்றுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்தது போலவும் திரு. அமிர்தலிங்கம் கதைப்பது, **தமிழீழத்திற்காகப் போராட அணியமாகியிருக்கும் தமிழ்மக்களைத் திசை திருப்புவதே ஆகும்.**

இந்த இடைக்கால அமைதி உடன்பாட்டுக்கு இணங்கித் தமிழீழக் கோரிக்கையை நீங்கள் இடைவிட்டு விடுவீர்களானால் உங்களுக்காகத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற கொதிப்பும் உங்கள் அமைதியைக் கண்டு அடங்கி விடும்



ஆகவே, தமிழீழத்தைத் தவிர வேறு ஒரு தீர்வுக்கும் ஒத்துக்கொள்ளாத நிலைப்பாட்டை நீங்கள் மேற்கொள்வதுதான் இலங்கைத் தமிழ் மக்களிடம் உங்களுக்குள்ள கடப்பாடு ஆகும்.

—ஆசிரியவுரை. **எழுகதிர்** (நவம். திசம். 8[illegible])

## 4. விடுதலை இயக்கங்களின் கருத்து கவனிக்கப்படவில்லை!

ஈழத்திற்கான எதிர்காலத் தீர்வு குறித்தும், மக்கள் நாயக, தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகள் குறித்தும், நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் உள்ளோம்

1976, வடக்குக் கோட்டைத் தீர்மானத்தின் மூலம், அறிவியல் சமநிலை (விஞ்ஞான சோசலிச)த் தமிழீழம்' எனக் கொள்கையறிவிப்புச் செய்தவர்கள், 19 6-ஆம் ஆண்டுக்குமேல் கொள்கையை மெல்ல மறக்கத் தொடங்கினர். மாவட்ட வளர்ச்சி மன்றத்தைத் தூக்கிப் பிடித்தார்கள். ஆறு மாதங்களுக்குள்ளாகவே அதன் வெற்றுத் தன்மை அம்பலத்திற்கு வந்தது இவர்களோ மக்களை விட்டு, வெகுதூரம் விலகிச் செல்லத் தொடங்கினர். மக்களின் எண்ணங்களுக்கு மாறாக இவர்கள் செயல்படத் தொடங்கினர்.

1983-ஆம் ஆண்டு மீண்டும் கேடான வகையில் ஈழவர்களைச் சிங்களம் இரத்தத்தில் நனைத்தது. உலகம் தன் கவனத்தை ஈழவர் பால் திருப்பியது; இவ்வாய்ப்பான சூழ்நிலையைக் கூடக் கூட்டணித் தலைமை



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

ஈழத்தின் நிலையான தீர்வுக்குப் பயன்படுத்தத் தவறியது. எப்படிப் பயன்படுத்துவது என்பதன் வழிமுறைகூடத் தெரியாமல் தடுமாறியது. ஆனால் பேச்சுரையில் கீழடைவதில் மட்டும் வெற்றியாக நடந்து கொண்டார்கள்.

அரசியல், விடுதலைப் போராட்டத்தில் பேச்சுரை என்பது தேவை என்பதனை நாம் ஏற்கிறோம். ஆனால் பேச்சுரையை எப்படி அமைத்துக் கொள்வது? கருத்துகளை எப்படி முன்வைப்பது? நம் அடிப்படைகளை அமைத்துக்கொள்வது என்பதில், தொலை நோக்கும் கொள்கைத் தெளிவும் பரந்த மனப்பான்மையும் தேவை. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட பேச்சுரைகள் எப்படி அமைந்தன?

தமிழர் விடுதலைக் கூட்டணியை விடவும் வேறு பல இயக்கங்கள் உண்டு. ஈழத்திற்கான பொறுப்பில், இவர்களை விடவும், மற்றைய இயக்கங்கள் எந்த அளவிலும் குறைந்தவை இல்லை. அதே வேளையில் மக்களின் நம்பிக்கைக்கும், போராட்ட முன்னெடுப்புக்கான முனைப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியை விடவும், இவ்வியக்கங்கள் முழு அளவில் பங்கேற்றவை. ஆனால் ஒரு தீர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட பேச்சுரையின்போது, இவ்வியக்கங்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திட்டமிட்டே இவ்வியக்கங்களைப் புறக்கணித்தனர் என்றே நாம் கருதுகின்றோம்.

ஆனால் இவ்வியக்கங்களின் எண்ணங்களும் ஈழவர்களின் எண்ணங்களும் எதிரொலிக்காத எந்தத் தீர்வும் நிலையான தீர்வாக, சரியான தீர்வாக அமையாது என்றே கருதுகின்றோம்.

ஆசிரியவுரை - ஈழம்' (15-12-83)

**—தமிழ்நிலம்: இதழ் எண்:30 (8-1-84)**

# 2. விடுதலைப் புலிகள் வெற்றிபெற முடியுமா? வெளிநாட்டுத் தாளிகைகள் என்ன சொல்கின்றன?

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியப் படையை எதிர்த்து வெற்றி பெற முடியுமா என்ற ஐயம் தமிழ்நாட்டுத் தமிழர் சிலரிடையே எழுந்துள்ளது. ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்கக் கண்டங்களில் அண்மைக் காலத்து நடந்த விடுதலைப் போர்களையும், புரட்சிப் போர்களையும் ஆராய்ந்து பார்த்தால் விடுதலைப் புலிகள் நாளடைவில் வெற்றி பெறுவார்களென்பதும், இந்தியப்படை தலைகுனிந்து தன்னாட்டுக்குத் திரும்புமென்பதும் திண்ணம்.

இச்சிறு கட்டுரையில் அப்போர்களின் வரலாற்றினை விளக்கப் போவதில்லை. மாறாக, அப் போர்களை நேரடியாகவே பார்த்தவர்களும், அவ் விடுதலைப் போர்களின் வரலாறுகளைப் படித்தறிந்தவர்களும், இந்தியப் படையின் வன்மை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆற்றல் முதலியவற்றை ஆய்ந்து பார்த்தவர்களுமான வெளிநாட்டுத் தாளிகையாளர்கள் (Foreign Newspaper Reporters) என்ன சொல்கிறார்களென்பதைக் காண்போம். கடந்த ஆண்டில் (1987) அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் தாளிகைகளில் வெளிவந்த செய்திகள் சிலவற்றின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது,

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

1. ''இந்தியப் படை பெருமளவில் போர்க் கருவிகளைக் கொண்டிருந்தாலும், அது **தான் வெற்றி பெற முடியாத ஒரு போரில்** (a war that India cannot win) ஈடுபட்டுள்ளது.'' —**டைம்சு** (Times), அமெரிக்கா.

2. ''தமிழ்ப் புலிகளை எளிதில் முடித்துக் கட்டி விடலாமென இந்தியப் படை எண்ணியது. ஆனால் தமிழீழப் புலிகள் தீவிரமான விடுதலைப் போராளிகள் என்பதை இப்போது கண்டறிந்துள்ளது. தமிழீழப் புலிகள் மிகையான கட்டுக் கோப்பும், அஞ்சா நெஞ்சும் உடையவர்கள்.''

—**சண்டே டைம்சு** (Sunday Times), இங்கிலாந்து

3. ''தமிழீழப் புலிகளின் படையமைப்புகளை நேரில் பார்த்த வெளிநாட்டுத் தாளிகையாளர்கள் தமிழ்ப் புலிகளின் வீரத்தையும், அவர்களது படையமைப்புத் திறனையும், **பொதுமக்கள் அவர்களுக்குக் கொடுக்கும் ஆதரவினையும்** பற்றி விளக்குகிறார்கள் ''

—**சண்டே டைம்சு**, இங்கிலாந்து

4. ''தமிழ்ப் போராளிகள் நாட்டுப் புறங்களில் செயல்பட்டு வருகிறார்கள். இந்தியப் படையினரின் குண்டு வீச்சுகள் விளைத்த அழிவுகளைக்கண்ட இளைஞர் பலர் தமிழ்ப் புலிகளின் படையில் புதியவர்களாகச் சேரக்கூடும்.''

—**நியூயார்க் டைம்சு** (New York Times), அமெரிக்கா

5. ''தமிழ்ப் புலிகள் ஊர்ப் புறங்களிலும், நகர்களிலும், மக்களோடு மக்களாய்க் கலந்து வாழ்ந்து புரட்சிப் போர் (கொரில்லாப் போர்)களில் ஈடுபடக் கூடும். இந்தியப்படை இத்தகைய போர் முறைகளில் **வன்மையற்றது.**'' —**நியூயார்க் டைம்சு**, அமெரிக்கா.



6. ''இந்தியப் படைக்குப் போர்க் கருவிகள் பெருமளவிலிருந்தாலும், அப் படை புரட்சிப் போரை (கொரில்லாப் போர்) எதிர்த்துப் போரிடும் **திறம் படைத்ததன்று.**'' —**நியூசு வீக்கு** (News Week), அமெரிக்கா.

7. ''தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிப் போர் (கொரில்லாப் போர்) இந்தியப் படையாளர்களை அதிர வைத்துள்ளது '' —**டைம்சு**, அமெரிக்கா.

8. ''இந்தியப் படையினருக்கு இலங்கையில் ஏற்பட்ட இழப்புகளால் இந்தியப் படைத்துறையே ஆட்டங் கண்டுள்ளது.'' —**நியூயார்க் டைம்சு**, அமெரிக்கா.

9. யாழ்ப்பாணப் பொதுமக்கள் இந்தியப் படையினரை வெறுக்கிறார்கள்.'

—**நியூயார்க் டைம்சு**, அமெரிக்கா.

10. இலங்கைத் தமிழ்மக்கள் இந்தியப் படையைத் தங்கள் எதிரியாகவே கருதுகிறார்கள்.''

—**நியூயார்க் டைம்சு**, அமெரிக்கா.

இறுதியாக ஒன்று. இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் சண்டே டைம்சு (Sunday Times) என்ற தாளிகை தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றியும், அதன் தலைவர் தமிழ்த்திரு வே. பிரபாகரனைப் பற்றியும் என்ன சொல்கிறது தெரியுமா?

> ''பிரபாகரன் தலைசிறந்த புரட்சிப் போர் (கொரில்லாப் போர்) திறலாளர். அவரது தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆசியக் கண்டத்திலேயே மிகவும் ஆற்றல் வாய்ந்த புரட்சிப் படையாக மலர்ந்துள்ளனர்.'' —**சண்டே டைம்சு**, இங்கிலாந்து



FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பலவும் படித்தும், பார்த்துமறிந்த நடுநிலைத் தாளிகைகளே பாராட்டும் படியான திறன் படைத்த தமிழீழ விடுதலைப் புலிகட்கும், அவர்தம் தலைவர் பிரபாகரனுக்கும் துணைநிற்க வேண்டியது தமிழகத் தமிழராகிய நம் கடனாகும். நாம் முடிந்த அளவில், **எவ்வாற்றானும்** அவர்கட்கு உதவி செய்ய வேண்டும். மேலும், இந்தியஅரசு விடுக்கும் பொய்யுரைகளை நம்பி, இத் தமிழ் மாமறவர்களைப் பற்றித் தவறான எண்ணம் கொண்டிருக்கும் தமிழர்களிடம் (அவர்கள் எக் கட்சியைச் சார்ந்திருந்தாலும்) உண்மைகளை அன்பான முறையில் எடுத்துக் கூறி, அவர்களையும் நம் வழிக்குக் கொண்டு வரவேண்டும். அவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகட்கு உதவி செய்யுமாறு இன்சொல்லால் வேண்ட வேண்டும். இதுவே நாம், தங்களுயிரையே பணயம் வைத்துப் போராடிய, போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகட்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

வாழ்க தமிழீழம்! வெல்க விடுதலைப் புலிகள்!

(**பின் குறிப்பு** : டைம்சு, நியூயார்க் டைம்சு, சண்டே டைம்சு ஆகிய தாளிகைகளின் பெயர்களில் ''டைம்சு'' என்ற பொதுப் பெயர் காணப்பட்டாலும், அம் மூன்று தாளிகைகட்கும் எந்த வகைத் தொடர்புமில்லை. **தின** மணிக்கும், **தின** மலருக்கும், **தினத்** தந்திக்கும் எப்படி எந்த வகைத் தொடர்புமில்லையோ, அதே போல.)

—தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா

—**தமிழ்நிலம்: இதழ் எண்:** 104 (15-5-88)

# 3. வல்வெட்டித்துறைப் படுகொலை!

ஓர் இனம் மற்றோரினத்தின்மேல் கொண்டுள்ள காழ்ப்புணர்வு, தக்க சமயம் வாய்க்குங்கால் படுகொலைகளாக (massacres) உருப்பெறுமென்பதை மாந்த வரலாற்றைப் படிப்போர் அறிவர். இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியப்படை சீன மக்கள் மீது அவிழ்த்துவிட்ட படுகொலைகள், இரண்டாம் உலகப் போரின்போது செர்மானியப் படைகள் உருசியாவிலும், போலந்து நாட்டிலும் (Russia and Poland) நடத்திய படுகொலைகள், வங்காளதேச (Bangladesh) விடுதலைப் போரின் போது மேற்குப் பாக்கித்தானிய படைகள் வங்காள தேசத்தில் நடத்திய படுகொலைகள் முதலியன இவற்றுள் அடங்கும்.

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக, இத்தகைய படுகொலைகள் பல வட இந்தியப் படைகளால் ஈழத்தில் வாழுகின்ற தமிழ் இனத்தவர் மீது அவிழ்த்து விடப்பட்டுள்ளன. இப் படுகொலைகளை உலகு அறியா வண்ணம், வட இந்திய அரசு மூடிமறைத்து வந்துள்ளது. தமக்கு உகந்த சில இந்தியச் செய்தியாளர்கள் (News-reporters) தவிர பிறரை ஈழத்தில் நுழைய விடாமல் தடுப்பதும், தம் கட்டுப்பாட்டுக்குட்பட்ட இந்திய வானொலி, தொலைக்காட்சி (radio, television) வழியாகப் பொய்ச் செய்திகளைப் பரப்புவதுமாக வட இந்தியப் படைகளின் செய்திகளைப் பரப்புவதுமாக வட இந்தியப் படைகளின் அட்டூழியங்கள் உலகின் கண்களுக்கும், தமிழகத் தமிழ் மக்களின் கண்களுக்கும் மறைக்கப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

பட்டன. ஆனால், அண்மையில் (1989-ஆம் ஆண்டு ஆகத்துத் திங்களில்) வடஇந்தியப் படைகள் வல்வெட்டித் துறையில் நடத்திய படுகொலைகளை வெளிநாட்டுத் தாளிகையாளர்கள் சிலர் அறிந்து, அதனை உலகுக்கு 'அம்பல'ப்படுத்தியுள்ளார்கள். இச் செய்திகள் வெளிப்படையானவை. "வல்வெட்டித் துறையில் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு நாங்கள் காரணமில்லை; எங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டையின் இடையே அகப்பட்டுச் சில பொது மக்கள் செத்தார்கள்" என்ற பொய்யை வட இந்தியப் படை பரப்பி வருகிறது. உண்மையில் நடந்தது என்ன? வடஇந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டையின் இடையே அகப்பட்டுத் தமிழ்ப் பொது மக்கள் செத்தார்களா? அல்லது, வட இந்தியப் படை தமிழ்ப் பொது மக்களை நேரடியாகப் படுகொலை செய்ததா?

நடந்த நிகழ்ச்சிகள் குறித்துப் பலரைக் கண்டு பேசி, உண்மைகளை ஆய்ந்து, நடுநிலையான செய்தியை இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் கார்டியன் (Guardian) என்ற ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது. அவ்விதழில் வெளிவந்த செய்திகள் சிலவற்றின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளன:

1. "இந்தியப் படை வல்வெட்டித் துறையில் நடந்த படுகொலையை மூடி மறைக்க முயன்றது. ஆனால் வல்வெட்டித் துறையில் நடந்த படுகொலையைப் பற்றிய நம்பகமான, நடுநிலைமையான செய்திகள் இப்போது கிடைத்துள்ளன"

2. "படுகொலை பற்றிய செய்திகள் வெளியே தெரியக் கூடாதென்பதற்காக, செய்தியாளர்களை (news



reporters) மட்டுமல்லாமல், மருத்துவர்களையும் (doctors) கூட வல்வெட்டித் துறைக்கு வரவிடாமல் இந்தியப் படை தடுத்துள்ளது."

3. "சிறுவர் சிறுமியர், பெண்கள் முதியோர் உட்பட, வல்வெட்டித்துறை நகர் மக்கள் பலரைச் சுவர்கள் முன்னால் நிற்க வைத்துச் சுட்டுக்கொன்றது இந்தியப் படை."

4. "சிறுவர் சிறுமியர், பெண்கள், முதியோர் உட்பட, நகர மக்கள் பலரைத் தங்கள் முகம் மண்ணில் படுமாறு படுக்க வைத்து, அவர்களை முதுகில் சுட்டுக் கொன்றது இந்தியப்படை."

5. "மொத்தம் 51 நகர்மக்கள் கொல்லப்பட்டார்கள். அதில் ஆறு பெண்களும், ஏழு சிறுவர் சிறுமியரும் உட்படுவர். மேலும் எழுபது நகர்மக்கள் காயமடைந்தனர்."

6. "123 வீடுகளும், 43 கடைகளும், நான்கு திரைப்பட அரங்குகளும், ஒரு நூலகமும், 69 வண்டிகளும், 12 மீன் பிடிக்கும் படகுகளும், 129 மீன் பிடிக்கும் வலைகளும் இந்தியப் படையால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன."

7. "இந்தியப் படை பொது மக்களைக் கொல்வதையும், வீடுகட்குத் தீ வைத்து எரிப்பதையும் கண்ட நகர் மக்கள் தம் வீடுகளை விட்டு ஓடி விட்டார்கள். நகர் வெறிச்சிட்டுக் கிடக்கிறது."

தமிழ்ப் பொது மக்கள் இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டைக்கு இடையே

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

அகப்பட்டுச் செத்தார்கள் என்ற இந்தியப் படையின் கூற்று எவ்வளவு பொய் என்பதை மேற்கண்ட செய்திகள் காட்டுகின்றன. இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டை முடிந்த பிறகு (அச் சண்டையில் ஏழு இந்தியப் படையினரும், ஐந்து விடுதலைப் புலிகளும் இறந்து விட்டதாகத் தெரிகிறது), தாங்கள் விடுதலைப் புலிகள் அனைவரையும் கொல்லவியலாத ஆத்திரத்தாலும், ஈழத் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்வாலும், நகரிலுள்ள ஒன்றுமறியாத் தமிழ் மக்களைப் (பெண்கள், சிறுவர் சிறுமியர், முதியோர் உட்பட) பிடித்துச் சுவர் முன்னே நிறுத்தியும், தரையில் படுக்க வைத்தும் சுட்டுக் கொன்று, தங்களது கொலை வெறியைத் தணித்துள்ளார்கள், இந்தியப் படையினர். (இவர்கள் பெறும் சம்பளத்தின் ஒரு பகுதி தமிழகத் தமிழ் மக்கள் இந்தியத் தில்லியரசுக்குச் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து வருகிறது என்பதை மறந்து விடலாகாது.)

வல்வெட்டித் துறையில் நடந்தது போன்ற படுகொலைகள் பல, ஈழமெங்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இப் படுகொலைகள் பற்றிய விளக்கங்கள் அவ்வப்போது வெளிவந்தாலும், இந்திய அரசு அவற்றை மூடி மறைத்து வந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்தியப் படை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்களைக் கொன்றுள்ளது. பல நூறு தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துள்ளது. பல கோடி உருபா மதிப்புள்ள தமிழர்தம் சொத்துகளை அழித்துள்ளது அல்லது களவாடியுள்ளது. உலகம் யாண்டும் வாழும் தமிழ் மக்கள் இவ்வட்டூழியங்களை மறந்து விடலாகாது. —தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

**—தமிழ்நிலம் : இதழ் எண் 130(15-10-89 - 15-11-89)**

# 4. இலங்கை - சிறிமாவோ- சாத்திரி - ஒப்பந்தம்!

1964-இல் இலங்கையில் உள்ள தமிழர்களில் 9,75,000 பேர் நாடற்றவர்கள் என்று மதிப்பிடப் பெற்றார்கள்.

இச் சிக்கலுக்குத் தீர்வுகாண 1965-ஆண்டு அப்பொழுது இலங்கைத் தலைமையமைச்சராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயகாவும், இந்தியத் தலைமையமைச்சராகவிருந்த இலால் பகதூர் சாத்திரியும், அம் மக்களை ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரு நாட்டின் குடிமக்களாகவும் ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்தார்கள்.

அவ்வொப்பந்தப்படி 7 பேரை இந்தியா குடிமக்களாக ஏற்றுக்கொண்டால், 4 பேரை இலங்கையரசு தன் நாட்டுக் குடிமக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவானது.

நயன்மைப்படி இவ்வொப்பந்தமே முறையற்றது. அனைத்துத் தமிழ் மக்களும் கடந்த காலங்களில் இலங்கைக்கே உழைத்தவர்களாகையால், அவர்கள் அங்கேயே குடியுரிமை பெறவேண்டும். அதுவுமன்றி அந்த ஒப்பந்தம் அங்குள்ள தமிழர்கள் தொகையைக் குறைத்து, அவர்களை மிகச் சிறுபான்மையராக்கி, வலுக்குறைந்தவர்களாகச் செய்துவிடும் என்று தமிழர்கள் அஞ்சினார்கள்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

மேலும் இச்சிக்கல் 15 ஆண்டுக்குள் அஃதாவது 1979-க்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பது ஒப்பந்தம்!

இவ்வகையில் அப்பொழுது 5 இலக்கம் இந்தியத் தமிழர்கள் இலங்கையில் குடியுரிமை கோரினர்.

ஆனால் 3 இலக்கத்து 75 ஆயிரம் பேர்களுக்கே குடியுரிமை வழங்கப்பட்டது. மீதியுள்ள 6 இலக்கம் தமிழர்கள் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் 1981 செப்டம்பர் வரை 2,73,000 பேர்களே திருப்பியனுப்பட்டுள்ளனர் என்று புள்ளி விளத்தங்கள் காட்டுகின்றன.

மீதியுள்ள 3,27,000 பேர்களுக்கு இன்னும் நாடற்றவர்கள் என்ற இரண்டுங்கெட்டான் நிலையே உள்ளது.

—தமிழ்நிலம்: இதழ் எண் 28('8-12-83)

## 5. ஒரு நாட்டின் உள்முகச் சிக்கலில் வேறொரு நாடு தலையிடுவதற்கு உலக ஒன்றிய அவை வழங்கும் உரிமை!

(1) ஒரு நாட்டின் உள்முகச் சிக்கலில் மற்றொரு நாடு தலையிடக் கூடாது.

உ. ஒ. அவை உரிமை அறிக்கை 2 (7)

(2) எனினும் மக்கள் உரிமைகளும், கண்ணியமும் கொடுமைக்கு உள்ளாகிற சூழ் நிலைகளில் இந்தத் தடையை மீறி ஒருநாடு வேறொரு நாட்டின் உள்முகச் சிக்கல்களில் தலையிட்டுச் செயல்படலாம்.

—மேற்படி அறிக்கை நெறி 1. (3)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# 6. 'தனிநாடு' கோரிக்கை அனைத்துலகச் சட்டப்படி குற்றமன்று!

''அனைத்து நாடுகள் சட்டப்படியும், உலக ஒன்றிய நாடுகள் (U N.O.) அமைப்புறுதிப்படியும், கூட்டுச் சேரா நாடுகளின் 1964-ஆம் ஆண்டு அறிவிப்புப்படியும், தமிழ்மக்கள் தனிநாடு கோருவதற்கு முற்றிலும் தகுதி படைத்தவர்கள். சட்ட அடிப்படையான தன்னுரிமைக்காக, தன்மானமுள்ள தமிழர்கள் நடத்தும் **தமிழக விடுதலைப் போராட்டத்தை** இந்திய அரசு குற்றமாகக் கணிப்பது அடிப்படை மக்கள் உரிமையைப் பறிக்கும் சட்டப் புறம்பான செயலாகும்''—என, ஈழத் தமிழ்நாடு அமைத்திட அரும்பாடுபட்டு வரும் தமிழர்க்கு உதவிகள் செய்து பெரும்புகழ் பெற்ற இங்கிலாந்து நாட்டின் ஆங்கில வழக்குரைஞர் இருவர், இந்தியத் துணைக்கண்ட அரசு கொணர்ந்த பிரிவினைத் தடைச் சட்டம் பற்றி பிரிட்டனில் உள்ள **'தமிழர் முன்னேற்றக் கழகம்'** (T.M.K) கேட்டிருந்த சட்ட விளக்கம் பற்றி ஆய்ந்து கருத்தறிவித்துள்ளதாக, அங்கு நடந்து வரும் 'தமிழன் குரல்' (Voice of Tamils-An Official Newsletter published by T.M K.) என்னும் செய்தியேடு தன் ஆகத்து '77 இதழில் ஆசிரியவுரை எழுதியிருக்கின்றது. அக் கட்டுரையில் அதன் ஆசிரியர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

தங்கள் சொந்த ஊதியம் (நன்மை) கருதி அதிகாரத்தில் உள்ள வட இந்தியக் கட்சியினர் கொண்டு வந்த பிரிவினைத் தடைச் சட்டம் அம்பேத்கார் குழுவினர் வகுத்தளித்த இந்திய அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் புறம்பானதாகும். ஐம்பது ஆண்டுக் காலமாகத் தமிழ்நாட்டுப் பிரிவினை கோரும் தமிழர்களைக் கருத்தில் கொண்டு கொணர்ந்த தடைச்சட்டமாகையால், அதற்குத் தமிழ் மக்களின் ஒப்புதல் இருந்தால்மட்டுமே, அப் பிரிவினைத் தடைச் சட்டத்திற்கு சட்டவலு இருக்கமுடியும்.

'இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும், நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டம் நாடு முழுமைக்கும் பொருந்தும் எனவும் கூறுவதை அனைத்து நாடுகள் சட்டத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளுகின்ற அதே



நேரத்தில், அதே அனைத்து நாடுகளின் சட்டத்தின்கீழ்த் தன்னாட்டு உரிமைக் கோரிக்கைகளும் அவற்றுக்கான போராட்டங்களும் சட்ட நிறைவானவை என்பதையும் எவரும் மறுத்தற்கியலாமற் போகும். எனவே தமிழன்—நிலப்பிரிவினைக்குக் குரல் கொடுக்கும் எவரும் அனைத்து நாட்டின் சட்டப்படி குற்றவாளியல்லர். **அம்பேத்கார் குழுவினர் ஆக்கிய 'இந்திய அரசியல் சட்டப்படி, இந்திய ஒன்றியத்தில் (Union) சேர்ந்துள்ள நாடுகள் பிரிந்து போகும் உரிமை வரையறுக்கப்பட்டிருப்பதால் இந்திய அடிப்படை அரசியல் சட்டப்படியும் குற்றமாகாது**

கூட்டுச்சேரா நாடுகளின் இரண்டாவது மாநாடு 1964-ஆம் ஆண்டு கெய்ரோவில் நடைபெற்றபோது **'தங்கள் அரசியல் உரிமையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்னுரிமை உண்டு'** என்ற தீர்மானம் அங்கு நிறைவேற்றப் பெற்றது. அத் தீர்மானத்தை இந்தியாவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தங்களுக்கென ஒரு நாடும், அரசும் இல்லாத பாலத்தீனியர்களின் தனமைப்பு உரிமைக் கோரிக்கையை இந்தியா உட்படப் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக் கொண்டிருக்கும்பொழுது, தங்களுக்கென ஒரு நாடு இருந்தும், அரசுரிமையற்றிருக்கும் தமிழர்களின் பிரிவினைக் கோரிக்கை எந்த வகையில் தவறானதாகும்?

**இரு நாடுகளின் சட்ட மன்றங்கள் அல்லது மக்களால் தெரிவு செய்யப்பெற்ற படிநிகராளிகள் விரும்பிச் சட்டமியற்றி, ஒரே நாடாக இணைவதற்கு அதிகாரம அளிப்பதன் வழியும், ஒரு நாடு மற்ற நாட்டை வலிந்து கவர்ந்து கொண்ட** (Seize by violence or occupy by force) **வழியும், ஒரு நாடு தனது அரசுரிமையை மற்ற நாட்டிற்கு உரிமைப்படுத்திக கொடுப்பதன் வழியும், இருநாட்டு மக்களின் விருப்பத்தின் வழியாகவும்தான், இருநாடுகள ஒரு நாடாக ஆக முடியும்.**

ஆனால் சேர, சோழ, பாண்டிய நாடு எனப் பண்டையக் காலத்தில் அழைக்கப் பெற்றுவந்த தமிழ்நாட்டு மக்களின் ஏற்பு ஒப்புதலை (acceptance)ப் பெறாமலேயே இந்தியத் துணைக் கண்டத்தினுள் வந்தேறியவர்களாகிய ஆரிய ஆட்சியாளர்களால், பிரிவினைத்

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தடைச் சட்டத்தை அவர்களின் அடிமைகள் நிரம்பிய நாடாளு மன்றத்தில் தன் இன நலம் காத்திட இயற்றப் பட்டதாகும். அதனைத் தமிழ் மக்களின் தொண்டைக் குள் வலிந்து சட்டப் புறம்பாகத் (illegal) திணித் துள்ளனர்.

ஆங்கிலேயர்கள் 1947-ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்ட ஆட்சியுரிமையை ஆரியர்களிடம் ஒப்ப டைத்தமையால் தமிழர்கள் தமது நாட்டுரிமையை இழந் தார்களே தவிர, தமிழ்மக்களின் ஒப்புதல்படி அவர்கள் இந்திய ஒன்றியத்தில் (Indian Union) சட்டப்படி இணைக்கப்படவில்லை என்பது நமக்கு உதவ முன் வந்துள்ள சட்ட வல்லுநர்களின் (Q.C) கருத்தாகும்.

இக் கருத்துகளின் அடிப்படையில் **பிரிட்டன் தமிழர் முன்னேற்றக் கழகம்** தமிழர்களுக்குக் கீழ்வரும் வேண்டு கோளைக் கொடுத்துள்ளது.

''நாங்கள் பிரிவினையாளர்கள் அல்லர்; நாங்கள் அனைத்திந்தியக் கட்சியினர் எனக் கூறிவரும் திரைப் படக் கவர்ச்சியும் அறியாமையும் மிக்க மக்களும், தமிழர்கள் எனக் கூறிக்கொள்ள வெட்கப்பட்டு, இந்தியத் தேசியம் பேசி அரசியல் ஊதியம் பெறும் வீடண அநுமன்களும், 'நாங்கள் அன்று பிரிவினை கேட்டோம், இப்பொழுது உண்மையாகக் கேட்கவே இல்லை; உறுதி யிட்டுக் கூறுகிறோம், நாங்கள் பிரிவினையாளர்கள் அல்லர்' என்று சொல்லுக்குச் சொல், கூட்டத்திற்குக் கூட்டம் இந்திய தேசியத் திருப்பாட்டுப் பாடித் தாம் வாழ வழிதேடிக் கொண்ட தமிழ்ப் பதடிகள் சிலரும், எக்கட்சியும் சாராத தன் மானமுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும், ஆசிரியப் பெருமக்களும், மாணவ மணிகளும்-ஆங்கில வழக்குரைஞர்களின் பரிந்துரையை எண்ணிப் பார்க்க வேண்டுமெனவும், கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிக் கிடப்போர் இதுநாள்வரை தமிழ் இனத்திற் குச் செய்த மாபெரும் வஞ்சகத்திற்கு மன்னிப்புப் பெறும் வகையில், தாம் தமிழர் என்பதையுணர்ந்து தமிழ்த் தரையின் விடுதலைக்குப் போரிட வாருங்கள் எனவும் பிரிட்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் அறைகூவி அழைக்கிறது.''

**— தென்மொழி சு: 14, ஓ: 5, 6 (அக்-செப்'77)**

# 7. 1983-இல் தமிழீழ ஏதிலிகளுக்காகத் தமிழக அரசு திரட்டிய பொருள் எங்கே?

தமிழக அரசு தமிழீழ ஏதிலிகளுக்காக ஒரு கோடி உருபா திரட்டப் போவதாக, அண்மையில் அது கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்ட முடிவில் அறிவித்தது, மூன்று கோடி உருபா அளவு திரட்டியது, எல்லாரும் அறிந்ததே.

1983-ஆம் ஆண்டு அஃது இதேபோல் ஏதிலிகளாக வந்த இலங்கைத் தமிழர்களுக்காகப் பொருள் திரட்டு வதாக ஓர் அறிவிப்புச் செய்து, பொதுமக்களிடமிருந்து பலகோடி உருபாக்களைத் திரட்டியது. எவ்வளவு பொருள் திரண்டது என்று அதில் குழு உறுப்பினர்களாக இருந்த நெடுமாறன் போன்றவர்களுக்கும் தெரியாது பொதுமக்களுக்கும் தெரியாது.

ஏன் என்றால் அன்று அரசு அமைத்த குழுவை கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஒரு தடவை கூட மீண்டும் கூட்டவே இல்லை

இந்த அழகில், அவலத்தில், எரிகிற வீட்டில் பிடுங்கி யது ஊதியமென்று, மீண்டும் ஒரு கோடி உருபா பொருள் திரட்டுவதாக அறிவித்து, மூன்று கோடி உருபா வேறு திரட்டி விழுங்கிவிட்டது.

ஏற்கனவே திரட்டிய பலகோடி உருபா என்ன ஆனது என்றே திரட்டியவர்களைத் தவிர வேறு எவருக் குமே தெரியாத நிலையில், மீண்டும் பொருள் திரட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பது கொடுமையானது; ஐய மானது; கொள்ளையடிப்புக்கு வழி வகுக்கக் கூடியது.

பொதுமக்களிடம் அரசே இப்படிப்பட்ட கொள்ளை யடிப்புகளில் ஈடுபட்டால், நாம் யாரிடம் போய் முறை யிடுவது? எச்சரிக்கையாக இருங்கள்!

**வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு.** (குறள்: 552)

**இதன்பொருள்:** (தனிவழியில் வேல் வைத்துக்கொண்டு நின்ற வழிப்பறி கொள்ளையன், அங்குப்போவார் வரு வார்களிடம் 'உங்களிடம் உள்ள கைப்பொருளை எடுத் துத்தாருங்கள்' என்று மிரட்டிக்கேட்பது போலாகும். தீயவை செய்பவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டிய அரசன், குடிமக்களிடம் பொருள் திரட்டுவது)

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 65(20-10-85)**

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

## 8. இந்தியப் படைகளால் 1987 இறுதிவரை இலங்கையில் அழிவுகள்.

**(ஒரு கணக்கீடு.)**

1987 அக்டோபர் - 10 முதல் 1987 திசம்பர் இறுதி வரை, இந்திய அமைதிப்படை என்னும் பெயரில் இயங்கி வரும் தமிழின அழிவுப் படையால் இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்துள்ள அழிவுகளின் உண்மை விளக்கங்கள் இவை. ஆனால், இந்திய வானொலியும் தொலைக்காட்சியும், அரசுச் சார்பு செய்தித் தாள்களும் அன்றாடம் திட்டமிட்டு அவிழ்த்துவிடும் பொய்ச் செய்திகள்வேறாக இருக்கின்றன என்பதை அன்பர்கள் கவனிக்கவும்.

- பொதுமக்களின் இறப்புகள் — 2000க்கு மேல்.
- கற்பழிக்கப்பட்ட பெண்கள் — 600க்கு மேல்.
- சொத்துகளின் அழிவு விளக்கம் எத்தனைக் கோடி என்று கணக்கிடப்படவில்லை.
- தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் — 168 பேரே வீரச்சாவு எய்தியுள்ளனர்.
- இந்தியப் படை வீரர்கள்— 1024க்கு மேல் கொல்லப் பட்டுள்ளனர். அவர்களுள் 40 உயர் அதிகாரிகளும் அடங்குவர்
- காயமடைந்த இந்தியப் படையினர் 2000க்கு மேற்பட்டோர்.
- இந்தியத் தரப்பில் சேதமடைந்த கவச வண்டிகளும், தகரி(டாங்கி)களும் — 14.
- சேதமாக்கப்பட்ட மலையுந்து (Jeep)களும், படைத் துறைச் சரக்குந்துகளும் — 30க்கும் மேல்.
- சேதமாக்கப்பட்ட திருகிறக்கையூர்திகள் (Helicoptor)—6.
- புலிகளிடம் சரணடைந்த இந்தியப் படைவீரர்கள் 0 பேர். இவர்கள் அனைவரையும் புலிகள் விடுவித்து விட்டனர்.

—மற்றபடி போராளிகளையும் போராளிகளின் படகுகளையும் கடலில் தாக்கி அழிப்பதாக இந்திய அரசு கூறுவதெல்லாம் அப்பட்டமான பொய்யாகும். ஒன்றுமறியா மீனவத் தமிழர்களையும் அவர்களின் படகுகளையும் அழித்து விட்டே இந்திய அரசு புலிகளை அழித்ததாக இவ்வாறு புளுகுகிறது. **'வீரவேங்கை': 4-5.**

**—தமிழ்நிலம்: இதழ் எண்: 101 (12-3-88)**

## 9. கதிரைவேலனார் அவர்களின் மறைவு!

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும், ஆற்றலும் நேர்மையும் மிக்க தமிழீழ விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும், தமிழீழ மக்களுக்கு விடிவு நோக்கிப் போராடுகின்ற நேர்மையுள்ளம் வாய்ந்தவருமான மதிப்பிற்குரிய கதிரைவேல் (பிள்ளை) அவர்கள், தமிழீழ மக்களின் தனிநாட்டுச் சிக்கல்கள் தொடர்பாகத் தமிழக அரசோடும் இந்திய அரசோடும் கலந்துரையாட வந்த இடத்தில், திடீரென எதிர்பாராத வகையில் மாரடைப்பால் 31-3-81 அன்று மாலை 4 மணியளவில் சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் காலமானது குறித்து மிகவும் வருத்தமும் அதிர்ச்சியும் அடைகிறோம். அவருக்கு அகவை 56 ஆகிறது.

தமிழீழ மக்களின் போராட்ட நிகழ்ச்சிகளில் கடந்த காலத்தில், பெருமைக்குரிய கதிரைவேலனார் அவர்களுடைய ஈடுபாடு மிகவும் போற்றத்தக்கதும், எதிர்கால இளைஞர்களுக்கு வழிகாட்டத்தக்கதும் ஆகும். நேர்மையும் உண்மையும் ஆற்றலும் வாய்ந்த தலைவர்களுள் திருமிகு. கதிரைவேலனார் அவர்கள் குறிப்பிடத் தகுந்தவராவர். தமிழகத் தாய் நிலத்தில் விடுதலை மறவர் ஒருவர் அப் போராட்டப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் மறைந்தது இங்குள்ள தமிழர்களின் ஆதரவையும் இரக்கத்தையும் தேடித் தருவதாகும். தமிழக மக்கள் இவர் மறைவின் வழி தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு நல்க வேண்டுமென்று வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

கதிரைவேலனார் அவர்களின் உடல் 1-4-81 மாலை 5-30 மணியளவில் வானூர்தி வழியாக, யாழ்ப்பாணம் கொண்டு செல்லப் பெற்றது. காலையிலிருந்து மருத்துவ மனைக்கும், வானூர்தி நிலையத்திற்கும் வந்து ஏராள மான தமிழன்பர்களும் பொதுமக்களும் அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். அவர்களுள் சட்டமன்ற அவைத் தலைவர் மாண்புமிகு இராசாராம், மேலவை உறுப்பினர் பர். இரா. சனார்த்தனம், பாவலரேறு பெருஞ்சித்திரனார், தென்மொழி மறை. நித்தலின் பனார், அருள் ('இலங்கா இராணி' ஆசிரியர்) அருளி (வழக்கறிஞர்) மணவைத்தம்பி, ஈழவேந்தன், முகுந்தன், புதுவை மதுரகவி ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். வானூர்தி நிலையத்திற்கு வந்து மாலையிட்டும் மலர் வளையம் வைத்தும் இறுதி வணக்கம் செலுத்தியவர் களுள் அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன், முன்னாள் அமைச்சர் சாதிக்பாட்சா, தி. க. பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி முதலியோர் முகாமை யானவர்கள். வானூர்திக்கு அவரது சடலம் எடுத்துச் செல்லப்படுவதற்குமுன் நடந்த இரங்கல் கூட்டத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், சாதிக் பாட்சா, கி. வீரமணி, நித்தலின்பனார் ஆகியோர் உரை யாற்றினர்.

—தென்மொழி : சுவடி : 17, ஓலை : 9(ஏப். -மே '81)

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# பைந்தமிழ்ப் பாசறையின் தெளிவான கொள்கைகள்

☆ உலக முதன்மொழியும் உயர் தனிச் செம்மொழியுமான தமிழைப் பல துறைகளிலும் சிறப்புற வளர்த்தல்; அதற்கான நற்பணிகளில் ஈடுபடுதல்; புதுமை ஆக்கப்பணிகளுக்குத் துணை நிற்றல்.

☆ தமிழ் நாட்டிலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழினத்தின் மேம்பாட்டிற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

☆ தமிழ்நாட்டின் வளமையைப் பெருக்கவும், புதுமை ஆக்க நிலைகளை வளர்க்கவும் ஒல்லும் வகையால் உறுபணியாற்றல்.

## பைந்தமிழ்ப் பாசறையின் ஆளுமைக்குழு

**தலைவர்:** பாவலர் ம.தென்முகநம்பி

**துணைத்தலைவர்கள்:**
ப.தமிழ்ச்செழியன், ப.சிவபெருமான்

**பொதுச் செயலாளர்:** துரை. தென்னவன்

**இணைச் செயலாளர்:** க.அடைக்கலம்

**பொருளாளர்:** சீ.அறிவுடைநம்பி

**செயற்குழு உறுப்பினர்கள்:**
வீ.இளங்கோவன், இரா.தங்கரசன்,
ஐ.இசக்கிமுத்து, கு.தமிழ்வாணன்.

**நற்கருத்து நாவில்வோர்:**
தா.தமிழ்மாறன், க.அன்புக்குமரன்,
சோ.கோவேந்தன் கு.க.எழிலன்.

நிறைமொழி அச்சகம், சென்னை - 600 015.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

# தென்மொழியின் தனித்தமிழ் வெளியீடுகள்!

## பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதுமுறை இலக்கியங்கள்

| | |
|---|---|
| 1. எண்சுவை எண்பது | (அச்சில்) |
| 2. பாவியக் கொத்து (முதல் தொகுதி) | 15.00 |
| 3. பாவியக்கொத்து (2 ஆம் தொகுதி) | (அச்சில்) |
| 4. ஐயை (முதல் பகுதி) | 6.00 |
| 5. ஐயை (இரு பகுதி இணைந்தது) | 11.00 |
| 6. கொய்யாக்கனி (மறுபதிப்பு) | 13.00 |
| 7. கற்பனை ஊற்றுக் கட்டுரைகள் 1, 2 | (அச்சில்) |
| 8. பள்ளிப் பறவைகள் (முதல் பகுதி) | 6.30 |
| 9. பள்ளிப் பறவைகள் (2 ஆம் பகுதி) | (அச்சில்) |
| 10. மகபுகுவஞ்சி (மறுபதிப்பு) | (அச்சில்) |
| 11. கனிச்சாறு (முதல் தொகுதி) | 23.00 |
| 12. கனிச்சாறு (இரண்டாம் தொகுதி) | 19.00 |
| 13. கனிச்சாறு (மூன்றாம் தொகுதி) | 26.00 |
| 14. நூறாசிரியம் (முதல் பகுதி) | 5.00 |
| 15. நூறாசிரியம் (இரண்டாம் பகுதி) | 5.00 |
| 16. தன்னுணர்வு (மறுபதிப்பு) | 2.00 |
| 17. இளமை உணர்வுகள் | (அச்சில்) |
| 18. பாவேந்தர் பாரதிதாசன் | 16.00 |
| 19. இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள் | 2.00 |
| 20. வாழ்வியல் முப்பது | 2.00 |
| 21. ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 3.00 |
| 22. உலகியல் நூறு | 8.50 |
| 23. அறுபருவத் திருக்கூத்து | (அச்சில்) |
| 24. இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு? | 1.00 |
| 25. சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும்! | 1.00 |
| 26. செயலும் செயல் திறனும் | 35.00 |
| 27. தமிழீழம் | 55.00 |

## பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. சிங்கள அமர்களம், | அறிஞர் ப.அருளி | 5.00 |
| 2. இவை தமிழல்ல | '' '' | 10.00 |
| 3. இந்திய அரசே இன்னுமா உறக்கம் | '' | 5.00 |
| 4. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் - அறிஞர் ப.அருளி (5-தொகுதிகள்) ) | | 100.00 |

பிற விளக்கங்களுக்கு: தென்மொழி, சென்னை - 600 005.

**தனித்தமிழ்த் தாளிகைகள் 'தென்மொழி' 'தமிழ் நிலம்' 'தமிழ்ச்சிட்டு' படியுங்கள்.**

நிறைமொழி அச்சகம், சென்னை - 600 015.

FREE E-BOOK (www.thamizham.net) TM1300 / 2010

தமிழீழம் - பெருஞ்சித்திரனார்